மின் மினியாய் நான்...

இன்பா அலோசியஸ்

மின் மினியாய் நான்...

இன்பா அலோசியஸ்

http://www.pustaka.co.in

மின் மினியாய் நான்...

Min Miniyai Naan...

Author:

இன்பா அலோசியஸ்

Infaa Alocious

For more books

http://www.pustaka.co.in/home/author/infaa-alocious-novels

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.

All other copyright © by Author.

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

பகுதி - 1

பகுதி - 2

பகுதி - 3

பகுதி - 4

பகுதி - 5

பகுதி - 6

பகுதி - 7

பகுதி - 8

பகுதி - 9

பகுதி - 10

பகுதி - 11

பகுதி - 12

பகுதி - 13

பகுதி - 14

பகுதி - 15

பகுதி - 16

பகுதி - 17

பகுதி - 18

பகுதி - 19

பகுதி - 20

பகுதி - 21

பகுதி - 22

பகுதி - 23

பகுதி - 24

பகுதி - 25

பகுதி - 26

பகுதி - 27

பகுதி - 28

பகுதி - 29

பகுதி - 30

பகுதி - 31

பகுதி - 32

பகுதி - 33

பகுதி - 34

பகுதி - 35

பகுதி - 36

பகுதி - 1

என் ஆசைகள் மிகவும் சிறியது

ஏனென்றால் என் பெயரிலேயே

அது இருப்பதால்.....

சென்னையில் காலை பத்து மணிக்கே மண்டையை பிளக்கும் வெயில், அதை கண்டுகொள்ளாமல் கையில் தன் ஹேண்ட் பேகை ஒற்றை கையில் பிடித்தவாறு நிதானமாக நடந்து வந்தாள் நம் கதையின் நாயகி அர்ச்சனா கிறிஸ்டோபர். அவள் பெயரிலேயே உங்களுக்கு புரிந்திருக்கும் அவள் ஒரு கிறிஸ்தவள் என்று.

இப்பொழுது அவள் இருக்கும் இடம் சென்னையில் புகழ்பெற்ற பைவ் ஸ்டார் அந்தஸ்த்து பெற்ற கல்வியியல்(B.Ed) கல்லூரிக்குள். இது கன்னியர்களால் நடத்தப்படும் ஒரு கிறிஸ்தவ நிறுவனம். இங்கேதான் இன்னும் ஒரு வருடம் அவள் படிக்கப் போகிறாள்.

அவளைப் பற்றி சொல்லுவதென்றால்....., ம்..... இப்போ அவள் பார்வையில் விழுந்த ஒரு வாசகத்தை குறிப்பிடலாம். அதை அவள் வாசிக்கும் விதத்தில், அவள் குணநலன்களை ஓரளவுக்கு புரிந்து கொள்ளலாம்.

“மோர்னிங் ஸ்டார் கலவியியல் கல்லூரி”, மனதுக்குள்ளேயே படித்திருந்தால் பிரச்சனை வந்து இருக்காது. இதை சத்தமாக படித்தது தவறென்று, தன் அருகில் நிற்கும் அப்பா முறைத்து பார்த்த பிறகுதான் புரிந்து கொண்டாள்.

“அதில் அப்படித்தான் எழுதி இருக்குப்பா”, அவள் தன் கருத்தை வலியுறுத்த, கிறிஸ்டோபர் அவர் அருகில் இருந்த அர்ச்சனாவின் மாமாவை சங்கடமாக பார்த்தார். அவர்தான் இந்த கல்லூரியில் படிக்க இவளுக்கு இடம் வாங்கி கொடுத்தவர்.

மாமா அவளை வித்தியாசமாக பார்த்தார். ஆனால் அவளோ அவரை கண்டுகொள்ளாமல் அந்த போர்டை மறுபடியும் வாசித்து சிரித்துக் கொண்டிருந்தாள். இப்போ அவளைப் பற்றி உங்களுக்கு தெரிந்து விட்டதா?. இல்லையென்றால் பரவாயில்லை விட்டுவிடுங்கள், இன்னும் நிறைய சந்தர்ப்பங்கள் உங்களுக்கு கிடைக்கும் அவளைப் பற்றி புரிந்து கொள்ள.

‘ஆள்தான் வளர்ந்துருக்க, அறிவு கொஞ்சம் கூட கிடையாது. எதை எங்கே எப்படி செய்யவேண்டும் என்றும் தெரியாது. இந்த காலேஜ் என்ன ஆக போகுதோ இன்னும் ஒரு வருஷம்’, அவளது அப்பா இப்படி மனதுக்குள்ளேயே அவளை கரைத்து கொட்டிக் கொண்டிருந்தார். ஆனால் வெளியில் ஒரு வார்த்தை கூட பேச மாட்டார். எல்லாம் பார்வையிலேயே அடக்கி விடுவார். இவள் தான் அடங்க மாட்டாள்.

“இது கொஞ்சம் கண்டிப்பான காலேஜ். உன் ப்ரின்சிபலை எனக்கு நல்லா தெரியும்”, அவள் மாமா எதையோ அவளுக்கு புரிய வைக்க முயன்றார்.

‘அவங்களுக்கு உங்களை தெரியுமா?’.

“என் பேரை நீ காப்பாத்தணும்”.

‘அவ்வளவு ஆபத்தான நிலைமையிலா இருக்கு உங்க பேர்’.

“அது மட்டும் இல்லை, உனக்கு கிளாஸ் எடுக்கபோற ப்ரொபசரை நான் உனக்கு இன்டரட்யுஸ் பண்ணி வைக்கிறேன். அவங்க சொல்படி கேட்டு நடந்துக்கோ”.

‘அவங்களுக்கும் நேரம் சரியில்லையா?’, மனதுக்குள் நக்கலாக எண்ணிக் கொண்டாள்.

“எனக்கு இங்கே தனி மரியாதையே உண்டு”.

‘ஆமா ஆமா கேட் கிட்டே கூர்க்கா கூட சலூட் அடிச்சாரே’.

“அதனால்தான் நான் கேட்ட உடனே உனக்கு இங்கே சீட் கொடுத்தாங்க”.

‘ஆனா அதுக்காக ரொம்ம்ம்ம்ப வருத்தப்படுவாங்க’. அவர் அவரைப் பற்றி பெருமையாக சொல்லிக் கொண்டிருக்க, அர்ச்சனா அவருக்கு மனதுக்குள் கவுன்ட்டர் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

“நான் இவ்வளவு சொல்லிட்டு இருக்கேன், நீ பதிலே பேசாம வாற”.

“அந்த போர்டை எப்போ மாற்ற சொல்லுவீங்க மாமா”, அவள் சம்பந்தமே இல்லாமல் கேட்கவும், அவர் முகம் குழப்பத்தை பிரதிபலித்தது.

அவர் எரிச்சலாக முகத்தை திருப்பிக் கொள்ள, அவள் அப்பா அவளது பின்னந் தலையிலேயே தட்டி, அனலாக அவளை பார்த்தார். அவர் பார்வையின் அர்த்தம் அவளுக்கு புரிந்தாலும், “இல்லப்பா மாமாக்கு இங்கே நல்ல செல்வாக்கு இருக்கே. அதை வைத்து ஒரு பொது சேவை செய்யலாம்னு.....”, அப்பாவின் முறைப்பில் முழுதாக சொல்லாமல் விட்டாள்.

“வேண்டாமென்றால் விடுங்க, நானே பாத்துக்கறேன். இருந்தாலும் என்னை இந்த காலேஜில் சேர்த்து இருக்கவேண்டாம். பேரைப் பாரு கலவியியல் கல்லூரியாம். உவ..... பேர் நல்லாவே இல்லப்பா”, அவள் அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டு சொல்ல,

இப்பொழுது அவள் அப்பா, இவ தெரிந்தே செய்கிறாளா இல்லை தெரியாமல் செய்கிறாளா என்று புரியாத பார்வை பார்த்தார். அர்ச்சனாவின் செய்கைகள் இப்படி இருந்தாலும், அவளோ பார்ப்பதற்கு நடிகை பிந்து மாதவியின் வசீகர கண்களுடன், பிறை நெற்றி, கொஞ்சம் உருண்டையான நாசி, உதட்டு சாயம் பூசாமலே சிவந்திருக்கும் இதழ்கள்.

எந்த ஆணையும் சுண்டி இழுக்கும் அழகு, ஐந்தடி நான்கு அங்குலம் வளர்ந்திருப்பாள். சங்கு கழுத்து, கழுத்தின் கீழே பிரம்மன் செதுக்கிய சிற்பமாகவே இருப்பாள். அவளது அப்பா கிறிஸ்டோபர் கால்நடை மருத்துவர். அம்மா வீட்டு தலைவி மேரி. ஒரே அண்ணன் ஜோசப்ஜான். தந்தையை போலவே அவனும் கால்நடை மருத்துவன்.

அவள் அம்மாவைப் பற்றி நினைக்கவும் சரியாக அவள் அப்பாவின் பாக்கெட்டில் இருந்த அலைபேசி அழைக்கவும் சரியாக இருந்தது. அவளது அப்பா எடுக்கும் முன்பே அவர் பாக்கெட்டில் இருந்து அலைபேசியை எடுத்து பேச துவங்கினாள்.

அவளது மாமா வேண்டா வெறுப்பாக அங்கே ஒரு பக்கத்தில் இருந்த ஹோச்ட்டலை நோக்கி நடக்க துவங்கி இருந்தார். “அம்மா எப்படிம்மா இருக்கீங்க. நாங்க இங்கே அட்மிஷன் போட்டு முடிச்சாச்சு. இப்போ ஹோச்ட்டலுக்குதான் போயிட்டு இருக்கோம்”, படபடவென பொரிந்தாள்.

“ஓ அப்படியா, சரி அப்பா எப்படி இருக்காங்க?”, அவர் கவலை அவருக்கு, நேரடியாக விஷயத்துக்கு வந்தார்.

“அம்மா உன் பொண்ணு, செல்ல பொண்ணு, உங்ககிட்டே ஆசையா பேசுறேன், ஆனா நீங்க அதை கண்டுக்காம என்னமோ உங்க புருஷனை பற்றி கவலைப்படுறிங்க”, அவள் கோபமா, சிணுங்கலா என்று புரியாத குரலில் கேட்டாள்.

“உன்னோடு உன் அப்பாவை அனுப்பி வச்சுட்டு நான்தான் இங்கே முழி பிதுங்கிபோய் உட்க்கார்ந்து இருக்கேன். எல்லாம் சரி நைட் பஸ்ல அப்பாவை படுத்தாமல் ஒழுங்கா இருந்தியா?”, அம்மா அந்த பக்கம் கவலையாக கேட்டார்.

அதையெல்லாம் கவனிக்காமல் தொடர்ந்தாள் அர்ச்சனா. “அம்மா நான் முதல்லையே சொன்னேன் ட்ரைன்ல டிக்கெட் போடலாம்னு. லாஸ்ட் மினிட்ல முடியாதுன்னு சொல்லி

என்னை பஸ்ல அனுப்பி வச்சது நீதானே. நைட் நான் ஒன்..... ”,

“அச்சுசுசுசு.....”, அவள் அம்மாவின் அலறலில் பேச்சை பாதியில் நிறுத்தினாள்.

“என்னமா.....?”, அவள் கோபமாக கேட்க,

“நீ முதல்ல அப்பாட்ட போனை கொடு, எந்த நேரத்தில் உன்னை பெத்தேனோ, உன்கிட்டே இப்போ பேசுற மூட்ல நான் இல்லை. அப்பாட்ட போனை கொடுக்குறியா இல்லையா?”, அவள் அம்மா மேலே பேசாமல் மௌனம் சாதிக்க, அப்பாவிடம் போனை நீட்டினாள்.

பார்த்தால் அவர் அங்கே இல்லை. “அம்மா அவரை காணோம்”, அவள் சாதாரணமாக் சொல்ல,

“ஹையோ அச்சு பேசிட்டே நீதான் எங்கேயாவது நடந்து வந்திருப்ப. முதல்ல சுத்தி தேடு, கொஞ்சமாவது பொறுப்பு இருக்கா?. என் வயித்தில் புளியை கரைக்கணும்னே முடிவோட இருப்பியா?. நான் மட்டும் அங்கே வந்தேன்.....”, அம்மா பல்லை கடித்துக் கொண்டு பேசினார்.

“அம்மா நான் சொல்ல வாறதை கேட்கவே இல்லையே”.

“அடியேய் உன்னை வீட்டில் இருந்தால்தான் சொல்பேச்சு கேட்காமல் இருக்கன்னு அங்கே அனுப்பி வச்சுருக்கேன். நீ அங்கேயும் ஒழுங்கா இல்லை....., ஒரு நல்ல பையனா பார்த்து உன்னை அவன் கழுத்தில் கட்டி அனுப்பிவிடுவேன்”, அவள் அம்மா பொரிந்தார்.

“பாவம்மா அந்த பையன்”, அவள் சொல்லிக் கொண்டிருக்க, அவளை கடந்து சென்றான் ஒரு ஆறடி உயரம் கொண்ட கம்பீரமான ஆண் மகன். அதை பார்த்ததும் தாயிடம் உடனடியாக சொன்னாள், “அம்மா இங்கே என் பக்கத்தில்

ஒருத்தன் நடந்து போறான். நல்லா செமையா இருக்காமா அவனையே பாரேன்", சாதாரணமாக சொன்னாள்.

அந்த பக்கம் அர்ச்சனாவின் அம்மா உச்சபட்ச அதிர்ச்சிக்கு உள்ளானார். "ஏய் கொஞ்சம் மெதுவா பேசேண்டி. அவன் உன்னைப்பற்றி என்ன நினைப்பான்?", அம்மா கவலையாக கேட்டார்.

"அவன் என்னமா என்னை பற்றி நினைக்கிறது. அவன் போய் ரொம்ப நேரமாச்சு நீ சொல்லு", அவள் தாய்க்கு மரியாதை எப்பொழுதாவது ஞாபகம் வரும்பொழுது கொடுப்பாள். அதை அவள் தாயும் எதிர்பார்ப்பது இல்லை.

"இதுக்கும்மேல நான் என்ன சொல்லுறது. சரி அப்பாவை பார்த்துவிட்டாயா அவரிடம் போனை கொடு, ஒரு வேலையை செய்தால் கொஞ்சம் சுறுசுறுப்பா செய்யிறதில்ல", அம்மா மீண்டும் நினைவு படுத்தினார்.

பிறகுதான் சுற்றிப் பார்த்தாள். சரியாக அந்த போர்டுக்கு கீழே நின்றிருக்க, அவள் அப்பாவும் மாமாவும் அந்த கோடியில் நின்று, இந்திய பொருளாதாரத்தை எப்படி தூக்கி நிறுத்தலாம், சரியும் இந்திய ரூபாயின் மதிப்பை எப்படி உயர்த்தலாம் என்று தீவிர சிந்தனையில் இருப்பவர்கள் போல் இருந்தது அவர்களின் முகங்கள்.

"அம்மா... அப்பா, மாமா கூட என்னமோ சீரியஸா பேசிட்டு இருக்கார். இப்போ நான் போகவா?", அவள் யோசனையாக கேட்டேன்.

"அப்போ உன்னை பத்திதான் பேசிட்டு இருப்பாங்க. முதல்ல போய் போனை கொடு", விட்டால் அம்மா போன் வழியாகவே அவள் காதை பிடித்து முறுக்கி விடுவார் என்று தோன்றியது.

"உனக்கு என்மேல் பாசமே இல்லமா", அவள் சொல்லவும் போன் வழியே "சொத்" என்ற சத்தம் அவள் காதில்

விழுந்தது. அம்மா அவர் தலையிலேயே அடித்துக் கொண்டார், இவளுக்கு தெரியவில்லை.

“அப்பா, அம்மா உங்ககிட்டே பேசணுமாம்”, சொன்னவாறு அலைபேசியை அவரிடம் நீட்ட,

அவளை முறைத்தவாறே வாங்கி, “முதல்ல போனை வை”, அம்மாவிடம் என்னவென்று கூட கேட்காமல், காலை துண்டித்துவிட்டு பாக்கெட்டில் போட்டார் கிறிஸ்டோபர்.

சரி அப்பா அம்மாமேல கோபமா இருக்கிறார் என்று பேசாமல் விட்டுவிட்டாள். அவளுக்கு தெரியவில்லை கோபம் மொத்தமும் அவள்மேல்தான் என்று. எதை செய்யவந்தால் என்ன செய்து கொண்டிருக்கிறாள். ஆத்திரமாக வந்தது அவருக்கு. ஆனால் எதையுமே வெளிப்படையாக சொல்லி அவருக்கு பழக்கமில்லாததால் அமைதி காத்தார்.

“வாங்கப்பா நாம ஹோச்ட்டல் உள்ளே போகலாம்”, எதையும் கண்டுகொள்ளாமல் முன்னால் நடந்தாள்.

“அர்ச்சனா இதுதான் பேட்ரிக்”, புதிதாக அவனை எதற்கென்று சொல்லாமல் மொட்டையாக அறிமுகம் செய்தார் அவளது மாமா.

“என்னது பேட்டராப்பா”, அவள் அலட்சியமாக கேட்க, மாமா அவளை முதல் முறையாக முறைத்து பார்த்தார். அவர் பக்கத்தில் அந்த பேட்டராப் ஓ.... சாரி பேட்ரிக் அவளை இமைக்க கூட மறந்து பார்த்துக் கொண்டிருந்தான். இதழ்களில் மெல்லிய புன்னகைவேறு.

“ஹாய் அர்ச்சனா, என் பெயர் ஜாண் பேட்ரிக். உனக்கு பேட்ரிக் என்ற பெயர் கூப்பிட வரவில்லை என்றால் ஜாண் என்று கூப்பிடு”, அவன் குரல் அவள் யோசனையை கலைத்தது. அவள் பேச்சில் கொஞ்சம் கூட கோபமே படாமல் பெருந்தன்மையாக சொன்னான்.

‘நான் எதுக்குடா உன்னை கூப்பிடணும்’, மனதுக்குள் நினைத்தாலும், “இல்லை வேண்டாம் நான் உன்னை பேட்ரிக் என்றே சொல்லுகிறேன். ஏனென்றால் என் அண்ணாவின் பெயர் ஜாண்”, அவன் கண்களை நேருக்கு நேர் பார்த்து சொன்னாள்.

“அர்ச்சனா என்ன இது?”, மாமாதான் அதிர்ச்சியாக கேட்டார்.

“எது.....?”, அவரை ஒரு மார்கமாக பார்த்து கேட்டாள்.

மாமா தன் மைத்துனரான அர்ச்சனாவின் அப்பாவை பார்க்க, அவரோ, ‘எனக்கு இதெல்லாம் சாதாரணமப்பா’, என்ற பாவனையில் நின்றுகொண்டிருந்தார்.

“இவன் உன்னைவிட பெரியவன்”, அவளை திருத்தாமல் விடுவதில்லை என்ற முடிவோடு இருந்தார் போல.

“ஆமா நான் ஐந்து புள்ளி நான்குதான் இருப்பேன். இவன் ஒரு....., அவனை ஏற இறங்க பார்த்தாள், ஆறடி இருப்பான். சரி இதுக்கா இவ்வளவு அதிர்ச்சி”, மனதுக்குள் நினைத்ததை வெளியில் அவரிடம் கேட்டாள்.

“விடுங்க அங்கிள், அவ சின்ன பிள்ளை”, அவன் வாய் அதை சொன்னதே தவிர, அவன் பார்வை வேறு என்னவோ சொன்னது. அது அவளுக்கு புரியவில்லை, இல்லையென்றால் புரிய முயற்சிக்கவில்லை. அவன் கண்கள் அவள் மேனியில் சுவாரசியமாக மொய்த்தது.

“நான் சின்ன புள்ளையா?. என்னை பார்த்தால் அப்படியா தெரியுது?. நான் இயற்பியலில் முதுகலை பட்டாம் வாங்கி இருக்கிறேன். என் வயசு.....”.

“அர்ச்சனா.....”, அவள் அப்பாவின் குரலில் தன் வேகத்தை குறைத்து அவரை பார்த்தாள்.

அங்கிருந்த ஆண்கள் மூவரின் பார்வையும் ஒவ்வொரு விதமாக இருந்தது. மாமாவின் பார்வை அதிர்ச்சியாக, அப்பாவின் பார்வை கோபமும் சங்கடமும் கலந்ததாக, பேட்ரிக்கின் பார்வை சுவாரசியமாக. நடுவில் அவள் எனக்கென்ன என்று அலட்சியமாக நின்றிருந்தாள்.

மூவரையும் அப்படியே விட்டுவிட்டு ஹோச்ட்டலுக்குள் சென்றாள். வேகமாக வந்தது ஒரு கால் முளைத்த கத்தரிக்காய். அவளுக்கு அவர்களை பார்த்தவுடன் அப்படித்தான் தோன்றியது.

“கொடு.....”, தலையும் இல்லாமல் வாலும் இல்லாமல் மொட்டையாக கொடு என்று சொன்னவுடன், ‘இங்கேயும் லஞ்சமா?’, மனதுக்குள் நினைத்தவாறே என் பர்சில் இருந்து பத்து ரூபாயை எடுத்து அவர்கள் கையில் கொடுத்தாள்.

இப்பொழுது முழித்தது அந்த கத்தரிக்காய். “என்ன இது?”, புருவத்தை சுருக்கி கேட்டது.

“பத்து ரூபா. இது கூட தெரியாதா....., அது சரி, இங்கே இருந்து என் ரூம் நம்பரை சொல்றதுக்கு என்னால் இதற்குமேல் காசெல்லாம் கொடுக்க முடியாது”, பின்விளைவை யோசிக்காமலே நக்கலாக பதில் சொன்னாள்.

“ஏய் இந்தா பாப்பா....., நான்தான் இங்கே எல்லாம். என்னை பகைச்சுகிட்ட....., போ போ முதல்ல ஆபீஸ்ரூம் போய், ஹோச்ட்டல் பார்ம் பில் பண்ணி கொடுத்துட்டு, ரூம் நம்பர் வாங்கிட்டு வா, அதை விட்டுட்டு லஞ்சம் கொடுக்குற மூஞ்சியை பாரு, முதல்ல இடத்தை காலி பண்ணு”, தெனாவெட்டாக பேசி, அவளை கழுத்தைபிடித்து தள்ளாத குறையாக விரட்டியது அந்த கத்தரிக்காய்.

அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது. முதல் அதிர்ச்சி அவள் அந்த பார்ம் பில் செய்தாள். ஆனால் எங்கே வைத்தாள்

என்பது ஞாபகம் இல்லை. இரண்டாவது இப்போ இதை எப்படி அவள் அப்பாவிடம் சொல்லுவது என்பதுதான்.

இனிமேல் இங்கே நிற்க முடியாது என்று தோன்றவும் அங்கிருந்து வெளியேறினாள். 'உள்ளே போனவுடனே துரத்திவிட்டாங்களா?', அவள் அப்பாவின் பார்வை அவளை சாடியது. அதே கேள்வியை பேட்ரிக்கின் பார்வை கேலியாக கேட்டது. அதை கண்டுகொள்ளாமல் மெதுவாக அவர்களை நெருங்கினாள்.

அவள் அவர்களை நெருங்கும்முன் புயல்போல் உருண்டுவந்தது அந்த கத்தரிக்காய். "சார் நீங்க எங்கே இங்கே?. யாரையாவது சேர்க்க வந்துருக்கீங்களா?. நான் காபி எடுத்து வரவா?, ஏன் வெளிய நிக்கிங்க?, வரவேற்பில் உக்காரலாமே", மாமாமேல் விழுந்து புரளாத குறையாக கேட்டது.

"இதோ இவ என் தங்கச்சி பொண்ணு. இங்கேதான் சேர்த்து இருக்கிறேன். இவளை இங்கே விட்டு போகத்தான் வந்தேன். கொஞ்சம் விளையாட்டு பிள்ளை பார்த்துக்கோ", அவரை மண்டை காய வைத்ததை எல்லாம் மறந்துவிட்டு அவளை கவனிக்க ஆள் பிடித்தார் மாமா.

"அட உங்க மருமகளா இது?".

'அவருக்கு பசங்களே கிடையாதே. இது என்ன மருமகள்னு சொல்லுது'.

"பார்த்த உடனே உங்க ஜாடை இருந்தது".

'என் அப்பா முன்னாடியே இப்படி சொல்ல உனக்கு ரொம்ப தைரியம் தான். எங்க அப்பா அவங்க பரம்பரை ஜாடைன்னு சொல்லுவார். நீ என் அம்மா பரம்பரையில் சேக்குற, நடத்து நடத்து', நக்கலாக நினைத்தவாறு நின்றிருந்தாள்.

"என்ன ஒரு அடக்கம்".

‘யாரு.....’.

“நீங்க கவலையே படாதீங்க. நான் பாத்துக்கறேன்”.

‘என்னையவா?, வழக்கம்போல் அவள் வேலையை சரியாக பார்த்துக் கொண்டிருந்தாள்.

“அப்போ எங்களுக்கு ஒரு கவலை விட்டது. இவளோட ரூம் நம்பர் என்ன?”, மாமா மறந்திருந்ததை ஞாபக படுத்தினார்.

“அது ஆபீஸ்ரூம்லையே சொல்லி இருப்பாங்களே. அதைத்தான் நான் உங்க மருமகட்ட கேட்டேன்”, கோர்த்துவிட்டது கத்தரிக்காய்.

இப்பொழுது அனைவரின் பார்வையும் அர்ச்சனாவின் மேல். என்ன செய்வாள்.....?

பகுதி - 2

என்னை சுற்றி அனைத்தும் அழகாய்

நான் அழகாய் இருப்பதாலோ

மின்மினியாய் நான்.....

அந்த வார்டன் அவளை கோர்த்துவிட்டு வேடிக்கை பார்க்க, அவள் அப்பா அவளை பார்த்து கேட்டார். “அந்த பார்மை என்ன செஞ்ச?”, அவருக்கு தெரியாதா அவரோட மகளைப்பத்தி.

“அங்கே ஆபீஸ்ல கொடுத்தேன்பா, அவங்க பத்து நிமிஷம் கழித்து கேட்க சொன்னாங்க நான் மறந்துட்டேன். ஹிஹிஹி..... நீங்க இங்கேயே இருங்க நான் போய் கேட்டுட்டு வாறேன்?”, அப்பாவின் கேள்விக்கு தயங்காமல் புளுகினாள்.

பேட்ரிக் அவளை நம்பாத பார்வை பார்த்தான். அதைவிட அவன் பார்வையில் இருந்த வேறு எதுவோ ஒன்று அவளை ரொம்பவே பாதித்தது. அவள் ஒன்றாம் வகுப்பு முதல், முதுகலை பட்டம் முடித்ததுவரை படித்தது அனைத்துமே இருபாலர்கள் சேர்ந்து படிக்கும் பள்ளி கல்லூரிகளே.

ஆண்களுடன் பேசுவது, பழகுவது, அவர்களின் பார்வைகள் எதுவுமே புதிது இல்லை. அவ்வளவு ஏன் கல்லூரியில் காதலிக்கிறேன் என்று சொல்லி அவள் பின்னால் சுற்றிய பசங்களை கூட அவள் கண்டுகொண்டதில்லை.

அவர்கள் அனைவரின் பார்வையிலும் இல்லாத ஏதோ ஒன்று. ‘ச்சே நான் ஏன் அவனை பற்றியே யோசிக்கிறேன்?’, அவன் பார்வையை தைரியமாக சந்தித்துவிட்டு, ஒரு புன்னகையை சிந்திவிட்டே அங்கிருந்து ஓடினாள்.

அதற்கு காரணம் அவன் பார்வையில் இருக்கும் அது, என்னவென்று தெரிந்துகொள்ள இப்பொழுது

விருப்பப்படவில்லை. அவனை அங்கேயே மறந்துவிட்டு ஆபீஸ்சை நோக்கி சென்றாள். மனம் முழுக்க யோசனை, அந்த பார்மை எங்கே வைத்திருப்பேன்? என்றுதான்.

அன்று நேர்முகத்தேர்வுக்கு வந்திருந்த மாணவிகளில் நிறையபேர் அங்கே நின்று ஹோஸ்டல் பார்ம் நிரப்பிக் கொண்டு இருந்தார்கள். 'நான் என் பார்மை எங்கே வைத்தேன்?, ச்சே அம்மா சொல்லுறது மாதிரி எனக்கு கொஞ்சம் கூட பொறுப்பே கிடையாது?', மனதுக்குள் புலம்பினாலும் கர்ம ஸ்ரத்தையாக அந்த பாமை தேடினாள். கொஞ்சமே கொஞ்சம் டென்சன் ஏறியது.

'இன்னொரு பாம் கூட வாங்கிடலாம். இந்த அப்பா ஏதாவது கேள்வி கேட்டால் தாங்க முடியாதே?, யோசனையை கலைத்தது ஒரு குயிலின் குரல். அவளுக்கு அவளது குரல் அப்படித்தான் இருந்தது. "ஹாய் இதையா தேடுறிங்க?".

"ஹாய்.....", அவளுக்கு ஒரு ஹாய்யை உதிர்த்துவிட்டு, அவள் கையிலிருந்து அந்த பேப்பரை வாங்கி பார்த்தாள். முகத்தில் சட்டென ஒரு பிரகாசம்.

"இது எங்கே இருந்து உனக்கு கிடைத்தது?. ஹையோ ரொம்ப சந்தோசம். நான் இதைத்தான் தேடினேன்", சந்தோஷ கூச்சலுடன், அவளை கட்டிபிடித்து கன்னத்தில் நச்சென்று ஒரு முத்தம் கொடுத்தாள்.

புதியவள் வெலவெலத்து போனாள். சுற்றி இருந்த அனைவருமே இவர்களை வித்தியாசமாக பார்க்க. அதை கண்டுகொள்ளாமல், "இது என்னோடதுன்னு எப்படி கண்டுபுடிச்ச?".

"அதில்தான் உன் போட்டோ ஒட்டி இருக்கே. அதை பார்த்து பில் பண்ணத்தான் உன்கிட்டே இருந்து வாங்கினேன். நீதான் இதை திரும்ப வாங்காமல் போய்ட்ட", அவள்தான் நெளிந்தாள்.

அதை காற்றோடு விட்டுவிட்டு, “அதை விடு உன் பெயர் என்ன?”, அர்ச்சனா சரளமாக கேட்க,

“என் பெயர் பெமிலா பிரான்சீஸ். நீ..... அர்ச்சனாதானே”, கொஞ்சம் தயக்கமாகவே பேசினாள்.

“நான் அர்ச்சனாதான், என் பாமை பாத்து உன் பேரையும் அர்ச்சனான்னே எழுதிட்டியா என்ன?. இப்படி பம்முற, சரி நீ என்ன சப்ஜெக்ட்?”, அவள் கையை விடாமல் பிடித்துக் கொண்டேன்.

“அதெல்லாம் இல்லை. பாம் பில் பண்ணும்போது பாத்தேன். வேதியியல்..... நீ..... இயற்பியல் தானே...?”, கேள்வியும் பதிலும் அவளுமாக இருந்தாள்.

“நான் இயற்பியல் தான். அதென்ன நீ தெரிஞ்சு வச்சுட்டே நீ.... நீ.... ன்னு போட்டு இழுக்குற, ஆனால் ரெண்டும் ஒரே கிளாஸ் தான். பொரியல்..... இல்லை இல்லை பொருளறிவியல்”, முதல் நாளே அவளை கலங்கவைக்க வேண்டாம் என்று முடிவு செய்து கொஞ்சமாக பேசுவதாக அவள் நினைத்தாள்.

“சரிவா நாம பார்மை கொடுத்துட்டு ரூம்நம்பர் கேட்டுட்டு விடுதிக்கு போகலாம்”, இருவரும் ஒன்றாக சேர்ந்தே பார்மை கொடுத்தார்கள். பெமியை மேலே பேசவிடவில்லை அர்ச்சனா.

“பெமிலா உனக்கு அறை எண் பதினைந்து. அர்ச்சனா உனக்கு பதினாறு”, ரோசி சொல்லிவிட்டு அவர் வேலையை தொடர்ந்தார்.

“ரோசி எங்கள் இருவருக்கும் ஒரே ரூம் கொடுக்க முடியாதா?”, கேட்கவும் தன் கைகளுக்குள் இருந்த பெமிலாவின் கை கொஞ்சம் நடுங்குவது போல் தோன்றியது. அவள் கையை அழுந்த பற்றிக் கொண்டாள்.

ரோசி அவளை திகைப்பாய் பார்த்து பின் சட்டென சிரித்தார். பிறகுதான் பெமியின் கை நடுக்கம் குறைந்தது.

“வந்த உடனேயே ஊர்க்காரர்கள் ஒன்று கூடிட்டீங்களா?. ஒவ்வொரு அறையாக பில் செய்துகொண்டே வருகிறோம். லாஸ்ட் பெமிலாவோடு அறை என் பதினைந்து நிரம்பிவிடும். பிறகு நீ உனக்கு பதினாறு. இதில் நான் என்ன செய்ய?”, சிரிப்பாக கேட்டார்.

“இவ்வளவுதானா, எங்க பார்மை திரும்ப தாங்க. நான் ஒரு ஆள் தந்த பிறகு நாங்கள் திரும்ப தருகிறோம்”, அர்ச்சனா சாதாரணமாக சொல்ல, ரோசியின் முகம் கொஞ்சம் கோபத்தை வெளிப் படுத்தியது.

“என்ன வந்த முதல் நாளே ஊர்க்காரங்க ஒண்ணு கூட பாக்குறிங்களா?. அதெல்லாம் முடியாது. இந்த ரூம் வேண்டாம்ன்னா பிரின்சிபாலை போய் பாரு”, குரலிலும் கடுமை.

“இல்ல மேம் நாங்க அந்த அறையிலேயே இருந்துக்கறோம்”, பெமி வேகமாக சொல்லிவிட்டு, இருவருக்கும் அவர் எழுதி தந்த சீட்டை அவளே வாங்கிக்கொண்டு வெளியேறினாள்.

வெளியேறும்போதே சொன்னாள், “உனக்கு ரொம்ப தைரியம்தான்”.

“என் தைரியத்தை நான் இன்னும் காட்டவே இல்லை”, தெனாவெட்டாக சொல்ல, இவளது நட்பை தொடரவா வேண்டாமா? என்று அர்ச்சனாவை பயப்பார்வை பார்த்தாள் பெமிலா.

“எதுக்கு என்னை அப்படி பாக்குற?, சரி விடு நாம போகலாம்”, அவளை சகஜமாக்க முயன்றாள்.

இருவரும் வராண்டாவை தாண்டி வரும்பொழுது, பெமிலாவின் ஜாடையில் வயதான பெண்மணி ஒருவரைப்

பார்த்தாள். “ஏய் பெமி, அங்கே பாரேன் உன்னை மாதிரியே இருக்காங்க அவங்க?”, கையை அவர்கள் பக்கம் நீட்டினாள்.

பெமி சிரிப்பாக சொன்னாள், “நான்தான் அவங்களை மாதிரி இருக்கிறேன்”.

“அட படுத்துட்டு போர்த்தினால் என்ன, போர்த்திட்டு படுத்தால் என்ன ரெண்டும் ஒன்றுதான். சரி உனக்கு அவங்களை தெரியுமா?”, அவர்களை நெருங்கவே தன் குரலை தாழ்த்தி அவள் காதில் கேட்டாள்.

“பெமி முடிஞ்சுதா. உனக்கு எந்த ரூம்”, அவர்கள் கேட்டார்கள்.

“அம்மா முடிஞ்சதும்மா நாம போகலாம். இவபேர் அர்ச்சனா என்னோட பக்கத்து ரூம்தான்”, அவள் சொன்ன பிறகுதான் அர்ச்சனாவின் மண்டையில் மின்னல் வெட்டியது. ‘அட இவளோட அம்மாதானா இது. அச்சு..... பெரிய பெரிய விஷயத்தை அசால்ட்டா நினைக்கும் நீ சில நேரம் சின்ன விஷயத்தில் மண்ணை கவ்வுறியேடா செல்லம்’, மனதுக்குள் தன்னை தானே கேட்டுக் கொண்டாள்.

அவளது யோசனையை கலைத்தது பெமியின் தாயின் குரல். “எப்படிம்மா இருக்க?”, அவர்கள் சிநேகமாக கேட்க,

“நீங்க நல்லா இருக்கீங்க ஆன்டி”, சொல்லிவிட்டு அவர்கள் கரத்தை பிடித்துக் கொண்டாள்.

தாயும் மகளும் ஒரு நிமிடம் திகைத்து, பிறகு வெடித்து சிரித்தார்கள். “ஏய் எதுக்கு சிரிக்கிற”, அவள் கையை நிமிண்டினாள்.

“ம்ம்ம் சும்மாதான்”, சொல்லிவிட்டு சிரிப்பை தொடர்ந்தாள் பெமி.

“ஏய் சொல்லிட்டு சிரி, நான் அப்படி என்ன சொல்லிட்டேன்?”, அவளை சுரண்டினாள்.

“எங்க அம்மா நீ நல்லா இருக்கியான்னு கேட்டால்? நீ அவங்க நல்லா இருக்காங்கன்னு பதில் சொல்லுற”, பொறாமையாக கேட்டாளோ?.

“உனக்கு பொறாமை. உங்க அம்மா உனக்கு அக்கா மாதிரி இருக்காங்களேன்னு. நீங்க சொல்லுங்க ஆன்டி”, அவளை விட்டுவிட்டு அவள் தாயிடம் கேட்டாள்.

“நான் நல்லா இருப்பது இருக்கட்டும், நீ எப்படி இருக்க? உன்கூட யார் வந்திருக்காங்க?”, அவர் கண்கள் கவலையாக சுற்றிலும் தேடியது.

“ஹையோ, என் அப்பாவும் மாமாவும் அங்கே விடுதி பக்கத்தில் நின்னுட்டு இருந்தாங்க. நான் அவர்களை மறந்தே போயிட்டேன். பெமி வாறியா நீ?”, அவள் கையை விடாமல் கேட்டாள்.

“நாங்களும் உன்னோடே வாறோம். அவளோட பெட்டி எல்லாம் இங்கே இருக்கு. அதை எடுத்துட்டு போகலாம்”.

“ஓ……., தாராளமா எடுத்துட்டே போகலாமே”, தானும் ஒரு பேகை எடுத்து தோளில் மாட்டிக் கொண்டாள்.

“உனக்கு எதுக்குமா சிரமம், நாங்களே எடுத்துக்கறோம்”, ஆன்ட்டி சொன்னார்கள்.

“அதெல்லாம் ஒன்றும் இல்லை. நீங்க வாங்க, எவ்வளவோ பாத்தாச்சு இதை தூக்க மாட்டனா?”, சொல்லிவிட்டு நடந்தாள்.

அங்கே இவள் அப்பா கோபமாக நின்றுகொண்டிருந்தார். “ஒரு பாமை குடுத்துட்டுவர இவ்வளவு நேரமா?. சரி உன் ரூம் நம்பர் என்ன?”, பல்லை கடித்தவாறே கேட்டார்.

“அப்பா இங்கே வந்து நீங்க ரொம்ப பேசுறீங்க. எனக்கே வேற அப்பாவை வழியில் மாத்தி கூட்டி வந்துட்டனொன்னு

சந்தேகமா இருக்கு”, அவர் கோபத்தை டீலில் விட்டுவிட்டு, கேலி செய்தாள்.

அவர் வேகமாக மூச்சு விடுவதிலிருந்து கோபத்தை அடக்க முயல்வது தெரிந்தது. அவரை இதற்குமேலும் சோதிக்கவேண்டாம் என்று முடிவு செய்து, “பதினாறுப்பா”, பட்டென சொல்லிவிட்டு நின்றாள்.

அப்பொழுதுதான் கவனித்தார் அவள் தோளில் இருந்த பேகை. “இது உன்னோடது இல்லையே. எங்கே இருந்து தூக்கிட்டு வந்த?. ஒழுங்கா எடுத்த இடத்திலேயே வச்சுட்டு வந்துடு”, வேறு யாருக்கும் கேட்டுவிடக் கூடாதே என்று மெதுவாக சொன்னார். மெதுவாக சொன்னாலும் குரலில் அப்படி ஒரு கண்டிப்பு.

“அப்பா இது....., என்னோட இருக்காளே இவளோட பேக் தான்”, சொல்லிவிட்டு தன் அருகில் பார்க்க, அவள் கைக்குள் இருந்தது பெமியின் பர்ஸ் மட்டுமே.

‘இவ எங்க போனா?’, அவள் திரும்பி பார்க்க, கொஞ்சம் தூரத்தில் பெமி அழுவது அர்ச்சனாவின் கண்பார்வையில் விழுந்தது. அதை கண்டதும் சட்டென அவள் பேகை கழற்றி தன் அப்பாவின் கையில் கொடுத்துவிட்டு அவள் அருகில் சென்றாள்.

“நீங்க எதுக்கு ஆன்டி திட்டுனீங்க பெமியை? பாருங்க எப்படி அழறா. பெமி அம்மா திட்டினா எல்லாம் அழக் கூடாது. நீயும் திருப்பி திட்டிடணும்”, விஷயம் என்னவென்றே தெரியாமல், அவளுக்கு ஆறுதல் சொல்ல, பெமி அவள் கவலையை மறந்து சிரித்தாள்.

“நான் உன் பிரண்ட எதுவும் சொல்லலை. அவளுக்கு விடுதியில் தனியா இருக்க பயமாம், அதுக்குதான் அழறா”, பெமியின் அம்மா சிரிப்பாக சொன்னார்.

“தனியா எப்படி?, அதான் நாங்க எல்லாம் இருக்கோமே”, புருவத்தை சுருக்கி கேட்டாள்.

“நீ இதற்குமுன் விடுதியில் இருந்துருக்கியா?”, ஆன்டி சந்தேகமாக கேட்டார்.

“இல்லையே ஏன்?”.

“உனக்கு கஷ்டமா இல்லையா?. அப்பா அம்மா இல்லாமல் இங்கே தனியா இன்னும் ஒரு வருஷம் இருக்கணும். எனக்கு நினைத்தாலே அழுகையா வருது”, பெமி உண்மையான வருத்தத்தில் சொல்லி கண் கலங்கினாள்.

“அப்படியா.....?”, அர்ச்சனா கொஞ்சம் யோசித்துவிட்டு, “எங்கே....? நான் இல்லையென்றால் என் வீட்டில் சந்தோசம்தான் படுவாங்க, நீ வேற”, சொல்லிவிட்டு தன் அப்பாவை நைசாக திரும்பி பார்க்க, அவரோ இவள் எப்பொழுது திரும்புவாள் என்று காத்துக் கொண்டிருந்தவர்போல முகத்தை உர்ர் என்று மாற்றினார்.

“ஒரு நிமிஷம் எங்க அப்பாவை பாருங்களேன்?”, சொல்லிவிட்டு மூவரும் ஒரே நேரம் அவரை பார்க்க, அர்ச்சனாவின் அப்பா அவளை காதை முறுக்குவேன் என்று ஜாடை செய்ததை அனைவரும் பார்த்தார்கள். இவர்களும் திரும்பி பார்ப்பார்கள் என்று எதிர் பார்க்காத அவள் அப்பா மாட்டிக் கொண்ட உணர்வில் சங்கடமாக உணர்ந்தார்.

“இப்படி அப்பாவை கிட்டே வச்சுகிட்டு நான் எங்கே பீல் பண்ணுறது ஹம்.....”, பெருமூச்சு விட்டு சிரித்தாள். “நீங்களும் பாப்பீங்க என்று அவர் நினைத்திருக்கவே மாட்டார், எப்படி மாட்டுனாரு பாத்தீங்களா?”, சிரிப்பு குறையாமலே சொன்னாள்.

“அர்ச்சனா உன் அப்பா கோபமா இருக்காங்கபோல?, நீ உங்க அப்பாட்ட போ”, ஆன்டி அர்ச்சனாவை விரட்டினார்.

“அட நீங்க வேற, அவர் அப்பா சிரிச்சு பார்த்து இருக்கீங்களா என்ன?”, இப்படி அவள் கேட்பாள் என்று அவர் எதிர்பார்க்கவில்லை போல. அதை கண்டுகொள்ளாமல் தொடர்ந்தாள். “அவர் சிரிச்சாதான்

ஆச்சரியப் படணும். கோபமா இருந்தால் அவர் நார்மலா இருக்குறதா அர்த்தம்", அர்ச்சனா சொல்லவே, பெமி சிரித்தாள்.

"ச்சு.....", பெமியை அடக்கிவிட்டு, "நானும் இவளும் சாயங்காலம் வரை இங்கேதான் இருப்போம். நீ இப்போ உன் அப்பாவிடம் போம்மா", தன்மையாக சொன்னார்.

சட்டென அமைதியானாள். "சரி ஆன்டி. உங்க பேக் என்ட்ட தான் இருக்கு. அதை நான் இவளோட ரூமில் வச்சுடுறேன்", சொல்லிவிட்டு திரும்பி நடந்தாள்.

"அம்மா பாருங்க அவ முகமே வாடிடுச்சு. இன்னும் கொஞ்சநேரம் இங்கே இருக்க விட்டிருக்கலாம் இல்ல?", பெமி கவலை பட்டாள்.

"அங்கே கொஞ்சம் பாரு", அவர்கள் பார்க்கும் வேளையில், அர்ச்சனாவை அவளின் அப்பா, பின்னந்தலையில் தட்டுவதை பார்த்தார்கள். இது அர்ச்சனாவிற்கு பழகிய ஒன்று. அவரது உச்சபட்ச்ச கோபத்தின் வெளிப்பாடுதான் அது. அர்ச்சனா சாதாரணமாக எடுத்துக் கொள்ள, பார்த்துக் கொண்டிருந்த இவர்களுக்குத்தான் வருத்தமாக இருந்தது.

"அம்மா என்னம்மா?, இவ்வளவு வளந்த அவளை அவங்க அப்பா அடிக்கிறாங்க?", பெமி அதிர்ச்சியாக கேட்டாள்.

"அவ விளையாட்டுத் தனமா இருக்காளே அதான். சரி முடிஞ்ச அளவு அவளை பாத்துக்க, கொஞ்சம் விவரம் இல்லாத மாதிரி நடந்துக்கறா, ஆனால் வெகுளி. ஹம்..... சரி வா நாம போகலாம்", தாயின் கரிசனை அவரிடம்.

"முதல்ல ரூமில் எல்லாத்தையும் வச்சுட்டு வா. வெளியே போய் சாப்பிட்டுவிட்டு, உன்னை இங்கே விட்டுவிட்டு நான் முதல்ல கிளம்புறேன்", அர்ச்சனாவிடம் கடு கடுத்தார் அவள் அப்பா.

“ஹை ஹோட்டல்ல சாப்பிட போறோமா?. இதோ இப்போ வந்துடுறேன்”, அவர் அடித்ததை சட்டை செய்யாமல், தன் அறைக்கு பெட்டிகளை தூக்கிக் கொண்டு சென்றாள்.

அந்த கத்தரிக்காய்....., அவங்க பேரு மரியாவாம், மரியா அவளுக்கு உதவி செய்தார். அறைக்குள் நுழைந்த அவளை வரவேற்றது வெற்று அறை. அங்கு யாரும் இல்லை. முதல் முறையாக தனிமையை உணர்கிறாள்.

“என்ன யாருமே இல்லை?”, மரியாவிடம் கேட்டாள்.

“பாப்பா இப்போதானே முதல் ஐம்பது சீட் முடிஞ்சுருக்கு. இன்னும் ஒரு நாற்பத்தைந்து நாளாவது ஆகும் இங்கே எல்லோரும் வர. சரி உன் பெட்டியை வைத்து லாக் பண்ணிட்டு போ. இங்கே இருக்கும் ஒரு கபோடை நீ யூஸ் பண்ணிக்க”, அவர் அனுபவம் பேசியது.

அறைக்குள் அவளுக்கு மூச்சு முட்டியது. மொத்தம் ஆறு கட்டில்கள் போட்டிருந்தது. சுவரின் ஓரம் பக்கத்துக்கு இரண்டு இரண்டாக நான்கு, ஒரு பக்கம் ஒன்று நடுவில் ஒன்று. ஓரமாக இருந்த காட்டை தேர்ந்தெடுத்து அதில் தன் பெட்டிகளை வைத்துவிட்டு அதன் அருகில் அமர்ந்தாள்.

ஆழமாக மூச்சை இழுத்து விட்டாள். அவள் உடன் பிறந்தது ஒரு அண்ணா மட்டும்தான். ஆனால் ஒரு அக்காவிடம் செய்யும் அனைத்து குறும்புகளையும், சண்டைகளையும் அவனுடன் போடுவாள். வீட்டில் அவன் இருந்தால் அவனை ஒரு வழி செய்து விடுவாள்.

தனிமையை அவள் இன்றுவரை உணர்ந்ததே இல்லை. அவளையும், அவள் உணர்வுகளையும் மீறி ஏனென்று தெரியாமல் கண்கள் கலங்கியது. ‘எனக்கு அழ தெரியுமா?’, தன்னை தானே கேட்டுக் கொண்டாள்.

அம்மாவின் மடி வேண்டுமென்ற எண்ணம் மனதை துளைத்தது. “அம்மா ஏம்மா இப்படி செஞ்ச?, என்னை ஏன்

வீட்டை விட்டு இவ்வளவு தூரம் அனுப்பின?. எனக்கு அழுகையை கற்று கொடுக்கவா?”, வாய்விட்டு கேட்டாள்.

அந்த வெற்று அறையில் எதிரொலித்தது அவள் குரல். கால்களை கட்டிக் கொண்டு, கால்களுக்கு இடையில் முகம் புதைத்தாள். மனம் வெறுமையாக இருந்தது. எதுவும் செய்ய தோன்றாமல் எவ்வளவு நேரம் அங்கே இருந்தாள் என்று அவளுக்கே தெரியாது.

“ஆஆஆ.....”, பக்கத்து அறையிலிருந்து வந்த அலறலில் சட்டென்று எழுந்து அந்த அறைக்கு ஓடினாள்.

அங்கே கட்டிலின் மேலே ஒரு சின்னப்பெண் ஏறி நின்றுகொண்டு கீழே குனிந்து எதையோ தேடிக் கொண்டிருந்தாள்.

“ஏய், என்ன ஆச்சு எதுக்கு கத்துன?”, சாதாரணமாக கேட்டு அவளை நெருங்கினாள்.

“பாத்து..... பாத்துவாங்க இங்கே பல்லி இருக்கு”, மிரட்சியாக முகத்தை வைத்துக்கொண்டு சொன்னாள் அவள்.

“அடக் கொடுமையே அந்த பல்லி உன்னை பார்த்ததுக்கும், நீ போட்ட சத்தத்துக்கும் தலை தெறிக்க, உயிரை கையில் பிடிச்சுட்டு ஓடிபோய், எங்கேயாவது ஒளிஞ்சு இருந்து மூச்சு வாங்கிட்டு இருக்கும். அதை பார்த்து நீ பயப்படுறியா? நேரம் தான்.

அட்சி முதல்ல கீழே இறங்கு, சர்ச்ல நிக்கிற செலையாட்டம் நிக்கிற?”, அவள் சொன்னதை கேட்டு இன்னும் மிரட்சியாகவே பார்த்துக்கொண்டு இறங்கமாட்டேன் என்று தலையை ஆட்டிக் கொண்டு அசையாமல் நின்றாள்.

‘இவ வழிக்கு வரமாட்டா?’, “ஹேய் அதோ உன் கால் கிட்டேதான் ஓடுதுபாரு?”, அர்ச்சனா சொல்லி முடிக்கவும் அவள், அர்ச்சனாவின்மேல் குதிக்கவும் சரியாக இருந்தது.

அவள் கழுத்தை கட்டிக்கொண்டு பல்லி மாதிரி நின்றாள். “அம்மா தாயே அது போய் ரொம்ப நேரம் ஆகுது. நீயும் நானும் இப்படி தனியா கட்டட்ட்ட்டி புடிச்சுட்டு நிக்கிறதை பார்த்தால், பாக்குறவங்க தப்பா நினைப்பாங்க. முதல்ல கொஞ்சம் நகர்ந்து நில்லு”, வலுக்கட்டாயமாக அவளை விலக்கினாள்.

பயம் கொஞ்சம் கூட விலகாமல் பார்வையை சுழலவிட்டவாறே, “போங்கக்கா....., எனக்கு பல்லி, கரப்பான்பூச்சின்னா மட்டும் கொஞ்சம் பயம்”, பயம் போகாமலே சொன்னாள்.

“கொஞ்சம்.....”, நான் நக்கலாக கேட்க,

“சாரிக்கா, பயத்துலதான் நான் இப்படி பண்ணிட்டேன். திங்க்ஸ் எல்லாம் வச்சுட்டு போகத்தான் வந்தேன். இன்னும் பதினைந்துநாள் கழிச்சுதான் வருவேன். இங்கே இன்னும் அட்மிஷன் முடியலையாம் அதான். அப்பா காத்துட்டு இருப்பாங்க”, சொல்லிவிட்டு செல்ல போனாள்.

“ஹேய் உன் பேரை சொல்லாமலே போறியே”, அர்ச்சனா குரலை உயர்த்தி கேட்டாள்.

“ஜூடித்க்கா, எல்லோரும் ஜூடின்னு கூப்பிடுவாங்க. உங்க பேர்”, சிநேகமாக கேட்டாள்.

“என் பேர் அர்ச்சனா. இங்கே பதினாறுதான் என் ரூம் நம்பர். உன்னோடது பதினெட்டு. சரி எந்த ஊர்?”, பேச்சை தொடர்ந்தேன்.

“திருச்சிக்கா, நீங்க”.

“நான் நாகர்கோயில்”.

“அப்படியா, சரிக்கா பிறகு பாக்காலாம், அப்பா காத்துட்டு இருப்பாங்க. பாய்.....”, விடைபெற்று சென்றுவிட்டாள்.

‘சின்ன பிள்ளையா இருந்தாலும் விவரமாத்தான் இருக்கா’, மனதுக்குள் நினைத்துக் கொண்டாள்.

அப்பா என்று ஜுடி சொன்னதில் அர்ச்சனாவுக்கும் தந்தையின் ஞாபகம் வந்தது. “ச்சே....., இப்போகூட நேரமாயிடுச்சே. அப்பா திட்ட போறார்”, மனதில் எண்ணம் ஓடினாலும் வேகமாக செல்லவில்லை. மெதுவாக சென்று அப்பாவின் முன் நின்றாள்.

சுற்றிலும் பார்வையை சுழலவிட, அங்கே இன்னும் ஒரு ஆறுபேர் தங்கள் மகள்களுடன் நின்று, தாயும் தந்தையுமாக பிரிவை எண்ணி வருந்தியவர்களாக வாஞ்சையாக பேசிக் கொண்டிருந்ததை பார்த்தாள்.

இதுவரை இப்படி ஒரு ஏக்கத்தை அவள் உணர்ந்ததே இல்லை. ‘எனக்கு மட்டும் ஏன் அப்பா இப்படி இல்லை. இங்கே எல்லா அப்பாவும் பொண்ணுங்களோட சந்தோசமா பேச, என் அப்பாமட்டும் எப்பொழுதும் கோபமாவே இருக்கிறாரே ஏன்?’, மனம் ஊமையாய் அழுதது.

“போயிட்டுவர இவ்வளவு நேரமா.....?”, இன்னும் என்ன சொல்லி இருப்பாரோ, கலங்கி இருந்த அவள் கண்களை பார்த்து, முகத்தை திருப்பிக்கொண்டு முன்னால் நடந்தார்.

மாமா அவருக்கு முன்பே காரில் ஏறி இருந்தார். வேறு வழி இல்லாமல், மெதுவாக காரை நோக்கி நடந்தாள். அருகில் நிழலாடுவது புரிந்தும் பார்க்காமல், அதை கண்டு கொள்ளாமல் நடந்தாள்.

“பக்கத்தில் இவ்வளவு அழகா ஒரு பையன் வாறேன். அதை கவனிக்காமல் அப்படி என்ன யோசனை?”, அவனை நிமிர்ந்து பார்க்காமலே, அவன் குரலை அடையாளம் கண்டுகொண்டாள்.

“உன்னை பையன்னு கூட ஒத்துக்க முடியாது. தடி மாடு மாதிரி இருக்க, இதில் நீ அழகான பையன் வேறையா?”,

அவளது பிறவிகுணம் அந்த சோகமான நேரத்தில் கூட அவள் வாயை கட்டிவைக்க விடவில்லை.

அவள் கலகலப்பாக பேசினாலும், அவள் குரலில் இருந்த வேறுபாடு அவனுக்கு புரிந்தது. சட்டென அவள் முன்பு வந்து, அவள் பாதையை மறைத்தவாறு நிற்க, அவன் செய்கையை எதிர் பார்க்காததால் மெல்லிதாக அவன் நெஞ்சில் மோதி, சட்டென விலகி நின்று அவனைப் பார்த்தாள். அவன் பார்வையோ அவளை துளைத்தது.

‘ஹையோ என்ன பார்வை இது?’, அவன் பார்வையை சந்திக்க முடியாமல் தன் பார்வையை விலக்கிக் கொண்டாள். முதல் முறையாக ஒரு ஆணின் கண்களை தொடர்ந்து பார்க்க முடியாமல் தவிர்த்தாள்.

அவன் என்ன நினைத்தானோ, சட்டென அவள் கரத்தை தன் கரங்களால் பொதிந்தான். கைகளின் வழியே இதமான கதகதப்பும், பாதுகாப்பு உணர்வும், நிம்மதியும் ஒருங்கே எழுவதை உணர்ந்தாள். கையை அவனிடமிருந்து உருவிக்கொள்ள முயலவில்லை.

நிமிடம் நீடித்த அந்த நிலையில், ஒரு ஆண்மகனின் அழுத்தமான பிடியை உணர்ந்த நொடி, சட்டென அவன் கையை உதற முயன்றாள். ஆனால் அதற்கு முன்பே அவள் கையை விடுவித்தான். “டேக்கேர்”, ஒற்றை வார்த்தையை அவள் கண்களை பார்த்து உரைத்துவிட்டு சென்றான்.

ஒரு நிமிடம் உறைந்தாள். ‘அவன் எப்படி என்னை தொடலாம். அதுவும் இப்படி’, கோபம்தான் முதலில் கிளர்ந்தது. ஆனால் அவள் புத்தியில் இன்னொன்றும் உறைத்தது, அவன் செய்கையில் தவறான எண்ணமில்லை என்பதுதான் அது.

அதைவிட அவன் கரங்களின் வழியே உணர்ந்த அந்த பாதுகாப்பு உணர்வை இதுவரை தான் உணர்ந்ததே இல்லை என்பதையும் உணர்ந்தாள். இதற்குமேல் அதை

சிந்திக்கவேண்டாம் என்று முடிவு செய்து தோளை குலுக்கிவிட்டு, காருக்கு விரைந்தாள்.

பகுதி - 3

அருகில் இருக்கும்பொழுது

தொலைவில் இருக்கும் உணர்வு

வெறுக்கின்றேன் நான்

இந்த உணர்வை சிதறடிக்க நினைக்கின்றேன்

கல்லூரிக்குள் அவர்கள் மீண்டும் நுழையும்பொழுது மணி இரண்டு முப்பது. எதுவும் பேச தோன்றாமல், தலையை கவிழ்ந்தவாறே வந்தாள். அவளிடம் இந்த அமைதி புதிது. அவள் அப்பா இதை கவனித்தாலும், தன் மச்சானிடம் பேசுவதையே குறிக்கோளாக கொண்டிருபவர்போல் பேசிக் கொண்டே இருந்தார்.

ஹோட்டலில் சாப்பிட்டு முடித்ததில் கொஞ்சம் தெம்பு வந்திருந்தது. சோகத்தை எப்பொழுதுமே அவள் தன்னை அண்ட விடுவதில்லை. அப்படியென்றால் என்னவென்றும் அவளுக்கு தெரியாது. பேட்ரிக் அவளை நெருங்கியே நடந்து வந்தான்.

‘இவன் என்ன? என்னோடே வாறான். பெருசுங்களும் கண்டுக்காம வறாங்களே?’, அவள் அவளாக இருந்திருந்தால் சிந்தித்திருப்பாள். ஆனால் இப்பொழுது அவள் எதையுமே யோசிக்கும் நிலையில் இல்லை. அங்கிருந்த குழந்தை யேசுவின் சிலையின் அருகே இருந்த சிமெண்ட் பெஞ்ச்சில் அமர்ந்து கொண்டாள்.

அவளிடமிருந்து சற்று விலகி அமர்ந்தான் பேட்ரிக். “நல்லா சாப்பிட்டியா?”, அவள் அமைதியை கலைத்தான்.

“உன் முன்னாடி தானே சாப்பிட்டேன். சரி நீ இங்கே என்ன செய்யிற? இது பெண்கள் மட்டும் படிக்கும் கல்லூரி ஆச்சே.....?”, யோசனை தோன்ற அவனிடம் பேச்சை வளர்த்தாள்.

“உனக்கு உடற்கல்வி ஆசிரியராக வரப் போறேன்”, குரலில் துளி கூட விளையாட்டு இல்லை.

“அப்படியா நல்ல விஷயம். செம ஜாலியா இருக்கும் இல்ல உனக்கு?”, அவள் விளையாட்டை தொடர்ந்தாள்.

“இதில் என்ன ஜாலி?”, புருவத்தை சுருக்கி கேட்டான்.

“ஒண்ணுமே தெரியாத மாதிரி கேக்குறியே?. நூற்றி அறுபத்தைந்து பெண்கள். நீ மட்டும் ஆண்.....?”, அவனை பார்த்து கண்ணை சிமிட்ட, சட்டென புரிந்துகொண்டான்.

அவன் முகத்தில் அப்பட்டமான அதிர்ச்சி. “எல்லாரிடமும் இப்படித்தான் பேசுவியா?”, அதிர்ச்சி விலகாமலே கேட்டான்.

“எப்படி.....?”, வேடிக்கை பார்ப்பதை விடாமல் கேட்டாள், எனவே அவன் குரலில் இருந்த அதிர்ச்சி அவளுக்கு புரியவில்லை.

“என்னிடம் பேசினாயே”, அவன் குரலில் கோபம் இருந்ததோ?.

“பேட்ரிக்..... நீ கேட்க வருவது எனக்கு புரியலடா?”, சிணுங்கினாள். அவனுக்கு அடுத்த அதிர்ச்சி, அவனை அவன் தாய் கூட “டா”, என்று சொன்னது இல்லை. நண்பர்களுக்குள் மட்டுமே இப்படி பேசி பழகி இருக்கிறான். முதல் முறை பார்க்கும் ஒரு ஆண்மகனுடன் அவள் பேசும் விதம் அவனுக்கு வெறுப்பை அளித்தது.

அவன் கோபமாக இவளிடம் எதையோ சொல்ல துவங்கும் வேளையில் பெமிலா வந்தாள். அவளுடன் அவள் ஜாடையில் ஒருவன். அவள் அண்ணனாகத்தான் இருக்க முடியும். அவ்வளவு உருவ ஒற்றுமை.

“அர்ச்சனா, இவன் என் சித்தி பையன். என் அண்ணா, பேர் சந்தோஷ். எங்களை பார்க்க வந்திருக்கிறான்”, அவள் அறிமுகப் படுத்தினாள்.

அவன் பார்வை அவ்வளவு கண்ணியமாக இல்லை. அங்கிருந்த யாருக்குமே சுத்தமாக பிடிக்கவில்லை அவனை. அவனையே நேர் பார்வை பார்த்தாள் அர்ச்சனா.. அவளது கூர்மையான பார்வையை சந்தித்து தடுமாறினான். “ஹாய்.....”, ஒற்றை வார்த்தையில் பதில் சொல்லி சம்மாளித்தான்.

அவனுக்கு தன் தலையை கூட ஆட்ட அவள் விரும்பவில்லை. ஆனால் அவனை அறிமுகப்படுத்தி வைப்பவள் தன் தோழி ஆகையால், வேண்டா வெறுப்பாக “ஹாய்.....”, ஒற்றை வார்த்தையில் பதில் சொல்லிவிட்டு முகத்தை திருப்பிக் கொண்டாள்.

பிறகு என்ன நினைத்தாளோ, பேட்ரிக்கை கையை பிடித்து எழுப்பினாள். “இவன் பேட்ரிக், மை ரிலேடிவ்”, பேட்ரிக்கை அறிமுகப் படுத்தவே, பேட்ரிக்கின் கண்களில் புதிய ஒளி, அவன் கோபம் இருந்த இடம் தெரியாமல் ஓடி ஒளிந்து கொண்டது.

அர்ச்சனாவிற்கு அவன் கோபம் எப்படி புரியவில்லையோ, அதே போல் அவன் கோபம் போனதும் தெரியவில்லை. அவன் குரல் மாறுபாடும், அவன் கேள்வியும் மட்டுமே அவள் காதில் ஒலித்தது. அதை கொஞ்சநேரம் ஒற்றி வைத்துவிட்டு, அவர்களை கவனித்தாள். பேட்ரிக் சந்தோஷ் கையை பற்றி குலுக்கினான், பெமியிடம் ஹாய் சொன்னான் அனைத்திலும் ஒரு உற்சாகம் அவனிடம். அவர்கள் விடை பெற்று சென்றார்கள்.

“பேட்ரிக் என்னமோ கேட்டியே என்ன.....?”, அவள் தொடர, அவனோ “அது ஒன்றும் இல்லை. எப்பொழுதும் இப்படி விளையாட்டுத் தனமாகத்தான் பேசுவாயா என்று கேட்டேன்?”, சம்மாளித்தான்.

“நான் பேசுறது உனக்கு விளையாட்டா இருக்கா?”, அவனை பொய்யாக முறைத்தாள்.

“சரி சந்தோஷ்ட்ட ஏன் ஒழுங்கா பேசலை?”, காரணம் தெரிந்தாலும், அவள் வாயால் தெரிந்துகொள்ளவேண்டும் என்று எண்ணினான்.

“அவன் ஒழுங்கா பாக்கலை, நான் ஒழுங்கா பேசலை”, ரைமிங்காக சொன்னாள்.

பேட்ரிக் என்னவென்று சொல்லாமல் சிரித்தான். “ஹேய் எதுக்கு இப்போ சிரிக்கிற நீ?”.

“நீ சின்ன பிள்ளையா?, இல்லை வளர்ந்த குமரியான்னு தெரியாமல் இருந்தேன் இப்போ அதுக்கு பதில் கிடைத்துவிட்டது அதான் சிரிச்சேன்”, தெளிவாக குழப்பினான்.

“டேய் என்னை சுத்தி இருக்குறவங்களுக்கு என்னை பார்த்தால் எப்படித்தாண்டா இருக்கு. என் அம்மா, அண்ணா, என் ப்ரண்ட்ஸ், இப்போ நீ எல்லோரும் இதையே சொல்லுறிங்க”, பல்லை கடித்தவாறே கேட்டாள்.

அவன் பதில் சொல்லும் முன்பே, அவள் அப்பா அவர்கள் அருகில் வந்தார். “அர்ச்சனா நான் கிளம்புகிறேன். எனக்கு ஐந்து முப்பதுக்கு ட்ரைன். இப்போ மணி நாலு, இப்போ கிளம்புனாதான் சரியாக இருக்கும்.

தம்பி நீங்க பேசிட்டு இருங்க, நான் கிளம்புறேன். எது வேண்டுமென்றாலும் போன் பண்ணு.....?”, இன்னும் என்னவோ சொல்ல நினைத்தார் ஆனால் சொல்லாமலே திரும்பிவிட்டார். மாமா அவரை ஸ்டேஷனில் விடுவதாக சொன்னதை மறுத்தார்.

“அப்பா ஒயிட் சுடிதார், கேன்வாஸ் சூ ரெண்டும் வாங்கித் தராமல் போறீங்களே, அது மட்டும் இல்லை, ப்ளேட், டம்ளர், பக்கெட், மக், எல்லாம் வாங்கணும்பா”, அப்பொழுதுதான் ஞாபகம் வந்தவளாக கேட்டாள்.

“இதெல்லாம் முதலிலேயே சொல்ல தெரியாதா, ஆள் மட்டும்……., சரி சரி நான் பணம் தாறேன் நீயே பிறகு வெளிய போய் வாங்கிக்கோ. எனக்கு இப்போ டைம் இல்லை”, சொல்லிவிட்டு பணத்தை எடுத்து அவள் கையில் திணித்துவிட்டு, அவளை திட்டுவதற்கு நேரம் இல்லாமல் கிளம்பிவிட்டார்.

அவர் அனைவரிடமும் விடைபெற்று சென்ற பிறகு மாமா வந்தார். “அர்ச்சனா நானும் கிளம்புறேன். இங்கே உனக்கு லோக்கல் கார்டியன் நான்தான். ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் எனக்கு போன் பண்ணு. பேட்ரிக்கின் அம்மா இங்கேதான் வொர்க் பண்ணுறாங்க.

அவன் அடிக்கடி இங்கே வருவான். அவன் மூலமாக நான் தேவையானதை செய்கிறேன். இவனோட அம்மா என் ப்ரண்ட் தான். நானும் வந்து ரொம்ப நேரமாச்சு, உன் அத்தை தேடுவா. சரி பேட்ரிக் நீ எப்படி வந்தாய். நான் உன்னை வீட்டில் ட்ரோப் பண்ணவா?”, பேசிக் கொண்டே இருந்தார்.

“சரி மாமா”, ஒற்றை வார்த்தையில் பேச்சை முடித்துக் கொண்டாள். அவளுக்கும் அவள் அத்தையை பற்றியும், அவர் மகள்களைப் பற்றியும் கேட்க ஆசைதான். வீட்டிற்கு வா என்று சொல்லாத அவரிடம் என்ன கேட்க, வேண்டாம் அப்படியே தாமரை இலை தண்ணீராகவே உறவு இருக்கட்டும் என்று விட்டுவிட்டாள்.

“அங்கிள் நீங்க போங்க. நான் என் பைக்லதான் வந்தேன்”, அவளை பார்த்தவாறே அவரிடம் பதில் சொன்னான்.

அவர்கள் பேச்சைக் கேட்டாலும், எதுவும் சொல்லாமல் சாதாரணமாகவே நின்றாள். பேட்ரிக்கின் பார்வை அவளை விடாமல் தொடரவும், ‘என்ன?’, என்பதுபோல் அவனைப் பார்த்து தலையை ஆட்டினாள். அவனோ எதுவும் இல்லையென்று சிரிப்பிலே பதில் சொன்னான். ‘இதில் சிரிக்க என்ன இருக்கு?’, அர்ச்சனாதான் குழம்பினாள்.

பிறகு மாமா என்ன நினைத்தாரோ, அவனை தனியாக அழைத்துக்கொண்டு சென்று என்னமோ அவனிடம் குசுகுசு என்று பேசினார். இடையில் இருவரும் அவளை திரும்பி வேறு பார்த்தார்கள். பேட்ரிக்கை அப்பொழுதுதான் பார்ப்பதுபோல புதிதாக பார்த்தாள்.

அவனது உயரம், அலைஅலையான கேசம், அதை அவன் ஒற்றை கையால் ஒதுக்கும் அழகு, அகன்ற நெற்றி, நெற்றி முழுவதும் புரளும் அவன் முடி, துளைக்கும் பார்வை, கூர்மையான நாசி, மேலுதட்டை மறைத்திருந்த அவனது தடித்த மீசை, அவன் பேசும்பொழுது தெரியும் பல் வரிசை, வழுவழு கன்னம்,

அவன் போட்டிருந்த வெள்ளை நிற டிஷர்ட், அடர் வர்ண ஜீன்ஸ், இமைக்க கூட மறந்து அவனை பார்த்துக் கொண்டிருந்தாள். எந்த ஆணிடமும் தோன்றாத ஈர்ப்பு அவனிடம் தனக்கு உண்டாவதை திகைப்பாய் உணர்ந்தாள்.

‘அர்ச்சனா..... உனக்கே இது நல்லா இருக்கா, உன்னை நம்பி அம்மா, அப்பா இங்கே அனுப்பி வச்சு இருக்காங்க. நீ என்னன்னா நல்லா சைட் அடிக்கிற’, மனசாட்சி விழித்து கேள்வி கேட்க,

“ஆமா பின்ன பாக்குற மாதிரி இருந்தா சைட் அடிக்கத்தான் செய்வாங்க”.

‘அப்போ பாக்குற மாதிரி இருந்தால் யாரை வேண்ணா சைட் அடிப்பியா?’.

“எத்தனையோ பேரை பார்த்து இருக்கேன். ஆனால் இவனை மட்டும் தானே இப்படி திருட்டுத்தனமா சைட் அடிக்கணும்னு தோணுது”.

‘அடியேய் இது அவனுக்கு தெரிஞ்சால் என்ன ஆகும்?’.

“என்ன? என்ன ஆகும்....., முட்டக்கண்ணை உருட்டி உருட்டி முழுங்குற மாதிரி பாக்குறானே, அந்த கண்ணு

தெறிச்சு வெளியே விழுந்துடும் அவ்வளவுதான்”.

‘உனக்கு ரொம்ப தைரியம்தான்’.

“இதில் என்ன தைரியத்தை கண்டுட்ட நீ?”.

‘அவனை சைட் மட்டும்தான் அடிக்கிறியா இல்லை லவ்வே பண்ணுறியா?,.

“என்னது.....?”, தனக்கு தானே வாதி பிரதிவாதியாக செயல்பட்டு பேசிக் கொண்டிருந்தவள், மனசாட்சியின் இந்த கேள்வியில் அந்த வாதத்தை அப்படியே கிடப்பில் தூக்கி போட்டாள்.

“ஹேய், வர வர நீ வரம்பு மீறி பேசுற, எனக்கெல்லாம் லவ் வராது, வரவே வராது புரியுதா”, ஓங்கி மிதித்து அதை அடக்கிவிட்டு, பேட்ரிக் இருக்கும் திசைக்கே, மானசீகமாக ஒரு பெரிய கும்பிடு போட்டுவிட்டு, பார்வையை அவனிடமிருந்து வலுக்கட்டாயமாக திருப்பிக் கொண்டாள்.

“பார்த்து முழுசா ஒரு நாள் ஆகலை நினைப்பைப்பார் ஜென்மத்துக்கு”, என்னமோ மனசாட்சியை அடுத்த வீட்டுக்காறியாக நினைத்து திட்டிக் கொண்டாள். காதல் வர நொடிகளே போதும் எனும்போது ஒருநாள் அதிகம்தான் என்பது பாவம் அவளுக்கு தெரியவில்லை.

மாமாவும் அவனும் பேசிவிட்டு அவளை நெருங்கினார்கள். “அர்ச்சனா, இவன் இன்னும் கொஞ்சநேரம் இங்கே இருக்கேன்னு சொல்லுறான், என்னால் இதுக்குமேல இங்கே லேட் பண்ண முடியாது. நான் கிளம்புறேன்”, அவளுக்கு தேவையான தட்டு, டம்ளர் முதற்கொண்டு தேவையான எதுவுமே வாங்கவில்லை என்பது அவருக்கு தெரிந்தும் அதைப் பற்றி கவலைப் படாமல் சென்றுவிட்டார்.

அர்ச்சனாவுக்கு அவரது செய்கை கோபத்தை கிளறினாலும், இதுவரை யாரிடமும் கோபப்பட்டு பழக்கம்

இல்லை என்பதால் அவர் போவதையே அமைதியாக பார்த்துக் கொண்டிருந்தாள்.

“அர்ச்சனா என்ன அவரையே இப்படி வெறிச்சு பாத்துட்டு இருக்க?, என்ன அவரிடம் ஏதாவது சொல்லணுமா?”, அக்கறையாக கேட்டான்.

“ஆமா ஒரு விஷயம் சொல்ல மறந்துட்டேன்”, சீரியசாக சொன்னாள். குரலில் மருந்துக்கு கூட விளையாட்டுத்தனமில்லை.

“என்கிட்டே அவரோட போன் நம்பர் இருக்கு. நீ என்னன்னு சொல்லு நான் கால் பண்ணுறேன்”, அவனது அலைபேசியிலிருந்து அவரை அழைத்தான்.

“இனிமேல் அவர் இந்தபக்கம் வரவே கூடாதுன்னு சொல்லிடுங்க?. அவரை அப்படி தப்பித்தவறி பாத்தேன்....., கல்லடிதான் அவருக்கு”, விளையாட்டாக சொல்ல முயன்று தோற்றாள்.

அலைபேசியை அணைத்தான் அவன். “என்ன பேசுற அர்ச்சனா?, அவர்தான் உனக்கு இங்கே சீட் வங்கி தந்தார். அந்த நன்றி கொஞ்சம் கூட இல்லாமல்.....?”, அவன் குரலில் கண்டிப்பு இருந்தது.

“ஹையோ பேட்ரிக் நீ வேற, அவர் இடம் வாங்கி தந்ததால்தான் உன்னை விட்டு முதல்லையே சொல்ல சொல்லுறேன். இல்லைன்னா ஸ்ட்ரைட்டா கல்லடிதான். என் தாராள மனசை புரிஞ்சுக்காமலே பேசுறியே, உன்னை என்ன செய்ய?”, குரலில் பழைய துள்ளல் மீண்டிருந்தது.

“சரி உனக்கு கொஞ்சம் திங்க்ஸ் வாங்கணுமே, என்னோட வாறியா? நான் உனக்கு துணைக்கு வாறேன்”, சாதாரணமாக கேட்டான்.

“பேட்ரிக் விளையாடுறியா நீ. உன்னோட நான் வந்தால் என் அம்மா அப்பா என்ன நினைப்பாங்க. அதெல்லாம் எதுவும்

வேண்டாம் நானே பாத்துக்கறேன். பெமி இப்போ வந்துடுவா, அவளோட போய்க்கிறேன்", கொஞ்சம் கூட தயக்கமே இல்லாமல் பட்டென சொன்னாள்.

"ஹேய் உன் மாமாதான் உனக்கு தேவையானதை வாங்கித் தரசொல்லி என்கிட்டே சொன்னார். உன் அப்பாவும் பாத்துக்க சொன்னாரே. பிறகு என்னோடு வருவதில் என்ன தயக்கம்?", அழைத்து சென்றேவிடுவது என்ற முடிவோடு இருந்தான்.

"பேட்ரிக், என் அப்பா பாத்துக்க சொன்னாருன்னு சொல்லு கொஞ்சமாவது நம்புறேன். ஆனால் என் மாமா எனக்கு தேவையானதை வாங்கித் தர சொன்னாருன்னு சொல்லாதே நான் நம்ப மாட்டேன்".

'இங்கே எனக்கு மெரிட்டில் தான் சீட் கிடைத்தது. அதுக்கே இவர் ஐம்பதாயிரம் என் அப்பாவிடமிருந்து வாங்கி இருக்கார். இவராவது பாசத்தில் பொங்குறதாவது?', முன்னதை அவனிடமும் பின்னதை மனதுக்குள்ளும் நினைத்துக் கொண்டார்.

என்னதான் அவரிடம் கோபம் இருந்தாலும் மூன்றாம் மனிதனாகிய அவனிடம் தன் மாமாவை விட்டு கொடுக்க அவள் தயாராக இல்லை. தன் தந்தையே எது வேண்டுமென்றாலும், தன் மாமாவிடம் கேட்க சொல்லவில்லை. இதில் இவன் புளுகு மூட்டையை நம்புவாளா அவள்.

தலையை சரித்து அவனை குறும்பாக பார்த்தாள். அவள் பார்வையின் அர்த்தம் புரியாமல், அதில் கவரப் பட்டவனாய் இமைக்காமல் அவளையே பார்த்தான். அவன் பார்வையின் தாக்கம் இப்பொழுது அவளுக்குள்.

"பேட்ரிக் நான் உன்கிட்டே ஒண்ணு சொல்லுறேன் கேக்குறியா?", பீடிகையாய் துவங்கினாள்.

“நீ என்னோட வெளியே வாறதா இருந்தால் என்னவேண்ணா கேக்குறேன்”, சந்தர்ப்பத்தை நழுவவிட அவன் தயாராக இல்லை.

“இல்லை வேண்டாம், நான் எதுவும் சொல்லலை, நீயும் கேக்கவேண்டாம்”, ஜகா வாங்கினாள்.

“என்னோட வருவதற்கு உனக்கு அப்படி என்ன தயக்கம் அச்சு?”, கோபமாக கேட்டான்.

“அதென்ன உன்னோட, நீ மட்டும் அப்படி என்ன ஸ்பெஷல். நீயும் எனக்கு மூன்றாம் மனிதன்தான். அது மட்டும் இல்லை, இனிமேல் என்னை அச்சுன்னு கூப்பிடாதே. என் வீட்டில் உள்ளவர்களும், என் ப்ரண்ட்ஸ் மட்டும்தான் அப்படி சொல்லுவாங்க?”, சிரித்தவாறே சொன்னாலும் என்னைவிட்டு எட்டியே இரு என்பதை சொல்லாமல் சொன்னாள்.

அவள் இந்த நேரம் கொஞ்சம் சிந்தித்து இருக்கலாம், தன் வீட்டில் தன்னை அழைக்கும் செல்ல அழைப்பு எப்படி அவனுக்கு தெரியும் என்பதைத்தான்.

அவள் பதிலில் அவனுக்கு இன்னும் கோபம் கிளர்ந்தது. “அப்போ நீ வர மாட்ட, உன்னை எப்படி என்னோடு வர வைக்கிறதுன்னு எனக்கு தெரியும்”, சொல்லிவிட்டு அவளைவிட்டு விலகி போன் செய்தான்.

பின்னர் திரும்பி வந்து அவளிடம் அலைபேசியை கொடுத்தான். புருவத்தை சுருக்கி அவனை ஒரு பார்வை பார்த்துவிட்டு அலைபேசியை வாங்கி காதில் வைத்தாள்.

“ஹல்லோ.....”, தயக்கமாகவே குரல் கொடுத்தாள்.

“அச்சு, நான்தான் அப்பா பேசுறேன். உனக்கு தேவையானதை மாப்.... அவனோட போய் வாங்கு. இனிமேல் தம்பி தான் உனக்கு லோக்கல் கார்டியன். அவங்க அம்மாவும் உனக்கு துணைக்கு இருப்பாங்க.

எல்லாத்துக்கும் முரண்டு பிடிக்காமல் கொஞ்சம் புரிஞ்சு நடந்துக்கோ?.

இதுவரை நான் உனக்கு அட்வைஸ் சொல்லுறமாதிரி நீ நடந்துகிட்டது இல்லை. இப்போவும் அப்படியே இருப்பன்னு நம்புறேன்", தந்தையின் பேச்சையோ, அவர் துவங்கிவிட்டு சொல்லாமல் நிறுத்திய வார்த்தையையோ, அவர் கண்டிப்பையோ அவள் கவனிக்கும் நிலையில் இல்லை.

தன்னை மீறி, பேட்ரிக் தன்மீது ஆதிக்கம் செலுத்துவது அவளுக்கு பிடிக்கவில்லை. அதைவிட தனக்கு அவனோடு வர விருப்பமில்லை என்பதை மறைமுகமாக அவனுக்கு உணர்த்திய பிறகும் அவன் எடுத்த இந்த முயற்சி அவளுக்கு எரிச்சலை மூட்டியது.

"அப்.....", இவள் சொல்லுவதை கேட்க அந்தபக்கம் அவர் இல்லை. இவள் பேசும் முன்பே அழைப்பை துண்டித்திருந்தார்.

'ச்சே....., இந்த அப்பாவுக்கு மறை கழண்டுடுச்சு போல. வயசானாலே இப்படித்தானோ?, என்ன சொல்லவாறேன்னு கூட கேட்காமல்...?', ஹம்..... ஒரு பெருமூச்சுடன் அவனிடம் போனை கொடுத்தாள்.

அவள் இப்பொழுதாவது சிந்தித்து இருக்கலாம், ஒரு வயது பையனுடன் தன் தந்தை முன்யோசனை எதுவும் இல்லாமலா அனுப்புவார் என்பதைத்தான். அவளது அசட்டைத்தனம் இதிலும் வெளிப்பட்டது.

"என்ன மேடம் இப்போவாவது என்னோட வாறீங்கா..?", சிரிப்பாக கேட்டான்.

"என்ன என்னை உங்களோட வர வச்சுட்டோம்குற மமதைல பேசுறிங்களா?. எனக்கு இப்போ உங்களை சுத்தமா புடிக்கலை. சரி இங்கேயே இருங்க நான் என் ஹேண்ட் பேக் எடுத்துட்டு வந்துடுறேன்", அவள் கோபத்திலும், அவள்

கொடுத்த மரியாதையான அழைப்பிலும் கொஞ்சம் முகம் சுருங்கியது அவனுக்கு.

‘இவ விளையாட்டு பிள்ளையா?, குமரியா?, வெகுளியா?, விவரமானவளா?, எதுவுமே புரியலையே ஆண்டவா. பார்த்த ஒரே நாளிலேயே அவளது மொத்த குணமும் வெளிவருதே. இதில் நான் எதுவென்று முடிவு செய்து, அவளை அணுக. இதில் இவளோட இந்த ஜென்மம் முழுக்க அவளோட என்னால் குப்பை கொட்ட முடியுமா?.

என்னதான் இருந்தாலும், எனக்கு இந்த செல்ல ராட்சசியை ரொம்ப புடிச்சுருக்கே. போட்டோவில் பார்த்தே என்னால் அவகிட்டே இருந்து பார்வையை திருப்ப முடியலை. இதில் நேர்ல இவ்வளவு நெருக்கத்தில்....., கொல்றாளே.

ஜீசஸ் எப்படியாவது இந்த ஒரு வருஷமும் என்னை கொஞ்சம் நல்ல பையனாவே இருக்க விடுங்க’, தான் இருக்கும் இடத்தை மறந்து கை கூப்பி வேண்டினான். சுற்றி இருந்தவர்களில் கேலி பார்வையை உணராமலே.....

பகுதி - 4

சுற்றி இருக்கும் மனிதர்களில்

தனித்து நீ தெரிகின்றாயே

என் கண்கள் எப்பொழுதும்

மொய்ப்பதென்னவோ உன்னையே

என்னை நீ உணர்வாயா.....

டி நகர் ரங்கநாதன் தெருவில் இருக்கும் சரவணா ஸ்டோரினுள் நின்று தனக்கு தேவையான பொருட்களை ஆராய்ந்து கொண்டிருந்தாள் அர்ச்சனா. அவளையே பார்த்துக்கொண்டிருந்தான் பேட்ரிக். அர்ச்சனாவை சமாதானம் செய்து அழைத்து வருவதற்குள் தன் சக்தியில் பாதி வடிந்துவிட்டதை எண்ணி சிரித்துக் கொண்டான்.

அவன் சிந்தை அரைமணி நேரத்துக்கு முன்னர் நடந்தவற்றை சித்தித்துக் கொண்டிருந்தது. ஹாஸ்டலுக்குள் சென்று தன் கைப்பையுடன் வந்தவள் இவன் முகத்தை நிமிர்ந்து பார்க்கவே இல்லை. அவனும் அதைப் பற்றியெல்லாம் கவலைப் படாமல் தன் பைக்கை நெருங்கினான்.

“ஹேய் என்ன பண்ணுற நீ?. நான் உன்னோட பைக்குல எல்லாம் வர முடியாது. நாம பஸ்லயே போகலாம்”, கோபமாக சொன்னாள்.

“அர்ச்சனா இப்போவே மணி நாலரை, உனக்கு ஆறுமணிக்கு முன்னாடி ஹாஸ்டல்ல இருக்கணும். அதைவிட இங்கே இருந்து பைக்ல போனால் இருபது நிமிஷம்தான் ஆகும். பஸ்ல போனா முக்கால்மணிநேரம் ஆகும். ட்ராபிக் இருந்தால் இன்னும் மோசம். நான் சொல்லுறதை கேளு, முரண்டு பிடிக்காமல் முதல்ல வா”, அவன் பேச்சு, புரிந்தாலும் ஒத்துக்கொள்ள மனமில்லாமல்,

அவன் அதிகாரம் இன்னும் கோபத்தை கிளறியது அவளுக்கு.

“சரி பஸ்ல போனால்தானே லேட் ஆகும். இங்கே ஷேர் ஆட்டோ கிடைக்கும்னு என் ப்ரண்டு சொல்லித்தான் அனுப்பினாள் நான் அதிலேயே வாறேன்”, மலையிறங்க மனமில்லை அவளுக்கு.

“ஹையோ அர்ச்சனா அவனும் எல்லா ஸ்டாப்பும் நிப்பாட்டி நிப்பாட்டித்தான் போவான். ஆட்டோவா இருந்தால் கூட பரவாயில்லை”, அவளுக்கு புரியவைக்கும் விதத்தில் அவன் பேச,

“அப்போ நான் ஆட்டோலையே வாறேன். எதுக்கு பிரச்சனை...?”, சொல்லிவிட்டு முன்னால் நடந்தாள்.

அவளது செய்கை கோபத்தை கிளற, பைக்கை உதைத்து ஸ்டார்ட் செய்து அவளை பின் தொடர்ந்தான்.

“அர்ச்சனா இப்போ எதுக்கு தேவையில்லாத செலவு, நீ பின்னாடி ஏறிக்கோ?”, கடைசி முயற்சியாக கேட்டான்.

அவன் பேச்சு காதில் விழாதவள் போலே நடந்து சென்றாள். அவன் விடாமல் அவளை பின் தொடர்ந்தான். “இப்போ எதுக்கு என் பின்னாடியே வாறீங்க?. பாக்குறவங்க உங்களைத்தான் தப்பா நினைப்பாங்க, முதல்ல போங்க”, அவனை போக சொன்னாள்.

“இதென்ன உன்னோட ஊருன்னு நினைச்சியா?. இங்கே யாருக்கும் அடுத்தவங்க பிரச்சனையை பத்தி யோசிக்க எல்லாம் டைம் இல்லை. இப்போ உன்னை கையை பிடிச்சு இழுத்தால் கூட யாரும் கேக்க மாட்டாங்க.

அந்த ஆட்டோல உன்னை அப்படியே கடத்திட்டு போனால் கூட யாரும் கண்டுக்க மாட்டாங்க. ஆனா அத பத்தியெல்லாம் நீ கவலைப்படாதே, நீ ஆட்டோ புடி.....”, அப்படியாவது அவளை வழிக்கு கொண்டுவர முயன்றான்.

“எல்லோரும் உன்னை மாதிரி இருக்க மாட்டாங்க. அப்போ பைக்ல வச்சு என்னை கடத்திட்டு போகத்தான் பிளான் பண்ணுறியா?. அடப்பாவி இது தெரியாமல் நான் இவ்வளவு நேரம் உன்னோட பேசிட்டு இருந்தனே”, அவனிடம் பேசிக் கொண்டே அங்கு காலியாக சென்றுகொண்டிருந்த ஆட்டோவை கை தட்டி அழைத்தாள்.

“நான் என்ன சொல்லவாறேன்? நீ என்ன சொல்லுற? முதல்ல ஆட்டோவை அனுப்பு”, அவள் அழைத்த ஆட்டோ, அவள் அருகில் வந்து நின்றது.

“அதெல்லாம் அனுப்ப முடியாது. நான் ஆட்டோலதான் வருவேன். நீ போ”, மரியாதை தேய்ந்தது. அதை அவனும் கவனித்தான். ஆட்டோவை நிறுத்திவிட்டு அவளிடம் வாக்குவாதம் செய்வது அவனுக்கு சுத்தமாக பிடிக்கவில்லை.

“அண்ணே நீங்க போங்க”, அவனை அனுப்பிவிடப் பார்த்தான்.

“அண்ணே நான்தான் உங்களை கூப்பிட்டேன் நீங்க போகக் கூடாது”, வண்டியில் ஏறாமலே பேசிக் கொண்டிருந்தாள்.

‘இவ்வளவு பேசுறா, ஏன் இன்னும் வெளியவே நிக்குறா?’, அவளிடம் பேசிக் கொண்டிருந்தாலும் அவன் யோசனை அவள் செய்கையை சுற்றி வந்தது.

“அண்ணே நீங்க போங்க”, “போகாதீங்க”, “அண்ணே நான் சொல்லுறேன்ல நீங்க போங்க”, “நான் சொல்லுறேன் போகாதீங்க”, இருவரும் மாற்றி மாற்றி வழக்கடித்தார்கள். நடுவில் ஆட்டோக்காரரின் நிலைதான் பரிதாபமாக இருந்தது.

“இன்னா தங்ச்சி..... , ஊடலா?”, நடுவில் புகுந்து கேட்டான்.

“என்னது.....?”, புரியாமல் கேட்டாள்.

“அதா மச்சா இம்புட்டு ஆசையா கூப்புடுதே, அவராண்ட போகாம என்னை கூவி கூப்ட்டுகினேயே. அதா மச்சானே கோபமில்லாம கூப்பிடுதே நீ போவியா.....?”, அவர்களை காதலர்கள் என்று எண்ணி பேசிக்கொண்டே சென்றார்.

“என்ன பாஷை இது?”, விழி பிதுங்கி போனாள் அர்ச்சனா.

“தமிலு....., தமிலு..... தெர்யாதா.....? . இன்னா சார் லவ்சா. இன்னா கோபமா இருந்தாலும் கபால்ன்னு தங்கச்சி கால்ல வுளுந்துடு சார் எல்லாம் சரியா பூடும்”.

“என்னது லவ்வா....., யாருக்கு?”, அவன் பேசியதில் இது மட்டுமே தெளிவாக புரிந்தது அவளுக்கு.

“இன்னாதான் மச்சான் மேல கோபங்காட்டியு, லவ்வே இல்லன்னு சொல்லிக்கின பாத்தியா. ஆனா சார பாரு இன்னா லவ்சா உன்ன பாக்காரு”, இப்பொழுது அவள் பார்வை பேட்ரிக்கிடம் சென்றது.

அவனோ உள்ளே குமுறும் புன்னகையை வெளியே விடாமல் அடக்கியவாறு, இதழ்களில் மெல்லிய புன்னகையுடனும் கண்களில் சிரிப்புடனும் அவளையே, அவள் படும் அவஸ்த்தையையே பார்த்துக் கொண்டிருந்தான்.

“யூ.....”, அவனை அடிக்க பாய்ந்தாள்.

“தங்ச்சி..... இப்டி பப்ளிக்கா அடிக்க கூடாது. ஊட்டாண்ட கூட்டி போய் மொத்து”, அவளுக்கு டிப்ஸ் வழங்கினான்.

“ஹேய் நான் என்ன செஞ்சேன்?. அவர் பேசியதற்கு நான் பழியா?”, பயப்படுவதுபோல் நடித்தான் அவன்.

“ஹையோஓஓஒ....., பேட்ரிக் என்ன இது?, இப்படி பேசுறார் கேட்டுட்டு பேசாமல் இருக்க?”, ஆட்டோக்காரரின் பேச்சால் அவளுக்கே கொஞ்சம் வெட்கம் வந்தது.

“நீதானே அவரை கூப்பிட்ட, நானா கூப்டேன். நீயே சம்மாளி”, சமையம் பார்த்து காலை வாரினான்.

“ப்ளீஸ்.....”, வழக்கமில்லாத இந்த பேச்சு அவளுக்கு சங்கடத்தை அளித்தது. தன் முகத்தை அவன் நெஞ்சுக்குள் புதைக்கவேண்டும் என்ற ஆவல் எழுந்தது. அது செய்யமுடியாது என்று தோன்றவே அவன் முதுகின் பின்னால் சென்று நின்றுகொண்டாள்.

“ப்ளீஸ் அவரை அப்படி பேசவேண்டாம்னு சொல்லேன். அவரை போக சொல்லு”, அவன் முதுகின் பின்னால் முணுமுணுத்தாள்.

“ஏன் இவரை அனுப்பிட்டு வேற ஆட்டோ கூப்பிட போறியா?”, சிரிப்பை அடக்கியவாறே கேட்டான்.

“பேட்ரிக் நான் உன்னோடவே வாறேன். இதென்ன முன்னே பின்னே தெரியாதவங்ககிட்டே எல்லாம் இப்படி பேசுறாங்க?”, உண்மையான தயக்கமும் சங்கடமும் அவள் குரலில் தெரிந்தது.

“இன்னா சார் சேக்காளி ஆயிட்டிங்களா. நம்ம கல்லாணம் கூட லவ் மேரேஜ் தான். தினக்கி சண்ட போட்டுப்போம், அப்பால கூடிப்போம். சொக்கு சோடி சார் நீங்க, தங்ச்சி மச்சானை உட்ராத”, அவர்களிடம் சொல்லிவிட்டு சென்றுவிட்டார்.

அவருக்கு ஒரு நன்றியை பேட்ரிக் உதிர்க்க, அர்ச்சனா இங்கே அடுத்த போருக்கு தயாரானாள்.

“இப்போ நீ எதுக்கு அவருக்கு நன்றி சொன்ன?”, முறைப்பாக கேட்டாள்.

“சும்மா பார்மாலிட்டிக்கு நாம சொல்லுறதில்லையா அப்படித்தான் இதுவும்”, உள்ளுக்குள் உதறலெடுக்கவே சொன்னான்.

“நீ சொன்ன தோரனையை பார்த்தால் அப்படி தெரியலை”, அவனை விடுவதாக இல்லை அவள்.

“அர்ச்சனா இப்போ டைம் ஐந்து. இன்னும் இங்கேயே நின்னு சண்டைதான் போடணும்னா, வா உள்ளே போய் நிதானமா சண்டையை தொடருவோம். இல்லை இப்போ உனக்கு திங்க்ஸ் வாங்கணும்னா வெளியே போகலாம் எப்படி வசதி?”, அவள் பேச்சிலிருந்து தப்பிக்க நேரமின்மையை சுட்டிக் காட்டினான். அது சரியாக வேலை செய்தது.

உடனே அவள் அமைதியானாள்,சங்கடமாக நின்றுகொண்டிருந்தாள். அவனிடம் இவ்வளவுநேரம் வீம்புக்கு பேசிவிட்டு, அவன் வண்டியில் ஏற தயங்கினாள்.

“என்னதான் உன் பிரச்சனை அர்ச்சனா”, அவன் பொறுமையை பிடித்து வைத்துக்கொண்டு கேட்க, மேலே விவாதம் செய்யாமல் ஏறிக் கொண்டாள். முதல் முறையாக அவனது பின்னால் ஒரு பெண் அமர்கிறாள். அதுவும் அவன் மனதுக்கு பிடித்தவள், அவனது பல்சர் பைக் அவனுக்கு காதல் வாகனமாகவே தோன்றியது.

பேட்ரிக் கனவில் மிதந்தவாறு பயணம் செய்ய, அர்ச்சனாவோ தன்னை நினைத்தே குழம்பியவாறே வந்தாள். இதுவரை வேறொரு ஆடவனின் பைக்கில் அவள் ஏறியதே இல்லை. அவளது அப்பா, அண்ணன் இவர்களுடன் மட்டுமே சென்று இருக்கிறாள்.

ஆண்களிடம் தாராளமாக பேசுவாள் ஆனால் அந்த பேச்சிலும் ஒரு விலகல் தன்மை இருக்கும். கேட்கும் கேள்விக்கு பதில், இல்லையா தேவைக்கு பேச்சு இப்படித்தான் இருக்கும். வெட்டித்தனமாக கதை பேசுவதே கிடையாது. ஆனால் வகுப்பில் உள்ள அனைத்து பெண்களுமே அவளுக்கு தோழிகள்தான்.

யாரையும் விட்டு வைப்பது கிடையாது. ஆனால் இன்று காலை பேட்ரிக்கை பார்த்ததுமுதல் அவளது கட்டுப்

பாடுகள் அனைத்தும் தளர்ந்ததுபோல் உணர்ந்தாள். அதைவிட பெண் தோழிகளிடம் மட்டுமே வாய்க்கு வாய் கிண்டலும் கேலியும் செய்து பேசும் தான், அவனிடம் அதேபோல் பேசியதை உணர்ந்து கொண்டாள்.

‘இனிமேல் இவனிடமும் இடைவெளி விட்டே பழகவேண்டும்’, என்று உறுதி எடுத்தாள். ஆனால் அதை அவளால் அரைமணிநேரம் கூட பிடித்து வைத்திருக்க முடியவில்லை.

“பேட்ரிக் எல்லா திங்க்ஸும் வாங்கிட்டேன் கிளம்பலாமா?”, அவன் யோசனையை கலைத்தாள்.

அவன் அதை கவனிக்காமல் இமைக்க கூட மறந்து தூரத்தில் பார்வையை நிலைக்கவிட்டு சிரித்துக் கொண்டிருந்தான். “ஹல்லோ சார் என்ன, சைட் அடிக்கிறிங்களா?”, அவன் தோளை உலுக்கி கேட்டாள்.

“ஹேய் நீ அங்கேதானே இருந்த எப்போ இங்கே வந்த?”, அவன் கேள்வியில், அவனை ஏற இறங்க பார்த்தாள்.

“எதுக்கு இப்படி பாக்குற?”, அப்போ இங்கே இருந்து என்னைத்தான் சைட் அடிச்சுட்டு இருந்தியா?. நான் நகர்ந்து போனதுகூட தெரியாமல் அடிச்சுருக்க?. இது நல்லதுக்கே கிடையாது சொல்லிட்டேன்”, பொய்யாக மிரட்டினாள்.

‘என் பொண்டாட்டி நான் சைட் அடிப்பேண்டி நீ என்ன கேக்குறது’, மனதுக்குள் சொல்லிக் கொண்டே, “ஹாஹஹா....., உன்னை போய் நான் சைட் அடிப்பேனா?. உனக்கு உன்மேல் ரொம்பத்தான் நம்பிக்கை. உன் மூஞ்சியை நீ கண்ணாடியில் பாத்ததே இல்லையா?”, கேலியாக சொல்லி சிரித்தான்.

“வேண்டாம் நீ ரொம்பத்தான் என்னை வெறுப்பேத்துற?, உனக்கு கண்ணு நொள்ளைன்னு என்னை குத்தம் சொல்லுறியா?, வா போகலாம்”, அவன் பதிலை எதிர் பார்க்காமல் சென்றாள்.

“நீ சொன்னதுக்கு அர்த்தம்.....?, கண்ணு நல்லா இருந்தால் நான் உன்னை சைட் அடிச்சுருப்பேன்னா?. சரி எல்லா திங்க்ஸ்ம் வாங்கிட்டியா?, எதுவும் விட்டு போகலையே. அப்படி இருந்தாலும் பரவாயில்லை, எனக்கு போன் போட்டால் நானே வாங்கிட்டு வந்துடுவேன்”, எப்படி அவன் கேலியை அவள் காதுகொடுத்து கேட்கவில்லையோ, அதேபோல் பின்னர் அவன் சொன்னவற்றையும் கவனிக்கவில்லை.

அவனும் அதை கண்டுகொள்ளாமல், “நீ இங்கேயே இரு நான் பார்க்கிங் போய், பைக்கை எடுத்துட்டு வந்துடுறேன்”, அவளை அங்கே விட்டுவிட்டு சென்றான்.

அர்ச்சனாவோ அங்கிருந்த ஆளுயர கண்ணாடியில் தன் பிம்பத்தை பார்த்தாள். ‘என்னை பாத்தால் அவனுக்கு சைட் அடிக்கணும்னு தோணலையா?’, என்னமோ அவன் சொன்னதில் அதுதான் முக்கியம் என்பதுபோல் தனக்குள் பேசிக் கொண்டாள்.

‘இப்போ அவன் உன்னைத்தான் சைட் அடிச்சேன்னு உன்கிட்டே ஒத்துக்கணும்னு நீ நினைக்கிறியா?’, மனசாட்சி குரல் கொடுக்க,

“தேவையில்லாமல் உன்னை யார் இங்கே கூப்டது? ஓடிப்போ.....”, அதை விரட்டினாள்.

பேட்ரிக் வரவே அவன் பைக்கில் ஏறினாள். பைக்கை நேராக கல்லூரிக்கு விடாமல், சரவண பவனில் வண்டியை நிறுத்தினான்.

“எதுக்கு இங்கே நிப்பாட்டுறிங்க?, எனக்கு டைம் ஆச்சு. இப்போ மணி ஆறரை. ஏற்கனவே அரைமணிநேரம் இங்கேயே அதிகமாகிடுச்சு. இப்போ சாப்பிட்டு போகணும்னா இன்னும் நேரமாயிடுமே. விளையாடாமல் முதல்ல வண்டியை எடுங்க”.

“அர்ச்சனா அதான் நீயே சொல்லிட்டியே, ஏற்கனவே டைம் ஆயிடுச்சு இப்போ இன்னும் ஒரு அரைமணிநேரம் அவ்வளவே. வா முதல்ல, எனக்கு ரொம்ப பசிக்குது”, அவனிடம் வாயாட நினைத்தவள், அவனுக்கு பசிக்கிறது என்று சொன்னவுடன் அவன் பின்னால் சென்றாள்.

சாப்பாட்டை பார்த்த பிறகே அவளுக்கு இருந்த பசியை உணர்ந்துகொண்டாள். ஒரு செட் பூரியும், தோசையும் காப்பியும் சாப்பிட்டாள். அவனும் அதையே சாப்பிட்டான். பில் வரவே பாதி தொகையை அதில் வைத்தாள். பேட்ரிக் எதுவும் சொல்லாமல் அதை எடுத்து வைத்துக் கொண்டான்.

கல்லூரிக்குள் அவர்கள் வரும்பொழுது நேரம் ஏழு. அந்த நேரம்கூட ஒன்றிரண்டுபேர் தங்கள் பிள்ளைகளுடன் பேசிக் கொண்டிருந்தார்கள்.

“இப்போகூட இவங்க எல்லாம் இங்கே இருக்காங்க”, சந்தேகமாக அவனை கேட்க, பிடிபட்ட உணர்வில் விழித்தாலும் சட்டென அதை அவளிடமிருந்து மறைத்துக் கொண்டான்.

“அதையேதான் நானும் நினைத்தேன். இங்கே ஆறுமணிக்கு சரியாக இருக்க வேண்டும். இப்போ என்னன்னா.....?”, அவன் இழுக்கவே, அந்த நேரம் பெமி அங்கே வந்தாள். அவளுடன் அவள் தாயும் இருந்தார்கள்.

“அர்ச்சனா உன்னைத்தான் நான் தேடிட்டே இருந்தேன் நீயே வந்துட்ட. நமக்கு கிளாஸ் ஆரம்பிக்க எப்படியும் இன்னும் நாள் ஆகுமாம். நம்மை எல்லாம் ஒருவாரம் கழித்து வேண்டுமென்றாலும் வந்து தங்கிக்க சொல்லி இருக்காங்க.

இங்கேயே இருப்பது என்றாலும் சரிதானாம். ஆனால் கான்டீன்ல போய் சாப்பாட்டுக்கு சொல்லிடணும்னு சொல்லி இருக்காங்க. நான் என் சித்தி வீட்டுக்கு போயிட்டு ரெண்டு நாள் கழித்துதான் வருவேன்.

அது மட்டும் இல்லை, இந்த ஒரு வாரமும் இங்கே தங்கினாலும் நம்மை யாராவது பாக்கணும்னா வந்து பாக்கலாமாம். டைம் லிமிட்டும் கிடையாதாம்”, அவள் உற்சாகமாக சொல்ல, அர்ச்சனாவின் முகம் அனிச்சையாக வாடியது.

அதை பெமிக்கு தெரியாமல் மறைத்துவிட்டு, “ஓ...., அப்படியா. அப்போ நீ கிளம்பு, நாம பிறகு பாக்கலாம். நான் இங்கேதான் இருப்பேன் பாய்.....”, அவளுக்கு உற்சாகமாக விடை கொடுத்தாள்.

“என்ன இப்படி சொல்லிட்ட?, நீ உன் லோக்கல் கார்டியன் வீட்டுக்கு போகவேண்டியது தானே. நீ ஏன் இங்கேயே இருக்கணும்..?”, அவள் புரியாமல் கேட்டாள்.

“இல்ல அதெல்லாம் சரிவராது, நீ கிளம்பு. இங்கேதான் நிறையபேர் இருக்காங்களே?”, அவளுக்கு சமாதானம் சொன்னாள்.

“நீவேண்ணா எங்களோட வாறியாம்மா?. நீயும் எனக்கு இன்னொரு மக மாதிரிதான்”, பெமியின் தாய் அக்கறையாக கேட்டார்.

“ஹையோ ஆன்டி என்னை பத்தி கவலை படாதீங்க. நீங்க ஒரு வாரம் கழித்து வரும்போது இங்கே இருக்கும் எல்லாரோடவும் ப்ரண்டு ஆயிடுவேன். இப்படி சின்ன பிள்ளை மாதிரி அடம் புடிக்க கூடாது. யாராவது பூனையை மடியிலேயே கட்டிக்கணும்னு ஆசைப் பாடுவாங்களா.

உங்களுக்கு பிஞ்சு மனசு ஆன்டி. யாரையும் அப்படி எல்லாம் நம்ப கூடாது?”, அவர்களுக்கு தன்னை உற்சாகமானவளாக காட்டிக் கொண்டாள்.

‘விளையாட்டுப் பிள்ளையாக இருந்தாலும் விவரமானவள்தான்’, என்று பெமியின் தாய் மனதுக்குள்ளேயே நினைத்துக் கொண்டார்.

“ஹாய் ஆன்டி, நான் பேட்ரிக். நான்தான் இனிமேல் இவளது லோக்கல் கார்டியன். நான் இவளை என்னோட வீட்டுக்கு அழைச்சுட்டு போறேன். நீங்க கவலைப் படாமல் போயிட்டு வாங்க”, இடையில் புகுந்து பேசினான்.

“அப்படியா தம்பி அப்போ பரவாயில்லை. ஆனால் நீங்க.....?”, மேலே கேட்கப் போனவர் அவன் கண்களின் சமிங்ஞையை வைத்து வாயை மூடிக் கொண்டார். ஆனால் அர்ச்சனா அவனை முறைத்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவர்கள் போனபின்பே அவனிடம் படபடவென பொரிந்தாள். “நீங்க உங்க மனசில் என்னதான் நினைச்சுட்டு இருக்கீங்க?. உங்க இஷ்டத்துக்கு ஏதேதோ பேசிட்டு போறீங்க. நான் கொஞ்சநேரம் முன்னாடி உங்க வண்டியில் வந்து இறங்கினேன் என்பதற்காக, நீங்க என்ன சொன்னாலும் அப்படியே கேட்பேன் என்று நினைக்காதீங்க?.

அப்படிப்பட்ட பெண் நான் இல்லை. இதுவரை நீங்க செய்த உதவிக்கு என்னோட நன்றி. இப்போ எங்க அப்பாவுக்கு போன் செய்து கொடுத்தாலும், அவரோட பேச்சையும் கேட்கும் நிலையில் நான் இல்லை. அப்படி ஒரு யோசனை இருந்தால் இப்போவே அதை உங்க மனசில் இருந்து அழிச்சுடுங்க.

இன்னைக்கு புல்லா அலைஞ்சது எனக்கு ரொம்ப டயடா இருக்கு. நான் என் ரூம்க்கு போறேன். பாய் குட் நைட்”, அவன் பதிலைக்கூட எதிர் பார்க்காமல் சென்றாள்.

செல்லும் அவளை கையை பிடித்து தடுத்தான். “முதல்ல என்னை தொட்டு பேசுவது எனக்கு சுத்தமா புடிக்காது பேட்ரிக். அதுவும் ஆம்பளைங்க என்னை தொடுவது அறவே பிடிக்காது”, கையை அவனிடமிருந்து உருவாமலே அவள் சொன்ன வார்த்தை அவ்வளவு கடினமாக இருக்க, சட்டென அவள் கையை விடுவித்தான்.

“ஐ’ம் சாரி அர்ச்சனா, இனிமேல் உன்னை தொடலை. பட் நான் சொல்லுவதை கொஞ்சம் கேட்டுட்டு போனால் பரவாயில்லை”.

“நீங்க என்ன சொன்னாலும் கேட்கும் நிலையில் நான் இல்லை”, அவன் பக்கம் திரும்பாமலே சொன்னாள்.

“நான் உன்னை என் வீட்டுக்கு அழைத்து போகும் நிலையில் இல்லை. அதை என் அம்மாவும் விரும்ப மாட்டாங்க. இனிமேலாவது நான் சொல்லுவதை கேட்பாயா?”, சின்ன சிரிப்புடன் கேட்டான்.

“எதுக்கு இப்போ தேவையில்லாமல் லூசு மாதிரி சிரிக்கிற?. இன்னும் என்ன சொல்லணும் சீக்கிரம் சொல்லு”, வேண்டா வெறுப்பாக நின்றாள்.

“அதுஎன்ன ஒரு நேரம் நீ, வா, போ, டேய், இப்படி சொல்லுற, சில நேரம் நீங்க, வாங்க, போங்கன்னு சொல்லுற இதுக்கு அர்த்தம் என்ன?”, அவளிடம் பேச துவங்கினான்.

“சாரி, என்னை அறியாமல் நான் ஒருமையில் பேசிடுவேன். ஞாபகம் வரும்பொழுது மரியாதை கொடுப்பேன். என் அம்மாவையே சிலநேரம் அப்படித்தான் சொல்வேன்”, அவன் முகம்பார்க்க அவளால் முடியவில்லை.

“எல்லோரையுமே அப்படித்தான் சொல்வாயா இல்லை.....?”, அவன் இழுக்க,

“தெரியலை, என் அப்பா, மாமா, சொந்தக்காரங்க, அவ்வளவு ஏன், இப்போ பெமியோட அம்மாவை கூட நான் அப்படி சொல்லலையே?. ஆனால் உன்னை....., உங்களை....., ஏன் இப்படி சொல்லுறேன்னு தெரியலை?”, உண்மையாகவே சொன்னாள்.

‘அப்போ உனக்கு நெருங்கிய வட்டத்துக்குள்ளே நான் இருக்கேன். அதான் இப்படி சொல்லுற இல்ல’, யாஹூ.....

தன்னை மறந்து கத்தவேண்டும்போல் இருந்தது அவனுக்கு. அவன் மனதில் தென்றல் அடித்தது.

“சரி உனக்கு எப்படி தோணுதோ அப்படியே சொல்லு. நீ போய் உன் திங்க்ஸ் எல்லாம் வச்சுட்டு வாறியா?”, “எதுக்கு.....?, இவ்வளவு நேரம் நான் சொல்லுறேன்.....”,

“அம்மா தாயே கொஞ்சநேரம் உன்கிட்டே உக்காந்து பேசலாம்னுதான் சொல்லுறேன். இப்போ மணி ஏழரைதான் ஆகுது. இப்போவே தூங்க போயிட்டு பிறகு நடு ராத்திரி பேய் மாதிரி நீ முழிச்சு அலைந்தால் நல்லா இருக்காதே அதான் சொன்னேன்.

யாராவது பேச வாறதை முழுசா கேக்கணும், இப்படியா பட்டாசா பொரிவாங்க. உனக்கு வேண்டாம்னா நான் கிளம்புறேன்”, அவன் கோபமாக சொல்லி கிளம்ப, அவன் கையை பிடித்து தடுத்தாள்.

“நான்லாம் ரொம்ப நல்லவன் தெரியுமா?, ஏன் என்னோட ஒரு கையை மட்டும் புடிக்கிற?, இந்த கை என்ன பாவம் பண்ணிச்சுன்னு கேட்பேனாக்கும்?”, அப்பாவியாக முகத்தை வைத்துக்கொண்டு, அவள் தன்னை கை பிடித்து தடுத்ததை சுட்டிக் காட்டினான்.

“பேட்ரிக் நீங்க சரியான ஆளு, நான் சொன்னது தப்புன்னு எனக்கு புரிய வைக்க இப்படியா. சரி நான் இப்போ எந்த உள்நோக்கமும் இல்லாமல் உங்க கையை பிடிச்ச மாதிரிதான் நீங்களும் என் கையை பிடிச்சீங்கன்னு நான் ஒத்துக்கறேன். அண்ட் சாரி டூ போதுமா?”, அவன் கண்களை பார்த்தவாறே கேட்டாள்.

“அப்போ உள்நோக்கம் இல்லாமல் உன் கையை பிடிக்கலாம்னு சொல்லுறியா?”, அவன் குறும்பாக கேட்க,

“ஆமா உள்நோக்கம் இல்லாமல் என் கையும் உங்க கன்னத்தில் பதியலாம் பரவாயில்லையா?”, அவளும்

குறும்பாகவே பதில் கொடுத்தாள்.

அவன் சட்டென தன் இரண்டு கன்னங்களிலும் கையை வைத்துக் கொண்டான். அவன் செய்கையில் சிரித்தவாறே அங்கிருந்து அகன்றாள்.

பிறகு அறைக்கு சென்று, பொருட்களை வைத்துவிட்டு, முகம் கழுவிவிட்டு அவனை தேடி வந்தாள். அவள் வரும்பொழுது அங்கே பேட்ரிக்கை தவிர யாருமில்லை. ஹோச்ட்டலும் அமைதியாக இருந்தது.

பிறகு இரண்டு மணிநேரம் இருவரும் என்ன பேசினார்கள் என்று கேட்டால் இருவருக்குமே தெரியாது. நேரம் பத்தை நெருங்கும் வேளையில் அவளிடம் ஒரு குட் நைட்டுடன் விடை பெற்றான்.

அவளை விட்டுச் சென்ற பேட்ரிக்கோ, அவள் இரவில் விழித்துவிடக் கூடாதே என்று எல்லா புனிதர்களிடமும், சம்மனசிடமும் தன் வேண்டுதலை வைத்துக் கொண்டிருந்தான்.

தூக்கம் கண்களை சுழற்ற, பாதி உறக்கத்திலேயே நடந்துவந்து, யாருமற்ற அந்த ஹாஸ்ட்டலில், தனிமை பயமின்றி படுத்து உறங்கினாள். தனக்காக ஒரு ஜீவன் துடிப்பதை அவள் அறிவாளா?.

பகுதி - 5

உனக்காக சுமக்கும் இந்த உயிரை

உன்னிடம் சேர்த்துவிடவே துடிக்கின்றேன்

என்னை நீ ஏற்கும் அந்த நொடி

உன்னில் கரைவேன் நான்.....

வீட்டுக்கு சென்ற பேட்ரிக்கை எதிர்கொண்டார் அவன் தாய் ஸ்டெல்லா. மகனின் முகத்தில் சூழ்ந்திருந்த கவலையை கண்டுகொண்டார். மருமகளை பார்க்க சந்தோசமாக கிளம்பி சென்றவனின் முகத்தில் இப்படி ஒரு சோகத்தை அவர் எதிர்பார்க்கவில்லை.

“பேட்ரிக் முதல்ல போய் கை கால் கழுவிட்டுவா சாப்பிடலாம்”, அவனிடம் எதையும் கேட்காமல் அனுப்பினார்.

“இல்லமா நான் அச்சுவோட சேர்ந்து சாப்ட்டேன். ம்..... எதுக்கும் நீங்க எடுத்து வைங்க ஒரு ரெண்டு இட்லியாவது சாப்பிடுறேன்”, தாய் சாப்பிட்டிருக்க மாட்டார் என்பதால் வேகமாக சொன்னான்.

“அதான் சாப்டேன்னு சொன்னியே பிறகு என்ன?. அதெல்லாம் இதுக்கும் மேல சாப்பிடவேண்டாம் நானும் சாப்பிட்டேன் நீ வா”, தாயின் இந்த பதிலில் திகைத்தான்.

“என்னம்மா சொல்லுறீங்க சாப்ட்டீங்களா?”, அதிர்ச்சி விலகாமலே கேட்டான்.

“டைம் என்னன்னு பாத்தியா பத்தரை. இதுக்கும் மேல நான் பசி தாங்குவேனா?, அதைவிட, உன் அப்பா வந்துருக்காங்க. அதான் சேர்ந்தே சாப்ட்டோம். சரி முதல்ல போய் டிரஸ் சேஞ் பண்ணிட்டு வா”, தாயின் பேச்சிலேயே தன்னிடம் அவர் பேச விரும்புவது அவனுக்கு புரிந்தது.

“என்னது அப்பா வந்து இருக்காங்களா? அவருக்கு உடம்பு ஏதாவது சரியில்லையா என்ன?”, வேகமாக கேட்டான்.

“அதெல்லாம் எதுவும் இல்லை.....”, அவர் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே அங்கே வந்தார் ப்ரான்சீஸ் அவனது தந்தை.

“ஹாய் மை டியர் சன். எப்படி இருக்க?”, அவனை தோளோடு அணைத்துக் கொண்டார்.

“ஐ’ம் பைன் டேட். நீங்க.....?, சரி இப்போ என்ன அவசரமா வந்து இருக்கீங்க?”, குறும்பு கண்களில் கொப்பளிக்க கேட்டான்.

“ஏண்டா படவா, நீ மட்டும் என் மருமகளை பார்க்க ஓடலாம். நான் மட்டும் அவளை பார்க்க வரக் கூடாதா? இது எந்த ஊர் நியாயம்? முறைப்படி பார்த்தால், நாங்களும் இன்னைக்கு உன்னோட வந்து இருக்கணும்?”, கோபமாக சொல்வதுபோல் நடித்தார்.

“எதுக்கு? இல்ல எதுக்குன்னு கேக்குறேன்? கும்பலா எல்லோரையும் பார்த்தவுடனே, துரத்தி விடவா? என்ன ஒரு நல்லெண்ணம் உங்களுக்கு? நானே அவகிட்டே நான்தான் உன் வருங்கால கணவன்னு சொல்லாமல் மறைத்து, அவ மனதில் ஒரு இடத்தை பிடிக்கணும்னு முயற்சி பண்ணுறேன். நீங்க அதை கெடுத்துடுவீங்க போல இருக்கே?”.

“சரி சரி பேசியது போதும். மீதியை காலையில் பேசிக்கலாம் போய் தூங்குங்க”, அவர்கள் மாநாட்டை கலைத்தார் ஸ்டெல்லா.

“உனக்கு டயடா இருந்தால் போய் படுத்துக்கோ, எதுக்கு எங்களை தொரத்துற?”, ப்ரான்சீஸ் சொல்லவே, அவரை முறைத்து பார்த்தார்.

“இப்படி பார்த்தால் நாங்க பயந்துடுவோமா? அதெல்லாம் உன் ஸ்டுடென்ஸ்ட்ட வச்சுக்கோ?”, அவர் கெத்தாக சொன்னார்.

“என்ன இன்னைக்கு ரொம்ப தெம்பா பேசுறிங்க? உங்க பையன் உங்க கூட இருக்குற தைரியமா? எப்படியும் ரூமுக்குதானே வருவீங்க, அங்கே கவனிச்சுக்கறேன்.....”, ஸ்டெல்லா பொய் கோபத்தில் சொன்னார்.

“இல்ல இன்னைக்கு நான் பேட்ரிக்கோட படுத்துக்கறேன்”, வேகமாக சொன்னார்.

“அப்பா....., வேண்டாம் பேசாமல் சரண்டர் ஆயிடுங்க. பிறகு நீங்கதான் பீல் பண்ணுவீங்க?”, பேட்ரிக் யோசனை சொன்னான்.

“ஏண்டா, நீ கனவு காணுவதற்கு நான் தொந்தரவா இருப்பேன்னு சொல்லி என்னை விரட்டுறியா?”, அவர் சோகமாக கேட்க,

“அது அப்படி இல்லப்பா, நீங்க இங்கே தங்கும் இந்த நாட்களில் அம்மா உங்களுக்கு நல்ல சாப்பாடு போடணும்னு விரும்புறேன் அதான்”, அவர் காதில் மெதுவாக சொன்னான்.

“நல்லவேளை சொன்னடா மகனே. இல்லையென்றால் என் நிலைமை என்ன ஆயிருக்கும்?”, என்ன ஆகியிருக்கும் என்பதை கனவில் கண்டவர்போல் தலையை சிலுப்பிக் கொண்டார்.

அவர் செய்கையில் பேட்ரிக் சிரிக்க, ஸ்டெல்லா இடுப்பில் கையை வைத்து முறைத்து பார்த்தார். “அம்மா எதுக்கு இவ்வளவு கோபம்? வாங்க.....”, அவரை கைபிடித்து அழைத்துவந்து ஸோபாவில் அமரவைத்து, அவர் மடியில் படுத்துக் கொண்டான்.

அவனது அந்த செய்கையில் மனம் குளிர்ந்தார் ஸ்டெல்லா. அதை பார்த்து சிரித்துக் கொண்டார் பிரான்சீஸ். ‘மகன் அப்பாவிடம் மனம் விட்டு பேசுவதே பொறுக்க முடியாத இவ எப்படி, மருமகளுக்கு மகனை விட்டு கொடுப்பா?’, கவலை முளைத்தது அவருக்கு.

“பேட்ரிக் நீ என் மடியில் படுப்பதுமட்டும் அர்ச்சனாவுக்கு தெரிஞ்சது அவ்வளவுதான், உன்னை ஏதாவது சொல்லுறாளோ இல்லையோ, என்னை ஒரு வழி பண்ணிடுவா”, அவன் தலையை கோதியவாறே சொன்னார்.

அவர் பேச்சில் சிரித்துக் கொண்டான். “செய்தாலும் செய்வா. ஹப்பா என்னமா பேசுறா தெரியுமா. எதற்கும் பயம் என்பதே இல்லை. யாரா இருந்தாலும் சரி, வெட்டு ஒன்று, துண்டு ரெண்டு என்பது மாதிரி பட்டு பட்டுன்னு பேசுறா. அதே நேரம் விளையாட்டாவும் இருக்கா, விவரமாவும் இருக்கா”, கண்கள் கனவில் மிதக்க சொன்னான்.

“என்ன.....? அம்மா பார்த்த பொண்ணை அவ்வளவு பிடிச்சு இருக்கா?”, அங்கே பிரான்சீஸ் என்று ஒருவர் இருப்பதையே இருவரும் மறந்துவிட்டவர்கள் போல் நடந்து கொண்டார்கள்.

ஆனால் பேட்ரிக் மட்டும் அவரைப் பார்த்து கண்ணடித்தான். ‘அடப்பாவி, எல்லாம் தெரிஞ்சுட்டேதான் உன் அம்மாவை கவுக்க இப்படி செய்யிறியா? நீ பிழைச்சுக்கிடுவடா மகனே’, மகனை மெச்சுதலாக ஒரு பார்வை பார்த்தார். அவனும் புரிந்துகொண்டு சிரித்தான்.

மனைவியின் அருகில் சென்று அமர்ந்து கொண்டார். “ஆமா அம்மாவும் பையனும் ஏன் மருமகளை இப்படி சொல்லுறீங்க?”, அவர்களுடன் இணைந்தார்.

“அது ஒன்றும் இல்லப்பா, அவ கொஞ்சம் பொஸஸிவ் அதைத்தான் அம்மா சொல்லுறாங்க”, தந்தைக்கு

விளக்கினான்.

“அதுக்குள்ள இந்த விவரம் எல்லாம் தெரிஞ்சுடுச்சா? யார் சொன்னா?”, முதல் முறையாக வரப்போகும் மருமகளைப் பற்றி விசாரித்தார்.

“எல்லாம் அம்மாதான் சொன்னாங்க. அவங்க பிரெண்ட், அதாவது என் வருங்கால மாமியார் சொல்லி இருக்காங்க. அவளோட எல்லா குணங்களும் இப்போ ஓரளவு எங்களுக்கு தெரியும். கொஞ்சம் விளையாட்டுத்தனமா இருப்பா, யாருக்கும் பயப்பட மாட்டா, ரொம்ப அசால்ட்டு, ரொம்ப அழுத்தம், மனதில் நினைப்பதை வெளியே சொல்லமாட்டா,

அவங்க இப்படி சொல்லி இருக்காங்க. ஆனால் எனக்கு அவ வெளிப் பார்வைக்குத்தான் அப்படி நடந்துக்கற மாதிரி இருக்குப்பா. ரொம்ப விவரம்தான். யாரிடம் எப்படி பழகவேண்டும் என்பதும் அவளுக்கு தெரியுது. அதனால் அசட்டையா இருப்பான்னு சொல்ல முடியாது.

பாக்கலாம் இன்னும் ஒரு வருடம் பழக போறேனே அப்போ பாத்துக்கலாம்”, தாய் தந்தை இருவரிடமும் சொன்னான்.

“சிலநேரம் நீ நினைப்பதுபோல் இல்லாமல், அவங்க அம்மா சொன்ன மாதிரி இருந்தால்?”, தன் சந்தேகத்தை கேட்டார்.

‘அப்படி இருக்க வாய்ப்பே இல்லை. அவளோட மனதை மற்றவருக்கு தெரியாமல் மறைக்க, அவள் போடும் வெளி வேஷம்தான் இதெல்லாம். ஆனால் என்னிடம் அவளால் நடிக்க முடியாது. அவள் மனதை நான் படித்துக் காட்டுகிறேன்’, தனக்கு தானே எண்ணிக் கொண்டான்.

“நான் கேட்டதுக்கு பதில் சொல்லாமல் அப்படி என்ன யோசனை பேட்ரிக்?”, அவனை கலைத்தார் அவர்.

“அவ எப்படி இருந்தாலும் எனக்கு பிடிக்கும்ப்பா”, உறுதியாக சொன்னான்.

“எதற்கும்.....”, “என்னங்க அவன் மட்டும் இல்லை, நானும் அதையேதான் சொல்லுகிறேன், அவளை நீங்க ஒரு முறை பாருங்க. உங்களுக்கும் பிடிக்கும், சரி பேட்ரிக் இப்போ சொல்லு, வரும்பொழுது ஏன் கொஞ்சம் முகம் வாடிப்போய் வந்தாய்?”, அர்ச்சனாவை பற்றிய ஆராய்ச்சியை முடிக்க எண்ணினார்.

அவர் கேள்விக்கு பதில் சொல்லாமல் சிரித்தான். இதில் சிரிக்க என்னடா இருக்கு”, கேட்ட அவரின் இதழ்களிலும் புன்னகை.

“இல்லமா அவ எல்லாத்தையும் ஒரு அசால்ட்டா செய்யிறா, அவங்க அப்பா அவளை முறைச்சுட்டே இருக்கார் அதை கண்டுக்கவே மாட்டேங்கா. அவர்தான் இவளை என்ன செய்யிறதுன்னு முழிக்கிறார். இருந்தாலும் என் கண் முன்னாடியே அவளை அடிச்சார் தெரியுமா என்னால் அதை பாத்துட்டு தாங்கவே முடியலை. அதை கூட அவ கண்டுக்கலை தெரியுமா”, சந்தோசமாக துவங்கி கவலையாக முடித்தான்.

“என்னது அடிச்சாரா?, நீ பாத்தியா அதை. இதென்ன இவ்வளவு வளந்த பிள்ளையை அதுவும் பொம்பளைப் பிள்ளையை கையை நீட்டி அடிப்பது ஒரு பொது இடத்தில்”, கோபமாக கேட்டார் பிரான்சீஸ்.

“ஹையோ அப்பா , அவர் யாரும் கவனிக்கலன்னு நினைச்சு செய்தார். ஆனால் நான்தான் அவளையே பாத்துட்டு இருந்தேனே, அதில்தான் தெரிஞ்சது. நீங்க நினைக்கிற மாதிரி கொம்பெல்லாம் வச்சு அடிக்கலை, சும்மா தலையில் தட்டினார்”, கொஞ்சம் அசடு வழிந்தவாறே, தந்தையை சமாதானம் செய்தான்.

“எதுவாகவும் இருந்துட்டு போகட்டுமே இப்படியா”, அவரால் தாங்க முடியவில்லை.

“அவருக்கு இருக்க கோபத்தில் இத்தோட விட்டாரே. என்னை அவளோட மாமா இன்ட்ரோ பண்ணுறார்,

அதுக்கென்னன்னு கேட்டா பாருங்க. அவர் முகம் போன போக்கை..... இப்போ நினைத்தால் கூட எனக்கு சிரிப்பா வருது. அது மட்டும் இல்லை என்னை பேட்டராப்பான்னு கேக்குறா, கொஞ்சம் கூட தயக்கமே இல்லை", அவன் குரலில் அப்படி ஒரு துள்ளல்.

அதை கவனித்தும் கண்டுகொள்ளாமல், "என்னடா இப்படி சொல்லுற, இப்படி பொண்ணு நம்ம வீட்டுக்கு சரிவர மாட்டாளே. இப்போவே உன்னை மரியாதை இல்லாமல் பேசுறா, நான் மறுபரிசீலனை செய்ய வேண்டியதுதான்", குரலை இறுக்கமாக வைத்து சொன்னார் ஸ்டெல்லா.

"எதை.....?", அதிர்ச்சியாக அவர் மடியிலிருந்து எழுந்து அமர்ந்து கேட்டான்.

"இந்த சம்பந்தம் வேணுமா இல்லையான்னுதான்?".

"அம்மா என்னமா இப்படி சொல்லுறிங்க. நான் அவளை லவ் பண்ணுறேம்மா. இப்போபோய், மறுபரிசீலனை அது இதுன்னு சொல்லுறிங்களே. எனக்கு அவ என்ன செஞ்சாலும் பிடிச்சு இருக்கும்மா", பரிதாபமாக சொன்னான்.

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி யாரோ நான் பார்த்த பொண்ணை பார்க்கபோனதா சொன்னாங்க. இப்போ என்னன்னா லவ் பண்ணுறேன்னு சொல்லுறாங்க எதைடா நம்பட்டும்", தாயின் குரலில் விளையாட்டை உணர்ந்த பிறகுதான் இயல்பானான் அவன்.

"சரி இப்போ சொல்லு ஏன் முகமே தொங்கிபோய் வந்தாய்?. அவ ஏதாவது சொன்னாளா?", கவலையாக கேட்டார்.

"அம்மா அவ என்ன சொன்னாலும் எனக்கு வருத்தமெல்லாம் வராதும்மா. அங்கே ஹாஸ்டல்ல அவளோட யாருமே இல்லம்மா. இன்னும் ஒரு வாரமாவது ஆகும்னு சொல்லிட்டாங்க கிளாஸ் தொடங்க, அதனால் வந்தவங்க எல்லோருமே கிளம்பிட்டாங்க. இவ மட்டும்

தனியா இருக்கா. அவ தூக்கத்தில் முழிச்சா பயப்படுவான்னு நீங்கதானே சொன்னீங்க.

அங்கேயும் யாருமே இல்லை. யாராவது இருந்தால் அவங்களோட இருப்பா. இப்போ.....?, எனக்கு மனசுக்கு கஷ்டமா இருக்கும்மா. அவளை தனியா விட்டுட்டு வந்துட்டேனேன்னு. அதான்.....?", மகனின் தவிப்பு அவருக்கு புரிந்தது.

அவன் சொன்ன பிறகு அனைவருக்குமே அந்த கவலை பிறந்தது. அர்ச்சனா பயப்படும் ஒரு விஷயமாக அர்ச்சனாவின் தாய் சொல்லி இருந்ததே அந்த ஒரு விஷயம் தான். அர்ச்சனா நடு இரவில் விழித்துவிட்டால் அவளுக்கு துணைக்கு யாராவது அருகில் இருக்க வேண்டும். அப்படி இல்லையென்றால் ரொம்பவே பயந்துவிடுவாள் என்பதே.

"பேட்ரிக் இப்போ நாம எதுவுமே செய்ய முடியாது. அவளை ஒரு வாரம் இங்கே தங்க வைப்பதாக இருந்தால், அது சரிவராது. ஏன் எதற்கு அப்படின்னு கேள்வி வரும்?. அப்படி வந்தால் இவ எங்கவீட்டு மருமகளாக போறா, அதனாலன்னு சொன்னால் அது நல்லா இருக்காது", எதுவும் செய்ய இயலாது என்பதை அவனுக்கு புரிய வைக்க முயன்றார்.

"அம்மா நீங்க கூப்ட்டா கூட அவ வரமாட்டா. நான் அவளோட லோக்கல் கார்டியன்னு சொன்னதிலேயே அம்மணிக்கு பயங்கர கோபம். இதில் இங்கே வான்னு சொன்னால் அதுதான் என்ட்ட பேசுற கடைசி பேச்சா இருக்கும்.

இன்னைக்கு எப்படியும் முழிக்க மாட்டா. ஏன்னா அவளை இன்னைக்கு ரொம்ப வேலை வாங்கி இருக்கேன். அதனால்....., நம்புவோம்", தாயை சமாதானம் செய்தான்.

"அப்படியெல்லாம் எதுவும் ஆகாது பேட்ரிக்", தந்தையும் அவனுக்கு தைரியம் சொன்னார்.

“பிறகு ஏன்டா இப்படி உம்முன்னு வந்த, விடு பாத்துக்கலாம். இப்போ ரொம்ப நேரமாச்சு போய் தூங்கு”, ஆனால் யாருமே தங்களுக்கு தாங்களே சமாதானம் ஆகவில்லை. அதை மறைத்து சென்றார்கள். வேண்டுதல் மட்டும் தொடர்ந்தது.

காலையில் நேரம் எட்டுமணியை கடந்தபிறகுதான் கண் விழித்தாள் அர்ச்சனா. படுக்கையிலிருந்து திரும்பி நேரம் பார்த்தாள், சுவர் வெறுமையாக காட்சியளித்த பிறகுதான் தான் இருக்கும் இடமே அவளுக்கு உறைத்தது. மணிக்கட்டை திருப்பி பார்க்க நேரம் எட்டு முப்பத்தை காட்டியது.

“அட இவ்வளவு நேரமா தூங்கிட்டோம்”, தனக்கு தானே கேட்டுக் கொண்டு, பக்கட்டை எடுத்துக்கொண்டு குளிக்க சென்றாள். எந்த அறையிலும் மாணவிகள் இருப்பதற்கான எந்த அறிகுறியும் இல்லை. “அட, நான்தான் இங்கே ராணியா. ஒரு ஆளையும் காணோம்”,

“ஓஹோ உனக்கு நினைப்புதான். நீதான் வாச்வுமன் வேலை பாத்துட்டு பெருமையை பாரு”,

“சரி விடு விடு நமக்குள்ள என்ன”, மனசாட்சியிடம் சமரசம் பேசினாள். காலை கடன்களை முடித்து, கீழே சாப்பாட்டு அறையை நெருங்கினாள். ஒரு ஈ எறும்புகூட அங்கே இல்லை.

குளித்ததில் பசித்தது, யாரிடம் கேட்கவென்றும் புரியவில்லை. இவளை பார்த்தவாறே ஒரு சின்ன பெண் வந்தாள். “என்னக்கா டிபனா, அதெல்லாம் காலையில் எட்டு மணிக்குள்ளே வந்தால்தான் கிடைக்கும். இப்போ ஆயிபோச்சு, மரியாக்கா வந்தால் திட்டுவாங்க, நீங்க கிளம்புங்க”, காலையிலேயே மரியாவின் வாயில் இவள் விழவேண்டாமே என்று அவள் அக்கறை பட்டாள்.

“உன் பேர் என்ன?”, “லஷ்மிக்கா”, “லஷ்மி எனக்கு ஒரு கப் காப்பீயாவது கிடைத்தால் பரவாயில்லை. ஒண்ணுமே

சாப்பிடாமல் இருந்தால் என்னால் தாங்க முடியாது”, பரிதாபமாக கேட்டாள்.

“அக்கா இப்போ எதுவுமே இருக்காதுக்கா, சொன்னா கேளுங்க. மரியாக்கா பாத்தால் என்னையும் சேத்து திட்டும். மதியம் பன்னிரண்டு மணிக்கு சரியா வந்துடுங்க. சாப்பாடு ரெடியாயிடும் இப்போ கிளம்புங்க”, வேலை செய்யும் சிறுமியால் அதற்கு மேல் முடியாதுதான்.

‘அர்ச்சனா உனக்கு வயிறு காஞ்சால் தான் புத்திவரும். அம்மா நேரத்துக்கு எழுந்துக்க சொன்னால் முரண்டு பிடிப்பல்ல, இப்போ அனுபவி”, தனக்கு தானே சொல்லிக் கொண்டாள்.

“இங்கே பக்கத்தில்....., டிபன் வெளியே கிடைக்குமா?”, பசி அவளை அவ்வாறு கேட்க தூண்டியது.

“இப்போ காம்பவுண்ட்ட விட்டு நீங்க வெளியே கூட போக முடியாதே. கேம்பஸ்குள்ளேயே கான்டீன் தொடங்க எப்படியும் ஒரு மாசம் ஆகும். நான் வேண்ணா பிரட் இருக்கான்னு பாக்கவா?”, அர்ச்சனாவின் முகத்தில் பசியின் சாயல் தெரியவே கேட்டாள் லஷ்மி.

“பிரட்டா....., இல்லை வேண்டாம் அது தொண்டையிலேயே விக்கும்”, முகம் அஷ்ட கோணலாக சொன்னாள்.

“அக்கா இப்படி சொன்னீங்கன்னா எப்படி. ரெண்டு துண்டு தாறேன். தண்ணியில் முக்கியாவது சாப்பிடுங்க. உங்களை பாத்தால் ரொம்ப பசியில் இருக்குற மாதிரி இருக்கு”, கரிசனையாக சொன்னாள்.

“லச்சு, பிரட் சாப்பிடுவது பரவாயில்லை. அது என்னமோ என் வாய்க்குள் எலாஸ்டிக் செருப்பை கடிச்சது மாதிரியே வாய்க்குள்ளேயே சுத்தும்”, பிடிக்காத உணவாகையால் அப்படி சொன்னாள்.

“ஹஹஹா, யக்காவ் இதுக்குமேல....., நான் என்னதான் செய்யட்டும், வேண்ணா ஒண்ணு செய்யலாம்....., ஹையோ என்னால் முடியாது. நான் கிளம்புறேன், அதோ மரியாக்கா வருது”, சிட்டாக ஓடி மறைந்தாள் லஷ்மி. அவள் சென்ற பிறகும் அசையாமல் அங்கேயே நின்றாள்.

‘உள்ளதும் போச்சா, அடியேய் உனக்கு வயிறு காஞ்சால் கூட கொழுப்பு அடங்கலடி. இரு, அதோ மரியா வருது, அதுட்டயே கேக்கலாம்”, ஒரு குருட்டு நம்பிக்கையில் நின்றாள்.

“என்ன பாப்பா நீ யாரு எதுக்கு இங்க நிக்கிற?”, கேட்கலாம் என்ற ஆவலையும் அவர் கேள்வி தடுத்து நிறுத்தியது.

“இல்ல ஹாஸ்டல்ல நான் மட்டும்தான் இருக்கேன். சோ சுத்தி பாக்கலாம்னு வந்தேன். நீங்க உங்க வேலையை கவனிங்க”, கண்களை சுழலவிட்டவாறே சொன்னாள்.

“நல்லா சுத்தி பாரு. சரி காலையில் உன்னை டிபன் சாப்பிடும்போது பாக்கலையே”, சந்தேகமாக கேட்டார்.

‘ஹப்பா, நல்ல கண்பார்வை மட்டுமில்ல, நல்ல ஞாபக சக்தியும்தான்’, மனதுக்குள்ளே சிலாகித்தாள்.

“நான் இப்போதான் வாறேன். இங்கே எதுவும் இல்லன்னு சொல்லிட்டாங்க அதான் கிளம்பிட்டே இருக்கேன்”, மரியா விரட்டும் முன்பே கிளம்பினாள்.

“இந்தா பாப்பா இரு, இப்போ ஒண்ணும் இருக்காது பால் மட்டும் தாறேன் குடிச்சுட்டு போ. இதுதான் லாஸ்ட், இனிமேல் இப்படி வந்த, நான் எதுவும் செய்யமாட்டேன் சொல்லிட்டேன்”, கொஞ்சம் அதன் கெத்தை காட்டிவிட்டு அவளிடமிருந்து டம்ப்ளரை வாங்கிக்கொண்டு சென்றார்.

“இதுதான் வார்டன் திமிருபோல, நடக்கட்டும். எப்படி இருந்தாலும் நம்ம வயித்தில் பாலை வார்த்தால் சரிதான்”,

வாய்விட்டு புலம்பியவாறு நிற்க, போன வேகத்தில் பாலோடு வந்தது மரியா. அதை வாங்கி குடித்துவிட்டு,

“சக்கரை பத்தலை....., இருந்தாலும் நல்லாதான் இருக்கு”, மரியா முறைக்கவும் அந்த இடத்தைவிட்டு கிளம்பினாள்.

‘உனக்கு வாயில் வாஸ்துவே சரியில்லடி’, தன் வாயில் தானே அடித்துக் கொண்டாள்.

எவ்வளவு நேரம்தான் அவளும் ஹாச்டலுக்குள்ளேயே சுற்றுவது. அறைக்கு சென்று ஒரு வான்நீல சுடிதாரை போட்டுக் கொண்டு வெளியே வந்தாள். இன்றைய நேர்காணலுக்கு வந்திருந்தவர்கள் கும்பலாக அங்கே நின்று பேசிக் கொண்டிருந்தனர்.

அனைவரையும் சுற்றி வேடிக்கை பார்த்தவாறே நடந்தாள். ஹாஸ்டலுக்கு வெளியில் இருந்த, விசிட்டர்ஸ் ஹாலின் படியில் சென்று அமர்ந்துகொண்டாள். அனைவரும் ரொம்ப பரபரப்பாக இருப்பதாக அவளுக்கு தோன்றியது.

ஒவ்வொரு குடும்பமாக, பார்வையிட்டவாறே இருந்தாள். மகளை விட்டுசெல்லவந்த தந்தை, தாய், அண்ணன், மனைவியை சேர்க்கவந்த கணவன், அவர்களின் பாச பரிமாற்றங்கள், அக்கறையான பேச்சுக்கள், முதல்முறையாக பிரிபவர்களின் கவலை முகங்கள், நேரம் போவது தெரியாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அங்கே இருந்தவர்களிலேயே இவள் கவனத்தை கவர்ந்தவர்கள் ஒரு இளம் ஜோடி. பார்த்தவுடனே புரிந்தது, அவர்களுக்கு திருமணமாகி அதிகநாள் ஆகியிருக்க வாய்ப்பில்லை என்று.

அப்படி ஒரு அன்னியோன்னியம், அவர்கள் பார்வையில். அவர்கள் கையை கோர்த்துக்கொண்டு பேசுவது, தோள் உரச நிற்பது, கணவன் எதையோ சொல்லும்பொழுது அவள் அழகாக வெட்கப் படுவது, சிலநேரம் செல்லமாக

முறைப்பது, அவனை பொய்யாக அடிப்பது, கிள்ளுவது, பார்வையை திருப்ப தோன்றாமல் அவர்களின் விளையாட்டை பார்த்துக் கொண்டே இருந்தாள்.

அவர்களும் நெருக்கம் குறையாமல் செய்யும் வேலையை சலிப்பே இல்லாமல் தொடர்ந்து கொண்டிருந்தனர். அவர்களின் விளையாட்டை விடுத்து, அவர்களின் ஜோடி பொருத்தத்தை பார்வையிட்டாள். பெண் கொஞ்சம் பூசிய உடம்புதான். கன்னம் கூட பம்பிளிமாஸ் மாதிரி இருந்தது.

அவள் கணவன் அவளுக்கு ஏற்ற வளர்த்தியில், உருவம் மட்டும் கொஞ்சம் சிறியதாக இருந்தான். சட்டென பார்க்க கொஞ்சம் பொருத்தம் கம்மியாகத்தான் இருந்தது. ஆனால் அவர்களது மனங்கள் ஒன்றாக இருப்பது அர்ச்சனாவிற்கு புரிந்தது.

அவர்களை விடுத்து, சுற்றியும் பார்க்க துவங்கினாள். எங்கு பார்த்தாலும் பார்வை அந்த ஜோடியிடம் சென்று மீள்வதை தடுக்கமுடியவில்லை அவளால்.

‘அடச்சீ....., எப்போபாரு அங்க என்ன பார்வை. முதல்ல எழுந்து உள்ளே போடி’, மனசாட்சி அவளை விரட்டியது.

“கண்டிப்பா போகணுமா”, இவள் அப்பாவியாக அதனிடம் கேட்க, ‘இப்போ நீ எழுந்து போகல....., உன்னை கெட்ட வார்த்தையிலே அசிங்கமா திட்டிடுவேன்’, அது அவளை மிரட்டியது.

“நிஜம்மாவா அப்போ இங்கேயே இருக்கேன், ஒரு ரெண்டு மூணு வார்த்தை சொல்லிக் கொடேன்”, அவள் அங்கேயே அமர, மனசாட்சி அவளை காதை கூசும் வார்த்தைகளால் திட்ட துவங்கவே எழுந்து உள்ளே சென்றாள்.

“வட போச்சே.....”, முணுமுணுக்க மறக்கவில்லை.

அறைக்கு சென்று, தன் பொருட்டகளை கபோடில் அடுக்கினாள். அத்தோடு அறையையும் கொஞ்சம் சுத்தம்

செய்துவிட்டு, நேரம் பார்த்தாள். மணி பன்னிரண்டு முப்பதை காட்டியது. பசியில் காதுகூட அடைத்தது.

“இன்னைக்கு மதிய சாப்பாடும் போச்சா”, ஒரு அலறலுடன் தட்டை எடுத்துக்கொண்டு தலை தெறிக்க ஓடினாள். எதிரில் தங்கள் அறைக்கு பொருட்களை வைக்க வந்த பிள்ளைகளைக் கூட அவள் கவனிக்கவில்லை.

சாப்பாட்டு அறையில் மேசைக்குமுன் நின்றாள். லஷ்மி இவளைப் பார்த்துவிட்டு அருகில் வந்தாள். “என்னக்கா வந்துட்டீங்களா?, மரியாக்கா இப்போதான் உங்களை பாத்துட்டுவர சொல்லி என்னை அனுப்பிச்சு. பாத்தா நீங்களே வந்துட்டீங்க.

சரி நான் போய் சாப்பாடு எடுத்துட்டு வாறேன். இன்னைக்கு உங்களுக்கும் கான்வென்ட் சாப்பாடுதான். உங்க ஒருத்தங்களுக்கு வேண்டி தனியா சமைக்க வேண்டான்னு வார்டன் சிஸ்டர் சொன்னாங்க”, தட்டை வாங்கிவிட்டு அவள் நகரவும் அவளை பிடித்துக் கொண்டாள்.

“ஹேய் என்ன சொன்ன, வார்டன் சிஸ்டரா. அப்போ இந்த மரியா என்ன பண்ணுது. அது வார்டன் இல்லையா?”, அவள் ஆர்வமாக கேட்டாள்.

“மரியாக்கா வார்டன் இல்லை. ஆனால் அவங்க இங்கேயே வளந்ததால் எல்லாத்தையும் கவனிப்பாங்க. இங்கே இருக்கும் எல்லா சிஸ்டர்ஸ்க்கும் அவங்க புள்ளை மாதிரி. சமையல் மேற்பார்வை முதல் இங்கே எல்லா வேலையும் இழுத்து போட்டு செய்வாங்க”, அவளுக்கு தெரிந்ததை சொன்னாள்.

“அட, இதுக்குத்தான் அவங்களுக்கு இந்த கெத்தா....., இனிமேல் நான் பாத்துக்கறேன் நீ ஓடு. போன வேகத்தில் எனக்கு தட்டு நிறைய சாப்பாடு கொண்டுவா பாக்கலாம். இனிமேல் என்னை அர்ச்சனான்னே சொல்லு நோ அக்கா ஓகே”.

“ஏங்க்கா.....”, “அக்கான்னா என்னமோ தூரமா இருக்க மாதிரி இருக்கு, நமக்கு அது வேண்டாம். நாம நெருக்கமா இருப்போம். அர்ச்சனான்னே சொல்லு சரியா”, இவள் சொன்னதும் அவள் கண்கள் கலங்கியது.

“ஹேய் என் பேர் அவ்வளவு கேவலமாவா இருக்கு. இப்படி கண் கலங்குற, விடு விடு, இப்படி எல்லாம் அசிங்க படுத்த கூடாது”, போலியாக கண் கலங்கி, விளையாட்டாக சொன்னாள்.

இவள் விளையாட்டை கவனிக்கும் நிலையில் அவள் இல்லை. “அப்படி இல்லைங்கக்கா....., இதுவரை என்னை இங்கே இருக்கும் அக்காங்க எல்லாம், ஏய் இதை கொண்டு வா, இதை வை, அப்படி இப்படின்னு வேலைதான் வாங்கி இருக்காங்க. நீங்கதான் இப்படி உரிமையா பேசுறீங்க. எனக்கு என் அம்மா ஞாபகம் வந்துடுச்சு அதான்”, நெகிழ்வாக சொன்னாள்.

“அப்போ, அக்கால இருந்து அம்மாக்கு ஷிப்ட் ஆயிட்டியா, என்னை பாத்தால் உனக்கு ஆன்டி மாதிரியா இருக்கு. இது சரிவராது நீ கிளம்பு கிளம்பு”, அவள் கவலையை மறக்க வைக்க முயன்றாள்.

“போங்கக்கா உங்களுக்கு ரொம்ப குறும்பு”, சொல்லிவிட்டு சிரித்தவாறே சென்றாள்.

“எனக்கு....., குறும்பு.....”, என் நேரம்தான். மேசையில் தாளம் போட்டவாறே இருந்தவள் சாப்பாடு வரவே வேகமாக விழுங்கினாள். அருகில் இருந்த லஷ்மியை கூட அவள் கவனிக்கவில்லை. ப்ளேட் முக்கால்வாசி காலியான பிறகே நிமிர்ந்து பார்த்தாள்.

“நீ பக்கத்தில் உக்காத்துட்டு என்ன பண்ணுற, ஓடு மரியா வந்தால் உனக்கு டின்னுதான். அது மட்டும் இல்லை, நான் சாப்பிடுறதை இப்படி வெறிச்சு பாத்தா எனக்கு வயிறு வலிக்காது”, சாப்பாட்டு வாயாலே பேசினாள்.

“உங்களுக்கு இன்னும் சாப்பாடு கொண்டாரவாக்கா.....”, அவள் கனிவில் மனம் கலங்கினாலும், “நான் ஸ்லிம்மா அழகா இருக்குறது உனக்கு புடிக்கலை இல்ல”, பொய் கோபமாக கேட்டாள்.

“ஐயோ அக்கா நான் எப்போ அப்படி சொன்னேன்”, லஷ்மி அலறினாள். அவள் கண்கள் கூட கலங்கி விட்டது.

அதை கண்டுகொள்ளாமல், “பின்ன, காலை சாப்பாட்டையும் சேத்து இப்போ சாப்பிட்டேன். இன்னும் நைட் சாப்பாட்டையும் இப்போவே சாப்பிடுறியான்னு கேட்டால்....., நான் இப்படியே தின்னால் பாப்பாவா இருக்க மாட்டேன், பீப்பாவா மாறிடுவேன்.

நான் பீப்பாவா மாறினால் எப்படி ஸ்லிம்மா இருக்க முடியும் அதான் சொன்னேன்”, பிளேட்டை கழுவும் அவசியமே இல்லாமல் அதை துடைத்திருந்தாள். இதுதான் அர்ச்சனா, எந்த விஷயத்தையும் நகைச்சுவையாக அணுகுவாள்.

அவள் பேச்சில் வாய்விட்டு சிரித்தாள் லஷ்மி. “அக்கா உங்க வாய்தான் அப்படி சொல்லுது, கையை பாருங்க, பிளேட்டை தண்ணி இல்லாமலே கழுவிடுச்சு”, அர்ச்சனாவின் கை அவள் ப்ளேட்டை சுத்தம் செய்த விதத்தை பார்த்து சொன்னாள்.

“ம்ம்ம்ம்ம்.....,, இது அழகு. அதாவது தண்ணில்லாம் வேஸ்ட் பண்ணகூடாதுன்னு என் அம்மா சொல்லி அனுப்பினாங்க. அதான் இப்படி”, கண்ணை சிமிட்டி சிரித்தாள்.

“ஆத்தாடி அப்போ பிளேட்டை கழுவபோறது இல்லையா?”, அவள் அலறியே விட்டாள்..

“க க க போ.....”, புலிக்கேசி ஸ்டைலில் பேசி அவளை இன்னும் அலறவிட்டாள்.

“அக்கா நான் வேண்ணா கழுவி வச்சுடுறேன். நீங்க செஞ்சாலும் செய்வீங்க போல”, முகத்தை சுளித்தவரே சொன்னாள்.

“லச்சு……., இனிமேல் விளையாட்டுக்கு கூட மத்தவங்க பிளேட்டை கழுவுறேன்னு சொல்ல கூடாது. உன் தொழில் வேற, நட்பு வேற, புரியுதா?”, அவள் குரல் உயர்த்தாமல் சொன்னாலும் அதில் இருந்த கோபம் லஷ்மிக்கு புரிந்தது.

“என் அக்காவா இருந்தால் செய்ய மாட்டேனா?”, இறங்கிய குரலில் கேட்டாள்.

“லச்சு, உன் அக்கா வேற நான் வேறடா புரிஞ்சுக்கோ சரியா?”, எதார்த்தத்தை அவளுக்கு புரிய வைக்க முயன்றாள்.

“அப்போ உங்களுக்கு கிளாஸ் தொடங்கிட்டா, உங்களுக்கு ப்ரண்ட்ஸ் கிடைச்சுட்டா என்கிட்டே பேச மாட்டீங்களா?”, அழுதுவிடுபவள்போல் கேட்டாள்.

“லச்சு, நான் என்ன சொன்னால் நீ என்ன புரிஞ்சுக்கற?. நான் எப்போவும் ஒரே மாதிரிதான் இருப்பேன். சோ நீ கவலையே படாதே. நீ சொன்ன மாதிரி ப்ரண்ட்ஸ் வேற, தங்கச்சி வேற இல்ல. நீ சாப்ட்டியா முதல்ல போய் சாப்பிடு போ”, அவளுக்கு அவள் தங்கை என்பதை புரியவைத்து அனுப்பினாள். லஷ்மிக்கும் ஒரே சந்தோசம்.

“லச்சு…… லவ் யூ”, அர்ச்சனா சத்தமாக சொல்லவே, லஷ்மி பேய் முழி முழித்தவாறே அங்கிருந்து அகன்றாள். தூரத்தில் இருந்ததால் அவளால் எதுவும் கேட்க முடியவில்லை. சிரித்தவாறே அர்ச்சனாவும் பிளேட்டை கழுவ சென்றாள்.

திரும்பி வந்து பழைய இடத்தில் அவள் அமரும்பொழுது நேரம் ஐந்தை கடந்திருந்தது. நான்கு மணிக்கே டீ குடித்துவிட்டாள். நன்றாக இருந்தது. மரியாதான் தந்தார், லஷ்மியை காண முடியவில்லை. அந்த யோசனையோடே அமர்ந்திருந்தாள்.

‘லச்சு எங்க போனா?, நான் போனாலே மூக்குல வேர்த்த மாதிரி வருவா. சரி நைட் பாத்துக்கலாம்’, யோசனையை தள்ளிவிட்டு பார்வையை சுழலவிட்டாள்.

பார்வை அனிச்சையாகவே அந்த ஜோடிகள் இருந்த இடம் தாவியது. இப்பொழுதும் அவர்கள் நிலையில் எந்த மாற்றமும் இல்லை. “அடங்கொக்கமக்கா, இன்னுமா முடியலை. மதியம் சாப்பிட போனமாதிரி கூட இல்லையே”, நேரம் ஆக ஆக இருவரின் முகங்களிலும் வருத்தத்தின் சாயல் மட்டுமே மிச்சமிருந்தது.

இருள் கவிழும் வேளையில் பேட்ரிக் வந்தான். அவன் வருவதை கூட கவனிக்காமல், சிந்தை முழுவதும் அந்த ஜோடியின் வருத்தம் என்னவாக இருக்கும் என்பதையே சிந்தித்துக் கொண்டிருந்தது.

“ஹாய் சனா எப்படி இருக்க?, நாள் எப்படி போச்சு?”, அவள் தன்னை இப்போதைக்கு கவனிக்கப்போவதில்லை என்பதை உணர்ந்து அவனே பேச்சை துவங்கினான்.

“சாரி ஐ’ம் நாட் சனா”, பார்வையை திருப்பாமலேயே பதில் சொன்னாள். ஆனால் அந்த குரல் பரிச்சயமானதாக இருக்கவே சட்டென திரும்பி பார்த்து முறைத்தாள்.

“என்ன இது?, என் பேர் அர்ச்சனா, நீங்க பாட்டுக்கு உங்க இஷ்டத்துக்கு கூப்பிடுறீங்க?”.

“ஆமா நீதான் அச்சுன்னு சொல்ல கூடாதுன்னு சொல்லிட்ட, நைட் முழுக்க யோசிச்சு இந்த பேரை கண்டு புடிச்சேன். சனா....., எப்படி இருக்கு?, நல்லா இருக்குல்ல?”, சொல்லிவிட்டு அவனே சிலாகித்தான்.

“இந்த பேரை யோசிக்க நைட் முழுக்க ஆச்சா, கஷ்டம்தான். நான் சொல்லவா நைட் எந்திரன் படம் பாத்துருப்பீங்க, அதில் ரஜினி ஐஸ்வர்யாராயை அந்த பேர் சொல்லித்தான் கூப்பிடுவார். அதை அப்படியே என்கிட்டே காப்பி அடிக்கீங்க சரியா?, இதில் இவரே கண்டுபிடிச்ச மாதிரி பில்ட்அப் வேற,

ஷங்கர் கேட்டா கோச்சுக்க மாட்டாரு?", நக்கலாக சொன்னாள்.

"சனா, நிஜம்மாவே நான் எந்திரன் படம் பார்த்தது இல்லை. ஒரு நாள் முழுக்க யோசித்து இந்த பெயரை கண்டு பிடிச்சேன். நீ இப்படி சொல்லிட்டியே?. உனக்கு பிடிக்கலன்னா நான் அப்படியும் சொல்லலை?", அவன் குரலில் உண்மையும் வருத்தமும் இழையோடியது.

"நான் உங்ககிட்டே பிடிக்கலைன்னு சொன்னேனா?. என்னையும் நீங்க ஐஸ்வர்யாராய் மாதிரி நினைக்கிறீங்கன்னு சந்தோசம்தான் படுவேன்", குறும்பாக சொல்லி சிரித்தாள்.

"நான் எதுக்கு அவளை மாதிரி உன்னை நினைக்கணும்?. எனக்கு நீ ஸ்பெசல் தான்", சீரியஸாக சொன்னான்.

"பேட்ரிக் வரும்போது மொளகா பஜ்ஜி சாப்பிட்டு வந்தியா?, நெடி தாங்க முடியலை", அவன் சீரியஸாக பேசுவதையும் கேலி செய்தாள்.

"மத்தவங்க உணர்வை புரிஞ்சுக்கவே மாட்டியா நீ?", ஆற்றாமையாக கேட்டான்.

"டேய் உன்னை கொன்னுடுவேன். பக்கத்தில் உக்காந்து பிடில் வாசிக்கிற, மவனே காலையில் இருந்து நானே தனிமைல பொங்கிட்டு இருக்கேன். அது என்னை அமுக்கிட கூடாதேன்னு தள்ளி, தள்ளி விட்டுட்டே இருக்கேன், நீவேற ஏண்டா வந்து உக்காந்து என்னை தலைகீழா புடிச்சு அதிலேயே அமுக்குற.

இப்போ என்ன?, நீ அப்படி சொன்னதும் அப்படியே உருகி, ஓ....., அப்படியா பேட்ரிக், ஒரு நாள் முழுக்க என்னையே நினைச்சுட்டு இருந்தியா?, உனக்கு என்னை அம்ம்ம்மம்ம்ம்புட்டு புடிக்குமா?, ப்ளா....ப்ளா... ப்ளா.....ன்னு கேட்டால் உனக்கு சந்தோசமா இருக்குமா?.

சரி சொல்லு நானும் அப்படியே பேசுறேன்”, தன் கண்கள் கலங்குவதை அவன் கண்டுகொள்ள கூடாதே என்ற தவிப்புடன், நீரை உள்ளுக்கு இழுத்தவாறே, கேலியாக பேச முயன்று தோற்று, அவளையும் மீறி ஒற்றை நீர்த்துளி, அவள் அனுமதி இன்றி வழிந்து அவளது மனநிலையை அவனுக்கு காட்டிக் கொடுத்தது.

பகுதி - 6

என் தனிமை துயர் தீர

என்னை இறுக அணைத்துக்கொள்

என் விழிநீர் கூட

வீணாவதை விரும்பவில்லை – அவை

உன் சட்டையில் இடம் பிடிக்கட்டும்

அது உனக்கு ஞாபகப் படுத்தும்

உனக்காக ஒருத்தி காத்திருக்கிறாள் என்று.....

சட்டென தன்னை மீறி வழிந்த அந்த ஒற்றை நீர்த்துளி அவன் கண்களில் படும் முன்னர், சட்டென எழுந்து விலகி நடந்தாள். ‘ஏண்டா....., ஏண்டா..... என்னை, என் மனசை திறக்க வைக்கிற?. நீ பக்கத்தில் இருந்தாலே நான் நானாக இருக்க மாட்டேன் என்கிறேனே. என் மனதை திறக்க அப்படி என்ன மந்திரக்கோலை கொண்டு வருகிறாய்?’, உள்ளம் குமுற, தன் நிலையை தானே வெறுத்தாள்.

அவனிடம் மட்டுமே தான் நிதானம் இழப்பதையும், அவனிடம் மட்டுமே தான் தானாக இருக்க முற்படுவதையும் உணர்ந்தாள். இவன் யார்? எங்கிருந்து வந்தான்? என்னையே ஏன் நிழலாக தொடர்கிறான்? வேண்டாம் இந்த யோசனையே வேண்டாம், தனக்குள் முடிவெடுத்தாள்.

அதைவிட அவன் தன் மனநிலையை உணரும் முன்னர் சரியாக வேண்டுமென்று, இந்த யோசனையையே விட்டாள். ‘அர்ச்சனா வேற ஏதாவது யோசி, அவனை யோசிக்காதே’, தனக்கு தானே சொல்லிக் கொண்டாள். ‘ச்சே....., இங்கே வந்து நான் ரொம்ப கோழை ஆயிட்டேனா?, இல்லையென்றால் என் தனிமை இப்படி பேச வைக்குதா?,

இல்லையென்றால் என் இயல்பே இதுதானா?', தன்னையே ஆராய்ந்தாள்.

இவளோ இங்கே ஆராய்ந்துகொண்டிருக்க, பேட்ரிக் அவளது பேச்சைக் கேட்டு திகைத்து அமர்ந்திருந்தான். குறும்பான அர்ச்சனா, அசால்ட்டான அர்ச்சனா, எதையும் கண்டுகொள்ளாத அர்ச்சனா, இப்படி பல வித பிம்பங்களில் அவளை கற்பனை செய்து வைத்திருந்தவனால், இந்த அர்ச்சனாவை அதில் பொருத்தி பார்க்கவே முடியவில்லை.

"ச்சே....., அவளும் அவளோட வீட்டை முதல் முறையாக பிரிந்து வந்திருக்கிறாள். அதை உணராமல் என் நேசம் அவளுக்கு புரியவேண்டுமென்று இப்படி சுயநலமாக யோசித்து விட்டேனே. நேற்றே இங்கு யாரும் இல்லை என்பது எனக்கு தெரியும் தானே. பிறகு நான் ஏன், காலையிலேயே வந்து அவளை பார்க்கவில்லை.

சாப்பிட்டாளா என்று கூட கேட்கவில்லையே. தனிமையில் ரொம்ப தவித்து போயிருப்பாள் போல', உடனே அவளை போய் சமாதானம் செய்வதே முதல் தேவை என்று உணர்ந்து அவளை பின் தொடர்ந்தான்.

தூரத்தில் அர்ச்சனா நிற்பது தெரிந்தது. அவளை நெருங்கினான். "சனா, பக்கத்தில் ஒரு பார்க் இருக்கு ஜஸ்ட் வாக்கபிள் டிஸ்டன்ஸ் தான் அங்கே போகலாமா?", அவள் மனநிலையை மாற்ற கேட்டான்.

"என்ன விளையாடுறியா பேட்ரிக்?, இப்போ நைட் ஆக போகுது. இந்நேரம் அங்கே போய் என்ன பார்க்க?, அதுவும் இல்லை, நைட் டைம் அது ஓப்பன்ல இருக்குமா?", ஒரு சமநிலைக்கு வந்துவிட்டதால், அவனிடம் தன் சந்தேகத்தை கேட்டாள்.

"ஆமா இல்ல, நானும் மறந்துட்டேன். சரி உனக்கு செஸ், கேரம், இப்படி ஏதாவது விளையாட தெரியுமா? நான் வீட்டுக்கு போய் எடுத்துட்டு வாறேன். கொஞ்ச நேரம்

விளையாடலாம்”, அவள் மனநிலையை மாற்றியே ஆகவேண்டும் என்று துடித்தான்.

“ஹேய் எனக்கு ரம்மி நல்லா விளையாட தெரியும். போய் கார்ட்ஸ் எடுத்துட்டு வாறியா?”, அவன் முகம் அதிர்ச்சியை காட்டவே,

“விளையாட தெரியாதுன்னா விடேன், அதுக்கு ஏன் என்னை என்னமோ கொலை குத்தம் செஞ்சவளை பாக்குற மாதிரி பாக்குற?”, பழைய அர்ச்சனா திரும்ப கேட்டாள்.

“உனக்கு நல்ல விளையாட்டே விளையாட தெரியாதா?”, நக்கலாக கேட்டான்.

“ஓ……., செஸ், கேரம் எல்லாம் நல்ல விளையாட்டா, எனக்கு இவ்வளவு நாள் தெரியாம போச்சே. தேங்க்ஸ் பார் யுவர் இன்போ(info)”, அதைவிட நக்கலாக இவள் பதில் சொன்னாள்.

“பேச்சில் கூட விட்டே கொடுக்க கூடாது சரியா?”, அவள் பேச்சை ரசித்து சிரித்தான்.

“நாளைக்கு கார்ட்ஸ் வாங்கிட்டு வந்து தாறேன். இப்போ நாம வேற எதைப்பத்தியாவது பேசலாம்”, அவளை அழைத்துவந்து முன்பு அமர்ந்திருந்த அதே இடத்தில் வந்து அமர்ந்தான்.

அவர்கள் அமரும் வேளை, அங்கிருந்த குழல் விளக்குகள் உயிர் பெற்றன. சட்டென ஒளி வரவே, கண்ணை கூசிய அந்த வெளிச்சத்தில், தன் முகத்தை வேகமாக திருப்பவே அவள் அருகில் அமர்ந்துகொண்டிருந்த அவன் தோளில் அவள் முகம் உரசியது.

“சாரி”, ஒருவரும் ஒரே நேரத்தில் சொல்லிவிட்டு சிரித்தார்கள். “பேட்ரிக் இந்த ஜென்டில்மேன் இடைவெளி கேள்விபட்டதே இல்லையா நீங்க?”, குறும்பாக கேட்டாள்.

“கேள்விபட்டிருக்கேனே ஏன்?”, அவள் சொல்லவருவதை புரிந்து சாதாரணமாகவே கேட்டான்.

“இல்லை சும்மா தெரிஞ்சுக்கலாமேன்னு கேட்டேன்”, சொன்ன அவளும் நகர்ந்து அமரவில்லை, அவள் சொல்ல வருவது புரிந்த அவனும் நகரவில்லை. இருவரில், யார் கொஞ்சம் அதிகமாக நகர்ந்தாலும் அவர்கள் தோள் உரசும் தூரத்திலேயே அமர்ந்து இருந்தார்கள்.

“சொல்லு, உங்க அப்பாவும் அண்ணாவும் என்ன செய்யிறாங்க?”, அவன் பேச்சை துவங்க,

“ம்ம்ம்ம் ரெண்டும் மாட்டு சாணியை அள்ளுதுங்க”, கடுப்பாக பதில் சொன்னாள். அவளை இங்கே அனுப்பியது அவளுக்கு பிடிக்காமல் பதில் சொன்னாள்.

பேட்ரிக்கின் முகம் ஞே....., என்று ஆனது. ஏனென்றால் அவனும் அந்த வேலைதான் செய்து கொண்டிருக்கிறான். அவளிடம், அவள் அப்பா அண்ணாவின் வேலையை பற்றி கேட்டு, அப்படியே தன் வேலையைப் பற்றியும் சொல்லிவிடலாம் என்று மனக்கோட்டை கட்டிக் கொண்டிருக்க, அதை பெரிய புல்டோசர் வைத்து இடித்து தரைமட்டம் ஆக்கினாள், ஒற்றை வாக்கியத்தில்.

“என்ன அமைதியாயிட்டிங்க?”, அவனை உலுக்கினாள்.

“ஏன் நீ அப்படி சொன்ன?”, கொஞ்சம் தயக்கமாகவே கேட்டான்.

“அதுவா அவங்க ரெண்டுபேருக்கும் எப்போ பாத்தாலும் மாட்டோடவே வேலை, சோ என் அண்ணாவை நான் அப்படி சொல்லித்தான் கிண்டல் பண்ணுவேன். நான் இப்படி சொன்னால் அவனுக்கு வரும் பாருங்க கோபம்.....,

வீட்டை சுத்தி சுத்தி அடிக்க துரத்துவான். எங்க அம்மா எங்க ரெண்டுபேர் பின்னாடியும் சுத்தி வருவாங்க. நான் சொல்லுறதுக்கு அது மட்டும் காரணம் இல்லை. மாட்டுக்கு

இன சேர்க்கை செய்யிறதை பார்த்து இருக்கீங்களா?, அதாவது நான் கேட்பது மருத்துவமனையில் செயற்கை முறையில் செய்வதை...?", அவனிடம் தெளிவுபடுத்திக்கொள்ள கேட்டாள்.

'என் நேரம்தான்', மனதுக்குள் நினைத்தவாறே, தலையை வேகமாக தெரியும் என்று ஆட்டினான். அதைவிட அவள் சொல்ல வந்தது தெளிவாக விளங்கி விட்டதால், "போதும் நீ என்ன சொல்ல வாறன்னு எனக்கு தெளிவா புரிஞ்சுடுச்சு, விட்டுடு", அவளை நோக்கி கையை கும்பிட்டான்.

"ஹேய் நான் அவங்களைத்தானே சொன்னேன், உனக்கு ஏன் இம்புட்டு ரோசம் வருது, ஆண் பாசமா...?, இல்லை ரோசமா?".

"ஆண் பாசமும், இல்லை ஆட்டுக்குட்டி பாசமும் இல்லை. என் தொழில் பக்திதான் காரணம்", வேகமாக சொன்னான். ஆனால் அது அவனுக்கே வினையாகிப் போனது.

"ஹா..... ஹா..... ஹா....., அப்போ..... அப்போ..... ஹா.....ஹா..... நீயும் மாட்டு சாணிதான் அள்ளுறியா?. ஹையோ என்னால் முடியலை, இந்த மாட்டு ஹா.....ஹா..... சாணியை அள்ள, நாலு வருஷம் படிச்சியா நீ?. அதெல்லாம் இருக்கட்டும் நீ மாட்டுக்கு தண்ணி காட்டுவியா இல்லை அது உனக்கு காட்டுமா?.

ஏன் கேக்குறேன்னா அடிக்கடி என் அண்ணா அதுட்டே உதை வாங்கிட்டு வருவான் அதான் கேட்டேன். ஹா..... ஹா..... ஹா.....", அவள் சிரிப்பதில் அவனுக்கு கோபம் கிளர்ந்தாலும், சுற்றி இருப்பவர்கள் வேடிக்கை பார்க்கவே அவனுக்கு சங்கடமாக போயிற்று.

"சனா....., முதல்ல சிரிக்கிறதை நிறுத்து?", அவளை பல்லை கடித்தவாறே அடக்கினான்.

"என்னால் முடியலையே நான் என்ன செய்யட்டும், ஹா.... ஹா... ஹா...".

“இப்போ உன் சிரிப்பை நான் அடக்கி காண்பிக்கட்டுமா?”, சொன்னவாறு, சட்டென அவள் இதழ்களை தன் இதழ்களால் மூடினான். ஒரு நொடியில் நடந்துவிட்ட அந்த முத்தம், தேகமெங்கும் சிலிர்த்து அடங்கியது. அந்த நிலையிலும் சட்டென அவனை உதறி, அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்தாள்.

தன் கை எரிந்த பிறகே அவனை அடித்துவிட்டது புரிந்தது. ஆனால் மன்னிப்பு கேட்க நா எழவில்லை. பேட்ரிக் மட்டுமல்ல, சுற்றி இருந்தவர்களும் ஒரு நிமிடம் உறைந்தார்கள். அவனுக்கு தான் செய்த தவறின் அளவு சரியாக புரிந்தது. இவ்வளவு பொது இடத்தில், அவளிடம் அவ்வாறு நடந்துகொண்டது எவ்வளவு பெரிய பிழை என்பது புரிந்தது.

அதைவிட, அவளை மனதுக்குள்ளே தன் மனைவியாகவே வாழத் துவங்கிவிட்டதால் வந்த வினை என்பதும் அவனுக்கு புரிந்தது. அவளை எப்படி சமாதானம் செய்யவென்று அவனுக்கு புரியவில்லை.

அங்கே நிற்காமல் சட்டென திரும்பி ஹாஸ்டலுக்கு செல்ல போனாள். அவளை நகர விடாமல் தடுத்தான். “ச்சே..... இவ்வளவு சீப்பா பீகேவ் பண்ணுவீங்கன்னு நான் எதிர் பார்க்கவே இல்லை. நான் வாயால் தானே பேசினேன். நீங்களும் வாயால் பேசி இருக்கணும் அதை விட்டுட்டு இப்படி?”, கோபத்தில் அவள் கண்கள் கூட சிவந்தது.

“ஐ’ம் சாரி. அதான் நீ என்னை அடிச்சுட்டியே ரெண்டுக்கும் சரியா போச்சு”, எரிந்த தன் கன்னத்தை தடவிக் கொண்டே சொன்னான்.

“சாரி சொன்னால் நீங்க செஞ்சது இல்லன்னு ஆகிடுமா?. இத்தனைபேர் முன்னாடி.....?, எனக்கு அசிங்கமா இருக்கு. இனிமேல் என் முகத்திலேயே முழிக்காதீங்க, அப்படி பார்த்தேன்.....”, ஒற்றை விரல் நீட்டி சொல்லிவிட்டு ஹாஸ்டலுக்குள் ஓடி மறைந்தாள்.

“சனா..... நான் சொல்லுவதை ஒரு நிமிடம் கேளேன்”, அவன் குரல் அவளை எட்டாத தூரத்துக்கு அவள் சென்றுவிட்டிருந்தாள்.

பேட்ரிக் கைகளில் தலையை தாங்கியவாறு அங்கேயே அமர்ந்துவிட்டான். ‘ஏன் நான் இப்படி ஆயிட்டேன்?. அவ மனசை புரிஞ்சுக்காமலே இப்படி செஞ்சுட்டேனே. இனிமேல் அவ என்னோட பேசுவாளா?. என் காதலை ஏற்றுக் கொள்வாளா?. அவள் முகத்திலேயே முழிக்காதே என்று சொல்லிவிட்டாளே’, கண்கள் கலங்கியது.

இங்கே படுக்கையில் குப்புற விழுந்து அழுத அர்ச்சனாவின் நிலை அதைவிட மோசமாக இருந்தது. ‘இதுவரை ஆண்மகன்களை எட்டியே இருக்க வைத்ததுபோல் இவனையும் வைத்திருந்திருக்க வேண்டும். அதை விடுத்து அவனிடம் சகஜமாக பழகியது என் தவறு.

அவனிடம் சிரிக்க சிரிக்க பேசியதால்தான் அவனுக்கு இப்படி ஒரு எண்ணம் தோன்றியது. அதுவும் அத்தனைபேர் முன்னாடி அவன் எப்படி இப்படி செய்யலாம். என் தனிமையை அவனிடம் உணர்த்தியது தவறு.

தனக்கே தன்மேல் எழும் கோபத்தை அவளால் தணிக்க முடியவில்லை. கண்ணீர் தலையணையை நனைக்க, அப்படியே உறங்கிவிட்டாள். நேரம் ஏழை நெருங்கும் முன்பே நித்திராதேவி அவளை நெருங்கி, தழுவி இருந்தாள்.

இரவு ஒன்பது மணிக்கு லஷ்மி சாப்பாட்டுடன் அவளை நெருங்கினாள். “அக்கா சாப்ட்டு தூங்குங்கக்கா?”, மென்மையாக அழைத்தாள்.

இந்த அழைப்புக்கெல்லாம் அசரும் நிலையில் அவள் இல்லை. மீண்டும் பத்து நிமிடம் உருட்டிய பிறகே, கொஞ்சம் விழித்தாள். “லச்சு....., எனக்கு சாப்பாடு வேண்டாம்”, அரை தூக்கத்தில்கூட தன்னை இனம் கண்டத்தில், பூரித்து போனாள் லஷ்மி.

இதற்குமேல் எழுந்து இவள் சாப்பிடுவாள் என்ற நம்பிக்கை போய்விட்டாலும், கொண்டுவந்த சாப்பாட்டை டேபிள் மேல் வைத்து, ஒரு பேப்பர் கொண்டு மூடிவிட்டு சென்றாள்.

பேட்ரிக் தலையில் கை வைத்து அமர்ந்தவன் அங்கிருந்து அசையவே இல்லை. “என்ன தம்பி இப்படி செஞ்சுட்டீங்க?. அம்மா அப்பாவை விட்டு தனியா இருக்கும் பிள்ளை கிட்டே உங்கள் வீரத்தை காட்டுவது சரியே இல்லை”, ஒரு பெரியவர் தன் ஆதங்கத்தை கொட்டினார்.

“சார் நீங்க போங்க, நான் பாத்துக்கறேன்”, அவரை அனுப்பிவிட்டு, பேட்ரிக் பக்கத்தில் அமர்ந்தான் புதியவன்.

“ஹல்லோ சார், நான் மைக்கேல்ராஜ். நானும் பாத்துட்டுதான் இருந்தேன். என்ன ஒன்சைடு லவ்வா?”, சட்டென கேட்டான்.

“ஏன் அப்படி கேட்டீங்க?”, கவலையில் தோய்ந்திருந்தது அவன் குரல். ஆனாலும் புதியவன் கேட்ட கேள்வி இவனுக்கு பிடித்தது.

“நானும் கொஞ்ச நேரமா உங்களை கவனித்தேன். உங்க முகத்தில் அவங்களை பார்த்தாலே ஒரு பரவசம். அதைவிட அவங்க சிரிக்கும்போது, உங்க கண்ணில் கோபத்தைவிட ரசிப்புத்தன்மைதான் அதிகம் இருந்தது. அதை வைத்துதான் கேட்டேன்.

அதுக்காக நீங்க செய்தது சரின்னு சொல்ல வரலை. அதுவும் இவ்வளவு பப்ளிக்கா.....?”, “ஆனால் நிச்சயமா சொல்லுறேன் அவங்களுக்கும் உங்களை பிடிச்சுருக்கு”, அவன் முகம் சுருங்குவதைப் பார்த்து வேகமாக சொன்னான்.

“எப்படி சொல்லுறிங்க.....?”, முகம் பிரகாசமாக கேட்டான்.

“எல்லாம் காதல் கணக்குதான். நானும் என் மனைவியும் காதல் திருமணம் செஞ்சவங்க. அவ முகத்தில், முதன்

முதலில் நான் பார்த்த அதே உணர்வு, உங்க ஆள் கிட்டயும் உங்களை பார்க்கும்போழுது இருக்கு. அதாவது கொஞ்சம் தெளிவா சொல்லுறதா இருந்தால்....., உரிமை உணர்வு.

நிச்சயமா அவங்களுக்கு உங்கமேல கோபம் இருக்கும். ஆனால் மறுபடியும் உங்களை பாத்தாங்கன்னா அந்த கோபம் குறையத்தான் செய்யுமே தவிர வளராது. சோ நீங்க தைரியமா அவங்களை பாத்து பேசுங்க. அவங்க உங்களை அடிச்ச கோபம் உங்களுக்கு இருந்தாலும், நீங்க செய்த தப்புக்குதான் அவங்க அடிச்சாங்க அதனால், மன்னிப்பை மறுபடியும் கேளுங்க. எல்லாம் நல்லபடியா நடக்கும்”. பேட்ரிக்கு ஆறுதல் சொன்ன அதே வேளையில், அவன் தவறையும் சுட்டிக் காட்ட மறக்கவில்லை.

மைக்கேலின் பேச்சு பேட்ரிக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது. “நீங்க என்ன மனநல மருத்துவரா?”, மனதில் நினைத்ததை கேட்டான்.

“இல்லை நான் இஞ்சினியர். கல்யாணம் ஆகி பத்து நாள்தான் ஆகுது. அதுக்குள்ளே இங்கே அவளுக்கு அட்மிஷன் கிடைத்துவிட்டது. அதான் அவளை விட்டுட்டு போகலாம்னு வந்தேன். ஆனால் இன்னும் ஒரு வாரமாவது ஆகுமாம் காலேஜ் துவங்க, ஆனா வீட்டுக்கு அவளை கூட்டிட்டு வரக்கூடாதுன்னு சொல்லிட்டாங்க. வேற வழி இல்லாமல், விட்டுட்டு போறேன்.

நான் இன்னும் ஒரு வாரம் இங்கேதான் ஏதாவது ஹோட்டல்ல தங்கி, தினமும் இவளை வந்து பாத்துட்டு போகணும்”, வருத்தமாக சொன்னான்.

“வீட்டுக்கு கூட்டிவரக் கூடாதுன்னு சொன்னாங்கன்னா.....?, ஏதாவது பிரச்சனையா. அதைவிட இவங்களை இங்கே விடுறதுக்கு, நீங்க தங்கப்போற ஹோட்டல்லையே அவங்களையும் தங்க வைக்கலாமே?”, யோசனையாக கேட்டான்.

“வீட்டில் நீங்க நினைக்கிற மாதிரி எந்த பிரச்சனையும் இல்லை. இந்த காலேஜ்ல போட்டிருக்க ஒரு கண்டிசன் தான் எங்களை பிரிச்சு வைக்குது. வேற வழியும் எங்களுக்கு இல்லை. இங்கே பெரியவங்க பாக்க மாட்டங்கன்னு, எதையும் செய்ய முடியாதே?. நமக்குன்னு ஒரு மனசாட்சி இருக்கே?”, அவன் பேச, பேட்ரிக் தலை கவிழ்ந்தான்.

அவன் நிலையை உணர்ந்து, “ஹையோ சார் நான் என் நிலையை சொன்னேன். உங்களை குத்திக் காட்டணும்னு எதையும் சொல்லலை. என் வொய்ப் தனியா இருக்கா, நான் அவகிட்டே போறேன். நீங்களும் போயிட்டு நாளைக்கு வந்து அவங்களை பாருங்க”, சொல்லிவிட்டு சென்றுவிட்டான்.

பேட்ரிக்கால் தான் அங்கிருந்து நகரவே முடியவில்லை. மீண்டும் ஒருமுறையாவது அர்ச்சனாவின் முகத்தை பார்த்தே ஆகவேண்டும் என்று தோன்றியது. எனவே அழைப்புமணியை அழுத்தினான். லஷ்மிதான் வந்து கதவை திறந்தாள்.

அவளிடம் அர்ச்சனாவை பார்க்கவேண்டும் என்று சொன்னான். அவளோ சென்றுவிட்டு, அர்ச்சனா தூங்குகிறாள் என்ற செய்தியையே கொண்டு வந்தாள். நேரம் ஏழைதான் கடந்திருந்தது. லஷ்மியிடம் அர்ச்சனாவிற்கு இரவு உணவை அவன்தான் கொடுக்க சொன்னான்.

இதில் எதையுமே உணராமல் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தாள் அர்ச்சனா. மைக்கேல் தன் மனைவியை ஹாஸ்டலுக்கு அனுப்பிவிட்டு, பேட்ரிக்கிடம் விடைபெற்று சென்றுவிட்டான். சாதாரண நாட்களில் ஆறுமணிக்குமேல் வெளி ஆட்கள் இங்கே அனுமதியே கிடையாது.

வாட்ச்மேன் அனைவரையும் அனுப்பிவிட்டு, கேட்டை சாத்திவிடுவார். ஆனால் கல்லூரி இன்னும் துவங்காத

காரணத்தால் அவரும் கொஞ்சம் அசட்டையாக இருக்கவே, பேட்ரிக் அங்கேயே இருப்பது அவருக்கும் தெரியவில்லை.

அர்ச்சனா சீக்கிரம் தூங்கிவிட்டாள் என்று தெரிந்த உடனே அவனுக்கு தெரிந்தது, இன்று அர்ச்சனா இரவில் விழித்துவிடுவாள் என்று. அவன் எண்ணம் பொய்க்கவில்லை, நேரம் ஒன்றை நெருங்கும் வேளை, அர்ச்சனா விழித்துவிட்டாள்.

சுற்றிலும் இருட்டு, அங்கே தனிமையில் தான் மட்டும். பக்கத்து படுக்கையில், வைஷாலி படுத்திருப்பது அவளுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. வைஷாலி, மைக்கேலின் மனைவி. குத்துமதிப்பாக அறையைவிட்டு வெளியே வந்தாள்.

படிக்கட்டுக்கு அருகில் விடிவிளக்கு ஒளிர்வது பார்வையில் விழுந்தது. சென்று படியில் அமர்ந்துகொண்டாள். தனிமை பயத்தை கொடுத்தாலும், மாலையில் நடந்த நிகழ்வுகளின் தாக்கம் அதிகமாக இருந்தால், பயம் அவளை அதிகமாக தாக்கவில்லை.

‘ஏன் பேட்ரிக் இப்படி செஞ்ச? சென்னையில் எனக்கு நெருக்கமானவன் நீ மட்டும்தான் என்று நான் நினைக்க, என்னை இப்படி ஏமாத்திட்டியே, உனக்கு இது நியாயமா? மனம் அவனிடம் கேள்விகேட்டவாறே இருந்தது.

‘அது ஏன் அவன் மட்டும் நெருக்கம்? மனசாட்சி விழித்துக் கொண்டது. ‘நீ மட்டும் அவன் தொழிலை சொல்லி சிரித்தது நியாயமா? உன் அண்ணனிடம் விளையாடுவது உரிமை, இவனிடம் எந்த உரிமையில் விளையாடினாய்?

அவன் சிரிக்காதே என்று எத்தனை முறை கெஞ்சினான், நீ கேட்டாயா? பிறகுதானே அவன் அப்படி நடந்துகொண்டான்’, தொடர்ந்து அவளிடம் கேள்வி கேட்டது.

“நான் சிரித்தால் அதுக்கு இப்படித்தான் செய்வாங்களா?”.

“ஏன் உன் அண்ணன் எத்தனை முறை உன்னை அடித்திருக்கிறான்?. இவனால் உன்னை கை நீட்டி அடிக்கமுடியவில்லை, அதான் இப்படி செஞ்சுட்டான்’, அவனுக்கு வக்காலத்து வாங்கியது.

“கை நீட்டி அடிக்கமுடியவில்லை என்று.....?”,

‘’அதான் நீ விட்டியே அவன் கன்னத்தில் ஒண்ணு. பாவம் கன்னம் நல்லா பழுத்திருக்கும். ஆத்தாடி என்ன அறை. இப்படியா அவனை அறைவது?’.

“பின்ன அவனை கொஞ்ச சொல்லுறியா, இத்தனைபேர் முன்னாடி....., அதுவும் லிப்ல.....?”, நினைக்கும் பொழுதே சிலிர்க்கவும் செய்தது. இதழை மடித்து கடித்துக் கொண்டாள்.

‘அப்போ இத்தனைபேர் முன்னாடி உன்னை கிஸ் அடிச்சதுதான் தப்பா? நீ தனியா இருக்கும்போது அடிச்சால் பரவாயில்லையா?. ஓங்கி அவன் கன்னத்தில் விட்டுட்டு பேசுற பேச்சை பாரு. அவன் மன்னிப்பாவது கேட்டான் நீ கேட்டியா?’, அவள் மனசாட்சி அவளிடம் கேள்வி கேட்டது.

“ஓய்....., நான் எப்போ அப்படி சொன்னேன்?. அது....., இப்போ நான் எதுக்கு அவன்கிட்டே மன்னிப்பு கேக்கணும்?”, வீம்புக்கு சொன்னாள்.

‘எதுக்கு மன்னிப்பு கேட்கணுமா.....?, நீதானே முதலில் சிரிச்ச, அதன் பிறகு அவன் சொல்ல சொல்ல கேட்காமல் நீதானே அவனை தூண்டிவிட்ட, செய்ததெல்லாம் நீ. இப்போ அவனை குற்றம் சொல்லு. முதல்ல அவனைப் பார்த்து மன்னிப்பு கேள் சரியா?’, மனசாட்சி அவளுக்கு அறிவுரை சொன்னது.

“நான் எப்படி கேட்பது, அதான் அவனை என் முகத்திலேயே முழிக்கக் கூடாதுன்னு சொல்லிட்டனே?”, கவலையாக சொன்னாள்.

‘இந்த அறிவு உனக்கு முதல்லையே இருந்து இருக்கணும்”.

“இங்கேபார் நீ வரவர எனக்குள்ள இருக்கியா?, இல்லை நான் உனக்குள்ளே இருக்கனான்னே தெரிய மாட்டிக்கு. நீ கிளம்பு நான் பாத்துக்கறேன்”, அதை அடக்கினாள்.

சிந்தனையில் இருந்தபொழுது தெரியாத தனிமை உணர்வு, இப்பொழுது பூதாகரமாக தெரிந்தது. அறைக்கு செல்லவே பயம்மாக இருந்தது. அம்மாவின் அருகில் செல்லவேண்டும் என்ற வேகம் எழுந்தது. சரி கொஞ்சம் கிரவுண்டில் சென்று உலாவலாம், என்று நினைத்து கதவை திறந்துகொண்டு வெளியே செல்ல எண்ணினாள்.

மனம் முழுக்க பயம், பயம் பயம் மட்டுமே. அவள் இதயம் துடிப்பது அவளுக்கே கேட்டது. அதன் ஓட்டம் பந்தைய குதிரையைவிட வேகமாக இருந்தது, வியர்த்து ஊத்தியது. கதவை திறக்கக்கூட முடியாமல் கைகள் நடுங்கியது. வாயில் உமிழ்நீர் சுரப்பதுகூட நின்று விட்டது.

தாகம் தொண்டையை வரட்டியது. மூச்சுவிட முடியாமல், காற்றுக்காக நுரையீரல் ஏங்கியது. வெளியே செல்லவும் முடியாமல், அங்கே நிற்கவும் முடியாமல், அறைக்கு செல்லவும் முடியாமல், அப்படி ஒரு அவஸ்தை. எங்கே இதயம் துடிப்பது நின்று இறந்துவிடுவோமோ? என்று கூட அஞ்சினாள்.

காற்று இல்லாமல் சாவதைவிட, வெளியே சென்று காற்றாட சாகலாம், என்ற எண்ணம் கிளர்ந்து எழவே, முயன்று கதவை திறந்துகொண்டு, இருட்டுக்கு பயந்து வெளியே ஓடினாள். உடல் மொத்தமும் பயத்தில் நடுங்கியது.

அவள் வெளியே ஒரு பத்தடிதூரம் கூட ஓடியிருக்க மாட்டாள், அவளை ஒரு உருவம் இறுக அணைத்தது. பயத்தில் அலறப் போனவள், “சனா நான்தான் பேட்ரிக் பயப்படாதே”, அவன் குரல் காதில் விழவே அவனை இறுக அணைத்துக் கொண்டாள். எங்கே கண்விழித்தால் இது

கனவாகிவிடுமோ, என்று கண்விழிக்க கூட பயந்தவளாய் அவனை இன்னும் ஒண்டிக் கொண்டாள்.

பகுதி - 7

உன் தோள்சாயும் உணர்வு

நினைக்கும் வேளையே சிலிர்க்கின்றது

என் கனவு நிஜமானால்.....

காலையில் தன்னை யாரோ உலுக்கி எழுப்பும் உணர்வில் கண்ணிமைகளை பிரிக்க முடியாமல் பிரித்து அவர்கள் முகம் பார்த்தாள். எதிரில் நின்றவளை பார்த்து முகம் பிரகாசமாக, “ஹேய் பொண்டாட்டி நீ எங்கே இங்கே? வீட்டுக்கு போகல?”, உற்சாகமாக குரல் கொடுத்தவாறு எழுந்தாள்.

“நீ..... நீ....ங்க யாரை.....? என்ன சொல்லுறிங்க புரியலை?”, தடுமாறினாள் வைஷாலி.

“புரியலன்னா விடு, அதென்ன ஒரு ‘ங்க’, அதை கட் பண்ணு. அர்ச்சனான்னு சொல்லு பொண்டாட்டி. சரி நீ எப்படி உன் புருஷனை விட்டுட்டு இங்கே வந்த? ஆமா....., நீ எப்போ வந்த? காலையிலையா?”, அவள் கேள்விக்கு பதில் சொல்லாமல், அவளை கேள்வி கணையால் தொடுத்தாள்.

“யார் பொண்டாட்டி? நீங்க யாரை சொல்லுறிங்க? வேற யாரோன்னு நினைச்சுட்டு என்கிட்டே பேசுறீங்களா?”, அவளும் பதில் தராமல் கேட்டாள்.

“பொண்டாட்டி....., யாராவது ஒரு ஆள் கேள்வி கேக்கணும், மத்தவங்க பதில் சொல்லணும். இப்படி ரெண்டுபேருமே கேள்வியா கேட்டுட்டு இருந்தால் யார் பதில் சொல்லுறது? ம்ம்.....”, அர்ச்சனா பதில் சொல்ல தயாராக இல்லை.

“நீங்க இதுக்கு முன்னாடி என்னை பார்த்து இருக்கீங்களா? நான் தான் மறந்துட்டனா?”, இதை தெரியாமல் விடுவதாக

இல்லை வைஷாலி.

“ஹையோ பொண்டாட்டி உன்னை நேத்து கிரௌண்ட்ல உன் ஹஸ்பண்ட்டோட பார்த்தேன். அதுவும் ஒரே நிலையில், கிட்டத்தட்ட ஒரு நாலுமணிநேரம். அதெப்படி ஒரே இடத்தில் அசையாமல்....., கால் வலிக்கல?”, என்னமோ அதுதான் முக்கியம் என்பதுபோல் கேட்டாள்.

“என்ன நீங்க நானும் சொல்லிட்டே இருக்கேன் மறுபடியும் மறுபடியும் பொண்டாட்டின்னே சொல்லுறீங்க. முதல்ல என் பேரை சொல்லி, என்னை கூப்பிடுங்க”, கோபமாக சொன்னாள்.

“அட பொண்டாட்டி உன்னை பேர் சொல்லி கூப்பிடணும்னா முதல்ல பேரை சொல்லணும். நான் என் பேரை சொல்லி ஒருமணிநேரம் ஆகுது. நீதான் உன் பேரை சொல்லவே இல்லை”, குறை பட்டாள்.

“ஓஓஓ....., என் பேர் வைஷாலி, வைஷாலிமைகேல்”, சொல்லும் பொழுதே ஒருவித வெட்கம்.

“வைஷாலி....., மைகேல்....., எங்கேயோ ஒதைக்குதே....., என்ன லவ் மேரேஜா? எப்படி ஓடி போய் கல்யாணம் பண்ணிகிட்டீங்களா? இல்லை.....”, ஒற்றை கண்ணடித்து கேட்க, வைஷாலியின் கண்களில் உனக்கெப்படி தெரியும் என்ற ஆச்சரியம் தொங்கி நின்றது.

அதை கண்டுகொள்ளாமல், “அட ஆளுபேரை சொல்லும்போதே முகம் வெக்கத்தில் குளிக்குது. அதெல்லாம் சரி பொண்டாட்டி....., இப்போதான் கல்யாணம் ஆனமாதிரி இருக்கு, ஹனிமூன் போகாமல் இங்கே என்ன பண்ணுற?”, கேள்விகள் தொடர்ந்தது.

“அதான் இப்போ பேர் சொல்லிட்டனே, பிறகும் ஏன் இப்படி சொல்லுறீங்க”, கோபம் குறையவில்லை அவள் குரலில்.

“அட இப்போ நான் பொண்டாட்டின்னு சொல்லுறதில் என்ன தப்பு. எப்படியும் அண்ணாவுக்கு நீ பொண்டாட்டிதானே”.

‘இப்படி கேட்டால் என்ன பதில் சொல்லுவது. ஆமா என்றால் பிறகு என்னன்னு கேட்பா, இல்லை என்றால் அது தப்பா போய்டும்’, மனதுக்குள்ளேயே ஒத்திகை பார்த்தாள்.

“புத்திசாலி.....”, அவளை திருஷ்டி கழித்தாள் அர்ச்சனா.

அவள் செய்கையில் மெல்லிய புன்னகை வைஷாலியின் இதழ்களில். “ஹப்பா சிருச்சுட்டியா பொண்டாட்டி?. அதுசரி நான் கேட்ட கேள்விக்கு நீ பதில் சொல்லவே இல்லையே?”, போர்வையை சுருட்டி மடியில் வைத்தவாறே கதை கேட்க தயாரானாள்.

“எந்த கேள்விக்கு பதில்?”.

“எல்லா கேள்விக்கும் பதில் வேணும். முதல்ல ஏன் ஹனிமூன் போகாமல் இங்கே வந்தன்னு தெரிஞ்சுக்கணும், பிறகு லவ் மேரேஜ் தானேன்னு தெரிஞ்சுக்கணும், எப்படி உங்க மேரேஜ் நடந்ததுன்னு தெரிஞ்சுக்கணும், கிழக்கும் மேற்கும் சேர்ந்த மாதிரி, இந்து பொண்ணு, கிறிஸ்த்தவ பையன்....., செம சுவாரசியமான விஷயமெல்லாம் இருக்கும் போல இருக்கே”, சீக்கிரம் சொல் என்ற அவசரம் தெரிந்தது அவள் குரலில்.

ஓரளவுக்கு அர்ச்சனாவை புரிந்துகொண்டாள் வைஷாலி. தன் அமைதியான குணத்துக்கு எதிரானவள் என்று. வைஷாலி அமைதியே உருவானவள். நூறு வார்த்தை கேட்டால், பத்து வார்த்தைக்கு பதில் தருபவள். அவளையே அர்ச்சனா இவ்வளவு பேசவைத்துவிட்டாள். ஆனால் பார்த்த முதல் நாளே தன் மதம் சார்ந்த அவள் பேச்சு கொஞ்சம் மனதை நெருடியது. ஆனால் அதற்கு அவசியமே இல்லை என்பதுபோல் அர்ச்சனா நடந்துகொண்டாள்.

“அர்ச்சனா நான் ஒண்ணு கேக்கவா?”.

“அட இதுக்கெல்லாம் எதுக்கு பெர்மிஷன், தாராளமா கேளு”.

“நீ எப்பவுமே இப்படித்தானா?”.

“எப்படி? இந்த நைட்டிய சொல்லுறியா?, இல்லை நைட் மட்டும்தான் போடுவேன். பகல் முழுக்க சுடிதார்தான். நீ விஷயத்துக்கு வா?”, அவள் கேட்க வருவது புரியாமலே பதில் சொன்னாள்.

அவளது பதிலில் சட்டென சிரித்துவிட்டாள் வைஷாலி. “முதல்ல நீ போய் ப்ரெஷ் பண்ணிட்டு வா. இப்போவே மணி எட்டு. இப்போ போனால்தான் டிபன் கிடைக்கு”, பதில் சொல்வதை தவிர்த்தாள்.

“பதில் சொல்லமாட்டேன் போடின்னு சொல்லாமல் சொல்லுற. சரி விடு, என்னால் முடிந்த ஹெல்ப்பை செய்யலாம்னு பாத்தேன், உனக்கு வேண்டாமென்றால் எனக்கென்ன வந்துது”, போலியாக ஒரு பெருமூச்சை வெளியேற்றியவாறே சென்றாள்.

‘இதில் இவ என்ன உதவி செய்யமுடியும்? என்று வைஷாலிதான் மண்டை காய்ந்து போனாள். அவள் யோசனையை கலைத்தாள் அர்ச்சனா.

“பொண்டாட்டி உனக்கு பசிக்குதா என்ன?”.

“ஆமா காலையில் பசிக்காதா?”.

“பசிக்குமா?....., சரி சரி.....”, கண்களில் குறும்பு கொப்பளிக்க கேட்டுவிட்டு, பதில் சொல்லாமல் கிளம்பினாள்.

இப்போ எதற்கு இந்த தேவையில்லாத கேள்வி-பதில் என்பதுபோல் அவளை பார்க்க, “இல்ல நேத்து முழுக்க அண்ணாவையே பாத்துட்டு நின்ன இடத்தைவிட்டு அசையாமல் இருந்தியா....., சிலநேரம் உனக்கு பசியே

எடுக்காதோன்னு நினைச்சேன்”, எதேச்சையாக சொல்வதுபோல் சொல்லிவிட்டு சென்றாள்.

வைஷாலிக்குதான் வெட்கம் பிடுங்கித் தின்றது. ‘இப்படி எல்லோரும் கவனிக்கிற மாதிரியா நேத்து நடந்துகிட்டோம்?’, தன்னையே கேட்டுக் கொண்டாள்.

மின்னல் வேகத்தில் கிளம்பி வந்தாள் அர்ச்சனா. கேன்டீன் வந்த பிறகுதான் தன் ப்ளேட் அங்கே இல்லை என்பதை உணர்ந்தாள். ‘இங்கேதானே வைத்தேன்’, யோசிக்கும் பொழுதே அங்கு வந்தாள் லஷ்மி.

“என்னக்கா, அப்போ நைட் நீங்க சாப்பிடவே இல்லையா?. நான் சாப்பாடு கொண்டுவந்து உங்க டேபிள்ல வச்சேனே?”, அவள் குரல் கவலையாக ஒலித்தது.

“நைட் நான் முழிக்கவே இல்லை லச்சு, காலையில் கூட வைஷாலிதான் எழுப்பி விட்டாங்க. இப்போ என்ன நான் சாப்பிடணும் அவ்வளவுதானே, அந்த சாப்பாட்டையே சாப்பிடுறேன் கவலையை விடு”, சொல்லிவிட்டு,

“வைஷு நீ சாப்பிடு நான் வாறேன்”, ஒரே ஓட்டமாக அறைக்கு விரைந்தாள். “அக்கா வேண்டாம்.....”, லஷ்மியின் குரலை கேட்க அவள் அங்கே இல்லை. அறைக்கு சென்று தட்டில் இருந்த சாப்பாட்டை ஒரு கவரில் போட்டு கட்டி, பிளேட்டை கிளீன் செய்துவிட்டு வந்தாள்.

“என்னக்கா சாப்ட்டிங்களா? அப்போ தோசை வேண்டாமா?”, கேலியாக கேட்டாள்.

“உன் அக்காவை பட்டினி போடுவது நியாயமா?, தர்மமா?, அடுக்குமா?, இது நிலைக்குமா?, வேண்டாம்..... எனக்கு தோசை போட்டுடேன்”, வீராவேசமாக பேசிவிட்டு இறுதியில் கெஞ்சினாள்.

அங்கிருந்த மற்ற சில மாணவிகளும் சேர்ந்து இவள் பேச்சில் சிரித்துவிட்டார்கள். அவர்களின் சிரிப்பில் அசடு

வழியாமல், அனைவருக்கும் ஒரு “ஹாய்” யை பரிசாக்கிவிட்டு சாப்பாட்டை தொடர்ந்தாள். லஷ்மி அவளுக்கு இன்னும் ஒரு தோசை வைத்துவிட்டே அங்கிருந்து அகன்றாள்.

அவள் அகலவும், “லவ் யூ லச்சு.....”, இவள் குரலில் திரும்பியவள், அவள் வார்த்தையில் தலை தெறிக்க ஓடினாள். கொல்லென சிரித்தார்கள் அனைவரும். அங்கே பெரிய ஜக்கில் காபி இருக்க, அதை ஊற்றி குடித்தாள். அங்கிருந்த மற்ற மாணவிகளிடமும் சகஜமாக பேசினாள். இதை பிரமிப்பாக பார்த்துக் கொண்டிருந்தாள் வைஷாலி.

“ஹேய், என்னை லவ் பண்ண போறியா என்ன?”, அவள் கண்முன்பு விரலை நொடித்து, அவள் கனவை கலைத்தாள்.

“ஏ..... ஏ.... அப்படி.....?”,

“அம்மா தாயே, ஏன் அப்படி கேட்டன்னு ஒற்றை வாக்கியத்தை இப்படியா இழுப்ப?, நானே பதில் சொல்லிடுறேன். நீ இனிமேல் பேசுறதுக்கு ரொம்ப ஸ்ட்ரெயின் பண்ணாதே. ஹையோ, எனக்கு இப்படி ஒரு ரூம்மேட்”, சொல்லிவிட்டு தலையிலேயே அடித்துக் கொண்டாள்.

“அர்ச்சனா.....”,

“அட, என் பேரை முழுசா சொல்லிட்டியே?. சரி நான் ஏன் அப்படி கேட்டேன்னு சொல்லிடுறேன். இல்ல....., சாப்பிட கூட செய்யாமல் என்னையவே வெறிச்சு பாத்துட்டு இருந்தியா அதான் கேட்டேன்”, சொல்லிவிட்டு சாப்பாட்டை தொடர்ந்தாள்.

“நான் ஒண்ணும் அப்படி நினைச்சு பாக்கலை”, வேகமாக சொன்னாள்.

“வேற எப்படி நினைத்து பார்த்த? என்னடா இவ எல்லார்ட்டயும் உடனே பேசிடுறாளே, எப்படின்னு நினைச்சு

பாத்தியா?”, வைஷாலி ஆம் என்பதுபோல் தலையை ஆட்ட, “சிம்பிள்.....”, அவள் ஆர்வமாக பார்க்கவும், “வாயாலதான்.....”, சொல்லிவிட்டு அவள் அடிக்கவரும் முன்பு எழுந்து ஓடினாள்.

சாப்பாட்டை முடித்துவிட்டு விடைபெற லஷ்மியை தேடினாள். அங்கே வந்ததோ மரியா. “என்ன பாப்பா சாப்ட்டியா? பிறகு இங்கே என்ன வேடிக்கை?”.

‘சாமி வரம் குடுத்தாலும், பூசாரி விட மாட்டார்ன்னு சொல்லுறது சரியாதான் இருக்கு’, மனதுக்குள் நினைத்தவாறே.

“லஷ்மியை பாக்கணும்”, பேச்சு தொடர்ந்தாலும் பார்வை அவள் வருகிறாளா என்று தொடர்ந்தது.

“அவளை எதுக்கு பாக்கணும். என்ன இப்போவே காக்கா பிடிக்க பாக்குறியா?”, முறைப்பாக கேட்டார்.

‘ஆமா அவளை காக்கா புடிச்சு, கிச்சன்ல இருக்க நெய், பருப்பு, மளிகை சாமான் எல்லாத்தையும், ஆட்டையை போட்டு விக்கலாம்னு பாக்குறேன். இதுவேற நடுவில் வந்து உயிரை வாங்குதே’, நொந்துபோய் அங்கிருந்து கிளம்பிவிட்டாள்.

(அந்த ஹாஸ்டலில், வேலை செய்யும் பிள்ளைகளை காக்கா பிடித்தால், அவர்களுக்கு பிடித்த கூட்டு, குழம்பு எல்லாம் அதிகமாக கொடுப்பார்கள். எனவேதான் மரியா அப்படி சொன்னார்).

அவள் நகர்ந்து செல்லவுமே, “பாப்பா, எல்லோரும் வந்ததுக்கு பிறகு காலையில் ஆறரை மணிக்கு நடக்கும் திருப்பலியில் (mass) கலந்துக்கணும். இப்போ தூங்குற மாதிரி அப்போ தூங்குன....., வார்டன் சிஸ்டர்ட்ட சொல்லி கொடுத்துடுவேன்”, மிரட்டியது மரியா.

‘போட்டுக் கொடுப்பேங்குறத்தை எவ்வளவு டீசண்டா சொல்லுது பாரு’, “சரிங்க மேடம்”, மனதுக்குள் அதை காய்ச்சியவாறே, வெளியில் பவ்யமாக சொல்லிவிட்டு சென்றாள்.

இவளது அடக்கம் உண்மையா என்று மரியாதான் திகைத்து போனது. அறைக்கு வந்து பார்த்தால், வைஷாலி அவளது பொருட்களை கபோடில் அடுக்கி வைத்துக் கொண்டிருந்தாள். அவள் பின்னால் சென்று, அவள் எதிர்பார்க்காத வேளையில் இடுப்பில் கிள்ளிவிட்டு, ஒன்றும் அறியாதவள்போல் படுக்கையில் அமர்ந்து கொண்டாள்.

பயத்தில் துள்ளி விலகியவள், “நீயா.....?, நான் யாரோன்னு பயந்துட்டேன்”, கண்கள் படபடக்க சொன்னாள்.

“என்ன, அண்ணான்னு நினைச்சியா? இந்த ஹாஸ்டலுக்குள் ஆண்கள் அனுமதியில்லை அது தெரியுமா?”, அவளிடம் சொல்லும் பொழுதே, தான் இரவில் எப்படி அறைக்கு வந்தோம் என்பது நினைவில் எழாமல் இம்சை செய்தது.

நேற்று இரவில் பயத்தில் பேட்ரிக்கிடம் தஞ்சம் புகுந்ததுவரைதான் நினைவில் வந்தது. பிறகு நடந்தது எவ்வளவு முயன்றும் ஞாபகப்படுத்த முடியவில்லை. அவனிடம் கேட்கலாம் என்றாலோ ஏதோ ஒரு தயக்கம் அவளை ஆட்கொண்டது.

‘ச்சே....., என்னை பத்தி என்ன நினைத்திருப்பான். அப்படி பசை போட்டமாதிரி ஓட்டிகிட்டு இருந்தேனே. அந்த நேரம் அவன் எப்படி அங்கே வந்தான்? அப்பொழுதுதான் வந்தானா? இல்லையென்றால் வீட்டுக்கு செல்லவே இல்லையா? அப்படி போகலன்னா ஏன் போகலை?

என்னிடம் மன்னிப்பு கேட்கவா? அப்படி மன்னிப்பு கேட்கத்தான் என்றால் அதை அவன் செய்யவே

இல்லையே? ஒரு வேளை..... எனக்காகவா? எனக்காகவென்றால்.....?',

“அர்ச்சனா....., நான் உன்னை கூப்ட்டுட்டே இருக்கேன், என்ன யோசனையில் இருக்க? கீழே உன் பேரை சொல்லி கூப்பிடுறாங்க பாரு?. என்னன்னு பாத்துட்டு வா?”, வைஷு சொல்ல, கீழே மரியாவில் குரல் உச்ச டெசிபலில் கேட்டது.

“என்னை எதுக்கு இந்த மரியா இப்படி ஏலம் போடுது? சரி நான் என்னன்னு பாத்துட்டு வாறேன். நீ திங்க்ஸ் எல்லாம் அடுக்கிட்டு சீக்கிரம் வா”, வைஷுவிடம் சொல்லிவிட்டு, பேட்ரிக்காக இருக்குமோ? அவனை எப்படி எதிர்கொள்ளவென்ற தயக்கத்துடனேயே வந்தாள்.

வெளியே ஒரு பெரியவர், அவளது அப்பாவின் வயதொத்தவர் நின்றுகொண்டிருந்தார். அவர் அருகில் பேட்ரிக்கின் சாயலில் ஒரு பெண்மணி. அவரை பார்க்கவும் தன் தயக்கத்தை உதறிவிட்டு, “ஹாய் ஆன்டி நீங்க பேட்ரிக்கோட அம்மாவா? அப்படியே அவரை மாதிரியே இருக்கீங்க. நீங்கதான் என்னை பார்க்க வந்து இருக்கீங்களா? வாங்க விசிட்டர்ஸ் ரூம்ல உக்காந்து பேசலாம்”, அவர்களை அழைத்தாள்.

“என்னமா உங்க ஆன்டியை மட்டும்தான் கூப்பிடுவியா? என்னை எல்லாம் கூப்பிட மாட்டியா?”, அவர் கேட்கவும்,

“ஹல்லோ அங்கிள் நீங்களும் வாங்க. நீங்களும் ஆன்டியும் வேற வேறையா?, சும்மா வாங்க. பேட்ரிக் குரல் அப்படியே உங்களை மாதிரி”, உற்சாகமாக பேசி அவர்களை அழைத்தாள்.

அறைக்குள் சென்று இருக்கையில் அவளுக்கு பக்கத்துக்கு ஒருவராக இருவரும் அருகில் அமர்ந்தார்கள். “ஆன்டி பேட்ரிக் வரலையா?”, கேட்கவா வேண்டாமா என்ற மன போராட்டத்துக்கு பிறகு கேட்டாள்.

“எங்களோடதாம்மா வந்தான், இப்போ வந்துடுவான். சரி சொல்லு, ஹாஸ்டல் எப்படி இருக்கு, சாப்பாடெல்லாம் பிடிச்சுருக்கா?”, அக்கறையாக விசாரித்தார், பேட்ரிக்கின் அப்பா.

“ரூம் எல்லாம் ஓகே தான் அங்கிள். இன்னும் அவ்வளவா யாரும் வரல்ல. வந்தவங்களும் திரும்ப போய்ட்டாங்க. சாப்பாடு நல்லா இருக்கு”, புதிதாக தயக்கம் அவள் குரலில். அதைவிட அவர் அருகில் அமர்ந்திருப்பது, வாஞ்சையாக விசாரிப்பது, திகைப்பாக இருந்தது.

அவள் தந்தை அவள் அருகில் அமர்ந்ததே இல்லை. சென்னைக்கு பஸ்சில் வரும்பொழுது கூட, தனியாக வந்த ஒரு பெண்மணியை இவள் அருகில் உட்க்கார சொல்லிவிட்டு, வேறு சீட்டுக்கு மாறிக் கொண்டவர். அவளிடம் அவர் பேசுவதே இல்லை. அப்படி இருக்கும்பொழுது பிரான்சீசின் பேச்சு அவளுக்கு வியப்பை அளிக்காமல் என்ன செய்யும்.

“என்னமா, கொஞ்சம் தயக்கமாவே பேசுற? என்னை உன் அப்பாவா நினைச்சுக்கோ”, அவர் வாஞ்சையாக சொல்ல,

“அப்போ நான் உங்ககிட்டே பேசவே மாட்டேன் பரவாயில்லையா?”, விளையாட்டாக சொன்னாலும் அதில் ஒளிந்திருக்கும் வலியை பெரியவர்கள் இருவருமே உணர்ந்தார்கள்.

“என்னமா இப்படி சொல்லிட்ட? அப்போ என்னை உன் ப்ரண்டா நினைச்சுக்கோ”, அவர் அவள் வலியை உணர்ந்து உடனே மாற்றினார்.

“அது இன்னும் ஆபத்தாச்சே. பிறகு உங்களை மரியாதை இல்லாமல் ஒருமையா சொல்லிடுவேன். வேண்டாம் இந்த விஷப்பரீட்சை, சரி சொல்லுங்க, என்னை எதற்காக பார்க்க வந்தீங்க?”, சாதாரணமாகவே கேட்டாள்.

“உன்னோட லோக்கல் கார்டியன் நாங்கதான். சோ உன்னை பார்க்க வந்தோம் ஏன் வரக் கூடாதா?”, அவரும் அதே குரலிலேயே கேட்டார்.

“ஓ..... அப்படியா? எங்க அப்பா அன்னைக்கு சொன்னாங்க. சாரி இங்கே காபி எதுவும் தர முடியாது?”, இன்னுமே அவளுக்கு சந்தேகமாக இருந்தது. சிலநேரம் நேற்று நடந்ததை பேட்ரிக் வீட்டில் சொல்லி இருப்பானோ, அதனால்தான் இவர்கள் பார்க்க வந்திருக்கிறார்களா? என்ற சந்தேகம் எழுந்தது.

“உனக்கு ஏதாவது தேவையென்றால் எங்களிடம் தயங்காமல் கேளு அர்ச்சனா. நான் இங்கேதான் வொர்க் பண்ணுறேன். தினமும் நீ என்னை பார்க்கலாம். இங்கே செகண்ட் சாட்டர்டே, போர்த் சாட்டர்டே லோக்கல் கார்டியன் வீட்டுக்கு போகலாம். நீ தாராளமா எங்க வீட்டுக்கு வரலாம்”, அவளை மறைமுகமாக வீட்டுக்கு அழைத்தார்.

அவள் பதில் சொல்லும் முன்பு, அறைக்குள் நுழைந்தான் பேட்ரிக். அவளை பார்த்து காலை வணக்கம் சொல்லிவிட்டு, தந்தையின் அருகில் சென்று, அவர் தோளில் கை போட்டு அமர்ந்தான். அதை விழி விரிய பார்த்தாள் அர்ச்சனா.

அவளுக்குள் இன்னதென்று புரியாத உணர்வு, “ஏன்ப்பா இவ்வளவு நேரம்?”, அவன் தந்தை பிரான்சீஸ் விசாரித்தார்.

“அது ஒண்ணும் இல்லப்பா, காரை உள்ளே விடமாட்டேன்னு செக்யூரிட்டி சொல்லிட்டார். அதான் காரை வெளியே இடம் பார்த்து பார்க் பண்ணிட்டுவர டைம் ஆயிடுச்சு. சரி அர்ச்சனா என்ன சொல்லுறா?”, கேள்வி அவரிடமும், பார்வை அவளிடமும் இருந்தது.

“எங்களுக்குள் நாங்க ஆயிரம் பேசிப்போம், அதெல்லாம் உன்கிட்டே சொல்ல முடியுமா? உனக்கு ஏதாவது கேட்கவேண்டுமென்றால் அவளிடம் நேரடியா பேசு, ஏன் நடுவில் எங்களை இழுக்குற?”, அவர் கேட்டார்.

“உங்க ரெண்டு பேரையும் நடுவில் நந்தி மாதிரி உக்கார வச்சுட்டு அவகிட்டே நான் என்ன பேசுறது?”, அவரது காதில், அர்ச்சனாவிற்கு கேட்காதவாறு முணுமுணுத்தான்.

ஸ்டெல்லாவிற்கு, பேட்ரிக் கணவனின் காதில் என்ன சொல்லியிருப்பான் என்பது புரிந்ததால், “என்னங்க, அவன் என்ன கேக்கட்டும்னு, உங்ககிட்டே கேட்கிறான் போல”, கேலியாக கேட்டார்.

“ஆமா அம்மாகிட்டே கேட்டு சொல்லுங்கன்னு சொல்லுறான்”, அவரும் விடாமல் வாயடித்தார்.

“அவன் தான் அப்பா புள்ளையாச்சே, அப்படியெல்லாம் சொல்லமாட்டான்”, நொடித்துக் கொண்டார்.

அவர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு ஒருவர் இருந்த நெருக்கத்தை உணர்ந்த அர்ச்சனா, ‘நமக்குமட்டும் ஏன் இப்படி ஒரு அப்பா, அம்மா அமையவில்லை’, என்று எண்ணினாள்.

‘அதுக்கென்னா இவங்களையே அப்பா, அம்மா, அண்ணனா நினைச்சுக்கோ’, மனசாட்சி குரல் கொடுத்தது.

‘ஹேய் என்ன விளையாடுறியா, அதுவும் பேட்ரிக்கை போய் அண்ணனா....., சே... சே....., நினைக்கவே முடியலை. இப்படி தத்து பித்துன்னு உளறுன, கழுத்தை நெரிச்சு கொன்னுடுவேன்’, அதற்கு பதில் கொடுத்தவாறே ஏக்கமாக அவர்கள் உரையாடலை கவனித்தாள்.

தன் ஏக்கம் அவர்களுக்கு புரிந்துவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தாள். ஆனால் பேட்ரிக் அவள் கண்களில் மின்னி மறையும் ஏக்கத்தை கண்டுகொண்டான்.

பகுதி - 8

உனக்கான மொத்த உறவாய்

நானிருக்க, மற்றவரை ஏக்கமாக

நீ பார்ப்பதேன்.

என் தோள் சாய்ந்துகொள்

உன் தந்தையை நான்

என் மடி சாய்ந்துகொள்

உன் அன்னையாய் நான்

என் கை கோர்த்துக்கொள்

உன் சகோதரனாய் நான்.....

ஒரு வாரம் ஓடியதே தெரியவில்லை. ஹாஸ்ட்டல் அறைகள் அனைத்திலும் ஏறக்குறைய பாதிபேராவது வந்துவிட்டார்கள். வகுப்புகள் நடக்கவில்லை, கொஞ்சம் கொஞ்சமாக பிள்ளைகள் வந்துகொண்டுதான் இருந்தார்கள்.

அவர்களில் அனேகம்பேர் அர்ச்சனாவிற்கு தோழிகளாகவும் மாறிவிட்டார்கள். அவளது கலகலப்பு, அவளை சுற்றி ஒரு சிறிய நண்பிகள் கூட்டத்தையே உருவாக்கியது. ஆனால் அதில் ஒருவர் கூட அவள் அறை தோழிகள் இல்லை.

வைஷாலியின் அறை எண் பதினெட்டு. அந்த அறையில் மொத்தம் மூன்று படுக்கைகள் தான். வைஷாலி மட்டுமே தற்பொழுது அங்கே இருந்ததால், அவள் அர்ச்சனாவின் அறையில் வந்து தங்கிக் கொண்டாள்.

ஒரு வாரம் முழுவதும் ஒரே அரட்டைதான். வாய் ஓயாமல் பேசிக் கொண்டே இருந்தாள் அர்ச்சனா. தினமும் பேட்ரிக் வந்தாலும் அவனிடம் இரண்டு மூன்று வார்த்தைகளிலோ, வாக்கியங்களிலோ பேச்சை முடித்துக் கொண்டாள்.

மாலை வேளைகளில் அவன் வந்தால், அவனிடம் தான் பிஸியாக இருப்பதாக சொல்லும் அளவு, வளர்ந்துவிட்டது அவள் நட்பு வட்டம். அவள் அப்படி சொல்லும் வேளையில் அவன் கண்களில் தெரியும் ஏக்கத்தை உணர்ந்தாலும், உணராதவளாக அவனிடம் நடித்தாள்.

அதற்கு ஒரு பெரிய காரணமே இருந்தது. அது அவள்மனம் அவன் பக்கம் சாய்வதே. தன் மனதை கட்டுப்படுத்தவேண்டும் என்று எண்ணினாலும், அது முடியாமல் போனது. பார்த்து ஒருவாரமே ஆன அவனை தன் மனம் இவ்வளவு நாடுவதை கண்டு அவளுக்கு வியப்புதான்.

அவன் அருகில் இருந்தால், வேறு சிந்தைகள் எதுவும் எழுவதே இல்லை. அவள் வீட்டினரின் நினைவு அவளுக்கு அவ்வளவாக இல்லை என்றுகூட சொல்லலாம். இத்தனைக்கும் அவள் பிறந்ததுமுதல் இதுவரை வீட்டை விட்டு விலகி இருந்ததே இல்லை.

அப்படி இருந்தபொழுது கூட, வீட்டினரை அவள் தேடவே இல்லை. தாயின் நினைவு மட்டும் சில வேளைகளில் எழும். இருபத்தி மூன்று வருடம் உடன் இருந்த பெற்றோரை நாடாமல், மூன்று நாள் பழகிய பேட்ரிக்கை தன் மனம் இவ்வளவு நாடுவதை வியப்பாய் உணர்ந்தாள். அதிலும் கடந்த ஆறு மாதங்களாக தாய் தனக்கு நல்ல தோழியாக இருக்க முயற்சி செய்வதை உணர்ந்தவாயிற்றே.

ஆம் அவள் தாய் கடந்த ஆறுமாதங்களாகத்தான் அர்ச்சனாவிடம் கொஞ்சம் மனம் விட்டு பேசுகிறார். அதுவரை சமைத்து வைத்திருக்கிறேன் சாப்பிடு, இல்லையா படுத்துக்கொள், படித்தால் படி, இல்லையா

பேசாமல் இரு, என்னமோ வீட்டில் இருக்கும் ஒரு பொருட்களுடன் அர்ச்சனா என்பவளும் ஒருத்தி, அந்த நிலையிலேயே இருந்தார்.

இயல்பிலேயே அர்ச்சனா நல்லவற்றையும், கெட்டவற்றையும் உணர்ந்து அவளாகவே செயல்பட்டதால், தாயின் கண்டிப்பை கூட அவர் அவளுக்கு உணர்த்தியது இல்லை. பெண்மையின் முக்கிய தேவைகளின்போழுது கூட தாய் அவளுடன் இருந்தது இல்லை.

மனம் முழுக்க அந்த குறை அர்ச்சனாவிற்கு இருந்தாலும், எதையுமே அவள் கண்டுகொள்வது கிடையாது. தந்தையின் குணம் அப்படியே....., என்று தாய் பொருமுவது அவளுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லைதான்.

முதல் முறையாக அர்ச்சனாவிற்கு ஆறுமாதங்களுக்கு முன்னர், அவள் முதுகலை படிப்பை முடிக்க இன்னும் ஒரு செமஸ்டர் தான் இருக்கிறது என்ற நிலையில், வரன் பார்க்க துவங்கிய வேளையில்தான் தன் தாயிடம், முதல் முறையாக தன் கோபத்தை காண்பித்தாள்.

அந்த நேரம்தான் அவள் தாயும் தன் தவறை உணர்ந்தார். அவ்வளவு நாளும் தன்னை ஒரு நல்ல தாயாக நினைத்துக் கொண்டிருந்தவர், அர்ச்சனாவின் கேள்வியிலும், குற்றச்சாட்டிலும் வாயடைத்துப் போனார்.

அந்தநாள் இன்று கூட அர்ச்சனாவிற்கு மறக்கவில்லை. அன்று தன்னை பெண்பார்க்க வருவதாக சொன்னவுடன், தாயை கூர்மையாக ஒரு பார்வை பார்த்தாள். அவள் பார்வையின் அர்த்தம் புரியாமல் அவளிடம் என்னவென்று கேட்டார்.

“அம்மா நிஜம்மாவே நீதான் என்னை பெத்தியாம்மா?”, தன் மகளிடமிருந்து எந்த வார்த்தையை எதிர்பார்த்திருந்தாலும், இப்படி ஒரு கேள்வியை எதிர்பார்க்கவே இல்லை.

“என்னடி இப்படி கேட்டுட்ட?”, அதிர்ச்சி விலகாமலே கேட்டார்.

“என்னை மன்னிச்சுடும்மா. உன்கிட்டே எதையுமே கேட்கக் கூடாதுன்னுதான் நினைத்தேன், ஆனா முடியலை. நான் கேட்கும் ஏதாவது ஒரு கேள்விக்காவது பதில் சொல்லிடு, நான் உன்னை என் தாய்ன்னு ஒத்துக்கறேன்”, விவரம் தெரிந்ததுமுதல் தன் மனதை அரிக்கும் விஷயத்தை கேட்க தயாரானாள்.

மேரியோ மகள் அப்படி என்ன கேட்டுவிடப் போகிறாள் என்ற அசட்டையான நினைப்புடன் நின்று கொண்டிருந்தார்.

“எனக்கு கடைசியா எப்போ சாப்பாடு ஊட்டிவிட்டன்னு ஞாபகம் இருக்காம்மா?” என் ஸ்கூல் பெற்றோர் ஆசிரியர் மீட்டிங் எப்போன்னு தெரியுமா? எதுக்காவது வந்து இருக்கியா? ஒவ்வொரு ஸ்கூல் டேயிலும் நான் வாங்குற பரிசுகளை பத்தி உனக்கு தெரியுமா?

அங்கே என்ன நிகழ்ச்சிகளில் கலந்துகிட்டு இருக்கேன்னு உனக்கு தெரியுமா? முதல் வரிசையில் நீ என்னோட எல்லா நிகழ்ச்சியும் பாக்கணும்னு நான் ஏங்கி இருக்கேன்னு உனக்கு தெரியுமா? இல்லமா உனக்கு தெரியாது”, தன் விழியில் வழிந்த கண்ணீரை சுண்டி எறிந்தாள்.

“என்னது நீ பரிசு வாங்கி இருக்கியா.....?”, அவர் குரலில் அப்பட்டமான அதிர்ச்சி.

ஒரு கேலி புன்னகையை உதட்டில் தவழவிட்டு சொன்னாள்....., “உங்களால் வந்து பாக்க முடியாது....., ஆனால் நான் மட்டும் வாங்கிட்டு வந்து உன்கிட்டே காட்டணுமா? அதெல்லாத்தையும் அப்போவே குப்பை கூடைக்கு அனுப்பிட்டுதான் வீட்டுக்கு வருவேன்.

“இதெல்லாம் உன் பாஷையில் உப்புபெறாத விஷயாமாவே இருக்கட்டும்.....,நான் எப்போ வயசுக்கு வந்தேன்?,

அதெப்படி உனக்கு தெரியும்.....?", கூர்மையாக வந்து விழுந்தன வார்த்தைகள்.

"என்னடி இப்படி கேக்குற, நான்தான் எதேச்சையா பாத்து தெரிஞ்சுகிட்டேன்", புரியாமலே சொன்னார்.

"அப்போ நான் எத்தனாம் வகுப்பு படிச்சுட்டு இருந்தேன்னு சொல்ல முடியுமா?".

"என்னடி என்னமோ அடுத்தவீட்டுக்காறியை விசாரிக்கிற மாதிரி விசாரிக்கிற".

"நான் கேட்டதுக்கு பதில் சொல்லு", அர்ச்சனா விடவில்லை.

"உன்னோட பத்தாம்வகுப்பு பரீட்ச்சை முடிந்த லீவில் தான் நீ பெரியமனுஷி ஆன", இதெல்லாம் பெரிய விஷயமா, என்ற தோரணையில் அவர் பதில் இருந்தது.

"இதுதாம்மா நீ என்னை கவனித்த லட்சணம். நான் பத்தாம் வகுப்பு பரீட்சை துவங்கும் முன்பே, வயசுக்கு வந்துட்டேன். அது தெரியுமா உனக்கு?. நீ அதை கண்டு புடிச்சது மூணு மாசம் கழிச்சுதான். இதிலேயே தெரியுதா உன் கவனிப்பு".

"ஏண்டி....., உனக்குத்தானே முதல்ல தெரியும்?. நீதான் வந்து சொல்லி இருக்கணும். அதை விட்டுட்டு என்னை குத்தம் சொல்லுற?", தாயின் கடமை தவறியதை கூட உணராமல், காட்டமாக கேட்டார்.

"ஆமாம்மா, நான்தான் சொல்லி இருக்கணும். சொன்னேன்....., ஆனா அதை கேட்க நீதான் இங்கே இல்லாம போய்ட்ட. அப்போ கூட போன் போட்டு, அம்மா வீட்டுக்கு வாம்மா, உன்கிட்டே முக்கியமான விஷயம் சொல்லணும்னு கூப்ட்டேன்.

அதுக்கு நீ என்ன சொன்ன தெரியுமா? தலை போகும் அவசரமா இருந்தாலும் வர முடியாதுன்னு சொன்ன.

என்னோட அழுகை, கெஞ்சல் எதுவுமே உன்னை என்கிட்டே கொண்டு வரவே இல்லம்மா.

அந்த முதல் நாலுநாள் நான் இந்த வீட்டில் தனிமையில் எப்படி தவிச்சேன் தெரியுமா?. சரி அதை கூட நான் மறந்துடுறேன்....., ஒரு வாரம் கழிச்சு வீட்டுக்கு வந்தியே, என்னன்னு ஒரு வார்த்தை என்கிட்டே கேட்டியா?. அப்போ வந்துதுமா இந்த சந்தேகம். ஆனா நான் உன்கிட்டே கேக்கலை.

ஏன் தெரியுமா? உன்கிட்டே கேட்டுதான் எனக்கு உன் கவனிப்பு கிடைக்கும்னா எனக்கு அது வேண்டாம். உன் பாசமும் எனக்கு வேண்டாம்னு முடிவு பண்ணிட்டேன்", அழுகை முட்டிய கண்களை இமைத்து மூடி அழுகையை கட்டுப் படுத்தினாள்.

பதில் சொல்லமுடியாமல் ஊமையானார் மேரி.

"நான் பத்தாம் வகுப்பில் எவ்வளவு மார்க் வாங்கினேன் சொல்லு?", கேள்விகள் தொடர்ந்தன.

".....".

"ஓகே அது ரொம்ப வருஷம் ஆயிடுச்சு, அதனால் வேண்டாம். பன்னிரண்டாம் வகுப்பில் எத்தனை மார்க் வாங்கினேன்?".

".....".

"அதுவும் வேண்டாம்....., நான் இப்போ காலேஜ்ல என்ன குரூப் எடுத்திருக்கிறேன், என் ப்ரண்ட்ஸ் யாரு? நான் யாரோட இந்த ஊரில் பேசுவேன், இப்படி ஏதாவது ஒரு கேள்விக்கு பதில் சொல்லும்மா. முடியலல்ல ஒரு கேள்விக்கு கூட பதில் தெரியல இல்ல, இப்படி என் வாழ்க்கையில் எந்த ஒரு சின்ன விஷயத்தில் கூட அக்கறையே இல்லாத நீ....., இப்போ எனக்கு

எதிர்கால வாழ்க்கையவே அமைத்து தாறேன்னு சொல்லுறியே....., உனக்கே இது நியாயமா இருக்கா?.

அதைவிட எந்த நம்பிக்கையில் அந்த மாப்பிள்ளைக்கு நான் என் கழுத்தை நீட்ட. இந்த வீட்டில் இருந்து இன்னொரு வீட்டுக்கு என்னை தள்ளிவிட பார்க்கிறாய் அவ்வளவு தானே. இப்போ சொல்லுறேன் கேட்டுக்கோ....., எனக்கு மாப்பிள்ளை பார்ப்பது இதுதான் கடைசி.

இன்னொரு முறை இப்படி ஒரு அபத்தத்தை செய்தால்....., நான் சொல்லமாட்டேன் செய்வேன். இதற்குமுன்பு எப்படி விலகி இருந்தியோ, அப்படி விலகியே இரு", கையை நீட்டி எச்சரித்துவிட்டு சென்றுவிட்டாள்.

மேரி அங்கேயே சிலையென சமைந்து நின்றுவிட்டார். எண்ணம் முழுக்க அர்ச்சனா வீசிவிட்டு சென்ற கேள்வியை சுற்றிவந்தது. அதிலும், "என்னை நீதான் பெற்றாயா?" என்ற கேள்வி அவரை வெகுவாக பாதித்தது.

ஒரு தாயாக எந்த தாயுமே கேட்க விரும்பாத, கேட்க கூடாத கேள்வி அது. தன் மகள் எவ்வளவு நொந்து போயிருந்தால் இப்படி நடந்திருப்பாள். உன்னை நம்பி எப்படி என் வாழ்க்கையை ஒப்படைக்க என்று கேட்டுவிட்டாளே. கண்கள் கலங்கியது அவருக்கு.

நாள் முழுக்க குறும்பு புன்னகையுடன், நட்பு வட்டத்துடன் கேலியும் கிண்டலுமாக வலம் வரும் தன் மகளின் அடி ஆழத்தில் அமிழ்ந்திருக்கும் வலியை, ஏமாற்றத்தை முதல் முறையாக புரிந்துகொள்ள முயன்றார்.

தன் மகள் பொறுப்பில்லாதவள், எதையும் பொறுப்பாக செய்ய மாட்டாள், விளையாட்டு குணம் அதிகம், இப்படி தான் நினைத்திருக்க, இவையெல்லாம் அவளை அவளே ஏமாற்றிக்கொள்ள போட்ட வேடமாக அவருக்கு புரிந்தது.

எங்கே தவறுசெய்தேன்? என்று சிந்தித்தார். பெரியவர்கள் பார்த்துவைத்த திருமணம்தான். பெரிய வசதியான வீட்டுப்

பெண் மேரி. கவலைஎன்றால் என்னவென்றே தெரியாமல் வளர்ந்தவர். ஆனால் அர்ச்சனாவின் தந்தை வீட்டில், தான் பெரிய பணக்காரர் என்று பொய்சொல்லி ஏமாற்றி திருமணம் முடித்ததை, புகுந்த வீட்டுக்கு வந்த பிறகுதான் உணர்ந்தார்.

அந்த நொடிமுதல் அவர் மனதில் விழுந்த அடி, அர்ச்சனாவின் தந்தையுடன் மனமொத்து வாழ அனுமதிக்கவில்லை. அதற்கு கிறிஸ்டோபரின் குணமும் ஒத்துழைக்கவில்லை என்பதே பெரிய உண்மை.

வறுமையிலே வாழ்ந்து, வளர்ந்து, எட்டு உடன்பிறந்தவர்களுள் மூத்தவராக, பொறுப்பற்ற தந்தைக்கும், வாயில்லா பூச்சி அம்மாவுக்கும் பிறந்து, எந்த வித சுகங்களையும் தெரியாமல் வளர்ந்தவர். பேச்சு என்பதே அவருக்கு தெரியாது. எப்பொழுதும் ஒரு இறுக்கம்.

முகத்தில் சதா தவழும் கடுமை, சிரிப்பை தொலைத்த முகம். படிப்பு மட்டுமே அவரது உயிர் மூச்சாக இருந்தது. பள்ளியில் நோட்டு புத்தகம் கூட வாங்க முடியாமல், பக்கத்தில் இருக்கும் மாணவர்களின் புத்தகங்களை வாங்கி படித்து முன்னேறியவர். தாய் ஊர் பெரியவர்களின் காலில் விழாத குறையாக, அவரது படிப்புக்கு உதவி பெற்று படிக்க வைத்தார்.

இளமையிலேயே ஏற்பட்ட ஒரு தாழ்வு மனப்பான்மை அவரை அவருக்குள்ளே இறுக வைத்தது. பணம் , பணம், பணம் மட்டுமே பிரதானம் என்பதில் வெறியாகி, அதை இப்பொழுது தேவைக்கு அதிகமாகவே பெற்றிருப்பவர்.

அவர் பணத்தின் பின்னால் ஓட, இவன் பிள்ளைகளை வளர்க்க நான் என்ன வேலைக்காரியா? என்று மேரியின் மூளையில் உதித்த தேவையற்ற வினா, பிள்ளைகளின்மேல் கூட பாசத்தை வளர்க்க விடவில்லை. கணவன்மேல் இருந்த பாராமுகத்தை பிள்ளைகளிடமும் காண்பித்தார்.

இங்கே வசதியற்ற வேளைகளில் பிள்ளைகளை விட்டுவிட்டு தாய்வீட்டில் சீராட செல்லும் பழக்கம், பிள்ளைகள் வளர்ந்த பிறகும் போகவில்லை அவருக்கு. அந்த நேரங்களில் கிறிஸ்டோபர் தான் குழந்தைகளை கவனிப்பார்.

கவனிப்பார் என்று சொல்வதை விட மிரட்டி, உருட்டி, கொம்பை வைத்து அடித்து பிள்ளைகளை பள்ளிக்கு அவர்களையே கிளம்ப வைப்பார். மூன்றாம் வகுப்பு படிக்கும் பொழுதே அர்ச்சனா தன் தேவையை தானே செய்து கொள்வாள். இரட்டை ஜடை கூட அவளாகவே போட்டுக் கொள்வாள்.

வீட்டில் கிறிஸ்டோபர் இருக்கும் வேளைகளில் குண்டூசி விழும் ஓசை கூட கேட்கக்கூடாது. மீறி கேட்டால் பிள்ளைகளுக்குத்தான் அடி விழும். அர்ச்சனாவும், ஜாணும் கூட பயந்து பயந்துதான் பேசுவார்கள்.

இதனால் அவர்களுக்குள்ளும் ஒட்டுதல் இல்லாமல் போனது. இந்த நிலை கொஞ்சம் மாறியதென்றால், அது அர்ச்சனா இளங்கலை இயற்பியல் சேர்ந்த பிறகுதான். அவளை கல்லூரியில் சேர்க்க யாரும் செல்லவில்லை. அவளாகவே சென்று பார்ம் வாங்கி, தன் பெரியப்பா மகன் அங்கே வேலை பார்த்ததால், அவன் கையொப்பத்துடன் கல்லூரியில் சேர்ந்து விட்டாள்.

கல்லூரியில் கட்ட பணம் வேண்டுமென்று, அப்பாவின் மூக்கு கண்ணாடியின் அடியில் ஒரு துண்டு சீட்டில் எழுதி வைத்திருந்தாள், அவள் கேட்ட பணம் அடுத்தநாள் அங்கே இருந்தது. இப்படித்தான் அவள் கல்லூரி வாழ்க்கை முழுவதும் சென்றது.

மேரியின் மனம் முழுக்க பயம் பரவியது. தானும் தன் கணவனும் வாழும் முறையைப் பார்த்து, தன் மகள் திருமணமே வேண்டாம் என்று சொல்லிவிடுவாளோ என்று. அவர் பயத்தை உண்மையாக்கினாள் அர்ச்சனா.

பெண்பார்க்க வருவதாக சொல்லி விட்டவர்களை, வரவேண்டாம் என்று சொல்லமுடியாது என்று அவள் அப்பா உறுதியாக சொல்லிவிடவே, அர்ச்சனாவை கெஞ்சி கூத்தாடி ஒரு சாதாரண பட்டுப் புடவையை கட்ட வைத்தார் மேரி.

காபியை கொண்டுபோய் கொடுக்க சொன்னதற்கு முடியவே முடியாது என்று ஒற்றை காலில் நின்றாள். அந்த நேரம் எதுவும் செய்ய முடியாமல் கையை பிசைந்தார் மேரி. அங்கே அவர்களோடு பேசிக் கொண்டிருந்த கிறிஸ்டோபர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. அதை அடக்கியவாறே அவர்களோடு பேசிக் கொண்டிருந்தார்.

இறுதியில், “அவளை அழைச்சுட்டு வா”, வெளியே அது ஒரு சாதாரண வார்த்தையாக இருந்தாலும், பேச்சை அளந்து பேசும் அவரது பாஷையில் அது கட்டளையே என்பது மேரிக்கு தெரியும்.

அர்ச்சனாவை வலுக்கட்டாயமாக அழைத்துக்கொண்டுபோய் அவர்கள் முன்னால் நிறுத்தினார். யாருக்கு வந்த விருந்தோ என்பதுபோல், தெய், தெய் என்று நடந்து, அங்கே சென்று நின்றாள். அவள் நடையிலும், நின்ற தோரணையிலும், வந்தவர்கள் சொல்லாமல் எழுந்து சென்று விட்டார்கள்.

அவர்கள் செல்லவும் கிறிஸ்டோபர் அர்ச்சனாவை அடிக்க கையை ஓங்கினார். அவருக்கு குறுக்கே சென்று மறித்தார் மேரி. இருவரையும் முறைத்து பார்த்துவிட்டு சென்றுவிட்டார்.

“ஏன் அர்ச்சனா இப்படி செய்யிற? உனக்கு எப்படியும் வாழ்க்கையில் திருமணம் அவசியம் தானே. உன் அப்பா கண்டிப்பாக ஒரு நல்ல வரனைத்தான் பார்ப்பார்.....”,

“ஆமா ரொம்ப நல்ல வரனைத்தான் பார்ப்பார். இப்போ வந்துட்டு போனானே அவனுக்கு என்ன வேலை தெரியுமா? பைனான்ஸ் கம்பெனி வைத்திருக்கிறானாம். இது நான்

டீசண்டா சொன்னது. கொச்சையா சொல்லுறதுன்னா, ப்ளேடு வட்டிக்கு கொடுக்குறவன். உன் வீட்டுக்காரருக்கு பணம் மட்டுமே பிரதானம்.

அது எந்த காலத்திலும் மாறாது. இப்பவும் சொல்லுறேன் எனக்கு நீங்க மாப்பிள்ளை பார்க்க வேண்டாம், நானே பாத்துக்கறேன்", தலையில் இருந்த பூவை ஹாலிலேயே விசிறியடித்துவிட்டு சென்றுவிட்டாள்.

அர்ச்சனாவின் முடிவு கிறிஸ்டோபர்க்கு தெரியாதாகையால், அடுத்த வாரத்திலேயே இன்னொரு வரனுடன் வந்தார். வீட்டில் கலந்தாலோசிப்பது எதுவும் இல்லை. கட்டளை மட்டுமே. "நாளைக்கு இன்னொரு வரன் வாறாங்க, அவளை தயார் பண்ணு", அன்றைய பொழுது முழுவதிலும் அவர் பேசிய அதிகபட்ச வார்த்தை அதுவே.

அன்றைய நாளும் அதே போராட்டம். ஆனால் சொன்ன நிலைதான் மாறி இருந்தது. மேரியின் மடியில் படுத்திருந்து கேட்டுக் கொண்டிருந்தாள் அர்ச்சனா. மேரி இப்பொழுது, அர்ச்சனா வீட்டில் இருந்தால், அவளை தனியாக விடுவதில்லை.

கல்லூரி முடிந்து வந்ததுமுதல், அவள் படிக்கும் வேளையில் கூட அவளுடனே இருந்தார். "அம்மா நீ இப்படி என்னோடவே இருந்துட்டால் மட்டும், உன்மேல் எனக்கு பாசம் வராதும்மா", அவர் நெஞ்சில் அவ்வப்பொழுது சொல்லம்புகளை எறிவாள்.

ஆனால் அது மனதில் தைத்தாலும், சிரித்த முகமாக, நடுங்கும் கைகளால் அவள் தலையை கோதுவார். "உன் பாசத்தை எதிர்பார்த்து அம்மா இதை செய்யலடா. எனக்கு என் பொண்ணோட இருக்கணும். இன்னும் நீ இங்கே ஒரு இரண்டு வருஷம் இருப்பியா? அந்த இரண்டு வருடமும் நான் என் பொண்ணோட இருந்து என் ஆசையை தீத்துக்கறேன்", கலங்கும் தன் கண்களை அவளுக்கு காட்டாமல் மறைப்பார்.

“புல்லரிக்குது போம்மா”, கேலி செய்வாள் அவர் பேச்சை.

அன்று அவளை பார்க்க வந்த வரனுக்கு, தானே சென்று காபி கொடுத்தாள். ஆனால் அவனை பார்த்த பார்வையில் அவனுக்கு அடி வயிற்றில் கலகமே மூண்டது. “நீங்க எந்த பைனான்ஸ் வச்சு இருக்கீங்க?”, அவள் கேள்வியின் தொனியே அவனுக்கு சுத்தமாக பிடிக்கவில்லை.

அந்த வரன் அப்படி போனது. அவள் அப்பா அன்றே சொல்லிவிட்டார், “இவளுக்கு நான் மாப்பிள்ளை பார்த்தது இதுதான் கடைசி”, அவர் எடுக்கும் முடிவை அப்படியே நிறைவேற்றுவார் என்பது மேரிக்கு தெரியும், அவருக்கு அடுத்த பிரளையம் மனதில் ஏற்பட்டது.

“நான் சொல்லுவதையும் நீங்க கேட்டுக்கோங்க, இதுக்கும் மேல ஏதாவது ஒருத்தன் என்னை பார்க்க வந்தாலும்....., அடுத்த நாள் நான் கன்னியர் மடத்துக்கு கிளம்பி விடுவேன்”, முதல் முறையாக தந்தையை எதிர்த்து பேசிவிட்டு சென்றுவிட்டாள்.

அவள் சொன்ன தோரணையே செய்து முடிப்பேன் என்பதை சொன்னது. மேரிக்கு உலகமே தலைகீழாக சுற்றியது. மகள் வாழ்க்கையை நேராக்க என்ன செய்யப் போகிறோம் என்ற வினா அவரின் முன் பூதாகரமாக பயமுறுத்தியது.

தந்தை மகளுக்குக்கு இடையில் அல்லாடினார் அவர்.

பகுதி - 9

என்னை சுற்றி ஆயிரம்பேர் இருந்தாலும்

தனிமையை உணரும் நான்

உனது ஒற்றை நினைப்பில்

நந்தவனத்தின் நடுவில் இருக்கின்றேன்.....

அதன் பிறகு நடந்தவை எதுவும் அர்ச்சனாவிற்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. மேரி அர்ச்சனாவை திருமணத்துக்கு சம்மதிக்கவைக்க எடுத்த அனைத்து முயற்சிகளும் தோல்வியையே தழுவின. அதைவிட தாயிடமும் குறும்பு பேச்சை தொடரவே அவரால் அதற்குமேல் கட்டாயப்படுத்த முடியவில்லை.

கட்டாயப்படுத்த முடியவில்லை என்பதைவிட, முயலவில்லை என்பதுதான் சரியாக இருக்கும். எங்கே தான் மிகவும் கட்டாயப் படுத்தினால் தன்னிடம் பேசாமலே போய்விடுவாளோ என்ற பயமும் அதற்கு ஒரு காரணம்.

வழக்கம்போல் கல்லூரிக்கு சென்று வந்தாள். கல்லூரியில் அவளது அடாவடிகள் தொடர்ந்தது. வகுப்பில் ஆண்பிள்ளைக்கு சரியாக ஆசிரியர்களை கேலி செய்வாள். அதில் அவளது பட்டப் படிப்பே கேள்விக்குறியாகிப் போனது.

அவள் அதைப்பற்றி கவலையே படவில்லை. செய்முறை தேர்வுகள் நடந்துகொண்டிருந்தது. அன்று அவளுக்கு கடைசி செய்முறை தேர்வு. செய்முறை தேர்வுக்கு சென்றவள், போன அரைமணி நேரத்தில் வீட்டில் இருந்தாள்.

முன்பிருந்த மேரியாக இருந்தால் எதையும் கண்டுகொண்டிருக்க மாட்டார். இப்பொழுது இருப்பது புது

மேரியாயிற்றே, ஹாலில் அர்ச்சனா கண்களை மூடி அமர்ந்திருப்பது பார்வையில் விழுந்தது.

“அர்ச்சனா....., என்ன எக்ஸாம் கேன்சல் ஆயிடுச்சா?”, அப்படி இருக்காது என்று தெரிந்தே கேட்டார்.

“நான் கேன்சல் பண்ணிட்டேன்”, அசால்ட்டாக சொன்னாலும், அவளுக்கும் வருத்தம்தான் என்பதை புரிந்துகொண்டார்.

“என்ன ஆச்சு அர்ச்சனா? என்னன்னு சொன்னால்தானே புரியும்?”, அருகில் அமர்ந்து அவள் கையை எடுத்து தன் கைக்குள் பொதிந்து கொண்டார்.

“இன்னைக்கு எக்ஸாம்க்கு, எக்ஸ்டெர்னல் எக்ஸாமினர் வரலை, அந்த....., குறைகுடம் தான் வந்தது. வந்தது நேர என்கிட்டே வந்து இன்னைக்கு நீ என்னதான் பெர்பெக்டடா செஞ்சாலும் பத்து மார்க்குக்கு மேல போடமாட்டேன்னு சொல்லுது. அவன் என்ன எனக்கு மார்க் போடுறது? பேப்பரை அப்படியே வச்சுட்டு வந்துட்டேன்”, பொருமினாள்.

“குறைகுடம்....., நீ யாரை சொல்லுற?”, அவருக்கு புரியவே இல்லை.

“அம்மா எனக்கு கிளாஸ் எடுக்குறதுலையே..... ரொம்ப கேவலமா கிளாஸ் எடுக்குறது அவர்தான். ஆனா என்னமோ எல்லாம் தெரிஞ்ச மாதிரி பில்டப் பண்ணுவார். நான் அதை கண்டுக்காம என் பாட்டுக்கு கிளாஸ்ல, என் ப்ரண்ட்ஸ்ட்ட பேசிட்டு இருப்பேன்.

என்கிட்டே கேள்வி கேட்பார், எனக்கு பதில் தெரிந்தாலும் சொல்லமாட்டேன். அது அவருக்கு கோபம்னு நினைக்கிறேன். இதில் கோபப்பட என்ன இருக்கு? அவர் வேலையை அவர் பாக்கணும், என் வேலையை நான் பார்ப்பேன்.

இப்போ என்மேல் உள்ள கோபத்தில்தான் இப்படி செஞ்சுட்டார். சரி விடுங்க, அவனா நானான்னு பாத்துக்கலாம்", தன் டிகிரி பாழாகியதைப் பற்றிய வருத்தம் சிறிதும் இல்லாமல் பேசினாள்.

"அர்ச்சனா, நீ எக்ஸாமையாவது முடிச்சுட்டு வந்து இருக்கலாமே?", தன்மையாக கேட்டார்.

"லூசாம்மா நீ? பத்து மார்க்குக்கு, ஆப்சென்ட் என்று இருப்பது எவ்வளவோ பரவாயில்லை. இது தெரியாமல்?", அவருக்கு ஒன்றுமே புரியாததைப்போல் எரிச்சலாக பதில் சொன்னாள்.

"ஒரு டீச்சர் அப்படி இருக்க மாட்டாங்கம்மா. நீ உன் பரீட்சையை முடிக்காமல் வந்தது தப்பு", அவளுக்கு புரியவைக்க முயன்றார்.

"என்னது டீச்சரா? அம்மா அது ப்ரொபசர்", என்னமோ அதுதான் அப்பொழுது முக்கியம் என்பதுபோல் பேசினாள். மேரிக்கு அடுத்த கவலை துவங்கியது. எதையுமே நொடியில் எடுத்தோம் கவிழ்த்தோம் என்று செய்யும் இவளை என்ன செய்ய என்பதுதான்.

செய்த தவறு அனைத்தையும் தான் செய்துவிட்டு அவளை குறை சொல்வது சரியில்லை என்று தன்னையே தேற்றிக் கொண்டார். தாயின் கவலையை உணர்ந்து, "ஹையோ அம்மா விடு விடு, நெக்ஸ்ட் பேட்ச் கூட சேர்ந்து முடிச்சுக்கறேன். அதுக்கு எதுக்கு நீ இவ்வளவு பீல் பண்ணுற?

காலையில் எக்ஸாம் போற அவசரத்தில் சரியா சாப்பிடலை, வந்து சாப்பாடு போடு", சொல்லிவிட்டு எழுந்து அறைக்கு சென்றுவிட்டார்.

மேரி இப்பொழுது கடவுளே துணை என்று மாறிவிட்டார். கணவனிடம் பேசவே முடியாது என்பது தெரிந்த விஷயம். மகளிடம் சொல்லி புரியவைக்க முடியாது என்பதும் புரிந்து

போனது. அவள் எதையும் சீரியஸாக எடுக்கவில்லை. டிஷ்டிங்க்சனில் மதிப்பெண் வைத்திருப்பவள், செய்முறை தேர்வை புறக்கணித்துவிட்டு வந்திருப்பதிலேயே அவளது மனநிலை அவருக்கு புரிந்தது.

அதன் பிறகு ஒரு மாதத்தில் அர்ச்சனாவின் எக்ஸாம் முடிந்தது. அவளையும் அழைத்துக்கொண்டு, மேரிக்கு மிகவும் நம்பிக்கையான மணப்பாடு ஆலயத்திற்கு கிளம்பிவிட்டார். ஆயிரம் முணுமுணுப்புகளுக்கு இடையில் அவரோடு செல்ல சம்மதித்தாள் அர்ச்சனா.

திருச்சிலுவை ஆலயத்தின் அமைதியில் தன்னை மறந்து மகளுக்காக உருகி வேண்டினார் அவர். ஆலயத்துக்கு உள்ளே வந்த அர்ச்சனாவோ, “ஹாய் ஜீசஸ்....., நலமா? நான் உன்னை பாத்து ரொம்ப நாள் ஆச்சு இல்ல? நீ என்னை மறந்துடக் கூடாதேன்னுதான் பார்க்க வந்தேன். நாம பிறகு தனியா பேசிக்கலாம். அம்மா வேண்டுதல் நம்மால் கெட வேண்டாம்”, என்னமோ பிரிந்த நண்பனை, புதிதாக நலம் விசாரிப்பவள்போல் யேசுவிடம் பேசிவிட்டு அமர்ந்துகொண்டாள்.

அவள் செய்கையை ரசித்து பார்த்துக் கொண்டிருந்தன இரு விழிகள். சின்ன சிரிப்புடன் அவள் செய்யும் செயல்களை தொடர்ந்தன அவர் விழிகள். அதைவிட அவள் அருகில் சென்றுகொண்டிருந்த, அவள் தாயை பார்த்தவுடன் அவரது புருவங்கள் யோசனைக்கு அறிகுறியாக சுருங்கியது.

பின்னர் கண்டுகொண்டது சரிதானா என்பதை தெரிந்துகொள்ள அவரை நெருங்கினார். “நீ..... நீ..... மேரி தானே?”, கொஞ்சம் சந்தோசமும், எதிர் பார்ப்புமாக கேட்டார்.

“ஆமா..... நீங்க யாருன்னு தெரியலையே?”, தயக்கமாக பதில் சொன்னார்.

தாய் பின்தங்கியத்தை அறியாமல் தங்கள் காருக்கு சென்றுவிட்டாள் அர்ச்சனா. ‘இந்த அம்மாவுக்கு பெரிய

பக்தி பழம்னு நினைப்பு, வர வர சர்ச்லையே குடும்பம் நடத்தும் போல. இது வேண்டுற வேண்டலில், ஏசுநாதர் சிலுவையில் இருந்து தெறிச்சு ஓடாமல் இருந்தால் சரிதான்', தன் நினைப்பில் அவளுக்கு சிரிப்பு வந்தாலும், மனதுக்குள் தாயை திட்டிக் கொண்டே, கடற்கரையோரம் நடக்க துவங்கினாள்.

"மேரி நான்தான் ஸ்டெல்லா. உன்னோடு ஒன்றாம் வகுப்புமுதல் பன்னிரண்டாம் வகுப்புவரை படித்தேனே?", அவருக்கு ஞாபகப் படுத்த முயன்றார்.

"அட ஸ்டெல்லாவா நீ? ஆளே அடையாளம் தெரியாமல் மாறிட்ட. உன் வீடு இங்கேதானா?", நலம் விசாரிப்பு துவங்கியது.

இங்கே கிட்டத்தட்ட பதினைந்து வருடம் கழித்து சந்தித்த தோழிகள் இருவரும், தங்கள் குடும்பங்களைப் பற்றி நலம் விசாரித்துக் கொண்டார்கள். பேச்சு அப்படியே அவர்களின், படிப்பு, வயது, திருமணம் இப்படி திரும்பியது.

"மேரி உன்னோடு இருந்தாளே, அவ உன்னோட பொண்ணா?", ஆர்வமாக கேட்டார்.

"ஆமா அவ என் பொண்ணுதான். இப்போதான் M.Sc முடிச்சா. அடுத்து திருமணத்தை முடிக்கலாம் என்று பார்த்தால்.....? சரி அதை விடு நீ சொல்லு", தன் துன்பம் தன்னோடு போகட்டும் என்று எண்ணினார்.

"ஏன் அவ ஜாதகத்தில் ஏதாவது பிரச்சனையா?", புரியாமல் கேட்டார்.

"அவளுக்கு ஏது ஜாதகம்? எல்லாம் நான் செய்த தப்புதான்....., இப்போ அவ வாழ்க்கையை பாதிக்குது", மனம் விட்டு பேச தோழமை கிடைத்த சந்தோசத்தில் அனைத்தையும் அவரிடம் பகிர்ந்தார்.

ஸ்டெல்லாவிற்கு வருத்தமாக இருந்தது. 'இவ்வளவு அழகும், துடிப்பும் கொண்ட பெண்ணுக்குள் இப்படி ஒரு கவலையா?, தனிமையா? என்னால் அதை போக்க முடியுமே, என் மகன் இவளை நன்கு பார்த்துக் கொள்வான்', வயதுக்கு வந்த பிள்ளைகளை வைத்திருக்கும் ஒவ்வொரு பெற்றோரும் எவ்வாறு சிந்திப்பார்களோ, அவ்வாறே சிந்தித்தார் ஸ்டெல்லா.

"மேரி, உனக்கு சம்மதமென்றால் என் மகனுக்கு உன் பெண்ணை தருகிறாயா?", பட்டென்று கேட்டுவிட்டார்.

"நீ....., நீ..... நிஜமாகத்தான் சொல்லுறியா? ஏசப்பா....., நான் உன்னை தேடி வந்தது வீண்போகவில்லை. உமக்கு கோடி நன்றி என் இறைவா....., ஸ்டெல்லா....., உன் பையனுக்கு என் மகளை பிடிக்கணுமே? அது மட்டும் இல்லை....., அவ இன்னும் விளையாட்டு பிள்ளையாவே.....".

"அதெல்லாம் நான் பாத்துக்கறேன். எனக்கு உன் பொண்ணை பாத்ததுமே ரொம்ப பிடிச்சுடுச்சு. எனக்கு பிடித்தால் கண்டிப்பா என் மகனுக்கும் பிடிக்கும். அவங்க முதலில் பார்க்கட்டும் நாம பிறகு பேசிக் கொள்ளலாம்", மேரிக்கு தைரியம் சொன்னார்.

"இதிலும் ஒரு சிக்கல் இருக்கு. இவளுக்கு மாப்பிள்ளை பார்ப்பது தெரிந்தால் கன்னியாஸ்த்திரி ஆயிடுவேன்னு மிரட்டுறாளே", தயக்கம் விலகவில்லை அவருக்கு.

"முதல்ல நான் கேட்பதற்கு பதில் சொல்லு? அடுத்து அவ என்ன படிக்கிறதா இருக்குறா?", அடுத்து என்ன என்று சிந்தித்தார்.

"சில நேரம் M. Phil பண்ணுறேன்னு சொல்லுவா. சில நேரம் B. Ed படிக்க போறேன்னு சொல்லுவா.....", மகள் நிலையில்லாத மனநிலையில் இருக்கும் கவலை அவர் குரலில்.

“அப்போ நம்ம வேலை சுலபமா போச்சு. நான் வொர்க் பண்ணுற காலேஜிலேயே அவளுக்கு இடம் எடுத்துவிடலாம். அவ முதல்ல சென்னைக்கு வரட்டும் மீதியை என் பையனே பாத்துப்பான். அவனும் உன் கணவனை மாதிரி கால்நடை மருத்துவன்தான்”, உற்சாகமாக சொல்லி மேரியை தேற்றினார்.

“அதுவும் முடியாதே, முதல் வேலையா, நீங்க யாரு? உனக்கு எப்படி அவங்களை தெரியும்? அவங்க ஏன் நமக்கு உதவி செய்யிறாங்கன்னு? கேட்டு என் உயிரை வாங்கிடுவா. அதிலெல்லாம் கில்லாடி”, சோகத்திலும் கொஞ்சம் பெருமையாக சொன்னார்.

“அப்படி ஒரு விஷயம் இருக்கோ....., மேரி உன் பெரியப்பா பையன் பெர்னாடை எங்க காலேஜில் எல்லோருக்கும் தெரியும். அவன் மூலம் நீ சீட் வாங்கு. மீதியை நான் பாத்துக்கறேன்”, இப்பொழுது மேரியின் முகத்திலும் பிரகாசம்.

“நீ சொல்லுவது மட்டும் நடந்துவிட்டால்....., என் மனதில் இருக்கும் பெரிய பாரம் விலகிவிடும்”, அவர் விழிகளில் ஆனந்த கண்ணீர் பெருகியது.

அங்கிருந்தே ஸ்டெல்லாவே பெர்னாடுக்கு போன் செய்து பார்ம் வாங்க சொன்னார். எப்படியாவது அர்ச்சனாவை பி. எட் நுழைவுத் தேர்வு எழுத வைக்க சொன்னார். அர்ச்சனாவின் புகைப்படம் மேரியிடம் இருக்கவே, அவர் அதை ஸ்டெல்லாவிடம் கொடுத்தார்.

தன் அலைபேசியில் இருந்த பேட்ரிக்கின் புகைப்படத்தை மேரியிடம் காண்பித்தார். அதை ப்ளூடூத் வழியாக மேரியின் அலைபேசிக்கும் அனுப்பி வைத்தார். அனைத்தும் நல்லபடியாக முடியவேண்டுமே என்ற கவலை மேரிக்கு எழுந்தது.

அர்ச்சனாவை தற்பொழுது சந்திக்கவேண்டாம் என்று மேரி கூறியதால், அவர்கள் இருவரும் அலைபேசி எண், வீட்டு

முகவரி அனைத்தையும் பகிர்ந்துகொண்டு விடை பெற்றார்கள்.

ஏதோ ஒரு தைரியத்தில் மேரி சட்டென முடிவெடுத்துவிட்டாலும், உள்ளுக்குள் உதறல் எடுத்தது என்னமோ உண்மைதான். முதலாவது தன் கணவனிடம் இதைப்பற்றி எப்படி பேச என்பது, அடுத்தது அர்ச்சனாவை பி.எட் நுழைவுத் தேர்வு எழுத வைக்கவேண்டும்.

முக்கியமாக தான் அவளுக்கு மாப்பிள்ளை பார்த்து, அதற்காக அவளை சென்னைக்கு அனுப்புவது தெரியவரவே கூடாது. அப்படி தெரியவந்தால்.....? அர்ச்சனா என்ன முடிவெடுப்பாள் என்பதை நினைக்கவே பயம்மாக இருந்தது.

அவள் சொன்னது போலவே, கன்னியர் மடத்துக்கு சென்றுவிட்டால்? நினைக்கவே முடியவில்லை அவரால். தன் ஒரே மகளை, குடும்பமாக காணவே அவர் விரும்பினார். அவர் பயத்தையும் முறியடித்தது பேட்ரிக்கின் முகமே. இப்படி ஒரு மாப்பிள்ளையை தன் மகள் இழந்துவிடக் கூடாது என்று எண்ணினார்.

தன் தயக்கங்களையும், கோபங்களையும் உதறிவிட்டு, அர்ச்சனாவின் தந்தையிடம் பேச முயன்றார். தன் மகன் ஜானையும் உடன் வைத்துக் கொண்டார். ஜான் கொஞ்சம் தயக்கமாகத்தான் அங்கே வந்து அமர்ந்திருந்தான்.

வீட்டில் அப்பொழுது அர்ச்சனா இல்லை, லைப்ரேரி சென்றிருந்தாள். அந்த நேரம் மேரி இவர்களை அழைத்து தன் மொபைலை அவர்களிடம் காட்டினார். அதில் இருந்த பேட்ரிக்கை பார்த்தவுடனே அவர்களுக்கு, அவர் பேச வரும் விஷயம் என்னவென்று புரிந்து போனது.

“நான்தான் உன் பொண்ணோட வாழ்க்கையில் தலையிட மாட்டேன் என்று சொல்லிவிட்டேனே? இன்னும் எதற்கு என்னிடம் இதையெல்லாம் கொண்டு வருகிறாய். நீயே

பார்த்துக்கொள்”, விட்டேற்றியாக சொன்னார் கிறிஸ்டோபர்.

“அப்பா, ஒரு பொறுப்பான அப்பாவாக இருந்து யோசிங்க, அதை விட்டுட்டு என்னமோ தெருவில் போறவங்களுக்கு அம்மா மாப்பிள்ளை பார்ப்பது மாதிரி பேசுறீங்க”, தந்தையின் செயல்களில் எப்பொழுதும் விருப்பம் இல்லாமல் இருக்கும் ஜான் பேசினான்.

“அப்போ நீயே பார்த்துக்கொள்”, தனக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை என்பது போலவே பேசினார்.

“இதெல்லாம் பொண்டாட்டியோட படுக்க முன்னாடி யோசித்து இருக்கணும்”, தந்தைமேல் இருந்த கோபம் கிளர்ந்து எழ, தன்னை மீறி வார்த்தைகளை சிதறவிட்டான் ஜாண். அவன் மெதுவாக முணுமுணுத்தது அங்கிருந்த அனைவர் காதிலும் விழுந்தது.

“என்னடா சொன்ன.....?”, அவன் சட்டையை பிடித்தார் கிறிஸ்டோபர்.

“நான் சொன்னதில் என்ன தப்பு, இளமை வேகத்தை அடக்க முடியாமலும், உங்க ஆண்மையை நிரூபிக்கவும் குழந்தை பெத்துகிட்டீங்க. இப்போ பொறுப்புகளை சுமக்கணும்னா மட்டும் கசக்குது இல்ல?”, அசரவே இல்லை அவன். தலைக்குமேல் போயாயிற்று இனிமேல் என்ன?

“வாயை மூடுறியா இல்லையாடா? என்னோட வாழ்க்கையை தீர்மானிக்க வேண்டியது நான், நீ இல்லை”, கர்ஜித்தார்.

“அது நீங்க தனியா இருந்திருந்தால்....., இப்போ உங்களுக்கு மனைவி, ரெண்டு குழந்தைங்க இருக்காங்க. இன்னும் கூட உங்க வாழ்க்கை தனின்னு சொல்லுவது வேடிக்கையா இருக்கு”, கோபம் கலந்த நக்கலாக சொன்னான்.

“ஒரு அப்பாவிடம் பேசும் வார்த்தையை நீ பேசலை.....”, உள்ளடக்கிய கோபமும், ஆங்காரமும் அவர் குரலில்.

“ஒரு அப்பாவா என்னைக்குமே நீங்க நடந்ததா எனக்கு ஞாபகம் இல்லை”, என்னவோ ஒரு முடிவுடன் பேசினான்.

“அப்போ என்னை என்னனுடா நினைச்சுட்டு இருக்க.....?”, அவன் சட்டையில் பிடித்த பிடியை விடவே இல்லை. வார்த்தைகள் தடிப்பதை உணர்ந்து கவலை கொண்டார் மேரி.

“செய்த தப்பெல்லாம் நாம செஞ்சுட்டு, பிள்ளைகளை குற்றம் சொல்லி என்ன செய்ய? விடுங்க அவனை”, அவரை பிரித்துவிட்டார் மேரி.

கிறிஸ்டோபரின் முகம், கோபத்திலும், அவமானத்திலும் ரத்தமென சிவத்து, கடுத்தது. மேரி கைகளில் முகம் புதைத்து தன் விம்மலை அடக்கினார். “வெளியே போடா.....”, கர்ஜித்தார் அப்பா.

“அவன் கேட்டதில் என்ன தப்பு? அவனை ஏன் வெளியே போக சொல்லுறீங்க?”, சிலிர்த்து எழுந்தார் மேரி.

“ஒரு தகப்பனிடம் பேசும் பேச்சா இது? இவனுக்கு யார் இவ்வளவு தைரியம் கொடுத்தது?”, வெகுண்டார் அவர்.

“உங்களுக்கு இவ்வளவு பேசத் தெரியுமென்றே எனக்கு இன்னைகுதான்ப்பா தெரியும். நான் பேசிய முறையும், வார்த்தையும் தப்புதான் என்னை மன்னிச்சுடுங்க. ஆனால் என்னை பேசவைத்தது நீங்கதான் என்பதை மறந்துடாதீங்க.

உங்களுக்கு வயதான காலத்தில் கவனிக்க ஒரு மனைவி வேணும், உங்க ஆண்மையை நிரூபிக்க பிள்ளைகள் வேணும், சுகபோகமாக வாழ பணம் வேணும் அவ்வளவே. எப்போவாவது எங்களுக்கும் மனசுன்னு ஒண்ணு இருக்குன்னு நினைச்சு பாத்து இருக்கீங்களா?

பணம், பணம், பணம்..... பணத்தின் பின்னாடியே ஓடிட்டே இருக்கீங்க. ஒரு நாளைக்கு உங்க முன்னாடி மலையளவு பணம் இருக்கும், ஆனால் அதை அனுபவிக்க தெம்பும் இருக்காது, உங்ககூட நாங்களும் இருக்க மாட்டோம்.

ஓடி முடிச்சு நீங்க திரும்பி பார்த்தால்....., உங்க வாழ்க்கையில் நீங்க வெறுமையை மட்டும்தான் உணர்வீங்க. நான் ஆண்பிள்ளை, என் தேவைகள் எதுவாக இருந்தாலும் என்னால் வெளியே தேடிக்க முடியும். ஆனால் அர்ச்சனா அப்படி இல்லை....., குழந்தைப்பா. நானும், நீங்க இன்னைக்கு சரியாயிடுவீங்க, நாளைக்கு சரியாயிடுவீங்கன்னு நினைத்து நினைத்து வெறுத்து போயிட்டேன்.

சரி நம்ம மேல பாசமா இல்லை என்றாலும், கொஞ்சமாவது அக்கரையா இருக்கீங்கன்னு நினைச்சேன், அதுவும் பொய்யின்னு எனக்கு நிரூபிச்சுட்டீங்க. உங்களுக்கு போய் மகனா பிறந்தேனேன்னு நினைக்கும்போது எனக்கு அவமானமா இருக்கு", இத்தனை வருடம் மனதில் பதுக்கி வைத்திருந்ததை வெளியேற்றினான் அவன்.

கிறிஸ்டோபர் முகமும், உடலும் விறைக்க தலை கவிழ்ந்து நின்றார். தான் மாறவேண்டியதன் அவசியத்தை உணர்ந்தார். ஆனால் பேச நா எழவில்லை.

"ஜாண் ஏன் இப்படியெல்லாம் பேசுற?", குரலை உயர்த்தினார் மேரி.

"இதில் அவரை மட்டும் குற்றம் சொல்லி எந்த பிரயோஜனமும் கிடையாதும்மா. வீட்டு அஸ்த்திவாரம் சரியா இருந்தால்தானே, வீட்டு கட்டடம் சரியா இருக்கும். நீங்களே.....? நான் இப்போ உங்களையும் குற்றம் சொல்ல தயாரா இல்லை.

ஆனால் உங்க ரெண்டுபேருக்கும், எதில் ஒற்றுமை இருக்கோ இல்லையோ, நீங்க எக்கேடோ கெட்டு ஒழியுங்க என்று இருப்பதில் அப்படி ஒரு ஒற்றுமை. நீங்களாவது ஒரு

ஆறு மாசமா அர்ச்சனாவோட கொஞ்சம் டைம் செலவழிக்கறிங்க, அந்த மட்டிலும் இப்போவாவது உங்களுக்கு பொறுப்பு வந்ததே. எனக்கு அதுவே சந்தோசம்தான்.

இவர் சொன்ன மாதிரி, அவளோட கல்யாணத்தை நான் பாத்துக்கறேன். நீங்க என்கிட்டே சொல்லுங்க. அவரோட பணத்தை கட்டிக்கிட்டு அவரே அழட்டும்", சொல்லிவிட்டு வெளியேறினான். கிறிஸ்டோபர் அங்கிருந்து நகரவே இல்லை.

சென்றவன் திரும்ப வந்தான். "என்னை வெளியே போக சொன்னீங்க இல்ல. தாராளமா போறேன். ஆனால் அதுக்கு முன்னாடி அர்ச்சனாவோட கல்யாணத்தை முடிச்சுட்டு போறேன்", மேரி சொல்லவருவதை கண்டுகொள்ளாமல் தன் அறைக்கு விரைந்தான்.

அறைக்கு சென்றவன் தன் தலையிலேயே அடித்துக் கொண்டான். 'ச்சே.... நான் ஏன் அப்படி ஒரு வார்த்தையை சொன்னேன். வார்த்தையை கொட்டிவிட்டால் அள்ளமுடியாது என்றுதானே இவ்வளவு வருடம் பேசாமலே இருந்தேன்.

தன்னை உயிர்ப்புடன் கொஞ்சமாவது இந்த வீட்டில் நடமாட விடுவது அர்ச்சனாதான். அவள் வாழ்க்கையை கூட அசட்டை செய்யும் அவர்மேல் இவ்வளவு வெறுப்பு எழுந்ததை அவனால் தடுக்க முடியாமல்தான் வார்த்தைகளை கொட்டிவிட்டான்.

தன்னிடம் பேசவேண்டுமென்றே சண்டை போட்டு, வாயாடும் அர்ச்சனா, தேவையில்லாத விஷயத்துக்கு கூட, ஆலோசனை என்ற பெயரில் மூக்கை நுழைத்து வம்பிழுக்கும் அர்ச்சனா, வீடு நரகமாக தோன்றிவிடக் கூடாதே என்று, பேசும் ஒன்றிரண்டு பேச்சிலும், நகைச்சுவையை விதைக்கும் அர்ச்சனா.....', அவனை மீறி கண்கள் கலங்கியது.

‘உன் வாழ்க்கையை நான் அமைத்து கொடுக்கிறேன். உனக்கு நான் இருக்கிறேன்’, மானசீகமாக தங்கையிடம் சொன்னான்.

இதன் பிறகும் கிறிஸ்டோபரிடம் பெரிய அளவில் எந்த மாற்றமும் இருக்கவில்லை. ஆனால் அர்ச்சனாவிற்கு ஒரு வாழ்க்கையை அமைத்து கொடுக்கவேண்டும் என்பதில் மட்டும் கொஞ்சம் உறுதியாக இருந்ததுபோல் தோன்றியது.

அர்ச்சனா பி.எட் நுழைவுத் தேர்வு எழுத போகும்பொழுது ஜாண்தான் அவளை அழைத்து சென்றான். அவளிடம் நிறைய பேசினான். தன் அண்ணனின் பேச்சு அவளுக்கு மகிழ்ச்சியை கொடுத்தது. நல்ல மதிப்பெண்களில் தேர்ச்சியும் பெற்றாள்.

அவள் சென்னை கிளம்பும் வேளையில், கிறிஸ்டோபர் தானே அவளை கல்லூரியில் விட்டு வருவதாக சொன்னதை, யாருமே ஒத்துக்கொள்ளவில்லை. ஆனால் அவர் யாரிடமும் அனுமதி வாங்கவில்லை, வாங்க தேவையுமில்லை.

இப்பொழுதும் அந்த வீட்டில் அவர் வைத்ததுதானே சட்டம். அர்ச்சனாதான் முரண்டினாள். அவரோடு செல்லுவதற்கு, தான் தனியாகவே சென்றுவிடுவதாக அடம் பிடித்தாள் தாயிடம். மேரிதான் ஆயிரம் பொய்யை சொல்லி அவளை சம்மாளித்தார்.

ஜாணுக்கு ஒரு மருத்துவ கான்பிரன்ஸ் இருப்பதாக பொய் சொன்னார். ஏன் அப்பாவுக்கும் இருக்குமே என்று சந்தேகப் பட்டு கேட்டவளை, இது புதிதாக வேலைக்கு சேர்ந்தவர்களுக்குத்தான் என்று சொன்னார்.

ஆனால் கூட அர்ச்சனா நம்பவில்லை. “அம்மா, அவர் என் கூட வாறதும் ஒண்ணுதான், இல்லாமல் இருப்பதும் ஒண்ணுதாம்மா. இவர் கூட வந்தால் நானும் மௌன சாமியார் மாதிரிதாம்மா இருக்கணும்”, தாயிடம் புலம்பினாள்.

“எல்லாம் ஒரு பாதுகாப்புக்குத்தான் அர்ச்சனா. உன்னை விட்டுவிட்டு வந்துவிடுவார். இந்த அம்மாவுக்காக, அம்மாவின் நிம்மதிக்காக”, ‘ஆண்டவா எவ்வளவு பொய்’, மனதுக்குள் நொந்து போனார்.

கிளம்பும் அன்று காலையில் பஸ்சில் போகமாட்டேன் என்ற அடம்……., அனைத்தையும் தாண்டி சென்னையில் கால் பதித்திருக்கிறாள் அவள்.

அவள் சொன்ன இத்தனை காரணங்களிலும் ஒன்று கூட, வீட்டை விட்டு தனியாக இருக்க முடியாது, என்று சொல்லவில்லை என்பதை மனதில் வலியுடன் உணர்ந்தார் மேரி.

கிறிஸ்டோபர் அவ்வளவு பிடிவாதமாக சென்ற காரணம், பேட்ரிக்கை நேரில் சந்திக்கவேண்டும் என்பதே. அது மட்டும் இல்லை, அவன் வீட்டினரையும் சந்திக்கவேண்டும் என்ற முடிவுடன்தான் வந்திருந்தார். அதை செயல்படுத்திவிட்டே சென்றார்.

இவை அனைத்தும் அர்ச்சனாவிற்கு தெரிந்தால்??????????

பகுதி - 10

கூட்டிற்குள் இருக்கும் புழு நான்

என்னை கொட்டிக் கொட்டி

வண்ணத்துப்பூச்சி ஆக்கினாய்

வலியை தாங்கி வெளியேறினேன்

வண்ணங்களாய் என் சிறகு.....

அன்று காலையில் எழுந்ததுமுதலே ஹாஸ்டலே ஏக பரபரப்பாக எழுந்தது. அதற்கு காரணம் நேற்று மாலையே அறிவிப்பு வந்துவிட்டது. இன்று காலை சரியாக ஒன்பது முப்பதுக்கு, கல்லூரியில் இருக்கும் அலுமினி(alumini) ஹாலில் ஆஜராக வேண்டுமென்று. அதற்குத்தான் இந்த பரபரப்பு.

ஆனால் இதில் எந்த கவலையும் இல்லாமல், ஏழு மணிக்கு நிதானமாக எழுந்தாள் அர்ச்சனா. அருகில் வைஷாலி நகத்தைகடித்து துப்பிக் கொண்டிருந்தாள். முகம் முழுக்க கவலையின் ரேகைகள்.

அவளது கவலைக்கு காரணம் அர்ச்சனாவிற்கும் தெரிந்தே இருந்தது. “ஹேய் பொண்டாட்டி என்ன? நீ நகத்தை கடிச்சு துப்பினாலும் அது வளரும் என்ற தைரியத்தில்தானே அதை கடிச்சு துப்பிட்டு இருக்க? அப்படியே விரலையும் கடிச்சு துப்பேன் பார்ப்போம்?”, அவளை பேச அழைத்தாள்.

அவளா பேசுவாள்.....? “ம்....ச்....”, ஒரு உச்சுகொட்டலுடன் அவள் வேலையை தொடர்ந்தாள்.

“அட பொண்டாட்டி நான் சொல்லிட்டே இருக்கேன். நீ அதை கண்டுக்காமல் மறுபடியும் அதையே செய்யிற?”, அவள் கையை தடுத்தாள். இன்னும் அவள் நிதானத்துக்கு வரவில்லை, இவள் பேச்சியும் ரசிக்கவில்லை.

“நானே உன்கிட்டே கேக்கணும்னு நினைச்சேன்.....?”, கேட்காமல் அவள் முகத்தை பார்க்க, வைஷாலி யாரிடம் பேசினால் எனக்கென்ன என்று அமர்ந்திருந்தாள். “பொண்டாட்டி, நீ இப்போ “ம்ம்ம்” அப்படி கொட்டி கேக்கணும். சரி நீ கேக்க மாட்ட நானே கன்டினியூ பண்ணுறேன்.

நேத்து அண்ணா கிளம்பும் போது, ரொம்ம்ம்மம்ப சந்தோசமா அனுப்பி வச்சுட்டு இப்போ எதுக்கு இப்படி மூஞ்சியை தூக்கி வச்சுட்டு உக்காந்து இருக்க? இங்கேபார் பொண்டாட்டி, இன்னும் ஒரு வருஷம்தான் நீ சந்தோசமா இருக்க முடியும்.

பிறகு புருஷனை கவனிக்கணும், பிள்ளையை கவனிக்கணும், மாமியார் மாமனார் பேச்சை கேக்கணும், அவங்களுக்கு ஆக்கி போடணும்....., இப்படி நிறைய பொறுப்பு வந்துடும். அப்போ நீயே நினைத்தால் கூட உனக்கு சுதந்திரம் கிடைக்காது.

அதனால..... கிடைக்கிற இந்த நாட்களில், வாழ்க்கையை நல்லா என்ஜாய் பண்ணிக்கோ. அண்ணா எங்கே போய்டுவார்? எங்கேயும் போகமாட்டார். என்னைக்கா இருந்தாலும் அவர் உன்னிடம் சிக்கி சின்னாபின்னமாகப் போவது உறுதி.

பாவம் என் அண்ணா ஒரு வருஷம் நிம்மதியா உன் தொல்லை இல்லாமல் இருந்துட்டு போகட்டுமே. அண்ணா சந்தோசமா இருக்கது உனக்கு பொறுக்கலையா? அவ்வளவு கல்நெஞ்சக்காரியா நீ? ஐயஹோ....., இந்த கொடுமையை நான் எங்கே போய் சொல்வேன்”, அர்ச்சனா அவளுக்கு ஆறுதலும் சொல்லி, அவள் மனநிலையை மாற்ற அவளை கேலியும் செய்தாள்.

முன்னது சரியாக வேலைசெய்யவில்லை என்றாலும், பின்னது சரியாக வேலை செய்தது. அர்ச்சனாவை முறைத்து பார்த்தவள் எழுந்து வந்து, “என்னை பார்த்தால்

உனக்கு அவ்வளவு கொடுமைக்காரியாவா தெரியுது?”, கேட்டுவிட்டு அவளை மொத்தினாள்.

“ஹையோ....., என்னையவே இந்த மொத்து மொத்துறியே, அண்ணாவை விட்டா வைப்ப?”, அவளிடம் அடி வாங்கியவாறே பொய்யாக அலறினாள்.

“ஏய்..... வாயை மூடுடி”, அர்ச்சனாவின் வாயை மூடினாள்.

“வைஷாலி, உனக்கு ஒரு ஜோக் சொல்லுறேன். அதை கேட்டபிறகு நீ ஒரு முடிவை சொல்லு. ஒரு சின்ன பொண்ணும் அவங்க அம்மாவும் சர்ச்ல ஒரு கல்யாணத்துக்கு போய் இருந்தாங்க, சர்ச்சில் திருமணம் நடந்து கொண்டிருந்தது. வந்திருந்தவர்களில் ஒரு சிறுமி, தனது அம்மாவிடம் கேட்டா

“அம்மா, ஏன் கல்யாணப் பொண்ணு வெள்ளைக் கலர்லே கவுன் போட்டுருக்குன்னு?”

உடனே அவங்க அம்மா சொன்னாங்க, “அதும்மா வெள்ளைக் கலர் மகிழ்ச்சிக்கு அடையாளம். இன்னைக்கு அந்த பொண்ணுக்கு வாழ்க்கையிலே சந்தோஷமான நாள் இல்லையா? அதனால் போட்டு இருக்காங்கன்னு”.

உடனே அந்த சின்னபிள்ளை அவங்க அம்மாகிட்டே திரும்ப கேட்டுது, “அப்ப, மாப்பிள்ளை ஏன் கருப்புக் கலர் கோட் சூட் போட்டுருக்காருன்னு?”

“இப்போ எனக்கு பதில் சொல்லு நான் அந்த கேள்வியை கேட்டதில் என்ன தப்பு, அந்த சின்ன புள்ளைக்கே அந்த சந்தேகம் வரும் பொழுது, எனக்கு சந்தேகம் வராதா?”, முகத்தை அப்பாவியாக வைத்துக்கொண்டு அர்ச்சனா கேட்க, தன்னை மீறி சிரித்துவிட்டாள் வைஷாலி.

அவள் சிரிக்கவுமே, “இது நல்ல புள்ளைக்கு அழகு. இனிமேல் எப்பவும் இப்படி சிரிச்ச முகமாகவே இருக்கணும்

சரியா?”, அவளிடம் சொல்லிவிட்டு அவளையும் இழுத்துக் கொண்டு, காலைக் கடன்களை முடிக்க சென்றாள்.

அர்ச்சனாவின் கைகளை பிடித்துகொண்டு வைஷாலி சொன்னாள், “தேங்க்ஸ்”, “எதுக்கு.....?”, கேட்டவாறு வாயில் நுரையுடன் ப்ரெஷ் செய்துகொண்டிருந்தாள் அர்ச்சனா.

ஒன்றுமில்லை என்பதுபோல் தலையை ஆட்டிவிட்டு குளிக்க சென்றாள். மனதுக்குள் சிரித்துக் கொண்டாள் அர்ச்சனா. எட்டுமணிக்கு சாப்பாட்டு ஹாலில் இருந்தார்கள் இருவரும்.

அங்கிருந்த அனைவருக்கும் சேர்த்து ஒற்றை “ஹாய்” யை உதிர்த்துவிட்டு, சாப்பிட அமர்ந்தாள். அங்கே பரிமாற லஷ்மி வந்தாள். “லச்சு....., இன்னைக்கு எனக்கு பஸ்ட்டே கிளாஸ். நான் எந்த வம்புக்கும் போகாமல் நல்லபடியா இந்த படிப்பை முடிக்கணும்னு எல்லாம்வல்ல இறைவனிடம் வேண்டிக்கோ சரியா?”, வராத கண்ணீரை துடைத்தவாறே சொன்னாள்.

“அக்கா அதெல்லாம் நீங்க சூப்பரா படிப்பீங்க”, நம்பிக்கையாக சொன்னாள் லஷ்மி.

“லச்சு....., உனக்கு ஜோசியம்கூட தெரியுமா? சொல்லவே இல்ல....., ஆனா உனக்கு ஜோசியம் தெரிந்த அளவு என்னை தெரியலை”, பொய்யாக வியந்தாள்.

“போங்கக்கா கேலி பண்ணாதீங்க”, சொல்லிவிட்டு அடுத்த டேபிள் நோக்கி சென்றாள்.

“லச்சு, நீ சொல்லுறது ஒண்ணு, செய்யிறது ஒண்ணா இருக்கு. அதென்ன என்னை போங்கக்கான்னு சொல்லிட்டு நீ போற”, அவள் குரலில் பேசி, அவளை கேலி செய்தாள்.

வைஷாலிதான் இவள் முதுகிலே போட்டாள். “அவளை அவ வேலையை பாக்கவிடு, மரியா முறைச்சு பாக்குது”, அவள்

காதில் முணுமுணுத்தாள்.

“அப்படியா.....? இப்போ பாரேன்”, “குட் மோர்னிங் மரியாக்கா”, வைஷாலி அவள் என்ன செய்யபோகிறாள் என்று உணரும் முன்பே எழுந்து, மரியாவுக்கு வாழ்த்து சொல்லிவிட்டாள்.

அங்கிருந்த அனைவருமே ஒரு நிமிடம் சாப்பிடுவதை நிறுத்திவிட்டு, அர்ச்சனாவை திரும்பி பார்த்துவிட்டு, சிரிப்பை கடைவாயில் அமுக்கி, சாப்பிட துவங்கினார்கள். மரியாவுமே ஒரு நிமிடம் திகைத்தது.

பிறகு வேறு வழி இல்லாமல் “குட்மோர்னிங்”, என்று மெதுவாக சொல்லிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டது.

“எப்படி என் சாமர்த்தியம்?”, வைஷாலியிடம் கேட்க, அவள் தலையிலேயே அடித்துக் கொண்டாள்.

“பொறாமை.....”, அடிக்குரலில் சொல்லிவிட்டு அவளுமே சாப்பாட்டை தொடர்ந்தாள்.

கல்லூரிக்கு வந்து அலுமினி ஹாலில் கூடினார்கள். தினமும் வந்துபோகும் மாணவிகள் அனைவரையும் சேர்த்து எழுபத்தைந்துபேர் அங்கே கூடி இருந்தார்கள். பேச்சு சத்தம் அந்த கட்டிடத்தையே ஆட்டி வைத்தது.

அந்த நேரம் அங்கே வந்தார் ஸ்டெல்லா. காட்டன் புடவையில், தூக்கி போட்டிருந்த கொண்டையுடன், அவரது தோற்றமே ஒரு கம்பீரத்தை கொடுத்தது. “அட ஆன்டி செமையா இருக்காங்க”, தனக்கு தானே சொல்ல,

“ஹேய் நீ மேமையும் (madam) விட்டு வைக்க மாட்டியா?”, இவள் குணம் அறிந்த ஒருத்தி பின்னால் இருந்து கேட்டாள்.

“இப்போ நான் அவங்களை என்ன கட்டி போட்டா வச்சுருக்கேன்? விட்டு வைக்கமாட்டியான்னு கேக்குற?”, பின்னால் திரும்பாமலே பதில் கொடுத்தாள்.

“கொஞ்சம் விட்டால் நீ அதையும் செய்வ”, அவள் சொல்லிவிட்டு அமைதியாக,

“இப்போ உனக்கு வேணும்னா சொல்லு, அவங்களை போய் ஹக் பண்ணி காட்டுறேன்..... செய்யவா.....?”, கேட்டுவிட்டு அவள் எழுவதுபோல் செய்கை செய்ய, சுற்றி இருந்த இரண்டு மூன்றுபேர் சேர்ந்து அவளை அமுக்கி அமர வைத்தார்கள்.

சொன்ன அவள் சாதாரணமாக இருக்க, சுற்றி இருந்த இவர்களுக்குத்தான் பூமி தலைகீழாக சுற்றியதுபோல், தலை சுற்றி போயிற்று.

“என்மேல் அவ்வளவு நம்பிக்கையா.....?” இவள் கெத்தாக கேட்க,

“உன் தைரியத்துமேல் எங்களுக்கு அபார நம்பிக்கை எப்பவும் உண்டு நீ அடங்கு”, வேறு ஒருத்தி சொல்ல, மெல்லிய சிரிப்பொலி அங்கே எழுந்தது.

“அப்போ சரி.....”, ஆனாலும் முடிக்கும் வார்த்தை அர்ச்சனாவுடையதாகவே இருந்தது.

“அர்ச்சனா அவங்க என்ன சொல்லுறாங்கன்னு கவனி. நீபாட்டுக்கு பேசிட்டு இருக்க?”, வைஷாலி கண்டிக்கவே கொஞ்சம் அடங்கினாள்.

“வைஷு....., ரூமுக்கு ஒரு படிப்பாளி போதாது? ஏன் என்னையும் உன்னோட சேக்குற?”, வைஷு கொஞ்சம் கண்ணை இடுக்கி பார்க்கவே,

“அப்படியே பம்பளிமாஸ் மாதிரி இருக்கடா....., கோபத்தில் உன் கன்னம் சிவந்து போச்சு பாரேன்”, இது வேலைக்காகாது என்ற முடிவுடன் வைஷாலி ஸ்டெல்லாவின் பேச்சை கவனிக்க துவங்கினாள்.

“பேசு வைஷு பேசு....., பேசமாட்டன்னா விடு”, தோளை குலுக்கிவிட்டு, அர்ச்சனாவும் அவர் பேசுவதை கவனிக்க துவங்கினாள்.

“ஹாய் டீச்சர்ஸ்....., நீங்க எல்லோரும் வருங்கால ஆசிரியர்கள் தானே அதலால்தான் உங்களை அவ்வாறு சொன்னேன். என் பெயர் ஸ்டெல்லா, நான் உங்களது பிசிகல் மேம், அதாவது உடற்கல்வி ஆசிரியர்.

உங்களுக்கு எந்த சந்தேகம், கேள்வி, விளக்கம் எது தேவையாக இருந்தாலும் என்னை அணுகலாம். உங்களது எந்த கோரிக்கையையும் நீங்கள் என்னிடம் சொல்லலாம். அதற்கு முதலில் உங்களுள் ஒருத்தரை தலைவியாக தேர்ந்தெடுக்க வேண்டும். அவர்களும் நானும் எப்பொழுதும் நேரடி தொடர்பில் இருப்போம்.

எனவே இப்பொழுதே உங்களுக்கு இங்கே இருப்பவர்களில் தற்பொழுது தலைவியாக இருக்க, யார் சிறந்தவர் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ அவர்கள் பெயரை சொல்லுங்கள்”, கேட்டுவிட்டு அவர் சிறிய இடைவெளி விட்டார்.

அனைவரும் தங்களுக்குள்ளாக பேச துவங்கிவிட்டார்கள். “எந்த அப்பாவி ஜீவன் சிக்க போகுதோ.....”, அர்ச்சனா சொல்லி முடிக்கவே, ஒரு மூலையில் இருந்து அர்ச்சனாவின் பெயர் கேட்டது.

மைக்கில் ஸ்டெல்லா சொன்னார், அது யார் அர்ச்சனா? கொஞ்சம் எழுந்து நில்லுங்க”, அவர் அறிவிக்கவே, அர்ச்சனா கவிழ்ந்து அந்த சேரில் இருந்த ரைட்டின் பேடில் படுத்துக் கொண்டாள். இப்பொழுது பல குரல்கள் கேட்டது.

“அர்ச்சனா.....”, “அர்ச்சனா.....”, “ஏய் அர்ச்சனா மேம் உன்னைத்தான் சரியா பாக்குறாங்க எழுந்திருடி”, பக்கத்தில் உட்கார்ந்திருந்த வைஷாலி அவளை சுரண்டினாள்.

‘ஏன் பாக்கமாட்டாங்க?, என்னைத்தான் அவங்களுக்கு முன்னாடியே தெரியுமே’, மனதுக்குள்ளே புலம்பிக் கொண்டாள். இப்பொழுது வேறுஒரு அர்ச்சனா எழுந்து நின்றாள். அழுதுவிடுபவள்போல் நின்றுகொண்டிருந்தாள் அவள்.

“ஹப்பா நான் தப்பிச்சேன்”, அவள் சந்தோசம் நொடிகள் கூட நீடிக்கவில்லை.

“மேம் இந்த அர்ச்சனா இல்லை”, இது வேறொருத்தி.

‘அடங்கமாடிக்காளுங்களே.....’, அலுத்துக் கொண்டாள்.

“ஆல் அர்ச்சனாஸ் ஸ்டாண்ட்அப்”, ஸ்டெல்லா சொல்லவே, வேறு வழியில்லாமல் எழுந்து நின்றாள் அவள்.

மொத்தம் மூன்றுபேர், “எல்லோரும் முன்னாடி வாங்க”.

“ஏய் வைஷு அவசரமா எனக்கொரு புது பேர் வைடீ....., எல்லோரும் இந்த பேரை பிடிச்சு தொங்குறாங்க”, வைஷுவும் மற்றவர்களும் நமுட்டு சிரிப்பு சிரிக்க, எவ்வளவு முடியுமோ, அவ்வளவு நிதானமாக முன்னால் சென்றாள்.

மூன்றுபேரின் பெயர்களை கேட்க, ஒருத்தி அர்ச்சனாசுதா, ஒருத்தி அர்ச்சனா மெர்லின், மூன்றாவது அர்ச்சனா கிறிஸ்டோபர். ஹாஸ்டலில் இருந்த அனைவரின் மொத்த வாக்கும், அர்ச்சனா கிறிஸ்டோபருக்கே விழ, வேறு வழி இல்லாமல் தற்காலிகமாக, அர்ச்சனா தலைவியாக தேர்ந்தெடுக்கப்பட்டாள்.

‘எல்லோரும் சேர்ந்து ஆப்பு வச்சுட்டீங்களா?’, மனதுக்குள் கறுவிக்கொண்டே வெளியே சிரித்தாள்.

“கன்க்ராட்ஸ்”, கை குலுக்கினார் ஸ்டெல்லா. “தேங்க்யூ மேம்”, பதிலுக்கு புன்னகைத்தாள்.

“ஓகே டீச்சர்ஸ், இனிமேல் நான் தரவேண்டிய இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் எல்லாவற்றையும் உங்க லீடர்ட்ட சொல்லி அனுப்புகிறேன். அதுவரை நீங்க கொஞ்சம் அமைதியா இருங்க”, சொல்லிவிட்டு அர்ச்சனாவை அழைத்துக்கொண்டு, வெளியேறினார்.

“அர்ச்சனா, என்னோட வா?”, அலுவலக அறைக்கு சென்று, ஒரு ரெஜிஸ்டரை அவளிடம் கொடுத்தார்.

“இதில் இப்போ சேர்ந்திருக்கும் நூறு பேரோட நேம்ஸ் இருக்கு”.

‘அதை நான் என்ன செய்யணும்?’.

“அவங்க எல்லோரும் வந்து இருக்காங்களா.....?”.

‘அப்படி வந்துருந்தா மட்டும்.....’.

“அப்படி வந்திருந்தால் அவங்க எல்லோருக்கும் அட்டெண்டன்ஸ் எடு”.

‘எனக்கு நல்ல வேலை’.

“வராதவங்களையும் லிஸ்ட்அவுட் பண்ணு”.

‘இது என்னாத்துக்கு’.

“எதுக்குன்னா.....?”.

‘அனியாயத்துக்கு சரியா பேசுறாங்களே.....!’.

“இங்கே இருக்கும் ஹாலில் உங்களோட ஸ்டடி கிட், மொத்தம் நூற்றி எழுபதும் அங்கே அரேஞ் பண்ணி இருக்காங்க”.

‘அதான் அரேஞ் பண்ணிட்டாங்களே, பிறகு நான் என்ன செய்ய?’.

“வந்திருப்பவர்கள் அனைவருக்கும் கொடு சரியா?”.

‘ஓ..... அப்படி....., ஸ்டோர் கீப்பர் வேலை கொடுக்கத்தான் இவ்வளவு பில்ட்டப்பா’.

“இதுதான் உன் முதல் டியூட்டி”.

‘இதெல்லாம் எனக்கு ஒரு பொளப்பு....., அர்ச்சனா உன் நிலைமை ரோம்ம்மம்ம்ப மோசமாகும் போல இருக்கே’, கண்களை மூடி, தலையை ஆட்டியவாறே, யோசித்துக் கொண்டிருந்தாள்.

“நான் சொல்லிட்டே இருக்கேன். நீ பதிலே சொல்லாமல் நிக்கிற?”, அவளை சந்தேகமாக பார்த்தார்.

“அதான் சொல்லிட்டுதானே இருக்கேன்”, “என்னது?”, ‘ஆஹா உளறிட்டியே அச்சு....., சம்மாளி, சம்மாளி’.

“இல்ல..... எல்லாத்தையும் சரியா செஞ்சுடுறேன்னு சொல்ல வந்தேன். நாக்கு கொளறிடுச்சு, இல்ல ஒளறிடுச்சு”, கொஞ்சம் தடுமாறினாள்.

“அர்ச்சனா, இது விளையாடும் விஷயம் இல்லை. நூற்றி எழுபது பேரை நீதான் சமாளிக்கணும். இப்படி விளையாட்டுத்தனமாக இருந்தால் சரி வராது புரியுதா?”, கொஞ்சம் அழுத்தமாக சொன்னார்.

“இருக்காதே.....? குறையுமே.....?”, தனக்குள் சொல்வதுபோல் சத்தமாக சொன்னாள்.

“என்ன குறையும்.....?”.

“எண்ணிக்கைதான்.....”, உறுதியாக சொன்னாள்.

“அதெல்லாம் குறையாது. இன்னும் இரண்டு மாதங்களில் எல்லா சீட்டும் பில் பண்ணிடுவாங்க”.

“நான் அதை சொல்லலை”.

“பிறகு.....?”.

“நான் சமாளிக்கவேண்டிய ஆட்களை சொன்னேன்”.

“அதெப்படி, நூற்றி எழுபது சீட் அப்போ எல்லோரையும் நீதான் சமாளிக்கணும். பிறகு யார் வருவாங்க?”, கண்டிப்பு ஏறியது அவர் குரலில்.

“அது இல்ல மேம், என்னை நானே கவனிச்சுப்பேன். அப்போ நூற்றி அறுபத்தி ஒன்பதுதானே வரும். நான் சொன்ன கணக்கு சரிதானே?”, அவள் அப்பாவியாக முகத்தை வைத்துக்கொண்டு கேட்டாள்.

“இப்போதான் சொன்னேன்....., இந்தமாதிரி விளையாட்டுத்தனமா இருக்காதே என்று, முதல்ல இப்படி கூடக் கூட பேசுவதை நிப்பாட்டு புரியுதா?”, அவர் குரலில் இருந்த உறுதியில் அர்ச்சனாவே கொஞ்சம் மிரண்டாள்.

“சரி மேம் அண்ட் சாரி.....”, அவள் குரல் அவளுக்கே கேட்கவில்லை.

“அதென்ன கேலி செய்யும்போது குரல் அவ்வளவு சத்தமா இருந்தது. மன்னிப்பு கேட்கும்போது இப்படி உள்ளே போய்டுச்சு”.

“மன்னிச்சுடுங்க.....”, தைரியமாக சொன்னாள்.

வந்த புன்னகையை தொண்டை குழியிலேயே புதைத்தார். “சரி நீ இப்போ போகலாம்”, அவளை அனுப்பினார்.

‘நீ இப்போ போகலாமாம்..... இல்லன்னாமட்டும் நான் அங்கேயேவா இருப்பேன். ஹப்பா என்ன பேச்சு பேசுது? டேய் பேட்ரிக் உன் நிலைமை ரொம்ப குஷ்டம் தாண்டா’, யோசனையிலேயே அலுமினி ஹாலை நெருங்கினாள்.

“ஹாய்....., ஹாய்..... ஹாய்..... ப்ரண்ட்ஸ், இப்போ நாம எல்லோரும் தெரேசா ஹால்க்கு போகணும். அங்கே

நம்மளோட ஸ்டடிகிட் இருக்கு. அது உங்களுக்கு வேணும்னா நான் சொல்லுறதை நீங்க செய்யணும். செய்வீங்களா?", புயல்போல் நுழைந்து படபடவென பொரிந்தாள்.

இவளது திடீர் வருகையாலும், படபட பேச்சாலும் அங்கே அமைதி நிலவியது. அதை பயன்படுத்தி, ரெஜிஸ்டரில் இருந்த பெயரை ஒவ்வொன்றாக படித்தாள். அவர்கள் எழவுமே, "நான் பெயர் வாசிக்க வாசிக்க, அவங்க ஒவ்வொருவர போய், உங்க நம்பர் சீட்டில் இருக்கும் கிட்டை எடுத்துட்டு கிளம்பலாம் சரியா?", அவள் வேலையை சரியாக செய்யவே,

கூட்டம் அலைமோதும் என ஸ்டெல்லா எதிர்பார்க்க, ஒவ்வொருவராக சென்று தங்கள் பொருட்களை எடுத்து சென்றதை வியப்பாக பார்த்தவாறே நின்றிருந்தார் அவர். இதற்குமுன் இருந்த லீடர்ஸ் எல்லாம், வருகைப்பதிவு எடுத்து முடித்த பிறகு, அனைவரையும் மொத்தமாக ஹாலுக்கு அனுப்புவார்கள்.

அங்கே ஒரே கூச்சலும் குழப்பமுமாக இருக்கும். ஆனால் அர்ச்சனாவோ, ஒவ்வொருவராக அனுப்பவே, அனைவரும் நிதானமாக அவர்கள் பொருட்களை எடுத்துக்கொண்டு சென்றார்கள்.

'மருமக நல்ல மூளைக்காரிதான். என்ன கொஞ்சம் வாய்தான் அதிகம்', கொஞ்சம் பெருமையாக எண்ணிக் கொண்டார்.

அனைவரும் சென்றபிறகு, அர்ச்சனாவும், வைஷாலியும் இறுதியில் சென்றார்கள். சென்றவர்கள் திகைத்தார்கள். அங்கே இவர்களது கிட்டாக, பத்து பைல், பதினொன்று நோட்டுபுத்தகம், இருபது சாட், A4 பேப்பர் பண்டல் ஒன்று, சாதா பேப்பர் பண்டல் ஒன்று, சீருடை சரீ, அதற்கு அளவு ஜாக்கெட் தைக்க துணி, அனைத்தும் அங்கே இருந்தது.

“அர்ச்சனா இது எல்லாத்தையும் ஒரே நேரமா எப்படி எடுத்துட்டு போக முடியும்? பேசாமல் கொஞ்சம் கொஞ்சமா எடுத்துட்டு போகலாமா?”, வைஷாலி மலைப்பாக கேட்டாள்.

“ஆமா பிறகு.....?, இப்போ நான் அதுக்கு அதிர்ச்சி ஆகலை, காலேஜில் மூணு ரெக்கார்ட்ஸ் முடிக்கவே முழி பிதுங்கும். இங்கே என்னன்னா இவ்வளவு கொடுத்துருக்காங்களே, நான் அதை நினைச்சுட்டு இருக்கேன். ஹம்.....”, சொல்லிவிட்டு ஒரு பெருமூச்சை வெளியேற்றினாள்.

“நீ உதைதான் வாங்க போற, முதல்ல கொஞ்சம் கொஞ்சமா எடுத்துட்டு போகலாம்”.

“ம்..... நீ எடுத்துட்டுபோ. நான் நம்ம PT – யை பாத்துட்டு வாறேன்”, சொல்லிவிட்டு அவள் பதிலை எதிர்பார்க்காமல் சென்றுவிட்டாள்.

“எக்ஸ்க்யூஸ் மேம். அட்டெண்டன்ஸ் எடுத்துட்டேன். கிட்டும் கொடுத்துட்டேன். ஹாலை க்ளோஸ் பண்ணணும்....., ஏன்னா? அங்கே மீதி கிட் எல்லாம் அப்படியே இருக்கு”, சொன்னவாறு ரெஜிஸ்டரை அவரிடம் கொடுத்தாள்.

“சரி மொத்தம் எத்தனைபேர் வந்திருந்தார்கள்?”.

“எழுபத்தி ஆறு. அதில் அறுபதுபேர் ஹாஸ்ட்டல்ல இருப்பவர்கள்தான். மீதி பதினாறுபேர் தினமும் வந்து போகிறவர்கள். இதில் ஆறுபேர் நாளைக்கு வந்து அவங்க கிட்ட எடுத்துட்டு போறதா சொல்லி இருக்காங்க”, மடைதிறந்த வெள்ளமாக கொட்டினாள்.

ஸ்டெல்லாவின் கண்களில் பாராட்டு மின்னி மறைந்தது. “சரி வேற ஏதாவது சொல்லணுமா?”, கேட்டார்.

“ஆமா முக்கியமான ஒரு விஷயம் சொல்லணும். நம்ம காலேஜ் நேம்போர்டை கொஞ்சம் மாத்த சொல்லிடுறீங்களா? படிக்கவே நாராசமா இருக்கு”,

பாராட்டு தெரிந்த அவர் விழிகளில் இப்பொழுது கோபத்தின் சாயல்.

இவள் அடங்குவாளா? இல்லை பொறுப்புகள் இவளை அடக்குமா? பார்க்கலாம்.....

பகுதி - 11

குறும்புகள் செய்யும் உன்

விழிகளில் விழுந்து

மீள முடியாமல் தத்தளிக்கின்றேன்

உன் விழிகளை ஒரு நிமிடம் மூடிக்கொள்

மூச்செடுத்துக் கொள்கிறேன்

இல்லையேல் மூர்ச்சையாகி விடுவேன் நான்.....

அர்ச்சனாவின் செயல்களில் திறமையை கண்டு பூரித்துப் போயிருந்த ஸ்டெல்லா, அவளிடம் இன்னும் ஏதாவது சொல்லவேண்டுமா? என்று சாதாரணமாக கேட்க, அர்ச்சனா சொன்ன விஷயத்தை கேட்டு கோபம் கொண்டார்.

“அர்ச்சனா என்ன சொல்லுற?”, இதுவரை இருந்த இளக்கம் குறைந்திருந்தது அவர் குரலில்.

“ஆமா மேம்....., நீங்களே வெளியே நின்று ஒருமுறை நம்ம காலேஜ் நேம் போர்டை வாசித்து பாருங்களேன் உங்களுக்கே புரியும்”, அவரை வலுக்கட்டாயமாக அழைத்துவந்து காண்பித்தாள்.

வாசித்த அவருமே கொஞ்சம் திகைத்தார். ‘ச்சே....., இதை எப்படி கவனிக்காமல் விட்டோம்’, தனக்குள் கேட்டுக் கொண்டே,

“இதை எப்போ நீ பார்த்த?”.

“வந்த அன்னைக்கே முதல்ல, பார்வையில் விழுந்தது இதுதான். உவ....., பேரை பாருங்க.....”.

“போதும்.....”, மேலே சொல்ல போனவள் அவரது இறுகிய குரலில் அதை பாதியில் நிறுத்தினாள்.

“நல்லதுக்கே காலமில்லை”, வாய்க்குள் முணுமுணுத்தாள்.

“என்ன சொன்ன?”, அவர் கேட்கவே,

“இனிமேல் நீங்க பாத்துப்பீங்கன்னு சொன்னேன். ஹி.... ஹி...”, அவள் சிரிப்பே அவள் வேறு எதுவோ சொல்லி இருக்கிறாள் என்பதை உணர்த்தியது.

“ஓகே மேம் நான் கிளம்பட்டுமா?”, அனுமதி கேட்டாள்.

“சரிம்மா கிளம்பு, ஒரு நிமிஷம்....., உன்னோட கிட் எடுத்துட்டியா?”, அக்கறையாக கேட்டார்.

“இதோ அதை எடுத்துட்டுதான் ரூம்க்கு கிளம்புறேன்”, சொல்லிவிட்டு அங்கிருந்து சென்றாள்.

“அர்ச்சனா....., உன்னோட ரோல் நம்பர்.....?”,

“பதினைத்து.....”, திரும்பி பார்க்காமலே பதில் சொன்னவாறே சென்றாள்.

“இவளை எதில் சேர்க்கன்னே தெரியலை? சிலநேரம் முதிர்ச்சியா செயல்படுறா. சிலநேரம் அதிகமா விளையாட்டுத்தனம். இப்போ பாரு....., என்ன அசால்ட்டா பதில் சொல்லிட்டு போறா? நின்னு பதில் சொன்னால் ஆகாதா இவளுக்கு? ஹம்.....”, ஒரு மூச்சை வெளியேற்றிவிட்டு அறையை பூட்ட சென்றார்.

அர்ச்சனா அனைத்தையும் ஒரே நேரத்தில் எடுத்து சென்றுவிடலாம் என்ற எண்ணத்தில், மொத்தமாக எடுத்துக்கொண்டு வெளியே வர, அதற்குள்ளாகவே கொஞ்சம் மூச்சுவாங்கியது அவளுக்கு. ‘கொஞ்சம் உணர்ச்சிவசப் பட்டுட்டோமோ? இப்போ என்ன? இங்கேயே

கொஞ்சம் வச்சுட்டு போய்டலாம்’, முடிவு செய்து திரும்பும் வேளையில்,

அவள் கையிலிருந்து மொத்தமாக வாங்கியது ஒரு வலிய கரம். “யார் அது.....? பேட்ரிக் நீயா.....? நீ எங்கே இந்தநேரம்.....?”, கேட்டவாறே மொத்தமாக அவன் கரங்களில் கொடுத்துவிட்டாள்.

“அம்மாவை வீட்டுக்கு கூட்டிபோக வந்தேன். பார்த்தால் நீ இந்த மூட்டையை வச்சுட்டு கஷ்டப்பட்டுட்டு இருந்த, சரி ஹெல்ப் பண்ணலாம்னு வந்தேன். ஆனால் வந்தது தப்புன்னு இப்போ புரியுது”, அவள் மொத்தமாக தன்னிடம் தள்ளிவிட்டதை கிண்டல் செய்தான்.

“இதுக்கே இப்படி சலிச்சுகிட்டா எப்படி பேட்ரிக்? இன்னும் எவ்வளவு சுமக்கவேண்டி இருக்கு. சரி ரொம்ப கஷ்டப்படுற நான் கொஞ்சம் எடுத்துக்கறேன்”, பெருந்தன்மையாக அதில் இருந்த சீருடை புடவையை எடுத்துக் கொண்டாள்.

“ஆமா அது ரொம்ப கனம்தான்....., அதை எடுத்ததும் அப்படியே பாதி கனம் குறைஞ்சுடுச்சு”, கேலி செய்தான்.

“இப்போ என்னங்குற.....? எடுத்துட்டு வர முடியுமா.....? முடியாதா....?”, அவள் கறார் குரலில் கேட்க,

“வேண்ணா உன்னையும் சேர்த்து தூக்கிட்டு போக நான் தயார்தான்”, அவளை ஒரு மாதிரி பார்த்தவாறு பதில் சொன்னான்.

“அப்படியா.....? அப்போ நான் ரெடி என்னையும் தூக்கு, சீக்கிரம்.....”, கண்களில் குறும்பு மின்ன, நின்ற இடத்தில் நின்று அவனைப் பார்த்தாள்.

‘ராட்சசி, இப்போ முடியாதுன்னு தெரிஞ்சே எப்படி நிக்கிறா பாரு?’, மனதுக்குள்ளே வெதும்பினான்.

“என்ன இப்போ என்னால் தூக்க முடியாது என்ற தைரியம்.....?”, அவளை ஏற இறங்க பார்த்து இளக்காரமாக கேட்டான்.

“இப்போகூட உன்னால் முடியும்”, விளையாட்டாக சொல்கிறாளா? இல்லை நிஜமாகவே சொல்கிறாளா? என்று அவன்தான் குழம்பி போனான்.

“என்ன பதிலையே காணோம்.....? எங்கேடா நிஜமாவே உன் முதுகில் தொத்திக் கொண்டு விடுவேனோ என்று பயந்துட்டியா? பயப்படாதே அப்படி எல்லாம் செய்யமாட்டேன்”, அவனுக்கு பொய்யாக தைரியம் சொன்னாள்.

“நீ செஞ்சாலும் செய்வ”, அவன் சொல்ல,

“செய்ய மாட்டேன்”, அவள் குரல் அவனையே திகைக்க வைத்தது.

“சரி அதை விடு, இப்போ இதை வாங்கிட்டுபோய் உன் ரூமில் வைக்கிற எண்ணமாவது இருக்கா? இல்லை நானே உன் ரூமுக்கு எடுத்துட்டுவந்து கொடுக்கணுமா?”, பேச்சை மாற்றினான்.

அப்பொழுதுதான் உணர்ந்தாள் அவர்கள் ஹாஸ்டலின் முன் நிற்பதை. “இங்கே ஹாஸ்டலுக்குள் ஜென்ட்ஸ் எல்லாம் வரக் கூடாது”, கெத்தாக சொல்லிவிட்டு அவனிடமிருந்து பாதி கிட்டை வாங்கிக் கொண்டு சென்றாள்.

“அப்படியா.....? அப்போ அன்னைக்கு நைட் மட்டும் அவங்க அனுமதி கொடுத்தா வந்தேன் நான்.....?”, ஒற்றை புருவம் தூக்கி, அவளையே இமைக்காமல் பார்க்க, அவன் குரலில் ஒரு நிமிடம் தயங்கியவள் முகத்தில் ஒரு மெல்லிய வெட்க புன்னகை.

“அப்போ..... நீங்கதான்.....”, மேலே என்ன கேட்கவென்று தெரியாமல் வெட்கமும், தயக்கமும், போட்டி போட்டது.

அதை சட்டென மறைத்துக்கொண்டு, “சிலநேரம் விதிமுறையில் ஒன்றிரண்டு மாறுதல்களும் உண்டே, அதாவது ப்ளம்பர், எலெக்ட்ரீசியன் இப்படி....., நான் உங்களை அப்படி நினைச்சுக்கறேன்”, சிரிக்காமல் அவள் சொல்லிய விதத்தில், வாய்விட்டு சிரித்தான் அவன்.

“வவவவ.....”, அவனுக்கு அளவம் காட்டிவிட்டு சென்றுவிட்டாள்.

“லூசு, லூசு எப்போ வந்து என்ன சொல்லுது பாரேன்..... . அப்போ அவன்தான் அன்னைக்கு என்னை ரூமில் கொண்டுவந்து விட்டானா? அதுகூட தெரியாமலா அப்படி தூங்கினோம்? அச்சு....., உனக்கு நல்லா மிதி வேண்டி இருக்கு...., அப்படியா தூங்குவ, இதுமட்டும் உன் அம்மாவுக்கு தெரியணும்.....”, தனக்கு தானே சொன்னவாறே சென்றாள்.

எதிரில் அவளை வித்தியாசமாக பார்த்த மாணவிகளை அவள் கண்டுகொள்ளவே இல்லை. ‘என்ன மந்திரிச்சு விட்டமாதிரி இருக்க?’, என்று பார்வையாலே வினவிய வைஷாலியை அசட்டை செய்துவிட்டு,

“நான் மீதி திங்க்ஸ் எல்லாத்தையும் அவன்ட்ட இருந்து வாங்கிட்டு வந்துடுறேன்....., இல்ல நீயும் என்னோட வாறியா?”, பேட்ரிக்கை தனியாக எதிர்கொள்ள வெட்கம் கொஞ்சம் தடுக்க கேட்டாள்.

“என்னது நான் உனக்கு துணைக்கா?”, தன்னையே கிள்ளி பார்த்துக் கொண்டாள்.

“ஏண்டி இப்போ உன்னையே கிள்ளிகிட்ட?”, கோபமாக கேட்டாள்.

“இல்ல....., நீயே இந்த உலகத்தை ஒத்தை ஆளா புரட்டுவ, இப்போ என்னை கூப்பிடுறியே அதான்.....?”, போலியாக வியந்தாள்.

“பொண்டாட்டி....., உன்னைப்போய் கூப்பிட்டேனே? என்னை சொல்லணும், உன்னை வந்து கவனிக்கிறேண்டி”, தலையில் அடித்தவாறே சென்றாள்.

பேட்ரிக்கிடம் எதுவும் பேசாமலே, மீதி பொருட்களை வாங்கி வந்து வைத்தாள். அவனிடம் விடைபெறவும் இல்லை. அதை அவனும் எதிர் பார்க்காமல் சென்றுவிட்டான். நேரம் ஒன்றை நெருங்கவே, புடவையை மாற்றிவிட்டு, நைட்டி போட்டுக் கொண்டாள்.

வைஷாலியுடன் சேர்ந்து லஞ்ச் சாப்பிட்டுவிட்டு, உறங்கலாம் என்று எண்ணும் வேளையில், அவளது பெயர் வெளியே ஏலம் போடுவதை உணர்ந்தாள்.

“ஏய் எதுக்குடி இப்போ இப்படி கத்துறீங்க?”, அறையில் இருந்து வெளியே வந்து கேட்டாள்.

“அர்ச்சனா உன்னை பார்க்க விசிட்டர் வந்திருக்காங்களாம்”.

‘ஹையோ பேட்ரிக் கிட்டே சொல்லாமலே வந்துட்டனே, அவனா.....? இன்னும் போகலையா.....?”, எண்ணியவாறே, உடையை வேகமாக மாற்றிவிட்டு, ஆவலாக கீழே இறங்கி வந்தாள். வெளியே காத்திருந்தார் ஸ்டெல்லா. மேம் நீங்களா? சொல்லுங்க..... என்ன விஷயம்? அவருடன் விசிட்டர் அறைக்கு நடந்தவாறே கேட்டாள்.

“அர்ச்சனா நான் காலேஜில் உன்னிடம் இந்த நோட்டை கொடுக்க மறந்துட்டேன். இதுதான் உங்களோட முதல் அசைன்மென்ட், நான் உன்னிடம் ஒரு நோட் தான் கொடுப்பேன். உனக்கு பதினைந்துநாள் டைம்.

அதுக்குள்ளே இந்த ஹாஸ்ட்டலில் இருக்கும் எல்லோரும் இதை கோப்பி(copy) பண்ணி இருக்கணும்.

பதினாறாவது நாள் என் டேபிள்ல உங்க எல்லோரோட நோட்டும் இருக்கணும்", அதென்னமோ ரொம்ப சாதாரண விஷயம் என்பதுபோல் சொன்னார்.

அவர் பேச பேச அந்த நோட்டில் எத்தனை பக்கங்கள் இருக்கிறது என்று பார்க்க, அந்த 260 பக்க நோட் முழுவதும் நிரம்பி இருந்தது எழுத்து.

"மேம்....., இது மொத்தமும் எழுதணுமா.....?", கொஞ்சம் கலக்கமாகவே கேட்டாள்.

"ஆமா ஏன்?", புருவம் சுருக்கி, கேட்டார்.

"இல்ல....., எனக்கு பத்து பக்கம் ஒரு நாள் எழுத முடியாது. இதில் நான் ஒருத்தி இந்த நோட்டை கோப்பி பண்ணிட்டு, பிறகு இந்த ஹாஸ்டல்ல இருக்குற எல்லோரும் கோப்பி பண்ணனும்னா.....? குறைந்தது நாலு மாசம் ஆகும். நீங்க என்னமோ பதினைந்துநாள் டைம் தாறீங்க", அதிர்ச்சியாகவே கேட்டாள்.

"அது உன் வசதியை பொறுத்தது. பதினாறாவது நாள் என் டேபிளில் நோட்ஸ் எல்லாம் இல்லன்னா.....?, வைக்காதவர்களின் இன்டெர்னல் மார்க்கில் நான் கை வைக்கவேண்டி வரும்", இத்தோடு பேச்சு முடிந்தது என்பதுபோல் எழுந்து சென்றுவிட்டார்.

"அது ஏன் ஆண்டவா எனக்கு மட்டும், இருக்குறதும் சரியா வர மாட்டிக்கு, வாய்க்கிறதும் சரியா இருக்க மாட்டிக்கு. நான் உனக்கு அப்படி என்னடா கெடுதல் செய்தேன்?. உன்னை சிலுவையில் அறைஞ்சது சரிதான் போ.....", அங்கே யாரும் இல்லை என்ற எண்ணத்தில் சத்தமாக சொன்னாள்.

“ஆண்டவரையும் விட்டுவைக்க மாட்டியா?”, திடீரென்று ஒலித்த பேட்ரிக்கின் குரலில் திடுக்கிட்டு பார்த்தாள்.

“விட்டு வைக்கிறதா? நானே கையில் சிக்க மாட்டானான்னு காத்துட்டு இருக்கேன் நீ வேற? சரி எங்கே உன் அம்ம்ம்மா?”, கடுப்பாக கேட்டாள்.

“அவங்க வெளியே யார்ட்டயோ பேசிட்டு இருக்காங்க. இப்போ எங்க அம்மாமேல் உனக்கு என்ன கோபம் ம்?”, அவள் அருகில் அமர்ந்தான்.

“உன் அம்மாமேல் எனக்கு என்ன கோபம்? எல்லாம் அந்த மேம் மேலதான் ஆத்திரமா இருக்கேன். அது என்னை படுத்துறதுக்கு, என்னைக்காவது ஒருநாள் தலையை பிச்சுகிட்டு இந்த காலேஜ் முழுக்க பயித்தியமா சுத்தபோறேன் பாரேன்”.

“ஹேய் அறிவில்ல, என்ன பேசுற நீ. இப்போ என்ன நடந்தது? எதுக்கு இப்படியெல்லாம் சொல்லுற? அறஞ்சேன்னா கன்னம் ரெண்டும் வீங்கிடும். என்ன பேசுறோம்னு ஒரு இது வேண்டாம்? ச்சே.....”, கோபமாக சொன்னவாறு அங்கிருந்து கிளம்ப போனான்.

அவன் கையை அழுத்தமாக பிடித்து தடுத்தாள். “விடு என்னை, நான் கிளம்புறேன்”, கையை அவளிடமிருந்து உருவினான்.

“தாராளமா போ....., ஆனால் கோபமா மட்டும் போகாதே.....”, அவனை பார்ப்பதை தவிர்த்தாள்.

“ஏன்.....?”, கண்கள் மின்ன ஆர்வமாக கேட்டான்.

“என்ன ஏன்.....? பின்ன நீ மட்டும்தான் இப்போ எனக்கு கிடச்சுருக்க அல்லக்கை, உன்னை விட்டுட்டேன்னா வேற யார்ட்ட நான் ஹெல்ப் கேப்பேன்”, எதையோ எதிர்பார்த்து காத்திருந்தவன், அவள் பேச்சில், முகம் கோணலாக மாறியது.

அவன் முகம் போன போக்கை பார்த்து, மனதுக்குள் அவனை நினைத்து புரண்டு, புரண்டு கெக்கே பிக்கெவென்று சிரித்துக் கொண்டு வெளியே முகத்தை பாவமாக வைத்திருந்தாள். அவள் முகத்தில் சிரிப்பை காணாதவனால், அவள் மனதில் நினைப்பதை புரிந்துகொள்ள முடியவில்லை.

அவனுக்கு அர்ச்சனாவைப் பற்றி முதல் நாள் தன் தாய் சொன்னது நினைவிலாடியது. அன்று மேரியிடம் விடைபெற்று, அர்ச்சனாவின் புகைப்படங்களை தன் போனில் வாங்கிக் கொண்டு வந்த ஸ்டெல்லா மகனை தேடினார்.

அவனோ மருத்துவமனைக்கு கிளம்பும் அவசரத்தில் இருந்தான். அவனை கட்டாயப் படுத்தி அமர வைத்து, தன் போனில் இருந்த அர்ச்சனாவின் புகைப்படத்தை பார்க்குமாறு சொன்னார். வேண்டா வெறுப்பாக பார்த்தான் அவன்.

பார்த்தவன் திகைத்தான், அதற்கு காரணம் புகைப்படத்தில் இருந்த அர்ச்சனா, சிறிது தலையை சரித்து, ஒற்றை கண்ணை சிமிட்டி, நாக்கை துறுத்தி குறும்புடன் அவனைப் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தாள்.

தாயின் கட்டாயத்துக்காக பார்த்தவன், அவளது குறும்புத்தனமான புகைப்படத்தில் விழுந்தான் என்பதுதான் சரியாக இருக்கும். அதிலும் ஒற்றை கண்ணடித்து அவள் புகைப்படத்தில் பார்த்துக் கொண்டிருந்த விதம்....., அவனை பார்த்து சிரிப்பதுபோல், தன்னை பார்த்து குறும்புத்தனம் செய்வதுபோல் இருந்தது.

“என்னமா.....? இப்படி ஒரு போட்டோவை வாங்கிட்டு வந்து இருக்கீங்க?”, அதிர்ச்சியாக வினவ முயன்றாலும், குரல் மகிழ்ச்சியில் முக்குளித்தே வந்தது.

மகனது முகத்தையே பார்த்துக்கொண்டிருந்த ஸ்டெல்லாவின் கண்களில் மகனது ஆர்வமும், மகிழ்ச்சியும், சிறு அதிர்ச்சியும் விழ மறக்கவில்லை.

“பேட்ரிக்....., என்ன அதிர்ச்சியா கேட்டுட்டு அப்படியே போட்டோவை பாத்துட்டே இருக்க? அதில் இன்னும் நிறைய போட்டோ இருக்கு பார்”, தாய் சொன்னவுடன், வேகமாக அடுத்த புகைப்படங்களையும் பார்க்க துவங்கியவன், தாயின் குரலில் இருந்த கேலி, மகிழ்ச்சியை இனம் கண்டுகொண்டான் இல்லை.

எனவே அதை மூளையில் பதிவுசெய்ய முடியவில்லை. வேகமாக தன் அலைபேசியை எடுத்து, ப்ளூடூத் வழியாக அனைத்து புகைப்படங்களையும் அனுப்பிய பிறகுதான் ஒரு நிலைக்கு வந்து, தாயை நிமிர்ந்து பார்த்தான்.

அவரை பார்த்த பிறகுதான்....., தான் செய்த செயல்களின் வீரியம் புரிந்தது. “அம்மா....., அது.....?”, தயக்கமாக இழுத்தான்.

“பேட்ரிக்....., இன்னும் அப்பகிட்ட கூட சொல்லலை, அதுக்கு முன்னாடி என்ன இது.....?”, அவருக்குமே மகனின் ஆர்வமும், வேகமும் கொஞ்சம் கலக்கத்தை கொடுத்தது.

அர்ச்சனாவைப் பற்றி மேரி சொன்ன விஷயங்கள் அப்படி. எனவே அவற்றை மகனிடமும் பகிர்ந்துகொண்டார். அவளைப் பற்றி தெரியவந்த விஷயங்கள் அவன் மனதில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தின என்றுதான் சொல்லவேண்டும்.

இப்படி ஒரு குடும்பத்தில் பிறந்து, பாசத்துக்காக ஏங்கி, பெற்றோர் அரவணைப்பு இல்லாமல், குடும்ப வாழ்வை வெறுக்கும் அவள் மனநிலை அவனுக்கு புரிந்தது.

“அம்மா....., நீங்களே ஒரு முடிவெடுத்துவிட்டுதான் வந்து இருக்கீங்க. உங்க நம்பிக்கையை நான் பொய்யாக விட

மாட்டேன். அச்சுதான் உங்க மருமக, அவ மனதில் இடம் பிடிக்கவேண்டியது என் பொறுப்பு", ஒரு முடிவாக சொன்னான்.

'அச்சு இனிமேல் நீ தனியா இல்லை. இந்த உனக்கென்று ஒருவன் நான் இருக்கிறேன். இங்கே வந்ததுமுதல் நீ என் நிழலில்தான் இருப்பாய். உன்னை இனிமேல் தனிமையை உணரவே விடமாட்டேன். உன்னை அன்புக்கு ஏங்கவும் விட மாட்டேன்', மனதுக்குள் தனக்கு தானே சொல்லிக் கொண்டான்.

"என்ன பகல் கனவு அப்படி....., ரிக்.....", அவன் கையை பிடித்து உலுக்கவே, நனவுக்கு வந்தான்.

"சரி நான் கிளம்புறேன்", கொஞ்சம் சமாதானமாக சொல்லிவிட்டு அவன் சென்றவுடன், அறைக்கு வந்து வயிற்றை பிடித்துக் கொண்டு, விழுந்து விழுந்து சிரித்தாள்.

வைஷாலி அவள் சிரிப்பதை கொஞ்சம் கலவரமாகவே பார்த்துக் கொண்டிருந்தாள். "என்ன பொண்டாட்டி.....? என்னடா இவ லூசாயிட்டாளான்னு பாக்குறியா? அவ்வளவு சீக்கிரம் ஆகமாட்டேன்", சொல்லிவிட்டு சிரிப்பை தொடர்ந்தாள்.

வைஷாலி இதெல்லாம் எனக்கு சம்பந்தமே இல்லாதது என்பதுபோல் அவளை பார்த்துவிட்டு உறங்க முயன்றாள்.

"வைஷு தூங்கிடாதே, இதோ வாறேன்", வேகமாக வெளியேறியவள் பத்துபேருடன் உள்ளே வந்தாள்.

'என் தூக்கத்துக்கு வேட்டு வைக்கத்தான் இவ்வளவு வேகமாக போனாயா?', என்று அவளை ஒரு பார்வை பார்க்க,

"அம்மா தாயே நான் உன் தூக்கத்தை கெடுக்கணும்னு நினைக்கலை. நம்மளோட முதல் அசைன்மென்ட் கொடுத்து இருக்காங்க. பதிமூன்றுநாள் டைம் இருக்கு. இப்போ

எங்களோட எழுதுவதா இருந்தால் வா. இல்லையென்றால் தூக்கத்தை கான்ட்டினியூ பண்ணு", சொல்லிவிட்டு ஒரு நோட்டை எடுத்துக் கொண்டு எழுத அமர்ந்தாள்.

வைஷாலியும் அடித்து பிடித்து ஓடி வந்தாள். "ஏண்டி என்னை கூப்பிடாமல் எழுதிடுவியா நீ?", அவள் முதுகிலேயே போட்டுவிட்டு, அவர்களுடன் சேர்ந்து கொண்டாள்.

"அர்ச்சனா ஒரு நோட்டை வைத்துக்கொண்டு எத்தனைபேர் எழுத முடியும்?", ஒருத்தி முணுமுணுத்தாள்.

"ஹேய் ஐடியா இல்லாமலா உங்களை கூப்பிட்டேன். யாராவது ஒரு ஆள் கொஞ்சம் சத்தமாக வாசித்துவிட்டே எழுதணும், மற்றவர்கள் அவ சொல்லுவதை கேட்டு எழுத வேண்டியதுதான். உங்கள்ள யாருக்கு இந்த ஐடியா பிடிக்கலையோ, அவங்க வேற யோசனை சொல்லுங்க அப்படியே செய்யலாம். இன்னொரு விஷயம் நீங்க எழுதி முடித்தவுடன் உங்களோட பத்து நோட்டும் எனக்கு வேணும்.

அதாவது நம்மளோட இந்த மெயின் கோப்பியோட சேர்த்து பதினொன்று. இந்த பதினொன்று நோட்டையும் மீதி இருக்கும் பதினொன்று அறைகளில் கொடுக்கணும். அப்படி உங்க நோட்டை தர முடியாது என்று சொல்பவர்கள் தயவுசெய்து இங்கிருந்து கிளம்பிடுங்க.

நான் வேற ஆளை பாத்துக்கறேன்", சொல்லிவிட்டு அவர்கள் முகத்தை பார்க்க, அனைவருமே அதை ஒத்துக் கொண்டார்கள்.

வைஷாலி வாசிக்க வாசிக்க, அனைவரும் அதை கேட்டு எழுத துவங்கினர். இரண்டுமணிக்கு துவங்கி, இரவு பதினொன்று மணிவரை எழுதினார்கள். இடையில் நான்கு முப்பதுமுதல் ஐந்து மணிவரையும், இரவு ஏழு முப்பது மணிமுதல், எட்டு மணிவரையும் காபி சாப்பிடவும், இரவு உணவு சாப்பிடவும் நேரம் ஒதுக்கிக் கொண்டார்கள்.

எழுதி முடித்தவுடன், அனைவரிடமிருந்தும் நோட்டை வாங்கிக் கொண்டு, பக்கத்து அறைகளுக்கு சென்று, அனைவரையும் எழுப்பி நோட்டை கொடுத்தாள். நாளை மாலைக்குள் அவர்களின் நோட்டை சேர்த்து, தான் கொடுத்த நோட்டும் வேண்டும் என்று சொன்னாள்.

மறுநாள்முதல் காலை இரண்டு மணிநேரம் மட்டும் கல்லூரி இருந்தது. ஐந்து நாட்களுக்குள் ஹாஸ்ட்டலில் இருந்த அனைவரும் முதல் அசைன்மென்ட்டை முடித்து விட்டார்கள். ஸ்டெல்லாவின் டேபிளில் அவர்களின் நோட்டுக்களும் அடுக்கி வைக்கப் பட்டன.

புதிதாக வரும் மாணவிகள், வீட்டிலிருந்து வந்துபோகும் மாணவிகளுக்கும் நோட்டு கொடுக்கப்பட்டு, எழுதி வாங்கப் பட்டது. கல்லூரியில் இருந்த அனைத்து ஆசிரியர்களுக்கும் இது தெரியவந்ததில் அனைவருக்கும் ஒரே வியப்பு. இதுவரை இருந்த பேட்ச்களிலேயே, அர்ச்சனாவின் பேட்ச் போல ஒற்றுமையான ஒரு பேட்ச் பார்த்ததில்லை என்ற பெயர் ஒரே மாதத்தில் வாங்கி விட்டார்கள்.

கல்லூரியின் முதல்வரே அவளை அழைத்தார். அவளை பாராட்டவேண்டும் என்பது அவரது நோக்கமாக இருந்தாலும், அதை வெளிப்படையாக செய்ய யாருமே தயாராக இல்லை. அர்ச்சனாவின் விளையாட்டுத்தனமும் அனைவருக்கும் தெரிந்தே இருந்தது.

வயது பெண்களைப்போல் அவள் நடந்துகொள்ளாமல், சின்ன பிள்ளையாக இங்கும் அங்கும் ஓடி ஓடி வேலை செய்வதை வியப்பாய் பார்த்தார்கள். முதல்வர் அழைப்பதாக ஸ்டெல்லா வந்து சொல்லவே அவர்களோடு சென்றாள்.

அங்கே வெண்ணிற உடையில் அமர்ந்திருந்தார் சிஸ்டர் ஞானசௌந்தரி. “வாம்மா காலேஜ் எல்லாம் எப்படி போகுது?”.

‘அது ஒரே இடத்தில்தானே நிக்குது. எங்கே போகணும்னு சொல்லுறாங்க’, யோசனையாக அவரை பார்த்தாள்.

“முதல் அசைன்மென்ட் நல்லபடியாக முடிந்துவிட்டதாக கேள்விப்பட்டேன் ரொம்ப சந்தோசம். இப்போ கிட்டத்தட்ட, எல்லா சீட்டும் பில் ஆயிடுச்சு”,

‘இதை ஏன் என்கிட்டே சொல்லுறாங்க?’, மண்டை காய்ந்தாள்.

“எல்லா ஸ்டூடண்ட்டையும் நான் பாக்கணும்.....”.

“நான் வேண்ணா கிரௌண்டில் அவங்களை ஆஜராக சொல்லவா?”, அவர் முடிக்கும் முன்பே, துடுக்குத் தனமாக கேட்டாள்.

ஸ்டெல்லா வேகமாக அவள் கையை பிடித்து அழுத்தினார். ‘ஆஹா....., தப்பான டைம்ல ஆஜர் ஆகிட்டோம் போல இருக்கே’, எண்ணியவாறே முதல்வரை பார்க்க, இங்கே கிட்டே வா என்பதுப்போல் கையால் அழைத்தார்.

‘ஹையோ கிட்டே கூப்ட்டு அடிப்பாங்க போல இருக்கே. இன்னைக்கு நான் யார் முகத்தில் முழிச்சேன்’, வேகமாக மூளையை கசக்கினாள். விடை கிடைக்கவில்லை. ‘சமயத்தில் மூளை கூட வேலை நிறுத்தம் செய்யுதே’, எண்ணம் ஓடினாலும், அவர் அருகில் சென்று நின்றாள்.

பகுதி - 12

உன் பாராட்டு மழையில்

நனைவதை விட

உன் பார்வை மழையில்

நனைவது பிடிக்குமெனக்கு.....

முதல்வர் ஞானசௌந்தரி அருகில் சென்று நின்று அவர் முகம் பார்த்தாள். மேஜைமேல் இருந்த ஒரு ஜெபமாலையை எடுத்து அவள் கையில் கொடுத்தார்.

‘இதை யாருக்கு கொடுக்கணும்’, கேள்வியாக அவரை பார்த்தாள்.

“இது உனக்குத்தான், என் முன்னாடி தைரியமா பேசுன முதல் ஸ்டூடண்ட் நீதான். அதுக்குத்தான் இந்த பரிசு”, சாந்தமாக சொன்னார்.

“நீங்க பாக்கதுக்கு அவ்வளவு பயங்கரமா எல்லாம் இல்லை.....”, மெதுவாக சொன்னாள்.

மெல்லிதாக சிரித்தார். “கொஞ்சம் பேசினால் உடனே உன் வேலையை காட்டுகிறாயே. முதலில் நான் சொல்ல வருவதை கவனி. நான் உங்கள் அனைவரையும் சந்திக்கவேண்டும். ஆனால் உங்கள் தனித் திறமைகளோடு உங்களை நீங்களே எனக்கு அறிமுகப்படுத்த வேண்டும்.

அது எப்படியென்று நிர்மலா உங்களுக்கு விளக்குவாங்க. நீங்க இப்போ போங்க”, கனிவாக சொன்னார்.

மறுத்துபேசவோ, மனதுக்குள் கவுண்டர் கொடுக்கவோ மனமில்லாமல் வெளியே வந்து காத்திருந்தாள். ‘இதை ஸ்டெல்லா மேமே(madam) சொல்லி இருக்கலாமே. எதுக்கு என்னை கூப்பிட்டுவிட்டு, இந்த ஜெபமாலையை

தரவேண்டும்?’, சிந்தித்தவாறே அந்த ஜெபமாலையை பார்க்க, ஐம்பத்து மூன்று மணிகளுடன் கண்ணை பறிக்கும் ஒளியுடனும் திகழ்ந்தது அந்த ஜெபமாலை.

அதன் ஒளியும், முத்துக்களின் பளபளப்புமே அதன் விலை எவ்வளவு இருக்குமென்று அவளுக்கு சொன்னது. உள்ளங்கையில் அதை வைத்தவாறே இதழ் ஒற்றினாள், அந்த ஜெபமாலையை.

சிறிது நேரத்தில் வந்தார் ஸ்டெல்லா. “வா அர்ச்சனா, இதை நானே அனௌன்ஸ் பண்ணுறேன்”, அவளையும் அழைத்துக்கொண்டு ஹாலுக்கு சென்றார். செல்லும் முன்னர் கொஞ்சம் பெருமையாக அவளையும், ஜெபமாலையையும் பார்த்தார். அவருக்கு தானே தெரியும் முதல்வர் அவ்வளவு சீக்கிரம் யாரையும் பாராட்ட மாட்டார் என்பது.

இருவரும் ஹாலுக்கு வந்தனர். மைக் முன்பு நின்று பேசினார். “ஹாய் டீச்சர்ஸ், இன்னும் ஒரு வாரத்தில் உங்களுக்கு கிளாஸ் துவங்க போகிறது. அதற்கு முன்பு முதல்வர் உங்கள் அனைவரையும் சந்திக்க விரும்புறாங்க.

அதனால் உங்களை நீங்களே உங்கள் திறமைகளோடு அறிமுகம் செய்ய வேண்டும். அது பாட்டாக இருக்கலாம், டான்ஸ், சிறு நாடகம், கவிதை, கதை சொல்லுவது இப்படி எதுவாகவும் இருக்கலாம். குழுவாகவோ, தனிநபராகவோ செய்யலாம்.

ஆனால் அனைவரின் பங்களிப்பும் இருக்க வேண்டும்”, நிதானமாக அறிவிப்பை சொல்லிவிட்டு, வகுப்பு இன்று முடிந்துவிட்டது என்று சொல்லிவிட்டு சென்றார்.

“அர்ச்சனா நீ என்ன செய்ய போற?”, வைஷாலி அர்ச்சனாவிடம் கேட்டாள்.

“நானா..... பாட்டு பாடலாம்னு இருக்கேன்”, அவள் அவ்வாறு சொல்லவுமே அவளுடன் சேர்ந்து

நடந்துகொண்டிருந்தவர்கள் நின்றே விட்டார்கள்.

அவளுடன் சென்ற அனைவர் முகங்களிலும் கலவரம். “என்ன பாட்டுன்னு கொஞ்சம் சொல்லிடேன்”, பீதியாகவே ஒருத்தி கேட்டாள்.

“அதான் அன்னைக்கு நைட் உங்ககிட்டே பாடி காட்டினேனே, நீங்க கூட நல்லா இருக்குன்னு சொன்னீங்களே அந்த பாட்டுதான்”, இவள் கூலாக சொல்ல, இவளை சுற்றி இருந்தவர்கள்தான் பேயறைந்தவர்கள் போல் ஆனார்கள்.

“நீ நிஜமாத்தான் சொல்லுறியா?”, வீணா கேட்டாள்.

“நான் என்னைக்காவது விளையாட்டுக்கு பேசி பார்த்து இருக்கியா?”, இடுப்பில் கையை வைத்து முறைத்து பார்த்தாள் அவளை.

“ஹேய் வேண்டாம்..... இந்த விஷ பரீட்சை. அன்னைக்கு பிரின்சிபால் கூட வாராங்களாம். எங்களை அலறவிட்ட பரவாயில்லை, இப்போ மேம், ப்ரின்சி எல்லோரையும் ஓட விடுறது அவ்வளவு நல்லாவா இருக்கும்?”, கவலையாக கேட்டாள்.

“நல்ல்லல்ல்லா தான் இருக்கும்”, அழுத்தி சொன்னாள் அர்ச்சனா.

இவர்கள் அனைவரின் கவலைக்கும் காரணம் இருந்தது. அன்று ஒருநாள் இரவில் சாப்பிட்டு முடித்துவிட்டு கிரௌண்ட்டில் வந்து அமர்ந்து பேசிக்கொண்டிருக்கும் பொழுது, பேச்சு அவர்களின் ரசனைகள் திறமைகள் பற்றி திரும்பியது.

சிலர் படம் வரைவதாக சொன்னார்கள்.சிலர் ஸ்பீச் நன்றாக பேசுவதாக சொன்னார்கள். ஒருத்தி இனிமையாக பாடுவேன் என்று சொன்னாள். ஒருத்தி எம்ப்ராய்டரி நன்றாக போடுவதாக சொன்னாள். அர்ச்சனா மட்டும் பேசாமல் இருந்தாள்.

“அர்ச்சனா, என்ன நீமட்டும் பேசாமல் இருக்க?”, வேணி துருவினாள்.

“இல்ல எனக்குள்ளே பல திறமைகள் ஒளிஞ்சு இருக்கு, அதில் எதை உங்களிடம் சொல்ல, விடன்னு தெரியாமல் தவிக்கிறேன்”, கையை ஆட்டி ஆட்டி வித்தியாசமாக சொன்னாள்.

“அதில் ஏதாவது ஒன்று ரெண்டை எடுத்துவிடு, நாங்க தெரிஞ்சுக்கறோம்”.

“உதாரணத்துக்கு நான் ரொம்ப நல்லா பாடுவேன். அருமையா ஜோக், கடி ஜோக் சொல்லுவேன், டான்ஸ் ஆடுவேன்.....”, ஒவ்வொன்றாக அடுக்கவே,

“போதும் நீ வெறும் வாயிலேயே முழம்போடுவ, எங்கே முதல்ல ஒரு பாட்டை பாடு கேப்போம்”, அசுவாரசியமாக கேட்டார்கள்.

“பாட்டு பாடினால் மட்டும் போதுமா? இல்லை கூட சேர்ந்து டான்ஸும் ஆடட்டுமா?”, பக்காவாக தயாரானாள் அவள்.

அவளை கையை பிடித்து அமர வைத்தாள் வைஷாலி. “அம்மா தாயே நீ முதல்ல பாடு, பிறகு ஆடலாம்”, அபூர்வமாக இப்படி பேசுவாள் அவள்.

“ஏய் ஏண்டி அவளை தடுக்குற?”, வீணா கேட்டாள்.

‘உனக்கு இவளை பத்தி சரியா தெரியலை?’, மனதுக்குள் நினைத்துக் கொண்டாள்.

“இதுக்கெல்லாம் முதல்ல மூட் கிரியேட் பண்ணணும்.....”, சொல்லிவிட்டு சுருதி சேர்த்தாள். அவள் செய்கையை வித்தியாசமாக பார்த்துக் கொண்டிருந்தனர் அனைவரும்.

ஹம்..... ஹூம்..... ஹூம்.....

சிவராத்தி தூக்கமேது ஹோ.....

முதல்ராத்திரி துடங்கும்போது ஹோய்.....

பனி ராத்திரி ஓஹோ..... ஓஹோ..... பட்டு பாய்விரி

சுப ராத்திரி ஓஹோ..... ஓஹோ..... புது மாதிரி.....

விடிய விடிய.....

சிவராத்தி தூக்கமேது ஹோ.....

முதல்ராத்திரி துடங்கும்போது.....

சத்தியமாக அங்கே இருந்த யாருமே, அவள் இப்படி ஒரு பாடலை பாடுவாள் என்று எதிர் பார்க்கவில்லை. அவளை எப்படி வாயை மூட வைக்க என்று அவர்கள் யோசிக்க, அவளோ பல்லவியை முடித்து சரணத்துக்கு தாவினாள்.

வெப்பம் தீர வந்ததடி வேப்பமர காத்து..... ஆஹா.. ம்ஹும்...

வச்சுக உன் கச்சேரிய உச்சகத்த பாத்து ஹோ... ஹோ.. ஹம்...

தெப்பம்போல தத்தளிக்கும் செம்பருத்தி நாத்து ம்ஹும்... ம்ஹும்...

அம்பலத்தில் ஆடுறப்போ உன் பதத்தை காட்டு ம்ஹும்... ம்ஹும்...

ராஜாமணி மாய மோகினி ரோஜா மலர் நீ.....

தேமாங்கனி தேவ ரூபினி தேன் வாங்கலாம் நீ.....

சுப ராத்திரி ஓஹோ..... ஓஹோ..... புது மாதிரி.....

விடிய விடிய.....

சிவராத்தி தூக்கமேது ஹோ.....

முதல் ராத்திரி..... புது மாதிரி.....

அர்ச்சனா பாடிய பாடலில் சுற்றி இருந்தவர்கள் அனைவரும் கதி கலங்கி போனார்கள். வீணாவை ஒரு பார்வை பார்த்தாள் வைஷாலி. வேகமாக தலை கவிழ்ந்தாள் அவள். இன்னும் முழுதாக பாட போனவளை அமுக்கி அமர வைத்தார்கள்.

அர்ச்சனாவோ, வைஷாலியை பார்த்து , வேறு யாருக்கும் தெரியாமல் கண்ணடித்தாள். 'அடிப்பாவி எல்லாமே தெரிஞ்சுதான் செய்யிறியா? உன்னை என்ன செஞ்சால் தகும்', வைஷாலியின் பார்வை கேள்வி கேட்டது.

"வைஷு....., எல்லாம் ஒரு ஜாலிக்குதான் விடு விடு", அவள் காதில் கிசுகிசுத்தாள்.

"நல்லவேளடி இவளை பாடிட்டே ஆடுன்னு சொல்லாமல் விட்டோம்..... அப்படி மட்டும் சொல்லி இருந்தோம்..... என்ன ஆயிருக்கும்?", திகைப்பு மாறாமலே கேட்டாள் பிரியா.

"எல்லோருக்கும் மூடு கிளம்பி இருக்கும். இவ பாடதுக்கு முன்னாடி, ரெண்டு டயலாக் சொல்லி ஆரம்பிச்சாளே, அப்போவே நாம சுதாரிச்சு இருக்கணும். வாய பொளந்து கேட்டுட்டு இருந்தது நம்ம தப்பு. ஆனாலும் ஒண்ணே ஒண்ணை ஒத்துட்டுதான் ஆகணும், கொஞ்சம் கூட சுருதி தப்பாமல், அந்த பாட்டோட பீல் குறையாமல் சும்மா அட்டகாசமா பாடுனா", சிலிர்த்துக் கொண்டாள் அவள்.

வைஷாலியோடு சேர்ந்து மற்றவர்களும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். "நல்லா தானே இருந்தது. பிறகு ஏண்டி என்னை முழுசா பாட விடலை, லூசுங்களா?", அலுத்துக் கொண்டாள் அர்ச்சனா.

“உனக்கு இப்படி ஒரு கவலைவேற இருக்காடி? ஆத்தாடி இதுக்குமேல என்னால முடியாது?”, தலைக்குமேலே கையெடுத்து கும்பிட்டாள்.

“வைஷு....., நீ இந்த டயலாக் சொன்னாலாவது நான் ஒத்துப்பேன். அதென்னடி அவ இப்படி சொல்லுறா?”, வைஷாலிக்கு மட்டும் கேட்குமாறு அவள் காதில் சொன்னாள்.

அர்ச்சனாவின் தொடையில் நறுக்கென கிள்ளினாள் வைஷாலி. “மவளே வாயை தொறந்த கொன்னுடுவேன்”, அவளும் அதே குரலில் அவளுக்கு பதில் கொடுத்தாள்.

அர்ச்சனாவின் பழக்கத்தில் இதுவும் ஒன்று. வைஷாலியும் அவளும் தனியாக இருக்கும் பொழுது அவளை எவ்வளவோ கேலி செய்வாள். பொண்டாட்டி என்றுதான் அழைப்பாள். அண்ணாவை வைத்து அவளை கிண்டல் செய்வாள். ஆனால் கூட்டத்தில் ஒரு பொழுதும் வைஷாலியை கேலி பொருளாக்கவே மாட்டாள்.

அது வைஷாலிக்கும் தெரியும். எனவேதான் அவர்கள் நடப்பு, தனித்துவமாக தொடர்ந்தது.

“என்ன உங்களுக்குள்ள ரகசியம்”, வைஷாலியும், அர்ச்சனாவும் தனியாக பேசுவதை பார்த்து வேணி கேட்டாள்.

“அது ஒண்ணும் இல்லை. பாட்டு பாடி ஒரு திறமையை நிரூபிச்சுட்ட, அடுத்து ஜோக் சொல்லுன்னு சொல்லுறா?”, சாமர்த்தியமாக பதில் சொன்னாள் அர்ச்சனா.

“இன்னுமா நீ இவளை நம்புற? அர்ச்சனா....., உன்னோட சாம்பிள் திறமையே ஜீரணமாக எங்களுக்கு கொஞ்ச நேரம் ஆகும். அதனால் இப்போதைக்கு வேண்டாம் விட்டுடேன்”, அலறினார்கள் அனைவரும்.

“கழுதைகளுக்கு தெரியுமா கற்பூர வாசனை, எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்காமலா போகும்? அப்போ பாடிக் காட்டுறேன் இந்த பாட்டை”, அனைவருக்கும் சவால் விட்டாள்.

அதை அனைவரும் இப்பொழுது நினைத்து பார்த்துதான் கலவரமானார்கள். ஹாஸ்டலுக்கு சென்றவர்கள் நிதானமாக சாப்பிட்டுவிட்டு உறங்க துவங்கினார்கள். அந்த நேரம் வந்தாள் பெமிலா.

அவளை பார்த்தவுடன், “ஹாய் பெமி டார்லிங் எப்படி இருக்க. என்ன ஒன் வீக்ன்னு சொல்லிட்டு பத்துநாளா ஆளை காணோம்”, அவளை தாவி அணைத்து கன்னத்தில் முத்தமிட்டாள்.

இவளது அதிரடியில் மிரண்டாள் அவள். “இல்....ல ஊருக்கு போய்ட்டோம் அதான் பத்துநாள் ஆயிடுச்சு. இங்கே காலேஜ் இருந்துதா என்ன? “நீ இந்த பழக்கத்தை விடவே இல்லையா?”, கன்னத்தை தடவியவாறே, கவலையாக கேட்டாள்.

“அட அதெல்லாம் நாம பாத்துக்கலாம். லஞ்ச் சாப்ட்டியா நீ? இல்லன்னா கான்டீன் போய் சாப்பிட்டு வா”, அக்கறையாக சொன்னாள்.

“இல்ல நான் சாப்பிட்டுதான் வந்தேன்”, வேகமாக சொன்னாள்.

“அப்போ சரி, போய் நிம்மதியா தூங்கு எல்லாம் பிறகு விளக்கமா சொல்லுறேன்”, அவளை அனுப்பினாள்.

“அர்ச்சனா அந்த அசைன்மென்ட் பத்தி சொல்லவே இல்லை.....?”, அவளை கேள்வியாக கேட்டாள் வைஷு.

“பொண்டாட்டி....., அவளே இப்போதான் வந்துருக்கா. வந்த உடனே அவளை கலவரப்படுத்தணுமா? ஒரு நோட்டும்

நாமளும் தானே பாத்துக்கலாம்”, சொன்ன அவளையே விழி விரித்து பார்த்தாள் வைஷாலி.

“பொண்டாட்டி இந்த பார்வையில்ல தாண்டி அண்ணாவை கவுத்துருப்ப. என்ன பார்வை அது?, பம்பிளிமாஸ் மாதிரி கன்னம், அப்படியே கடிச்சு திங்கணும் போல இருக்குடி. நான் ஆம்பளையா பொறக்காமல் போயிட்டேனே?”, பொய்யாக புலம்பினாள்.

“நீ உதை வாங்கபோற என்கிட்டே. அதென்ன அவளை பாத்ததும் பாசம் பொங்குது ”, ஒற்றை விரல் காட்டி மிரட்டியவாறு கேட்டாள்.

“பாசம் எங்கே பொங்குச்சு.....? ஓ..... , நீ அவளுக்கு முத்தம் குடுத்ததை கேக்குறியா? சும்மாதான்.....”, கண்ணடித்து சொல்லிவிட்டு கட்டிலில் அமர்ந்து எதையோ எழுத துவங்கினாள்.

ஒரு ஒருமணிநேரம் எதையோ எழுதினாள். பின்னர் உறக்கம் பிடிக்காமல் எழுந்து வெளியே சென்றாள். அங்கே பெமி தனியாக அமர்ந்திருப்பது பார்வையில் விழுந்தது.

“பெமி டார்லின் ஏன் தனியா உக்காந்து இருக்க? ஏய் அழறியா என்ன?”, வேகமாக அவள் அருகில் அமர்ந்து அவள் தோளை தொட்டாள்.

பெமியின் கண்ணீர் அவள் கன்னங்களில் வழிந்தது. விம்மினாள்....., “ஹையோ என்ன சின்ன புள்ளை மாதிரி அழற? சரி நீ வெளியே வா”, அவளை வலுக்கட்டாயமாக ஹாஸ்டலுக்கு வெளியே இழுத்துக்கொண்டு வந்தாள்.

‘இதென்ன ஹோம்சிக் போல....., இவளை எப்படி தேத்துறது’, எதையாவது யோசிடீ’, தன் மூளையை கசக்கினாள்.

“பெமி ஊர்ல இருந்து நீ தனியாவா வந்த?”, அவளிடம் பேச்சு கொடுத்தாள்.

“இல்ல, என்னோட என் அம்மாவும் வந்தாங்க”, அழுகியினூடே சொன்னாள்.

“உன்னை விட்டுட்டு ஊருக்கு போயிட்டாங்களா?”.

“இல்ல இன்னும் ஒரு வாரம் என் சித்தி வீட்டில் தான் இருப்பாங்க. பிறகுதான் ஊருக்கு போறாங்க”.

“பிறகு என்ன கவலையை விடு. இன்னைக்கு வியாழக்கிழமை நாளைக்கு வெள்ளி, மறுநாள் சனி. அன்னைக்கு நீ உன் அம்மாவை பார்க்க போகலாமே”, உற்சாகமாக சொன்னாள்.

“அதெப்படி முடியும்?”, சந்தேகமாக கேட்டாள்.

“அதாவது வாறது நாலாவது சனி. நாலாவது, ரெண்டாவது சனி நம்மளோட லோக்கல் கார்டியன் வீட்டுக்கு போகலாம். சோ இப்படி அழாமல் தைரியமா இரு. உன்னோட அம்மாவை பாரு, உனக்காக என்னவேண்ணா செய்வாங்க, அதே நேரம் என் வீட்டில் இருந்து, என்னை வந்து பார்க்கவே மாட்டாங்க.

உனக்கு அப்படியா? நீ எப்போ வேண்ணா உன் சித்தி, சித்தி பசங்க எல்லோரையும் பார்க்கலாம். மூன்றாவது சனி அவங்க வந்து உன்னை பாக்கலாம். இப்படி இருக்கும்போது, தேவையில்லாமல் அழுது உடம்பை கெடுத்துக்காதே”, அவளுக்கு ஆறுதல் சொன்னாள்.

“சரி நமக்கு ஒரு அசைன்மென்ட் கொடுத்து இருந்தாங்க. அதை நான் முடிச்சுட்டேன். இங்கே நிறையபேர் முடிச்சுட்டாங்க. நாளைக்கு உனக்கு அந்த நோட் நான் தாறேன். இப்போ சமத்தா எதையும் நினைக்காமல் போய் தூங்குவியாம்”.

அவள் சென்றவுடன் கேட் அருகில் செக்யூரிட்டி இருக்கிறாரா? என்று பார்க்க சென்றாள். அங்கே அவரை காணாமல் திரும்பி வந்தாள். ‘இப்போ என்ன செய்ய?’,

கையில் இருந்த காகிதத்தை ஒரு நிமிடம் ஏக்கமாக பார்த்தாள்.

பிறகு அங்கிருந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்து கொண்டாள். இந்த உதவியை பேட்ரிக்கிடம் கேட்கலாம்தான், ஆனால் அவனிடம் எந்த அடிப்படையில் கேட்க என்று தெரியவில்லை. தந்தையிடமோ, தமையனிடமோ தனக்காக இதுவரை எதையுமே கேட்டதில்லை. பிறகு எப்படி மூன்றாம் ஆண்மகனிடம் கேட்க? யோசனையிலேயே அமர்ந்திருந்தாள்.

எண்ணம் முழுவதும் பேட்ரிக்கையே சுற்றி வந்தது. கூடவே அவன் பார்வைகளும்....., இப்பொழுதெல்லாம் அவன் தன்னை திருட்டுத்தனமாக பார்ப்பதுபோன்ற உணர்வு. ஆனால் தான் பார்க்கும் பொழுது சாதாரணமாகத்தான் பார்ப்பான். எது பொய் சொன்னாலும், உள்ளுணர்வு பொய் சொல்லாதே.

அவன் எந்த எண்ணத்தில் என்னுடன் பழகுகிறான்? என் தேவைகள் எதுவாக இருந்தாலும் முதல் ஆளாக கவனிக்க வருகிறானே. ஒரு நாள் கூட என்னை பார்க்காமல், அவன் தரிசனம் தராமல் போகவில்லை.

வேண்டாம் இதை வளரவிடுவது நல்லதல்ல. இதுவரை வாழ்க்கையில் என் எதிர்பார்ப்புகள் எதுவுமே நிறைவேறியதில்லை. அது தாய்ப்பாசம் முதல், தந்தையின் அரவணைப்பு வரை எதுவும்..... .

இப்போழுதுமட்டும் ஏன் பேட்ரிக்கிடம் மனம் எதையோ எதிர்பார்க்க துவங்குகிறது?. இந்த விஷயத்தில் ஏமாற்றத்தை தாங்கிக்கொள்ள முடியுமா என்று தெரியவில்லை. ஹம்....., வேண்டாம்.....'.

'எல்லாம் சரி நீ அவன்கிட்டே எதை எதிர்பார்க்கிறாய்?'.

"எதையும் எதிர் பாக்கலை", வேகமாக பதில் சொன்னாள்.

‘எதையும் எதிர்பாக்கலன்னா....., ஏன் அவனிடம் மட்டும் ஏமாற்றத்தை தாங்கிக்க முடியாதுன்னு நினைக்கிற?’.

“முதல்ல நீ போ, என்னை என் போக்கில் விடேன்”, மனசாட்சியிடம் கோபம் கொண்டாள்.

‘இன்னும் எவ்வளவு நாள் உன் போக்கிலேயே இருந்து, உன்னை நீயே ஏமாத்திக்க போற? இந்த பொய்யான முகமூடியை கிழிச்சுட்டு எப்போ நீ நீயா இருக்க போற?’, உள்மனம் கேள்வி கேட்டது.

“இப்பவும் நான் நானாகத்தான் இருக்கிறேன்”.

‘பொய் சொல்லாதே, அதுவும் என் கிட்டேயே’.

“சரி உண்மையவே சொல்லுறேன். என் இந்த முகமூடியை கழட்டிட்டா....., என்னை சுத்தி வெறுமை மட்டும்தான் இருக்கும். எனக்கே என்னை பார்த்தால் பாவமா இருக்கும். எனக்கே என்னை பார்க்க பிடிக்காது. ஆனால் இப்போ இந்த போலி முகத்தால், என்னை சுற்றி எப்பொழுதும் இருக்கும் நண்பர்கள் கூட்டம், என் உண்மைமுகம் தெரிந்தால் சிதறி போய்டுவாங்க”, அதற்கு புரியவைக்க முயன்றாள்.

‘எவ்வளவு காலம் நீ இப்படி போலி முகத்திலேயே வாழ போகிறாய். உன்னை உனக்காகவே நேசிக்கும் ஒருவனை நீ ஏன் ஏற்றுக்கொள்ள கூடாது’.

“அப்படி யாரும் எனக்கு கிடைப்பார்கள் என்ற நம்பிக்கை இல்லை”, அப்படி சொல்லும் பொழுதே பேட்ரிக்கின் முகம் கண்முன் மின்னி மறைந்தது.

‘என்கிட்டேயே பொய்யா?’, மனசாட்சி ஏளனமாக கேட்டது.

“ஹேய் நீ என்ன நினைச்சு பேசிட்டே போற?”, கேலியில் இறங்கினாள்.

‘யார்கிட்டே பேச்சை மாற்றினாலும் என்கிட்டே முடியாது’, மனசாட்சி வீம்பு பிடித்தது.

“அதான் அப்படி யாரும் கிடைக்க மாட்டாங்கன்னு சொல்லுறேனே”, சலித்தாள் அவள்.

‘ஏற்கனவே உனக்கு ஒருவன் கிடைத்துவிட்டான். அவனை ஏன் நீ ஏற்றுக்கொள்ள கூடாது’.

“அப்படி யாரும் இல்லை”, அடித்து சொன்னாள்.

‘உன் மனதில் கையை வைத்து சொல், அப்படி யாரும் இல்லையென்று. அப்போ நான் ஒத்துக்கறேன்’. மனசாட்சியின் கேள்விக்கு பதில்சொல்ல முடியாமல் முதல் முறையாக அமைதியானாள்.

பகுதி - 13

செய்யும் சிறிய செயல்களில்

தெரியும் உன் கரிசனம்

என் இதயத்தை உருக்கும்.....

உன்னை ஏற்கமுடியாத என் தவிப்பு

இதயத்தில் ரணமாய்.....

யோசனையை கலைத்துவிட்டு நேரம் பார்த்தாள்....., அமர்ந்த இடத்திலேயே இரண்டுமணிநேரம் கடந்திருந்தது. 'நானா இப்படி ஒரே இடத்தில் உக்காந்து இருந்தேன். தேறிட்ட போ', தன்னை தானே மெச்சியவளாய், எழுந்து செக்யூரிட்டியை தேடி சென்றாள்.

"ஹாய் அங்கிள் எப்படி இருக்கீங்க? உங்ககிட்டே ஒரு உதவி கேட்டு வந்தேன்", சுவாதீனமாக அவர் அருகில் போட்டிருந்த சேரில் அமர்ந்தாள்.

"என்ன பாப்பா சொல்லு, செஞ்சுடுவோம்....., ஆனா சீக்கிரம் சொல்லு பாப்பா. சிஸ்டர்ஸ் பாத்தா உன்னை திட்டுவாங்க", சுற்றி பார்வையை ஓட்டியவாறே சொன்னார்.

"அதெல்லாம் எதுவும் சொல்லமாட்டாங்க. அப்படி சொன்னாலும் நான் பாத்துக்கறேன்", அவருக்கு தைரியம் சொன்னாள். அவளது நிதானம் அவருக்கு இன்னும் பயத்தை கொடுத்தது.

"சீக்கிரம் சொல்லு பாப்பா, எதுவாக இருந்தாலும் என்னால் முடிந்தால் செய்து தாறேன்", வயதானவர் வாஞ்சையாக சொல்லிக் கொண்டிருக்கும் வேளையே அங்கே வந்தான் பேட்ரிக்.

கேட்டின் அருகிலேயே அவளை பார்க்கவே, புருவத்தை நெரித்து கேள்வியாக அவளைப் பார்த்தான். “அங்கிள் நான் பிறகு வாறேன்”, அவரிடம் சொல்லிவிட்டு முன்னால் நடந்தாள்.

அவள் சென்றுவிடவே, “என்னவாம்.....?”, அவரிடம் கேள்வியாக கேட்டான்.

“இல்ல டாக்டர் தம்பி, ஏதோ உதவின்னு கேட்டு வந்துச்சு, இப்போ உங்களை பார்க்கவே பேசாமல் போகுது”, அப்படியா என்பதுபோல் தலையை ஆட்டிவிட்டு அர்ச்சனாவை பார்க்க சென்றான். கையில் ஒரு மருந்து பெட்டியும் இருந்தது.

“அர்ச்சனா.....”, தன்னை கண்டும், காணாமல் சென்றுகொண்டிருந்த அவளை பெயர்சொல்லி அழைத்து தேக்கினான்.

என்ன என்பதுபோல் அவள் பார்க்கவே, “அவர்ட்ட ஏதோ ஹெல்ப் கேட்டியாம்?”, அதை என்னிடம் சொல்லமாட்டாயா என்ற கேள்வி தொங்கி நின்றது.

“அது வயசானவங்க மட்டுமே செய்ய முடியிற ஹெல்ப் சோ.....?”, குறும்பாக சொன்னாலும், ‘சொல்லமுடியாது போடா’ என்பதை மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்.

“சொல்லமுடியாது போடான்னு சொல்லாமல் சொல்லுற”, முகம் இறுகவே சொன்னான்.

“இதோபார் பேட்ரிக், உன் முகத்தை பார்த்து நான் அப்படி சொல்லுவேனா?”, ‘இதைவிட கேவலமா சொல்லுவேன்’, இதழின் ஓரம் சிரிப்பில் விரிந்தது. அதை அவனது கோபமுகத்தை பார்த்தும் கண்டுகொள்ளாமல் சிரித்தே விட்டாள்.

“ம்...ச்....”, மெல்லிதாக தன் அதிருப்தியை தெரிவித்தான்.

“இப்போ நீ எதுக்கு இவ்வளவு சலிச்சுக்கற?”, அவனிடம் சண்டைக்கு போனாள்.

“இப்போகூட நீ என்னன்னு சொல்லலை.....”, அவன் அதிலேயே நின்றான்.

“பேட்ரிக் இது என்னோட கவலை, இதில் நான் உன்கிட்டே சொல்ல என்ன இருக்கு?”, அவள் குரலிலும் இறுக்கம்.

“அதென்ன உன்னோட கவலை. இப்போ உனக்கு ஹெல்ப் வேணும்..., அதை அவர்கிட்டே கேட்பாய், ஆனால் என்ட்ட கேட்கமாட்ட அப்படித்தானே?”, நேரடியாக கேட்டுவிட்டான்.

“நீ மட்டும் அப்படி என்ன ஸ்பெஷல். அதைவிட ஒரு ஒரு விஷயத்துக்கும் உன்னை தொல்லை செய்ய முடியாது பேட்ரிக்”.

“அப்போ வேற யாரை தொல்லை செய்வ?”.

“அது என்னோட கவலை”.

“இதை நீ விடவே மாட்டியா?”.

“எதை விடணும்னு சொல்லுற நீ”, இருவருமே இறங்கிவருவதாக இல்லை.

“என்னன்னு சொல்லு சனா?”, அவன் இறங்கி வரவே, அமைதியானாள் அவள்.

‘நீ சண்டையே போடுடா. இப்படி கேட்காதே’, மனதுக்குள்ளே அவனிடம் வேண்டினாள். தன் மனம் இவ்வளவு பலவீனமானதா? தன்னையே கேட்டுக் கொண்டு, அவனிடம் திடமாகவே இருந்தாள்.

“நீ உன் செல்போன் கொஞ்சம் தா பேட்ரிக்”, சுவாதீனமாக அவன் கையிலிருந்து வாங்கி, அவன் தாய்க்கு அழைத்தாள்.

“சொல்லு பேட்ரிக்”, ஸ்டெல்லா சொல்லவே, “ஆண்ட்டி நான் அர்ச்சனா. உங்ககிட்டே ஒரு சின்ன உதவி கேட்கணும், அதான் இப்போ போன் செஞ்சேன். நீங்க ப்ரீயா?”.

“சொல்லு அர்ச்சனா அப்படி என்ன ஹெல்ப்?. இவ்வளவுநேரம் காலேஜில் தானே இருந்தேன்”, குரலில் சிறிய மாறுதல். அதை சட்டென உணர்ந்தாள் அர்ச்சனா.

“அப்போ உங்ககிட்டே இப்போ கேட்கவேண்டாம்னு சொல்லுறிங்களா?”.

“நான் எப்போ அப்படி சொன்னேன்? சரி என்னன்னு சொல்லு”, அவள் குணம் தெரியுமாகையால் சமாதானமாக கேட்டார்.

“இல்ல ஆன்டி நாளைக்கு காலேஜ்ல என் மேம்ட்டயே பேசிக்கிறேன். சாரி..... மேம்”, மேம் என்பதில் அழுத்தம் கொடுத்து சொல்லிவிட்டு வைத்துவிட்டாள்.

“இப்போ எதுக்கு தேவையில்லாமல் அவங்க மேல கோபம்?”, தன்மையாக கேட்டான்.

“எனக்கு எந்த கோபமும் இல்லை பேட்ரிக். என் நிலையை அடிக்கடி மறந்துடுறேன் அவ்வளவே. சீக்கிரம் சரியாயிடுவேன்”, அவனிடம் சாதாரணமாக பேசினாலும், மனதுக்குள் மெல்லிய ஏமாற்றம்.

“சரி பேட்ரிக் நான் கிளம்புறேன்”, அவனிடம் இதற்குமேல் பேச விரும்பாமல் சென்றுவிட்டாள்.

“அர்ச்சனா.....”, அவனது அழைப்பை புறந்தள்ளிவிட்டு அங்கிருந்து அகன்றாள். அவள் சொன்ன வார்த்தையும், அவள் கலங்கிய குரலும் பேட்ரிக்கின் மனதில் பாரத்தை ஏற்றியது. தாயின் மேல் கோபம் வந்தது.

ஆனாலும் வந்த வேலை அவனை துரத்த, கொட்டகைக்கு சென்று மாடுகளை பார்த்து, தடுப்பூசி, மருந்து

செய்துவிட்டே அங்கிருந்து சென்றான்.

‘ஏன் அர்ச்சனா இப்படி சொதப்புற, உன் அம்மா அப்பாவிடமே எதையும் எதிர்பார்த்து கேட்காத நீ....., இப்போ மூன்றாம் மனிதர்களிடம் இதை எப்படி எதிர் பார்த்தாய். இனிமேல் இப்படி கேட்டு அவமானப்பட்டால் உன்னை கொன்னுடுவேன்’, அவள் மனசாட்சியே அவளை சாடியது.

“விடு விடு..... யானைக்கே அடி சறுக்கும், நான் எம்மாத்திரம். நான் எனக்காகவா கேட்டேன்”, தோளில் இல்லாத தூசியை தட்டிவிட்டு சென்றுவிட்டாள். அவளது செய்கையே பழைய அர்ச்சனா திரும்பியதை சொல்லியது.

“ஹேய் பொண்டாட்டி இன்னும் என்ன தூக்கம்”, தூங்கிக் கொண்டிருந்த வைஷாலியை, அவள் பின்னால் தட்டி எழுப்பினாள். அலறியடித்து எழுந்து அமர்ந்தாள் வைஷாலி.

“ஏண்டி இப்படி அடிச்ச? வாயால எழுப்புறதில்ல.....”, தன்னை அடித்த அவளை திட்டியவாறே எழுது சென்றாள்.

அவளை கண்டுகொள்ளாமல் பெமிலாவை எழுப்ப சென்றாள். பின்னர் அவளையும் எழுப்பி, அனைவரும் சேர்ந்து காபி குடிக்க சென்றார்கள். அன்றைய இரவும் கலாட்டாவாக சென்றது. பேட்ரிக் என்பவனை பற்றிய நினைவே அவளுக்கு இல்லை. அப்படி ஒருவனை மாலையில் சந்தித்ததையே மறைந்துவிட்டாள்.

ஆனால் பேட்ரிக்கோ, அவன் வீட்டில் தாய், தத்தையிடம் வழக்கடித்துக் கொண்டிருந்தான்.

“அப்பா சாயங்காலம் சனா ஏதோ ஹெல்ப் வேணும்னு அம்மாவுக்கு கால் பண்ணினாப்பா. அம்மா அவகிட்டே சரியா பேசாமல் வச்சுட்டாங்க”, அங்கே அர்ச்சனாவிடம் தாயை விட்டுக் கொடுக்காமல் பேசியவன் இங்கே வந்து சாடினான்.

“பேட்ரிக் புரியாமல் பேசாதே, காலேஜில் செல்போன் பேச கூடாது. அங்கே யாராவது பார்த்தால் அவ பேர்தான் கெட்டுப்போகும், அதுவும் உன்னோட சேர்த்து. இத்தனைநாள் பரவாயில்லை, ஆனால் இனிமேல் காலேஜ் துவங்கிய பிறகு நீ அவளை அங்கேபோய் அடிக்கடி பார்ப்பதை அவாய்ட் பண்ணு”, கறாராக பேசினார்.

“அம்மா அவ ஏதோ ஹெல்ப் கேட்டுட்டு இருந்தாம்மா”, அவர் புரிந்து கொள்ளவில்லையே என்ற ஆதங்கத்தில் பேசினான்.

“அங்கே அவ மட்டும் இல்லை பேட்ரிக். அதான் நாளைக்கு காலேஜில் பாக்க போறேனே. அப்போ கேட்டுக்கறேன்”, முடிவாக சொல்லிவிட்டு சென்றுவிட்டார்.

“என்னப்பா அம்மாவும் இப்படி பேசுறாங்க. அவ எந்த சூழலில் இருந்து வந்திருக்கா என்று அம்மாவுக்கு சரியா தெரியும். அப்படி இருந்தும், அவங்க இப்படி சொல்லுறது....., எனக்கு புரியலப்பா”, தன் ஆதங்கத்தை தந்தையிடம் சொன்னான்.

“நீ கேட்டதிலேயே அதற்கான பதிலும் இருக்கு பேட்ரிக், இவ்வளவு நாள் இருந்துட்டா. இன்னும் கொஞ்ச நாள், பிறகு யார் என்ன சொல்லமுடியும்”, அவன் தோளில் தட்டிக்கொடுத்துவிட்டு சென்றுவிட்டார்.

பேட்ரிக் தான் தவித்து போனான். ஒரு பக்கம் உணர்வுகளை வெளிக்காட்டாத அர்ச்சனா, மறு பக்கம் தன் அம்மாவின் செயல், நடுவில் என்ன செய்யவென்று புரியவில்லை. தன் காதலை, நேசத்தை அவளிடம் சொல்லவும் முடியவில்லை. சொன்னால் என்ன செய்வாள் என்பதும் தெரியவில்லை. தலையை பிடித்துக் கொண்டான்.

அறைக்கு சென்ற ப்ரான்சீஸ் தன் மனைவியை கடிந்துகொண்டார். “நீ செய்வது சரியே இல்லை ஸ்டெல்லா. அர்ச்சனா என்ன சொல்லவந்தாள் என்பதையாவது

கேட்டிருக்கலாமே. நீயும் சராசரி தாயாக, மாமியாராக மாறத்தான் வேண்டுமா?”.

“நீங்களும் ஏன் இப்படி புரிஞ்சுக்காம பேசுறீங்க?. நாம அவளோட லோக்கல் கார்டியன்தான், ஏன் அதைவிட ஒரு படி மேலே என்பது நமக்கு தெரியும். குருவி தலையில் பனங்காய் மாதிரி விளையாட்டு பிள்ளை தலையில் தலைவி என்ற பொறுப்பை தூக்கி கொடுத்துட்டேன்.

ஏற்கனவே அவ அதிலேயே மூழ்கிட்டு இருக்கா, ரொம்ப ஸ்ட்ரெயின் பண்ணுறா. அவளோட ஒன்(own) டைம்ல கூட, பொறுப்பையே கட்டிட்டு அழறா, வேண்டாம் அவளுக்கு அவளோட நேரத்தையும், அவள் பொறுப்புக்கான நேரத்தையும் பிரிச்சுக்க தெரியணும்.

இப்போகூட, அவ ஹெல்ப் கேட்டது கண்டிப்பா அவளுக்காக இருக்காது. எல்லாம் ப்ரின்சி எல்லோரையும் சந்திக்கிறேன்னு சொன்னாங்களே, அது சம்பந்தமா யாராவது அவகிட்டே உதவி கேட்டிருப்பாங்க.

அதைத்தான் அவளும் இவ்வளவு வேகமா செய்து முடிக்கணும்னு துடிக்கிறா. எல்லாம் நாளைக்கு காலையில் கல்லூரிக்கு போய் என்னன்னு கேட்டுக்கறேன்”, கணவனிடம் மனம் விட்டு பேசினார்.

“இதையே அவகிட்டே சொல்லி புரிய வச்சு இருக்கலாமே”.

“யார்ட்ட....., உங்க மருமககிட்டயா? அப்படியே கேட்டுட்டுதான் மறு வேலை பாப்பா, நீங்க வேற....., அவ பிரின்சிபாலையே எதிர்த்து பேசுறா?”, அன்றைய நிகழ்வை கணவனிடம் பகிர்ந்து கொண்டார்.

ஸ்டெல்லா கணித்தது சரியே என்பதுபோல் மறுநாள் காலையிலேயே பெரிய கோரிக்கையோடும், முகம் நிறைய புன்னகையோடும், கண்கள் நிறைய குறும்போடும் அவர் முன் நின்றாள். அவள் அருகில் பலியாடுபோல் வைஷாலி.

“என்னமா சொல்லு.....”, அவர் வைஷாலியிடம் கேட்க, அவள் திரு திருத்தாள்.

“மேம்....., அவளை நான்தான் சும்மா துணைக்கு கூட்டி வந்தேன்”, வைஷாலியை பார்த்து குறும்பாக கண்ணடிக்க, அவள் கைகளிலிருந்து கையை உருவ முயன்று கொண்டிருந்த வைஷாலி நடுங்கியே போனாள்.

‘இவளுக்கு துணைக்கு நானா.....? ஆண்டவா....., என்னை பலிகொடுக்காமல் அடங்கமாட்டா போல’, “கு....குட்மோர்னிங் மேம்”, குரல் நடுங்க காலை வணக்கம் சொன்னாள்.

“நீ போம்மா”, அவளை அனுப்பினார். தப்பித்தால் போதுமென்று ஓடினாள் வைஷாலி. அவள் ஓடுவதையே சிரிப்பாக பார்த்துக் கொண்டிருந்தாள் அர்ச்சனா.

“என்ன அர்ச்சனா.....?”, கேள்வியை முடிக்காமலே அவளை பார்த்தார்.

“மேம் சாரி, நேத்து அன் டைம்ல உங்களை தொல்லை செஞ்சுட்டேன். எனக்கு வேற வழி தெரியலை....., இனிமேல் காலேஜ் டைம்லையே எல்லா வேலையும் முடிச்சுடுறேன்”, கொஞ்சம் சங்கடமாக சொல்லுவதாக பாவலா செய்தாள்.

‘புத்திசாலிதான்.....’, மனதுக்குள்ளே அவளை மெச்சிக் கொண்டார்.

“சரி நேத்து எதுக்கு கால் செஞ்ச, அதை சொல்லு”, விஷயத்துக்கு வந்தார்.

“பின்ன, நீங்கபாட்டுக்கு, பாடுங்க ஆடுங்கன்னு சொன்னால்....., நாங்க பாட்டுக்கு, எங்கே போவோம். எங்களுக்கு ப்ராக்டீஸ் பண்ண, காசெட், டேப்ரெகார்டர் எல்லாம் வேணும்....., நான் வேண்ணா....., பாடிட்டே ஆடிடுவேன். எல்லோராலையும் அப்படி முடியுமா?”.

“நீ பாடிட்டே ஆட போறியா? என்ன பாட்டு “போடா போடா புண்ணாக்கா.....”, அவள் குணம் அறிந்து கேட்டார்.

“ச்சே ச்சே..... எதுக்கு அவ்வளவு பழசா போகணும். இப்போ புதுசா வந்து இருக்கே....., “தீப்பிடிக்க, தீப்பிடிக்க முத்தம் கொடுடா....., என்.....”, “போதும்....., அர்ச்சனா என்ன விளையாட்டு இது”, அவள் விளையாட்டை உள்ளுக்குள் ரசித்தாலும் வெளியே இறுக்கமாகவே கேட்டார்.

“நீங்க விளையாண்டதை விடவா.....? சரி அதை விடுங்க, நீங்க சொல்லுங்க மேம், கொஞ்சம் நான் கேட்டதை கன்சிடர் பண்ணுறீங்களா?”, விளையாட்டாக இருந்தாலும், காரியத்தில் கண்ணாக கேட்டாள்.

“சரி நீ கேட்டதுக்கு நான் ஏற்பாடு பண்ணுறேன். யாருக்கு எந்த பாட்டெல்லாம் வேணும்னு கேளு, இங்கே நம்ம காலேஜிலும் கொஞ்சம் கலெக்சன்ஸ் இருக்கும், ஆப்பரேட்டர்ட்ட வாங்கிக்கோ”.

“தேங்க்ஸ் மேம்.....”, சொல்லிவிட்டு சென்றாள்.

சென்றவள் ஒரு டீம் உருவாக்கி, அவர்களுக்கு தேவையான பாடல் லிஸ்ட் உடனடியாக தயார் செய்தாள். வேறு என்னவெல்லாம் செய்ய போகிறார்கள் என்பதையும் கேட்டறிந்தாள். இடையில் பெமிக்கு நோட் எடுத்து கொடுக்கவும் மறக்கவில்லை. பம்பரமாக வேலை செய்தாள்.

“எங்க எல்லோரையும் கேக்குறது இருக்கட்டும்....., நீ என்ன செய்ய போற?”, பெமி அவளிடம் கேட்டாள்.

“உன்கிட்டே நான் சொல்லவே இல்லையா? பாட்டு பாடபோறேன். சூப்பர் பாட்டு செலக்ட் பண்ணி வச்சு இருக்கேன். உனக்கு பாடிக் காட்டவா”, பெமியிடம் கேட்க, சுற்றி இருந்தவர்கள்....., “வேண்டாம்.....”, என்று அலறினார்கள்.

“எதுக்கு எல்லோரும் இப்படி அலறுறீங்க.....”, குழப்பமாக கேட்டாள் பெமி.

“அவ செலக்ட் பண்ணி வச்சுருக்க பாட்டை நீயும் கேட்டுப்பார் அப்போ தெரியும் எங்க நிலைமை”, அனுபவப்பட்டவள் சொன்னாள்.

“போங்கடி கழுதைகளா....., உங்க எல்லோருக்கும் பொறாமை, நான் அழகா பாடுறனேன்னு”, அவர்களை திட்டிவிட்டு, வைஷாலியை இழுத்துக்கொண்டு சென்றாள். செல்லும் அர்ச்சனாவை பார்த்த பெமியின் கண்களில் மெல்லியதாக பொறாமை தீ....., இது பரவினால்.....?

“எங்களுக்கு....., நேரம்தான்”, அவர்கள் சலித்துக்கொண்டதை அவள் கண்டுகொள்ளவே இல்லை.

“பொண்டாட்டி நீ ஏன் ஒண்ணுமே சொல்லாமல் இருக்க?”, அவளிடம் கேட்டாள்.

“இப்போ நான் சொன்னா நீ கேட்டுடுவியா?”, அவள் நக்கலாக கேட்க,

“இதுதான் உன்கிட்டே இருக்க கெட்ட பழக்கம். நான் கேள்விகேட்டா.....? பதில் சொல்லணும். அதை விட்டுட்டு நீயும் கேள்விகேட்டா யார் பதில் சொல்லுறது? சரி விடு....., நாம இப்படியே விளையாடலாம்.....”, அவள் உதட்டை சுழித்து சொல்ல, உன்னையெல்லாம் என்ன செய்ய? என்பதுபோல் பார்த்தாள் வைஷாலி.

ஹாஸ்டலுக்குள் நுழையும் பொழுது எதிரில் வந்தாள் ஜூடித். “ஹாய் அக்கா எப்படி இருக்கீங்க? என்னை ஞாபகம் இருக்கா?”, ஆர்வமாக கேட்டாள்.

“நான் ரொம்ம்ம்மம்ம்ம்ப நல்லா இருக்கேன். அப்புறம்....., உன்னை எப்படி மறக்க முடியும். நீதானே அந்த பல்லியை ஓட, ஓட விரட்டினது. மறக்க்க்க முடியுமா?”, நடிகர் திலகம் குரலில் அவளை கலாய்த்தாள்.

“அக்கா அதை நீங்க இன்னும் மறக்கலையா?”, சிறுமியாக சிணுங்கினாள்.

‘இவளாவது மறக்குறதாவது. இனிமேல் உன் பேர் அனேகமா பல்லியாதான் இருக்கும்’, நினைத்து சிரித்தாள் வைஷு.

“பொண்டாட்டி....., அவளை நான் இனிமேல் பல்லின்னு கூப்பிடுவேன்னு நினைச்சுதானே சிரிக்கிற? அதான் இல்லை. இவளை அப்படி கூப்பிட்டால் பல்லி கோச்சுக்காது..... , இவளை பாத்த உடனே அவளுக்கு வேற பேர் வச்சுட்டேன்”, சொன்னவாறு கண்ணை சிமிட்டினாள்.

குலுங்கி சிரித்தாள் வைஷாலி. என்னவென்று ஜூடி கேட்க, ஒன்றுமில்லை என்று சொல்லிவிட்டாள்.

மறுநாள்முதல் தங்களை அறிமுகப்படுத்த, தங்களையே தயார் செய்து கொண்டிருந்தார்கள் அனைவரும். இதில் தலைவியாக அர்ச்சனாவின் பொறுப்பு அவ்வளவாக தேவையில்லை என்றாலும், அனைவரையும் ஒருமுறை கேட்டுக் கொண்டாள்.

வைஷாலி தன்னால் தனியாக பெர்போம் செய்யமுடியாது, தனக்கு மேடைபயம் என்று சொல்லவே, குழு நிகழ்ச்சியில் சேர்க்க முடிவு செய்தாள். பெமியும் தன்னால் முடியாது என்றாள். ஜூடித்தோ, நான் செய்யவில்லை என்றால் கண்டுபிடிக்கவா போகிறார்கள் என்று அசட்டை செய்தாள்.

இவர்களை வைத்துக்கொண்டு எதுவும் செய்யமுடியாது என்று தெரிந்துபோனது அர்ச்சனாவிற்கு. அங்கே வேளாங்கண்ணி என்றவளோ, தனக்கு ஸ்ட்ரீட் ப்ளே தெரியும் என்றும், ஆனால் அதற்கு ஆட்கள் தேவை என்று சொல்லவே, இவர்களை அவர்களோடு இணைத்தாள்.

வேளாங்கண்ணியோடு சேர்ந்து அவர்களை வழிநடத்தினாள். அதுஒரு விழிப்புணர்வு நாடகம். ஐந்து நிமிடமே நடக்கும் அளவு இருந்தது. ஆனால் அதில் இருந்த

அனைவருக்குமே வேலை இருந்தது. வேறு சிலரும் குழுவாக நடனமாட, பாடல் பாட, என குழுமியதால் இதில் குறை எதுவும் தெரியவில்லை.

அர்ச்சனாவைப் பற்றி அங்கே யாரும் கவலைப் பட்டதாக தெரியவில்லை. அவள் தன்னை எப்படியும் நிலை நிறுத்திக் கொள்வாள் என்பது அனைவருக்குமே தெரிந்திருந்தது. அதைவிட, இரவில் தினமும் அரைமணிநேரம் அவள் காணாமல் போவதை அவர்கள் யாரும் கண்டுகொண்டாலும் எதுவும் கேட்கவில்லை.

பெமி ஒரு நாள் கேட்டதற்கு, தன் பாய்ப்ரண்டை பார்க்க போய்விட்டு வருவதாக சொல்லவே, அதற்குமேல் துருவவில்லை. அப்படியே கேட்டாலும் அவள் பதில் இன்னும் குதர்க்கமாக இருக்கும் என்பதும் அவர்களுக்கு தெரியும். ‘அப்படி என்ன செய்ய போறன்னு நானும் பாக்குறேன்’, பெமி மனதுக்குள் கறுவினாள். முடிவில் அந்த நாளும் அழகாக விடிந்தது.

பகுதி - 14

ஒவ்வொரு நேரங்களில்

நீ எடுக்கும் அவதாரம்

இமைக்க மறந்து வியக்கின்றேன்

ஒரு நாளில் எத்தனைமுறை

என்னை வியக்கவைப்பாய்

இடைவெளிவிடு இமைத்துக் கொள்கிறேன்.....

இதற்குள் முழுதாக ஒரு மாதம் கடந்திருந்தது. அனைத்து இடங்களும் நிரம்பி விட்டது. ஹாஸ்டலிலும் அனைவரின் அறைகளும் நிரம்பியது. அர்ச்சனாவின் அறையில் இருப்பவர்களுடன் நேரம் செலவழிக்கவில்லை. எனவே அவளால் அவர்களுடன் ஓட்ட முடியவில்லை. அதை கண்டுகொள்ளாமல் வைஷாலியுடனே சுற்றினாள்.

அவள் சுற்றினாள் என்பதைவிட, அவளை இழுத்துக்கொண்டு சுற்றினாள் என்பதுதான் சரியாக இருக்கும். தன் கணவனின் நினைவில் அவள் சோர்ந்து அமர்வதையும், கண் கலங்குவதையும், தனியாக மருகுவதையும், அர்ச்சனா உணரவே, அவளை தனியாக அமர்ந்து சிந்திக்கவே விட மாட்டாள்.

வைஷாலிக்கு அவளது தந்திரங்கள் புரியவே இல்லை. எனவே சுலபமாக அதிலிருந்து வெளியே வந்தாள். இடையில் நான்காம் சனிக்கிழமையன்று அவள் கணவன் வந்துவிட்டு சென்றதில் இருந்து கொஞ்சம் சோர்ந்து போயிருந்தாள். ஆனால் அவளை அப்படி இருக்க விடாமல், மேடை அலங்கரிக்க அவளை அனுப்பிவிடவே, அதிலிருந்தும் மீண்டாள்.

அவர்கள் காதல் திருமணம் முடித்தவர்கள் என்பதால், திருமணமான பத்தே நாட்களில் அவர்களின் பிரிவு, அவளை ரொம்பவே வாட்டியது. அவன் அருகாமைக்காக அவள் ஏங்குவது அப்பட்டமாக தெரிந்தது. அதை வெளியே சொல்லாமல் மறுகுவதை காணத்தான் அர்ச்சனாவிற்கு வருத்தமாக இருக்கும்.

அவளுக்கு ஆறுதல் சொல்கிறேன் பேர்வழி என்று எதையாவது சொல்லி அறுக்கவும் அவளுக்கு மனமில்லை. எனவே தன் வழியில் அவளை அமைதி படுத்துவாள். அங்கே ஞாயிற்றுக்கிழமைகளில் திரைப்படம் காண்பிப்பார்கள்.

நான்காம் சனியின் மறுநாள் அருமையான காதல் திரைப்படம் காண்பிக்கப்பட்டது. அந்த படம் வைஷாலிக்கு மிகவும் பிடிக்குமென்று காலையிலிருந்தே புலம்பிக் கொண்டிருந்தாள். மைகேலுடன் அந்த திரைப்படத்தை பத்து முறையாவது பார்த்திருப்பேன் என்று சொல்லி, சொல்லி பெருமை பட்டாள்.

ஆனால் அர்ச்சனாவிற்கு ஒன்று புரிந்தது, இப்பொழுது அவளை அந்த படத்தை பார்க்கவிட்டால், அவளது உணர்வுகளை கட்டுப்படுத்த யாராலும் முடியாது என்பதே. அவளை போகாதே என்று சொல்லவும் தன்னால் முடியாது. வேண்டாம் என்றால் அதைத்தான் செய்வேன் என்று முரண்டு பிடிப்பாள், ‘என்ன செய்ய...?’ தலையை பிய்த்துக் கொண்டாள்.

படமும் துவங்கியது....., கிட்டத்தட்ட அனைவருமே அந்த படத்தில் மூழ்கிவிட்டார்கள். வைஷாலியின் கண்கள் கலங்குவது அந்த இருளில் கூட அர்ச்சனாவால் உணர முடிந்தது. இன்னும் சற்று நேரத்தில் உணர்ச்சிகரமான காட்சிகள் ஆரம்பமாகிவிடும் என்பது அவளுக்கு தெரியும்.

சட்டென்று ஒரு யோசனை, வேகமாக இருமினாள். அவளது இருமலில் வைஷாலி கலைந்தாள். “அச்சு என்ன ஆச்சு?”,

வேகமாக கேட்டாள்.

“பொண்டாட்டி தொண்டை ரொம்ப வரண்டுடுச்சு. உன் பிளாஸ்கில் ஹாட் வாட்டர் இருந்தால் கொஞ்சம் எடுத்து தாறியா?”, இவ்வளவு வார்த்தையையும் பேசி முடிக்கும் முன்னர், ஐம்பது இருமல் இருமினாள். அவள் இருமலின் வேகம் தாங்காமல் மறு பேச்சின்றி எழுந்து சென்றாள் வைஷாலி.

அர்ச்சனாவும் எழுந்து அவள் பின்னால் சென்றாள். அர்ச்சனாவிற்கு தெரியும், அவள் பிளாஸ்கில் சுடுதண்ணீர் இல்லை என்று. ஏனென்றால் அதை அவள்தானே காலி செய்தாள்.

“ம்..ச்....., இந்தநேரம் பார்த்து தண்ணியும் இல்லையே”, வைஷாலி புலம்பினாள்.

“பரவாயில்லை நான் கூல் வாட்டர் குடிச்சுக்கறேன்”, போலியாக சொன்னாள்.

“உனக்குத்தான் பச்சைத்தண்ணீ ஒத்துக்காதே. இரு கீழேபோய் ஹீட்டர்ல இருக்கான்னு பாத்துட்டு வாறேன்”.

“நானும் உன்னோடவே வாறேன்”, சென்றவள் அங்கே, லஷ்மியை பார்க்கவே, அவளுடன் வாயடிக்க துவங்கினாள்.

முழுதாக அரைமணிநேரம் முடிந்த பிறகு, வைஷாலி கேட்டாள்....., “அர்ச்சனா, படம் முடிஞ்சுட போகுது. வா போகலாம்”, அவளை அவசர படுத்தினாள்.

“அங்கே கண்டிப்பா போய்த்தான் ஆகணுமா?”, அர்ச்சனா தயக்கமாக கேட்டாள்.

“என்ன அர்ச்சனா, நான் காலையிலிருந்து எவ்வளவு ஆர்வமா பாக்கணும்னு சொல்லிட்டு இருந்தேன். நீ இப்படி சொல்லுற. நீ வரலன்னா இரு, நான் போறேன்”, எரிச்சலாக சொல்லிவிட்டு சென்றாள்.

“நானும் வாறேன்”, மறுபடியும் அவர்கள் டிவி அறைக்கு வந்தார்கள். “வைஷக்கா....., நீங்க செம சீன் மிஸ் பண்ணிட்டிங்க. நாங்களே சூடாயிட்டோம், நீங்க பாத்துருந்தீங்க அவ்வளவுதான்....., கனவில் அண்ணா.....”, அவள் சொல்லவும் சுற்றி இருந்தவர்கள் சிரிக்கவும் சரியாக இருந்தது.

“இவ அவ்வளவு பெரிய ஜோக் சொல்லலை”, அழுத்தமாக அவர்கள் அனைவரையும் பார்த்து சொன்னாள்.

“ஏய் பஞ்சுமிட்டாய் இப்போ நீ வாயை மூடல....., என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது”, அவள் காதில் சொல்ல, அர்ச்சனாவிடம் இப்படி ஒரு கோபத்தை எதிர்பார்க்காததால் சட்டென அமைதியானாள் ஜூடித்.

வைஷாலியின் முகத்தை பார்க்கவே இல்லை அர்ச்சனா. எழுந்து செல்ல முயன்ற அவளை, கரத்தை அழுத்தமாக பிடித்து அடக்கினாள். அடுத்த ஒருமணி நேரத்தில் படம் முடியவே அனைவரும் கலைந்தார்கள்.

“சாரிக்கா.....”, ஜூடி வைஷாலியிடம் சொல்லிவிட்டு சென்றுவிட்டாள். அர்ச்சனாவும், வைஷாலியும் தனித்து விடப்பட்டார்கள். “அர்ச்சனா....., நீ என்னை வேணும்னுதான் இங்கே இருந்து அழைச்சுட்டு போனியா. நீயும் என்னை அ.....வ சொன்னது மாதிரி தான் நினைச்சியா?”, தலை நிமிராமல் கேட்டாள். கோபம், அவமானம், விரக்தி அவள் குரலில் போட்டி போட்டது.

“அவ சின்ன பிள்ளை வைஷு....., நான் சின்ன பிள்ளை இல்லை”, அழுத்தமாக சொன்னாள்.

“அப்போ என்னை இங்கே இருந்து அழைச்சுட்டு போனதுக்கு என்ன அர்த்தம்”, அவள் சமாதானம் ஆகவில்லை.

“இப்போ ஜூடி கேட்டாளே....., அதே கேள்வியை கொஞ்சம் மாத்தி கேட்டிருப்பா. அப்படி ஒரு சூழ்நிலைக்கு

உன்னை ஆளாக்க வேண்டாம்னுதான் உன்னை வெளியே அழைச்சுட்டு போனேன். அது மட்டும் இல்லை....., நீ அண்ணாவோட சேர்ந்து இந்த படத்தை இப்போ பாக்குறதா இருந்தால் எனக்கு எந்தவித ஆச்சயபனையும் இல்லை. ஆனால்..... இப்போ வேண்டாம்", முடிவாக சொன்னாள்.

"அதுதான் ஏன்னு கேட்கிறேன். அவ்வளவு சுய கட்டுப்பாடு இல்லாதவள் என்றா என்னை நினைச்சுட்ட?", கண்களில் கனல்.

"அப்படி ஒரு சத்திய சோதனையை உனக்கு வைக்க வேண்டாம்னுதான் அதை தவிர்த்தேன். எந்த விஷயமும் நமக்கு தெரியாமல் இருக்கும் வரைக்கும் பரவாயில்லை. அதையே உணர்ந்த பிறகு நம்மால் தவிர்க்க முடியாது வைஷு", அவளுக்கு பொறுமையாக விளக்க முயன்றாள்.

"என்னை அவ்வளவு கேவலமா நினைச்சுட்ட இல்ல நீ.....", புரிந்துகொள்ள மாட்டேன் என்று அடம் பிடித்தாள்.

"நான் சொல்ல வருவதை ஏன் புரிஞ்சுக்கவே மாட்டிக்க வைஷு.....", ஆற்றாமையாக கேட்டாள்.

"நீதான் என்னை சரியா புருஞ்சுக்கலை அச்சு. உன்கிட்டே இருந்து இப்படி ஒரு செயலை நான் எதிர் பார்க்கலை. ஜூடி கேட்டதற்கும், நீ செய்ததுக்கும் எந்த வித்தியாசமும் எனக்கு தெரியலை", அவள் கைகளை உதறிவிட்டு செல்ல போனாள்.

"வைஷு....., ஒரு நிமிஷம்....., அவ இத்தனைபேர் முன்னாடி கேட்டதுக்கும், நான் செய்ததுக்கும் உள்ள வித்தியாசம் உனக்கு தெரியவே இல்ல இல்ல. சரி அப்படியே இருக்கட்டும், நான் கேட்பதுக்கு மட்டும் பதில் சொல்லு.....", சொல்லிவிட்டு அந்த அறையின் கதவுகளை அடைத்தாள்.

அவள் செயலை புரியாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் வைஷாலி. அவளை வலுக்கட்டாயமாக அமர வைத்து

தானும் அவள் அருகில் அமர்ந்தாள். “இங்கே வந்த முதல் பத்துநாள்....., நைட் எல்லாம் அழுதுட்டே இருந்தியே அதுக்கு என்ன அர்த்தம்”.

அதிர்ந்தாள் வைஷாலி. “அ..... அ.....து மைக்கேலை விட்டு நான் பிரிஞ்சதே இல்லை அதான்.....”, தடுமாற்றமாக பதில் சொன்னாள்.

“அப்படியா.....? அது மட்டும் தானா.....?”, கேட்டுவிட்டு அவள் வலக்கரத்தை எடுத்து அவள் நெஞ்சின்மேல் வைத்துவிட்டு அர்ச்சனா சொன்னாள்....., “நீ அண்ணாவை விட்டு பிரிந்து அழுததில், உன்னோட செக்ஸ் தேவை இல்லவே இல்லைன்னு உன் மனசாட்சியை தொட்டு பதில் சொல்லு பார்ப்போம்”,

“அர்ச்சனா.....”, கையை அவளிடமிருந்து பிடுங்கிக் கொண்டு அவள் தோளில் முகம் புதைத்து அழுதாள்.

“ஐ’ம் சாரி வைஷு....., ஐ’ம் எக்ஸ்ட்ரீம்லி சாரி....., இப்படி நான் கேட்கவே கூடாதுதான். அதற்கு எனக்கு உரிமையும் கிடையாது. ஆனால்....., என் தோழி இப்படி ஒரு விஷயத்துக்காக ஏங்குவதை என்னால் பாத்துட்டும் பார்க்காதமாதிரி இருக்க முடியாது வைஷு.

அதான் நான் முதலிலேயே சொன்னேன்....., சில விஷயங்களை அனுபவிக்காதவரை அது நமக்கு பெருசா தெரியாது. ஆனால் அனுபவித்த பிறகு....., இப்போகூட உன்னை நான் கட்டுப்பாடு இல்லாதவள் என்றோ, உணர்ச்சிவசப்படுவாய் என்றோ நான் சொல்லவரவில்லை.

கண்டிப்பா பெண்களுக்கு அந்த கட்டுப்பாடு அதிகமாகவே இருக்கும் என்பது எனக்கு தெரியும். ஆனால் அந்த கட்டுப்பாட்டை தகர்க்கும் விஷயங்களை தவிர்க்கலாமே என்றுதான் நினைத்தேன். அந்த படத்தை பார்த்துவிட்டு, உன்னை நீயே கட்டுப்படுத்திக்க ஏன் போராடணும், அதைவிட அந்த சூழ்நிலையை தவிர்ப்பது சுலபமா இருக்கும்னு நினைத்தேன்.

கண்டிப்பா உன்னை பற்றி நான் கேவலமா நினைக்கலடா என்னை நம்பு. ஐ ப்ராமிஸ்.....”, தொண்டைக்குழியை விரல்களால் பற்றிக்கொண்டு, சத்தியம் செய்தாள்.

“நீ எதுக்கு மன்னிப்பு கேக்குற, நான்தான் உன்கிட்டே மன்னிப்பு கேட்கணும் அச்சு. எனக்காக பார்த்த உன்னைப்போய்.....”, நிஜமான கவலை அவள் பேச்சில். வைஷுவால் மேலே பேசவே முடியவில்லை, அந்த சூழலில் இருந்த இறுக்கம்....., அர்ச்சனாவுமே எப்படி பேசவென்று குழம்பினாள்.

பிறகு திடீரென கேட்டாள், “வைஷு....., நாம ரெண்டுபேரும் மறுபடியும் அந்த படத்தை பார்ப்போமா”, கண்களில் குறும்பு கொப்பளிக்க கேட்க, அது சரியாக வேலை செய்தது.

“ஏண்டி....., இவ்வளவு நேரம் நல்லாத்தானே இருந்த?”, சந்தேகமாக கேட்டாள்.

“ஹம்....., உன்னாலே நானும்ல அந்த படத்தை பாக்காமல் மிஸ் பண்ணிட்டேன்”,பொய்யாக கவலைப் பட்டாள்.

அவள் சொல்லி முடிக்கவே முதுகில் மொத்தினாள் வைஷாலி. “நீ அந்த படத்தை பாக்கவே வேண்டாம் வா”, அவளை இழுத்துக்கொண்டு சாப்பிட சென்றாள். இவர்கள் செல்லும் வேளையில் அங்கே அனைவரும் ஏறக்குறைய சாப்பிட்டு முடித்திருந்தார்கள்.

விடிந்ததுமுதல் காலில் சக்கரம் கட்டாத குறையாக சுற்றிக்கொண்டிருந்தாள் அர்ச்சனா. அர்ச்சனா எப்பொழுதும் வைஷாலியுடனே இருப்பதால், அவள் அறையிலேயே தங்கிக் கொண்டாள். ஜூடித்தும் அவர்கள் அறைதான். அவர்கள் அறையில் இருந்த இன்னொருத்தியோ, அங்கே தங்குவதே இல்லை.

எனவே அது அர்ச்சனாவிற்கு வசதியாக போயிற்று. அர்ச்சனா அங்கே செல்லவே, பெமியும் அவள் அறையில்

தோழிகள் கிடைக்காததால் இவர்களோடு இணைத்து கொண்டாள். மூன்றுபேர் தங்கும் அறையில் இப்பொழுது நான்குபேர் தங்கினார்கள்.

எனவே அர்ச்சனா, பெமிலா, வைஷாலி, ஜூடித் நான்குபேரும் நெருங்கிய தோழிகளாக மாறிப் போனார்கள். இதில் அர்ச்சனா எவ்வளவு விளையாட்டுத்தனமாக இருக்கிறாளோ அவ்வளவு பொறுப்பானவள். தன்னை சுற்றி என்ன நடக்கிறது என்பதை துல்லியமாக கணிப்பவள். ஆனால் அது மற்றவருக்கு தெரியவே செய்யாது. தோழிகளின் துன்பத்தை சகித்துக் கொள்ளவே மாட்டாள். அவர்களுக்கு என்ன தேவை என்பதை அவர்களைவிட அர்ச்சனா நன்றாக அறிவாள்.

வைஷாலியோ அமைதியின் மறு உருவம். தன்னை காயப்படுத்துபவர்களை கூட எதிர்த்து பேசும் மன உறுதி இல்லாதவள். பெமிலா சரியான வீட்டுக் கோழி, எப்பொழுது அம்மா, அம்மா , அம்மா தான். கூடவே தன் அக்காவின் மகனையும் ரொம்ப பிடிக்கும். அவர்கள் குடும்பத்திலேயே, முதல் ஆண் வாரிசு, எனவே அவன்மேல் அனைவருக்குமே உயிர். கொஞ்சம் பொறாமை குணம் உடையவள். அவளது இந்த குணம்தான் இவர்களுக்கு நடுவில் பிளவை உருவாக்க போகிறது என்பதை உணராதவள்.

நட்பிற்கு இடையில் எப்பொழுதும் போட்டி இருக்கலாம்....., ஆனால் அது பொறாமையாக மாறும் வேளையில் நட்பு சிதைந்துவிடும்.

ஜூடித் இருப்பதிலேயே சின்ன பிள்ளை. எதையுமே சீரியசாக எடுக்கவே மாட்டாள், அனைத்தும் விளையாட்டுதான் அவளுக்கு. இரட்டை அர்த்தங்களில் பேசும் பழக்கம் உள்ளவள். தன் மனதில் தோன்றுவதை அப்படியே சொல்லிவிடுவாள். எதிரில் இருப்பவர்கள் மனம் கோணினாலும் அதைப்பற்றி கவலையில்லை அவளுக்கு.

நான்குவிதமான குணாதிசயங்களை கொண்ட இவர்கள் ஒன்றுகூடி இருக்கிறார்கள். கொஞ்சம் சுவாரசியமாக போனது நாட்கள்.

_____

அகர வரிசையில் வந்து தங்களை அறிமுகம் செய்துகொண்டார்கள். அர்ச்சனாவின் பெயர் பதினைந்தாவதாக இருக்கும். ஆனால் அவள் மேடையேறவே இல்லை. அனைத்தையும் ஒழுங்குபடுத்துவதிலும், அனைவருக்கும் தேவையானதை செய்வதிலுமே, நேரத்தை கடத்திக் கொண்டிருந்தாள்.

அங்கிருந்த அனைவருமே, பிரின்சிபால் முதல், அவளுடன் பயிலும் தோழிகள் வரை, அனைவருமே கொஞ்சம் ஆவலாகவே எதிர்பார்த்தார்கள். அவளுடனே இருக்கும் நட்பு வட்டம் மட்டும் கொஞ்சம் திகிலாக இருந்தார்கள்.

கொஞ்சம் முன்பு கேட்கும்பொழுது கூட, பாடல்தான் பாடுவேன் என்று சத்தியம் செய்யாத குறையாக சொன்னாள்.

மேடையில் தனியாளாக வந்து தங்கள் பெயர், எங்கிருந்து வருகிறார்கள், இளங்கலை முடித்தவர்களா? முதுகலை முடித்தவர்களா? என்று தங்களைப்பற்றி சிறிய முன்னுரை கொடுத்துவிட்டு, தங்களின் திறமைகளை வெளிப்படுத்தினார்கள்.

அன்று அனைவரும் சீருடை சாரியில் வந்திருந்தார்கள். தனி பாடல், குழு பாடல், பேச்சு, கவிதை வாசித்தார்கள், கிராமிய பாடல் பாடினார்கள், சிறிய நாடகம் நடித்தார்கள், தனிநபர் நடனம் சிறப்பாக அனைவராலும் வரவேற்கப் பட்டது. குழு நடனம் இடம்பெறவில்லை.

கதை சொன்னார்கள், ஒப்பாரி பாடலை கூட கிராமிய நடையில் பாடினாள் ஒருத்தி. குழு நடனம் இல்லாத

குறையை தீர்ப்பதற்கு என்றே, அந்த அறிவிப்பு வந்தது.

“குழு நடனம் பை அர்ச்சனா அண்ட் டீம்”, அர்ச்சனாவின் பெயரை கேட்டவுடனேயே ஆடிட்டோரியத்தில் ஒரு பரபரப்பு தொற்றிக்கொண்டது. வைஷுவை, சுற்றி இருந்தவர்கள் உலுக்கினார்கள். அவளுக்குமே இது புதிய செய்தி என்பதால் உதட்டை பிதுக்கி தலையை ஆட்டினாள்.

“வைஷக்கா....., அர்ச்சனாக்கா டிரஸ் போட்டுட்டுதானே ஆடுவாங்க”, ஜுடித் குறும்பாக கேட்க, அவளை முறைத்தாள் வைஷு. ஆனால் ஜுடிக்கு சில ஆதரவு குரல்களும் எழுந்தது. அதை தள்ளிவிட்டு மேடையை பார்த்தாள் வைஷு.

இசை ஆரம்பமாகி விட்டது. ஐந்து மாணவிகள் ஒரே வண்ண உடையில் மினுமினுப்பாக ஜொலித்தார்கள். ஒரே ரிதமான அசைவை வெளிப்படுத்த, அனைவரின் பார்வையும் அர்ச்சனாவை தேடியது, அவள் இல்லை. அனைவர் கண்களிலும் ஏமாற்றம். ப்ரின்சி கூட, ஸ்டெல்லாவை திரும்பி பார்த்தார்.

பாடல் ஆரம்பமானது. யாருமே எதிர்பார்க்காத பாடல்..... தேவர்மகன் படத்தில் இடம்பெற்ற ரீமிக்ஸ் பாடல். அதிரடி துள்ளல் இசையில் அனைவரையும் கட்டி போட்டது.

இஞ்சி இடுப்பழகா மஞ்ச சிவப்பழகா

கள்ள சிரிப்பழகா மறக்கமனம் கூடு தில்லையே.....

மறக்குமா மாமன் எண்ணம்

மயக்குதே பஞ்ச வர்ணம்

மடியிலே ஊஞ்சல் போட மானே வா.....

பல்லவி முடிந்து இடைவெளியில் இசை துவம்சம் செய்யும் வேளையில், அவர்களின் உடையைப்போன்ற உடையில்

சிக்கென, மிதமான ஒப்பனையுடன் மேடையில் தோன்றினாள் அர்ச்சனா. இசைக்கு ஏற்றவாறு அவள் ஆட துவங்கினாள்.

தன்னந்தனிச்சுருக்க தத்தளிச்சு தானிருக்க

உன் நினைப்பில் நான்பறிச்சேன் தாமரையே

புன்னவனத்தினிலே பேடக்குயில் கூவையிலே

உன்னுடைய வேதனைய நான் அறிஞ்சேன்

உன் கழுத்தில் மாலையிட உன்னிரண்டு தோளை தொட

என்ன தவம் செஞ்சேனோ என் மாமா

வண்ணக்கிளி கையை தொட சின்ன சின்ன கோலமிட

உள்ளம் மட்டும் உன்வழியே நானே

இஞ்சி இடுப்பழகா மஞ்ச சிவப்பழகா

கள்ள சிரிப்பழகா மறக்கமனம் கூடு தில்லையே.....

ஒரு சின்ன இசை நுணுக்கத்தைக் கூட விடாமல், நளினமான நடையில் அசரடித்தாள் அர்ச்சனா. பார்வை, பார்வையாளர்களை விட்டு அகலவில்லை. மேடையில் ஆடும்பொழுது கூட தன் தோழி வைஷுவை பார்த்து கண்ணை சிமிட்டினாள்.

அவள் நடனத்தை பார்த்தவர்கள் அனைவருக்குமே புரிந்தது, இது தற்பொழுது படித்து ஆடியது அல்ல, நடனம் அவள் ரத்தத்திலேயே ஊறி இருக்கிறது என்பது. அவளுடன் ஆடியவர்களை ஒப்பிட்டால் அர்ச்சனாவின் நடனத்தில் ஒரு நளினம் இருந்தது உண்மை.

அதைவிட இதழ்களில் உறைந்த மெல்லிய புன்னகையுடன், மயக்கும் விழிகளுடன்,

இஞ்சி இடுப்பழகி மஞ்ச சிவப்பழகி

கள்ள சிரிப்பழகி மறக்கமனம் கூடு தில்லையே

அடிக்கிற காத்த கேழு அசையிற நாத்த கேழு

நடக்குற ஆத்த கேழு, நீ தானா.....

இறுதிகட்டம் நெருங்கும் வேளையில் நடனமாடிய ஆறுபேரும் ஒற்றை வரிசையில், நேராகவும், குறுக்காகவும், X வடிவிலும், வட்டமாகவும் கடைசி இரண்டு நிமிடங்கள் போட்ட ஆட்டம், கீழே அமர்ந்திருந்தவர்களையே எழுந்து ஆட்டம்போட தூண்டியது.

நடனம் முடியும் வேளையில், இவ்வளவு சீக்கிரம் பாடல் முடிந்துவிட்டதே என்ற ஏக்கம் அவர்களுக்கு எழுந்தது என்றால், மேடையில் ஆடிய ஆறுபேரும் அந்த ஐந்து நிமிடங்களில் களைத்துவிட்டார்கள் என்பதுதான் சரியாக இருக்கும். அவ்வளவு துள்ளலாக ஆடினார்கள்.

பாடல் முடிந்தவுடன், கரகோஷம் விண்ணை பிளந்தது. சிலர் விசில் கூட அடித்தார்கள் என்றால் அங்கிருந்தவர்களின் மனநிலையை ஊகித்துக் கொள்ளுங்கள்.

அர்ச்சனாவின் நடனத்துடன் அனைவரின் அறிமுகப்படலமும் முடியவே, பிரின்சிபால், துணை முதல்வர், ஸ்டெல்லா முதலானவர்கள் மேடையில் அமரவைக்கப் பட்டார்கள்.

முதல்வர் உரை நிகழ்த்த சிஸ்டர். ஞானசௌந்தரி எழுந்து வந்தார். “அருமையான துவக்கம்.....”, இப்படி துவங்கியது அவரது பேச்சு. “இந்த கல்லூரி துவங்கி பதினைந்து ஆண்டுகள் ஆகின்றன. இந்த பதினைந்து பாச்களிலேயே, துவக்கத்திலேயே பெயர் வாங்கிய பாச் உங்களுடையதுதான்.

வித்தியாசமான திறமைகளையும் வெளிப்படுத்தியது நீங்களே. அதிலும் நடனம் சிறப்பான ஒரு இடத்தை பிடித்தது. நடனமென்றாலே அனைவருக்கும் கொஞ்சம் விருப்பம் அதிகம்தான் இல்லையா? விசில் சத்தம் கூட வந்ததே", அவர் பேசும்பொழுது குண்டூசி விழுந்தால் கூட ஓசை கேட்கும் அளவு நிசப்த்தம்.

"உங்கள் அனைவரிடமும் ஒரு சந்தோசமான விஷயத்தை அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த நம் கல்லூரி பைவ்ஸ்டார் அந்தஸ்த்தை போன வருடம் பெற்றது. இந்த வருடம் ஒருபடி மேலே போய், தன்னாட்சி உரிமையை(atonomous) பெற்றுள்ளது", அவர் இதை சொல்லி முடிக்கவே மாணவிகளின் கரகோஷம் அதிர்ந்தது.

"அடப்பாவிங்களா..... உங்களுக்கு ஆப்பு வைக்கபோறேன்னு பேசுறாங்க, எல்லாம் ஆட்டுமந்தை மாதிரி கை தட்டுதுங்க பாரு", அர்ச்சனா சத்தமாக புலம்பினாள்.

"ஏய் அர்ச்சனா ஏன் அப்படி சொல்லுற?", அவளுடன் நடனமாடியவள் உடைகளை மாற்றியவாறே கேட்டாள்.

"நீ புரிஞ்சுதான் கேக்குறியா, இல்லை புரியாத மாதிரி கேக்குறியா?, இப்போவே நான் சொன்னால் ரொம்ப வருத்தமா இருக்கும். இன்னும் ஒரு வாரத்தில் உனக்கே தெரிஞ்சுடும்", பூடகமாக சொன்னாள்.

"நீ இவ்வளவு வருத்தப்படுற அளவு இதில் ஒண்ணும் இல்லை", சொல்லிவிட்டு அவள் வேலையை தொடர்ந்தாள்.

'அதுசரி, நீங்கெல்லாம் ஆப்பை தேடிபோய் உக்காருற ஜாதியாச்சே, ஆப்பு இருக்குடின்னு சொன்னால் கேட்கணும், அதை விட்டு, உக்கார இடம் கிடைத்தால் ஆப்பா இருந்தாலும் பரவாயில்லை, அதிலேயே இன்னும் அழுத்தமா உக்காருவேன்னு சொன்னால் நான் என்ன சொல்லுறது.

நல்லா உக்காந்து அனுபவப்படுன்னுதான் விடமுடியும். நானே அந்த ஆப்புக்கு மேலதானே நிக்கிறேன்', தன்னாட்சி முறையின் வழிமுறைகள் தெரிந்த அர்ச்சனா புலம்பினாள்.

ப்ரின்சி பேசி முடித்தவுடன், ஸ்டெல்லா நன்றி கூற எழுந்தார். அவருமே இந்த நிகழ்ச்சிக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து, ஒருங்கிணைத்த அனைவருக்கும் நன்றியை கூறினார். யாருமே அர்ச்சனாவை தனிப்பட்ட விதத்தில் பாராட்டவில்லை. அதை அவளும் எதிர்பார்க்கவே இல்லை என்பதுதான் உண்மை.

வைஷாலிதான் கொஞ்சம் மனம் சுணங்கினாள். அர்ச்சனா இந்த நிகழ்ச்சி நல்லபடியாக நடக்கவேண்டுமென்று பாடுபட்டதை உடனிருந்து பார்த்தவளாயிற்றே அவள்.

"வைஷக்கா....., அர்ச்சனாக்காவுக்கு வட போச்சு போல.....", ஜூடி கேட்க, அதையே கொஞ்சம் வன்மமாக கேட்டாள் பெமி.

"என்ன சொல்லுற.....?", புரிந்தும் புரியாதவள்போல் கேட்டாள் வைஷாலி.

"இல்ல....., நான் பெரிய தலைவி, அப்படின்னு ஓடி ஓடி உழைச்சா, எதுக்கு இவங்க வாயால் நல்லபேர் வாங்கணும்னுதானே. இப்போ பாரு, சும்மா கும்பல்ல கோவிந்தா போட்ட நாமளும் ஒண்ணுதான், சுடுதண்ணியை காலில் ஊத்திட்டு குதிச்ச அவங்களும் ஒண்ணுதான்", கொஞ்சம் சந்தோசமாகவே சொன்னாள் பெமி.

'உன்னையெல்லாம் திருத்த முடியாதுடி', என்பதுபோல் ஒரு பார்வை பார்த்துவிட்டு, "பெமி, அவ அவளோட கடமையை சரியா செய்யணும்னு எதிர்பார்த்தாளே தவிர, தனிப்பட பேர் வாங்கணும்னு எதிர் பார்க்கலை", தன் குணத்தை மீறி சாடிவிட்டாள்.

“நல்லா சப்பைக்கட்டு கட்டுங்க”, அவள் அடங்குவதாக இல்லை.

அனைத்தும் முடிந்த வேளையில் ஒரு அறிவிப்பு வந்தது, அறிவித்தவள் அகிலா. “லாஸ்ட் பெர்பார்மன்ஸ் பை அர்ச்சனா”, சொன்னவள் குரலிலோ அப்படி ஒரு நடுக்கம்.

அர்ச்சனா ஒரு மைக்குடன் மேடை ஏறினாள். “ப்ளீஸ் அனைவரும் எழுந்து நிற்கவும்”, அனைவரும் எதற்கென்று தெரியாவிட்டாலும் எழுந்து நின்றார்கள். அர்ச்சனா ஆப்பரேட்டரை பார்க்க, அவர் அந்த இசையை மட்டும் ஒலிக்க செய்தார்.

ஒலித்ததோ ஜன கன மன பிஜிஎம், இசைக்கு தக்க, அர்ச்சனா பாட, ஒலிக்கும் தேசிய கீதத்தால், யாராலும் எதுவும் செய்ய முடியவில்லை. எழுந்த சிரிப்பை கூட கடைவாயில் அமுக்கிவிட்டு, உடன் சேர்ந்து பாடினார்கள்.

வைஷாலியும், பெமியும் நடுங்கியே போனார்கள். ஜூடித்தோ, “நாய்வாலை நிமிர்த்த முடியுமா?”, தேசியகீதத்தின் நடுவிலேயே கேட்டாள். வைஷாலியும் அதையேதான் நினைத்தாள். ‘எதுக்கு இப்போ தேவையே இல்லாமல் இப்படி ஒரு விஷப்பரீட்சை பண்ணுறா? முடிந்தவுடன் யார் என்னவெல்லாம் செய்யப் போகிறார்களோ?’, தோழிக்காக கவலைப் பட்டாள்.

பகுதி - 15

பலூனுக்குள் இருக்கும் காற்றாய்.....

நெஞ்சை அழுத்தும் உன் நினைவு.....

வெடித்துச் சிதறுவேன் என்று நீ நினைக்க.....

வெடிக்காமல் பதுங்கிக் கொள்கிறேன் நான்.....

அறிமுகப்படலம் முடிந்து ஒரு வாரம் சென்றதே தெரியவில்லை. இன்றுமுதல் வகுப்புகள் ஆரம்பமாகின்றன. நாற்பத்தைந்து நாட்கள் கடந்துவிட்டன. இவ்வளவு நாட்களில் ஒரு முறை கூட, அர்ச்சனா அவள் வீட்டில் இருந்த யாரையுமே தொடர்பு கொள்ளவில்லை.

அர்ச்சனா இப்படி இருந்தாள் என்றால், பெமியோ டெலிபோன் அறையே கதியென இருந்தாள். அங்கே இருந்ததோ காயின்போன். அவள் இரண்டுமுறை பேசினாலே, அந்த போன் நிரம்பி வழிந்துவிடும், அவ்வளவு பேசினாள்.

அவள் விடும் கண்ணீரில் அந்த போன் மூழ்கிவிடும். ஜூடித்திற்கு அவளை கேலி செய்வதுதான் மிகப்பெரிய வேலையே. பெமி போனில் பேசும்பொழுது சொல்லும் வார்த்தைகளை வைத்து அனியாயத்திற்கு அவளை கலாட்டா செய்வாள்.

“போடி நான் இதுவரை என் வீட்டை விட்டு பிரிந்ததே கிடையாது தெரியுமா?”, சொல்லும் பொழுதே கண் கலங்கிவிடும்.

உடனடியாக தன் சுடிதார் துப்பட்டாவை அவள் கண்களில் ஒற்றி எடுத்து பிழிவாள் அவள். ஜூடித்தை துரத்தி துரத்தி அடிப்பாள் பெமி. வைஷாலியோ போனில் பேசினால்,

அவள் பேசுகிறாளா இல்லை சும்மா வைத்துக் கொண்டிருக்கிறாளா? என்பதே தெரியாது.

கூர்ந்து கவனித்தால் ம்.... ம்ஹூம்..... ம்..... இந்த வார்த்தைகள் மட்டுமே மறுபடியும் மறுபடியும் கேட்கும். “இந்த ம் கொட்டுறதுக்கு எதுக்கு அதை காதில் வச்சுட்டே கொட்டணும்....., அப்படி ஓரமா போய்நின்னு கொட்டினால் நாங்களாவது பேசுவோம் இல்ல.....”, ஜூடித்தின் கேலி தொடரும்.

கண்களாலேயே அவள் விருப்பமின்மையை வெளிப்படுத்துவாள் வைஷாலி. “பொண்டாட்டி, நீ எப்படிடி லவ் பண்ணி கல்யாணம் பண்ணிகிட்ட? உண்மையை சொல்லு, நிஜம்மாவே உன் காதலை அண்ணாகிட்டே சொன்னியா?”, தனியாக இருக்கும் பொழுது அர்ச்சனா கேட்பாள்.

அதற்கு அழகாக வெட்கப்பட்டு சிரிப்பாளே தவிர, அவள் வாயிலிருந்து ஒற்றை வார்த்தை வெளியே வராது. “இப்படி சிரிச்சுதான் மயக்கி இருப்படி”, அவள் கன்னத்தை பிடித்து கிள்ளுவாள்.

ஜூடித்திற்கும் அர்ச்சனாவிற்கும் எப்பொழுதும் முட்டிக் கொள்ளும். அர்ச்சனாவை ஜூடித் பொது இடம் என்றும் பார்க்காமல் கேலி செய்வாள். அதை அர்ச்சனா தனிமையில் சுட்டிக் காட்டுவாள். ஆனாலும் அவள் கேட்பதாக இல்லை.

எனவே அர்ச்சனாவும் அவளை கேலி செய்வாள். ஜூடித்தின் தலைமுடி சுருட்டை முடி, பேண்டில் அடங்கவே செய்யாது. கையிலும் அடங்காது. அதேபோல் கண்கள் மிகவும் மெல்லியதாக கீற்றுபோல் இருக்கும். அதாவது ஜப்பான் காரர்களின் கண்களைப்போல் இருக்கும்.

அவளை பஞ்சுமிட்டாய் என்றும் பூனைக்கண்ணி என்றும் அழைத்து கேலி செய்வாள். அர்ச்சனா அனைவரையுமே கேலி செய்வாள், சகட்டுமேனிக்கு இருக்கும். ஆனால் அது

அவர்களுடன் இருக்கும் தனிமையான தருணங்களில் மட்டுமே.

வைஷாலியை பொண்டாட்டி என்று அழைப்பதோ, ஜூடித்தை பஞ்சுமிட்டாய், பூனைக்கண்ணி என்று அழைப்பதோ யாருக்குமே தெரியாது. அவள் மற்றவர்களுக்கு தெரியும் வண்ணம் நடப்பது என்றால், பெமியுடன் மட்டுமே.

அவளை டார்லிங் என்று அழைப்பதும், இடை இடையே அவளே எதிர்பார்க்காத வேளைகளில் அவள் கன்னத்தில் முத்தமிட்டு மிரள வைப்பதும் அனைவருக்கும் தெரியும். அர்ச்சனாவின் குணம் அனைவருக்கும் தெரியுமாகையால் அதை கண்டுகொள்ள மாட்டார்கள்.

அன்று முதல்நாள் வகுப்புகள் ஆரம்பம். காலையில் சரியாக ஒன்பதுமணி பதினைந்து நிமிடங்களுக்கு எல்லாம் அவள் ஹாஸ்டலை விட்டு வெளியே வந்தாள்.
பத்துமணிக்குத்தான் கிளாஸ் ஆரம்பம். அதற்குமுன் செய்ய வேண்டியவற்றை செய்யவே சீக்கிரமாக கிளம்பினாள்.

அவள் வரவுக்காகவே காத்திருந்தவன்போல் அவள் வழியின் குறுக்கே வந்து நின்றான் பேட்ரிக். “எவண்டா அவன்.....?”, “பேட்ரிக், டேய் நீங்களா? எங்கேடா உன்னை ஒரு வாரமா பார்க்கவே முடியலை”, யாரோ என்று கோபமாக துவங்கியவள், அவனை பார்க்கவே, சகஜமாக பேசினாள்.

அவள் குரலில் கொஞ்சமாவது எதிர்பார்ப்பையும், முகத்தில் சந்தோஷ மின்னலையும் எதிர்பார்த்து வந்தவன் ஏமாந்தே போனான். நீதானா..... வா..... என்ற வரவேற்பு, என்னவோபோல் இருந்தது அவனுக்கு. அவள் மனதில், தான் இருக்கவேண்டும், இடம் பிடிக்கவேண்டும், அதற்கு கொஞ்சநாள் பிரிவு அவளுக்கு தன் தேவையை உணர்த்தும் என்று எண்ணி,

மிகவும் முயற்சி செய்து ஒரு வாரம் அவளை காணாமல் தவித்துபோய் அவன் வந்தால்....., அவளிடம் அதில் பாதியாவது இருக்கும் என்று எதிர்பார்த்தான். ஆனால்....., அர்ச்சனா அவனை ஜஸ்ட் லைக் தட் என்று ஹாய் சொன்னவிதம்....., சோர்ந்து போனான்.

‘மவனே, ஒரு வாரம் எங்கடா போயிட்டு வந்த, ஏன் என்னை பாக்கவே வரலை? பாத்தவுடனே இப்படி இளிச்சு பேசினால் மட்டும் போதுமா? அதெப்படி இந்த ஒரு வாரமும் நீ என்னை பார்க்க வராமல் போகலாம்’, மனதுக்குள்ளேயே கறுவிக் கொண்டாள்.

“பேட்ரிக் நான் கேட்டத்துக்கு பதிலே சொல்லாமல் அப்படி என்ன யோசனை?”, அவனை கேட்டாள்.

“என்ன கேட்ட.....?”, அவள் கேள்வியே அவனுக்கு மறந்துவிட்டது.

“ம்ம்ம்....., ஒரு வாரம் எங்கே போயிருந்தன்னு கேட்டேன்”, குரல் சாதாரணமாகவே இருந்தது.

“அப்போ நீ என்னை தேடுனியா?”, குரலில் ஆர்வம், கண்களில் ஏக்கம்.

‘ஆமாண்டா மடையா’, “என்ன அபத்தமா இப்படி ஒரு கேள்வி. சரி விடு, எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு நான் கிளம்புறேன்”, சொல்லிவிட்டு நடந்தாள்.

“நீ கேட்டதுக்கு நான் பதிலே சொல்லலை, நீ பாட்டுக்கு போற?”, குறைபட்டான் அவன்.

“கேள்விதான் நான் கேட்பேன். பதில் சொல்வதும், சொல்லாமல் இருப்பதும் உன் இஷ்டம் . இதில் நான் எப்படி தலையிட முடியும்”, அசட்டையாக பதில் சொன்னாள்.

“அப்போ என்னோட பதில் வேண்டாமா?”, நின்றுவிட்டான்.

“நான் யாரிடமும் எப்பொழுதும் எதையும் எதிர்பார்ப்பதில்லை பேட்ரிக்”, ‘ஆனால் நீ பதில் சொல்லியே ஆகணும்னு என் மனசு துடிக்குதுடா. அதை எப்படி உனக்கு புரிய வைக்கன்னுதான் எனக்கு தெரியலை’, வெளியே உறுதியுடனும், உள்ளுக்குள் உரு குலைந்தும் பதில் சொன்னாள்.

“சரி நீ எதிர்பார்க்கவில்லை என்றாலும் நான் பதில் சொல்லுறேன். ஒரு வாரம் காய்ச்சல், அதனால்தான் வர முடியலை”, அவன் வராமல் இருந்ததன் காரணம் காய்ச்சல்தான், ஆனால் மனதில் அவன் நினைத்த எண்ணம்தான் வேறாக இருந்தது.

“காய்ச்சலா.....? இப்போ சரியாயிடுச்சா.....?”, அவனை நெருங்கி அவன் நெற்றியில் கையை வைத்து பார்த்தாள். அவள் நெருங்கி தன்னை தொட்ட பிறகுதான் அவன் கொதிக்கவே துவங்கினான்.

“இப்போ சரியாயிடுச்சு.....”, அவள் நெருக்கத்தை ரசித்தவாறே பதில் சொன்னான். அவளோ எதையும் கண்டுகொள்ளவில்லை. அவன் கண்களில் தெரிந்த ஆர்வம், தான் நெருங்கி அவனை தொட்டதில் கனிந்த அவன் முகம், தன் நெருக்கத்தை அவன் ரசிக்கிறான் என்பது தெரிந்து மனதுக்குள் இனிய குறு குறுப்பு.

அதை அடக்கியவாறே, அவனைவிட்டு கொஞ்சம் விலகி, “எதுக்கும் இன்னும் ரெண்டுநாள் மருந்து சாப்பிடுங்க. முடிந்தால் சாயங்காலம் வாங்க பேசலாம். இல்ல வேண்டாம்....., உங்களுக்கு டைம் கிடைக்கும்போது பார்க்கலாம்”, அவள் சொல்லிவிட்டு திரும்பி செல்ல, அவள் முன்னால் வந்து வழியை மறித்தான்.

“என்ன விளையாட்டு இது பேட்ரிக். இன்னைக்கு முதல்நாள் கிளாஸ், நான் ஹாலை கொஞ்சம் பாக்கணும். நீ என்னன்னும் சொல்லாமல், இப்படி வழியாவே மறிச்சுட்டு

இருந்தால் என்ன அர்த்தம். சொல்லவேண்டியதை சீக்கிரம் சொல்லேன்”.

“அப்போ சொல்லிடவா.....?”, குரலில் கொஞ்சம் குழைவு.

‘ஹையோ இவன் ஐ லவ் யூன்னு சொல்லிடுவானோ?’, நினைப்பே தித்தித்தது.

“சொல்லுங்க பேட்ரிக்.....”, மணிக்கட்டை திருப்பி மணி பார்த்தாள்.

“ஆல் தி பெஸ்ட் சனா. நீ உன் படிப்பை வெற்றிகரமாக முடிக்க என் வாழ்த்துக்கள்”, அவனது வாழ்த்தை சலனமே இல்லாமல் கேட்டாள்.

அவளுக்கு இவை புதிது. பரீட்சை எழுத செல்லும்போழுதே, வாழ்த்துக்களை கேட்டு அறியாதவள், கிளாஸ் துவங்குவதற்கே அவனிடமிருந்து கிடைக்கும் வாழ்த்து அவளது உறுதியை கொஞ்சம் அசைத்தது.

ஆனாலும் தன் உணர்வுகளை வெளிக்காட்டி பழக்கம் இல்லாததால் சொன்னாள், “நன்றி.....”, ஒற்றை வார்த்தையில் முடித்துக் கொண்டாள்.

இருவருக்கு இடையில் தேவையற்ற மௌனம். “அர்ச்சனா நான் உன்கிட்டே இன்னொன்னும் சொல்லணும்”, கொஞ்சம் தயங்கினான்.

“சொல்லுங்க.....”.

“ஐ லவ் யூ சனா. உனக்காக இங்கே ஒருத்தன் இருக்கிறேன், காத்திருக்கிறேன். உன்னோட இன்பத்திலும், துன்பத்திலும், உடல்நலத்திலும், நோயிலும் உன்னோட இருக்க, உன்னோட பங்குபெற எனக்கு சம்மதம்”, அவள் வலக்கரத்தை, தன் வலக்கரத்தால் அழுந்த பற்றிக்கொண்டு சொன்னான். அவள் கையை எடுத்து புறங்கையில் மெதுவாக இதழ் பதித்தான்.

அர்ச்சனாவின் உடல் சிலிர்த்து அடங்கியது. அவன் சொன்ன வார்த்தைகள் திருமணத்தின்போது மணமக்கள் தங்கள் கைகளை பிடித்தவாறு சொல்லும் வார்த்தைகள். இதையுமே சலனமே இல்லாமல் கேட்டுக் கொண்டாள். அவனிடமிருந்து கைகளை உருவிக் கொள்ளவும் முயலவில்லை.

“நன்றி பேட்ரிக்.....”, மூச்சு விட கூட சிரமமாக இருக்க, ஆனந்த அதிர்ச்சியின், மீண்டும் அதே வார்த்தையை சொன்னாள்.

“உனக்கு இதை ஏத்துக்க நாள் ஆகும்னு எனக்கு தெரியும் சனா. நானும் உன் படிப்புமுடியுமட்டும் காத்திருக்கத்தான் நினைத்தேன். ஆனால்....., இனிமேல் உன் வாழ்க்கையில், ஒரு நாள் கூட, தனிமையை உணரவே கூடாதுன்னு எனக்குள் ஒரு வேகம், அதான் இப்போவே சொல்லிட்டேன்.

இந்த நிமிடத்தில் இருந்து, மனதால் நீ என்னோட மனைவி. உன் கையில் நான் கொடுத்த உறுதிமொழி என்னன்னு உனக்கு தெரியுமென்று நினைக்கிறேன்.

அவள் தலை ஆமோதிப்பாக ஆடியது. “என்கிட்டே நீ ஏதாவது சொல்லணுமா?”, மெதுவாக கேட்டான்.

“ஆமா....., எனக்கு நேரமாயிட்டே இருக்கு. இன்னும் கொஞ்சநேரம் போனால் எல்லோரும் வந்துடுவாங்க”, சிரிக்காமல் சொன்னாள்.

பேட்ரிக் சட்டென சிரித்துவிட்டான். “எதைப்பற்றியும் யோசிக்காமல் உன் படிப்பில் மட்டும் கவனம் செலுத்து சரியா?”, ஆதரவாக சொன்னான்.

‘கிராதகா, சொல்லுறதையும் சொல்லிட்டு, எதையும் நான் யோசிக்க கூடாதா. என் நேரம்தாண்டா’, என்னமோ அவனை கட்டிக் கொண்டு ஓ..... என்று அழ வேண்டும்போல் இருந்தது அவளுக்கு.

“யோசிக்கிறதா நானா.....? எதைப்பற்றி.....?”, அவள் அப்பாவியாக கேட்க, அவன்தான் முகம் தொங்கிப் போனான்.

அவனிடம் விடைபெற்று திரும்பி நடந்தாள். அவள் முதுகையே பார்த்தவாறு, பார்வையிலிருந்து மறையும்வரை பார்த்துக் கொண்டிருந்தான். பின்னர் ஒரு பெருமூச்சுடன் திரும்பி நடந்தான். மாடியிலிருந்து அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் அர்ச்சனா.

‘நீ என்னடா நினைச்சுட்டு இருக்க? என்னையே சுற்றி வாற, முதல் முறையா என் மனசை திறக்க வைக்கிறாய். எனக்கும் மற்றவர்களைப் போன்ற சாதாரண உணர்வுகள், ஏக்கங்கள், ஆசைகள் இருக்கு என்பதை முழுமையா உணர வைக்கிறாய்.

மனசுக்குள் புகுந்து இம்சை செய்யிற, உன் குடும்பமே எனக்காக எதையும் செய்ய தயாரா இருப்பதை, உன் ஒவ்வொரு செய்கையிலும் எனக்கு புரிய வைக்கிற. நீங்க எல்லாம் யார்? தெரியாத இந்த ஊரில், என் மனம் உன்னை மட்டும் சுற்றுவது ஏன்?

ஸ்டெல்லா மேமோட கண்டிப்பு, கனிவு எனக்கு பிடிக்குதே ஏன்? அதிலும் உன்னை காண முடியாத இந்த ஒரு வாரத்தில் நீ என்னை எவ்வளவு பாதித்து இருக்கிறாய் என்பதை நான் நல்லா புரிந்துதான் இருக்கிறேன்.

இப்போ நீ சொன்னியே....., உன் காதலையும், நான் உன் மனைவி என்ற வார்த்தையையும்....., புறங்கையில் பதிந்த உன் இதழ் தீண்டலையும்....., என்னால் ரசிக்காமல் இருக்க முடியலை. என் வீட்டை பற்றிய கவலை எனக்கு இல்லை.

இப்போ நீ சொன்ன இந்த வார்த்தைகளை நீ உணர்ந்துதான் சொன்னாயா என்பது எனக்கு தெரியாது. ஆனால் நான் உன்னை பார்த்த அன்றே காதலிக்க துவங்கிவிட்டேன். நீ சொன்ன இந்த நொடிமுதல் நான்

உன்னவள்....., இதை நீயே இனிமேல் மாற்ற நினைத்தாலும் என்னால் முடியாது.

முழுதாக ஒரு நிமிடம் நின்றிருப்பாள், ஒரு பெரிய பெருமூச்சு வெளியேறியது அவளிடமிருந்து. அந்த சிந்தைகளை உதற முயன்றாள். “இது சரிவருமா பேட்ரிக். என்னை நீ கல்யாணம் செய்தால், நான் உன்னை ரொம்ப படுத்திடுவேன்”, சத்தமாக சொல்லிக் கொண்டாள்.

‘அப்போ கல்யாணம் செய்யிறதா முடிவு பண்ணிட்ட’, மனசாட்சி கேட்க,

“கல்யாணம் முடிஞ்ச பிறகு இப்படி ஒரு கேள்வி கேக்குறியே, உனக்கே இது ஓவரா இல்ல”.

“என்னது கல்யாணம் முடிஞ்சுடுச்சா இது எப்போ?”, ஜெர்க்கானது மனசாட்சி.

“இப்போதான் ஒரு பத்து நிமிஷத்துக்கு முன்னாடி”, தன் வலது புறங்கையில் அவளும் தன் இதழ்களை ஒற்றினாள்.

‘யாரோ கொஞ்சநாளைக்கு முன்னாடி, எனக்கு அப்படி ஒரு எண்ணமே இல்லை, எனக்கு ஏற்றவனும் இங்கே இல்லைன்னு சொன்னாங்க. உனக்கு தெரியுமா’.

“அப்படியா யாரது யாரது.....?”, சுற்றிலும் பரபரப்பாக தேட, அவள் மனசாட்சி ஓடி ஒளிந்து கொண்டது. அங்கிருந்த ஹால் மிகப்பெரியது. நூற்றி எழுபதுபேரும் அமரும் அளவு சேர்கள் அடுக்கப்பட்டு, சுத்தமாக இருந்தது ஹால்.

கரும்பலகையை துடைத்துவிட்டு, “நல்வரவு” எழுதினாள். வண்ணம் அடித்தாள். சரியாக ஒன்பது ஐம்பதுக்கு வருகைபதிவு எடுத்துவிட்டு, ஆசிரியர் வர காத்திருந்தாள். வைஷாலி வரவே அவளுடன் சேர்ந்து அமர்ந்துகொண்டாள்.

வைஷாலி அவளது இடப்புறமும், பெமி, ஜூடித் அவள் வலப்புறமும் அமர்ந்து இருந்தார்கள். “அர்ச்சனா என்ன வேலை ஜாஸ்த்தியா?”, அக்கறையாக கேட்டாள் வைஷாலி.

“இன்னைக்கு வேலையே இல்லை வைஷு. ஜஸ்ட் போர்டை தான் ரெடி பண்ணினேன். அனேகமா இனிமேல் என் வேலை குறையலாம், சரி நீ சொல்லு கிளம்பி வர ஏன் இவ்வளவு நேரம்”, அரட்டை துவங்கியது.

“அர்ச்சனாக்கா....., நம்ம காலேஜ் தன்னாட்சி அங்கீகாரம் வங்கியிருக்குறது எவ்வளவு பெரிய விஷயம் இல்ல”, பெமியை நகர்த்திவிட்டு கேட்டாள்.

‘இவ என்ன பெரிய விஷயத்தை கண்டாள்’, குழம்பி போனாள் அர்ச்சனா.

அர்ச்சனா பதில் சொல்லும் முன்பே, “ஆமா ஆமா.....”, பெமி வேகமாக பதில் சொன்னாள்.

“பொண்டாட்டி இவளுகளுக்கு டவுசர் களண்டால்தான் புத்திவரும். தன்னாட்சி அங்கீகாரம் பெருமையான விஷயமாம். இன்னும் கொஞ்ச நேரத்தில் எப்படி பீதியாவாளுங்கன்னு பாரேன்”, வைஷுவின் காதில் சொல்லி சிரித்தாள்.

“ஏன் அர்ச்சனா அப்படி சொல்லுற?”, வைஷுவிற்கும் புரியவில்லை.

அர்ச்சனா பதில் சொல்ல துவங்கும் வேளையில் உள்ளே நுழைந்தார் ஸ்டெல்லா. அவருடன் மற்றொரு ஆசிரியர். மேடையேறி மைக் முன்னால் நின்றார். “ஹல்லோ டீச்சர்ஸ், உங்களுக்கு ஒருசில அறிவிப்புக்களை சொல்லத்தான் நான் இப்போ வந்திருக்கிறேன்”.

“சும்மா வரமாட்டீங்கன்னு எங்களுக்குத்தான் தெரியுமே”, அர்ச்சனா துவங்கினாள்.

“இன்னையில் இருந்து ரெகுலர் கிளாஸ் துவங்குவது உங்களுக்கே தெரியும். அதற்கு முன்னாடி, உங்களுக்கு புது தலைவர், நான்கு ஹவுஸ்ஸாக உங்களை பிரிக்கணும், சோ நான்கு ஹவுஸ் லீடர்ஸ் வேணும்.

அதில் தலைவரே ஒரு ஹவுசின் லீடராக இருக்கலாம். இப்போ ஓரளவுக்கு உங்களுக்கே எல்லோரைப்பற்றியும் தெரிந்திருக்கும். அதனால் உங்களுள் ஒருவர் எழுந்து, ஒருவரின் பெயரை முதலில் சொல்லவேண்டும்.

பிறகு அதை மற்றவர் வழி மொழியவேண்டும். எனக்கு ரொம்ப நேரமில்லை. சோ சீக்கிரம்”, மாணவிகளை பார்த்தவாறே பேசாமல் நின்றார்.

ஹால் முழுவதும் பேச்சால் அமளியானது. “ஹப்பா நான் தப்பிக்க போறேன். அடியேய் எவளாவது என் பெயரை சொன்னீங்க....., அவளை ஓடவிட்டு உதைப்பேன், இப்போவே சொல்லிட்டேன்”, தன்னை சுற்றி இருந்தவர்களை மிரட்டினாள்.

அதற்கு முன்பே, “எங்களுக்கு தலைவியை மாற்றவேண்டாம்”, ஓங்கி ஒலித்தது ஒரு குரல்.

“எவடி அந்த ஓட்டவாய்.....”, சிலிர்த்து எழுந்தாள் அர்ச்சனா. “ஆமா மாத்தவேண்டாம், மாத்த வேண்டாம்.....”, மீதி நூற்றி அறுபதுபேரின் குரல்களில் அவளது ஒற்றை குரல் அடிவாங்கியது.

“அர்ச்சனா கம் ப்ரண்ட்.....”, ஸ்டெல்லா அழைத்தார்.

“என்னை சுத்திவிட்டு வேடிக்கை பாக்குறாளுங்களே.....”, புலம்பியவாறு முன்னால் சென்றாள்.

“மேம் ஐ’ம் நாட் வில்லிங்”, தன் அதிருப்தியை வெளியிட்டாள்.

“அதை பிறகு பாத்துக்கலாம், முதல்ல இங்கே வெயிட் பண்ணுங்க”.

“இல்ல மேம்.....”, அவள் குரல் பிறகு கண்டுகொள்ளப்படாமல் போனது.

“மேம் நானும் மற்ற லீடர்கள் நேம் சொல்லலாமா?”, ஒரு முடிவோடு கேட்டாள்.

“டீச்சர்ஸ், உங்க தலைவியே பெயர்களை சொல்லுறாங்களாம்.....”, சொல்லிவிட்டு அர்ச்சனாவை மைக்கில் பெயர்களை அறிவிக்க சொன்னார்.

கொஞ்சம் மைக்கில் பேச தயங்கினாள். ‘தலைக்குமேல் போய்டுச்சு, இதில் ஜாண் போனால் என்ன, முழம் போனால் என்ன? நமது படைகளையும் சிக்க வைப்போம்’, முடிவுடன் மேடை ஏறினாள்.

தன் படைகளை பார்க்க, அவர்கள் இருந்த இடங்களில் இருந்தே கையெடுத்து கும்பிடுவது தெரிந்தது. அதை அசட்டை செய்துவிட்டு, ஒவ்வொருவரின் பெயர்களையும் கூற துவங்கினாள்.

“ரூபி, வித்யா, ரெனி, சக்தி, தெரேசா, வேணி, வீணா, ஜெஸ்சி, ஸ்வீட்டி, ஷீபா”, பத்துபேரின் பெயர்களையும் வரிசையாக சொன்னாள்.

“ஹாய் ப்ரண்ட்ஸ், இவங்க பத்துபேருமே ரொம்ப திறமையானவர்கள். எனக்கு தெரியாமலும் இன்னும் நிறையபேர் இருக்கலாம். உங்களுக்கு தெரிந்தவர்களாகவும் இருக்கலாம். அவர்களையும் நீங்க சொல்லுங்க. மொத்தமாக வைத்து தேர்ந்தெடுக்கலாம்”, கம்பீரமாக நின்றாள்.

ஆனால் வேறு எவரின் பெயர்களையும் யாரும் சொல்லாததால், இந்த பத்துபேரை அப்படியே முன்னால் அழைத்தார்கள். அர்ச்சனாவின்மேல் கொலை வெறியோடு

வந்தார்கள் அவர்கள். இவர்களில் மூன்றுபேர் பொறுப்பேற்க முடியவே முடியாது என்று சொல்லவே, அவர்களை அனுப்பி விட்டார்கள்.

ஸ்டெல்லா அவசர படுத்தினார். “சீக்கிரம் ஒருத்தர் முன்மொழிங்க, வேறு ஒருத்தர் வழி மொழிங்க”.

இறுதியாக, அர்ச்சனா, ரூபி, சக்தி, வீணா நால்வரும் நான்கு ஹவுஸ் லீடராக தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். நான்கு வர்ணங்கள் கொடுத்தார்கள், ரெட், கிரீன், ப்ளூ, எல்லோ. அர்ச்சனாவிற்கு ப்ளூ வர்ணம் வேண்டுமென்ற ஆசை எழுந்தது.

“சரி அப்டேர்நூன் மற்றவர்களை ஹவுஸ் வாரியாக பிரிக்கிறேன். இப்போ இவங்க தொடர்வாங்க”, சொல்லிவிட்டு விடை பெற்று சென்றுவிட்டார். புதிய தலைவர்களுக்கு கைதட்டி தங்கள் வாழ்த்துக்களை சொன்னார்கள்.

ஸ்டெல்லா சென்ற பிறகு மேடையேறினார் மாதவி மேடம். “குட் மோர்னிங் டீச்சர்ஸ், நான் மாதவி, உங்களுக்கு இனோவேசன், சேலென்ஜெஸ் இன் எஜுக்கேசன் இந்த இரண்டு பேப்பெர்களும் நான்தான் எடுக்கப் போகிறேன்.

தினமும் உங்களுக்கு ஐந்து பாடவேளைகள் இருக்கும். காலையில் மூன்று, மதியம் இரண்டு. சிலநாள் இரண்டு பாடவேளை என்னுடையதாக இருக்கும், சிலநாள் ஒன்று. உங்களுக்கு டைம் டேபிள் நோட்டீஸ் போடில் போட்டிருக்கிறோம்.

இன்னைக்கு உங்களுக்கு சில விஷயங்களை தெளிவு படுத்துகிறேன். முதலாவது இங்கே நூறு மதிப்பெண்கள் ஒவ்வொரு பாடத்துக்கும் வழங்கப்படும். அதில் அறுபது மார்க் தான் உங்கள் எழுத்து தேர்வு”.

“மீதிக்கு ஆப்பு.....”, அர்ச்சனாவை வித்தியாசமாக அருகிலிருந்தவர்கள் பார்க்க, “என்னை என்ன பார்வை,

அதையும் அவங்களே சொல்லுவாங்க பாருங்க”.

“மீதி நாற்பது மதிப்பெண்களில், பத்து மதிப்பெண், உங்களது அசைன்மென்ட்க்கு, பத்து மதிப்பெண் நேரம் தவறாமல் வைப்பதற்கு, பத்து மார்க், புதுமையான விஷயங்கள் செய்வதற்கு, கடைசி பத்து மதிப்பெண், உங்களோட டீச்சிங் எலிஜிபிலிட்டி, நோட்ஸ் எடுப்பதற்கு”.

“ஆப்பு புரிஞ்சுதா.....?”, நக்கலாக கேட்டாள் அர்ச்சனா.

“மீதி நாற்பது மதிப்பெண்களும் எங்களது கையில். சோ உங்களது வொர்க் எப்பொழுதும் பெர்பெக்ட்டாக இருக்க வேண்டும். மீதியை நான் பிறகு சொல்லுகிறேன்”, கிட்டத்தட்ட மிரட்டிவிட்டு, சென்றுவிட்டார் மாதவி.

ஹாலே அமைதியில் மூழ்கியது. “என்ன எல்லோருக்கும் ஜீரணிக்க இவ்வளவு நேரமாகுது”, யோசனையாக சொல்லிவிட்டு, தன்னிடமிருந்த தண்ணீரை வைஷாலிக்கு கொடுத்தாள். உறைந்திருந்தவள் அப்பொழுதுதான் நடப்புக்கு திரும்பினாள்.

“முதல்ல தண்ணியை குடி.....”, அவள் கையில் திணித்தாள்.

“ஜூடி....., தன்னாட்சியுரிமை நம்ம கல்லூரிக்கு கிடைத்தது ரொம்ப பெரிய விஷயம் பாத்தியா”, அழும் நிலையில் இருந்தாள் ஜூடி.

“அக்கா....., என்ன இப்படி சொல்லிட்டாங்க?”, கண்ணீர் எட்டிப்பார்த்து, அவளுக்கு.

“நீதானே ரொம்ப பெருமை பட்ட, அனுபவி.....”, கிண்டலாக பதில் சொன்னாள்.

பின்னர் எழுந்து வெளியே சென்று, நோட்டீஸ் போர்டில் இருந்த டைம் டேபிளை எடுத்துவந்து, மைக்கில் சொல்ல சொல்ல, அனைவரும் எழுதினார்கள்.

அங்கிருந்த யார் முகத்திலும் உற்சாகம் இல்லை. அர்ச்சனா ஏதாவது செய்வாளா?

பகுதி - 16

நட்பின் துரோகத்தைபோல்

கொடுமையானது வேறொன்றும் இல்லை

உயிரோடு இருக்கும் நேரம்வரை

கொன்றுகொண்டே இருக்கும்

அந்த துரோகம்.....

ஹாலில் இருந்த அமைதி அர்ச்சனாவை பயமுறுத்தியது. வீணாவை அழைத்தாள். அவள் காதில் எதையோ சொல்ல, அவள் வெளியே சென்றாள். அவள் செல்லவே, மைக் முன்னால் நின்று அதை ஆன் செய்தாள்.

“ஹாய் ப்ரண்ட்ஸ், அனைவருக்கும் என் வாழ்த்துக்கள். எல்லோரும் இப்போ என்மேல் கொலைவெறியாவது எனக்கு தெரியுது. ஆனால் இப்போ நான் உங்களிடம் பேசியே ஆகணும்.

இப்போ புதுசா உங்ககிட்டே எதையுமே நான் சொல்ல வரவில்லை. ஏற்கனவே மாதவி மேடம் சொன்னதுதான். அவங்க மட்டுமில்லை, இனிமேல் வரப்போகும் எல்லா மேமும் அதைத்தான் சொல்லுவாங்க.

தன்னாட்சி உரிமை வாங்கிய கல்லூரிகளில் நடக்கும் வழக்கமான நடைமுறைதான் இது. அதாவது மாணவர்களை தங்களோட கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்று அவர்கள் நினைப்பார்கள்.

இப்போ நாம படிக்க வேண்டியது ரொம்பவே கம்மியாதான் இருக்கும். அதைவிட, நாம படித்தது எதுவுமே அவங்க கேள்வியா கேட்கப்போவது இல்லை. எல்லாமே நமது திறமைக்கு சவாலான விஷயங்களாகத்தான் இருக்கும்.

இந்த அசைன்மென்ட், இனோவேசன், ஆன் டைம், டீச்சிங் எலிஜிபிலிட்டி எல்லாத்தையும் நீங்க தனியா எதிர்கொள்ள போகவில்லை. உங்க ஒவ்வொருத்தரோடவும், நாங்க நூற்றி அறுபத்து ஒன்பதுபேர் இருக்கிறோம்.

இதில் நாற்பதுபேர் கன்னியர்கள். அவர்களோட வழிகாட்டுதலும் நமக்கு கிடைக்கும். அப்படித்தானே சிஸ்டர்ஸ்.....", கன்னியர்களை தங்களைவிட்டு ஒதுக்கி வைக்க முயலவில்லை அவள்.

"இப்போ சொல்லுங்க, ஏன் இவ்வளவு அமைதியா உக்காந்து இருக்கீங்க. எல்லாவற்றையும் நமக்கு செய்ய கால அவகாசம் கொடுப்பாங்க. அதையும் நீங்க தனியா செய்யவேண்டாம், துணைக்கு நாம எல்லோரும் இருக்கிறோம். சோ....., இனிமேல் வரப்போகும் மேம்கள் சொல்லுவதை கேட்டு, இப்படி இடிந்துபோய் உக்காராமல், ஓகே....., அப்படின்னு சத்தமா அவங்களுக்கு பதில் கொடுப்போம். ஓகேயா.....".

"ஒகே.....", அனைவரும் உற்சாகமாக பதில் கொடுத்தார்கள்.

"சரி இந்த சந்தோசமான மனநிலையிலேயே நான் உங்களுக்கு ஒரு ஜோக் சொல்லுறேன் அதையும் கேளுங்க. எல்லாருக்கும் சர்தார்ஜி ஜோக்ஸ்ன்னா ரொம்ப பிடிக்குமே, நானும் அதையே சொல்லுறேன்.

ஒரு ரயில் திடீரென்று தடம்புரண்டு வயல்வெளியில் இறங்கி நின்றது. ரயில் டிரைவர் ஒரு சர்தார்ஜி.

பயணிகள் எல்லோரும் கேட்டாங்க, உனக்கு கண்ணு தெரியலையா? ரயில் எப்படி வயல்ல விழுந்திருக்கு பாரு!:0 ஏன் இப்படி செஞ்ச, பாத்து ஓட்ட கூடாது. அப்படி இப்படின்னு எல்லாரும் அவரை திட்டுனாங்க.

அதுக்கு சர்தார்ஜி சொன்னாரு, ரயில் தண்டவாளத்துல ஒருத்தன் நின்னுக்கிட்டு இருந்தான், அதனால்தான்

அப்படின்னு.

பயணிகள் எல்லோருக்கும் செம கோபம். அடப்பாவி! ஒருத்தனை காப்பத்தறதுக்கா எங்க இத்தனை பேரை பலிகொடுக்க இருந்த? நீ அவன்மேல வண்டிய ஏத்த வேண்டியதுதானே?

சர்தார்ஜி சொன்னாரு....., அதுக்குத்தான் முயற்சி பண்ணேன். ஆனா அவன் வயல்ல புகுந்து ஓட ஆரம்பிச்சுட்டான்னு!!!", அவள் சொல்லி முடிக்கவே ஹாலே சிரிப்பலையில் திளைத்தது.

சென்றிருந்த வீணா திரும்ப வரவே, வேகமாக, "இப்போ அடுத்த ஆட்டம் ஆரம்பம்", சொல்லிவிட்டு அவள் இடத்தில் வந்து அமர்ந்து கொண்டாள். வைஷுவும் ஜூடியும் அவளை அணைத்து முத்தமிட்டார்கள். பெமி முகத்தை திருப்பிக் கொண்டாள்.

அடுத்து வந்தவர் சைக்காலஜி மேடம். அவரோ மாணவிகளின் மனநிலை புரிந்து, நிதானமாக அழகாக பேசினார். செய்யவேண்டிய வேலைகளை ஒவ்வொன்றாக சொல்லுவதாக சொல்லிச் சென்றார். ஒருமணிநேரம் சென்றதே தெரியவில்லை.

அடுத்த ஒருமணிநேரம் பொருளறிவியல் மாணவிகளுக்கும், கணிதம் படிக்கும் மாணவிகளுக்கும் லைப்ரேரி ஹவர். எனவே பெமி, அர்ச்சனா, ஜூடித், வைஷாலி அனைவரும் லைப்ரேரிக்கு சென்றார்கள்.

அங்கே இருந்தது ஒரு முசுடு முத்தம்மா. அங்கே நிற்காதே, பேசாதே, அடுத்தவரை பார்க்காதே, அப்படி இப்படியென்று ஏகப்பட்ட கட்டளைகள். அவர் ஒரு கன்னியாஸ்திரியும்கூட.

"என்னடி இத முசுடு முத்தம்மா இப்படி சொல்லி அராஜகம் பண்ணுது", பெமியிடம் புக் எடுப்பவள்போல் திரும்பி நின்று கேட்டாள்.

“ஹேய் அப்படியெல்லாம் சொல்லாதே, அவங்களோட வேலையை அவங்க பாக்குறாங்க”, வக்காலத்து வாங்கினாள் பெமி.

“நீ அம்புட்டு நல்லவளாடி. சொல்லவே இல்ல, அது மூஞ்சியை பாரேன், இஞ்சி தின்ன கொரங்காட்டம். அது இங்கேயே முறைச்சு, முறைச்சு பாக்குதுடி”, மும்முரமாக தேடிக் கொண்டே பேசினாள்.

“அவங்க சும்மா இங்கே பாக்குறாங்க”, மெதுவாக சொன்னாள்.

“சும்மா பாக்குதா? யாராவது சிக்குவாங்களான்னு தேடுது நீ வேற, அதுக்குள்ளே பத்துபேரை காச்சுடுச்சு. இதுக்கு ஒரு ஆப்பு ரெடிபண்ணுறேன்”, எதையோ மிகவும் ஆர்வமாக தேடிக் கொண்டிருந்தாள்.

“அதெல்லாம் வேண்டாம்ப்பா, பாவம்....., சரி எந்த புக்கை அவ்வளவு ஆர்வமா தேடுற?”, அர்ச்சனாவின் ஆர்வமான தேடலை உணர்ந்து கேட்டாள்.

“இல்ல ஏதாவது புக் கிடைக்காதான்னுதான் தேடுறேன்”, அவள் இப்படி சொல்லவே, அது லைப்ரேரி என்பதையும் மறந்து சத்தமாக சிரித்துவிட்டாள் பெமி.

ஆனால் அர்ச்சனாவோ இன்னும் மும்முரமாக, விட்டால் அந்த காபோடுக்குள்ளேயே சென்றுவிடுபவள்போல் தேடிக் கொண்டிருந்தாள். பெமியின் சிரிப்பு அவளிடம் சுத்தமாக இல்லை. வைஷாலிக்கு அர்ச்சனாதான் ஏதோ வேலை செய்திருக்கிறாள் என்பது புரிந்தது.

‘இவ திருந்தவே மாட்டா’, அவள் நினைக்க, “நல்லா வாங்க போகுது அர்ச்சனா”, ஜூடித் கடுப்பானாள்.

“பெமி இங்கே வா.....”, அதிகாரமாக ஒலித்தது சிஸ்டர் குரல். அர்ச்சனா நீயும்தான்.

“ஏய் எதுக்குடி இந்த முத்தம்மா இப்போ நம்மளை கூப்பிடுது. ஏண்டி நான் என்ன அவ்வளவு பெரிய ஜோக்கா சொன்னேன். இப்படி சிரிச்ச...., மவளே அதுகிட்டே ஏதாவது வாயை தொற....., உன்னை வெளியே போய் வச்சுக்கறேன்”, உதடுகூட அசையாமல், இருந்த பத்தடி தூரத்தை பத்து நிமிடமாக கடந்தாள்.

எவ்வளவு மெதுவாக நடந்தாலும் அவர் அருகில் சென்றே விட்டனர். “பெமி அங்கே என்ன சிரிப்பு.....”, முகத்தில் அப்படி ஒரு கடுமை.

‘நான்தான் ஜோக் சொன்னேன்’, அர்ச்சனா.

“இல்.....ல..... சும்மா.....”, தடுமாறினாள் அவள்.

“அர்ச்சனா, நீதானே கிட்ட இருந்த, அவ எதுக்கு சிரிச்சா சொல்லு. இப்போ சொல்லலை ரெண்டுபேரையும் வெளியே அனுப்பிடுவேன்”, குரலே செய்வேன் என்று மிரட்டியது.

“எனக்கு எதுவும் தெரியாது....., நான் நினைக்கிறேன்....., அவ பழைய ஜோக் ஏதாவது நினைச்சு இருக்கலாம்னு. அப்படித்தானே பெமி.....?”, முகத்தை அப்பாவியாக வைத்துக் கொண்டு அர்ச்சனா கேட்க, அவளது கேள்வியிலேயே பெமியின் தலை ஆம் என்று ஆடியது.

“புக்கை தேட சொன்னால் சிரிப்பென்ன வேண்டி கிடக்கு. பாத்து நடந்துக்க, சரி நீ என்ன புக்கை தேடுன? ரொம்ப நேரமா தேடிட்டு இருந்த?”, அர்ச்சனாவிடம் கேட்டார்.

‘சிக்குனியா.....’, என்ற பார்வை பெமி பார்க்க, “இனோவேசன் புக் சிஸ்டர், ஆனால் அது அங்கே இல்லை. நான் இந்தபக்கம் போய் பாக்குறனே”, அப்பாவித்தனத்தை விடாமல், அந்த இடத்திலிருந்து நழுவ பார்த்தாள்.

“சரி போ....., பெமி நீ இரு.....”, அர்ச்சனாவை அனுப்பிவிட்டு, பெமியை அழைத்துக்கொண்டு வெளியேறினார் சிஸ்டர்.

அர்ச்சனா வைஷாலியின் அருகில் சென்றாள். “என்ன பொண்டாட்டி சிஸ்டர் பாசமா அவளை கூட்டி போகுது? இன்னைக்கு அவ காதை பஞ்சராக்காமல் விடாது போல, சரி அது அவளோட கஷ்டம், வா நாம புக் தேடலாம்.....”, அவள் கையை பிடித்து இழுத்துக்கொண்டு வேறு ராக் பக்கம் சென்றாள்.

“நீ சொன்னாலும் சொல்லலை என்றாலும், அவளை பாசத்துலதான் அவங்க கூட்டி போறாங்க”, வைஷு சொன்னாள்.

“என்னடி சொல்லுற.....?”, குழப்பமாக கேட்டாள்.

“ஆமா அவளோட சொந்த சித்திதான் இந்த சிஸ்டர்”, ஒரு நிமிடம் புருவத்தை சுளித்த அச்சு வேறு யோசிக்கவில்லை.

“ஓ....ஓ..... கதை அப்படி போகுதா.....?”, அவள் தேடும் வேலையை தொடர்ந்தாள்.

“என்ன அர்ச்சனா, அவங்களைப் பத்தி ஏதாவது அவகிட்டே சொன்னியா?”, வைஷு ஆத்திரமாக கேட்டாள்.

“நீ என்ன நினைக்கிற.....?”, இரு புருவத்தையும் உயர்த்தி அச்சு குறும்பாக கேட்க,

“அடிப்பாவி அப்போ ஏதாவது சொன்னியா? என்னடி சொல்லி தொலைச்ச?”, அவளை விடாமல் கிளறினாள் வைஷு.

“அட, பெருசா எதுவும் சொல்லலை, முசுடு முத்தம்மா, இஞ்சி தின்ன குரங்கு, வள்ளல் , கழுகு கண்ணு.....”.

“போதுண்டி, எனக்கு பீதியாவுது. அவ எல்லாத்தையும் போட்டு கொடுத்தால் என்ன செய்வ?”, கவலையாக கேட்டாள்.

“ரொம்ப சிம்பிள், என் நட்பில் ஒன்று குறையும், ஆனால் எனக்கு நம்பிக்கை இருக்கு, அவ எதையும் சொல்ல மாட்டா. இதில் என்ன அழகுன்னா.....?, நான் இவ்வளவு சொல்லியும் அவ எதிர்த்து எதுவுமே சொல்லலை, அப்படின்னா அவளும் மனசுக்குள்ளே அப்படி நினைக்கிறான்னு அர்த்தம் தானே.

அவ சந்தோசம்தான் பட்டிருப்பா, என்னால் முடியவில்லை, இவளாவது சொல்லுறாளேன்னு. சரி விடு, அவ கஷ்டம் அவளுக்கு”, சுலபமாக சொல்லிவிட்டு ஒரு புக்கை எடுத்துக்கொண்டு சென்று அமர்ந்து கொண்டாள்.

ஆனால் வெளியே பெமி அர்ச்சனாவின் நம்பிக்கையை பொய்யாக்கிக் கொண்டு இருந்தாள். சிஸ்டர் கொஞ்சம் பாசமாக கேட்கவே, அதைவிட, விவரமாக கேட்கவே அனைத்தையும் உளறிவிட்டாள்.

பெமியின் மனதில் கொஞ்சம் நஞ்சையும் விதைத்தார் அந்த சித்தி சிஸ்டர். “அவளை பார்த்தாயா, உங்களோடே இருந்துகொண்டு, அனைவரிடமும் நல்லபெயர் வாங்குகிறாள். ஆனால் நீங்கள் அனைவரும், கெட்டபெயர் வாங்குகிறீர்கள். இப்பொழுது கூட, அவள் கமெண்ட் செய்துவிட்டு பேசாமல் இருந்தாள். நீதான் என்னிடம் திட்டு வாங்கினாய். அதைவிட அவ இனோவேஷன் புக் தேடிட்டு இருந்தாள். நீ என்ன செஞ்சுட்டு இருந்த.....

இனிமேலாவது புரிந்து நடந்துகொள், நட்பு வேறு, படிப்பு வேறு என்று. இனிமேல் உன்னை அவளோடு பார்த்தேன்....., போ முதல்ல போய் படிக்கும் வேலையை பாரு”, தன் வீட்டுப்பெண் சிறந்து விளங்கவேண்டும் என்ற ஆர்வத்தில் அவர் செய்தது, அவள் மனதில் நஞ்சாகி போனது.

ஏற்கனவே பெமி கொஞ்சம் பொறாமை குணம் உடையவள். அது கொஞ்சம் அர்ச்சனாவின்மேல் கனன்று கொண்டிருக்க, அந்த சிஸ்டர் விசிறி விடவே அது பற்றிக் கொண்டது.

அர்ச்சனா உண்மையாகவே அங்கே இனோவேஷன் புக்கை தேடவில்லை. அவள் விளையாடிக்கொண்டு தான் இருந்தாள் என்பது வைஷாலிக்கு தெரிந்த அளவு, பெமிக்கு தெரியவில்லை. அர்ச்சனாவை முழுதாக புரிந்து கொண்டது, வைஷாலி மட்டுமே.

அர்ச்சனாவிடம் திரும்பி வந்த பெமியின் முகம் சரியாகவே இல்லை. “ஹேய் டார்லின் என்ன சித்தி ரொம்ப திட்டிட்டாங்களா? விடு விடு....., இதெல்லாம் நமக்கு என்ன புதுசா”, அவளை தோளோடு அணைத்து கன்னத்தில் முத்தமிட்டாள்.

“ம்...ச்....., விடு அர்ச்சனா. இனிமேல் இப்படி செய்யாதே, எனக்கு பிடிக்கலை”, முகத்தில் அடித்தற்போல் பேசினாள்.

“இவ்வளவுநாள் பிடிச்சுது. இப்போ மட்டும் என்ன.....? ஏன்.....?”, வைஷாலியின் கைகளை அழுத்தி அவளை அடக்கினாள் அர்ச்சனா.

“அட உம்மா பிடிக்கலன்னா வேற ஏதாவது தாறேன். ஹம்..... இப்போ எல்லாம் எல்லாத்திலும் புதுமை தேவையா இருக்கு”, சாதாரணமாக சொன்னாள்.

வைஷாலி முறைத்துக்கொண்டே அங்கிருந்து செல்ல, பெமியும் எதுவும் சொல்லாமல் அங்கிருந்து நகர்ந்தாள். ‘பெமி மாறிட்டா’, கலங்கும் மனதை உடனே சரிசெய்துகொண்டு அங்கிருந்து நகர்ந்தாள்.

நேரம் ஒன்றை நெருங்கவே, “வைஷு நாம ஹால் போகலாமா?”, அவள் கேட்டு முடிக்கவே, எதுவும் சொல்லாமல் அவள் கைகளை பிடித்துக்கொண்டு நடந்தாள்.

வைஷாலிக்கு தெரியும், அர்ச்சனா வெளியே பெமியின் செயலை சாதாரணமாக எடுத்துக்கொண்டாலும் உள்ளுக்குள் வருந்துவாள் என்று. பேச்சில் கொடுக்கமுடியாத ஆறுதலை, தன் கை அழுத்தத்தில் தெரிவித்தாள்.

“வைஷு....., நான் முதல்லையே சொன்னேன். அவ போனால் எனக்கு நட்பில் ஒன்று குறையும் என்று. இப்போவும் நான் அதே நிலையில்தான் இருக்கேன். நீ எதுக்கு இவ்வளவு பீல் பண்ணுற”, தன் கவலையை மறைத்து அவளிடம் கேள்வி கேட்டாள்.

“உன் நட்பு குறைந்ததில் நீ வருத்தப்பட மாட்டன்னு எனக்கு தெரியும்....., உன் நம்பிக்கை.....”, வைஷுவால் மேலே கேட்க முடியவில்லை.

“பொண்டாட்டி....., என் நம்பிக்கையை தப்பான இடத்தில் வைத்தது என்னோட தப்பு. அதுக்கான தண்டனைதான் இது. சரி ஓவர் சென்டிமென்ட் என் உடம்புக்கு ஆகாது. சோ நாம வேற பேசலாம்”, கொஞ்சம் இளகிய அவள் குரலில், முடிக்கும் பொழுது பழைய துள்ளல் மீண்டிருந்தது.

அடுத்த அரைமணி நேரமும் அர்ச்சனாவும், வைஷாலியும் ஹாலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். நேரம் ஒன்றை நெருங்கவும் அனைவரும் சாப்பிட சென்றார்கள். சாப்பாட்டு அறையில் லஷ்மியிடம் வம்பளந்துகொண்டே சாப்பிட்டாள் அர்ச்சனா.

பெமி, ஜூடி இருவருக்கும் லஷ்மியிடம் பேசுவது பிடிக்காது. வைஷாலியோ லஷ்மியிடம் பேசாவிட்டாலும், சிநேகமாக சிரிப்பாள். லஷ்மியும் அவளிடம் ஓரிரு வார்த்தைகள் பேசுவாள்.

“அக்கா உங்க ப்ரண்ட்ஸ்க்கு நீங்க என்னோட பேசுறது பிடிக்கவே இல்லைபோல.....”, முதலில் கவலையாக கேட்டாள்.

“லஷ்மி....., உனக்கு நான் முக்கியம்னா என்கிட்டே பேசு, இல்ல அவங்களோட பாராமுகம் தான் முக்கியம்னு நினைத்தால் பேசாதே”, முடித்துவிட்டாள்.

“இல்லக்கா....., உங்களுக்குதானே கஷ்டம்.....”, தயங்கி தயங்கி கேட்டாள்.

“லஷ்மி....., எனக்கு கஷ்டமானதை நான் எப்பவுமே செய்ய மாட்டேன். நான் உன்னோட அக்கா, நீ என்னோட தங்கச்சி. இது எப்பவுமே மாறாது. அதனால் நீ உன் அக்காவை மட்டும் கவனி, உன் அக்கா வேற எல்லாத்தையும் கவனிக்கிறேன் சரியா”, இவள் பேச்சில் அவள் முகமே பிரகாசமாகிவிடும்.

“அர்ச்சனா உன்னால மட்டும்தான் இப்படிஎல்லாம் முடியும்.....”, வைஷாலி சொல்ல,

“எப்படி, உன்னை அடிக்கடி பேச வைப்பத்தைத்தானே சொல்லுற நீ.....?”, அவள் சொல்ல வருவது புரிந்தாலும் பேச்சை மாற்றி விடுவாள். அர்ச்சனா சொல்லவும், வைஷு அவளை விரட்டி விரட்டி அடிப்பாள்.

மதியம் அனைவரையும் அலுமினி ஹாலில் அமர வைத்தார்கள். ஹவுஸ் பிரிக்கப் பட்டது. ஜூடித் முதலிலேயே அர்ச்சனாவின் ஹௌசில் இருக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டாள். பெமி ஹவுஸ் பிரிக்கும் பொழுது வேறு ஹவுசில் சென்றுவிட்டாள்.

வைஷாலியும் வேறு ஹவுஸ். இப்பொழுது ஸ்டெல்லா சொன்னார். தங்களுக்கு பிடித்த ஹவுசில் செல்லவேண்டுமென்றால், சென்று கொள்ளலாம் என்று. சாப்பாடு அறையில் பேசும்பொழுது, பெமி, ஜூடி, வைஷு, அனைவருமே நீல வர்ணம் தங்களுக்கு வேண்டும் என்று சொல்லி இருந்தார்கள்.

எனவே ஸ்டெல்லாவிடம் தனக்கு நீல வர்ணம்தான் வேண்டுமென்று அர்ச்சனா முதலிலேயே கேட்டுவிட்டாள்.

அவரும் அவளை ஒரு பார்வை பார்த்தாரே தவிர வேறு எதுவும் சொல்லவில்லை.

வைஷு, பெமி, ஜூடி யாருமே அர்ச்சனாவிடம் வர விரும்பவில்லை. ஜூடித்தோ, இவங்க கீழே நான் இருக்க வேண்டுமா என்ற நினைப்பிலும், பெமியோ, அவ இல்லாமல் நம்மால் செய்ய முடியாதா? என்ற எண்ணத்திலும், வைஷுவோ, எப்படி செல்லவென்ற தயக்கத்திலும் பேசாமல் இருந்தார்கள்.

ஸ்டெல்லா ஹவுஸ் நிறங்களை அறிவித்தார். சக்தி – ரெட் ஹவுஸ், ரூபி – எல்லோ ஹவுஸ், வீணா – கிரீன் ஹவுஸ், அர்ச்சனா – ப்ளூ ஹவுஸ். இப்பொழுதாவது அவர்கள் வருவார்கள் என்று எதிர் பார்க்க, அவர்கள் வரவில்லை.

“ஹவுஸ் லீடர்ஸ் அவங்க அவங்க டீம் மெம்பெர்ஸ் பெயரை எழுதி வச்சுக்கோங்க. இன்னைக்கு கிளாஸ் இத்தோட முடியுது”, அறிவித்துவிட்டு சென்றுவிட்டார்.

அர்ச்சனா ஒரு நிமிடம் யோசித்தாள், பின்னர் வேகமாக மற்ற மூவரையும் அழைத்தாள். “ஹேய் எல்லோருக்கும் ப்ளூ தானே பிடிச்சுருக்குன்னு சொன்னீங்க. என் ஹவுசுக்கு வாறீங்களா?”, எதிர்பார்ப்பும், ஆர்வமும் அவள் குரலில் போட்டி போட்டது.

“அர்ச்சனா, எனக்கு உங்களோட இருப்பதில் இஷ்டம் இல்லை”, சொல்லிவிட்டு சென்றுவிட்டாள் ஜூடி.

“டார்லின் நீ.....?”, “அதென்ன அர்ச்சனா, எப்பவும் நாங்க உன் பின்னாடியே இருக்கணும்னு நினைக்கிறது? நாங்களும் கொஞ்சம் தனித்துவமாக செயல்படுகிறோமே. உனக்கு ஏன் இந்த பொறாமை? இந்த ஹவுஸ் லீடர்ஸ் பேரை நீதானே சொன்னாய், உன்னோட நாங்க இருக்குறது உன் கண்ணுக்கு தெரியவே இல்லையா?

உனக்கு ஏன் இந்த ஓரவஞ்சனை. எப்பவும் நாங்க உன் பின்னாடியே அலையணும் அதுதானே உன் எண்ணம்.

நாங்க தலைவி ஆவதில் உனக்கு விருப்பம் இல்லை. அதைவிட எங்கே எங்களுக்கும் பெயர் கிடைத்துவிடுமோ என்று உனக்கு எரிச்சல் அப்படித்தானே.

வேண்டாம்....., எனக்கும் உன் பின்னாடி வருவதில் இஷ்டம் இல்லை", பெமி ஜூடியின் ஹவுசில் சென்று சேர்ந்து கொண்டாள்.

அர்ச்சனாவின் இதயம் ரத்தம் வடித்தது. பெமி சொல்லி சென்ற வார்த்தைகளின் கனம் தாங்காமல் உறைந்தாள் அவள். காத்திருக்கும் கடமை நினைவுக்குவர, திரும்பி நடந்தாள்.

"அர்ச்சனா....., என்கிட்டே கேட்காமலே போறியே", வைஷுவின் குரல் முதுகின் பின்னால் கேட்டது.

"உடனே இன்னொரு ஏமாற்றத்தை தாங்க முடியுமான்னு தெரியலை. நான் போயிட்டு ஒரு ஐந்து நிமிஷம் கழிச்சு வாறேன்", தொண்டை கசந்து வழிய, வைஷுவின் முகத்தையும் பார்க்க முடியாமல் சென்றாள்.

பகுதி - 17

என்ன நேர்ந்தாலும் நான் தனியாக இல்லை

என்னுடன் என் தோழிகள் கூட்டம்

துன்பத்தில் கூட இன்பம் காணுகிறேன்

தோழிகளின் மத்தியில்.....

நட்பில் கூட இவ்வளவு வலியை உணர முடியுமா? தாய், தந்தை, உடன்பிறந்தவன் இவர்களது பாராமுகமும், பாசமின்மையும் ஏற்படுத்திய வலியைவிட, ஆயிரம் மடங்கு அதிகமாக, ஒரு நட்பின் புறக்கணிப்பு அளிக்க முடியும் என்பதை அனுபவப்பூர்வமாக உணர்ந்தாள் அர்ச்சனா.

“உயிர் பிரியும் நேரத்தைவிட, உறவு பிரியும் நேரம் கொடுமையானது”, எங்கேயோ படித்த வாசகம் சரியாக, தவறான நேரத்தில் ஞாபகம் வந்து அவளை தத்தளிக்க வைத்தது.

அவள் கண்ணீரே சிந்தி அறியாதவள் என்பதால், நட்பு ஏற்படுத்திய காயத்தை, கசப்பு மருந்தை விழுங்குவதுபோல், கண்ணை மூடி ஜீரணிக்க முயன்றாள். கொஞ்சம் கடினமாகவே இருந்தது. பெமியின் மேடை பயத்தையும், ஹோம் சிக்கையும் சரியாக கணித்து வைத்திருந்தாள் அர்ச்சனா.

வைஷுவின் பேரமைதி அவள் அறியாததா, ஜூடித்தின் அலட்சியம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரியும் அவளுக்கு. ஆனால் இங்கேயோ தலைவியாக, தைரியமாக திடமாக, அனைவரையும் ஒருங்கிணைக்கும் திறமையுடன், வேலை வாங்கும் கண்டிப்புடன் கூடிய ஆளுமை தன்மை உடைய ஆள் வேண்டும்.

அப்படி இருக்கையில் இவர்களை தான் சொல்லவில்லை என்று, பெமி சொன்னதில் எள்ளளவேனும் நியாயம் உண்டா.....? இல்லை என்ற பதிலே எப்படி யோசித்தும் கிடைத்தது.

“அர்ச்சனா....., என் பெயரையும் உன் லிஸ்டில் எழுதிக்கோ சரியா!”, வைஷாலி அவள் அருகில் அமர்ந்தாள்.

“இல்ல வைஷு அது சரிவராது, நீ வேற ஹவுசிலேயே இரு. அப்போதான் உன் திறமையை நீ வெளிக்கொண்டுவர முடியும்”, விருப்பமின்றியேதான் அந்த பதிலை சொன்னாள்.

“அப்படி எனக்கு என்ன திறமை இருக்கு அர்ச்சனா? இந்த காலேஜிலேயே வாய் திறந்து, நான் பேசும் ஒரே ஆள் நீதான். இதில் அப்படி எந்த திறமையை நான் ஒளிச்சு வச்சுருக்க போறேன், அதை வெளியே கொண்டு வர”, கேலி பேசினாள்.

“என்ன வைஷு இப்படி சொல்லுற, மெஹந்தி எவ்வளவு வேகமா போடுவ, அதுவும் பத்தே நிமிடத்தில் கையில் போட்டு முடிச்சுடுவியே. அதே மாதிரி தலை அலங்காரம் எவ்வளவு அழகா செய்வ, கிரீட்டிங் கார்டு அற்புதமா செய்வியே. இதெல்லாம் உன்னோட திறமைதான்”, வேகமாக சொன்னாள்.

“அர்ச்சனா, இந்த விஷயம் எல்லாம் நானா உன்னிடம் சொன்னேன்.....?”, கேட்டாள்.

“இல்ல.....”, இழுத்தாள் அர்ச்சனா.

“என் திறமையை வெளிக்கொண்டுவரணும்னா, எனக்கு ஒரு நல்ல தலைவி வேணும் அர்ச்சனா. என்னைப்பத்தி இவ்வளவு தெரிந்த உன்னை விட்டுட்டு, வேற யார்கிட்டே நான் போக முடியும் சொல்லு”, கேள்வியாக கேட்டாள்.

“நான் உனக்கு, வீணாட்ட சொல்லி, கவனிக்க சொல்லுறேன் வைஷு”, உறுதி கூறினாள்.

“அப்போ நீ ரெண்டு டீமையும் கவனிக்க போறியா? இப்போ என்னை உன் டீமில் சேத்துக்கறியா இல்லையா?”, அவள் இயல்பை மீறி குரல் உயர்த்தி கேட்டாள்.

“அட, பொண்டாட்டிக்கு கோபத்தை பாரேன். நீ என் டீமில் இல்லை. நான்தான் உன் டீமில் இருக்குறேன் சரியா பொண்டாட்டி. இவ்வளவு கோபம் உனக்கு ஆகாது, அண்ணா பாவமில்ல....., என்ன கோபம் வருது உனக்கு”, அவள் கன்னத்தை பிடித்து ஆட்டினாள்.

“சரி எல்லோரும் ரெண்டரைக்கே ஹாஸ்டல் போய்ட்டாங்க. இப்போ மணி நாலு. நீ இன்னும் இங்கே என்ன பண்ணுற, வா போகலாம்”, அவளை இழுத்தாள்.

“இல்ல நீ போ....., நான் இன்னும் பத்து நிமிஷத்தில் வாறேன்”, வைஷாலிக்கு கட்டாயப்படுத்தி பழக்கம் இல்லை என்பதால், அவளை, ஒரு பார்வை பார்த்துவிட்டு, அந்த ஹாலில் இருந்து வெளியேறினாள்.

கொஞ்ச நேரம் எதையுமே யோசிக்காமல் அப்படியே அமர்ந்திருந்தாள். பின்னர் ஒரு முடிவுடன் ஸ்டெல்லாவை சந்திக்க சென்றாள். அவர் ஆபீஸ் ரூமில் அமர்ந்திருந்தார். “மேம் உங்களோட கொஞ்சம் பேசணும்”, அவள் சொல்லவே, அங்கு அமர்ந்திருந்த ரோசி வேகமாக வெளியே சென்று வானத்தை அண்ணாந்து பார்த்தார்.

“ரோசி மழை எல்லாம் வராது. ஏன் இப்படி பாத்து என் மானத்தை வாங்குறீங்க”, சிரிப்பாக கேட்டாள்.

“இன்னைக்கு மழை வந்தே தீரும். முதலாவது நீ அடக்க ஒடுக்கமா வந்தது, ரெண்டாவது என்கிட்டே வம்பு பண்ணாதது, மூணாவது இம்புட்டு பவ்யமா ஸ்டெல்லா மேம்மை கூப்பிட்டது. நாலாவது.....”,

“போதும்....., ஒரு புள்ளை கொஞ்சம் திருந்திட கூடாதே. விடமாட்டீங்க ம்ம்ம்ம்ம்ம்.....”, இடுப்பில் கையை வைத்து கேட்டாள்.

“ம்ம்ம்...., இப்போதான் நீ அர்ச்சனா, இவ்வளவு நேரம் நான் வேற யாரோன்னு நினைச்சு ஷாக் ஆகிட்டேன்”.

“என்னை பார்த்து ஷாக் ஆகுறது இருக்கட்டும், உங்க வுட்பி ரொம்ப நேரமா வெளியே வெயிட் பண்ணுறாரே நீங்க பாக்கலையா?”, அவள் சொல்லவே வேகமாக வெளியே வந்து பார்த்தார்.

அங்கே கிரௌண்ட் வெறுமையாக இருக்கவே, திரும்பி பார்த்து அவளை முறைத்தார். அவளோ உதட்டை குவித்து, நாக்கை வெளியே ஆட்டி, கேலி செய்துவிட்டு, ஸ்டெல்லாவின் பின்னல் ஓடி சென்று ஒளிந்து கொண்டாள்.

ரோசி அவளை அடிக்க துரத்தினார். ரோசியும், அர்ச்சனாவும் ஒத்த வயது உடையவர்கள். வந்த முதல்நாளே ரோசியிடம், அவர் பெயரை சொல்லி பேசியதால், அவளுக்கும் அர்ச்சனாவை ரொம்ப பிடிக்கும். இருவருக்கும் நடுவில் கண்ணுக்கு தெரியாத மெல்லிய நட்பு உருவாகி இருந்தது.

“ரோசி என்ன விளையாட்டு இது, சின்ன பிள்ளைங்க மாதிரி. யாராவது பார்த்தால் என்ன நினைப்பாங்க?”, ஸ்டெல்லா கடிந்தார்.

“உங்க மருமக, என்கிட்டே வம்பு பண்ணுறான்னு நினைப்பாங்க”, சொல்லிவிட்டு சட்டென நாக்கை கடித்துக் கொண்டாள்.

ஸ்டெல்லா அவளை விட்டுவிட்டு, அர்ச்சனாவை திரும்பி பார்க்க, அர்ச்சனா அதிர்ச்சியாக பார்த்துக் கொண்டிருந்தாள்.

“ரோசி....., இது அநியாயம், உன் வுட்பீ வராமல் ஏமாத்தியதுக்கு, எனக்கு ஆள் செட்பண்ணி விடுறியா? உன்னை நான் கவனிக்கமாட்டேன், ஸ்டெல்லா மேம் கவனிப்பாங்க”, கூலாக சொன்னாள்.

‘அடப்பாவி பேட்ரிக், காலையில் கல்யாணம் ஆனதை அதுக்குள்ள எல்லோருக்கும் சொல்லிட்டியா?’, மனதுக்குள் எண்ணி சிரித்துக் கொண்டாள்.

“ரோசி நீ போ.....”, விட்டால் போதுமென்று ஓடினாள் ரோசி.

“நீ சொல்லு என்ன விஷயமா வந்து இருக்க? இன்னும் நீ டிரஸ் கூட மாத்தலை, அப்படின்னா இன்னுமா நீ ஹாஸ்டல் போகலை?”, கேள்விகளை அடுக்கினார்.

“மேம் ஒவ்வொரு கேள்வியா கேளுங்க இப்படி கேட்டால்.....?”.

“விளையாடாமல் என்ன பிரச்சனைன்னு சொல்லு அர்ச்சனா?”, அவர் கேட்டுக் கொண்டிருக்கும்பொழுதே பேட்ரிக் அவரை அழைத்து போக வந்தான்.

அர்ச்சனா திரும்பி நின்றதால் அவன் வந்ததை அறியவில்லை.

“மேம் நான் இந்த லீடர் பொறுப்பை தொடர்ந்துதான் ஆகணுமா?”, கேள்வியாக கேட்டாள்.

நீயே மீதியையும் சொல் என்பதுபோல் நின்றுகொண்டிருந்தார் அவர். “அதாவது மேம் என் ப்ரண்ட்ஸ்க்கு....., நான் என்ன சொல்ல வாறேன்னா.....”, அவளை கையை நீட்டி தடுத்தார்.

“நீ உன்னோட ஆன்டியா நினைச்சு சொல்லு, இப்போ காலேஜ் டைம் முடிஞ்சுடுச்சு. சோ....., என்ன உன் பிரச்சனை, தெளிவா சொல்லு”.

“நேரடியாவே சொல்லுறனே, பெமிக்கு லீடராக இருக்க ஆசை. நீங்க ஏன் விருப்பம் இருப்பவர்களையே தலைவராக ஆக்கக்கூடாது. அப்படி செய்தால், அவளும் ஈடுபாட்டோடு பொறுப்பை செய்வாளே. என்னைப்போல் கடமைக்கு செய்யாமல்.....”, ஸ்டெல்லாவின் கண்களில் தெரிந்த கடுமையில் பேச்சை நிறுத்தினாள்.

“என்ன நினைத்து இப்படி பேசுற அர்ச்சனா? அப்படி அவளை இந்த பேச்சோட தலைவி ஆக்கினால்....., இந்த பேச் வொர்ஸ்ட் பேச் என்ற பெயரைத்தான் வாங்கும். உனக்கே அவளைப்பற்றி நன்றாக தெரியும்”.

“இல்ல மேம் நான் அவளுக்கு உதவி பண்ணுறேன்”, வேகமாக சொன்னாள்.

“அப்படி உதவி செய்வதாக இருந்தால், அவளை டம்மியா உக்கார வச்சுட்டு எல்லா பொறுப்பையும் நீதான் செய்யவேண்டி இருக்கும். என்ன அவளோட சித்தி அவளை தூண்டி விடுறாங்களா? இதை நான் அனுமதிக்க முடியாது.

எங்களோட பிரச்சனையில் எப்படி நான் உன்னோட திறமையையும், தலைமையும் பலிவாங்க முடியும். என்ன பிரச்சனை வந்தாலும் இனிமேல் இப்படி ஒரு அபத்தமான முடிவெடுக்க மாட்டேன் என்று எனக்கு உறுதி தா”, கையை அவள் முன்பு நீட்டினார்.

“உங்களோட பிரச்சனையில் எப்படி நான்.....? நீங்க தப்பா புரிஞ்சுட்டு இருக்கீங்க. அப்படியெல்லாம்.....”.

“அர்ச்சனா இப்போ உறுதி சொல்ல முடியுமா முடியாதா?”.

பேட்ரிக் இப்பொழுது அவள் அருகில் வந்தான். “இனிமேல் இப்படி சொல்ல மாட்டேன், நானே தலைவியா இருக்குறேன்னு சொல்லு அர்ச்சனா”, அவனும் நெருக்கினான்.

ஸ்டெல்லாவை எதிர்க்க முடிந்த அவளால், பேட்ரிக்கின் பேச்சை மறுக்க முடியவில்லை. “நான் என்னமோ சொல்ல வந்தேன்....., ஆனால் நீங்க என்னமோ சொல்லுறீங்க. சரி நானே தலைவியா இருக்குறேன் போதுமா?”.

“அது மட்டும் போதாது....., கொஞ்சம் கவனமா இரு அந்த பெமியிடம் சரியா?”, ஸ்டெல்லா அறிவுறுத்தினார்.

தேவையில்லாமல் பயப்படுகிறாரோ என்று இருந்தது அவளுக்கு. அதையே அவள் முகமும் எடுத்துக்காட்ட, “பீ கேர்புல் அர்ச்சனா”, என்று சொல்லிவிட்டு, “பேட்ரிக் நீ இரு நான் போய் என் ஹேண்ட் பாக் எடுத்துட்டு வந்துடுறேன்”, சொல்லிவிட்டு சென்றார்.

அந்த வராண்டாவில் பேட்ரிக்கும் அவளும் தனித்திருந்தார்கள். “என்ன பிரச்சனை சனா? ஏன் இவ்வளவு நான் இல்லாமல் திடீர்ன்னு இப்படி சொல்லுற?”.

“பேட்ரிக்....., நாம வேற பேசலாம்”, தன் நட்பின் விஷயம் அவனுக்கு தெரிவிக்க விரும்பவில்லை அவள்.

“வேற விஷயம் பேசணும்னா....., காலையில் நான் உன்கிட்டே ஒரு விஷயம் சொன்னேன். அதைப்பத்தி நீ என்ன நினைக்கிற?”.

“அதைப்பத்தி இப்போ என்ன? அதான் நீங்க படிப்பு முடியிற வரைக்கும் யோசிக்க வேண்டாம்னு சொல்லிட்டிங்களே. நாம வேற பேசலாம்”, அதைப்பற்றிய சிந்தையே இல்லாமல் சொன்னாள்.

“ஒரு பேச்சுக்கு சொன்னால், அதையே புடிச்சு தொங்குறா பாரேன்”, அவள் காதில் விழும்படியாகவே முணுமுணுத்தான்.

‘அப்படி வாடி மாப்பிள்ளை வழிக்கு’, மனதுக்குள் சிரித்தாள்.

“அர்ச்சனா கொஞ்சம் கூட அதைப்பத்தி யோசிக்கலையா?”, ஏக்கமாக கேட்டான்.

‘அடப்பாவி காலையில் அப்படி பேசிட்டு இப்போ வந்து இப்படி கெஞ்சுறான் பாரேன்’.

“பேட்ரிக் என்ன நீங்க? நான் வேற பேசலாம்னு சொன்னேன். நீங்க தேவையில்லாம பேசுறீங்க. சரி நான் இங்கே ரொம்ப நேரம் இருக்க முடியாது எனக்கு நிறைய வேலை இருக்கு நான் கிளம்புறேன்”, அவன் பதிலை எதிர்பார்க்காமல் நடந்தாள்.

அவளை தாண்டிவந்து அவள் முன்னால் நின்றான். அவன் நெஞ்சில் கையை வைத்து அவனை தள்ளிவிட போனாள். அவள் கையை நகர விடாமல் தன் நெஞ்சோடு வைத்து பிடித்துக்கொண்டான்.

“பேட்ரிக் என்ன விளையாட்டு இது? ஆன்டி வரப்போறாங்க.....”, வார்த்தையில் இருந்த தவிப்பு, அவள் குரலிலோ, கண்களிலோ இல்லை. அவனிடமிருந்து கைகளை விலக்கவும் இல்லை, அவள் விலகவும் இல்லை. அவன் கண்கள் அவளையே துளைத்தது.

“இப்போவே போய் கல்யாணம் பண்ணிக்கலாமா.....?”.

“டேய் உன்னை கொல்ல போறேன். மனசுல பெரிய ரோமியோன்னு நினைப்பா? காலையில காதலை சொல்லிட்டு, நான் உன் பொண்டாட்டின்ன, இப்போ வா கல்யாணம் பண்ணிக்கலாம்னு சொல்லுற, லூசா நீ”, அவனிடம் சிடு சிடுத்தாள்.

‘ஒருத்தியை எத்தனைமுறை தான் கல்யாணம் பண்ணுவடா’, மனதுக்குள் கேட்டுக் கொண்டாள்.

அவன் நெஞ்சில் அழுந்தியிருந்த கையின் வழியே உணர்ந்த அவன் இதயத்துடிப்பு அவளை இம்சை செய்தது. ஆனாலும் அவன் கையில் அடங்கியிருக்கும் கையை

உருவிக்கொள்ள மனம் வரவில்லை. அவனது அந்த நெருக்கம் பிடித்திருந்தது அவளுக்கு. ஆனால் அதை அவனிடம் வெளிப்படுத்த மனம் வரவில்லை.

அவள் இதயம் துடிக்கும் ஓசை அவளுக்கே கேட்டது. பார்வை அலைபாய துடித்தது, அவன் மூச்சுக்காற்றின் வெப்பம் முகத்தை தாக்க, உள்ளுக்குள் உருகினாள் அவள். அடி வயிற்றில் அவஸ்த்தையான உணர்வு. இன்னும் அவனிடம் எதையோ வேண்டியது மனது.

தன் இவ்வளவு உணர்வுகளையும் மறைத்து, அவன் நெருக்கத்தையும், அவன் கைகளுக்குள் சிக்கியிர்ந்த தன் கைகளில் உணர்ந்த அவனது வெப்பத்தையும், சாதாரணமாக எடுத்துக்கொள்வதாக காட்ட உள்ளுக்குள் மிகவும் திணறினாள். ஆனாலும் அவனது பார்வைக்கு தன் உணர்வுகள் தீண்டாமல், சாமர்த்தியமாக மறைத்தாள்.

அவன் பார்வை தன்னை துளைப்பதை உணர்ந்தாலும், “ம்..ச்... சொல்லிட்டே இருக்கேன். முதல்ல என் கையை விடுங்க. ஆன்டி வந்தால் என்னைபத்தி என்ன நினைப்பாங்க”, அவள் சொல்லி முடிக்கவும், ஸ்டெல்லா வரும் ஓசை கேட்கவே, அவள் கையை விடுவித்தான்.

“நாளைக்கு உன்னை கவனிச்சுக்கறேன்”, அவளுக்கு மட்டும் கேட்க சொன்னான்.

“நாளைக்கென்ன, இப்போவே கவனிங்க”, ஸ்டெல்லா கவனிக்காத நேரம் அவன் தோளை தன் தோளால் இடித்து கண்ணை சிமிட்டி சொன்னாள்.

‘கொல்றாளே....., அவளை தொட்ட நான் இவ்வளவு உருகுறேன், அவளுக்கு அந்த உணர்வே இல்லையா? என் தொடுகை அவளுக்குள் எந்த மாற்றத்தையும் விதைக்கலையா?’ அவளை தொடர துடித்த கால்களையும், கேட்க துடித்த இதழ்களையும் அடக்கினான்.

தாய் நெருங்கிவிடவே எதுவும் சொல்ல முடியாமல் அமைதியானான். அவன் அவஸ்த்தையை எண்ணி சிரித்தாள். “ஆன்டி நான் கிளம்புறேன்”, அவரிடம் சொல்லிவிட்டு, பேட்ரிக்கை ஒரு பார்வை பார்த்துவிட்டு திரும்பி நடந்தாள்.

அவள் செல்லவே, “என்ன நடக்குது பேட்ரிக் இங்கே? இந்த ஒரு வருடமும் கொஞ்சம் வெயிட் பண்ணு. அவளோட திறமை, உன்னோட காதலால் சிதற கூடாது புரியுதா? அவகிட்டே எதையும் இப்போதைக்கு சொல்லாதே”, அவள் திறமை துலங்கவேண்டுமென்று சொன்னார்.

‘அம்மாவுக்கு நாம அவகிட்டே சொன்னதெல்லாம் தெரிந்தால் என்ன ஆகும்.....?’, கொஞ்சம் பயம் பிடித்தது மனதுக்குள். ஆனாலும் அம்மாவுக்கு தெரிய வாய்ப்பில்லை என்று தன்னையே சமாதானம் செய்துகொண்டான்.

ஆனால் அவன் நிம்மதியில் இடியை இறக்கும் வேலையை செய்ய சென்றுகொண்டிருந்தாள் அர்ச்சனா. நேராக அறைக்கு சென்றவள், உடை மாற்றிவிட்டு, வைஷுவின் பிளாஸ்கில் இருந்த காப்பியை ஊற்றி குடித்தாள்.

“வைஷு, சேஞ் வச்சுருக்கியா? வீட்டுக்கு போன் செய்யணும்”, கேட்ட அவளை எட்டாவது உலக அதிசயத்தை பார்ப்பதுபோல் பார்த்தாள் வைஷாலி.

“ஏய் பொண்டாட்டி இருக்குன்னா இருக்குன்னு சொல்லு, இல்லன்னா இல்லன்னு சொல்லு, இப்படி எதையோ பார்க்குறது மாதிரி வெறிச்சு பாக்குற?”, அவள் பார்ப்பதன் அர்த்தம் புரிந்தும், அதை புரியாதவள்போல் கேட்டாள்.

எதுவும் பேசாமல் அவள் பர்சை அவளிடம் கொடுத்தாள். இரண்டு ஒருரூபாய் நாணயங்களை எடுத்துக்கொண்டு கிளம்பினாள். “ரெண்டுரூபாய் எதுக்குடி பத்தும், அப்படியே எடுத்துட்டு போ”, பின்னால் இருந்து கத்தினாள்.

“நான் வீட்டுக்குத்தான் பேச போறேன். அதுக்கு இதுவே அதிகம்”, நக்கலாக சொன்னாள்.

“இல்ல அர்ச்சனா....., நீ ஏதோ முக்கியமா பேசபோற, கண்டிப்பா தேவைப்படும் வச்சுக்கோ”, பர்சை அவள் கையில் திணித்தாள்.

“வைஷு.....”, அதிர்ச்சியாக அழைத்தாள்.

‘உன்னைபத்தி எனக்கு தெரியாதா.....?’, என்பதுபோல் பார்த்து சிரித்தாள் வைஷாலி.

“பொண்டாட்டி....., நீ இதை ரெண்டு ரூபாவா பாக்குற, நான் இதை நூற்றி இருபது செகண்ட்டா பாக்குறேன். சோ..... வேண்டாம்”, வைஷாலியின் வாடிய முகத்தை பார்த்து, அவள் பர்ஸை எடுத்துக்கொண்டு கிளம்பினாள்.

டெலிபோன் அறையில், நான்கைந்துபேர் அமர்ந்திருந்தார்கள். “ஹாய் கைஸ்....., அபத்தமா ஒரு கேள்வி கேட்கவா?”, அனைவரும் என்ன என்பதுபோல் பார்க்க, “எல்லோரும் போன் பேச வந்தீங்களா?”, கேட்டுவிட்டு அவர்களை பார்க்க, அனைவரும் சிரித்தார்கள்.

“நாங்க வந்தது இருக்கட்டும், நீ எங்கே இங்கே.....?”.

“அட....., நான் போன் பேசமாட்டேன்னு யார் சொன்னது? ஏதாவது அத்தியாவசியத்துக்கு பேசத்தான் போன். அதை விட்டு, வீட்டில் இருக்குறவங்களை போனை போட்டு, ஊழு...ஊழு...ன்னு அழறதுக்கு இல்லை”, அவள் எதார்த்தமாக சொல்ல, அங்கிருந்த பெமி வேகமாக வெளியேறினாள்.

யார்கவனித்தாலும் இல்லையென்றாலும், அர்ச்சனா கவனித்தாள். அதை அப்படியே விட்டுவிட்டாள். “அர்ச்சனா, ஒருநாளும் இல்லாமல் நீ முக்கியமான விஷயமா பேச

வந்திருக்க, நீ பேசு, நாங்க பிறகு பேசிக்கறோம்”, அனைவரும் விட்டுக் கொடுக்க முன்வந்தார்கள்.

“அதெல்லாம் எதுவும் வேண்டாம்....., நீங்க பேசுங்க நான் கடைசியா பேசிக்கறேன்”, அங்கிருந்த சோபாவில் அமர்ந்தாள்.

“அர்ச்சனா, காயின் பில் ஆக போகுது, எதுக்கும் நீ பேசிடு, நாங்க பிறகு பேசிக்கறோம்”, வற்புறுத்தவே எழுந்து சென்றாள்.

“ப்ரண்ட்ஸ், கொஞ்சம் தனியா பேசணும்.....”, அவள் இழுக்கவே, அனைவரும் எழுந்து வெளியே சென்றார்கள். தாயின் அலைபேசிக்கு அழைத்தாள். “ஹல்லோ.....”, தாயின் குரல் கேட்கவே, கொஞ்சம் நெகிழ்ந்தாள்.

சட்டென அதை மறைத்துக்கொண்டு, “அம்மா நான்தான் அர்ச்சனா, உங்ககிட்டே ஒரு விஷயம் பேசணும் அதுக்குதான் போன் செஞ்சேன். இங்கே காயின் போன், நான் நிறைய நேரம் பேச முடியாது. சோ நான் சொல்லுவதை மட்டும் கேளுங்க.

எனக்கு கல்யாணம் செஞ்சு வைக்கணும்னு நினைக்கிறிங்க இல்ல, அப்போ....., ம்ச்.., எனக்கு இங்கே கல்யாணம் ஆயிடுச்சு இன்னைக்கு காலையில்தான். அவங்க பேர் பேட்ரிக், மாமாக்கு அவங்களை தெரியும். அவங்க அம்மா பேர் ஸ்டெல்லா, என்னோட மேம். அவங்க அப்பா பிரான்சீஸ், ஏதோ ஆய்வாளரா இருக்கார் என்பது மட்டும் தெரியும்.

அவர் அண்ணாவை மாதிரியே வெட்னரி டாக்டர் தான். பிறகு சொல்லலைன்னு நீங்க சொல்ல கூடாது இல்ல, அதான் சொல்லிட்டேன். வேற எதுவும் இல்லை, வச்சுடவா?”, விஷயத்தை படபடவென சொல்லிவிட்டு, வைக்க போனாள்.

அர்ச்சனா போன் செய்ததிலேயே சந்தோசத்தில் திளைத்தவர், அவள் சொன்ன விஷயங்களை கிரஹிக்கவே மேரிக்கு சிறிது நேரமானது. அதைவிட திருமணம் முடிந்துவிட்டது என்று சொன்னது....., அவள் சொன்னதிலேயே பேட்ரிக் பெயர் மட்டும்தான் அவருக்கு ஆறுதல் அளித்தது.

தாய் ஏதாவது பேசுவார் என்று எதிர்பார்க்க, தாயின் மௌனம் அவளுக்கு எரிச்சலை கொடுத்தது. ஒரு அதிர்ச்சியோ, திட்டோ அவரிடமிருந்து எதிர்பார்க்க, இந்த அமைதி அவளுக்கு புரியவில்லை.

“என்னம்மா தொல்லை ஒழிஞ்சதுன்னு சந்தோசமா.....?, அப்போ நான் காலேஜ் முடிச்சுட்டு வீட்டுக்கு வரவா? இல்ல வேண்டாமா? சரி டைம் முடிஞ்சது நான் வைக்கிறேன்”,அவள் நினைத்த இரண்டு நிமிடங்களில் பேச்சை முடித்துவிட்டு வெளியேறினாள்.

வெளியேறியவளை விழி விரித்து பார்த்தார்கள் அனைவரும். “அர்ச்சனா அதுக்குள்ளே பேசிட்டியா.....?”, வியப்பாக கேட்டாள்.

“நான் பேசிட்டேன்....., ஆனா அந்த பக்கம் கேட்டாங்களா இல்லையான்னுதான் தெரியலை”, விழி விரித்து அவளும் பதில் சொன்னாள்.

அவள் ஏதோ நகைச்சுவை சொன்னதாக எண்ணி அனைவரும் சிரிக்க, அவளையே பார்த்துக்கொண்டு நின்றிருந்தாள் வைஷாலி. “ஹாய் பொண்டாட்டி, என்னை விட்டுட்டு உன்னால் ரெண்டு நிமிஷம் கூட இருக்க முடியலை, நீ எப்படி அண்ணாவை விட்டுட்டு ஒரு வருஷம் இருப்ப, ஐயஹோ என்ன கொடுமை இது”, அவள் எமொசனலாக சொல்ல,

“முதல்ல வாய மூடு, நான் சொன்னதை கூட கேட்காமல், அப்படி ரெண்டே நிமிஷத்தில் உன் முக்கியமான விஷயத்தை பேசிட்டியா?”, கோபமாக கேட்டாள்.

அவளை இழுத்துக்கொண்டு கிரௌண்டுக்கு சென்றாள். “பொண்டாட்டி நீ தேவையில்லாத நேரத்தில் ரொம்ம்ம்மம்ப பேசுற, தேவையான நேரத்தில் பேசமாட்டிக்க இதுதான் உன் பிரச்சனையே”, சிரிக்காமல் சொன்னாள்.

“இப்போ நான் சிரிக்கிற மூட்ல இல்லை. என்ன ப்ரோப்ளம்ன்னு சொல்லபோறியா இல்லையா?”.

“வைஷு அப்படி எந்த ப்ரோப்ளமும் இல்லை”.

“பிறகு என்ன புதுசா வீட்டுக்கெல்லாம் போன்”, அவளையே கூர்மையாக பார்த்தாள்.

“அவங்களுக்கு தெரியாமல் ஒரு முடிவு எடுத்துட்டேன். அதை அவங்களுக்கு சொல்லணும்னுதான் போன் செஞ்சேன். என்னதான் இருந்தாலும் அம்மாவாச்சே அதான்”, இலகுவாக சொன்னாள்.

“அர்ச்சனா, முதல்ல விளையாடாமல் ஒழுங்கா பதில் சொல்லு. ஏன் எப்பவும் உன் கஷ்டத்தை தனியாவே அனுபவிக்கணும்னு நினைக்கிற, என்கிட்டே சொல்லேன்”, தோழிக்கு எதுவோ துன்பம் என்பதுமட்டும் புரிந்தது வைஷாலிக்கு.

“வைஷு....., எனக்கு கல்யாணமாயிடுச்சு என்பதை சொல்லத்தான் வீட்டுக்கு போன் செஞ்சேன்”, மின்னாமல் இடியை இறக்கினாள் அர்ச்சனா.

“அர்ச்சனா.....”, அதிர்ந்து அழைத்தாள் வைஷாலி.

பகுதி - 18

சொல்லும் வார்த்தைகளின் கனம்

சொல்லி முடித்தபின் புரிந்து என்ன செய்ய

சொன்ன சொல்லை திரும்ப அள்ள

சொன்ன வார்த்தைகள் நின்றுகொண்டு

இருப்பதில்லையே.....

அர்ச்சனா சொன்ன வார்த்தைகளை நான் சரியாகத்தான் கேட்டேனா? என் காதில் எதுவும் கோளாறா? தலையை உதறிக்கொண்டாள். என்ன சொன்னா.....? 'எனக்கு கல்யாணமாயிடுச்சு என்பதை சொல்லத்தான் போன் செஞ்சேன்', என்றுதானே சொன்னாள்.

வைஷு தலையை உதறுவதைப்பார்த்து கடுப்பானாள் அர்ச்சனா. "பொண்டாட்டி நான் என் கதையை சொன்னா, உனக்கு தூக்கம் வருதா.....? இப்படி தலையை உதறிக்கிற?".

இப்பொழுது கடுப்பானாள் வைஷாலி. "ஏண்டி, என்னமோ நான் அவார்ட் வாங்கியிருக்கேன்னு சொல்லுற மாதிரி, நான் கல்யாணம் பண்ணிகிட்டேன்னு சொல்லுற, இதை உங்க அம்மாவுக்கே போன் செஞ்சு சொல்லிட்டு வாறியே, அவங்க எவ்வளவு வருத்த படுவாங்க.

அதைவிட, நீ இங்கே ஹாஸ்டல்ல இருக்கும்போது, இப்படி சொன்னால் அவங்க எப்படி தாங்குவாங்க. ஏதாவது பிரச்சனை ஆச்சுன்னா என்ன செய்வ? எல்லாத்துலையும் உனக்கு விளையாட்டுதானா? என்ன அர்ச்சனா.....?", ஆற்றாமையாக கேட்டாள்.

"நான் சொன்னதை கேட்டு குழம்பி இருப்பாங்களே தவிர, கவலையே படமாட்டாங்க", கூலாக சொன்னாள்.

“அதெப்படி கவலை படாமல் இருப்பாங்க அர்ச்சனா, நீ இருந்தாலும் உங்க அம்மா , அப்பாவை ரொம்ப மட்டம் தட்டுற, எனக்கு அது புடிக்கவே இல்லை”.

“வைஷு, என்னைக்காவது நான் என் பேரண்ட்ஸ் பத்தி ஏதாவது சொல்லி இருக்கேனா? வீட்டை பத்தி பேச்சு வந்தாலே நான் அமைதியாத்தான் இருந்து இருக்கேன். இதில் நான் அவங்களை மட்டம் தட்டுறனாம்”, வைஷுவின் குரலில் சொன்னாள்.

“நீ சொன்ன விஷயத்தோட கனம் தெரியாமல் பேசுற அர்ச்சனா. எந்த அம்மாவாவது தன் பொண்ணு கல்யாணம் செஞ்சுகிட்டேன்னு போன்ல சொல்லுவதை விரும்புவாங்களா?”, கவலையாக அவளிடம் கேட்டாள்.

“என் அம்மா விரும்புவாங்க. ஏன்னா நான் வீட்டில் செஞ்சு வச்சுருக்கும் வேலைகள் அப்படி. இப்போ நான் கல்யாணம் செஞ்சுகிட்டேன்னு சொன்னது வேற யாரையும் இல்லை, அவங்க பார்த்த மாப்பிள்ளையைத்தான்”, மணலில் விளையாடியவாறே சொன்னாள்.

“என்னடி....., இன்னைக்கு என்னை ஷாக் நியூஸ் கொடுத்தே கொல்லணும்னு நினைச்சு இருக்கியா?”.

“ஏய், என்ன விளையாடுறியா பொண்டாட்டி, நானா உன்னை இழுத்துட்டு வந்து நியூஸ் கொடுக்குறேன். நீதான் என்னை இழுத்துட்டு வந்து பிளாஷ் நியூஸ் வாங்குற”.

“அடியேய்.....”, கையை விரித்தவாறு அர்ச்சனாவின் கழுத்தை நெரிக்கவந்தாள் வைஷு.

“பொண்டாட்டி....., உனக்குள்ளே இப்படி ஒரு பூலான்தேவியா வேண்டாம் நான் பாவம். என் புருஷன் பாவம்”, பொய்யாக அலறினாள்.

“அர்ச்சனா எனக்கு இருக்குறது ஒரு குட்டி இதயம், அதை இப்படி குண்டு போட்டு தகர்க்காதே. தயவுசெய்து ஒழுங்கா

உண்மையை சொல்லுடி, நிஜம்மாவே உனக்கு கல்யாணம் ஆயிடுச்சா எப்போ?", கெஞ்சினாள்.

"இன்னைக்கு காலையில்தான் ஆச்சு.....", அசராமல் சொன்னாள்.

வைஷாலி, அர்ச்சனாவின் சுடிதார் துப்பட்டாவை இழுத்துவிட்டு, அவள் கழுத்தில் கையை வைத்து தேடினாள். "ஏய் பொண்டாட்டி என்னடி தேடுற.....?", அவள் கையை தள்ளிவிட்டு கேட்டாள்.

"ம்ம்ம்ம்....., உன் தாலியைதான்".

"அதுவா.....? அது நாங்க காந்தர்வ முறைப்படி கல்யாணம் செஞ்சுகிட்டோம்", அர்ச்சனா சொல்ல, வைஷாலியின் கை அர்ச்சனாவின் கன்னத்தில் விசையுடன் இறங்கியது.

கன்னத்தில் கையை வைத்துக்கொண்டு அதிர்ச்சியாக அவளை பார்க்க, வைஷாலி அதைவிட அதிர்ச்சியாக தன் கையை பார்த்துக் கொண்டிருந்தாள். "ஐ'ம்..... ஐ'ம் சாரி அர்ச்சனா....., நீ விளையாட்டா சொன்னாலும், நீ சொன்ன வார்த்தையோட அர்த்தம்....., ஐ'ம் சாரி டா", அர்ச்சனாவை அணைத்துக்கொண்டாள்.

"பொண்டாட்டி....., ஐ லவ் யூ டூ....., வித் யுவர் பெர்மிஷன்.....", அவளை அணைத்து அவள் கன்னத்தில் முத்தமிட்டாள்.

"ஹேய் லூசு....., உன்னை அடிச்சதுக்கா இந்த ஐ லவ் யூ – வும், இந்த முத்தமும்", கலங்கிய கண்களோடு, அவளை தானும் அணைத்துக் கொண்டாள்.

"ஹேய் பொண்டாட்டி சொல்ல போனால் அதுக்குத்தான்....., ஆனால் நீ நினைக்கும் காரணம் இல்லை, இது வேற காரணத்துக்காக சொன்னது", அவள் அணைப்பை விலக்காமல் சொன்னாள்.

“அர்ச்சனா, உன் பேச்சுக்குன்னே தனியா தமிழ்ல டிக்ஸ்னரி தயாரிக்கணுமா? சொல்லுடா, தயவு செய்து விளையாடாமல் சொல்லு”, அவளை விலக்கி அமர வைத்தாள்.

“எதை சொல்ல, உனக்கு உம்மா குடுத்ததுக்கு காரணமா, எனக்கு விவரம் தெரிஞ்சு, இவ்வளவு உரிமையா என்னிடம் நடந்துகிட்ட, ரெண்டாவது ஆள் நீ. என் அம்மா, அப்பா, அண்ணா, என் காலேஜ் ப்ரண்ட்ஸ் யாருமே என்கிட்டே ஒரு உரிமையா நடந்துகிட்டது இல்லை.

நான் அடிவாங்கியதே கிடையாது தெரியுமா? அதாவது, தேவையே இல்லாமல் வாங்கி இருக்கேன், பட் இப்படி அவசியத்துக்கு வாங்கியது இதுதான் முதல்முறை. அதான் ஒரு சந்தோசத்தில் இப்படி செஞ்சுட்டேன்”, அர்ச்சனா சொல்ல சொல்ல, வைஷு கொஞ்சம் உருகித்தான் போனாள்.

“அர்ச்சனா....., என்னை உன்னோட அக்காவா நினைச்சுக்கோ சரியா”, ஆறுதலாக சொன்னாள்.

“அதெல்லாம் முடியாது, உன்னை அண்ணியா வேண்ணா நினைச்சுக்கறேன். அண்ணா பாவமில்ல”, கண்ணடித்து கேட்க,

“உனக்கு இப்படி ஒரு ஆசைவெற இருக்கா, கொன்னுடுவேன். முதல்ல நீ விஷயத்துக்கு வா. ஏன் அம்மா வருத்தப்பட மாட்டாங்கன்னு சொன்ன?”, அவள் அதிலேயே நின்றாள்.

“என் யூகம் சரின்னா, பேட்ரிக் கண்டிப்பா என் அம்மா பார்த்த மாப்பிள்ளையாகத்தான் இருப்பான். எல்லாரும் பிளான் பண்ணித்தான் என்னை இங்கே பார்சல் பண்ணி இருக்காங்க போல. அதில் முதல் ஆதாரம், என் அப்பா என்னோடவே வந்து, அதுவும் பேட்ரிக் என்னோட தனியா பேசுறதை பாத்துட்டு கொஞ்சம் கூட கோபமே படாமல்,

அவனிடம் எல்லாம் கேட்டுக்க சொல்லிட்டு கிளம்பி போகும்போதே, எனக்கு சந்தேகம்தான். அதிலும் பேட்ரிக் பார்த்த முதல் பார்வையே, என்னை புதுசா பார்த்த மாதிரி இல்லை, என்னமோ ரொம்ப தெரிஞ்சவங்களை உரிமையா பாக்குற மாதிரி இருந்தது", இதை சொல்லும் பொழுதே கண்களில் மின்னல்.

"பிறகு அவரோட அம்மா, அப்பா எல்லோரும் சேர்ந்து வந்து என்னை பார்க்கும்போதே தெளிவாயிடுச்சு. இவங்க எல்லோரும் இவ்வளவு கஷ்டப்பட காரணம், நான் என் கல்யாண பேச்செடுத்தால் கன்னியாஸ்திரியா போய்டுவேன்னு சொன்னேன் அதனால இருக்கும்.

ஆனால் பேட்ரிக் என்கிட்டே இவ்வளவு சீக்கிரம் காதலை சொல்லுவாங்கன்னு எதிர் பார்க்கலை, அதைவிட என் கையை பிடிச்சு.....",

"ஏய் போதுண்டி.....", அலறினாள் வைஷு.

"அடச்சி....., சொல்லுறதை ஒழுங்கா கேளு, அவர் என் கையை பிடிச்சு, நம்ம சர்ச்ல கல்யாணத்தப்போ சொல்லுற, அந்த உறுதிமொழியை சொல்லி, நீதான் என் மனைவி அப்படின்னு சொன்னார். எனக்கும் அவரை பார்த்த அன்னைக்கே பிடிச்சுருந்தது, ஆனால் அதை அப்போ பெருசா எடுத்துக்கலை. ஆனா இப்போ....., அவரை தள்ளி வைக்கவும் முடியாமல், ஏத்துக்கவும் முடியாமல் அவஸ்த்தையா இருக்கு.

ஆனால் அவரை தவிர வேற யாரையும், என் கணவனா நினைக்க முடியுமான்னு தெரியலை. அதான் அம்மாவும் இப்போவே கொஞ்சம் நிம்மதியா இருக்கட்டுமேன்னு உண்மையை சொல்லிட்டேன்.

அவங்களுக்கும் என்னைப்பத்தி நல்லாவே தெரியும், அதனால் அவ்வளவு குழம்பிக்க மாட்டாங்க. அனேகமா இப்போ ஸ்டெல்லா மேம்க்கு போன் பண்ணிட்டு

இருக்கலாம்”, தன் மனதை முதல்முறையாக தோழியிடம் பகிர்ந்தாள்.

அர்ச்சனா பேச பேச அவள் முகத்தில் தெரிந்த ஆர்வத்தையும், கண்களில் தெரிந்த பரவசத்தையும் குறித்துக்கொண்டாள் வைஷாலி.

“அச்சு, அதான் அவரை பிடிச்சுருக்கு, அவரை தவிர யாரையும் கணவனா நினைக்க முடியாதுன்னு சொல்லுறியே பிறகு ஏன், என்னமோ ஏத்துக்கவும் முடியாமல், தள்ளி வைக்கவும் முடியாமல் அவஸ்த்தை, ம்...”, கேள்வியாக கேட்டாள்.

‘வைஷு, உண்மைய சொல்லுவதாக இருந்தால்....., என்னால் ஒரு நல்ல அம்மாவா, நல்ல மனைவியா இருக்க முடியுமா என்று தெரியலை, அந்த பயம்தான்’, மனதுக்குள் நினைப்பதை வெளியே சொல்ல முடியாமல் மௌனியானாள்.

அர்ச்சனா பதில் சொல்லாமல் அமைதியாகிவிடவே, வைஷு எதுவும் அவளை கேட்காமல் பேசாமல் இருந்தாள். ஆனால் தோழியின் வாழ்க்கை நன்றாக இருக்கவேண்டும் என்ற வேண்டுதல் மட்டும் உடனடியாக எழுந்தது.

அர்ச்சனா சொன்னதை போலவே, மேரி உடனடியாக ஸ்டெல்லாவிற்கு போன் செய்தார். நலம் விசாரிப்புக்களுக்கு பிறகு எப்படி கேட்கவென்று தயக்கமாக எதை எதையோ கேட்டுக் கொண்டிருந்தார் மேரி.

“மேரி நீ எதையோ கேட்கவந்து தயங்குறது தெரியுது. நான்தான் ஏற்கனவே இங்கே நடப்பதை, உனக்கு தெரிவித்துக்கொண்டுதானே இருக்கிறேன். அர்ச்சனா ரொம்பவே நல்லா இருக்கா, நீ சொன்ன மாதிரி இல்லாமல், ரொம்பவே பொறுப்பா, போல்டா இருக்கா.

அவளிடம் ஒரு பொறுப்பை கொடுத்தால், அதை எப்படியாவது செய்து முடித்துவிடவேண்டும் என்று

இல்லாமல், திறமையா, திட்டம் போட்டு, அதை முழுமையாக திருப்த்தியாக முடிக்கிறாள். இனிமேல் அவளைப்பற்றி நீ கவலையே படாதே", அவர் சொல்லுவதை கேட்கும்பொழுது, மேரியின் மனம் நிறைந்தது.

இவையெல்லாம் தன் மகள் தன்னுடன் பகிர்ந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று ஏங்கியது. இன்று போன் செய்தபொழுது கூட, அம்மா எப்படி இருக்கீங்க என்று ஒற்றை வார்த்தைகூட நலம் விசாரிக்கவில்லை.

அவ்வளவு ஏன் தன் பதிலை கூட எதிர்பார்க்கவில்லையே, நல்ல மகளாக அவளது கடமையை மட்டும் செய்துவிட்டு, எதையுமே என்னிடமிருந்து எதிர்பார்க்காமல் போய்விட்டாளே. அவள் விஷயத்தில், அவளை நன்றாக வளர்த்திருக்கிறேன் என்று என்னால் பெருமை பட்டுக்கொள்ள முடியவில்லையே, அவளாகவே வளர்த்துக் கொண்ட திறமை அது.

தன் யோசனையிலேயே இருந்ததால், ஸ்டெல்லாவின் பேச்சை கவனிக்க முடியவில்லை. "மேரி என்ன, கவனம் இங்கே இல்லையா? அப்படி என்ன யோசனை?", ஸ்டெல்லாவின் குரலில் கலைந்தார்.

"ஹாங்....., யோசனை எல்லாம் எதுவும் இல்லை, அர்ச்சனா இன்னைக்கு போன் பண்ணியிருந்தாள். அப்போ ஒரு விஷயம் சொன்னாள், அதை எப்படி கேட்கன்னு தெரியாமல்தான்.....", இழுத்தார் மேரி.

"அர்ச்சனா போன் செய்தாளா.....? இவ்வளவுநாள் போன் செய்யலன்னு கவலை பட்டுட்டு இருந்த, இப்போ போன் செஞ்சு ஒரு விஷயம் சொன்னான்னு சொல்லி கவலைப்படுற, எப்பவுமே உனக்கு கவலைப்பட ஒரு காரணம் வேணுமா?".

"இவ்வளவுநாள் எதைப்பற்றியுமே கவலைப்படாமல் இருந்துட்டேன். அதனால் எல்லாத்துக்குமே இப்போ சேர்த்து படுறேன். அதை விடு, அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை

அமைஞ்சுடுச்சுன்னா எனக்கு அதுவே சந்தோசம்தான்”, அவர் விசும்பும் சத்தம் ஸ்டெல்லாவிற்கு கேட்டது.

“மேரி அர்ச்சனா வாழ்க்கையை பத்தி இனிமேல் நீ கவலையே படாதே. அவ என்னோட மருமகள் இல்லை, மகள், இப்போ சொல்லு அவ என்ன சொன்னா?”, நம்பிக்கையளித்தார்.

“ஸ்டெல்லா....., நீங்க யாராவது அர்ச்சனாகிட்டே, கல்யாண விஷயமா, அதாவது பேட்ரிக்கும், அவளுக்கும் கல்யாணம் பண்ணபோறதா நாம பேசி வச்சு இருக்கோமே, அதைப்பத்தி பேசுனீங்களா?”.

“இல்லையே, நாங்க யாரும் அவகிட்ட பேசலை. அதைவிட அவளோட படிப்பு முடியிறவரைக்கும், கல்யாணபேச்சை எடுக்கவேண்டாம் என்று நாம சேர்ந்து முடிவு செய்ததுதானே. இப்போ என்ன இப்படி ஒரு கேள்வி”, ஸ்டெல்லா புரியாமல் கேட்டார்.

“அர்ச்சனா கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி போன் செய்து, அவளுக்கு கல்யாணம் ஆகிடுச்சு, புருஷன் பேரு பேட்ரிக், மாமா, அத்தைன்னு உங்க பேரையும் சொன்னா, அதைவிட பேட்ரிக் பத்தி தெரிஞ்சுக்கணும்னா, என் அண்ணனுக்கு போன் செஞ்சு கேளுங்கன்னு சொல்லிட்டு வச்சுட்டா.

எனக்கு என்ன சொல்லுறதுன்னு தெரியலை. அவ பேட்ரிக்கை ஏத்துகிட்டதை நினைத்து சந்தோஷப்படுறதா?, இல்லை நான் அவளுக்கு மாப்பிள்ளை பார்த்ததை கண்டு பிடித்துவிட்டாளே என்று கவலைப்படுவதா?, இல்லை அவளோட குணத்துக்கு என்னை கேலி செய்கிறாளோ என்று வருத்தப்படுவதா? எப்படி எடுத்துக்கன்னு தெரியாமல் இங்கே முழிச்சுட்டு இருக்கேன்”, மேரியின் கவலை, ஸ்டெல்லாவையும் தாக்கியது.

“மேரி அவ இந்த விஷயத்தில் கண்டிப்பா கேலி செய்யவில்லை என்பது எனக்கு தெரியும். இதை அவள் மட்டும் தனியா செய்த முடிவாக இருக்காது, எனக்கு

என்னமோ பேட்ரிக் அவகிட்டே பேசியிருப்பான்னு தோணுது. இப்போ அவன் வீட்டில் இல்லை, வந்தவுடனே கேட்டுட்டு நான் உனக்கு கூப்பிடுறேன்.

எதுவாக இருந்தாலும், அர்ச்சனாவை எப்படி சம்மதிக்க வைக்கவென்று நாம குழம்பிய தேவை இல்லாமல் போய்டுச்சே, அதை நினைத்து சந்தோசப்படு", மேரியும் கொஞ்சம் சமாதானமாகி போனை வைத்தார்.

அதற்கு மாறாக ஸ்டெல்லா கோபத்தில் கொத்தித்தார். நாம இவ்வளவு சொல்லியும் பேட்ரிக் எப்படி அர்ச்சனாவிடம் பேசலாம் என்று கோபப்பட்டார். அந்த நேரம் வந்தார் பிரான்சீஸ்.

"ஸ்டெல்லா என்ன கொஞ்சம் கோபமா இருக்குற மாதிரி இருக்கு. காலேஜ்ல ஏதாவது பிரச்சனையா? மருமக ஏதாவது வம்பு செஞ்சுட்டாளா?", கேட்டுவிட்டு சிரித்தார்.

"மருமகளா.....? நீங்க எதை சொல்லவாறீங்க?", புரியாமல் கேட்டார்.

"அதான் அன்னைக்கு பங்க்சன் நல்லபடியா முடிஞ்சுடுச்சு என்று நினைக்கும்போது, கடைசியா வந்து பாடல் பாடுவதா சொல்லி, அத்தனைபேர் முன்னாடி தேசியகீதம் பாடினான்னு சொல்லி கோபமா இருந்தியே?", அன்றைய நினைவில் மறுபடியும் சிரித்தார்.

"அவ செஞ்ச வேலைக்கு நான்தான் கோபப்பட்டேன். ப்ரின்சி கூட அதை அவளோட தைரியமாத்தான் பாத்தாங்க. இப்போ பிரச்சனையை அவ கிளப்பலை, உங்க அருமை மகன்தான் கிளப்பி இருக்கான். இந்த வீட்டில் என்னோட பேச்சுக்கு என்ன மதிப்பிருக்குன்னே எனக்கு தெரியலை", ஆத்திரமாக பேசினார்.

"இப்போ நீ இவ்வளவு கோபப்படும் அளவுக்கு அவன் என்ன செஞ்சுட்டான். அதைவிட, அப்படி உனக்கு என்ன மதிப்பு

குறைஞ்சுடுச்சு. நீயே எதையாவது கற்பனை பண்ணாதே”, மகனை குறை சொல்வது அவருக்கு பிடிக்கவில்லை.

“ஆமா நானா கற்பனை பண்ணித்தான், அர்ச்சனா அவ அம்மாவுக்கு போன் பண்ணி, எனக்கு கல்யாணமாயிடுச்சு, அவனோட பேர் பேட்ரிக், அம்மா அப்பா இவங்க, இவங்கன்னு சொன்னாளா? எவ்வளவு படிச்சு படிச்சு சொன்னேன், அவ இன்னும் சின்ன பிள்ளை, அவ படிப்பு முடியும்வரை அவளோட மனசை கலைக்க வேண்டாம்னு, எதையுமே கேட்காமல் ஏதோ குழப்பம் பண்ணி வச்சுருக்கான்”, கோபம் குறையவே இல்லை அவர் குரலில்.

“நீ என்ன சொல்லுற ஸ்டெல்லா.....? உனக்கு யார் சொன்னா.....?”, அவருக்கும் அதிர்ச்சியே.

“சொல்லுறாங்க சுரைக்காய்க்கு உப்பில்லைன்னு, யார் சொல்லுவா, மேரிதான் போன் செஞ்சு என்கிட்டே ஒரே புலம்பல். அவ கல்யாணமே ஆயிடுச்சுன்னு சொல்லுறா, உங்களுக்கு ஏதாவது தெரியுமான்னு? நம்ம பொறுப்பில், நம்மை நம்பி அவளை ஒப்படைச்சுருக்கா, அதுக்கு நாம செய்யிற கைமாறா இது.

அவகிட்டே என்ன சொல்லி, அவளை சமாதானம் செய்ய.....? எனக்கு எதுவுமே தெரியாதுன்னு எப்படி சொல்ல.....? அப்படி சொல்லி, நீங்க அங்கே என்ன செஞ்சுட்டு இருக்கீங்க?, என் பொண்ணை கவனிச்சுக்குற லட்சணம் இதுதானான்னு கேட்டால்.....?, இந்த மூஞ்சியை நான் எங்கே கொண்டுபோய் வச்சுப்பேன்”, அவர் குரலில், சூடு ஏறியதே தவிர இறங்கவில்லை.

“என்ன பேசுற நீ? அர்ச்சனா ஏற்கனவே விளையாட்டு பிள்ளைன்னு நீதான் சொல்லி இருக்க, இப்போ வந்து அவ வீட்டில் கல்யாணம் ஆயிடுச்சுன்னு சொல்லி இருக்கான்னு சொல்லுறியே, அதுவும் ஏன் விளையாட்டா இருக்க கூடாது”, அர்ச்சனாவை பற்றி அவருக்கு தெரிந்த வரையில் சொன்னார்.

“நீங்க புரியாமல் பேசாதீங்க, அவ செய்யும் ஒவ்வொரு விஷயத்திலும் எவ்வளவு விளையாட்டா இருக்காளோ, அதே அளவு உண்மையாவும் இருக்கா. என்னோட கவலையே அதுதான். பேட்ரிக் இந்த விஷயத்தை அவளிடம் பேசாமல் அவளாக இப்படி சொல்லியிருக்க மாட்டா. அதுவும் இல்லாமல் கல்யாணம் முடிஞ்சுடுச்சுன்னு விளையாட்டா சொல்லுற அளவுக்கு அவ விளையாட்டு பிள்ளை இல்லை”, உறுதியாக சொன்னார்.

“ஸ்டெல்லா நீ கொஞ்சம் பொறுமையா விசாரி, அவனும் சின்ன பிள்ளை இல்லை, அவளும் சின்ன பிள்ளை இல்லை. அவளுக்கு அவனும், அவனுக்கு அவள்னும் நாம முடிவு செஞ்சதுதானே, பிறகு இதில் இவ்வளவு கோபப்பட என்ன இருக்கு.

அவங்களே பேசி ஒரு முடிவுக்கு வந்தால் அதை நாம ஆதரிக்கணும் இப்படி முட்டுக்கட்டை போடக்கூடாது”, அவருக்கு புரியவைக்க முயன்றார்.

“நீங்க என்ன பேசுறீங்க? அவங்களே முடிவு செய்யிறதா இருந்தால், பிறகு பெரியவங்கன்னு நாம எதுக்கு இருக்கோம், என் கவலையை நீங்க புரிஞ்சுக்காமல், உங்க பையனுக்கே சப்போட் பண்ணுறீங்களே”, ஆற்றாமையாக கேட்டார்.

“பசங்க வளந்துட்டாங்கன்னு நீதான், எதார்த்தத்தை புரிஞ்சுக்காமல் பேசுற ஸ்டெல்லா”.

“ஏங்க இப்படி.....?, அர்ச்சனா இந்த ஒரு வருஷமும் அவளோட படிப்பில்தான் கவனமா இருக்கணும்னு நான் நினைக்கிறேன். அவளுக்கு சப்போர்ட்டா வேண்ணா நாம இருக்கலாம், அதை விட்டுட்டு, அவளோட கவனம் சிதறுற மாதிரியான விஷயங்களை தவிர்க்கலாமேன்னு நான் சொன்னால்....., உங்களால எல்லாம் புரிஞ்சுக்க முடியாதுங்க ஒரு பொண்ணோட கஷ்டத்தை”, கவலையாக சொன்னார்.

சொல்லிவிட்டு அறைக்கு சென்று கதவை தாழிட்டுக் கொண்டார். ஒரு பெருமூச்சை வெளியேற்றினார் பிரான்சீஸ். மனைவியின் கவலை நியாயமானதாக இருந்தாலும், மகன் பக்கம் என்ன நடந்தது என்று கேட்காமல் ஒரு முடிவுக்கு வர தயாராக இல்லை அவர்.

ஸ்டெல்லாவின் மனநிலையோ வேறாக இருந்தது. இவ்வளவுதூரம் தான், தன் மகனிடம் சொல்லியும், அவன் தன் சுயநலத்துக்காக அர்ச்சனாவிடம் பேசியதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை அவரால். பேட்ரிக் மேல் கட்டுக்கடங்காத கோபத்தில் இருந்தார் அவர்.

சிறிது நேரத்தில் பேட்ரிக் வரும் ஓசை கேட்டது. பிரான்சீஸ் மகனிடம் கேட்கும் முன்பே, அறைக்குள்ளிருந்து வேகமாக வந்து அவன்முன் கோபமாக நின்றார்.

“நில்லுடா அங்கேயே, உன் மனசில் என்னதான் நினைச்சுட்டு இருக்க?”, அவர் கோபகுரலில் திகைத்து நின்று விட்டான் அவன்.

பகுதி - 19

உன் தனிமையை விரட்ட

நான் எடுக்கும் முயற்சிகள்

உன்னை எட்டாமல் செல்வது

என் தவறா.....

உனக்கு புரியவைக்க முடியாமல்

போனது என் தவறா.....

பேட்ரிக்கின் செய்கையை ஏற்றுக்கொள்ள முடியாமல் கோபத்தில் இருந்தார் ஸ்டெல்லா. பிரான்சீஸ் கொஞ்சம் பொறுமையாக இருக்க சொன்ன எந்த விஷயமும் அவர் மனநிலையை மாற்றவே இல்லை. எனவே பேட்ரிக் வீட்டுக்கு வந்த உடனேயே விசாரணையை தொடர்ந்தார்.

“ஸ்டெல்லா கொஞ்சம் பொறுமையா கேளேன். அவன் இப்போதான் வெளியே போயிட்டு வாறான். என்னமோ சின்ன பையனை விசாரிக்கிற மாதிரி வந்ததும் வராததுமா என்ன இது?”, அவரை கடிந்துகொண்டார்.

“பேட்ரிக் நீ போய் டிரஸ் சேஞ் பண்ணிட்டு வா”, அவனை அனுப்ப முயன்றார்.

தாயின் கோபத்துக்கு காரணமும் புரியாமல், தந்தையின் பேச்சுக்கு விளங்காத பார்வையுடன் நின்றுகொண்டிருந்தான்.

“என்னப்பா அம்மா ஏன் இவ்வளவு கோபமா இருக்காங்க?”, காரணம் அறிந்தே ஆகவேண்டும் அவனுக்கு.

“முதல்ல நீ போயிட்டு வா, மீதியை பிறகு பேசலாம்”, அவனை அனுப்புவதிலேயே முனைப்பாக இருந்தார்.

இப்பொழுது ஸ்டெல்லாவை பேசாவிட்டால் பிரச்சனை பெரிதாகத்தான் மாறும் என்று அவர் அறிந்திருந்தார்.

“நீங்க தள்ளுங்க நான் அவன்கிட்டே கேட்டுக்கறேன்”, கணவனை விலக்க முயன்றார்.

“நீ கொஞ்சம் பொறுமையா இரேன் ஸ்டெல்லா”, குரலை உயர்த்தினார். அவர் குரலை உயர்த்தவே கொஞ்சம் அடங்கினார் அவர்.

பேட்ரிக் அறைக்கு செல்லாமல், அங்கிருந்த ஸோபாவில் அமர்ந்து கொண்டான். “உங்களுக்கு என்மேல் என்ன கோபம் சொல்லுங்கம்மா”, தன்மையாக கேட்டான்.

அவன் பொறுமையாக கேட்கவே, தன் பொறுமையை இழுத்து பிடித்துக்கொண்டு அவன் எதிரில் அமர்ந்தார்.

“உன்கிட்டே இருந்து இப்படி ஒரு செயலை நான் எதிர்பார்க்கலை பேட்ரிக், இப்போ நான் பேசினால் பிரச்சனை பெருசாதான் ஆகும். வேண்டாம் நான் சர்ச்சுக்கு போறேன்”, சொல்லிவிட்டு செருப்பை போட்டுவிட்டு கிளம்பிவிட்டார்.

“அம்மா என்னன்னு சொல்லாமல்.....”, மேலே பேச போனவனை கையை பிடித்து தடுத்தார் பிரான்சீஸ்.

“என்னப்பா, விஷயம் என்னன்னு சொல்லாமல் ரெண்டுபேரும் இப்படி மாறி, மாறி பேசினால் நான் என்ன செய்யட்டும். அம்மாவுக்கு அப்படி என்மேல் என்னதான்ப்பா கோபம்?”, சலிப்பாக கேட்டான்.

“அதை நான் உன்னிடம் சொல்லுகிறேன்....., அதுக்கு முன்னாடி நீ சொல்லு, இன்னைக்கு அர்ச்சனாவை பார்த்து என்ன சொன்ன?”, நேரடியாக விஷயத்துக்கே வந்தார்.

கொஞ்சம் திடுக்கிட்டாலும் உடனடியாக சமாளித்துக் கொண்டான். “என்னப்பா.....? நான் ஒண்ணும்

சொல்லலையே”, குரலில் இருந்த தயக்கத்தை அவனால் மறைக்க முடியவில்லை.

“சரி உங்களுக்குள் நீங்க பேசியது எதுவும் எனக்கு தெரியவேண்டாம். ஆனால் அர்ச்சனா அவ வீட்டுக்கு போன் செய்து.....,”, ஸ்டெல்லா தன்னிடம் கூறிய விஷயத்தை அவனிடம் சொல்லி முடித்தார்.

பேட்ரிக்கால் கொஞ்ச நேரத்திற்கு எப்படி இதை எடுத்துக் கொள்ளவென்றே தெரியாமல் அமர்ந்திருந்தான். அர்ச்சனா இவ்வளவு சீக்கிரம் வீட்டில் பேசுவாள் என்பதை அவன் எதிர்பார்க்கவில்லை என்பதை, அவனது திகைத்த முகமே பிரான்சீஸ்க்கு உணர்த்தியது.

“உன்னோட அதிர்ச்சியை பார்த்தால்....., என்னமோ நடந்திருக்கு அப்படித்தானே?”.

“இல்லப்பா நான்....., உங்களுக்கு எப்படி சொல்லி புரியவைக்கன்னு தெரியலை. நான்.....”, தயங்கினான்.

“நீ இவ்வளவு தயங்குவதை பார்த்தால் பெருசா எதையாவது செஞ்சுட்டியா? அதனால்தான் அர்ச்சனா அவளோட வீட்டில் அப்படி சொன்னாளா?”, அவர் குரலில் அப்பட்டமான அதிர்ச்சி.

“ஹையோ அப்பா....., நீங்க நினைக்கிற மாதிரி எதுவும் இல்லை, இன்னைக்கு காலையில்.....”, நடந்தவற்றை அவனும் சுருக்கமாக சொன்னான்.

“இப்போ இந்த பேச்சுக்கு என்ன அவசியம் வந்துது பேட்ரிக். சும்மா இருந்த அவளை போய் பார்த்து, அவ மனசில் இப்படி சலனத்தை விதைப்பது சரியே இல்லை. இப்போ அவ மனசில் என்ன நினைச்சுட்டு இப்படியெல்லாம் செய்யிறான்னும் புரிஞ்சுக்க முடியலை. உன் அம்மா அவ்வளவு சொன்னபிறகும்.....”, அவரை பேசவிடாமல் தடுத்தான் பேட்ரிக்.

“என்னப்பா நீங்களும் அம்மா சொன்னதுதான் சரி என்பதுமாதிரி பேசுறீங்க. இந்த நாற்பத்தைந்து நாளில் அர்ச்சனாவை ஹாஸ்ட்டல்ல பார்க்க யாருமே வரலை. அவ்வளவு ஏன் செகண்ட் சாட்டர்டே அப்போ நம்ம வீட்டுக்கு அவளை கூட்டி வர முடியாதுன்னு சொல்லிட்டாங்க.

நாலாவது சனிக்கிழமையும் அதே நிலைதான். அவளை நான்போய் பார்க்கிறேன் என்று சொன்னதற்கு, அதையும் செய்ய விடாமல் தடுத்துட்டாங்க. இதுவரை அவளுக்காக யாரும் இல்லை என்பதை விதின்னு நான் ஒத்துக்கறேன்.

ஆனால் அவளுக்குன்னு இங்கே நான் ஒருத்தன் இருக்கும்பொழுது, அவ தனியா இருப்பதை என்னால் அனுமதிக்க முடியாதுப்பா. அவகிட்டே நான் சொன்னது, சொன்னதுதான். நான் அவளோட கணவன்தான். அந்த உரிமையை நான் விட்டுகொடுக்க தயாரா இல்லை”, நிதானமாக சொன்னாலும், அதில் இருந்த அழுத்தத்தில் அமைதியானார் பிரான்சீஸ்.

“பேட்ரிக், நீ செய்வது நியாயமே கிடையாது. அவள்மேல் இருந்த காதலால் எல்லாம் செய்தேன்னு சொன்னால் கூட கொஞ்சம் ஒத்துக்கலாம், இதென்ன....., அவளோட தனிமையை போக்க இப்படி ஒரு முடிவு. நீ அவளை பார்க்க போவதை உன் அம்மா தடுப்பதில் காரணம் இல்லையென்று நீ நினைக்கிறியா?

ஏற்கனவே காலேஜ்ல டீச்சர்ஸ் எல்லோருக்கும் தெரிந்தது போதும், அவகூட படிக்கும் பிள்ளைகளுக்கு தெரியவேண்டாம் என்றுதான் இப்படி செய்யிறா. அதைவிட அவளோட படிப்பு உன்னால் கெட்டு போவதை அவ விரும்பலை”.

“அப்பா, சனாமேல இருக்குற அதிகபடியான காதலால்தான், இனிமேல் அவ தனியா இல்லை, அவளுக்குன்னு நான் ஒருத்தன் இருக்கேன்னு அவளுக்கு புரியவைக்க முயற்சியின் முதல் படிதான் இது. எப்போ இருந்தாலும்

அவதான் என் மனைவி, அது இவ்வளவு சீக்கிரம் நடந்தால் என்ன?", விதண்டா வாதம் செய்தான்.

"இதெல்லாம் ஒரு பேச்சா பேட்ரிக், இனிமேலாவது நான் சொல்வதை கொஞ்சம் கவனி. நீயும் உன் காதலை சொல்லிட்ட, அவளும் உன்னை கணவன்னு சொல்லிட்டா, இப்போதைக்கு பிரச்சனையை இத்தோட முடிச்சுக்கலாம்.

கொஞ்சநாள்....., அதாவது அவளோட படிப்பு முடியும்வரை அமைதியா இரு. இதைப்பற்றி அவளிடம் மேற்கொண்டு பேசாதே", பிரச்சனையை முடிக்க வழி சொன்னார்.

"இல்லப்பா....., இனிமேல் என்னால் பொறுமையா இருக்க முடியாது. அவளே என்னை கணவனாக அவங்க வீட்டில் சொன்ன பிறகு, உடனடியாக எங்கள் திருமணம் நடந்தே ஆகணும். அவ இனிமேல் நம்ம வீட்டில் என்னோடத்தான் இருப்பா", உறுதியாக சொன்னான்.

"பேட்ரிக், உங்க அம்மா நீ ஜஸ்ட் கணவன்னு சொன்னதுக்கே வானத்துக்கும் பூமிக்கும் குதிக்கிறா. இதில் உடனே கல்யாணம்ன்னா....., நீ விளையாடுறியா? கல்யாணம் ஒண்ணும் சின்ன பிள்ளைங்க விளையாட்டு இல்லை. அதற்கென்று ஒரு வழிமுறை, நடைமுறை எல்லாம் இருக்கு. எடுத்தோம் கவுத்தோம்னு எதையும் செய்ய முடியாது", அவரும் விட்டு கொடுக்கவில்லை.

"அப்பா....., முதல்ல இந்த கல்யாணத்தை தள்ளி வைக்க காரணமா என்ன சொன்னாங்க? அர்ச்சனா ஒத்துக்க மாட்டா, அதனால கொஞ்சநாள் அவளோட பழகி, அவ மனசில் இடம் பிடித்ததும் கல்யாணம் செய்து வைப்பதாகத்தானே சொன்னாங்க.

ஆனால் இப்போ அந்த நொண்டி காரணத்துக்கே வேலை இல்லாதபோது, கல்யாணம் செய்து வைப்பதில் உங்களுக்கு என்ன பிரச்சனை".

“பேட்ரிக், இப்போ இவ்வளவு அவசரமா கல்யாணம் செய்யத்தான் என்ன அவசியம். முதல்ல அர்ச்சனாவோட படிப்பு முடியட்டும் பிறகு பாத்துக்கலாம். கொஞ்சம் உன் அம்மாவின் பேச்சையும், அர்ச்சனாவின் உணர்வையும் புரிஞ்சுக்க முயற்சி செய் பேட்ரிக்.

நீ இப்படி பேசுவது உன் அம்மாவுக்கு தெரிந்தாலே அவ என்ன சொல்லுவாளோ. நீ என்ன காரணம் சொன்னாலும் என்னால் உன் பேச்சை ஒத்துக்க முடியாது பேட்ரிக், நீ கிளம்பு”, இறுதியாக சொல்லி அவனை அனுப்பினார்.

‘பேட்ரிக் எதற்காகவும் இப்படி பிடிவாதம் பிடிப்பவன் இல்லையே. பிறகு ஏன் இப்படி செய்யிறான்?’, யோசனை அவர் மனதை குடைந்தது. இவனையும் சமாளிக்க முடியவில்லை, ஸ்டெல்லாவும் கோபமா இருக்கா, இப்போ நான் இதில் என்ன செய்ய?’, ஒரு பெருமூச்சை வெளியேற்றினார்.

வீட்டில் ஒரு குட்டி பூகம்பம் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக இருப்பதை உணர்ந்துகொண்டார். அறைக்குள் சென்ற பேட்ரிக்கின் யோசனையும் இதுதான். இன்னும் கொஞ்ச நாளில் தாயிடம் நிதானமாக பேசி முடிவெடுக்கவேண்டும் என்று தான் நினைத்திருக்க, இப்படி ஆனது அவனுக்குமே வருத்தம்தான்.

இவ்வளவு நாட்களில் அர்ச்சனாவை உன்னிப்பாக கவனித்ததில், அவள் மனதில் தனிமை உணர்வு அதிகம் இருப்பதை, அவள் கண்களில் எதிர்பார்ப்பும் ஏக்கமும் வழிவதை, அது மற்றவர் அறியாமல் மறைப்பதை, தன்னை காணும்பொழுது, அவள் கண்களில் தெறிக்கும் மின்னலை,

அலைபாயும் மனதை அனைத்தையும் உணர்ந்ததாலேதான், அவளை அருகிலே வைத்துக் கொள்ளவேண்டும் என்று தான் விரும்புவதை எப்படி அவர்களுக்கு புரிய வைக்க. அப்படியே சொன்னாலும்

அதை அம்மா ஒத்துக் கொள்வார்களா? என்ன ஆனாலும் எடுத்த முடிவில் எந்த மாற்றமும் இல்லை', என்ன வந்தாலும் பார்த்துக் கொள்ளலாம் என்ற முடிவில், முன்வைத்த காலை பின்வைப்பதில்லை என்ற உறுதியான முடிவையே எடுத்தான்.

இங்கே ஒரு புயலையே கிளப்பி விட்டுவிட்டு, அதை கிளப்பி விட்டவளோ தன் தோழிகளுடன் அரட்டையடித்துக் கொண்டிருந்தாள். "அர்ச்சனாக்கா, உங்களை வார்டன் சிஸ்டர் கூப்பிட்டு விட்டாங்க", செய்தியோடு அறைக்கு வந்தாள் லஷ்மி.

"ஹேய் லச்சு....., எப்போ இருந்து நீ ரிபோர்ட்டர் ஆன? நியூஸ் எல்லாம் கொண்டுவாற. சரி அதைவிடு, வார்டன் சிஸ்டர் ஆள் எப்படி?", அர்ச்சனா லஷ்மியிடம் கேட்க,

"அவங்க ஆள் எப்படி இருந்தால் என்ன? நீங்க அவங்களை சைட் அடிக்கவா போறீங்க. போய் என்ன சொல்லவாறாங்கன்னு கேக்குறதை விட்டுட்டு கேள்வியை பாரு.....?", ஜூடித் இடையில் புகுந்தாள்.

"என் அறிவு கொழுந்தே, நான் அவங்க சுபாவம் எப்படின்னு கேட்டேன். உன்னை மாதிரி சைட் அடிக்க இல்லை, எப்போபாரு விளங்காத மாதிரியேவா கேள்வி கேக்கணும்,கொஞ்சமாவது மூளைய வளக்க பாரேன்", அவளுக்கு பதில் கொடுத்தாள். இவர்களின் பேச்சை கேட்டு வைஷாலியும், பெமியும் சிரித்தார்கள்.

லஷ்மி சிரிக்கவா வேண்டாமா என்று பார்த்துக்கொண்டிருந்தாள். "லஷ்மி சிரிப்பு வந்தால் சிரிக்கணும், இப்படி யோசனை எல்லாம் செய்ய கூடாது", ஜூடித் லஷ்மியிடம் பாயும் முன்னர், அவளை இழுத்துக்கொண்டு வெளியேறினாள்.

"இந்த அர்ச்சனாவுக்கு அறிவே கிடையாது, இவங்ககிட்டே எல்லாம் என்ன பேச்சு வேண்டி இருக்கு", ஜூடியின் குரல் முதுகின் பின்னால் கேட்டது.

லஷ்மியின் முன்னால் எதையும் பேசவேண்டாம் என்று தன் வழியே நடந்தாள். “லச்சு, நீ சொல்லு வார்டன் சிஸ்டர் முசுடா இல்லை ஓகேயா?”.

“அவங்க ரொம்ப நல்லவங்க, கோபமே பட மாட்டாங்க. அப்படியே கோபமா இருந்தாலும் பொறுமையா சொல்லி புரியவைப்பாங்களே தவிர, திட்டவே மாட்டாங்க”, லஷ்மி பெருமையாக சொன்னாள்.

“அட சுருக்கமா பழம்னு சொல்லுறதை விட்டுட்டு, எதுக்கு இப்படி எனர்ஜியை வேஸ்ட் பண்ணுற?”, கேலி செய்தாள்.

“அக்கா இப்படியெல்லாம் சொல்லாதீங்க, தப்பு.....”.

“இதுவே தப்புன்னா.....? சரி நீ சின்ன புள்ளை உனக்கு தெரியாது. நாம அதைப்பற்றி பிறகு பேசலாம். இப்போ அவங்க ரூம் எங்கே சொல்லு”.

“போன் ரூமுக்கு பக்கத்து ரூம்தான். நீங்க போங்க, நான் கிச்சன் போறேன்”, அறையை காண்பித்துவிட்டு சென்றுவிட்டாள்.

அவரது அறைக்கு செல்ல, அது மூடி இருந்தது. ‘நம்மளை வர சொல்லிட்டு ஆள் எஸ்ஸா....., அதுக்குள்ளையா நம்மளை பத்தி தெரிஞ்சுடுச்சு. அச்சு....., உன் பெருமை ராக்கெட் வேகத்தில் பயணமாகுது போல. எதுக்கும் ரூமை தட்டி பார், உள்ளே பதுங்கி இருந்தாலும் இருக்கலாம்’, தனக்குள் ஒரு முடிவுக்கு வந்து, ஒற்றை விரலை மடக்கி, தட்டினாள்.

“எஸ் கம் இன்.....”, உள்ளே இருந்து சாந்தமான குரல் கேட்டது.

“ஹல்லோ சிஸ்டர், கூப்ட்டீங்களாம்.....”, அவரை முதன்முதலில் பார்ப்பதால் ஹல்லோ சொன்னாள். ஆனால் பொதுவாக அவரை பார்க்க வருபவர்கள் மாலை வணக்கம் சொல்லித்தான் பேச்சை துவங்குவார்கள்.

அவர் கண்களில் ஒரு வியப்பும், பாராட்டும் மின்னி மறைந்தது. ‘ஆஹா....., நம்மை வச்சு ஏதாவது ப்ளே பண்ண பாக்குறாங்களா, யோசனை பலம்மா இருக்கே’, மனதில் எண்ணிக்கொண்டு, “சிஸ்டர் என்னை வர சொன்னீங்களாம்.....”, அவர் அமைதியாக இருக்கவே, அவர் யோசனையை கலைத்தாள்.

“வாம்மா அர்ச்சனா, உக்காரு.....”.

‘உக்காருறதா....., பெருசா பிளான் பண்ணுறாங்க போல’, “ஓகே சிஸ்டர்”, சொல்லிவிட்டு சென்று அமர்ந்தாள்.

“என்னமா காலேஜ் எப்படி போகுது”, பேச்சை துவங்கினார்.

‘அது எங்கேயும் போகலையே, அக்கடான்னு ஒரே இடத்தில் நிக்குது’, “நல்லா போகுது சிஸ்டர், ஆனால் இன்னும் எதுவும் ஆரம்பமாகலை, சோ போக போக தெரியும்”, சாதாரணமாக சொன்னாள்.

அவளது தைரியமான நடத்தை, பேச்சை மனதுக்குள்ளே வியந்துகொண்டார். “நாளை முதல் ரெகுலர் கிளாஸ் இருக்கும். அப்போ தெரியும்....., வேலை இருக்கா இல்லையான்னு”, சிரிப்பாக சொன்னார்.

‘ஆஹா....., அப்போ என்னை பீதியை கிளப்பத்தான் கூப்பிட்டீங்களா. முடியுமா அது’, “அப்படியா.....? எல்லாம் பாத்துக்கலாம். அதுக்குதான் காத்துட்டு இருக்கோம்”, அசடு வழிந்தாள்.

“நான் உன்கிட்டே முக்கியமான ஒரு விஷயமா பேசத்தான் வர சொன்னேன். இன்னைக்கு ஹாஸ்ட்டல் மீட்டிங் இருக்குன்னு எல்லோருக்கும் இன்போர்ம் பண்ணிடு. எல்லோரையும் பிரேயர் ஹால்ல எழு மணிக்கு வர சொல்லு, அங்கே வந்து நான் மீதியை பேசிக்கறேன். இப்போ நீ கிளம்பு”.

‘இதை சொல்லத்தான் இவ்வளவு பில்டப்பா.....முடில’, “ஓகே சிஸ்டர்....., தேங்க் யூ”, அங்கிருந்து கிளம்பினாள்.

“அச்சு....., நிஜம்மாவே ஏதோ பெருசா வர போகுது. எதுக்கும் நீ ஜாக்ரதையா இருந்துக்கோ”, தனக்கு தானே சொல்லிக்கொண்டு, தன் டீமில் இருந்து ஐந்துபேரை அழைத்து செய்தியை அனைவருக்கும் சொல்ல சொன்னாள்.

சரியாக ஏழு மணிக்கு அனைவரும் ஹாலில் ஆஜர் ஆனார்கள். சிஸ்டரும் வந்தார். “டி பொண்டாட்டி, எனக்கு என்னமோ, அடுத்த ஆப்பு ரெடி ஆகுற மாதிரியே இருக்குடி. என்னை எப்படியாவது காப்பாத்தேன்”, ஹஸ்க்கி வாய்சில் அவளிடம் சொன்னாள்.

சிஸ்டர் இருப்பதால் பேச பயந்து, அவளை முறைத்து பார்த்தாள். “ஏண்டி பொண்டாட்டி இப்படி பாக்குற”, மறுபடியும் அவள் கேட்க,

“அர்ச்சனாக்கா உங்களை சிஸ்டர் கூப்பிடுறாங்க பாருங்க”, ஜூடித் சொன்னாள்.

“ஏய் பஞ்சுமிட்டாய், அவங்க என்ன சொன்னாங்கன்னு எனக்கும் கேட்டுச்சு. இப்போ நீ வாயை மூடிட்டு இருக்கல....., இருக்குற பஞ்சுமிட்டாய் எல்லாத்தையும் பிச்சு எறிஞ்சுடுவேன்”, சிரித்தவாறே அவளுக்கு பதில் சொன்னாள்.

ஜூடித்தோ பேசாமல் பின் வாங்கினாள். “சொல்லுங்க, இங்கே ஹாச்ட்டலுக்கு லீடர் வேணும், யாரை நீங்க சொல்லுறிங்களோ அவங்களையே வச்சுடலாம்”, சிஸ்டர் மறுபடியும் கேட்டார்.

“அச்சு, நான் வேண்ணா உன் பேரை சொல்லவா.....?”, பெமி விஷமமாக கேட்டாள்.

“அப்படி செய்யிறதுக்கு எனக்கு நீ சாப்பாட்டில் விஷம் வச்சு கொல்லலாம்”, அர்ச்சனா சொல்ல, மெல்லிய சிரிப்பலை அங்கே எழுந்தது.

“சரி நான் சொல்ல வந்த விஷயங்களை முதல்ல சொல்லுறேன். பிறகு மீதியை பார்க்கலாம்”.

“அப்போ இன்னும் அரைமணி நேரம்தான் அந்த ஜீவனுக்கு நேரமிருக்கு, சுதந்திரமா இருக்க”.

“நாளைமுதல் காலையில் ஆறு முப்பதுமணிக்கு சர்ச்சில் நடக்கும் திருப்பலிக்கு அனைவரும் கலந்து கொள்ள வேண்டும். இது ரொம்பவே முக்கியம்”.

“அப்போ காலை தூக்கத்துக்கு, தூக்கு.....”.

“ரெண்டாவது மாலை சரியா ஏழு மணிக்கு இந்த பிரேயர் ஹாலில் ஜெபமாலை சொல்லவேண்டும்”.

“அதுவுமா.....”.

“அதுவும் வாரம் ஒரு ரூம் பொறுப்பேத்துக்கணும்”.

“யாரையும் விடக்கூடாதுன்னு முடிவோட இருக்கீங்க”.

“ஹாஸ்ட்டல்ல யாரும் துணி துவைக்க கூடாது”.

“ஹாச்ட்டாலே நாறிடும் பரவால்லையா?”.

“எல்லோரும் ரெண்டாவது, நாலாவது சனிக்கிழமைகளில் உங்களோட லோக்கல் கார்டியன் வீட்டுக்கு போய் துணியை துவச்சுக்கணும்”.

“அவங்க வீட்டை நாறடிக்கணும்னு சொல்லுறிங்க. இருக்குற தண்ணி கஷ்டத்துக்கு அவங்க தொரத்தி தொரத்தி அடிப்பாங்க”.

“உங்களை பார்க்க விசிட்டர்ஸ் வந்தால், நைட்டியோட போய் அவங்களை பாக்க கூடாது”.

“பிறகு.....”, அவள் ஜெர்க்கானத்தில் சுற்றி இருந்தவர்கள் அவளை கிள்ளினார்கள். “ஏண்டி பிசாசுங்களா கிள்ளுறிங்க”.

“உங்களோட பிரண்ட்ஸ்சோட போய் பார்க்கவும் கூடாது. உங்க ரிலேசனை நீங்க மட்டும்தான் பார்க்க வேண்டும்”.

“நல்ல எண்ணம்.....”.

“இப்போ இரண்டாவது சனிக்கிழமை லோக்கல் கார்டியன் வீட்டுக்கு போவதாக இருந்தால், முந்தின நாளே லெச்சரில் கையெழுத்து போட வேண்டும். மறுநாள் ஆறு மணிக்கு முன்பு அதாவது ஞாயிறு மாலை ஆறு மணிக்கு முன்பு ஹாச்ட்டலுக்குள் இருக்கணும். நாலாவது சனிக்கிழமை காலையில் போய்விட்டு மாலையிலேயே இங்கே வந்துவிட வேண்டும், தங்க அனுமதி இல்லை”.

“இப்போவே கண்ணை கட்டுதே....., முடில”.

“அதே மாதிரி மாதம், மாதம் நீங்கள் யூஸ் பண்ணும் பேட்களை, டாயிலெட்டில் போட கூடாது. வலதுபக்கம்.....”,

“சிஸ்டர் எங்களுக்கே தெரியும். அர்ச்சனா ஏற்கனவே சொல்லிட்டா.....”, ஒருத்தி குரல் கொடுத்தாள்.

“யார் அந்த தெய்வம்.....”, அர்ச்சனா எட்டி பார்த்தாள்.

‘அடியேய் இப்போ இவங்க உன்கிட்டே கேட்டாங்களா.....?’, கொலைவெறியோடு அவளை பார்க்க, அவளோ அப்பாவியாக சிரித்தாள்.

“குட்.....”, சொல்லிவிட்டு பேச்சை தொடர்ந்தார்.

“ஹையோ பாராட்டுதே.....”, கலவரமானாள் அர்ச்சனா.

“நைட் பதினொன்று மணிக்குமேல் லைட் ஏரிய கூடாது”.

“நாங்கல்லாம் ஒன்பது மணிக்கே கட்டையை சாச்சுடுவோம். நீங்க மேலே சொல்லுங்க”, வைஷு அவள் கையை அழுத்தி பேசாமல் இருக்க செய்ய முயன்ற முயற்சிகள் தோல்வியையே தழுவியது.

“உங்களது தேவைக்கு பாக்கெட் எப்எம் ரேடியோ வைத்துக் கொள்ளலாம்”.

“இது ஒரு நல்ல நியூஸ்.....”, பாராட்டினாள்.

“ஆனால் சத்தம் வெளியே கேட்க கூடாது”.

“சத்தமே இல்லாமல் கேக்க எதுக்கு எப்எம்..”, கடுப்பானாள்.

“அதாவது அடுத்த அறைக்கு கேட்க கூடாது”.

“ஓ....., அப்படி வாறீங்களா”.

“இரவு ஒன்பது மணிக்குமேல் எப்எம் கேட்க கூடாது. ஒருவர் மற்றவரின் அறைக்கு சென்று தங்க கூடாது. நைட் ஒரு மேம் வந்து அட்டெண்டன்ஸ் எடுப்பாங்க”.

“உளவு பாப்பாங்கங்குறதை இவ்வளவு டீசண்டா யாரும் சொல்லவே முடியாது”, சிலாகித்தாள். வைஷு அவளைவிட்டு தள்ளி போய் அமர பார்த்தாள். அதற்கு அவளை அனுமதிக்காமல், அவள் கைகளை கெட்டியாக பிடித்துக் கொண்டாள்.

“பிறகு ஞாயிற்றுக்கிழமை இங்கே திரைப்படம் போடுவாங்க, தாராளமாக அதை பார்க்கலாம்”,

“யாஹூஉளஉளஉள.....”.

“ஆனால் வேலை இல்லாத பொழுது மட்டுமே”.

“வைஷு என் கையை விடேன் நான் என்னன்னு கேக்குறேன்.....”, பொங்கினாள் அர்ச்சனா. எங்கே நிஜமாகவே எழுந்து கேட்டுவிடுவாளோ என்று பயந்துபோய், அர்ச்சனாதான் தன் கையை பிடித்திருக்கிறாள் என்ற எண்ணம் கூட இல்லாமல், அர்ச்சனாவை கெட்டியாக பிடித்துக்கொண்டாள் வைஷு.

“வைஷக்கா....., அர்ச்சனாவை விடுங்க, அவங்க பொங்குவதை நாம பாப்போம்”, ஜூடி சொன்னாள்.

வைஷாலி அவளை கண்டுகொள்ளவில்லை.
“அசிங்கப்பட்டாடா ஜூடி.....”, சொல்லி சிரித்தாள். ஜூடி முறைத்துக்கொண்டாள்.

“சரி இப்போ இதையெல்லாம் பொறுப்பாக செய்ய ஒரு லீடர் வேணும் யாரை சொல்லுறிங்க”.

“என்ன ஒரு நல்லெண்ணம் பாரேன். தூக்கு கயிறை கையில் வச்சுருக்கேன், யாரை தொங்கவிட போறீங்கன்னு கேக்குது”.

“அர்ச்சனா சிஸ்டர்.....”.

“எவடி அவ என்னை முதல்ல தொங்கவிட கையை பிடிச்சவ”, வழக்கம்போல அலறினாள் அர்ச்சனா. ஆனால் அதை கேட்கத்தான் அங்கே ஆளில்லாமல் போனது.

பகுதி - 20

என் பொறுப்புகள் என்னை

சுமையாய் அழுத்தும் நேரம்

உன் நினைப்பு மட்டும்

தேனின் தித்திப்பாய்.....

அர்ச்சனா எழுந்திரு..... அர்ச்சனா..... நேரமாச்சு. இப்போ டைம் ஆறேகால், இப்போ எழுந்தாதான் மாஸ்(mass) போக சரியா இருக்கும். பதினைந்து நிமிடமாக உலுக்கிக் கொண்டிருந்தாள் அவளை. கடந்த ஒரு மாதமாக வைஷுவின் நிலை இதுதான்.

என்றைக்கு அர்ச்சனாவை ஹாஸ்டல் லீடராக தேர்ந்தெடுத்தார்களோ, அன்று துவங்கியது வைஷுவின் வேலை. அர்ச்சனா அங்கிருக்கும் நூற்றி நாற்பதுபேரை கவனித்தால், அர்ச்சனா ஒருத்தியை கவனிப்பது வைஷுவே. வைஷு இந்துப் பெண்ணாக இருந்தாலும், திருமணம் செய்தது கிறிஸ்தவனை என்பதால், திருப்பலியில் ஆர்வமாகக் கலந்து கொள்வாள்.

“அச்சு, இப்போ நீ வரல....., நான் போய்ட்டே இருப்பேன்”, இறுதியாக இந்த மிரட்டல்தான் அர்ச்சனாவிடம் வேலைக்கானது.

“பொண்டாட்டி, இன்னும் ஒரு ஐந்து நிமிஷண்டி....., ஏண்டி இப்படி காலையில் எழும்போதே கொள்ளைக் கூட்ட தலைவி மாதிரி மிரட்டுற, என் அண்ணா ரொம்பப் பாவண்டி, நீ வீட்டில் இருந்திருந்தால் அண்ணாவையும் தூங்க விடாமல் இப்படித்தானே தொல்லை பண்ணி இருப்ப. அண்ணன் தப்பிச்சார், நான் மாட்டினேன்”, படுக்கையில் இருந்து எழாமல் சோகமாகச் சொல்ல,

“அப்போ நீ இப்படியே தூங்கு”, சொல்லிவிட்டு செல்லப் போனாள்.

அவளைப் போகவிடாமல் கையைப் பிடித்து இழுக்கவே, அர்ச்சனாவின் அருகில் கட்டிலில் நிலை தடுமாறி விழுந்தாள் வைஷு.

“வைஷு இப்போ அண்ணா மட்டும் என் இடத்தில் இருந்துருக்கணும்....., சீனே வேற, ஹம்....., என்ன செய்யிறது, உனக்கு வாச்சது அவ்வளவுதான்”, சொல்லிக் கண்ணடித்தாள்.

“அடச் சீ....., என்ன பேச்சு இது. முதல்ல எழுந்து போடி, பல்லைக் கூட விளக்காமல், பேச்சை பாரு”, அவள் வாயைக் கையால் மூடி, அவளை எழுப்பி பாத்ரூம் பக்கம் தள்ளினாள்.

“பொண்டாட்டி....., நான் பேசுறது தப்பு, அன்னைக்கு நீ செஞ்சது மட்டும் சரியா.....?”, கேட்டு உதட்டைக் குவித்து காண்பித்தாள்.

“ஹேய்..... அதை நீ இன்னுமாடி விடலை, தெரியாத்தனமா உன்கிட்டே சிக்கிட்டேன்”, சொல்லும்பொழுதே முகம் குங்குமமாய் சிவந்தது.

“தெரியாத்தனமாவா.....? அடிப்பாவி நான் வந்ததுகூட தெரியாமல் மெய் மறந்து.....”, அவள் வாயை வேகமாக மூடினாள்.

“அச்சு வேண்டாண்டி சொல்லாதே, என் மானமே போகுது.....”, அவள் கையை தன் வாயிலிருந்து விலக்கினாள் அர்ச்சனா.

“மானம் போகுதா.....? எதுக்குடி.....?”, புரியாதவள்போல் நடித்தாள்.

“ஹையோ, ஹையோ, ஹையோ....., என்ன ஒரு சீன் தெரியுமாடி. சினிமால கூட இவ்வளவு லைவ்வா பாத்ததில்லடி”, நினைவு அந்த நாளுக்குச் சென்றது.

அன்று வார நாள். அர்ச்சனா, கல்லூரியில் கொஞ்சம் வேலை இருப்பதாகச் சொல்லி, பின் தங்கினாள். வைஷு ஹாஸ்ட்டலில் இருக்கும் வேளையில், அவளைப் பார்க்க விசிட்டர் வந்திருப்பதாக லஷ்மி வந்து சொல்லவே, நைட்டியை மாற்றிவிட்டு, சுடிதாரைப் போட்டுக்கொண்டு விசிட்டர் அறைக்குச் சென்றாள்.

‘என்னை யார் பார்க்க வந்திருப்பது. வீட்டுக்குப் போய்ட்டுவந்து ரெண்டு நாள்தானே ஆகுது’, யோசனையோடே அறைக்குச் சென்றாள்.

அவள் அறைக்குள் நுழையவே, வலிய கரங்கள் இரண்டு அவளை தாவி அணைத்தது. அதிர்ச்சியில், கத்தப் போனவள், பழகிய அணைப்பில் பேசாமல் இருந்தாள்.

“என்னங்க....?, இப்படி வார நாள்ல தேடி வந்துருக்கீங்க...?, நான் வீட்டுக்கு வந்துட்டு, திரும்ப வந்து ரெண்டு நாள்தானே ஆகுது, அதுக்குள்ளே என்ன.....? எல்லாம் சரி, நீங்க என்னைப் பார்க்க வாறது அத்தைக்குத் தெரியுமா?”, அவள் கேள்விகளை அடுக்கினாள்.

அவள் கேள்விகளை கவனிக்கும் நிலையில் அவன் இல்லை. அவளை சேர்த்தணைத்து, அவளை முத்தங்களால் திக்குமுக்காடச் செய்தான்.

“என்னங்க....., இது ஹாஸ்ட்டல் விசிட்டர் ரூம். எப்போவேண்ணா யாராவது வரலாம்.....”, அவனை அடக்க முயன்றாள்.

“யாராவது வந்தால் வரட்டும். நீ என் பொண்டாட்டி தானே”, அவன் தேவை இவ்வாறு பேச வைத்தது.

“என்னங்க..... சொன்னா கேளுங்க.....”, அவனை அடக்க முயன்றாலும், அவன் கைகள் தன் மேனியில் படியும் விதமும், இதழ்கள் மொய்க்கும் வேகமும், அவள் பேச்சின் வேகத்தை குறைக்கவே செய்தது.

“வைஷு.... ஒரு பத்து நிமிஷம் பேசாமல் இருடி..... ப்ளீஸ்.....”, அவன் குரலில் இருந்த தாபம், அவளை ஊமையாக்கியது.

அவளது மௌனம் அவனுக்குச் சாதகமானது. கணவன் என்ற உரிமையில், அவன் அவளை தனதாக்க முயன்றான். அவனின் சூடான இதழ்கள், அவள் முகமெங்கும் ஊர்வலம் போனது. கைகள் அவள் மேனியின் மென்மைகளை பரிசோதித்தன.

“என்..... என்..... என்னங்க, இப்படித் தேடி வந்து தொல்லை பண்ணுறீங்க. ரெண்டுநாள் வீட்டில் தானே இருந்தேன்”, இருக்கும் சூழல், அவனுக்குத் தன்னைக் கொடுக்கமுடியாத இயலாமை அவள் குரலில்.

“என்ன வைஷு....? வீட்டில் இருந்த சரி....., என்னோட இருந்தியா.....? கல்யாணம் ஆகி பத்தே நாளில் இப்படி ஒரு பிரிவு..... முடியலடி என்னால்”, அவள் இதழ்களை ஒரு வேகத்துடன், தன் இதழ்களால் மூடினான்.

கண்களில் வழியத் துடித்த கண்ணீரை, சிரமப்பட்டு அடக்கினாள். மேலே எதுவும் பேசாமல், அவன் செய்கைக்கு தன்னைக் கொடுத்தவாறு பேசாமல் நின்றாள். அந்தநேரம், எதேச்சையாக செய்தித்தாள் எடுக்கவந்த அர்ச்சனா, இவர்களின் நிலையைப் பார்த்து பேசாமல் வெளியேறினாள்.

வெளியே மரத்தடியில் சென்று நின்றுகொண்டாள். ‘இந்த வைஷுக்கு அறிவே கிடையாது. இப்போ யாராவது வந்தால், ச்ச்சே..’, மனதுக்குள் அவளை திட்டினாலும், தோழியின் கௌரவம் காக்கப்படவேண்டும் என்ற கவலைதான் அதிகம் இருந்தது.

‘விசிட்டர் அறைக்கு, எப்பொழுதும் செய்தித்தாள் படிக்க, பிள்ளைகள் அடிக்கடி வருவது வழக்கம். இது வைஷுவிற்கும் தெரியும், அப்படியும்.....’, தலையில் கையை வைத்தவாறு பேசாமல் நின்றாள்.

மைகேல் மேல் ஆத்திரமாக வந்தது. ஏற்கனவே அவனைப் பிரிந்திருப்பது அவளுக்குத் துன்பம். இதில் இப்படிவேறு அவளை தொல்லை செய்தால்....., ஆனால் அவர்களின் செய்கையை தவறாக எண்ண முடியவில்லை. ஏனென்றால் வைஷுவைப் பற்றி அவளுக்கு நன்கு தெரியும்.

இவ்வளவு பயந்தவள் இப்படி பொது இடத்தில்....., கண்டிப்பாக ஏதாவது காரணம் இருக்கும். இது அவர்களது அந்தரங்கம். அதை பொது இடத்தில் பகிர்வதைத்தான் ஒத்துக்கொள்ள முடியவில்லை. இவள் யோசனையை கலைக்கவென்றே இரண்டுபேர் விசிட்டர் அறையை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள்.

“ஹேய் ஜெஸ்சி, இங்கே வா....., நீ என் டீம் தானே”, தெரிந்துகொண்டேதான் கேட்டாள்.

“அச்சு, உனக்கு ஞாபகமறதின்னு எந்த கோவிலில் சத்தியம் செய்தாலும் நான் ஒத்துக்கவே மாட்டேன், என்னன்னு சொல்லு”, அவர்களும் விசிட்டர் அறைக்குச் செல்லாமல், இவளைத் தேடி வந்தார்கள்.

“இல்ல.... நேத்து சைக்காலஜி மேம் ஏதோ அசைன்மென்ட் சொன்னாங்களே என்ன அது? அப்போ நான் க்ளாஸ்ல இல்லை அதான்”, வாய்க்கு வந்ததை கேட்டாள்.

“அவங்க அசைன்மென்ட் தரலையே....., இன்னோவேசன் மேம் தான் என்னமோ சொல்லிட்டு இருந்துது. புவி.... சைக்காலஜி மேம் ஏதாவது சொன்னாங்க.....?”, பக்கத்தில் இருந்தவளிடம் கேட்டாள்.

‘இந்த வைஷு எங்கே இன்னும் காணோம், கொஞ்சமாவது நார்மல் ஆனாங்களான்னு தெரியலையே’, பேச்சு

இவர்களிடம் இருந்தாலும், யோசனை வைஷுவையே சுற்றி வந்தது.

ஆனால் வைஷுவின் நிலை அங்கே இன்னும் மோசமாகத்தான் சென்றுகொண்டிருந்ததே தவிர, சரியாகவில்லை. வைஷுவே, யாராவது வந்துவிட்டால் பரவாயில்லை, என்னும் நிலைக்குப் போய்க்கொண்டிருந்தாள்.

அவளால் மைக்கேலை கட்டுப்படுத்த முடியவில்லை. வீட்டுக்குச் சென்றும், அவனுடன் தங்க அனுமதிக்காமல், தன்னுடன், தன்னுடைய அறையிலேயே தன்னை தங்கவைத்துக்கொண்ட அத்தையின்மேல் ஆத்திரமாக வந்தது. அவர்கள் அவ்வாறு செய்யப்போய் தானே, இன்று இவர் இப்படி வந்திருக்கிறார், என்று எண்ணினாள்.

ஒரு அளவுக்குமேல், அவனிடம் உடன்படவும் முடியவில்லை, விலகவும் அவன் அனுமதிக்கவில்லை. அவனிடம் போராடி தோற்றுக் கொண்டிருந்தாள் என்பதுதான் உண்மை. வெளியே இன்னும் சிலர் வந்துவிடவே, வேறு வழியில்லாமல், அர்ச்சனா விசிட்டர் அறைக்கு விரைந்தாள்.

“ஹேய், இன்னைக்கு என்ன இவ்வளவுபேர் நியூஸ் பேப்பர் படிக்க வர்றீங்க....., நானும் அதுக்குதான் வாறேன். விசிட்டர் ரூம்ல எத்தனை நியூஸ் பேப்பர்தான் இருக்கும்”, தேவையே இல்லாமல், சத்தமாகப் பேசியவாறு வந்தாள் அர்ச்சனா.

சட்டென உணர்ச்சிவேகம் தணிந்தாள் வைஷு. ‘நிறையப்பேர் வாறாங்க போல’, நினைத்தவள், அவனை உதற முயன்றாள்.

அவன் வலுவின்முன், அவளால் எதுவும் செய்ய முடியவில்லை. “மைக்கேல், அச்சு வாறா விடுங்க”, “வைஷு... இன்னும் ஒண்ணே ஒண்ணுடி.....”, “ஹையோ... வந்துட்டாங்க, விடுங்க”, அவளைப் பேச விடாமல், இறுதியாக அவள் இதழ்களில் அழுந்த முத்தமிட்டான்.

சரியாக அந்தநேரம், புயலென உள்ளே வந்தாள் அர்ச்சனா. அர்ச்சனாவைப் பார்த்த பிறகுதான், வைஷு வேகமாக விலகினாள். “எக்ஸ்க்யூஸ்மீ....., நியூஸ் பேப்பர் எடுக்க வந்தோம்”, பார்மலாக ஒரு வார்த்தையை உதிர்த்துவிட்டு, செய்தித்தாளை மொத்தமாக அள்ளி வந்திருந்தவர்களிடம் கொடுத்தாள்.

வைஷு அவமானமாக உணர்ந்தாள். தலையைக் கவிழ்ந்துகொண்டு, கண்ணீர் வடித்தாள். அர்ச்சனா, நிற்கவா, போகவா என்ற யோசனையில் தடுமாறியவள், இறுதியில் வைஷுவிடமே சென்றாள். வைஷு அங்கிருந்த ஜன்னல் அருகில் நின்று அழுது கொண்டிருந்தாள்.

மைகேல், அப்பொழுதுதான் நடந்து முடிந்த சம்பவத்தின் விபரீதம் உணர்ந்தவனாய் ஸோபாவில் அமர்ந்திருந்தான். “வைஷு, என்னை அண்ணாவுக்கு அறிமுகப்படுத்தி வைக்க மாட்டியா.....?”, சூழ்நிலையை சமாளிக்க முயன்றாள்.

“அச்சு.....”, என்று அவளை அழைத்தவாறு, அவள் தோளில் சாய்ந்து அழுதாள்.

“முதல்ல அழுவதை நிறுத்து, எல்லாம் அண்ணா போனதும் பேசிக்கலாம்”, அவளுக்கு மட்டும் கேட்குமாறு சொன்னாள்.

வைஷுவும், அவள் பேச்சில் இருந்த இறுக்கத்தில், அழுகையை சட்டென நிறுத்தினாள்.

“ஹல்லோ அண்ணா....., நான் அர்ச்சனா, வைஷுவோட க்ளோஸ் ப்ரண்ட் அண்ட் ரூம்மேட்”, தன்னைத் தானே அறிமுகப்படுத்திக் கொண்டு, வைஷுவை கையைப் பிடித்து அழைத்துவந்து, மைக்கேலின் எதிரில் அமர்ந்தாள்.

தேவையற்ற மௌனம் அங்கே சூழ்ந்தது, அது பிடிக்காமல் அர்ச்சனா பேச்சை வளர்த்தாள். “வைஷு, நான் அசைன்மென்ட் எழுதப் போறேன், நீ பேசிட்டன்னா.....”, கேட்டுவிட்டு எழுந்தாள்.

வைஷுவும் அவளுடன் எழுந்துகொண்டாள். மைகேலின் முகம் அவமானத்தால் சிறுத்தது. அவனால், அர்ச்சனாவை நிமிர்ந்தே பார்க்க முடியவில்லை. 'ச்சே....., புத்தியில்லாமல் இப்படி அவசரப்பட்டு நடந்துகிட்டோமே', தன்னைத் தானே நொந்துகொண்டான்.

அர்ச்சனாவின் பின்னே வைஷுவும் வெளியே வந்துவிட, தன் கையைப் பிடித்திருந்த அவள் கையை உதறினாள். கிளர்ந்த கோபத்தை, வைஷுவின் முகத்தில் தெரிந்த அவமான உணர்வில், சட்டென அடக்கினாள்.

"வைஷு, முதல்ல அண்ணாவை அனுப்பிட்டு வா....., பிறகு....., அவளை அருகில் அழைத்து, "என்னமோ ரொம்ப நேரமா தேடிட்டு இருந்தீங்களே, அதை, பிறகு கண்டினியூ பண்ணலாம்னு சொல்லு...", சொல்லி கண்ணடித்துவிட்டுக் கிளம்பிவிட்டாள்.

வைஷு செல்லும் முன்பு, மைக்கேலே வெளியே வந்தான். "நான் கிளம்புறேன் வைஷு.....", அவள் முகம் பார்க்காமல் சொன்னான்.

"அண்ணா....., அந்த மரத்தடியில், இருந்து, ஒரு ரெண்டு நிமிஷம் பேசிட்டு கிளம்புங்க....., உங்களுக்காக இல்லை....., என் ப்ரண்டுக்காக....., ப்ளீஸ்.....", சொல்லிவிட்டு அவர்களைத் திரும்பியும் பார்க்காமல் சென்றுவிட்டாள்.

அர்ச்சனா சென்ற ஐந்தாவது நிமிடம் வைஷு அவள் முன்பு இருந்தாள். "அச்சு....., நீ..... நினை....., இல்ல..... நான்....., அச்சு....., தப்புதான்..... நீ.....", என்னவென்று சொல்லத் தெரியாமல் தடுமாறினாள்.

"என்ன....., தேடுனதை சரியா முடிக்க விடாமல் நான் குறுக்கே பாஞ்சுட்டேன்னு என்னை பிச்சு பிச்சு திட்டுறியா.....?", குறும்பாகக் கேட்டாள்.

வைஷு அமைதியாகவே இருந்தாள்.

“சரி விடு, முதல்ல கோபமாதான் இருந்தேன், இப்போ இல்ல. எல்லாம் ஓகே. அண்ணா என்ன விஷயமா வந்தாங்களாம்.....? ஏதாவது முக்கியமான விஷயமா.....?”, சாதாரணமாகக் கேட்டாள்.

“இல்ல, என்னை சும்மா பாத்துட்டு போகத்தான் வந்து இருந்தாங்க”, தலை கவிழ்ந்தாள்.

“வீட்டில் என்ன பிரச்சனை வைஷு.....”.

“அச்சு.....”, அதிர்ச்சியாக வினவினாள் வைஷு.

“வைஷு....., வீட்டுக்குப் போயிட்டு வந்து ரெண்டு நாள் ஆகலை, அதுக்கு முன்னாடி அண்ணா இங்கே வந்து இருக்காங்க. அதுவும் எந்த ஸ்பெஷல் நியூஸ்சும் இல்லாமல்....., அப்படின்னா.....? கண்டிப்பா வீட்டில் எதுவோ சரியில்லைன்னு அர்த்தம். முடிஞ்சால் என்னன்னு சொல்லு. இல்லன்னா வேண்டாம்”, சொல்லிவிட்டு எழுந்து செல்லப் போனாள்.

“அச்சு, சொல்லுன்னு சொல்லிட்டு, பேசாமல் போற”.

“வைஷு....., எப்பவுமே நீ எனக்கு பதில் சொல்ல விரும்புவது இல்லை. இப்பவும் கண்டிப்பா நீ சொல்லப் போறதில்லை, பிறகு எதுக்கு நான் வெயிட் பண்ணணும்”.

“அச்சு....., அது அப்போ....., இப்போ நான் உன்கிட்டே எதையாவது மறைத்து இருக்கேனா?”, கவலையாகக் கேட்டாள்.

“பொண்டாட்டி....., எல்லோருக்கும் பெர்சனல் அப்படின்னு ஒண்ணு உண்டு, அதில் மத்தவங்களை வரவே விடக் கூடாது. அது நானாக இருந்தாலும், யாராக இருந்தாலும்”.

“கோபமா சொல்லலையா.....?”, மெதுவாகக் கேட்டாள்.

“இதில் கோபப்பட என்ன இருக்கு என் செல்ல பொண்டாட்டி?”, அவள் மூக்கோடு மூக்கை உரசினாள்.

“சொல்லப் போனால், எனக்கு என்ன முடிவெடுக்கன்னு தெரியாமல் குழம்பிட்டு இருக்கேன் அச்சு. இந்தவாரம் வீட்டுக்குப் போயிருந்தேனே, என் அத்தை....., அவங்களோட என்னை தங்க வச்சுட்டாங்க. அவருக்கு அதில் ரொம்ப வருத்தம், அதான் இப்போ....., இப்படி.....”, தயங்கினாள்.

“ஹம்..... புரியுது விடு. இருந்தாலும் உன் அத்தை செய்யிறது ரொம்ப தப்பு. அண்ணா, அவங்க அம்மாவைக் கேள்வி கேட்பதை விட்டுட்டு, இப்படிச் செய்தால் என்ன அர்த்தம். எல்லாம் நம்ம காலேஜ் ரூல்ஸ் செய்யும் வேலைதான். இன்னும் கொஞ்ச நாள்தானே.... பொறுத்துக்கோங்க. இப்போ வா, நாம காபி சாப்பிட போலாம்”.

“அச்சு நீ என்னை தப்பா.....”, வைஷு இன்னும் சரியாகவில்லை.

அவள் கைகளை பிடித்துக்கொண்டாள் அர்ச்சனா. “வைஷு, எனக்கும் ரொம்ப கோபம் வந்தது நிஜம்தான். ஆனால் அது நீ நினைக்கும் விதத்தில் இல்லை, இப்படி ஒரு பப்ளிக் பிளேஸ்ல....., ஆனால் தப்பா நினைக்கதுக்கு நீ தப்பு செய்யலையே, உன்னோட இருந்தது உன் ஹஸ்பண்ட் சோ....., பீ கூல். உனக்குப் புரியும்னு நினைக்கிறேன். இப்போவாவது எனக்கு காபி கிடைக்குமா”.

“நான் ப்ளாஸ்க்ல எடுத்து வச்சுட்டேன் வா”, இருவரும் காப்பியை அருந்தினார்கள்.

வைஷு, அர்ச்சனா இருவருக்குள்ளும் ஒரு இறுக்கமான, பிணைப்பான, ஒருவர் ஒருவரை நன்கு புரிந்துகொண்ட அழகான நட்பு உருவாகி இருந்தது.

அந்த வாரம் இரண்டாம் சனிக்கிழமை அன்று, ஜூடி அவள் வீட்டுக்கும்,பெமி அவளது சித்தி வீட்டுக்கும், வைஷு அவள் வீட்டுக்கும் கிளம்பிக் கொண்டிருந்தார்கள். அர்ச்சனா மட்டுமே அங்கே இருந்தாள்.

பெமி, அர்ச்சனாவை கண்டுக்கொள்ளவே இல்லை. வைஷுவிற்கு அர்ச்சனாவைத் தனியாக விட்டுச் செல்ல மனமே வரவில்லை. ஆனால் அர்ச்சனாதான், அவளைக் கட்டாயப்படுத்தி, கிளப்பிவிட்டாள்.

அர்ச்சனா ஹாஸ்ட்டல் லீடர் ஆனவுடன் செய்த முதல் வேலை, லோக்கல் கார்டியன், அல்லது வீட்டில் இருப்பவர்கள் வந்துதான் வீட்டிற்கு அழைத்து செல்லவேண்டும், என்று இருந்த நடைமுறை ஒத்துவரவில்லை என்றும், இரண்டாம் சனிக்கிழமை மட்டும், பிள்ளைகள் அவர்களாகவே வீட்டுக்குப் போக அனுமதி வேண்டுமென்றும் கேட்டாள்.

ஆனால் லெட்சரில் முந்தினநாளே எழுதிவைக்கும் முறை சரியே என்று வாதிட்டு ஒத்துக்கொள்ள வைத்ததாள், வீட்டிற்குச் செல்பவர்கள் அவர்களாகவே சென்றுவிடலாம். ஜூடித்தும், வைஷுவும் திருச்சி ஆகையால் இருவரும் சேர்ந்தே கிளம்பினார்கள்.

“அச்சு, நான் என் அம்மா வீட்டுக்குப் போவதாக இருந்தால், கண்டிப்பாக உன்னை கூட்டிப் போயிருப்பேன், ஆனால் நான் என் மாமியார் வீட்டுக்குப் போறேன்.....”, அர்ச்சனாவை ஹாஸ்டலில் தனியாக விட்டுப் போவதின் தயக்கம், அவள் குரலில்.

“வைஷு ரொம்ப உருகாதே, அவ என்ன சின்ன பிள்ளையா?”, பெமியின் குரலில் அப்பட்டமான எரிச்சல்.

“அதேதான் நானும் சொல்லிட்டு இருக்கேன் பெமி, இவதான் கேக்கமாட்டேன்னு நிக்கிறா. உனக்காவது நான் வளர்ந்த பிள்ளைன்னு தெரிஞ்சு இருக்கே, நல்லா சொல்லுடா”, அவளது எரிச்சலை வழக்கம்போல்

கவனிக்காமல், சுமுக உறவை விட மனமில்லாமல் சொன்னாள்.

வைஷு பெமியை சூடாக ஒரு பார்வை பார்த்துவிட்டு திரும்பிக் கொண்டாள். “பொண்டாட்டி, என்கிட்டே அவ்வளவு பேசுன, எங்கே அவளுக்கு பதில் சொல்லு பாப்போம்”, வைஷுவின் அமைதியை சீண்டினாள் அச்சு. அவள் இடுப்பிலேயே கிள்ளிவிட்டாள் வைஷு.

“வாயைத் தவிர உனக்கு எல்லாம் நீளம்டி.....”, அர்ச்சனா, வைஷு தன்னைக் கிள்ளியதால் அப்படிச் சொல்ல,

“அப்படி எதுவும் நீளமா எனக்குத் தெரியலையே”, ஜுடி இடையில் புகுந்தாள்.

“ஜுடி..... உனக்கு முன்னாடியும், பின்னாடியும் அக்கா தங்கை இருக்காங்களா.....?”, சம்பந்தமே இல்லாமல் கேட்டாள் அச்சு.

“இருந்தாங்களாம்.....”.

“இருந்தாங்களாம்னா.....?”, அர்ச்சனா.

“அதாவது இப்போ அவங்க இல்லை. என்னமோ நான் பிறந்த கொஞ்ச நாளில் என் அக்கா இறந்திருக்கா. பிறகு என் தங்கச்சி பிறந்து கொஞ்ச நாளில் அவளே இறந்துட்டாளாம்”, சொன்னவாறே பாக்கை தயார்செய்து கொண்டிருந்தாள்.

“ஏண்டி....., கூடப் பொறந்தவங்க செத்து போய்ட்டாங்கன்னு ரைமிங்கா சொல்லுற, கொஞ்சமாவது பீல் பண்ணுறியாடி”, வைஷுவும், அர்ச்சனாவும் அமைதியாக இருக்க, பெமி கேட்டாள்.

“என்னமோ அவங்க நேத்து செத்துப்போன மாதிரி நீ பீல் பண்ணுற. எனக்கு மூணு வயசு ஆகுறதுக்கு முன்னாடி, நடந்து முடிஞ்சது இதெல்லாம். பீல் பண்ணுற மூஞ்சியைப்

பாரேன்”, ஒற்றைப் பெண்ணாக வளரும் அவளுக்கு, எதிரில் இருப்பவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ள தெரிவதே இல்லை. இப்பொழுதும் அதையே செய்தாள்.

“நீதாண்டி பீல் பண்ணணும், அதைவிட்டு நான் பீல் பண்ணா அதையும் குறை சொல்லுற, நீ மனுஷியா இல்லை ஜடமா?”, பெமி கேட்க,

“அதான் நானும் கேக்கேன், பீல் பண்ணவேண்டிய நான் பேசாமல் இருக்கேன், உனக்கென்ன ஓவர் ஆக்ட்”, ஜூடி கேட்க,

“நான் ஆக்ட் பண்ணுறேனா.....?”, பெமியும் வாயாட,

“பின்ன.... இப்போ நீ செய்யிறதுக்கு என்ன அர்த்தம்.....?”, ஜூடி எற,

“எந்த பீலிங்சும் இல்லாத ஜடம், அதனால்தான் உனக்குக் கடவுள் யாரையும் இல்லாமல் செஞ்சுட்டார்”, பெமியின் வார்த்தைகள் தடிக்க துவங்கின.

“பெமி.....”, இவ்வளவுநேரம் அவர்களில் வாயாடலை ஒதுங்கி இருந்து கவனித்த அர்ச்சனா இடையில் புகுந்தாள்.

“அச்சு.... நீங்க சும்மா இருங்க நான் பாத்துக்கறேன்”, ஜூடி கத்தினாள்.

“எத பாத்துப்ப, உன் பஸ் உன்னை விட்டுட்டுப் போவதையா? நேரமாச்சு முதல்ல கிளம்பு. நான் எதுக்கு உன்கிட்டே கேள்வி கேட்டேன், அது எங்க போய் நிக்குது. கிளம்பு முதல்ல”, அர்ச்சனாவின் கண்டிப்பில் கொஞ்சம் அடங்கினாள்.

“ஏய் அதென்னடி அவள மட்டும் வாங்க போங்கன்னு சொல்லுற, அவ வயசுதான் எனக்கும், என்னைமட்டும் வா போன்னு சொல்லுற”, பெமி தேவையே இல்லாமல் கேட்டாள்.

“அதெல்லாம் அவங்க அவங்க நடந்துக்கற முறையில்தான் இருக்கு”, முறைப்பாக பதில் சொன்னாள் ஜூடி.

“என்னடி அப்படி நடந்துக்கறேன். எல்லாவளுக்கும் என்னைப் பார்த்தால் எப்படித்தான் இருக்கு”, விட்டால் குடுமிப்பிடி சண்டை அங்கே நடந்திருக்கும்.

“பெமி..... நீ முதல்ல இங்கே இருந்து போ”, அர்ச்சனா உள்ளடக்கியப் பொறுமையில் சொன்னாள்.

“அச்சு, உன் அதிகாரத்தை எல்லாம் வேற யார்ட்டயாவது வச்சுக்கோ என்கிட்டே வேண்டாம்”, இவள்மேல் பாய்ந்தாள்.

“பெமி.....”, பேசப்போன வைஷாலியை கையை பிடித்து தடுத்தாள்.

“பெமி.... அவ சின்னப் பிள்ளை, நீ பெரியவதானே அதான் உன்கிட்டே சொன்னேன்”, பொறுமையாகவே சொன்னாள்.

“நல்லா சொல்லுங்க.....”, இன்னும் எதுவோ சொல்லப்போன ஜூடி, அர்ச்சனாவின் பார்வையில் கப்பென வாயை மூடிக் கொண்டாள்.

பெமி, கோபமாக பாகை தூக்கிக்கொண்டு வெளியேறினாள். புயல் அடித்து ஓய்ந்ததுபோல் இருந்தது. அர்ச்சனா தலையில் கையை வைத்தவாறு அமர்ந்துவிட்டாள்.

“அச்சு, நீங்க சொல்லுங்க, எதுக்கு அப்படி கேட்டீங்க முதல்ல...”, என்னமோ அதுதான் முக்கியம் என்பதுபோல் கேட்டாள்.

அர்ச்சனா கோபமாக அவளைப் பார்க்க, வைஷு வயிற்றைப் பிடித்துக்கொண்டு சிரிக்கவே, அர்ச்சனாவின் இதழ்களிலும் மெல்லிய புன்னகை.

“வைஷு இப்போ ஏன் ஹி...ஹி...ஹின்னு பல்லைக் காட்டுறீங்க.....?”, கடுப்பானாள் ஜூடி.

“இல்ல... ஒருத்தி கோபமா வெளியே போறா.....? இவ்வளவுநேரம் ரெண்டுபேரும் கட்டிபிடிச்சு உருண்டு, புரளாத குறையா சண்டை போட்டீங்க. இப்போ என்னமோ ஒண்ணுமே நடக்காத மாதிரி நீ கேள்வி கேக்குறியே, அதுக்குதான் அவ சிரிக்கிறா, விளக்கம் போதுமா?”, அர்ச்சனா சொன்னாள்.

“பெமியை விடுங்க, வர வர அவங்க நடந்துக்குறதும், பேசுறதும் எனக்குப் பிடிக்கலை, எனக்கென்னமோ, அவங்களுக்கு உங்களை சுத்தமா பிடிக்கலைன்னு நினைக்கிறேன். எதுக்கும் நீங்க அவங்ககிட்டே இருந்து விலகியே இருங்க”, அவள் சொல்லவே அவளை ஆச்சரியமாக பார்த்தார்கள் அர்ச்சனாவும், வைஷுவும்.

“இப்படிப் பாத்தா.....?”, புரியாமல் கேட்டாள்.

“உனக்கும்தானே அச்சுவை பிடிக்காது.....”, வைஷு கேட்டாள்.

“எனக்கு இவங்களைப் பிடிக்காதுன்னு யார் சொன்னா.....? ஓ....., நான் இவங்க டீம்ல இல்லாமல் போனதும், இவங்களை கேலி செய்வதாலும் இப்படிச் சொல்லுறீங்களா? அது அப்படி இல்லை, ப்ரண்ட்ஸ்குள்ளே சில விஷயங்கள் ஒத்துவராது.

அதாவது இப்போ அவங்க டீம்ல ஏதாவது வேலை சொல்லுவாங்க, இவங்க சொல்லி, நான் கேக்கணுமான்னு எனக்குத் தோணும். அவங்க விளையாட்டா ஏதாவது செய்வாங்க, அதை நான் டீம்ல கிண்டல் செய்வேன், ஒரு தலைவியா அவங்களுக்கு அதுவும் நல்லதில்லை.

சிலநேரம், கோபமா நான் ஏதாவது சொல்லிடுவேன்....., வேண்டாம் கொஞ்சம் விலகி இருப்பது நல்லதுன்னு நினைச்சேன் அவ்வளவே. போதுமா விளக்கம், அச்சு, நீங்க

சொல்லுங்க, ஏன் அப்படிக் கேட்டீங்க?”, நீளமாகப் பேசிவிட்டு, அவள் அதிலேயே நின்றாள்.

வைஷு இமைக்க மறந்து ஜூடியைப் பார்க்க, “நான் ஏன் அப்படி சொன்னேன்னா.....? எப்போ பாத்தாலும் நாங்க பேசும்போது குறுக்கே புகுந்து பேசுறியா அதனால்தான். இன்னொரு விஷயம், வைஷுக்கு என்ன நீளம்னு கேட்டியே....., அதை உன்னால் கண்டுபிடிக்க முடியாது”, குறும்பாகச் சொல்லி முடித்தாள்.

“நீங்க முதல்ல சொன்னதை கொஞ்சம் ஒத்துக்கறேன், அதென்ன எனக்குக் கண்டுபிடிக்க முடியாது, என்னன்னு சொல்லுங்க....., நான் எப்படிக் கண்டுபிடிக்கிறேன்னு மட்டும் பாருங்க”, சவால் விட்டாள்.

“ஜூடி வேண்டாம்.....”, வைஷு எச்சரித்தாள்.

அதைக் கண்டுகொள்ளாமல், “அச்சு நீங்க சொல்லுங்க”.

“அதாவது வைஷுக்கு வேறே எதெல்லாம் நீளம்னு தெரியணும்னா, நீ உன் கண்ணைத் தொறந்து....., கவனி....., தொறந்து பாக்கணும். இப்படி பூனைக் கண்ணால் பார்த்தால் எல்லாம் தெரியாது”, சொல்லிவிட்டு, கண்களை, ஜூடியின் கண்களைப்போல் சுருக்கி காண்பித்தாள்.

வைஷு சிரிப்பை அடக்க, திரும்பிக் கொள்ள, ஜூடி தலைகாணியை எடுத்து அர்ச்சனாவை மொத்தினாள்.

“ஜூடி.... என்னை, ஊருக்குப் போயிட்டு வந்துகூட அடிக்கலாம், ஆனால் பஸ் போய்ட்டா திரும்ப வரவே செய்யாது”, அவள் அடிகளைத் தடுத்தாவறே சொன்னாள்.

“இப்போ பஸ்சுக்கு டைம் ஆச்சேன்னு, உங்களை விட்டுட்டுப் போறேன்”, பெரியமனது பண்ணி விட்டாள். இருவரையும் கேட் வரை சென்று வழியனுப்பினாள். வைஷு மனமே இல்லாமல் சென்றாள்.

அன்றைய நினைவில் மூழ்கியவளைக் கலைத்தாள் வைஷு.

“ஏண்டி, தூங்கி எழுந்து கனவு கண்டுட்டு இருக்க, இப்போ வா போகலாம்”.

“ஏய், அந்த சீனை நினைச்சுப் பாத்துட்டு இருக்கேன். இப்படி தொந்தரவு பண்ணுறியே”.

“அடச்சீ கருமம், காலங்காத்தாலே நினைக்கிற சீனா அது. உன்னை என்ன செய்யிறேன் பாரு”, அவளை அடிக்கத் துரத்தவே, “காலங்காத்தாலே இதைவிட நல்ல சீன் இருக்கவே முடியாது”, அர்ச்சனா பதில் சொன்னவாறே, பாத்ரூமில் சென்று புகுந்து கொண்டாள். ஐந்து நிமிடங்களில் கிளம்பி வந்தாள்.

சர்ச்சில் திருப்பலி நடந்துகொண்டிருந்தாலும், அர்ச்சனாவின் கண்கள் யாரையோ தேடியது. இந்த ஒரு மாதத்தில், அவனை, இந்த மாஸ் நடக்கும் வேளையில், தூரத்தில் பார்ப்பதோடு சரி. அவன் கண்களும் இவளையே விடாமல் மொய்க்கும். அவனைக் காணும் இந்த நிமிடங்களுக்காக மட்டுமே அர்ச்சனா உயிர்ப்போடு இருப்பதாக உணர்ந்தாள்.

மாஸ் நடக்கும் வேளையில் கண்களால் மொயப்பவன், நற்கருணை வழங்கும் வேளையில், எப்படியாவது அவள் பின்னால் இணைந்து கொள்வான். பேச்சுக்களே இருப்பதில்லை, பார்வைகள் மட்டும் தழுவி மீளும். சில வேளைகளில் தோள்கள் உரசிக்கொள்ளும்.

திருப்பலி முடிந்து, அவனை சந்திக்கலாம் என்று எண்ணும் வேளையில், அந்த நினைவே இல்லாதவன் போன்று, விலகிச் சென்றுவிடுவான். அவனது விலகலை ஒருவித இயலாமையுடன் பார்த்திருப்பாள் அர்ச்சனா. செல்லும் அவனது சட்டையைப் பிடித்து கன்னத்தில் பளாறென அறை விட்டு, ‘ஏண்டா இப்படி செய்யிற’, என்று கேட்க எழும் கோபத்தை, சுற்றுப்புறம் உணர்ந்து அடக்கிக் கொள்வாள்.

கணவன் என்று ஒரு நாள் சொன்னவன், அடுத்த நாளில் இருந்து கண்ணிலேயே கபடி ஆடினால், அவளும் என்னதான் செய்வாள். அவன் பார்வையின் அர்த்தம் சிலநேரம் புரிவதுபோல் இருந்தாலும், பல வேளைகளில் அவளுக்குப் புரியவில்லை. 'எனக்குத் தனிமைதான் நிரந்தரம் போல', என்று தன்னையே சமாதானம் செய்துகொள்ளத் துவங்கியிருந்தாள்.

அதைவிட, அவன்மேல் கோபம் கொள்ளத் துவங்கியிருந்தாள் என்பதுதான் சரியாக இருக்கும். இதுவரை எதற்காகவும் ஏங்காத நான் இனிமேல் புதிதாக ஒன்றுக்காக ஏங்கக் கூடாது. அவன்பக்கம் செல்லும் மனதை கடிவாளம் போட்டு இறுக்க கட்டிக் கொண்டாள்.

நில் என்று சொன்னவுடன் நிற்க அது என்ன மாநகர பேருந்தா? சமயத்தில் அதுகூட சரியான இடங்களில் நிற்பதில்லை. அப்படியிருக்க, நொடியில் உலகையே சுற்றிவரும் மனம் மட்டும், சொன்ன பேச்சை அவ்வளவு சீக்கிரம் கேட்டுவிடுமா என்ன?

வைஷுவும், கொஞ்ச நாளாக அர்ச்சனா மனதுக்குள் எதையோ வைத்து மருகுவதை உணர்ந்திருந்தாள். ஆனால் அவளிடம் என்னவென்று கேட்க முயலவில்லை அவள். அப்படியே கேட்டாலும் அச்சு எதையாவது சொல்லி சமாளிப்பாள், உண்மையைச் சொல்லமாட்டாள், என்பது அவளுக்குத் தெரியும்.

அச்சு அனைவரிடமும் கலகலப்பாகப் பழகினாலும், தன் உள்மன எண்ணங்களை, யாருடனும் பகிரத் தயாராக இல்லை. வைஷு, அச்சுவின் வருத்தமான முகத்தை , ஒரு வினாடிக்கும் அதிகமாகக் கூர்ந்து பார்த்தாலே, முகபாவத்தை மாற்றிவிடுவாள்.

இப்படி இருக்கும் அவளிடம், வைஷு எப்படி விஷயத்தை வாங்க முடியும். தோழியின் மனம் மாறவேண்டும், அவள்

கலகலப்பு திரும்ப, தன்னால் முடிந்தால் எதையாவது செய்யவேண்டுமென்று அவள் விரும்பினாள்.

ஆனால் என்ன செய்வதென்றுதான் தெரியவில்லை. அவளுக்காகவே அந்த சந்தர்ப்பத்தைக் கடவுள் அமைத்து கொடுத்தாரோ?

பகுதி - 21

நட்பிற்கும் வரைமுறை உண்டு

கடக்க விரும்புகிறேன்

உன் சின்னப் பொறாமையும்

கோபப் பார்வைகளும் கூட

நட்பின் உரிமையாகவே.....

பொருளறிவியல் வகுப்பில் அமர்ந்திருந்தார்கள் அர்ச்சனாவும், பெமியும். பெமியிடம் பேசிக் கொண்டிருந்தாள் அர்ச்சனா, தன் பேச்சைக் கவனிக்கின்றாளா? இல்லையா ? என்பதைப்பற்றிக்கூட கவலைப்படாமல், எதையோ வளவளத்துக் கொண்டிருந்தாள் அர்ச்சனா.

புதிதாக, முதுகைத் துளைக்கும் உணர்வு, யாரோ தன்னைக் கூர்ந்து கவனிக்கின்றார்கள் என்பது புரிந்தது. 'யாராக இருக்கும்.....?', யோசனையாக திரும்பிப் பார்த்தாள். ஜன்னலுக்கு வெளியே, அடுக்குமாடிக் குடியிருப்பின் ஜன்னல் தான் தெரிந்தது.

அங்கே எந்த அசைவும் இல்லை. 'இருப்பது இந்த ரெண்டு ஜன்னலும்தான். இங்கே நான்....., அப்போ, அங்கே இருந்துதான் யாராவது பார்த்திருக்க வேண்டும். சரி பாத்துட்டு போகட்டும்', தோளை குலுக்கிவிட்டு, பெமியிடம் பேச்சை தொடர்ந்தாள்.

"அர்ச்சனா, கொஞ்சநேரம் பேசாமல் இருக்கியா.....? தலை வலிக்குது", பெமி எரிச்சலாகச் சொன்னாள்.

"சரி, உனக்கு தலை வலிக்கின்னா விடு", அவளை விட்டுவிட்டு, தன் இடப்பக்கம் திரும்பி, அருகில் அமர்ந்திருந்தவளிடம் பேசத் துவங்கினாள்.

அர்ச்சனா, இப்பொழுது தன் மனதை மறைக்க எடுத்த அடுத்த ஆயுதம், பேச்சு....., எப்பொழுதும் பேச்சு. அந்த பேச்சில் மட்டுமே தன் மனக் குமுறலை மறைக்க, மறக்க முயன்றாள்.

அர்ச்சனா வேகமாகத் திரும்பவும், அந்த ஜன்னலின் அருகில் இருந்து யாரோ நகர்ந்து செல்வதற்கும், சரியாக இருந்தது.

‘எவண்டா அந்தத் தொடை நடுங்கி. இவ்வளவுநேரம் பாத்துட்டு, இப்போ நான் திரும்புன உடனே விலகியது....., அட... பார்ட்டி நம்மளைத்தான் ரூட் விடுதா? மவனே.... இன்னைக்கு உன்னைப் பாத்துக்கறேண்டா’, மனதுக்குள் கறுவிக்கொண்டே, ஷீபாவிடம் பேசத் துவங்கினாள்.

அவனை நன்றாகப் பார்ப்பதற்கு வசதியாக, டேபிள் மேல் கையை ஊன்றி தலையை அதில் தாங்கியவாறு அமர்ந்திருந்தாள். பெமியை விட்டு, ஷீபாவிடம் பேசத் துவங்கவே, வகுப்பில் இருந்த பாதிபேர், அர்ச்சனாவிடம் சேர்ந்து வாயாடத் துவங்கி விட்டார்கள்.

எனவே ஒரே பக்கமாக அவளால் அமர முடியவில்லை, எழுந்து நேராக அமர்ந்து, அனைவரிடமும் பேசிக் கொண்டிருந்தாள். அப்பொழுது ஜோக் பற்றி பேச்சு வரவே, ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஜோக் சொல்லத் துவங்கினார்கள்.

ஒவ்வொரு ஜோக் முடியும் பொழுதும், “ஐய..... சிரிப்பே வரலை, “து.. இது ஒரு ஜோக்கா”, “நீதான் மெச்க்கணும்”, இப்படி விமர்சனங்கள் வர, “ஓகே நான் ஒரு ஜோக் சொல்லுறேன், சிரிப்பு வரலன்னா என்னை குத்தம் சொல்லக் கூடாது ஓகேயா”, அர்ச்சனா கேட்டாள்.

“முதல்ல நீ சொல்லு, மத்ததை நாங்க பாத்துக்கறோம்.....”, அனைவரும் கோரசாகச் சொல்ல,

“சரி.....”, என்று சொல்லிவிட்டுத் தொடர்ந்தாள்.

“இந்த ஏரோப்ளேன்க்கு, ராக்கெட் மேல ரொம்ப நாளா ஒரே பொறாமை. ஏன்னா, எப்படி அதுமட்டும் இவ்வளவு வேகமா போகுது, ரெண்டுபேரும் ஆகாயத்தில்தான் பறக்குறோம், ஆனா நம்மளால மட்டும், ஏன் அதோட வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியலன்னு.

அப்படியிருக்கும்போது ஒரு நாள், ஒரு இடத்தில் ரெண்டும் மீட் பண்ணிகிட்டதுங்க. உடனே ஏரோப்ளேன், தன்னோட சந்தேகத்தை கேக்க இதுதான் சரியான சந்தர்ப்பம்னு நினைச்சுட்டு, ராக்கெட் கிட்டே கேட்டுது,

ராக்கெட், ராக்கெட், நாம ரெண்டுபேருமே ஆகாயத்தில்தான் பறக்குறோம், ஆனா நீ மட்டும் எப்படி அவ்வளவு வேகமா போறன்னு”.

ராக்கெட்டுக்கு செம கோபம், “அடிங்..... கொய்யால....., உன் டிக்கியிலையும் “தீ”யை வச்சுப்பாருடா, அப்போ தெரியும் என் கஷ்டம்னு”, அவள் சொல்லி முடிக்கவே, அந்த வகுப்பறையே சிரிப்பலையில் குலுங்கியது.

பெமி மட்டும் கோபமாக எழுந்து சென்றாள். “அச்சு.... என்னடி, பெமி கோபமா போறா.....”, ஒருத்தி கேட்க,

“அவளும் டிக்கியில் தீ வச்சு பாக்கப் போறாளோ என்னமோ”, மற்ற ஒருத்தி சொல்ல, மீண்டும் சிரிப்பலை எழுந்தது.

வெளியே சென்ற பெமி, போன வேகத்தில் திரும்பி வந்தவள், இந்த விமர்சனத்தைக் கேட்டு, அர்ச்சனாவை முறைத்துப் பார்த்தாள். அர்ச்சனா என்னவென்று கேட்கும் முன்னர், அவர்களது மேடம் வகுப்பறைக்குள் நுழைந்தார்.

“குட் ஆப்டர்நூன் டீச்சர்ஸ், ஏன் கிளாஸ்ல இவ்வளவு சத்தம், நான் வர பத்து நிமிஷம் லேட், அதுக்காக இப்படியா?. கொஞ்சமாவது பொறுப்பு வேண்டாம்”.

‘வேண்டாம்.....’, அர்ச்சனா இங்கிருந்து முணுமுணுத்தாள்.

எதேச்சையாக, மறுபடியும் பக்கத்து ஜன்னலைப் பார்க்க, அங்கே, கண்களில் காதலுடனும், இதழில் மெல்லிய புன்னகையுடனும் நின்றுகொண்டிருந்தான் பேட்ரிக்.

‘அட நீதானா....., இந்த பார்வைக்கு மட்டும் குறைச்சல் இல்லை’, அவனிடமிருந்து பிரியமாட்டேன் என்று சொன்ன கண்களை பிரித்தெடுத்து மேடத்தை பார்த்தாள்.

அவர்கள் சொன்னது எதுவுமே அவள் காதில் விழவில்லை. எண்ணம் முழுவதும் பேட்ரிக்கே நிறைந்திருந்தான். அவனது விலகலுக்கு என்ன காரணம்?, இந்த பார்வைக்கு என்ன அர்த்தம்? ஏன் சனிக்கிழமை என்னைப் பார்க்க வரவில்லை? அப்போ வராமல் இருந்துட்டு இப்போ என்ன இளிப்பு வேண்டி இருக்கு’, மனதுக்குள் சகட்டுமேனிக்கு, கேள்விகள் படையெடுத்தன.

‘என்னை விட்டு விலக நினைக்கிறான் என்றால்....., இப்பொழுது இப்படி பார்ப்பதன் அர்த்தம் என்ன?’, மூளைக்குள் வண்டாய் குடைந்தது இந்த கேள்வி மட்டுமே. அவனை ரொம்ப மிஸ் செய்வது புரிந்தது. வேண்டுமென்றே அவனைப் பார்ப்பதை தவிர்த்தாள். அங்கே அவன் நிற்பதையே மறக்க முயன்றாள்.

அவனை மறக்கவேண்டும் என்ற யோசனையிலேயே இருந்ததால், மேடம் அவளை அழைப்பதை அவள் உணரவே இல்லை. “அர்ச்சனா மேம் கூப்பிடுறாங்க பாரு”, ஷீபா சொல்லவே எழுந்து நின்றாள்.

“என்ன அர்ச்சனா அப்படி என்ன யோசனை.....?”, மீனலோசனி மேம் கேட்டார்கள்.

“சாரி மேம் சொல்லுங்க.....”.

“அதான் இவ்வளவு நேரம் சொன்னேனே, அதுக்கு உன்னோட ஐடியா என்ன?”, அவளிடமே கேட்டார்.

‘ஆஹா....., ஒழுங்கா கவனிச்சாலே பாதி மண்டையில் ஏறாது. இதில் இப்போ என்ன சொன்னாங்கன்னு தெரியலையே’, அவள் பெமியைப் பார்க்க, எனக்கென்ன என்று முகத்தை திருப்பிக் கொண்டாள்.

‘இவவேற, நேரம்காலம் தெரியாமல்’, ஷீபாவைப் பார்க்க, அவள் உதட்டை அசைத்து என்னவோ சொல்ல, இவளுக்கு சுத்தமாகப் புரியவில்லை.

‘இவ என்ன வாயிலேயே வாசிக்கிறா, ஒண்ணும் புரியலையே. இவளுங்களை நம்பினால் நான் டோட்டல் டேமேஜ் ஆகணும். நீயே முடிவேடுடி செல்லம்’, தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

“மேம் நான் க்ளாஸ்ல எல்லாரோடவும் தனியா டிஸ்கஸ் பண்ணிட்டு உங்ககிட்டே சொல்லவா? இப்போ உடனே ஒரு முடிவுக்கு வர முடியலை”.

‘என்னடி என்னமோ எல்லாம் தெரிஞ்சவ மாதிரி இப்படி பீலா விடுற, மூஞ்சியிலேயே காறி துப்பப் போறாங்க’, மனசாட்சி குரல் கொடுக்க,

‘விடு விடு, அப்படியே துப்பினாலும் தொடச்சு போட்டுட்டு போயிட்டே இருப்போமுல்ல’, அதற்கு பதில் கொடுத்தவாறு வெளியே உதட்டை இழுத்து சிரித்தவாறு நின்றுகொண்டிருந்தாள்.

மேடம் ஒரு நிமிடம் யோசித்தார்கள், பிறகு, “நீ சொல்லுவதும் சரிதான். நான் இப்போ ஸ்டாப் ரூம் போறேன். நீ டிஸ்கஸ் பண்ணிட்டு வந்து சொல்லு”, என்றுவிட்டு, இவர்களின் நன்றியை கூட வாங்காமல் வெளியேறினார்.

பெஞ்ச் மேலே ஏறி, முன்னால் சென்று நின்றாள். “ஹேய் என்னப்பா சொன்னாங்க?”.

“என்ன சொன்னாங்கன்னே தெரியாமலா இப்படி பதில் சொல்லி அனுப்பின?”, ஒருத்தி ஆச்சரியமாகக் கேட்டாள்.

“அதுக்கு எதுக்கு இவ்வளவு பெரிய ஷாக், கொஞ்சம் குறச்சுக்கோ. சரி வேற யாராவது சொல்லுங்க”, அவளிடம் கேலி பேசிவிட்டு, விஷயத்துக்கு கடந்தாள்.

அனைவரும் கூடிக் குமுறியதில் அவள் அறிந்தது இதுதான். புதிதாக சின்னச் சின்ன அறிவியல் கண்டுபிடிப்புகள், அறிவியல் விந்தைகள், புதிய முயற்சிகள், கட்டுரைகள் பற்றிய குறிப்புக்கள், நாளேடுகளிலும், செய்தித்தாள்களிலும், சில குறிப்பிட்ட புத்தகங்களிலும் வெளிவரும்.

அப்படிக் கிடைக்கும் செய்திகளை, வாரம் ஒரு பாட்ச், அது ஐந்துபேரோ, பத்து பேரோ, தனி நபரோ யாராக இருந்தாலும், வெளியே இருக்கும் நோட்டீஸ் போர்டில் போட வேண்டும். அனைவரின் பெயரும் அந்த போர்டில் வர வேண்டும், அதற்கு மதிப்பெண் உண்டு. எப்படியென்று நீங்கள் முடிவு செய்யுங்கள் என்று சொல்லிவிட்டு போய் இருக்கிறார்கள்.

“சரி, இப்போ உங்க கருத்துக்களைச் சொல்லுங்க பாப்போம்”, சுண்ணாம்புக்கட்டியை(chalk piece) எடுத்துக்கொண்டு போர்டின் அருகில் சென்றாள்.

“இதில் சொல்ல என்ன இருக்கு, அதான் தனி நபராகவும் செய்யலாம் என்று சொல்லி இருக்காங்களே”, பெமி சொல்லிவிட்டு, கெத்தாக அனைவரையும் பார்த்தாள். அதை அங்கிருந்த யாரும் ரசிக்கவில்லை என்பது, அவர்களது முக பாவத்தில் இருந்தே தெரிந்தது.

“முதல் ஐடியா, வேற யாராவது.....?”, போர்டில் எழுதிவிட்டு, அனைவரிடமும் கேட்டாள்.

“அதான் குழுவா செய்யலாம்னு சொன்னாங்களே, பேசாமல் ஐந்து ஐந்து பேரா சேர்ந்துக்கலாம்”. “கிடைக்கும்

விஷயத்தைப் பொறுத்து பேர் போட்டுக்கலாம்”, ஒவ்வொருவரும் ஒரு யோசனை சொன்னார்கள்.

அனைத்தையும் எழுதினாள். “ஹாய் ப்ரண்ட்ஸ், இப்போ நமக்கு எக்கச்சக்க ஐடியா கிடைத்து இருக்கு. முதல்ல....., தனியா யாரெல்லாம் செய்ய விரும்புறீங்க, அவங்க எல்லாம் கொஞ்சம் எழுந்துக்கோங்க”, பெமியுடன் சேர்த்து ஐந்துபேர் இருந்தார்கள்.

“ஓகே நீங்க ஐந்துபேரும் கொஞ்சம் பின்னாடி போய்க்கோங்க”, அவள் சொல்லவே அவர்கள் பின்னால் சென்றார்கள்.

“இப்போ நாம பேசலாம். முதலாவது, நமக்கு நியூஸ் பேப்பர், ஆர்டிகள் புக், கிடைக்கணும். அதை நாம, தனித் தனியா வாங்க முடியாது. எவ்வளவுதான் ஒரே ஆளே வாங்க முடியும், சோ....., மொத்தமா மாதத்துக்கு இவ்வளவு வேணும் என்று முடிவு செய்து வாங்கலாம்.

அதில், ஒருவாரம் ஒரு பேட்ச், நியூஸ் பேப்பர் கட்டிங் பார்த்தால், அடுத்தவாரம், அவங்களே ஆர்டிகள் புக் பாக்கட்டும், இப்படி ஒரு சைக்கிள்ல வாங்கலாம், ஒரு மாதத்துக்கு வரும் காசை நாம மொத்தமா ஷேர் பண்ணிக்கலாம். என்ன சொல்லுறீங்க.....?”, கேட்டுவிட்டு, அனைவரின் முகத்தையும் பார்த்தாள்.

ஒரு நிமிடம் அங்கே கனத்த அமைதி. “என்ன.... இந்த ஐடியா யாருக்கும் பிடிக்கலையா.....?”, புருவத்தைச் சுருக்கிக் கேட்டாள். அடுத்த நொடி, ஒருசிலர் பாய்ந்து வந்து அவளை கட்டிக் கொண்டனர், ஒரு சிலர் கைகளைத் தட்டி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

“அச்சு..... சூப்பர்டா....., நீயே இதை மேம்ட்ட சொல்லிட்டு வந்துடு”, அவளை விரட்டினார்கள்.

“ஹேய் இதெல்லாம் அனியாயம், நான் என்ன இப்போ க்ளாஸ்க்கும் லீடரா? வேற யாரையாவது போகச்

சொல்லுங்கடி. பெமி செய்வா", அர்ச்சனா பெமியை கை காட்டினாள்.

"என்ன.... உன் பெருமையை நான் போய் அங்கே சொல்லணுமா? அதெல்லாம் என்னால் முடியாது, முடிஞ்சா நீ செய். பெரிய இவ.....", வார்த்தையில் விளாசிவிட்டு வெளியேறினாள்.

மீதம் இருந்த நான்குபேரும், அர்ச்சனாவின் பேச்சைக் கேட்டு குழுவாக இணைய முடிவு செய்தார்கள். வகுப்பில் மொத்தம் நாற்பத்தைந்துபேர். அவர்களை, ஐந்து ஐந்தாகப் பிரித்தாள். மொத்தம் ஒன்பது குழு, அவர்கள் வகுப்பில் ஒன்பதுபேர் வீட்டில் இருந்து வருபவர்களாக இருந்தார்கள்.

அவர்களை, குழுவுக்கு ஒருவராக இருக்க வைத்து, பேப்பர், புக், அனைத்தும் வாங்கி வருவது அவர்களது வேலை. ஆர்டிகிள் தேடுவது மற்றவர். இப்படி, சரியாக பிளான் செய்துவிட்டு, மேமை தேடிச் சென்றாள்.

ஸ்டாப் ரூமில், பெரிய கும்பலே கூடி இருந்தது. 'என்னடா இது, உண்டக்கட்டி ஏதாவது குடுக்குறாங்களா என்ன? இவ்வளவு கூட்டம். நாமளும் ஜோதியில் ஐக்கியம் ஆவோம்', தனக்குத் தானே சொல்லிக்கொண்டு கும்பலில் புகுந்து சென்றாள்.

அங்கே ஒவ்வொரு டிப்பார்ட்மென்ட் மேம்களும், தங்கள் வகுப்புப் பிள்ளைகளால் சூழப் பட்டிருந்தனர். மீனா மேம் அருகிலேயே, நிர்மலா மேம், ஸ்டெல்லா இருவரும் அமர்ந்திருந்தனர்.

"வா அர்ச்சனா..... என்ன, நீ மட்டும் வந்திருக்க, வேற எல்லாரும் எங்கே?", அவள் முதுகின் பின்னல் தேடியவாறு கேட்டார்.

"அவங்க எல்லாம் எதுக்கு மேம்.....?", புரியாமல் கேட்டாள்.

“என்ன இப்படிச் சொல்லுற, பிறகு..... இங்கே எல்லோரும் அவங்க குரூப், தனி பேர் கொடுக்கத்தான் வந்து இருக்காங்க. இங்கே நீ மட்டும் தனியா வந்து நிக்கிற.....?”, மீனா குரல் உயர்த்திப் பேசவே, அங்கே சட்டென ஒரு அமைதி சூழ்ந்தது.

கொஞ்சம் அவமானமாக உணர்ந்தாள் அர்ச்சனா, ஆனாலும் வந்த விஷயத்தை முடிக்காமல், செல்ல முடியாதே. அனைவருமே அவளையே பார்த்துக் கொண்டிருந்தனர். அர்ச்சனா ஸ்டெல்லாவைப் பார்க்க, அவரோ கண்களை மூடித் திறந்தார்.

எதற்கென்று புரியாவிட்டாலும், “மேம், க்ளாஸ்ல பேசினோம், இப்போ ஒன்பது குழுவாகப் பிரிந்திருக்கிறோம், வாரம் ஒரு குழு போடுவாங்க. அதில், அவர்களது ஐந்துபேரின் பங்களிப்பும் இருக்கும். இதுதான் அந்த லிஸ்ட், அதில் பெமி மட்டும்....., தனியாகப் போடுவதாக சொல்லிவிட்டாள். வேறு ஏதாவது நான் செய்யணுமா மேம்”, தைரியமாக, தான் சொல்லவேண்டியதை சொல்லிவிட்டு, லிஸ்ட்டை அவர் கையில் கொடுத்தாள்.

அவர் கண்களில் மட்டுமல்ல, அங்கிருந்த அனைத்து ஆசிரியர் கண்களிலும் பாராட்டு. “இது நீ எடுத்த முடிவா”, மீனா கேட்க,

“நான் மட்டும் இல்லை. எல்லோரும் சேர்ந்து பேசி எடுத்த முடிவுதான். உங்களுக்கு ஓகேஇல்லை என்றால் நாங்க வேற குழு அமைக்கிறோம்”, சாதாரணமாகவே பதில் சொன்னாள்.

“குட்.....”. “தேங்க் யூ மேம்”, தலையை அசைத்துச் சொல்லிவிட்டு, அங்கிருந்து வெளியேறினாள்.

வகுப்பறைக்குச் சென்று, அனைவரிடமும் செய்தியை சொல்லிவிட்டு, “ப்ரண்ட்ஸ் இப்போ ப்ளேயிங் ஹவர், நாம

எல்லோரும் கிரௌண்ட்க்கு போகலாம்”, அவள் சொல்லவே அனைவரும் வகுப்பில் இருந்து வெளியேறினர்.

அனைவரும் வெளியேறிய பிறகு, அவள் மட்டும் தனித்திருந்தாள். தன் இடத்தில் இருந்த நோட்டை எடுக்கச் சென்றாள். பார்வை வட்டத்தில், எதிர் ஜன்னலில் பேட்ரிக் நிற்பது தெரிந்தது. அவனிடம் பேச அவள் நாவும், அவனைப் பார்க்க அவள் கண்களும் ஏங்கியது.

அவன்மேல் இருந்த கோபம் அதைவிட அதிகமாக இருந்தது. தினமும் அவனிடம் பேசும்பொழுது தோன்றாத தவிப்பும், துடிப்பும், அவனை விலகியிருந்து பார்க்கும் பொழுது அதிகமாக எழுந்தது.

அவனை நிமிர்ந்தும் பார்க்காமல், தன் பொருட்களை எடுத்துக் கொண்டு வெளியேறத் திரும்பினாள். அவள் பார்ப்பாள் என்று, ஏங்கிக்கொண்டிருந்த பேட்ரிக், அவள் தன்னைப் பார்க்காமலே செல்லத் திரும்பவும், “சனா.....”, மற்றவருக்கு கேட்கக் கூடாதே என்று மெதுவாக அழைத்தாலும், அவள் செவிகளில் அது சரியாகவே விழுந்தது.

தன் காதைத் தீண்டிய அவன் அழைப்பில் ஒரு நிமிடம் நின்றவள், அடுத்த நிமிடம் அவனைத் திரும்பியும் பார்க்காமல் வெளியேறினாள்.

உறைந்து நின்றான் பேட்ரிக்.....

பகுதி - 22

உன் தோள்சாய துடிக்கும்

என் ஏக்கத்தை என்ன செய்ய

உறவுகளின் இறுக்கத்தை

உன்னில் உணரத் துடிக்கும் நான்.....

அன்று மாலை ஆறுமணிக்கே உறங்கிவிட்டாள் அர்ச்சனா. மாலையில் விளையாட்டு நேரத்தில், விளையாடியது அதிக அலுப்பை கொடுக்கவே, வந்த சிறிது நேரத்திலேயே காப்பி மட்டும் குடித்துவிட்டு, தனக்கு இரவு உணவு வேண்டாம் என்று சொல்லிவிட்டுப் படுத்துக் கொண்டாள்.

இவ்வளவு நாட்களாக நடு இரவில் எழும்பாதவள், அன்று எழுந்துகொண்டாள். மூன்று படுக்கையை ஒன்றாகப் போட்டு, முதலில் வைஷு, அர்ச்சனா, ஜூடி, பெமி நால்வரும் படுத்து உறங்கிக் கொண்டிருந்தனர்.

அர்ச்சனாவின் இடையை கட்டிக்கொண்டு ஜூடி உறங்கிக் கொண்டிருந்தாள். அவளது செய்கையில் சிரித்தவாறே, அவள் கையை விலக்கிவிட்டு, எழுந்து வெளியே சென்றாள். இதற்குமேல் உறக்கம் வராது என்று தெரியும்.

வீட்டில் தனிமையில் இருக்கும்பொழுது கொஞ்சம் பயமாக இருக்கும். ஆனால் இங்கே சுற்றிலும் ஆட்கள் இருக்கவே பயம் இல்லை. வெளியே சென்றவள், ஹாஸ்டலின் நடுவில் இருக்கும், மாதா சொரூபத்தின் அருகில், மெல்லிய வெளிச்சத்தில் சென்று அமர்ந்துகொண்டாள்.

தனிமை, மனிதனுக்கு மிகப்பெரிய எதிரிதான். அதிலும் சுற்றிலும் ஆயிரம்பேர் இருக்க, அவர்களுக்கு நடுவில் தனிமையை உணரும் உணர்வு.....,
அனுபவிப்பவர்களுக்குத்தான் அந்த வலி புரியும்.

அர்ச்சனாவும் இதுவரை தனிமையை உணர்ந்தவள்தான். வீட்டில் இருக்கும் நான்குபேரும் நான்கு துருவங்கள். யார் பேசினாலும், இல்லை என்றாலும், இதுவரை அவள் கவலைப் பட்டதில்லை. அவர்களை விட்டு விலகி வந்தாலும் வருத்தப் பட்டதில்லை.

ஆனால், இன்று மாலையில். தன்னைத் தேடிவந்த பேட்ரிக்கை, கண்டும் காணாமல் வந்தது....., மனதைப் பிசைந்தது. வைஷு கூட சொன்னாள், "அச்சு, அவர் உன்னைத்தான் பார்க்க வந்திருக்கிறார், போய் பேசு", என்று சொன்னதற்கு,

"பொண்டாட்டி... நீ வேற, சரியான பொறுக்கிடி, பார்வையைப் பாரேன், அவனை எல்லாம் நீ பாக்காதே வா.....", அவள் காதில் சொன்னவாறு, அவளை இழுத்து வந்துவிட்டாள்.

"ஏய் பொறுக்கில்லாம் இல்லடி, உன்னைத்தான் பார்த்தார். என்னமோ பேசவந்தார், நீதான் பேசாமல் வந்துட்ட. உனக்கு அவரை நிஜம்மாவே தெரியாதா.....?", அவள் கண்களில் நம்பாத பாவனை.

"இப்போ நாம அதைப்பத்தி பேசவேண்டாம் வைஷு.....", அவள் வாயை அடைத்துவிட்டாள்.

அவள் வாயை அடைப்பதும், கேலி செய்வதும் அப்பொழுது சுலபமாக இருந்தது. ஆனால் இப்பொழுது....., எழுந்த பெருமூச்சை அடக்கிக் கொண்டாள்.

நான்காம் சனிக்கிழமை தனக்கு நிகழ்ந்த வலியை, நாய் தன் புண்ணை ஆற்ற, நாக்கை வைத்து நக்கி, அதை கிளறிவிடுவதைப்போல், அந்த வலியை நினைத்துப் பார்த்தாள்.

நான்காம் சனிக்கிழமை, அனைவரின் லோக்கல் கார்டியன் வந்து அழைத்துப் போகலாம். காலைமுதல் மாலை ஆறு மணிவரை அவர்கள், வெளியே தேவையானதை வாங்கி

வரலாம், ஊர் சுற்றலாம், வெளியூரில் இருந்து வருபவர்கள், கிரௌண்டில் அமர்ந்து பேசலாம்.

முதலில் வந்தது, வைஷாலியின் கணவன்தான். அனைவரிடமும் சொல்லிவிட்டு, அவள் காலையிலேயே வெளியே சென்றுவிட்டாள். சற்று நேரத்தில் ஜூடித்தின் அப்பா வந்தார். “வாங்க அச்சு.....”, அவளை கையைப் பிடித்து இழுத்துச் சென்றாள்.

ஜூடித்தின் அப்பா, அப்படியே அவளைப் போலவே இருந்தார். அதே சுருட்டை முடி, ஜப்பான் கண்....., அப்படியே.

“ஏய் பஞ்சுமிட்டாய், உங்க அப்பாவும் உன்னைப் போலவே இருக்காரு. இப்போதான் தெரியுது, நீ ஏன் பஞ்சுமிட்டாயோடும், பூனை கண்ணோடும் பொறந்தன்னு. சரி, உங்க அப்பா உன்னைப் பாக்குறாரா, இல்லை கண்ணை மூடிட்டு இருக்காரா?”, ஜூடித்தின் காதில் மெதுவாகக் கேட்டாள்.

“யப்பாவ்....., நீங்க என்னை பாக்கீங்களா இல்லையான்னு அர்ச்சனாவுக்கு சந்தேகமாம்”, அவர் தோளில் சலுகையாகச் சாய்ந்துகொண்டு, அச்சுவை கோர்த்துவிட்டாள்.

“ஏய் லூசே.....”, அவள் கையைப் பிடித்துக் கிள்ளிவிட்டாள்.

“நல்லா இருக்கியாம்மா.....?”, அவள் அப்பா பாசமாகக் கேட்டார் அர்ச்சனாவிடம்.

“நான் நல்லா இருக்கேன்ப்பா....., அம்மா எப்படி இருக்காங்க?”.

“எல்லோரும் நல்லா இருக்கோம்மா. மீன் குழம்பு கொண்டு வந்தேன் கொஞ்சம் சாப்பிடேன்”, வாஞ்சையாகச் சொன்னார்.

“இல்....இல்லப்பா..... இப்போதான் ப்ரேக்பாஸ்ட் சாப்பிட்டோம்”, தன்மையாக மறுத்தாள்.

“அப்பா... நீ என்னைப் பாக்க வந்தியா இல்லை இவங்களையா, அவங்க கிட்டே பேசுற, அர்ச்சனா நீங்க போங்க”, ஒற்றைப் பிள்ளையின், பொஸஸ்ஸிவ் குணம் அவள் குரலில்.

“என்னமா இப்படி பேசுற.....?”, சங்கடமாகச் சொன்னார் அவள் அப்பா.

“நீ பேசாதப்பா....., அர்ச்சனா, நீங்க போங்க”, பிடிவாதமாகச் சொன்னாள்.

“பாப்பா.....”, “அப்பா.....”, “இல்லப்பா, கொஞ்சம் வேலை இருக்கு நான் கிளம்புறேன்”, விடைபெற்றுச் சென்றுவிட்டாள்.

அவள் ஹாஸ்டலுக்குள் வரவும், பெமி வெளியே வந்தாள். “அச்சு, உன்னையும் எங்க அம்மா கூப்பிட்டாங்க வா.....”, அவள் வார்த்தையில் இருந்த அழைப்பு அவள் குரலில் இல்லை.

அடுத்த போராட்டத்துக்குத் தயாரானாள் அர்ச்சனா. “இல்ல பெமி நீ போ, நான் கொஞ்சநேரம் கழிச்சு வாறேன்”.

“அதான், உங்க வீட்டுக்குக் கூட போன் செய்யாமல், என் அம்மாகிட்டே மட்டும் போன் செஞ்சு குழையத் தெரியுது, இப்போ நேர்ல வந்தால் மட்டும் என்ன.....?”, பாசமில்லாத அழைப்பு கூட வலிதானோ....?

“சரி வா.....”, அவளை முன்னே போகவிட்டு, பின்னால் சென்றாள்.

அங்கே பெமியின் தாயுடன், கொஞ்சம் மாநிறத்தைத் தாண்டிய, அடர்நிறத்தில் ஒருவன். ஆனால், பார்க்க முகம்

லட்சணமாக நின்றிருந்தான். பெமியைப் பார்த்த அவன் பார்வையிலே, தெரிந்தது அவன் காதல்.

‘ஆள் இவ்வளவு பவரா(power) இருக்க வேண்டாம்’, அர்ச்சனா மனதுக்குள் நினைத்தாள்.

பெமி, தாயைப் பார்த்ததும் ஓடிச்சென்று கட்டிக்கொண்டு, வெள்ளைக்காரன் ஸ்டைலில் கன்னங்களில் மாறி மாறி முத்தமிட்டார்கள். இது அவர்களின் குடும்ப வழக்கம், அவர்களது சொந்தங்களை பார்க்கும்பொழுது இப்படித் தழுவி முத்தமிடுவார்கள்.

அர்ச்சனாவின் கண்கள், எந்த அளவு ஏக்கமாக பெமியின் தாயைப் பார்த்ததோ, அதே அளவு ஏக்கமாக அந்த பவரின் கண்கள் பெமியை பார்த்தது. பெமியின் அம்மா அர்ச்சனாவைக் கண்டுகொண்டார், ஆனால் பெமி, அங்கே ஒரு மனிதன் நிற்கின்றான் என்றுகூட கணக்கில் கொள்ளவில்லை.

“பெமி, ஸ்டீபன் வந்திருக்கான் நீ அவனை வான்னே சொல்லாமல் இருக்கியே. வாம்மா அர்ச்சனா எப்படி இருக்க?”, கேட்டுவிட்டு அர்ச்சனாவின் கையைப் பிடித்துக் கொண்டார்.

“அதெல்லாம் ரொம்பவே பிரமாதமாதான் இருக்கா, சரி, உங்களை யார், கண்டவங்களை எல்லாம் கூட்டி வரச் சொன்னது?”, பெமியின் பேச்சில், அருகில் இருந்த அவன் முகம் சுருங்கி விட்டது. அர்ச்சனாவின் மனமும் அடிவாங்கியது.

‘எனக்குமட்டும் ஏன் இப்படியெல்லாம் நடக்கிறது? சொந்தத்தின் பாசம் மட்டுமல்ல, பந்தங்களின் அருகாமை கூட எனக்கு நிலைக்காது போல’, இதயம் ரத்தக்கண்ணீர் வடிக்க, இதழில் உறைந்த புன்னகையுடன் நின்றாள்.

பெமியை கையைப்பிடித்து தனியாக இழுத்துக்கொண்டு சென்றார். “பெமி, என்னைக்கா இருந்தாலும், உன்னைத்

திருமணம் செய்யப்போறவன் அவன்தான். அவனை நீ இப்படி மத்தவங்க முன்னாடி இன்சல்ட் செய்வது சரியில்லை. அதைவிட, உன்னைத் தேடிவந்தவனை இப்படித்தான் அவாமானப் படுத்துவியா?”.

“அம்மா நான் ஏற்கனவே உங்ககிட்டே சொல்லி இருக்கேன், எனக்கு அவனைக் கண்டாலே பிடிக்கலை, அதைவிட, அவனும் அவன் கலரும். எங்கே தொட்டாலே ஒட்டிக்குமோன்னு.....”, அவள் பேச்சு பாதியில் தடைபட்டது.

இவள் ஏன் அமைதியாகிவிட்டாள் என்று, அவள் பார்வை சென்ற திசையில் அவர் பார்க்க, அங்கே அர்ச்சனாவும், ஸ்டீபனும் கையைக் குலுக்கியவாறு பேசிக் கொண்டிருந்தனர்.

“அங்கே பார், அது பிள்ளை. மனுஷங்களையும், அவங்க மனசையும் எடை போடத் தெரியணும். அதை விட்டு, வெளித்தோற்றத்தை மட்டும் வைத்து ஒரு முடிவுக்கு வரும் உன்னையெல்லாம்....., எதுவும் சொல்ல முடியாது”, அவர் குரலில் ஆதங்கம்.

“பெமி... ஸ்டீபன் உன்னை நல்லா பாத்துப்பான். அவனுக்கு என்ன குறைச்சல், நல்ல படிப்பு, அமெரிக்காவில் வேலை, கை நிறைய சம்பளம், அதைவிட, உனக்காகவே, உன்னை நல்லா வச்சுக்கணும்னே இவ்வளவு வருஷம் வேற எதிலேயுமே கவனத்தைச் சிதற விடாமல் மேலே வந்தவன்.

அவனோட அன்பை நாங்க ஏத்துக்கணும்னு, தன் தகுதியை வளத்துகிட்டவன். அவனைப்போய் வேண்டாம்னு சொல்லுறியே, அதுவும் இந்தத் தோலோட நிறத்தை வச்சுகிட்டு. ச்சே..., உன்னை நான்தான் பெத்தேனான்னு எனக்கே சந்தேகமா இருக்கு”.

இங்கே இவர் பேசுவது எதுவுமே அவள் காதில் விழவில்லை. அங்கே அர்ச்சனாவும், ஸ்டீபனும் சிரித்துப் பேசுவதே அவள் பார்வையில் விழுந்தது.

ஆனால் அங்கே, பெமியும், அவள் தாயும் தனியாகப் போய்விடவே, தனித்திருந்த அர்ச்சனாவும், ஸ்டீபனும் ஒரு நிமிடம் பேசாமல் இருந்தார்கள், பிறகு சட்டென ஞாபகம் வந்தவளாய், “அண்ணா நீங்க செயின்ட் ஜோசப் ஸ்கூல்ல தான் படிச்சீங்களா?”.

அவளின் அண்ணா என்ற அழைப்பில் திகைத்து, “ஆமாம்மா....., உனக்கு எப்படித் தெரியும்?”.

“எங்க அண்ணாவோட உங்களைப் பார்த்த ஞாபகம் அதான்.....”.

“உங்க அண்ணா.....?”.

“ஜான்.....”.

“ஹேய் ஜானோட தங்கையா நீ.....? அப்போ சின்னப் பொண்ணா இருந்த, இப்போ வளந்துட்ட. எப்படி இருக்கான் ஜான்.....? யார்ட்டயுமே பேச மாட்டனே”.

“நல்லா இருக்காங்க. வெட்னரி டாக்டரா இருக்காங்க. உங்களைப் பார்த்ததில் ரொம்ப சந்தோசம். உங்க பேர்.....? நீங்க பெமியை....., சாரி..... கேட்பது தப்புதான்.....”.

“என் பேர் ஸ்டீபன்....., அதான் ஆன்ட்டி சொன்னாங்களே. நாங்க பேமிலி ப்ரண்ட்ஸ். எனக்கு, சின்ன வயசில் இருந்தே பெமியைப் பிடிக்கும். அவளும், முன்னாடி நல்லாதான் பேசிட்டு இருந்தா. காலேஜ் போனதுக்குப் பிறகு, அவளுக்கு என்னைப் பிடிக்காமல் போய்டுச்சி”, கொஞ்சம் வருத்தமாகச் சொன்னான்.

“விடுங்கண்ணா, என் கிட்டே பேசிட்டே இருங்க, எல்லாம் சரியாயிடும்”, பூடகமாகச் சொன்னாள்.

“என்னம்மா சொல்லுற.....”.

“அதாவது, என்னை தங்கச்சின்னு மட்டும் சொல்லாமல் பேசுங்க, எல்லாம் இன்னைக்கே சரியாயிடும். அதுக்கு முதல் படியா, எங்கே.... எனக்கு ஜஸ்ட் ஹாய் சொல்லி கை கொடுங்க பாக்கலாம்”, அவள் கையை நீட்டவே, ஹல்லோ என்று சொல்லி அவளிடம் கை குலுக்கினான்.

“அண்ணா..... ஒரே அனலா அடிக்கி.....”, பெமியின் கோப முகத்தை, ஓரக்கண்ணால் பார்த்தவாறே சொன்னாள்.

“எங்கம்மா.....”, கேட்டவாறே, சுற்றிப் பார்க்கப் போனவனை அடக்கினாள்.

“அண்ணா.... என்கிட்டே மட்டும் பேசுங்க, சுத்தி வேடிக்கை பாக்காதீங்க”.

“தங்கச்சி, கையை விட்டுட்டுப் பேசுவோமா? ஆன்ட்டி தப்பா நினைப்பாங்க”.

‘அட மாங்கா மடையா’, “ஆன்ட்டி இல்லை,பெமி....” அவள் சொல்லவே,

“என்னம்மா சொல்லுற.....”, கொஞ்சம் கலவரமானான்.

“இன்னும் ஒரு நிமிஷம் இருங்க....., உங்க கேள்விக்கு பதில் வந்துட்டே இருக்கு”, இதழில் எழுந்த சிரிப்பை மறைத்துக் கொண்டாள்.

பெமி, தாயிடம் பேசிக் கொண்டிருந்தவள், இங்கே இவர்கள் சிரித்தவாறு, கையைப் பிடித்து பேசிக் கொண்டிருப்பதில் ஆத்திரமானவள், தாயிடம் கூட சொல்லாமல், விறு விறென்று வந்தவள், அர்ச்சனாவின் கையை, அவன் கையிலிருந்து, வலுக்கட்டாயமாகப் பிரித்தாள்.

“ஏய்... என்னடி நினைச்சுட்டு இருக்க, இந்தக் காலேஜில்தான் எல்லோரையும் மயக்குறன்னா, இப்போ, என் ஆளையே மயக்கப் பாக்குறியா? ஹி இஸ் மை மேன். உனக்கு அவ்வளவு இதுன்னா, வேற எவனையாவது போய்

பிடி”, சொன்னவாறு, அவள் கன்னத்தில் அறைய கை ஓங்கினாள்.

அவள் கையைத் தடுத்தாள் அர்ச்சனா. “ஹாய் பவர், நான் உங்களை பிறகு சந்திக்கிறேன்”, அவனைப் பார்த்து சொல்லிவிட்டு, பெமியின் தாயிடம், உதட்டசைவில் சாரி என்று உரைத்துவிட்டு சென்றுவிட்டாள்.

ஸ்டீபனுக்கு, பெமியின் ‘ஹி இஸ் மை மேன்’ என்ற வாசகத்துக்காக சந்தோஷப்படுவதா? இல்லை, அர்ச்சனாவை இப்படித் தேவையில்லாமல் பழி சொல்லிவிட்டாளே, என்று வருந்துவதா என்று தெரியாமல் நின்றுகொண்டிருந்தான். அதிலும், அவள் மறுபடியும் சந்திக்கிறேன், என்று சொன்னதில், ஏதும் விஷயம் இருக்குமோ என்று எண்ணினான்.

கலங்கிய கண்களை, யாருக்கும் தெரியாமல் மறைத்தவாறு, அறைக்குச் சென்று குமுறி அழுதாள். தனக்கென்று யாரும் இல்லாதது, பெரிய மலையாக கண்முன் விரிந்து, அவளை அமுக்கியது. இவை எல்லாம் விட, பேட்ரிக் வரவில்லை என்ற நினைப்பே, அவளை கூறு போட்டது.

“ஏண்டா வரலை....., எங்கடா போன....., நீ வேணுண்டா....., உன் தோள்ள சாஞ்சுக்கணும்டா.....”, வாய்விட்டு அழுதாள்.

எவ்வளவு நேரம் அழுதாளோ தெரியாது. “அக்கா....., உங்களைப் பாக்க விசிட்டர் வந்துருக்காங்க”, லஷ்மியின் குரலில் சட்டென்று கலைந்தாள்.

“இதோ வாறேன் லச்சு....., நீ போ.....”, குரலை முடிந்த அளவு இயல்பாகக் காட்டி, கூறினாள்.

“சரிக்கா.....”, கொஞ்சம் தயக்கமாகச் சொல்லிவிட்டுச் சென்றாள்.

பின்னர், படுக்கையில் இருந்து வேகமாக எழுந்து, அழுத தடம் தெரியாமல், முகத்தில் தண்ணீர் ஊற்றிக் கழுவிவிட்டு, தலையையும் கொஞ்சம் வாரிவிட்டு, மலர்ந்த முகத்துடன் நொடியில் கிளம்பி வெளியே வந்தாள். இதுவரை மனதை அழுத்திய துன்பம் நொடியில் மறைந்ததை உணர்ந்தாள்.

‘டேய்... எனக்கே தெரியாமல் என் மனசுக்குள்ளே புகுந்து, எனக்கு எதிராவே என் மனசை செயல்பட வைக்கிறியாடா’, செல்லம் கொஞ்சினாள்.

கண்கள், பேட்ரிக்கை ஆவலாகத் தேடின. ‘எங்கடா இருக்க?’, அவனைக் காணாத அந்த ஒரு நொடிக்கே, அவள் இதயம் வேகமாக அடித்துக் கொண்டது.

‘டேய்.... ஒளிஞ்சு இருந்து ஏமாத்துறியா.....? ஒரு மாசமா கண்ணாமூச்சியா ஆடுற.....? இப்போ கையில் சிக்கு, உன்னை என்ன செய்யிறேன் பாரு”, மனதுக்குள்ளேயே அவனை, கொஞ்சி, கெஞ்சி, செல்லமாகத் திட்டிக்கொண்டாள்.

அவளது இவ்வளவு சந்தோசமும் நொடியில் வடிந்தது, அங்கிருந்த ப்ரான்சிசைப் பார்த்து. முகம் மாறாமல் காக்க ரொம்பவே சிரமப்பட்டாள். ஆனாலும், கண்கள் பேட்ரிக்கைத் தேடி அலை பாய்வதை தடுக்க முடியவில்லை.

“எப்படிம்மா இருக்க.....?”, அவர் கேள்விக்கு, வாயைத் திறந்து பதில் சொல்லும் நிலையில் அவள் அப்பொழுது இல்லை, தலையை மெதுவாக ஆட்டினாள்.

‘பேட்ரிக் எங்கே.....?’, அவரிடம் கேட்க நுனி நாக்குவரை வந்த கேள்வியை, உதட்டைக் கடித்து அடக்கினாள்.

இன்னும் ஒரு நொடியும் இங்கே தாமதிப்பது முடியாது என்று தோன்றவே, “சாரி அங்கிள், என்னமோ கொஞ்சம்....., நான்.....”, அவர் பதிலைக் கூட எதிர்

பார்க்காமல், கண்களில் தன்னை மீறி வழியும் கண்ணீரைக் கூட உணராமல், அறைக்கு விரைந்தாள்.

தன் போக்கில் அழுது ஓய்ந்தவள், 'இவ்வளவு நாள் தனியாகத்தானேடி இருந்த, இப்போ மட்டும் என்ன?', என்ற மனசாட்சியின் கேள்வியில் கொஞ்சம் தெளிந்தாள்.

எழுந்து மதிய உணவை உண்ண, சாப்பாட்டு அறைக்குச் சென்றாள். "அக்கா அழுதீங்களா.....?", லஷ்மி அக்கறையாகக் கேட்டாள்.

"நான் எதுக்கு லச்சு அழப்போறேன். எல்லாம் இந்த ஹாஸ்ட்டல் சாப்பாட்டை நினைத்து வரும் ஆனந்த கண்ணீர்தான். இன்னைக்கு என்ன குழம்பு....., பேசாமல் கொஞ்சம் மோர், இல்ல தயிர் சாதம் மட்டும் தாறியா?", வயிற்றைக் காயப்போடவேண்டாம் என்ற முடிவில் சாப்பிட வந்தவளால், சாப்பிட முடியுமா என்பதுதான் தெரியவில்லை.

"அக்கா.... இன்னைக்கு மொத்தமே பத்துபேர்தான், அதனால் கான்வென்ட் சாப்பாடுதான் உங்களுக்கும். பிஷ் இருக்கு சாப்பிடுறீங்களா?", ஆர்வமாகக் கேட்டாள்.

"பிஷ்....., ஏய், உனக்குத் தந்ததை, அப்படியே எடுத்து வச்சுட்டியா? எனக்கு வேண்டாம் நீயே சாப்பிடு".

"ப்ளீஸ்க்கா.....", அவள் பாவமாகக் கேட்க, வேறு வழி இல்லாமல் ஒத்துக் கொண்டாள்.

அவள் அருகிலேயே இருந்து, சாப்பிட வைத்தாள் லஷ்மி. சாப்பிட்டு முடித்த பிறகு, கொஞ்சம் தெம்பாக உணர்ந்தாள். பின்னர் சென்று படுத்தவள் உறங்கிவிட்டாள். சரியாக நான்கு மணிக்கு விழித்தவள், எழுந்து கீழே சென்று, காபி குடித்துவிட்டு வெளியே வந்தாள்.

ஸ்டீபனும், பெமியின் தாயும் நின்றுகொண்டிருந்தார்கள். "சாரி ஆன்ட்டி.....", என்றவாறு அவர்கள் அருகில்

சென்றாள்.

“நீ எதுக்குமா சாரி கேக்குற.....? நான்தான் சாரி கேக்கணும். பெமி இப்போ உன்கூட சுமுகமா இல்ல போல, ஏற்கனவே அவளுக்குக் கொஞ்சம் பிடிவாதமும், பொறாமையும் உண்டு. இப்போ, அதை யாரோ விசிறி விடுறாங்க.

உன் பேச்சை எடுத்தாலே ரொம்பக் கோபப்படுறா, அதைவிட, தேவையில்லாமல் அதிகமா பேசுறாளேம்மா, நிஜம்மாவே இங்கே என்னதான் நடக்குது?”, கவலையாகக் கேட்டார்.

“அதெல்லாம் எதுவும் இல்லை ஆன்ட்டி....., நீங்க சொல்லுங்க, கல்யாணத்துக்குச் சம்மதிச்சுட்டாளா?”, ஆர்வமாகக் கேட்டாள்.

“அதென்னமோ, வீம்புக்குச் சொன்ன மாதிரி சொல்லிட்டு போறா. இவனைப் பிடிச்சு, ஆசையா சொன்ன மாதிரி இல்லை. இந்த பிள்ளையும், ஆறு வருஷமா அவ பின்னாடி, அவளோட சம்மத்தத்தைக் கேட்டு, நடையா நடக்குறார், இன்னைக்கு என்னமோ, இவன் என் ஆளுன்னு சொன்னதோட சரி.

இப்போகூடப்பாரு, சந்தோஷ் வந்தான் அவனோட வெளியே போய்ட்டா. நாங்க இங்கே உக்காந்து இருக்கோம்”, ஆற்றாமையாகச் சொன்னார்.

“விடுங்க ஆன்ட்டி, இந்த வருஷத்திலேயே உங்க பொண்ணோட கல்யாணம் எப்படி நடக்கும் பாருங்க. அண்ணா.... உங்களுக்கு எவ்வளவு நாள் லீவ்....., உங்களோட போன் நம்பர் என்ன? எல்லாம் எனக்கு வேணும்”.

“எனக்கு ஆறு மாசம் லீவ். என்னோட போன் நம்பர் இது.....”, ஏனென்று கேட்காமல் விவரங்களைக் கொடுத்தான்.

“ஆன்ட்டி……., நான் ஒண்ணு கேக்கவா? இங்கே இருக்கும் லைப்ரேரியன் உங்க தங்கச்சியா?”, தயக்கமாகக் கேட்டாள்.

“தங்கச்சிதாம்மா, ஆனால், அவங்க குடும்பமும் எங்க குடும்பமும், சொத்துத் தகராறில், பேசுவது இல்லை. இப்போ அவ கன்னியாஸ்த்திரி ஆன பிறகு, பசங்க எல்லோரும் பேசுறாங்க, பெரியவங்க யாரும் பேசுறது இல்லை. என்னம்மா… ஏதாவது பிரச்சனையா?”, படபடப்பாகக் கேட்டார்.

“நான் எப்படி சொல்லன்னு, தெரியலை ஆன்ட்டி……., பெமி நல்லா படிக்கிறா, ஆனால் தலைமையா செய்யதுக்கு, அவளுக்குத் தயக்கம் இருக்கு, பயமும் இருக்கு. ஆனால் தலைவியா இருக்க ஆசைப் படுறா.

சரி, ஆசைப்படுறாளேன்னு, ஹாஸ்ட்டல் லீடர் பொறுப்பில் உக்காரச் சொன்னா அதுக்கும்……., கிளாஸ்ல கூட……., சாரி ஆன்ட்டி, நான் அவளோட ஒத்துப் போகத்தான் விரும்புறேன், ஆனா அவ……”, முழுதாகச் சொல்லாமல், பிரச்சனை என்னவென்று கோடி காட்டினாள்.

“சரிம்மா நான் அவகிட்டே என்னன்னு கேக்குறேன்……., எதுக்கும் அவளுக்குக் கொஞ்சம் ஹெல்ப் பண்ணுமா. அதே மாதிரி வீட்டுக்கு ஒருநாள் வா”.

“கண்டிப்பா வாறேன் ஆன்ட்டி. அண்ணா….. நீங்க இப்போ ஊருக்குப் போறீங்களா, இல்லை சென்னையிலே தானா?”, யோசனையாகக் கேட்டாள்.

“இல்லம்மா….. ஊரில் எந்த வேலையும் இல்லை. என்னோட ப்ரண்ட்ஸ் இங்கே இருக்காங்க, அவனுங்களோட ரூம்ல தங்கிக்கப் போறேன். இங்கே வந்து அவளைப் பாக்க ஈஸியாக இருக்குமே”, கொஞ்சம் வெட்கப்பட்டவாறே சொன்னான்.

“அதுவும் நல்ல ஐடியா தான்”, இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே, வேகமாக வந்தாள் பெமி.

“அர்ச்சனா, உனக்கு இங்கே என்ன வேலை, ஒரு தரம் உனக்குச் சொன்னால் புரியாது. சந்தோஷ் உன்னைப் பாக்கணும்னு சொன்னான், போய் பேசு, போ”, அவளை விரட்டினாள்.

ஸ்டீபனுக்கு, முதல் பார்வையிலேயே, சந்தோஷைப் பிடிக்கவில்லை. மறுத்து பேசப்போன ஸ்டீபனை பார்வையாலே அடக்கினாள். “ஓகே, நான் வாறேன் பவர்.....”, சீண்டலாகச் சொல்லிவிட்டு, அங்கிருந்து கிளம்பினாள்.

“அர்ச்சனா.... அதென்ன எப்போ பாத்தாலும் பவர்.....”, எரிச்சலாகக் கேட்டாள்.

“அதுவா....., உன் ஆளு, சும்மா நச்சுன்னு சுண்டி இழுக்குற கலர்ல இருக்காரா அதான் பவர், ஆளு செம ஹேண்ட்சம் தான்”, ஹஸ்க்கி வாய்சில், பெமியின் காதில் ஓதிவிட்டுச் சென்றுவிட்டாள்.

பெமிக்கு, ஆத்திரத்தில் உடலெல்லாம் கொதித்தது. தன்னை அடக்கிக் கொண்டு, “என்ன அங்கேயே பார்வை வேண்டி கிடக்கு”, தேவையில்லாமல் ஸ்டீபனிடம் எரிந்து விழுந்தாள்.

அன்றைய யோசனையில் மூழ்கி இருந்தவளின் தோளில் ஒரு கரம் விழவே, திடுக்கிட்டுத் திரும்பினாள்.

பகுதி - 23

சிந்திச் சிதறும் மழைத்துளியில்

என் கண்ணீரும் கலந்து போகட்டும்

கண்களுக்கு வேர்ப்பதை மட்டும்

விந்தையாய் பார்ப்பதேன்.....

சிந்தையில் அமர்ந்திருந்த அர்ச்சனாவின் தோளில், அழுத்தமாக ஒரு கை பதியவே, திடுக்கிட்டுப் போனாள். “என்ன அர்ச்சனா பயந்துட்டீங்களா.....? சாரி, உங்களை அங்கே காணோமேன்னு தேடி வந்தேன். தூங்காமல், இந்த நேரம் இங்கே என்ன பண்ணுறீங்க?”, கேள்வியாய் நிறுத்தினாள் ஜூடி.

“ஜூடி நீயா.....? நீ இங்கே என்னைத் தேடியா வந்த? உனக்கு இருட்டுன்னா பயம்மாச்சே?”, கேள்வியாக நிறுத்தினாள்.

“அதுக்கு, இங்கே அவ்வளவு இருட்டா இல்லை. அதுவுமில்லாமல் நீங்க உக்காந்து இருந்ததை, மேலே இருந்து பாத்தேன். அதென்ன.. அங்கே இருந்து இங்கே வந்து உக்காந்து இருக்கீங்க. வாங்க ரூமுக்குப் போகலாம்”, அவளை கையைப் பிடித்து எழுப்பினாள்.

“அது ஒண்ணும் இல்லடா....., மாதா மட்டும் தனியா இங்கே இருந்தாங்களா, அவங்களுக்குத் துணைக்குக் கொஞ்சநேரம் இருக்கலாமேன்னு தான். அதான் சாத்தான் நீ வந்துட்டியே, வா நாம போகலாம், வீணா, மாதாவை நீ சோதிக்க கூடாது ஓகே”, அவள் தோளில் கை போட்டவாறே நடந்தாள்.

“நான் சாத்தானா.....? நடு ராத்திரி பேய் மாதிரி முழிச்சு உக்காந்து இருக்கீங்களே, நீங்கதான் பேய். உங்கள போய் கூப்பிட வந்தேனே என்னை.....”.

“ச்சே....ச்சே....., நான் என் செருப்பெல்லாம் தரமாட்டேன்.....”, அர்ச்சனா சொல்ல,

“உங்களுக்கு இப்படி ஒரு நினைப்பு வேற இருக்கா? பேசாம படுத்து தூங்குங்க”, பின்னர் ஞாபகம் வந்தவளாய், “வைஷுக்கா உங்களுக்கு ப்ளாஸ்க்ல பால் வாங்கி வச்சாங்க, அதைக் குடிச்சுட்டே தூங்குங்க”, கட்டிலில் ஏறி படுத்துக் கொண்டாள்.

தோழியின் கரிசனையில் கண்கள் கலங்கியது. பாலை எடுத்து குடித்துவிட்டு, ப்ளாஸ்க்கைக் கழுவி வைத்துவிட்டு, படுத்துக் கொண்டாள்.

காலையில் எழுந்து கல்லூரிக்குக் கிளம்பினார்கள். வைஷு, இன்று அர்ச்சனாவுடனே கிளம்பிவிட்டாள். இருவரும் பேசியவாறே நடந்தார்கள். தூரத்தில் வரும்பொழுதே பேட்ரிக் நிற்பதை கவனித்துவிட்டாள் அர்ச்சனா. ஆனாலும், அவனைப் பார்க்காதவள் போன்றே நடந்தாள்.

“அச்சு, நேத்து உன்னையே ஒருத்தர் பாக்குறதா சொன்னேனே, அவர் இன்னைக்கும் வந்து நிற்கிறாருடி”, அவள் காதில் சொன்னாள்.

“நிக்கட்டும், உனக்கென்ன, நீ பேசாமல் வா.....”, கோபமாகச் சொல்லி நடந்தாள்.

“ஹேய், இல்ல அச்சு, எதுக்கும் நீ என்னன்னு கேட்டுட்டு வந்துடேன்”, தயக்கமாகச் சொன்னாள்.

“உனக்கென்ன அவன்மேல் அவ்வளவு அக்கறை”, கடுப்பாகக் கேட்டாள்.

“எனக்கென்னடி அக்கறை வேண்டிகிடக்கு, உன் புருஷன்தானே, பேசினால் பேசு, இல்ல பேசாமல் போ, எனக்கென்ன வந்துது”, அவளும் நடக்கத் துவங்கினாள்.

வைஷுவின் கையைப் பிடித்து நிறுத்தினாள்.
“உனக்கெப்படி தெரியும் பொண்டாட்டி”, கண்களை அகல விரித்துக் கேட்டாள்.

“அதான், உன் எக்ஸ்ட்ரா நடவடிக்கையே எனக்குச் சொல்லுதே, இப்போ, அவரோட இடத்தில் வேற யாராவது இருந்திருந்தால், என்ன நடந்திருக்கும் தெரியுமா? அவன் ஒரு வழி ஆகியிருப்பான். இப்படி நீ, முறுக்கிக்கிட்டு விலகி வரும்போதே, தெரிஞ்சுடுச்சு சம்திங் சம்திங்ன்னு. என்ன ஊடலா, பாவம் அண்ணா, இப்படி அலைய விடுறியே”, கேலியாகச் சொன்னாள்.

“நான் அவனை அலைய விடுறனா? அவன்தான் என்னைத் தவிக்க விடுறான். அவனுக்கு வேணும்னா வந்து பேசுவான், எனக்குத் தேவை என்னும்போது, அருகில் இருக்க மாட்டான். வேண்டாம், அவன் அவனாக இருக்கட்டும், நான் நானாக இருந்துக்கறேன்”, இதை, பேட்ரிக் அருகில் வரும்பொழுது, சத்தமாகச் சொன்னவாறே, தாண்டிச் சென்றாள்.

பேட்ரிக்கின் முகம் விழுந்துவிட்டது. “சனா.....”, அவன் அழைப்பை உணர்ந்தாலும், அதைக் கண்டுகொள்ளாமல் நடந்தாள். “அச்சு, நீ செய்யிறது சரியே இல்லை. அவர் சொல்ல வருவதைக் கேட்பதில், உனக்கு அப்படி என்ன தயக்கம். தயவுசெய்து என்னன்னு மட்டும் கேட்டுட்டு வா”, தோழி, மனதுக்குள் எதையோ வைத்து மருகுவதை உணர்ந்ததாலேயே, பிடிவாதமாக அனுப்பினாள்.

அர்ச்சனாவிற்கும் அவனிடம் பேசவேண்டும், அதைவிட, அவனைக் கடித்து குதறவேண்டும் என்ற எண்ணம் எழவே, திரும்பி நடந்தாள்.

“சொல்லுங்க.....”, அவன் முகத்தைப் பார்க்காமலே சொன்னாள்.

“எப்படி இருக்க சனா.....?”, குரலில் அவ்வளவு தவிப்பு.

‘செத்துட்டே இருக்கேண்டா, உன் நினைப்பாலே’, மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்.

“என் மேல கோபமா இருக்கன்னு தெரியும்.....”,

‘கொலை வெறியில் இருக்கேண்டா’, முகத்தில் அதை வெளிப்படுத்தாமல், அவனையே பார்த்தவாறு நின்றாள்.

“இல்லடா....., உன் படிப்பு முடியிற வரைக்கும், உன்னைத் தொந்தரவு செய்யவேண்டாம்னு நினைத்தேன். அதுமட்டுமில்லை.....”.அவன் இவ்வாறு சொல்லவே, இவ்வளவு நேரம் போட்டிருந்த முகத்திரையைக் கிழித்துக்கொண்டு, அவன் சட்டையை, கொத்தாகப் பற்றினாள்.

அவள் அதிரடியில் திகைத்தான் அவன். “நான் படிக்கிறேன்னு தெரியாமல்தான், நீ என்னை விரும்புறதாகவும், என் புருஷன்னும் சொன்னியாடா? அப்படிச் சொல்லும்போது தெரியலையா, நான் படிக்கிறேன்னு....., இப்போ, எந்த போதி மரத்து அடியில் இருந்து, உனக்கு இந்த ஞானோதயம் வந்துச்சு,

நான், என்பாட்டுக்கு பேசாமல்தானேடா இருந்தேன், நீயா வந்த, சிரிச்ச, பேசுன, காதல்ன, புருசன்ன, இப்போ....., இப்போ....., என்னமோ நான் கோபமா இருப்பேன்னு சொல்லுற, படிக்கிறேன்னு கதை விடுற.....,

ஏண்டா என் மனசை இப்படிக் கலைச்ச, இப்போ ஏன் இப்படி விலகி நிக்கிற?, சரி, இப்போ என்னமோ, அது மட்டும் இல்லன்னு....., ஏதோ காரணம் சொல்ல ஸ்டார்ட் பண்ணினாயே, சொல்லுடா.... அதையும் சொல்லிடு, மொத்தமா கேட்டுட்டுப் போய்டுறேன்.

சொல்லுடா..... இப்போ சொல்லப் போறியா இல்லையா? செத்துட்டு இருக்கேண்டா....., ஒவ்வொரு நிமிஷமும், உன்னை நினைச்சு, கொஞ்சம் கொஞ்சமா செத்துட்டு இருக்கேன். இதுவரைக்கும், எனக்கு இங்க வலிச்சதே

இல்லை. ஆனா இப்போ வலிக்குதுடா, இங்கே வலிக்குது", தன் நெஞ்சைத் தொட்டு அழுத்திச் சொன்னாள். கையில் இருந்த புத்தகங்களை, கீழே போட்டுவிட்டு, அவன் சட்டைக் காலரைப் பிடித்து இழுத்தவாறு கத்தினாள். கண்களில் நிறைந்த கண்ணீர், கரையை உடைத்துக் கன்னங்களில் வழிந்தது.

பதில் சொல்ல முடியாமல், ஊமையானான் பேட்ரிக். படிப்பு முடியும்வரை, அவளைத் தொல்லை செய்யவேண்டாம் என்று, தாய் படித்து, படித்துச் சொன்னதன் காரணம், அப்பட்டமாக அவன் கண்முன்னால், அர்ச்சனாவின் உருவில் நின்றுகொண்டிருந்தது.

"அர்ச்சனா.... என்ன இது? அதுவும் கிரௌண்ட்ல..... அவர் சட்டையைப் பிடிச்சுட்டு, விடு முதல்ல, சாரிண்ணா.... நீங்க கிளம்புங்க, அவ ஏதோ கோபத்துல இருக்குறா?", அர்ச்சனாவை விலக்கித் தள்ளிவிட்டு, பேட்ரிக்கைப் போகச் சொன்னாள், வைஷூ.

ஆனால், இருவருமே விலகும் எண்ணமில்லாமல் நின்று கொண்டிருந்தனர். கண்களில் வழிந்த நீரை, புறங்கையால் வழித்துத் தள்ளினாள். "டேய்..... என் கண்பார்வையில் நீ விழுறது இதுதான் லாஸ்ட். இனிமேல் நான் உன்னைப் பாத்தேன்....., சொல்ல மாட்டேன், செய்வேன்", கீழே விழுந்த புத்தகங்களைக் கூட எடுக்காமல் சென்றுவிட்டாள்.

"சாரிண்ணா, அவ ஏதோ கோபத்தில் இப்படி பேசுறா. அவளால் உங்களை வெறுக்க முடியாது. நீங்க இப்போ போங்க, பிறகு வந்து பேசுங்க", அவனுக்கு ஆறுதல் சொல்லி அனுப்பினாள்.

அன்று முழுவதும், தன் கடமைகளை, ஏதோ இயந்திரகதியில் செய்தாள். ஸ்டெல்லா அன்று கல்லூரிக்கு வரவில்லை. 'என்னவாக இருக்கும்', யோசிக்கத் துவங்கிய மனதை, 'என்னவா இருந்தால் உனக்கென்ன, பேசாமல் இரு', என்று சொல்லி அடக்கிவிட்டாள்.

அதை அடக்கினாலும், அவனிடம் தன் கோபத்தைக் காட்டிய பிறகு கொஞ்சம் நிம்மதியாக உணர்ந்தாள். தான் கேள்வி கேட்ட பொழுது, அவன் கண்களில் தெரிந்த அதிர்ச்சி, தவிப்பு, அவளுக்குப் பிடித்திருந்தது.

அவனை மறக்க வேண்டுமென்று நினைக்க, சிந்தை முழுவதும் அவனே இருந்தான். அவனை விட்டு, அவன் நினைப்பை விட்டு, ஒரு நாள் கூட தன்னால் இருக்க முடியாது என்ற உண்மை அவளுக்குத் தெளிவாகத் தெரிந்தது. அவனைப் பார்க்க உள்ளம் துடித்தது. அவன் தோள் சாய, மனம் விரும்பியது.

வீட்டுக்குச் சென்ற பேட்ரிக், முதல் வேலையாக, ஸ்டெல்லாவிடமும், பிரான்சிசிடமும் பேசவேண்டும் என்று சொன்னான். இல்லை, கல்லூரிக்கு நேரமாகிறது என்று சொன்ன தாயை, தன் வாழ்க்கையைப் பற்றிப் பேசி முடிவெடுக்கவேண்டும் என்று சொல்லி அடக்கினான்.

அர்ச்சனாவின் தவிப்பும், கேள்வியும், கண்ணீரும், அவனை உருக்குலைத்துக் கொண்டிருந்தது. இவ்வளவுநாள், அவள் தன்னைப் பற்றி நினைக்கவில்லை, விரும்பவில்லை, காதலிக்கவில்லை என எண்ணிக் கொண்டிருக்க, தன் எண்ணம் பொய் என்பதுபோல் அவள் நடந்து கொண்டது,

அதிலும், ‘ஒவ்வொரு நிமிஷமும் உன்னை நினைச்சு, கொஞ்சம் கொஞ்சமா செத்துட்டு இருக்கேன். இதுவரைக்கும் எனக்கு இங்க வலிச்சதே இல்லை. ஆனா இப்போ வலிக்குதுடா, இங்கே வலிக்குது’ அவள் சொன்ன வார்த்தையில் தெரிந்த வலி....., அவனைக் கொன்று கூறு போட்டது.

‘இனிமேல் ஒரு நிமிடம் கூட தாமதிக்க முடியாது. ஏதாவது செய்தே ஆகவேண்டும்’, என்ற முடிவோடுதான், பெற்றவர்களை அழைத்தான். அனைவரும் ஹாலில் கூடினார்கள். “பேட்ரிக்... அவ்வளவு அவசரமா என்ன பேசணும்?”, ஸ்டெல்லா முகத்தைத்

தூக்கிவைத்துக்கொண்டு அமர்ந்திருக்கவே, பிரான்சிஸ் பேச்சைத் துவங்கினார்.

“அப்பா....., நான் ஏற்கனவே சொன்ன அந்த விஷயம்தான்.....”.

“அதான் ஏற்கனவே பேசி ஒரு முடிவுக்கு வந்தாச்சே”, ஸ்டெல்லா கோபமாகச் சொன்னார்.

“இல்லமா, முடிவுக்கு வரலை, சுயநலமான முடிவுக்கு வந்துட்டோம். இப்போ நான் அர்ச்சனாவை பாத்துட்டுதான் வாறேன்.....”.

“ஏண்டா, இவ்வளவு சொன்ன பிறகும்.....”, கோபமாகத் துவங்கிய ஸ்டெல்லாவை, இடை மறித்தான்.

“அம்மா.... ஒரு நிமிஷம் நான் சொல்லுறதைக் கேளுங்கம்மா. நீங்க அன்னைக்குச் சொல்லும்போது, எனக்குத் தெரியலை, ஆனா இப்போ....., அர்ச்சனாவை நான் உடனே கல்யாணம் பண்ணிக்கணும், அவளை என்னோடவே வச்சுக்கணும். நீங்க என்ன செய்வீங்களோ, சொல்லுவீங்களோ தெரியாது, இது நடந்தே ஆகணும்மா”, அவர் காலடியில் அமர்ந்து சொன்னான்.

“என்ன, விளையாட்டா இருந்த பிள்ளையை, கலைச்சு விட்டுட்டியா? இப்போ உனக்கு சந்தோசமா? அதான், பெரியவங்க சொல்லுவதைக் கேக்கணும்னு சொல்லுறது....., நீயா.....”.

“ஸ்டெல்லா....., அவனே மனசொடஞ்சு வந்து இருக்கான். நீவேற ஏன் அவனை இப்படிக் குத்திக் கிழிக்கிற?”, பிரான்சிஸ் சொல்லவே,

“அப்பாவும், புள்ளையும், என்னமோ செஞ்சுட்டு போங்க, அவ ரெக்கையை உடைக்கணும்னு முடிவு பண்ணியாச்சு, இனிமேல் நான் சொல்லி, என்ன எடுபடப் போகுது?”, அவனை விலக்கிவிட்டு எழுந்து செல்லப் போனார்.

“அம்மா.... இல்லமா அப்படி இல்லை, இப்போ அவளுக்கு, என்னோட சப்போர்ட் ரொம்ப முக்கியம்மா. நான், அவளுக்கு, அவளோட வளர்ச்சிக்குத் தடையா இருக்கவே மாட்டேன்”, கெஞ்சினான்.

“எனக்கு இதில் உடன்பாடு இல்லை, அதற்குமேல் உங்க இஷ்டம்”, என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார்.

“என்னப்பா இப்படிச் சொல்லுறாங்க?, நீங்களாவது புரிஞ்சுக்கோங்கப்பா”, தந்தையிடம் கேட்டான்.

“நீ இவ்வளவு சொல்லுவதிலும் ஏதாவது காரணம் இருக்கலாம். ஆனா, உன் அம்மாவோட மனசை எப்படி மாத்துறது. அதைவிட, அர்ச்சனாவுக்கு இதில் விருப்பமா என்று நீ கேட்டாயா? கல்யாணம் ஒன்றும் விளையாட்டு இல்லை. அதற்கு நிறைய வழி முறைகள் இப்போ இருக்கு.

உன் அவசரத்துக்கு எதுவும் செய்ய முடியாது, பேட்ரிக். திருமணப் பயிற்சி இருவரும் முடிக்கணும், ஆலயத்தில் மூன்று ஓலை வாசிக்கணும், அதற்குப் பிறகுதான் திருமணம். அதற்குமே, எப்படியும் ரெண்டு மாசம் ஆகும், புரியுதா?.

இப்போவே, அவளை எத்தனை வேலைதான் செய்ய வைப்பது, கொஞ்சம் பொறுமையா இரேன் பேட்ரிக். அவளோட படிப்பு முடியட்டும், அதற்குப் பிறகு.....”, மகனின் தவிப்பும், கண்ணீரும் அவருக்குப் புரியவே, கொஞ்சம் ஆதரவாகச் சொல்ல முயன்றார்.

“அப்போ நான், ரெஜிஸ்டர் மேரேஜ் செய்யிறதைத் தவிர, எனக்கு வேற வழி இல்லப்பா”, இறுதியாகச் சொன்னான்.

அதிர்ந்தார் பிரான்சிஸ், “முதல்ல அர்ச்சனா இதற்கு சம்மதிக்கிறாளான்னு கேளு, மற்றதைப் பிறகு பார்க்கலாம்”, பேட்ரிக்கின் பிடிவாதத்திற்காக இரங்கினார் அவர்.

அறையில், இவர்களது பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த ஸ்டெல்லாவின் முகத்தில், எரிச்சல் கலந்த கோபம் உற்பத்தியானது. பேட்ரிக், எப்பொழுது மாலை வரும் என்று காத்துக் கொண்டிருந்தான்.

மனமே இல்லாமல், கிளம்பி மருத்துவமனைக்குச் சென்றான். வீட்டில் இருந்தால், எப்படியும் தாயின் கோபத்தை அதிகரித்துவிடுவோம் என்று அவனுக்குப் புரிந்தது. ஆனால், மருத்துவமனையில் ஈடுபாடு இல்லாமலே செயல்பட்டான். உதவிக் கம்பவுண்டர், அனைத்தையும் பொறுப்பாகப் பார்த்துக் கொள்ளவே, அர்ச்சனாவிடம் எப்படி பேசுவது? அவளை எப்படி நெருங்குவது என்று யோசனையில் ஆழ்ந்தான். மாலையும் வந்தே விட்டது.

அர்ச்சனாவை, ஹாஸ்டலுக்குச் சென்று பார்க்க முடியாது என்பது அவனுக்கே தெரியும். வேறு என்னதான் செய்ய, யோசனையோடு காலேஜுக்கு சென்றான். வீட்டிற்குச் செல்லவே மனமில்லை அவனுக்கு. அவன்தான், கன்னியர் மடத்தில் இருக்கும் பசுக்களுக்கு வைத்தியம் செய்வதால், அவனை எப்பொழுதுமே வாட்ச்மேன் தடுப்பது இல்லை. அது அவனுக்குக் கை கொடுத்தது.

தன் பல்சரை நிறுத்திவிட்டுத் திரும்பினான். ‘அவளை எங்கே போய் பார்க்க?’, யோசனையாகத் திரும்பியவனின் கண்களில், அந்தக் கோடியில் இருந்த, கல்லூரி வராண்டாவில், அவளைப் போன்ற உருவம் உலாவுவதைக் கண்டான்.

முகத்தில் சந்தோசம் குமிழியிட, அங்கே விரைந்தான். அருகே செல்லச் செல்லவே, அங்கே அவள் தனியாக இல்லை, அவளுடன் இன்னும் இருபதுபேர் அங்கே இருப்பதைப் பார்த்தான். தயக்கமாக அருகே நெருங்கினான்.

“அச்சு, உன் ஹஸ்பண்ட் வந்துருக்கார்”, வைஷு, அர்ச்சனாவை சுரண்டிச் சொல்லவே,

“எங்கே.....?”, என்று பிரகாசமாகத் திரும்பியவள், அவன் அருகில் நின்று, தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்து, முகத்தை கோபமாக வைத்துக்கொண்டு, திரும்பிக் கொண்டாள்.

“அச்சு, பேசாமல் அவரோட போய் பேசிட்டு வா, தேவையில்லாமல் இங்கே சீன் கிரியேட் பண்ணாதே”, வைஷு எச்சரித்தாள்.

“சார் நீங்க யார் ? உங்களுக்கு என்ன வேணும்?”, விசாரணையைத் துவங்கினாள் ஒருத்தி.

அவன் எதையும் உளறும் முன்பு, “இதோ வாறேன் பேட்ரிக்”, அர்ச்சனா சொல்லவே, “அச்சு, உன்னைத் தேடித்தான் வந்து இருக்காரா, சார் யாரு?”, குறும்பாகக் கேட்டாள்.

“சார் வேற யாரும் இல்லை, நம்ம ஸ்டெல்லா மேம் பையன் தான்”, அவளும் அதே குரலில் பதில் சொல்லவே,

“என்னது, மேம் பையனா.....?”, உடனே ஜகா வாங்கினாள் அவள்.

“வா.....”, ஒற்றை வார்த்தையில், ‘நீ இப்போ வர்ற’, என்ற தோரணையில் சொல்லிவிட்டு, முன்னால் நடந்தான்.

‘இவன் என்ன என்னை அதிகாரம் பண்ணுறது?’, மனம் முரண்டினாலும் கால்கள் அவன் பின்னால் சென்றது.

“ப” வடிவில் இருந்த வராண்டாவில், எங்கே இவர்கள் நின்று பேசினாலும், அனைவரின் கண்களிலும் விழுவார்கள். ஆனால், ஒரு மூலையில் மட்டும், சிறிய ஸ்டோர் ரூம், ஓரத்தில் இருப்பதால் அதன் பாதையை சுவர் மறைத்திருக்கும். அந்த இடம் வந்ததும், சட்டென அந்த

ஸ்டோர்ரூம் பக்கம் சென்று, அர்ச்சனாவையும் தன் பக்கம் இழுத்துக் கொண்டான்.

அதிர்ச்சியில், ஒரு நிமிடம் பேசவே வரவில்லை அவளுக்கு. “என்னங்க, என்ன விளையாட்டு இது... விடுங்க, காலையிலேயே சொன்னேனே, என் கண்முன்னாடி வரக் கூடாதுன்னு”, அவன் அணைப்பில் திமிறினாள்.

அவனோ, அவள் அசையாமல் இடையில் கைகொடுத்து அணைத்து, தன்னோடு இறுக்கிக் கொண்டான். “என்ன.... இன்னைக்கு என்ன சொல்லிட்டுப் போகலாம்னு வந்தீங்க? அன்னைக்கு, காதல், கல்யாணம்னு சொன்னீங்க, இன்னைக்கு என்ன, ஹனிமூன் பத்தி சொல்ல வந்தீங்களா?”,யாராவது வந்துவிடப் போகிறார்களே என்ற பதைப்பில், முகத்தை வெளியே திருப்பி வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தவள், அவனிடம் பதில் இல்லாமல் போகவே, வேகமாகத் திரும்பிப் பார்த்தாள்.

திரும்பியவளின் கன்னத்தில், கரகரப்பாக எதுவோ உரசவே என்னவென்று விலகிப் பார்த்தவள், அது, அவனது தாடையின் ரோமம் என்பதை உணர்ந்த பிறகுதான், தான் அவனது அணைப்பில் இருப்பதையும் உணர்ந்தாள். விலகத் தோன்றாமல், நிமிர்ந்து அவன் கண்களைச் சந்திக்க, அவன் கண்களில் தெரிந்த கூர்மையில், இதயம் தடதடக்க, இமைகள் படபடக்க, வேகமாக, அவனை விட்டு விலக முயன்றாள்.

அவளால் நகரக்கூட முடியவில்லை. “என்ன விளையாட்டு இது பேட்ரிக், நீ என்னோட மனதைத் தீண்டியதையே இன்னும் என்னால் ஜீரணிக்க முடியலை, இதில் இப்படி....., ப்ளீஸ்.....”, அவள் கண்கள் லேசாகக் கலங்கியது.

அவள் பேச்சில், அவளைவிட்டு மெதுவாகக் கைகளை விலக்கிக் கொண்டான். அவன் கைகளை எடுக்கவே, விலகிச் செல்லப் போனவளை, சுவற்றின் பக்கம் நிற்க

வைத்து, அவள் நகராதவாறு, கைகளை அவள் இரண்டு பக்கமும் ஊன்றிக் கொண்டான். அவன் விரல் நுனிகூட தீண்டாவிட்டாலும், அவன் மூச்சுக்காற்று அவள் முகத்தில் பட்டுத் தெறித்தது.

பழக்கமற்ற நெருக்கத்தில் திணறினாள் அர்ச்சனா. “கொஞ்சம் விலகி நில்லுங்களேன்”, கோபமாகச் சொல்ல முயன்றாலும், தொண்டை சதி செய்ய, குரல் குழைந்தே வந்தது.

“இப்போதான் நான் உன்னைத் தொடலையே, பின்ன என்ன?”, கண்களில் சிரிப்புடன், குரலில் அதை வெளிப்படுத்தாமல் சாதாரணமாகச் சொன்னான்.

‘க்ராதகா, அரக்கா....., ஏண்டா இப்படி பண்ணுற?’, மனதுக்குள் அவனை சபித்தாள்.

“இப்போ என்னதான் வேணும் உங்களுக்கு?”, தன்னை மீட்க அவனிடம் கேட்டாள்.

“என்ன கேட்டாலும் தருவியா?”, ஒற்றை புருவம் உயர்த்திக் கேட்டான்.

‘கேட்டுத்தான் பாரேண்டா’, ஒரு மனம் சொல்ல, ‘அடச் சீ... வெக்கங்கெட்டவளே’, இன்னொரு மனம் சாடியது.

“இப்போ சொல்லுறீங்களா, இல்ல நான் கிளம்பவா?”, அவன் சீண்டலை கவனிக்காதவள் போல் கேட்டாள்.

‘அழுத்தக்காரிதான்’, மனதுக்குள் அவளை மெச்சினான்.

“இப்போவே கல்யாணம் பண்ணிக்கலாமா.....?”.

அவன் சட்டெனக் கேட்கவே விழித்தாள். “அதான் ஒரு மாசத்துக்கு முன்னாடியே ஆயிடுச்சே”, அவனைப் பார்க்காமலே சொன்னாள்.

“ஆமா ஆயிடுச்சு, ஆனா அது, மத்தவங்களுக்குச் சொன்னால் புரியாதே, சோ, நாம ரெஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கலாம், அடுத்த வாரமே. உனக்குச் சம்மதம்தானே”, அவன் முகத்தில் விளையாட்டுத் தனமில்லை என்பதைக் கண்டாள்.

“நாம ஒண்ணும் அனாதைங்க இல்லை, பேட்ரிக். எனக்கு இதில் சுத்தமா விருப்பமில்லை. இனிமேல் இதைப் பற்றி என்கிட்டே பேசாதே”, அவளும் சீரியஸாகவே சொன்னாள்.

“எனக்கும் தெரியும் சனா. நான் உன்கூட இப்படி இல்லாமல், உரிமையா பழகணும்னா, உன்னை என் கூடவே வச்சுக்கணும்னா, நாம கல்யாணம் செஞ்சே ஆகணும். இனிமேலும் உன்னைத் தனியா விட என்னால் முடியாது. உன்னை நான் கண்ணுக்குள்ள வச்சுப் பாத்துப்பேன் சனா”, அவன் தன் விருப்பங்களை அடுக்கினான்.

“உங்க கண்ணென்ன அவ்வளவு பெருசா”, கேலி செய்தாள் அவள்.

“கேலி பேசாமல், உன் மனசைத் தொட்டு சொல்லு சனா. உனக்கு, என்னோட இருக்கணும்னு தோணலையா? என்னைப் பிடிக்கலையா? என்னைக் கல்யாணம் செஞ்சுக்க இஷ்டம் இல்லையா?”, ஏக்கமாகக் கேட்டான்.

‘உன்னைப் பாத்ததுல இருந்து, உன்கூடவே இருக்கணும்னு மட்டும்தான் தோணுதுடா’, மனதுக்குள் எண்ணிக் கொண்டே,

“இது, நாம முடிவு பண்ணுற விஷயம் கிடையாது, பேட்ரிக். பெரியவங்க பேசணும்”, தயக்கமாக இழுத்தாள்.

“அப்போ, உனக்கு ஓகேயா?”, உற்சாகமாகக் கேட்டான். அவன் சந்தோஷ மனநிலையை கெடுக்க மனமில்லாமலா? இல்லை, அவள் உள்மன ஏக்கமா, தெரியவில்லை, அவள் தலை ஆமென்று ஆடியது.

“இது போதும், இந்த ஒரு வார்த்தை போதும், எல்லாம் நான் பாத்துக்கறேன். தேங்க்ஸ், தேங்க்ஸ், தேங்க்ஸ்டா..... . இப்போவே நான், நம்ம வீடுகள்ல பேசுறேன். லவ் யூ டா”, சொன்ன வேகத்தில், அவளை இன்னும் நெருங்கி, தன் இதழ்களை அவள் முகத்தில் ஒற்றி எடுத்தான்.

அவன் செயலில் திகைத்தாலும், அவனிடமிருந்து விலகாமல், தன் முகத்தை அவன் இதழ் தீண்டலுக்குக் கொடுத்தவாறு, அசையாமல் நின்றாள். அவன்மேல் கட்டுக்கடங்காத கோபம் இருந்ததுதான், ஆனால், அதைவிட அதிகமாக, அவன்மேல் அவளுக்குக் காதல் இருந்தது.

எப்போழுதுமே, அவன் அவளை நெருங்கும் நேரம், அவள் விலக முனைந்ததில்லை. அவன் நெருக்கத்தில், மனதுக்குள் தன்னைத் தொலைத்துத் திணறினாலும், அவனுக்கு அதைத் தெரியவிடாமல் மறைப்பதில் கவனமாக இருப்பாள்.

ஆனால் இப்பொழுது, அதை மறைக்கத் தோன்றாமல், அவன் இதழ்களின் வெப்பத்தை ஆழ்ந்து அனுபவித்தாள். தன் நெற்றி, புருவம், இமைகள், கன்னங்கள், மூக்கின் நுனி, என அவன் இதழ்கள் பயணப்பட்ட நேரம், அமைதியாக இருந்தவள், தன் இதழ்களை அவன் இதழ்கள் நெருங்கும் வேளையில், இருவரின் இதழ்களுக்கு இடையில் தன் கையை வைத்தாள்.

அவளிடமிருந்து வேகமாக விலகி நின்று, அவளைப் பார்க்க, இமைகளை மூடி, தலையை இடம் வலமாக அசைத்தாள். கண்களின் ஓரத்தின் வழியே கண்ணீர் வழிந்தது.

“சனா..... ஐ’ம்.....”, அவன் மேலே பேசாமல், அவன் இதழ்களை தன் கையால் மூடினாள்.

“போகலாம்.....”, சொல்லிவிட்டு, விலகி நடந்தாள். போகும் முன்பு, “பேட்ரிக்.... நான் கல்யாணத்துக்குதான் சம்மதம் சொன்னேன். ஆனால் திருட்டுக்

கல்யாணத்துக்கோ, ரெஜிஸ்டர் மேரேஜ்க்கோ இல்லை. ரெண்டு வீட்டாரின் சம்மதத்தோடு நடந்தால்....., எனக்குச் சம்மதம்", தன் நிலையை தெளிவுபடுத்திவிட்டே சென்றாள்.

இவர்களின் முடிவு சரியானதா???????????

பகுதி - 24

எனக்கென்று நீ

உனக்கென்று நான்

நமக்கென்று நாம்

நினைப்பே நெஞ்சில் தித்திப்பாய்.....

“வைஷு....., அடியேய் வைஷு....., இப்போ என்னோட வாறியா இல்லையா?”, கத்திக் கொண்டிருந்தாள் அர்ச்சனா.

“ஏய், எதுக்கு இப்போ இவ்வளவு சீன் போட்டுட்டு இருக்க, செய்யிறது எடுபிடி வேலை, இதில் என்னமோ, மொத்த காலேஜையும் தூக்கி சுமக்குற மாதிரி பில்ட்அப் வேற”, பெமி புலம்பினாள்.

“பெமி, இப்போ நீங்க எதுக்கு தேவையில்லாம பேசுறீங்க. அவங்க வைஷுவைத் தானே கூப்பிட்டாங்க, உங்களுக்கு என்ன? இருந்தாலும், நீங்க செஞ்சது கொஞ்சம் கூட சரியே கிடையாது சொல்லிட்டேன்”, ஜூடி சண்டைக்குப் போனாள்.

ஒரு நிமிடம் திடுக்கிட்டவள், “நான் அப்படி என்னடி செஞ்சேன். நீ எப்போ பாத்தாலும் என் வழியிலேயே கிராஸ் பண்ணுற, தேவையில்லாம பேசாத, புரியுதா?”, பெமியும் பாய்ந்தாள்.

“ஜூடி, எதுக்கு இப்போ அவசியமே இல்லாம, பேச்சு. முதல்ல, கிளம்பி வாற வழியைப் பாரு. பெமி, நீயும் கிளம்பு”, இருவரையும் விலக்கினாள் அர்ச்சனா.

“அர்ச்சனாக்கா, உங்களுக்குப் பெரிய மனசா இருக்கலாம், இதே வேலையை, இவ என்கிட்டே காட்டி இருந்தால்.....”, ஜூடி, தாங்க முடியாமல் பொருமினாள்.

“அதான், உனக்கு ஒரு பிரச்சனையும் இல்லையே, எல்லாம் நான் பாத்துக்கறேன்”, அர்ச்சனா, கண்களை உறுத்து அவளைப் பார்க்க,

“உங்களுக்கு, இன்னும் பட்டால்தான் புத்திவரும்”, சொல்லிவிட்டுக் கிளம்பிவிட்டாள் ஜூடி.

“பங்க்சனுக்கு நேரமாகுது, இன்னும் இங்கே என்ன அரட்டை”, கேட்டவாறு வந்தாள் வைஷு.

“எனக்கு ட்யுஷன் எடுத்துட்டு இருக்கா ஒருத்தி, வேற ஒண்ணும் இல்லை”, அர்ச்சனா சாதாரணமாகச் சொல்ல, வைஷு அவளை முறைத்தாள்.

“அப்படி அவகிட்டே ட்யுஷன் படிச்சாலாவது, உனக்கு புத்தி வருதான்னு பாக்கலாம்”, பெமியை முறைத்தவாறே வைஷுவும் சொன்னாள்.

“ரெண்டு பேரும் என்னதாண்டி நினைச்சுட்டு இருக்கீங்க, நானும் ஒரு வாரமா பாக்குறேன், எதுக்கெடுத்தாலும் அட்வைஸ் மழை, அதுவும் ஜூடி....., அவ பேசிய பேச்சில், என் காதில் ரெண்டு ஓட்டை எக்ஸ்ட்ரா விழுந்து இருக்கு”, விளையாட்டை விடவே இல்லை.

“ச்சே.....”, பெமி, மொழிந்துவிட்டு வெளியேறினாள்.

“ஏய்... ஏன் ரெண்டுபேரும் அவளை இப்படி ஹர்ட் பண்ணுறீங்க?. அவ என்ன, வேணும்னா என் ரெகார்ட்டை மிஸ் பண்ணினாள், அவளுக்கே தெரியாமல் நடந்திருக்கும், அதுக்கு ஏன், அவளை எப்போ பாத்தாலும் முறைக்கறீங்க?”, அவர்களைச் சமாதானம் செய்தாள்.

“அச்சு, நீ உன் மனசை வேண்ணா, இந்த பொய்யைச் சொல்லி கன்வின்ஸ் பண்ணு, பட், எங்களை வேண்டாம்.....”, அர்ச்சனாவின் உழைப்பு வீணானதன் கோபம் அவள் குரலில்.

“பொண்டாட்டி.... எதுக்கு இப்போ இவ்வளவு கோபம், அதான் நான், மேம்ட்ட ரெண்டு நாள் டைம் வாங்கி, அதை முடிச்சுக் கொடுத்துட்டனே”, பிரச்சனையை இலகுவாக்க முயன்றாள்.

“டைம் இருந்ததால் சரியாப் போச்சு, இதுவே டைம் இல்லாமல் இருந்திருந்தால்.....”, ஆற்றாமையாகக் கேட்டாள் வைஷு.

“பொண்டாட்டி.... ஏண்டி இப்படி வர வர அனியாயத்துக்குப் பேசுற, நீ வாயை மூடிட்டு இருக்குறதுதான் நல்லது. இவ்வளவு நேரம், நான் டைம் ஆகுதேன்னு கத்திகிட்டு இருக்கேன், நீங்க என்னன்னா ஆறிய பழங்கஞ்சியை, சூடுன்னு சொல்லி ஆத்துறீங்க. போதுண்டி செல்லங்களா, நாம பங்க்சனுக்குப் போகலாம்”, இருவரின் தாடையைப் பிடித்து, செல்லம் கொஞ்சினாள்.

இருவருமே, அவள் கையைத் தள்ளிவிட்டுவிட்டுச் சென்றார்கள். அவர்கள் கிளம்புவதையே பார்த்துக் கொண்டிருந்தாள் அர்ச்சனா. யோசனை, ஒரு வாரத்துக்கு முன்பு நடந்ததை அசை போட்டது. அவர்களது பொருளறிவியல் வகுப்பில் கொடுத்திருந்த அசைன்மென்ட்டை, அர்ச்சனா முதலிலேயே முடித்துவிட்டாள்.

அவள் நோட்டை, காப்பி செய்ய வாங்கிய பெமி, அதை அவளிடம் திரும்பத் தரவே இல்லை. சப்மிட் செய்யவேண்டிய அன்று காலையில் கேட்டபொழுது, அதை தான் மிஸ் செய்துவிட்டதாக, போலியானத் தவிப்புடன் கூறினாள் பெமி.

அவர்களது அசைன்மென்ட்க்கு மதிப்பெண்கள் வழங்கப்படும். அதை ஆன்டைம் வைக்கவில்லை என்றால், மதிப்பெண்களை குறைத்து விடுவார்கள். அவள் செய்கையை, அர்ச்சனா சுலபமாக எடுத்துக்கொண்டு,

மேமிடம் சென்று, இரண்டுநாள் டைம் வாங்கிவிட்டு, செய்து முடித்துவிட்டாள்.

ஆனால் ஜுடித்தும், வைஷுவும், பெமி வேண்டுமென்றேதான் செய்தாள் என்பதுபோல், அவளிடம் ஜாடை பேசி அவளை வதைத்துக் கொண்டிருந்தார்கள். அது உண்மையென்று நம்ப, அர்ச்சனாதான் தயாராக இல்லை.

“ஹேய் வா போகலாம்.....”, வைஷு கிளம்பி வந்து, அவளைக் கையைப் பிடித்து எழுப்பினாள்.

“வைஷு, அண்ணா பங்க்சன்க்கு வாறாங்களா?”, கேட்டவாறு அவளுடன் நடந்தாள்.

“ஆமா வாறாங்க, அப்படியே அவங்களோட வீட்டுக்குக் கிளம்புறேன். ஏன் கேட்ட?”, அவளுடன் சரியான வேகத்தில் நடந்தவாறே பதில் சொன்னாள்.

“எதுக்கும், நீ இன்னைக்கு அண்ணா கிட்டே இருந்து தள்ளியே இரு?”, கண்களில் ஒருவிதக் குறும்புடன், குரலில் கேலி இழையோட, அவள் இடுப்பில் கையை வைத்து அணைத்தவாறு, அவள் காதில் சொன்னாள்.

“ஏய் சீ....., என்ன பேச்சு இது. உன்னைப் பார்த்தால்தான் அப்படியே தேவதை மாதிரி இருக்க, எதுக்கும் நீ கொஞ்சம் ஜாக்ரதையா இரு”, வைஷு வெட்கப்பட்டவாறே சொன்னாள்.

“அட நீ வேற, அவருக்கு ஏதோ கான்பிரன்ஸ் இருக்காம், சோ, பங்சன்க்கு வர மாட்டேன்னு, அப்போவே சொல்லிட்டாங்க. அப்படியே இங்கே இருந்தால் மட்டும்....., அது சரியான வெத்து வேட்டு”, கண்ணடித்துச் சொன்னாள்.

“கருமம் புடிச்சவளே, வெக்கமே இல்லாமல் என்ன பேச்சு இது?”, வைஷு சொல்ல,

“ஏண்டி....., இந்த பேச்சே கருமம்னா....., அப்போ அண்ணா.....”, மேலே சொல்லப் போனவளை, வாயை மூடித் தடுத்தாள்.

“இப்போ நீ வாயை மூடல, கொன்னுடுவேன்”, கண்களை உருட்டி மிரட்டினாள் வைஷு.

“வைஷு....., ஐ அண்டர்ஸ்டாண்ட்....., எல்லாம் அண்ணாவே பாத்துப்பாரு அப்படித்தானே.....”, அவள் கையில் சிக்காத தூரம் சென்று நின்றவாறே சொல்லிவிட்டு, ஓடியே போனாள்.

அவளை அடிக்கத் துரத்தினாள் வைஷு. அர்ச்சனா கிரௌண்ட்க்கு ஓடி விடவே, தன் துரத்தலை கைவிட்டாள். ‘லூசு, லூசு.... எப்படிப் பேசுது பாரு’, இதழ்களில் மெல்லிய புன்னகையுடன், அவளைத் திட்டினாள் மனதுக்குள்.

அலுமினி ஹாலுக்கு விரைந்தாள். அங்கே இறுதிகட்ட வேலைகள் நடந்துகொண்டிருந்தன. “வைஷு, எங்கடி நம்ம பாப்பாவை காணோம்”, ஜுடியைத் தேடினாள்.

“அங்கே இருந்து காதில் குசு குசுன்னு பேசிட்டு, என்னை அம்போன்னு விட்டு ஓடி வந்துட்டு, இப்போ என்ன ரொம்ப அக்கறையா விசாரிப்பு”, கடுப்பானாள் அவள்.

“இது அடல்ஸ் ஒன்லி டா.....”, அர்ச்சனா சொல்ல, வைஷு அவள் தலையில் கொட்டினாள்.

“சின்ன புள்ளைட்ட பேசுற பேச்சாடி இது?”, கடிந்து கொண்டாள்.

“அக்கா நான் வளந்துட்டேன். எனக்குதான் பத்தொன்பது வயசு ஆயிடுச்சே”, அர்ச்சனா பேசும் முன்னர், ஜுடி பதில் கொடுத்தாள்.

“நீ இன்னும் வளரணும்டா செல்லம். பிறகு, நான் உனக்கு சொல்லித் தாறேன். அப்படியே, எனக்கு ஏதாவது

சந்தேகம்னா நம்ம வைஷு கிட்டே கேட்டு, சொல்லித் தாறேன் என்ன?", அவளைத் தேற்றினாள்.

"நீ அவகிட்டே பேசுற, நடுவில் ஏண்டி என்னை இழுக்குற?", வைஷு பாய்ந்தாள்.

"வைஷக்கா, நாங்க எங்கே உங்களை இழுக்க, அதான் உங்க ஆள் இருக்காரே", ஜூடி வழக்கம்போல் இடையில் புகுந்தாள்.

"ஜூடி..... அதிகமா பேசக் கூடாது சரியா", ஜூடியின் கேலி, எல்லை மீறுவதைத் தடுக்கவே, அர்ச்சனா சொன்னாள்.

"என்னையவே அடக்குங்க", வாய்க்குள்ளே முணு முணுமுணுத்தாள்.

"அச்சு, ஹாஸ்டல் டேயும் அதுவுமா, என்ன அவங்களோட வெட்டி அரட்டை?. இங்கே வந்து கொஞ்சம் பாரு", ஒருத்தி அழைக்கவே, அவளுடன் சென்றாள்.

"ஏய் ஒரு ஓரமா உக்காராமல், ஒழுங்கா போய் உங்க காஸ்டியும் போய் மாத்திட்டு, என்னோடவே இருங்க", போகும் முன்னர் தோழிகளுக்குக் கட்டளை இட்டுவிட்டே, சென்றாள்.

"எனக்கு என்னமோ பயம்மா இருக்குடி", வைஷு சொல்ல, ஜூடியோ, "கண்டிப்பா இந்த ப்ரோக்ராம் வேணுமா?", அவர்கள் பின்வாங்கப் பார்த்தார்கள்.

"எல்லாம் நான் பாத்துக்கறேன், முதல்ல போய் கிளம்புறீங்க, அவ்வளவுதான்", கண்ணை உறுத்துச் சொல்லவே, இருவரும் சென்றார்கள்.

அர்ச்சனா மேடைக்குச் செல்ல, மற்றவர்கள் டிரெஸ்ஸிங் அறைக்குச் சென்றார்கள். அங்கே பெமி, பரதநாட்டிய உடையில் தயாராகிக் கொண்டிருந்தாள். "வைஷக்கா,

இவங்க இங்கே என்ன பண்ணுறாங்க?”, ஜூடி அவள் காதைக் கடிக்க,

‘நானும் உன்னோட தானேடி இருக்கேன்’, என்பதுபோல் பார்த்தாள்.

“சரி விடுங்க, உங்க பார்வையோட அர்த்தம் எனக்குப் புரிஞ்சுடுச்சு. இவங்க கிளம்புறதை, அர்ச்சனா அக்கா கிட்டே சொல்லணுமே”, அங்கிருந்து செல்லப் போனாள்.

அவள் கையைப் பிடித்து தடுத்தாள் வைஷு. “முதல்ல நாம டிரஸ் சேஞ் பண்ணுவோம்”. ஜூடிக்கும், அப்பொழுது அதுதான் சரியென்று தோன்றியது, எனவே பேசாமல் கிளம்பினாள்.

பெமி, இவர்களை ஏளனமாகப் பார்த்தவள், அவர்கள் உணரும் முன்னர், தன் முக பாவத்தை மாற்றிக் கொண்டாள். வைஷுக்கு, அடி வயிற்றில் கலவரம் மூண்டது. ‘இன்னைக்கு, ஏதோ குழப்பம் செய்யப் போறா’, அவள் உள் மனது ஓலமிட்டது.

இன்றைய நிகழ்ச்சியில், வரவேற்பு நடனம் ஆடுவது, அர்ச்சனா என்றுதான் முடிவாகி இருப்பது அவளுக்குத் தெரியும். ஆனால், இங்கே பெமி கிளம்பிக் கொண்டிருப்பது....., யோசனை அதையே சுற்றி வந்தது.

நேரம் நெருங்க நெருங்க, டென்ஷன் ஏறியது. ஒரு வழியாக, வைஷுவின் பொறுமையை சோதித்துவிட்டு, நிகழ்ச்சி துவங்கியது. வரவேற்பு நடனம்....., அறிவிப்பு வெளியாக, மேடையேறினாள் பெமி. சிறப்பு விருந்தினர் தவிர, அனைவருக்குமே கொஞ்சம் வியப்பு.

பாடல் ஒலிக்க, நடனமாடத் துவங்கினாள் பெமி. “என்னக்கா இது.....?”, “கொஞ்சம் பேசாமல் இரேன்.....”, ஜூடியிடம் எரிந்து விழுந்தாள் வைஷு.

பெமியின் பாடல், பாதி ஒலித்து முடிந்த நிலையில், வேறு பாடல் துவங்க, அர்ச்சனா மேடையேறி ஆடத் துவங்கினாள். அர்ச்சனாவிடம், தேர்ந்த நடனக் கலைஞர்களின் நளினம் இருந்தது. பெமி, வேறு வழி இல்லாமல் மேடையில் இருந்து இறங்கினாள்.

பாடல் முடிந்து, அர்ச்சனா மேடையின் பின்னால் செல்லவும், ஸ்டெல்லா அவளைப் பார்க்கச் சென்றார். “அர்ச்சனா.... இந்த ப்ரோக்ராம்ல யார் சேஞ் செய்தது?”, காட்டமாகக் கேட்டார்.

“நான்தான் மேம்....., ஒரு ஆள் நடனமாடுவதை விட, இரண்டுபேர் ஆடுவது நன்றாகத்தானே இருக்கும்”.

“அப்போ, ப்ரோக்ராமை வழிநடத்தும் நாங்க எல்லாம் என்ன முட்டாள்களா?”, அவர் குரலில் உள்ளடக்கிய கோபம்.

“உங்களுக்கு சர்ப்ரைஸா.....”, “உனக்கு, எதில் விளையாடுவது என்பதே கிடையாதா? இன்னும் என்ன குழப்பமெல்லாம் செய்யக் காத்திருக்க?”, ‘எனக்கே தெரிந்தால் சொல்ல மாட்டேனா?’, மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்.

“இல்ல மேம், கண்டிப்பா எந்த ப்ரோக்ராமும் சொதப்பாது”, உறுதி அளித்தாள்.

“அப்போ இன்னும் குழப்பம் ஆகுமா? எல்லாம், இந்த பெமி செய்யும் வேலையா?”, ஆராய்ச்சியாக அவளைப் பார்த்துக் கேட்டார்.

“இது அவளோட வேலையாக இருந்தால், நான் ஆடியிருக்க முடியாதே”, அவரைச் சமாதானம் செய்தாள்.

“என்னமோ செய்....., சீப் கெஸ்ட் முன்னாடி, காலேஜ் மானம் போகக் கூடாது”, கண்டிப்பாகச் சொன்னார்.

அங்கே, பெமியும் குமுறிக் கொண்டிருந்தாள். அர்ச்சனாவை ஆட விடாமல், அவளுக்குத் தலை குனிவையும், அவப் பெயரையும் ஏற்படுத்த வேண்டும் என்பதால்தான், ப்ரோக்ராம் ஒத்திகை பார்க்கும்பொழுது கூட, இவள் நடனமாடவில்லை.

தன் சித்தியின் உதவியுடன், பாடலைக் கூட பதிவு செய்து வாங்கியவள், ஆப்பரேட்டரிடம் சொல்லி, அர்ச்சனா கொடுத்த காசெட் சரியில்லை என்று சொல்லி அதை வாங்கிவிட்டு, இவளது காசட்டைக் கொடுத்தாள்.

அனைத்துப் பாடல்கள் அடங்கிய காசெட்டையும் கைப்பற்றி விட்டோம், அதே வேளையில், அனைத்து நிகழ்ச்சிகளும் குழம்பும், தானும் பெர்போர்ம் செய்ததும் ஆயிற்று, என்று முடிவு செய்திருந்தாள். ஆனால், இடையிலேயே அர்ச்சனாவின் பாடல் ஒலித்ததை, நம்பவே முடியவில்லை அவளால்.

அவள் அறியாமல் விட்ட விஷயங்கள் உண்டு, ப்ரோக்ராம் குழம்பினாலே, முதலில், காசெட் எப்படி மாறியது என்ற கேள்வி வரும், அடுத்தது, ஆப்பரேட்டர் இவளைத்தான் கை காட்டுவார், அது இவளுக்கு, எவ்வளவு பெரிய அவப் பெயரை, தனக்கு ஏற்படுத்தும் என்பதைத்தான் உணராமல் போனாள்.

ஆனால் அர்ச்சனாவோ, எப்பொழுது பெமி, பாடல் பதியச் சொல்லி அவள் சித்தியிடம் கேட்டு, அவள் சித்தியும் அந்தப் பாடலை, காலேஜ் பியூனிடம் பதிவு செய்ய கேட்கும் பொழுதே, அர்ச்சனா பார்த்து, இவள் பாடல்களை, வரிசையாகப் பதியும் பொழுதே, பெமியின் பாதிப் பாடலை, தான் நடனமாடும் பாடலின் முதல் பாதியை அழித்துவிட்டு, பதிந்து வைத்துக்கொண்டாள் என்பதைத்தான்.

இன்றும், ஆப்பரேட்டரிடம் அவள் காசெட்டைக் கொடுத்த உடனேயே, அர்ச்சனா சென்று, அவருக்கே தெரியாமல் மாற்றி வைத்துவிட்டு வந்துவிட்டாள். இப்பொழுது,

பெமியின் காசெட், அர்ச்சனாவிடம் ஒரு ஆதாரமாகச் சிக்கிக் கொண்டுள்ளது என்பதைக் கூட அறியாமல், பொருமிக் கொண்டிருந்தாள்.

பெமியின் பொறாமை, நாளுக்குநாள் பெருகிக்கொண்டே சென்றது. எதற்கு எடுத்தாலும் அர்ச்சனாவின்மேல் வன்மத்தை வளர்த்தாள். அவளுக்கு, தான் வளரவேண்டும், சிறந்து விளங்க வேண்டும் என்பதைவிட, அர்ச்சனாவின் பெயர் காலேஜில் கெட்டுப்போக வேண்டும், அனைவர் முன்பும் தலை குனியவேண்டும், என்பதே பிரதானமாக இருந்தது.

முன்பு, அவளைத் தூண்டிவிட்ட சித்தி கூட, இப்பொழுது அவள் பொறாமையைத் தூண்டிவிடத் தேவையாய் இருக்கவில்லை. அர்ச்சனா செய்யும் சாதாரண செயல்களில் கூட தேவையே இல்லாமல் கோபம் கொண்டாள்.

மற்றவரிடம் சாதாரணமாகப் பேசுவதை, படம் காட்டுவதாகச் சொன்னாள், க்ளாஸில் செயல்படுத்தும் ஐடியாக்களை, இதென்ன பிரமாதம் என்று சொல்லி, கேலி செய்வாள், அவளை ஐடியா கேட்டால், அதையும் செய்ய மாட்டாள். இப்படி அனைத்திலும், தேவையே இல்லாமல் வன்மம்.

இன்றும், அடுத்த பாடல்கள் குழம்பி, நிகழ்ச்சிகள் தடைபடும் என்று காத்துக் கொண்டிருக்க அதைப்போல் எதுவும் நடக்கவில்லை. அர்ச்சனாவின் நடனங்கள், வைஷு, ஜூடியின் நாடகம், வீதி நாடகம் என அனைத்தும் அருமையாக, வெற்றிகரமாக நடைபெற்றது.

அனைவரின் பெற்றவர்களும், தங்கள் பிள்ளைகளைக் காண வந்திருந்தார்கள். திருமணம் முடிந்த பிள்ளைகள், தங்களது கணவன், பிள்ளைகளுடன் வந்திருந்தார்கள். வரும் வாரம், இரண்டாம் சனிக்கிழமை ஆகையால்,

ப்ரோக்ராம் முடிந்து, வீட்டுக்குச் செல்பவர்கள் செல்லலாம், என்று சொல்லி விட்டார்கள்.

ஜூடித், சாப்பிடாமல் கூட, அவள் அப்பாவுடன் கிளம்பிவிட்டாள். அவளது அம்மா, வீட்டை விட்டு எங்குமே செல்லமாட்டார், எனவே, எப்பொழுதும் அவளது அப்பா மட்டுமே வருவார். வைஷு, அர்ச்சனாவை அழைத்துக் கொண்டு, மைக்கேலிடம் அவளை அறிமுகப்படுத்தி வைத்தாள். எவ்வளவு நேரம்தான், கணவன் மனைவிக்கு நடுவில் இருக்க முடியும், அதிலும் மைக்கேலின் பார்வை, இவளை வில்லியைப்போல் பார்க்கத் துவங்கவே, வைஷுவிடம் சொல்லிவிட்டுக் கிளம்பிவிட்டாள்.

எதைப் பற்றியும் யோசிக்காமல், சுற்றிலும் பார்வையைச் சுழற்றியவாறு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். கல்லூரியில் அவளுடன் படிக்கும் தோழிகள் அனைவருமே, அர்ச்சனாவை, தங்கள் குடும்பத்துக்கு அறிமுகப்படுத்திவைக்க மறக்கவில்லை.

பெமியின் பார்வை, அர்ச்சனாவையே சுற்றி வர, அர்ச்சனாவோ, அனைவரிடமும் பேசிச் சிரித்தவாறே, பார்வையைச் சுழலவிட்டாள். தூரத்தில் பெமியின் தாய் வருவது தெரிந்தது. அவரைக் கண்டவுடன், தன் தாய் வருவதாகத்தான் உணர்ந்தாள்.

அதன் காரணம், பெமியின் தாய் பெமியிடம் பேசும்பொழுதெல்லாம் அர்ச்சனாவிடமும் பேசிவிடுவார். பெமியைப் பார்க்க வரும்பொழுது எல்லாம், அர்ச்சனாவிடம் பேசாமல் செல்லவே மாட்டார். பெமியின் கோபத்தை, அவளது பொறாமை உணர்வை, பொறுத்து, அவளுடன் நட்பாக இருந்து, அவளுக்கு உதவி செய்யச்சொல்லி, கேட்டுக் கொள்வார்.

இவரது முகத்துக்காகவே, அர்ச்சனாவால், பெமியிடம் கோபப்படவே முடிவதில்லை. எப்பொழுதும், பெமியை அவர்

பார்த்ததும், கட்டிப்பிடித்து முத்தமிடுவார். அந்த செய்கை, அர்ச்சனாவுக்கு மிகவும் பிடிக்கும்.

சில நேரம், அர்ச்சனாவைப் பார்த்தால், தன் தோளோடு அணைத்துக் கொள்வார். தன் தாயைவிட அதிகமாக அன்புகாட்டும் ஒரு தாய்,என்று நினைத்துக் கொண்டே , அவரிடம் வேகமாகச் சென்றாள். “அம்மா.....”, இவள் அழைத்த அதே நேரம், பெமியும் அழைத்தவாறு அவரை நெருங்கி அணைத்து முத்தமிட்டாள்.

பெமியின் தாய், அர்ச்சனாவைப் பார்த்துவிட்டு, “வாம்மா.....”, வாஞ்சையாக அழைத்து, அவளையும் அணைக்கக் கையை நீட்டினார். அவர் கைகளுக்குள் அடைக்கலமாகப்போன அந்த நிமிடம், “அம்மா, இது நம்ம குடும்ப வழக்கம், அவ ஒண்ணும் நம்ம குடும்பம் இல்லை. அதைவிட, கிட்டத்தட்ட அவ ஒரு அனாதை மாதிரி, நீங்க எதுக்கு இப்படிச் செய்யிறீங்க?”, அவர் கையைப் பிடித்துத் தடுத்து, அர்ச்சனாவைக் கேவலமாகப் பார்த்து சிரித்தாள்.

எச்சிலைக் காறி, தன் முகத்தில் உமிழ்ந்ததுபோல் உணர்ந்தாள் அர்ச்சனா. “பெமி, வர வர நீ ராட்சசி மாதிரி மாறிட்டே வாற, அவ உன்னோட ப்ரண்ட், இப்படி நாக்கில் நரம்பில்லாம பேசாதே. அச்சு, நீ வாம்மா.....”, அகிலா அவர்களின் கண்டிப்பையோ, சமாதானத்தையோ கவனிக்காமல், கலங்கிய தன் கண்களை மறைத்துவிட்டு, திரும்பி நடந்தாள் அர்ச்சனா.

கிட்டத்தட்ட, தான் அனாதைதான், அனைவரும் இருந்தாலும் அந்த நிலையில் இருப்பவள்தான். ஆனால் அதை தன் தோழி அனைவரின் முன்னால் சொல்லிக் காட்டுவதை, அவமானமாக உணர்ந்தாள். கலங்கும் கண்களை அடக்க வழியில்லாமல், ஹாலுக்குள் நுழைந்தாள்.

ஹாலின் ஓரத்தில், பப்பே முறையில் உணவு வழங்கப்பட்டுக் கொண்டு இருந்தது. அதன் ஓரத்தில் இருந்த இருக்கையில் சென்று அமரப் போனாள். அந்த

நேரம், அங்கே வந்தாள் வீணா. “அச்சு, ஏற்கனவே பிளான் பண்ணியிருந்த மாதிரி, அந்த இன்னிசை நிகழ்ச்சிக்கு எல்லாம் ரெடி பண்ணிட்டேன். யாரை முதல்ல பாடச் சொல்லுறது?”, அவள் கேட்க கேட்க, என்னமோ புதிதாகக் கேட்பதைபோல், அவளை இமைக்க மறந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

“அச்சு, என்ன... உடம்பு சரியில்லையா? தலை வலிக்குதா? ப்ரோக்ராமை வேண்ணா கான்செல் பண்ணிடவா?”, அக்கறையாகக் கேட்டாள்.

நான்கு ஹௌசில், ஒரு ஹௌசின் தலைவி, தன் போட்டி அணியில் இருப்பவள், அவளுக்கு இருக்கும், சின்ன மனிதாபிமானம் கூட, தன் தோழி என்று நினைத்தவளிடம், இல்லாமல் போனதை நினைத்து, இன்னும் வருந்தினாள்.

“அச்சு, ஆர் யூ ஓகே?”, கேட்டவாறு, அவள் தலையில் கையை வைத்து சூடு எதுவும் இருக்கிறதா என்று பார்த்தாள்.

அவளது தொடுகையில் தன்னை மீட்டாள். வீணா, தண்ணீர் பாட்டிலைக் கொண்டுவந்து கொடுக்க, வேகமாக அதை அருந்தினாள். வீணா தன் பதிலை எதிர்பார்த்துக் காத்திருப்பதை உணர்ந்தவள், “யா ஐ’ம் ஓகே, வாடா நாம போகலாம்”, அவளை அழைத்துக்கொண்டு மேடைக்குச் சென்றாள்.

“அச்சு, நிஜம்மாவே உன்கிட்டே எதுவோ மிஸ் ஆகுது”, கவலையாகச் சொன்னாள் வீணா.

“கண்டுபுடிச்சுட்டேன்....., இதுதானே.....”, இதழைக் காதுவரை இழுத்து வைத்து சிரித்தவாறு, அவள் முதுகில் கை கொடுத்து, மேடைக்குத் தள்ளிக்கொண்டு போனாள்.

“அச்சு....., யூ ஆர் ஆசம்(awesome)....., இதுதான் மிஸ் ஆச்சு”, சிரித்தவாறே, அவளது செய்கைக்கு இசைந்து சென்றாள்.

மேடையேறினாள் அர்ச்சனா....., தன் மன உளைச்சலுக்காக, பொறுப்பில் இருந்து விலக முடியாதே, மைக் முன்னால் நின்றாள். “ஹாய் ப்ரண்ட்ஸ், உங்க எல்லோரையும், அவ்வளவு சீக்கிரம் விட, நாங்க தயாரா இல்லை, உங்கள் அனைவரையும், பாடல் பாடி மகிழ வைக்க, நீங்க தொல்லைன்னு நினைச்சால், நான் எதுவும் செய்ய முடியாது. நம் கல்லூரியின் பாடல் குழு இங்கே வந்திருக்கிறோம். கேட்டு மகிழுங்கள்”, சொல்லிவிட்டு விலக, பாடல் நிகழ்ச்சி துவங்கியது.

இவர்கள் பாடும் பாடல்களின் BGM அனைத்தும், ஒரு சிடியில் பதியப்பட்டு, ஓடவிடப்பட, திறமையானவர்கள் பாடத் துவங்கினார்கள். இங்கே பாடல் பாடத் துவங்கவே, வெளியில் இருந்த அனைவருமே ஹாலில் குழுமத் துவங்கினர்.

வைஷு வேகமாக வந்து அர்ச்சனாவைத் தேட, அர்ச்சனா, மேடையில் இருந்தே அவளைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டி சிரித்தாள். ‘மவளே, நீ பாடுன கொன்னுடுவேன்’, பார்வையாலே மிரட்டினாள்.

அது புரிந்தது என்பதுபோல், கண்களைச் சிமிட்டி சிரித்தாள்.ஆனாலும், அதில் குறும்பு மருந்துக்கும் இல்லை. அர்ச்சனாவின் கவலை முகத்தை, நொடியில் உணர்ந்தாள் வைஷு, ஆனால், கணவனை விட்டுச் செல்லவும் முடியாமல், பார்வையாலே என்னவென்று கேட்க, அர்ச்சனாவும் ஒன்றுமில்லை என்பதுபோல் தலையை ஆட்டினாள்.

வைஷு, இங்கே வா என்று அழைக்க, முடியாது என்பதுபோல் தலையை இடம் வலமாக அசைத்தாள். “அடுத்தப் பாடலை பாடுபவர், நம் கல்லூரியின், மின்மினி அர்ச்சனா”, வீணா அறிவிக்க, கரகோஷம் ஹாலையே அதிர வைத்தது.

அதைவிட, இவள் என்னப் பாடலைப் பாடுவாள் என்று, அவளைப்பற்றி தெரிந்த, ஒரு கூட்டமே இமைக்க மறந்து பார்த்துக் கொண்டிருந்தது. அர்ச்சனா மைக் முன்னால் நின்றாள். BGM ஒலிக்கத் துவங்கியது.

பூ மீது யானை பூவலியை தாங்குமோ

தீ மீது வீணை போய் விழுந்தால் பாடுமோ

போ என்று சொன்னால் வரும் நினைவும் போகுமோ

போராடும் அன்பில் அட ஏன்தான் காயமோ

கண்ணீர் கவிதைகள் இந்தக் கண்கள் எழுதுதே

கவிதை வரிகளால் எந்தன் கன்னம் நிறையுதே

இலைகள் உதிர்வதால் கிளையும் சுமைகள் கூடுதே

உதிரும் இலைகளோ மறந்து காற்றில் போகுதே

பூ மீது யானை பூவலியை தாங்குமோ

தீ மீது வீணை போய் விழுந்தால் பாடுமோ

உடைத்துப் பார்க்கும் இதயம் உனது

படைத்து பார்ப்பதை அறியாதே

குளத்தில் விழுந்து தெரிக்கும் நிலவு

நிஜத்தில் உலகத்தில் உடையாதே... உடையாதே.....

உடைத்துப் பார்க்கும் இதயம் உனது

படைத்து பார்ப்பதை அறியாதே

குளத்தில் விழுந்து தெரிக்கும் நிலவு

நிஜத்தில் உலகத்தில் உடையாதே

காதல் போலவே நோயும் வெள்ளையே
யாவும் உண்மை தானே
இதை காலம் காலமாய் பலரும் சொல்லியும்
கேட்கவில்லை நானே
பூ மீது யானை பூவலியை தாங்குமோ
தீ மீது வீணை போய் விழுந்தால் பாடுமோ
விலகும்போது நெருங்கும் காதல்
அருகில் போனால் விலகிடுமோ
விலங்கு மாட்டி சிறையில் பூட்டி
விருப்பம்போல் அது வலி தருமோ...ஆ..ஆ..ஆ..ஆ...
விலகும்போது நெருங்கும் காதல்
அருகில் போனால் விலகிடுமோ
விலங்கு மாட்டி சிறையில் பூட்டி
விருப்பம்போல் அது வலி தருமோ
வேறு வேறென நினைவு போகையில்
காதல் கொள்ளுதல் பாவம்
அது சேரும் வரையிலே யாரும் துணையில்லே
ஆதி கால சாபம்.
பூ மீது யானை பூவலியை தாங்குமோ
தீ மீது வீணை போய் விழுந்தால் பாடுமோ

போ என்று சொன்னால் வரும் நினைவும் போகுமோ

போராடும் அன்பில் அட ஏந்தான் காயமோ

கண்ணீர் கவிதைகள் இந்தக் கண்கள் எழுதுதே

கவிதை வரிகளால் எந்தன் கன்னம் நிறையுதே

இலைகள் உதிர்வதால் கிளையும் சுமைகள் கூடுதே

உதிரும் இலைகளோ மறந்து காற்றில் போகுதே

பூ மீது யானை பூவலியை தாங்குமோ

தீ மீது வீணை போய் விழுந்தால் பாடுமோ

மால்குடி சுபாவின் குரலை, அச்சுப் பிசகாமல், அப்படியே குரலில் கொண்டுவந்து, பாடலைப் பாடி முடித்தாள் அர்ச்சனா. அர்ச்சனாவிடமிருந்து, ஒரு கேலியான பாடலையோ, வில்லங்கமான பாடலையோ, எதிர்பார்த்து அனைவரும் காத்திருக்க, இப்படி ஒரு பாடலை, யாருமே அங்கே எதிர்பார்க்கவில்லை.

கைதட்டக்கூட மறந்து, உறைந்துபோய் இருந்தது அரங்கம். ஆனால், பாடல், பாடி முடித்து, ஒரு நொடி கூட மேடையில் தாமதிக்காமல், வெளியேறினாள் அர்ச்சனா. எப்பொழுதுமே, அந்தப் பாடலில் ஒளிந்திருக்கும் வலி, அவளை உலுக்கும்.

இன்று, அவள் இருந்த மனநிலையில், பாடிய பாடலின் வரிகளும், அதன் கனமும், தன்னை அழுத்துவதை உணர்ந்தாள். பின்கட்டின் வழியாக, படிகளில் இறங்கி இருட்டில் மறைய முயன்றாள். அதற்கு முன்பே, கடைசி படிகளில் அவளை வழிமறித்த அந்த உருவம், அவளை இருட்டுக்குள், அவள் கையைப் பிடித்து இழுத்துச் சென்றது.

இதுவே வேறு நேரமாக இருந்திருந்தால், அவனை ஒரு வழி செய்திருப்பாள். ஆனால் மனதை உருக்கும் வலியில்

எதுவுமே சிந்திக்க மறுத்தது மூளை. சென்ற வேகத்தில், அவளைத் தன் நெஞ்சோடு இறுக கட்டிக் கொண்டான் பேட்ரிக்.

தேகம் குலுங்காமல் கண்ணீர் உகுக்கமுடியும், என்பதை நிரூபித்துக் கொண்டிருந்தாள் அர்ச்சனா. அவன் முதுகில் கை கொடுத்து, இன்னும், இன்னும் அவன் நெஞ்சில் புதைந்தாள். தன் நெஞ்சில் ஈரத்தை உணர்ந்த பிறகுதான், அவள் அழுவதை உணர்ந்தான். “சனா, இப்போ எதுக்கு இப்படி ஒரு பாட்டு? என்ன நடந்துது சொல்லு?”, அவள் அழுகையின் காரணம் புரியாமல், அவள் அழுவதைத் தாங்கவும் முடியாமல், தழுதழுத்தது அவன் குரல்.

“ஏண்டா இவ்வளவு லேட்டா வந்த? ஏன், வர மாட்டேன்னு என்கிட்டே பொய் சொன்ன? என்னை ஏண்டா தனியா விட்ட? நீ இருக்கும்போது, என்னை ஏண்டா அனாதைன்னு சொல்ல விட்ட?”, ஒவ்வொரு கேள்விக்கும் அவன் முதுகில் குத்தினாள்.

“உன்னை யார் அனாதைன்னு சொன்னது? நீ ஒண்ணும் யாரும் இல்லாதவ கிடையாது”, கோபமாகச் சொன்னான்.

“எல்லோரும் இருக்காங்க, யாரும் எனக்குன்னு கிடையாது. இப்போ நீ கூடத்தான்”, அவனை உதறிச் செல்ல முயன்றாள்.

“நான் என்னடா.....? இப்போவே வா, நாம கல்யாணம் செஞ்சுக்கலாம்”, அவளை இன்னும் இறுக அணைத்துக் கொண்டான்.

“ஒண்ணும் வேண்டாம்....., எனக்கு யாரும் வேண்டாம்... போடா.....”, கண்ணீரை மறைக்க முயன்று தோற்றாள்.

அவனது சமாதானங்கள் எதுவும், அவளிடம் எடுபடவில்லை. எதுவும் செய்யமுடியாத தன் நிலையை, அவனே வெறுத்தான். அவளை எப்படிச் சமாதானம்

செய்யவென்றும் தெரியவில்லை. “சாரி சனா.....”, சொன்னவாறு, அவள் இதழ்களை கவ்விக் கொண்டான்.

“எதுக்.....”, அவள் கேள்வி பாதியிலேயே கரைந்தது. முதலில் திகைத்து, விழிகளை அகல விரித்தவள், பின்னர் விழி மூடி, அவன் இதழ் தீண்டலில் கரைந்தாள். கால்கள் பலமிழக்கவே அவன் கழுத்தை கட்டிக் கொண்டாள்.

உலைக்களமான உள்ளத்தைக் குளிர்விக்க, அவன் இதழமுதம் மிகவும் தேவையாக இருந்தது. இதயத்தில் இருந்த வலி, இப்பொழுது காணாமல் போயிருந்தது. அந்த இடத்தில், தித்திப்பாய் ஒரு உணர்வு, அவனைவிட்டு விலகக்கூடத் தோன்றாமல், அவன் முதுகில் கையை இறுக்கி, அவனோடு இன்னும் புதைய முயன்றாள்.

தன் நெஞ்சில் உணரும், அவள் இதயத் துடிப்பு சீராகும்வரை, அவள் இதழைவிட்டுப் பிரியவில்லை அவன். தங்களை மறந்து, தன் கவலையை மறந்து, தனி உலகில் சஞ்சரித்தனர்.

அவர்களது மோன நிலையை, கலைக்கவென்றே ஒலித்தது ஸ்டெல்லாவின் குரல். “பேட்ரிக்.....”, ஸ்டெல்லாவின் குரலில் பதறி விலகினர் இருவரும்.

பகுதி - 25

இதயத்துக்கு நெருக்கமான நீ

என் வாழ்க்கையிலும் நெருக்கமாய்....

உலகத்தையே வென்ற உணர்வு

இறுகக் கட்டிக்கொள் என்னை

அணுவணுவாக ரசிக்க விரும்புகிறேன்

வாழ்க்கையை..... உன்னுடன்.....

ஸ்டெல்லாவின் குரலில் பதறி விலகினர் இருவரும்.

"டேய்..... போச்சு..... ரெண்டுபேரும் சிக்குனோம், ஏற்கனவே அவங்க, என்னைப் பார்க்கும் பார்வையிலேயே எரிப்பாங்க, இதில், உன்கூட தனியா இருக்குறதைப் பார்த்தால் அவ்வளவுதான். போச்சு போச்சு.....", கையை உதறிக்கொண்டு குதித்தாள்.

"இப்போ எதுக்கு தேவையில்லாமல் எமோஷனல் ஆகுற?", திடமாகக் கேட்டான்.

"தேவையில்லாமலா.....? நீ தெரிஞ்சுதான் பேசுறியா...? கூப்பிடுறது உன் அம்மா", கொஞ்சம் தவிப்பாகச் சொன்னாள்.

"உனக்கு... பயமா.....? என்னால் நம்பவே முடியலை", சிரிப்பாகச் சொன்னான்.

"உனக்குக் கிண்டலா இருக்காடா? இந்த உலகத்துலேயே, நான் கொஞ்சம் பயப்படுற ஆளுன்னா, உன் அம்மாதான். பார்வையிலேயே, என்னை பத்த வச்சுடுவாங்க", நக்கலாகச் சொன்னாள்.

"அவங்க என்னைத்தானே கூப்பிட்டாங்க, பிறகு என்ன.....?", எதையோ சொல்ல வேண்டுமே என்று

சொன்னான்.

“லூசாடா நீ.....? உன்கூடத்தான் நான் இருக்கேன்னு அவங்களுக்குத் தெரிஞ்சிருக்கும். இதில், புத்திசாலித்தனமா பேசுறதா, நினைப்பு வேற”, அவள் கூற்று சரிதான் என்பதுபோல், ஸ்டெல்லா அர்ச்சனாவையும் அழைத்தார்.

அவள் இடையில் இருந்த தன் கையை, மனமே இல்லாமல் விலக்கினான். மீண்டும் அவளை ஒருமுறை இறுக அணைத்த பின்பே விடுவித்தான்.

இருவரும் வெளியே வரும்பொழுது, ஸ்டெல்லா யாருடனோ போனில் பேசிக் கொண்டிருந்தார். இருவரையும் ஒரு பார்வை பார்த்தார். “நான் சொன்னதை வாங்கிட்டு, சீக்கிரம் அவங்களையும் கூட்டிட்டு வாங்க”, போனில் சொல்லிவிட்டு அழைப்பைத் துண்டித்தார்.

“அச்சு, நீ ஸ்டேஜ்க்குப் போ, பேட்ரிக், நீ ஹால்ல போய் உக்காரு”, எதுவும் நடக்காத மாதிரி நடந்துகொண்டார். அர்ச்சனா, தான் காண்பது கனவா? நிஜமா? என்ற சந்தேகத்துடன், அவரைத் திரும்பிப் பார்த்தவாறே சென்றாள்.

பாடல் நிகழ்ச்சி இன்னும் முடிந்திருக்கவில்லை. அர்ச்சனா மேடைக்குச் சென்றாள். அங்கே வைஷு, ஒரு ஓரத்தில் நின்றவாறு இவளுக்காகக் காத்துக் கொண்டிருந்தாள். “என்னாச்சு அச்சு, யார் என்ன சொன்னா?”, கவலையாகக் கேட்டாள்.

“என்ன... சிம்பதி கிரியேட் பண்ணுறியா? இப்படி செஞ்சாதான் யாராவது திரும்பிப் பாப்பாங்கன்ற நினைப்பா? நல்ல ட்ரிக்தான்”, பெமி மீண்டும் குத்தினாள்.

“பெமி.... போதும். இதுக்குமேல் ஒரு வார்த்தை பேசினால், நான் நானா இருக்க மாட்டேன். இதுவரை, என்னோட தோழி என்ற நினைப்பில்தான், நீ சொன்னதை எல்லாம் கேட்டுட்டு,

பேசாமல் இருந்தேன். ஆனா இப்போதான் தெரியுது, உனக்குள்ளே ஒரு பொறாமை பிடிச்ச மிருகம் மட்டும்தான் மிச்சம் இருக்குன்னு.

நீ செய்தது எல்லாம் எனக்குத் தெரியும், அதற்கான ஆதாரமும் என்கிட்டே இருக்கு. ஆனா, என்னைத் தோற்கடிக்க, இவ்வளவு கேவலமா என் மனதைக் காயப்படுத்துவன்னு, நான் நினைக்கவே இல்லை.

அதுவும், சொன்னியே நான் அனாதைன்னு....., மறக்கவே மாட்டேன். நண்பர்கள், தங்களோட அந்தரங்க விஷயங்களை பகிர்ந்துக்குறது, நட்பின்மேல் இருக்கும் நம்பிக்கையால்தான். அந்த நம்பிக்கையையே நீ உடைச்சுட்ட.

இவ்வளவு நாள் என் வாழ்க்கையில் அனாதையாக உணர்ந்திருக்கலாம். ஆனா, எல்லா சொந்தங்களின் மொத்த உருவமா, எனக்கு என் கணவன் கிடைத்திருக்கிறான். என்னை, எனக்காகவே விரும்பும் ஜீவன். அவன் எனக்கு எல்லாமாக இருப்பான்.

ஆனா உனக்கெல்லாம், அது சொன்னால் புரியாது. உண்மையான காதல், உண்மையான நட்பு, உண்மையான நேசம் எதையுமே புரிஞ்சுக்கத் தெரியாத, சுயநல மிருகம் நீ. இனிமேல் என்னைக் காயப்படுத்த நினைக்காதே....., பிறகு, இந்த அர்ச்சனாவோட கோபத்தை நீ சந்திக்கவேண்டி வரும்.

கடைசியா ஒண்ணே ஒண்ணு, என் மனசை நீ புரிஞ்சுக்கலன்னாலும் பரவாயில்லை, எனக்கு மனசுன்னு ஒண்ணு இருக்குன்னு மட்டுமாவது புரிஞ்சுக்கோ", கையை நீட்டி எச்சரித்துவிட்டு, வைஷுவை இழுத்துக்கொண்டு சென்றாள்.

வைஷு கொஞ்ச தூரம் சென்றதும், அர்ச்சனாவின் கையைப் பிடித்து நிறுத்தினாள். "அச்சு, அவ உன்னை அனாதைன்னு சொன்னாளா? இது எப்போ.....? அதோட

உண்மையான அர்த்தம் தெரியுமா அவளுக்கு.....? அதான் நீ அப்செட்டா இருந்தியா.....? இதை அவ சொன்னப்போ, கேட்டுட்டுப் பேசாமலா இருந்த நீ...? அவளுக்கு எப்படி, இப்படி சொல்ல மனசு வந்துச்சு. இரு நான் அவளை என்னன்னு கேக்குறேன்", அங்கலாய்த்தாள் வைஷு.

"வேண்டாம் வைஷு, விடு. உண்மையான நட்பை, அடையாளம் காணமுடியாமல் போனது, என்னோட தப்பு. இதில், அவளைக் குற்றம்சொல்லி என்ன செய்ய? நேர்மையான எதிரியைக் கூட நம்பலாம், ஆனா, நட்புக்குள்ளே ஒளிந்திருக்கும் இந்தமாதிரி துரோகிகள்தான் ரொம்ப ஆபத்து.

அப்படி ஒரு அம்மாவுக்கு, இப்படி ஒரு பொண்ணு....., ஹம்....., இருந்தாலும், ஹாஸ்டல் லைப், இவ்வளவு கஷ்டமா இருக்கும்னு, நான் நினைக்கவே இல்லடா. இவ்வளவு நல்ல நட்புகளுக்கு நடுவில்....., சரி விடு, இனிமேல் நம்ம வழிக்கு வரமாட்டா", வைஷுவை அழைத்துக்கொண்டு சென்றுவிட்டாள்.

ப்ரோக்ராம் இன்னும் ஒருமணிநேரம் நீடித்தது. ஹாலுக்குள் நுழைந்த அர்ச்சனாவை, தோழிகள் அனைவரும் சூழ்ந்து கொண்டார்கள். "என்ன ஆச்சு.....?", அங்கிருந்த அனைவருமே இந்தக் கேள்வியைத்தான் விதம் விதமாக, மாற்றி மாற்றிக் கேட்டார்கள்.

"அட, உங்களுக்கெல்லாம் ஒரு ஸ்வீட் சர்ப்ரைஸ் கொடுக்க நினைத்தால் இப்படியா.....? இந்த அச்சு, எப்பவுமே வித்தியாசமாதானே செய்வா", ஒரு துள்ளலுடன் சொல்லவே, அனைவரும் அவளை, ஒரு செல்ல முறைப்புடனும், செல்ல அடியுடனும், மிரட்டிவிட்டும், சென்றார்கள்.

"வைஷு.... நீ அண்ணாகிட்டே போ, நான் பேட்ரிக் கிட்டே போறேன். இல்லன்னா, நீ ஒரு நிமிஷம் வா.....",

அவளை இழுத்துக்கொண்டு பேட்ரிக்கின் அருகில் சென்றாள்.

“பேட்ரிக், இவதான் என்னோட க்ளோஸ் ப்ரண்ட் வைஷு....., அது மட்டுமில்லை.....”, அந்த நேரம், அர்ச்சனாவை மேடைக்கு அழைக்கவே, “எக்ஸ்கியூஸ் மீ.....”, சொல்லிவிட்டு விரைந்தாள்.

பேட்ரிக் வைஷுவிடம் ஒரு ஹலோவுடன் பேசும் வேளை, மைகேல் அருகில் வந்தான். “என்ன.... உங்க ஆளு, லவ்வ அக்செப்ட் பண்ணிட்டாங்க போல”, நெடுநாள் பழகியவனைப்போல் பேசினான்.

“என்ன சொல்லுறீங்க.....”, வைஷு மைகேலிடம் கேட்டாள்.

“அதெல்லாம் எங்களுக்குள்ளே.....”, சொல்லிச் சிரிக்க, வைஷு முகத்தை தூக்கி வைத்துக் கொண்டாள்.

“நான் உங்ககிட்டே ஒண்ணு கேக்கவா.....?”, தயக்கமாக இழுத்தான் பேட்ரிக்.

‘கேளுங்க’, என்பதுபோல் பார்த்தாள்.

“சனா ஏன் ரொம்ப அப்செட் ஆயிட்டா.....? யாரோ என்னமோ சொல்லியிருக்காங்கன்னு தெரியுது. யாரு, என்னன்னு உங்களுக்குத் தெரியுமா..?”.

“நீங்க அச்சுட்டையே கேளுங்களேன், அவ சொல்லுவா”, என்னதான் இருந்தாலும், நட்பை விட்டுக் கொடுக்க முடியாதே.

“எல்லோரும் ஒரே மாதிரிதான் இருக்கீங்க”, இவர்கள் பேசும்பொழுதே, இறுதிப் பாடல் என்ற அறிவிப்புடன், குழுப் பாடல் இடம் பெற்றது. அது முடிந்தவுடன், அர்ச்சனா இவர்களின் அருகில் வந்தாள்.

நேரம் பதினொன்றைக் கடந்துகொண்டிருந்தது. “சரி நாங்க கிளம்புறோம், ரொம்ப நேரமாச்சு”, மைக்கேல் சொல்ல, “இன்னும் ஒரு பத்து நிமிஷம் வெயிட் பண்ணுங்களேன்”, பேட்ரிக் வேகமாகச் சொன்னான்.

“பேட்ரிக்.... ஏற்கனவே ரொம்ப லேட் ஆயிடுச்சு, அவங்க கிளம்பட்டும்”, அர்ச்சனா சொன்னாள்.

“உன்னோட பேரன்ட்ஸ, உன் ப்ரண்டுக்கு அறிமுகப்படுத்தி வைக்கலையா?”, சொன்னவாறு வாயிலைப் பார்க்க, அவன் பார்வையைத் தொடர்ந்தாள் அர்ச்சனா.

அங்கே, அர்ச்சனாவின் அம்மா, அப்பா, அண்ணன், பேட்ரிக்கின் அம்மா, அப்பா அனைவரும் வந்தார்கள். ‘இவங்க எங்கே இங்கே...?’, கேள்வியாக, பேட்ரிக்கைப் பார்க்க, அவள் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு செல்ல, அவளோ வைஷுவின் கையைப் பிடித்து இழுத்துச் சென்றாள்.

“ஏய் நீ மட்டும் போடி.....”, வைஷு சொன்னதை அவள் கண்டுகொள்ளவே இல்லை.

“ஹாய் மேரி..... நீ எங்கே இங்க வந்த? உனக்கு யார் பங்க்சன் பத்தி சொன்னாங்க? ஓ.....,
ஸ்டெல்லாமேம்மா.....? அதுசரி குடும்பத்தோட வந்து இருக்கீங்களே என்ன விஷயம்?”, பெற்றோரைப் பார்த்ததின் நெகிழ்வு, கொஞ்சம் கூட இல்லாமல் கேட்டாள்.

“எப்படிம்மா இருக்க.....? உன்னைப் பார்த்து நாலு மாசம் ஆயிடுச்சு”, மேரி, அர்ச்சனாவின் தலையை, பாசமாக வருடியவாறு கேட்டார். அவர் கண்களில் கண்ணீர்.

தாயை, புதிதாகப் பார்ப்பதுபோல் பார்த்தாள். என்ன பதில் சொல்லுவது என்று தெரியாமல் விழித்தாள். பேட்ரிக்கும் வைஷுவும், அவள் கையைப் பிடித்து அழுத்தவே, “நான் நல்லா இருக்கேம்மா....., நீங்க....?”, தாயை, தான் விசாரிக்காததின் குற்ற உணர்ச்சி, அவள் குரலில்.

“அச்சு... எப்படி இருக்க.....?”, அவள் அண்ணன் ஜான் குரல் கொடுக்க, “டேய் தடியா.... நீ எப்படிடா இவங்களோட.....?”, ஆச்சரியம் அவள் குரலில், தாயைத் தாண்டி, தமையனின் தோளில் சாய்ந்தாள்.

அவளைத் தோளோடு மென்மையாக அணைத்தான். “ஏய் குந்தாணி, என்னை தடியான்னு சொல்லாதன்னு எத்தனை முறை சொல்லியாச்சு”, கடுப்படித்தான் அவன்.

“அடப் போடா, நீ மட்டும், என்னைக் குந்தாணின்னு சொல்லுற.....?”, சிலுத்துக் கொண்டாள்.

“நீ தானே முதல்ல என்னை தடியான்னு சொன்ன?”, அவனும் மல்லுக்கு நின்றான்.

“நான் சின்னப் பிள்ளைதானே, கொஞ்சம் விட்டுக் கொடுக்க கூடாதா?”, நொடித்தாள்.

“நீ.... சின்னப் பிள்ளையா.....?”.

“ஜான்..... போதும் விளையாட்டு.....”, மேரி மகனைக் கடிந்தார். நாக்கைத் துறுத்தி, தமையனுக்கு அழகு காட்டினாள்.

“மேரி, இப்போதான் நீ என் கட்சி”, தாயைக் கட்டிக் கொண்டாள்.

அனைவருமே, அர்ச்சனாவின் செய்கையைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். “வாங்கப்பா, எப்படி இருக்கீங்க.....?”, ஒப்புக்கு, தந்தையிடம் கேட்டாள்.

“அங்கிள் நலமா.....?”, அவரிடம் ஒரு சல்யூட்டுடன் கேட்டுவிட்டு, “மாமா....., வாங்க”, மாமாவையும் வரவேற்றாள்.

தலையை அசைத்தவாறு, பேசாமல் இருந்தார் கிறிஸ்டோபர். பிரான்சிஸ், அவள் தலையில் கையை

வைத்து, செல்லமாக ஆட்டினார். “சரி, எல்லோரும் சீக்கிரம் வாங்க”, ஸ்டெல்லா அவசரப் படுத்தினார்.

“யாரும் இன்னும் சாப்பிடலையா...? சரி வாங்க, சாப்பிடப் போகலாம்”, அர்ச்சனா சொல்ல, “அர்ச்சனா... பீ சீரியஸ்”, ஸ்டெல்லா சொல்லிவிட்டு முன்னால் நடந்தார்.

‘இப்போ சீரியஸ் ஆகுற அளவுக்கு என்ன நடந்துது?’, யோசனையோடு அவர் பின்னால் சென்றாள்.

அடுத்து நடந்தவை அனைத்தும், கனவு போல் இருந்தது அர்ச்சனாவிற்கு. மேடையேறிய ஸ்டெல்லா, அனைவரையும் ஹாலில் குழுமச் சொன்னார். கல்லூரி முதல்வர், பாதர், கன்னியர்கள், ஆசிரியர்கள் அனைவரும் மேடையேறினர். பாதர் ஜெபம் சொல்ல, இங்கே ஜான் பேட்ரிக் மற்றும் அர்ச்சனா கிறிஸ்டோபர், இருவருக்கும், திருமண நிச்சயம் நடைபெறுவதாகச் சொல்லி,

இரண்டு மோதிரங்களை ஆசீர்வதித்து, இருவரையும், மோதிரங்களை மாற்றிக்கொள்ளச் சொன்னார். அதிர்ச்சியிலிருந்து விலகாமலே, மோதிரத்தைப் பார்த்துவிட்டு, தன் குடும்பத்தவர்களையும், பேட்ரிக்கையும், சுற்றி இருந்தவர்களையும், ஒரு பார்வை பார்த்தாள்.

அனைவரின் பார்வையிலும், சந்தோசம் கரை புரண்டது. பேட்ரிக், அவள் கையில் முதலில் மோதிரத்தை அணிவிக்க, அர்ச்சனாவும் அவனைப் பின்பற்றி, அவன் கையில் மோதிரத்தை அணிவித்தாள். அனைவரும் கைதட்டி, தங்கள் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர்.

காலேஜ் புகைப்படக்காரரே, புகைப்படங்கள் எடுத்தார். அனைவருடனும் புகைப்படங்கள் எடுத்துக் கொண்டனர். வைஷு, மைகேலுடன், தனியாக புகைப்படம் எடுத்தனர்.

பெமியின் தாய் கூட வந்து, அர்ச்சனாவை அணைத்து முத்தமிட்டு, தன் வாழ்த்தைத் தெரிவித்தார். பெமியும் வேண்டா வெறுப்பாக வந்து நிற்க, அவளுடன்,

எங்கிருந்தோ அந்த நேரம் முளைத்த ஸ்டீபனும் இணைந்துகொண்டான். ஆனால் யாரும் அறியும் முன்பே, அவளிடமிருந்து விலகிச் சென்றுவிட்டான்.

அர்ச்சனாவின் கண்களில் கண்ணீர் மறைக்க, ஸ்டெல்லாவைப் பார்த்தாள். அவரும் புரிந்ததற்கு அடையாளமாக, கண்களை மூடித் திறந்தார். தோழிகளின் கூட்டம் அர்ச்சனாவை சூழ்ந்துகொள்ள, அவர்களுடன் சென்றாள். வைஷு அர்ச்சனாவை கட்டிக்கொண்டு தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினாள்.

பேட்ரிக்கின் பார்வை, அர்ச்சனாவையே தொடர்ந்தது. அவள் தன்னைப் பார்ப்பாள், என்று அவன் காத்திருக்க, இவனைப்பற்றிய எண்ணம் சிறிதும் இல்லாமல், தோழிகளுடன் அரட்டையில் இருந்தாள்.

“மச்சான்.... இப்போதைக்கு, அவங்க உங்களைப் பாக்க மாட்டாங்க, எதுக்கும், ஒரு ஒருமணிநேரம் கழித்து ட்ரை பண்ணுங்க”, ஜான், பேட்ரிக்கிடம் சொல்ல, அதை ஆமோதித்தான் மைகேல்.

“ஜான்.....”, கூட்டத்தில் தன் பெயர் கேட்கவே, இரண்டுபேரும் திரும்பிப் பார்த்தார்கள். ஸ்டீபன் ஜானை நெருங்கி, “ஜான்....., ஹப்பா எத்தனை வருஷமாச்சு உன்னைப் பார்த்து”, கை குலுக்கினர் இருவரும்.

“ஹல்லோ கங்க்ராட்ஸ், நான் ஜாண்னோட ப்ரண்ட் அண்ட் அர்ச்சனாவோட அண்ணன்”, தன்னை, பேட்ரிக்கிடம் அறிமுகப்படுத்திக் கொண்டான் ஸ்டீபன்.

ஜான் அவ்வளவாக யாரிடமும் பேசமாட்டான். எனவே, கும்பலில் அவன் அமைதியாக இருக்க, பேட்ரிக், ஸ்டீபன், மைகேல் அனைவரும் பேசுவதை, வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

கும்பலில் இருந்து, யாருக்கும் தெரியாமல் நழுவி, ஸ்டெல்லாவிடம் வந்தாள் அர்ச்சனா. பெற்றோர்கள்

அனைவரும் தனியாக அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். “ஆன்ட்டி.....”, அவரை அழைத்தாள்.

“என்ன அர்ச்சனா சொல்லு.....?”, அவர் கேட்கவே சட்டென அவரை அணைத்துக் கொண்டாள். “லவ் யூ ஆன்ட்டி.....”, சொல்லிவிட்டு கண் கலங்கினாள்.அங்கிருந்த யாருமே, இதை எதிர்பார்க்கவில்லை.

“நீ போய் பிரண்ட்ஸ்சோட சாப்பிடு.....”, எதுவும் சொல்லாமல் அவளை அனுப்பி வைத்தார்.

அர்ச்சனாவின் செய்கை பிடிக்காமல், கிறிஸ்டோபர் கோபமாக மேரியைப் பார்க்க, மேரியும் அவரை, ‘நான் என்ன செய்யட்டும்’, என்பதுபோல் பார்த்தார்.

“ஸ்டெல்லா, அவ கொஞ்சம் விளையாட்டுப் பிள்ளை....., அதான்.....”, “சம்பந்திம்மா, இனிமேல் அவ எங்க வீட்டுப் பொண்ணு. அதனால் நீங்க எதைப்பற்றியும் கவலைப் படவேண்டாம். அவ எங்களோட பொண்ணுன்னு நினச்சுக்கோங்க, அவளோட செய்கை உங்களுக்குத் தப்பா தெரியாது”, பிரான்சிஸ் பதில் கொடுத்தார்.

“நாமளும் சாப்பிட்டுவிட்டுக் கிளம்புவோம்.....”, சொல்லிவிட்டு எழுந்தார் கிறிஸ்டோபர்.

அனைவரும் சாப்பிட்டுவிட்டு, கிளம்பினார்கள். நேரம் ஒன்றைத் தாண்டி சென்றுகொண்டிருந்தது. நேரமாகிவிட்டதால், வைஷு ஹாஸ்டலில் தங்கப் போய்விட்டாள். மைகேல், காலையில் வந்து அவளை அழைத்துச் செல்வதாகச் சொல்லிவிட்டான்.

இப்பொழுது, இரண்டு குடும்பங்கள் மட்டும் தனித்திருக்க, “வாங்க, வீட்டுக்கு போய் ரெஸ்ட் எடுக்கலாம்”, பிரான்சிஸ் அழைத்தார்.

“இல்ல அங்கிள், நாங்க ஹோட்டல்ல ரூம் போட்டிருக்கோம், நாங்க ரூமுக்குக் கிளம்புறோம். காலையில் வந்து மீதியை

பேசிக்கலாம்”, ஜான் தான் சொன்னான்.

“எங்க வீட்டில் தங்கவில்லை என்றாலும் பரவாயில்லை, ஆனால் ஹோட்டல்ல தங்க வேண்டாம். எங்களோட ஒரு பிளாட் சும்மாதான் இருக்கு, அங்கே தங்கிக்கோங்க. காலையில் பேசிக்கலாம்”, அவர் வற்புறுத்தவே, வேறு வழியில்லாமல் அங்கே செல்லக் கிளம்பினார்கள்.

“நான் ஹாஸ்டலுக்கே போறேன்”, திடுமென ஒலித்தது அர்ச்சனாவின் குரல்.

பகுதி - 26

என் மனதின் சஞ்சலங்களை

இறக்கிவைக்கத் தெரியவில்லை

புரிந்துகொள்வாயா என்னை

ஏக்கமாய் என் நினைவு.....

ஒரு நிமிடம், யாரும் எதுவும் பேசவில்லை. அதைவிட, அனைவருமே அதிர்ச்சியில் இருந்தார்கள் என்பதுதான் சரியாக இருக்கும். முக்கியமாக, பேட்ரிக்கின் வீட்டினர் இன்னும் அதிகமாக அதிர்ந்து இருந்தார்கள்.

“அர்ச்சனா என்ன இது.....?”, மெல்லிதாகக் கண்டித்தான் பேட்ரிக்.

“டேய் பாதி புருசா....., இப்போ என்னை உன் வீட்டுக்குக் கூட்டிப் போக முடியும்னா மட்டும் பேசு, இல்லையா வாயைத் தொறக்காதே”, அவள் குரலில் இருந்த உறுதி, அவன் வாயைக் கட்டிப் போட்டது. இவர்கள் தங்களுக்குள் மெல்லிதாகப் பேசியதால், அங்கிருந்த யாருக்கும் எதுவும் கேட்கவில்லை.

“அர்ச்சனா.... அது டபிள் பெட் ரூம் பிளாட் தாம்மா. நீங்க எல்லோரும் தாராளமா தங்கலாம்”, பிரான்சிஸ் சொன்னார்.

“அர்ச்சனா... இன்னைக்கு மட்டும் எங்களோட தங்கிக்கோயேன்...”, மேரி கெஞ்சினார்.

“அம்மா கிளம்புங்க.....”, சொல்லிவிட்டு, யாரின் பதிலையும் எதிர்பார்க்காமல், ஹாஸ்டலை நோக்கி நடந்தாள்.

ஒரு சங்கடமான அமைதி அங்கே. “புது இடமென்று தயங்குறாளோ என்னமோ?, காலையில், பேட்ரிக்கை அனுப்பி அவளை வீட்டுக்கு அழைச்சுக்கலாம்”, ஸ்டெல்லா, நிலைமையை சீராக்க முயன்றார்.

மேரி, கிறிஸ்டோபர், ஜான் அனைவருக்கும் தெரியும், அவள் வராததன் காரணம். அவர்கள் வீட்டில் நால்வரும் நான்கு துருவங்கள். நால்வரும், தனித்தனி அறைகளில்தான் தூங்குவார்கள். இன்று இருப்பது இரண்டே அறை, அதில் எப்படிப் படுக்கவென்று, ஏற்கனவே பட்டிமன்றம் நடக்கும், இதில் தான் வேறு எதற்கு என்றுதான், அவள் கழன்று கொண்டாள்.

“சனா..... பத்தே நிமிஷத்தில் நான் வாறேன்.....”, அவள் காதில் சொல்லிவிட்டு, அவர்களை வீட்டில் விட, காருக்கு விரைந்தான். “வேண்டாம்.....”, அவள் வார்த்தை காற்றில் கரைந்தது.

கிரௌண்டில், அந்த நேரம் கூட ஒரு கும்பல் பேசி அரட்டை அடித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்து கையசைத்துவிட்டு, மரத்தடியில் சென்று அமர்ந்துகொண்டாள். தேவையில்லாத பயங்கள், தன் நெஞ்சை அழுத்துவதை உணர்ந்தாள்.

இந்தக் கல்யாணம் சரிவருமா..? தன்னால், அவர்கள் அனைவருடனும் ஒத்துப் போக முடியுமா..? நல்ல மனைவியாக, தன்னால் நடந்துகொள்ள முடியுமா..? சிறந்த அம்மாவாகத் திகழ முடியுமா...? கேள்விகள் அனைத்தும் பூதாகரமாக கண்முன் விரிந்தது. தலையில் கை வைத்தவாறு அமர்ந்துகொண்டாள்.

“சனா.....”, பேட்ரிக்கின் குரலில், சட்டென நிமிர்ந்து பார்த்தவள், அவனைத் தாவி அணைத்துக் கொண்டாள்.

“பேட்ரிக்..... உனக்கு நான் வேண்டாம். நீ வேற யாரையாவது கல்யாணம் செஞ்சுக்கோ. என்னைக்

கட்டிகிட்டா, பின்னாடி நீ ரொம்ப வருத்தப்படுவ", அவள் பேச்சும் செய்கையும் வேறாக இருந்தது.

"என்ன..... இந்த பத்து நிமிஷத்தில் இவ்வளவு யோசிச்சியா நீ..?", அவளை கேலி செய்தான். அவளை அமரவைத்து, தானும் அருகில் அமர்ந்து கொண்டான்.

"விளையாடாதே பேட்ரிக், நான் நிஜம்மாதான் சொல்லுறேன். கல்யாணம் என்று சொன்னாலே, என்னமோ என் அப்பாவும், அம்மாவும்தான் கண்முன்னாடி வந்து மிரட்டுறாங்க. கொஞ்சம் கூட காதலே இல்லாமல், இருபத்தேழு வருஷம் சேர்ந்து வாழ முடியுமா? முடியும்னு நிரூபிச்சுட்டு இருக்காங்க. அவங்க பொண்ணு நான், எனக்குமட்டும் எங்கே இருந்து வரும் அந்த அன்னியோன்னியம்", புரியாத தவிப்பு.

"இங்கே பார், என் கண்ணைப் பார்த்து சொல்லு, இப்போ நீ என்னை லவ் பண்ணுற தானே?", அவன் பார்வை அவளைத் துளைத்தது.

"உண்மையைச் சொல்லணும்னா.....? எனக்குத் தெரியலை பேட்ரிக். உன் கூட இருந்தால் ஒரு பாதுக்காப்பு உணர்வு, என்னமோ, நீ எல்லாம் பாத்துப்பன்னு ஒரு தைரியம், எனக்காக நீ எல்லாமா இருப்பன்னு ஒரு நம்பிக்கை, உன் கைகளுக்குள்ளே, நான் நானாக இருப்பேன் என்ற திடம்....., இப்படி எல்லாம் தோணுது. இது இந்த உணர்வுக்குப் பேர்தான் காதல்ன்னா....., ஆமா நான் உன்னை காதலிக்கிறேன்", அவன் தோள் சாய்ந்து சொன்னாள்.

"என்மேல், அந்த நம்பிக்கை இருக்குல்ல....., இப்போதைக்கு இது போதும். எல்லாம் சரியாயிடும்", அவளை அணைத்தவாறு சொன்னான்.

"உன்மேல் எனக்கு நம்பிக்கை இருக்கு பேட்ரிக். ஆனால், என்மேல் எனக்கு நம்பிக்கையே இல்லை. ஒரு நல்ல மனைவியா, என்னால் நடந்துக்க முடியும்னு தோணலை.

அதைவிட....., குழந்தைங்க.....", அவள் இதழ்களை மூடினான்.

முதல்ல நாம லவ் பண்ணுவோம், பிறகு கல்யாணம்....., அதற்குப் பிறகும் லவ் பண்ணுவோம்....., மற்றதெல்லாம், தானா நடக்கும்போது நடக்கட்டும் சரியா", அவள் தலையில் முட்டினான்.

அவன் தோள் சாய்ந்திருக்கும் நேரம், தன் மனதில் அமைதி நிலவுவதை உணர்ந்தாள். அவன் இன்று தன் அருகில் இல்லையென்றால், தான், என்னவாகி இருப்போம் என்ற நினைப்பே, அவளுக்குள் மெல்லிய பதட்டத்தை உருவாக்கியது. அவளது தவிப்பு அவள் உடலிலும் தெரிந்தது.

அதை அறிந்தவன்போல், அவளைத் தோளோடு மெல்லிதாக அணைத்துக் கொண்டான். நெற்றியில் மென்மையாக இதழ் பதித்தான். அவனுக்குள்ளே இப்படியே கரைந்துவிட மாட்டோமா என்ற தவிப்பு அவள் மனதில்.

அவர்களின் மோன நிலையை கலைக்க அங்கே வந்தாள் ஒரு குட்டி தேவதை. "சனா.... இந்த பாப்பா..... யாரோட பாப்பா? தனியா வந்திருக்கா?", சுற்றிலும் பார்வையை சுழல விட்டவாறு கேட்டான்.

"இவ தீபாவோட குழந்தை. அவ ஹஸ்பண்ட் பாக்க வரும்போது பார்த்திருக்கேன். அதோ அங்கேதான் பேசிட்டு இருக்காங்க", கையை, அந்த கும்பலை நோக்கி, சுட்டிக் காட்டினாள்.

"சோ கியூட்.....", சொன்னவாறு, குழந்தையை தூக்கிக் கொண்டான். அவனையே பார்த்தவாறு அசையாமல் இருந்தாள். "ஹேய் என்ன அப்படி பாத்துட்டே இருக்க?", குழந்தையிடம் விளையாடியவாறே கேட்டான்.

"பேட்ரிக்....., நான் குழந்தைகளை தூக்கியதே கிடையாது தெரியுமா.....? அவங்க எப்படி இருப்பாங்கன்னு

தெரியாது.....? அவங்களை எப்படி தூக்கணும்னும் தெரியாது...?", ஒரு வித இயலாமையுடன் சொன்னாள்.

"நாங்க மட்டும் என்ன, டெய்லி குழந்தைகளைத் தூக்கிட்டா இருக்கோம். எல்லாம் தானா வாறதுதான்", அவள் குரல் மாறுபாட்டை கவனித்தாலும், அதை சட்டை செய்யாமல் சொன்னான்.

"டேய்.... நான் சொல்ல வாறதை, புரிஞ்சுக்கவே மாட்டியாடா..?", அவள் கண்கள் கசிந்தது.

"டேய், எனக்கு....., எனக்கு....., குழந்தைங்க மேல, ஆசையே வர மாட்டிக்குடா....., என்னால அவங்ககிட்டே ஒட்ட முடியலை", முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டாள்.

அந்தக் குழந்தையை, சட்டென அவள் மடியில் வைத்தான். வைத்துவிட்டு, கைகளை விலக்கிக் கொண்டான். "பேட்ரிக்.... என்ன பண்ணுற? பாப்பாவைப் பிடி, விழுந்துடப் போறா?", சொன்னவாறு குழந்தையை அணைத்துக் கொண்டாள்.

"விழுந்துடுவான்னா புடிச்சுக்கோ", கைகளைக் கட்டிக்கொண்டு, பேசாமல் இருந்தான்.

"டேய்...., லூசு...., பாப்பாவைத் தூக்குடா", குழந்தையைக் கட்டிக்கொண்டு, கெஞ்சினாள்.

அவன் அசையவே இல்லை. "அம்மா....., அங்கா.....", குழந்தை அவள் முகத்தை நிமிர்ந்து பார்த்து, மழலையில் குழறியது.

தன் பிஞ்சுக் கைகளை, அவள் முகத்தில் வைத்துத் தேய்த்தது. "அங்....., அம்.....", அவள் செயினைப் பிடித்து, வாயில் வைத்துச் சப்பி ஈரம் செய்தது.

அதன் மழலையில் உருகி, அதன் கைகளுக்கு அடியில் கை கொடுத்துத் தூக்கி, தன் முகத்துக்கு நேராகப் பிடித்தாள். ஒரு வயதுக் குழந்தைக்கே உரிய குண்டு கன்னத்துடனும், அவள் செயினைச் சப்பியதால், எச்சில் ஒழுகும் வாயுடனும் அவளைப் பார்த்து, “அம்மா....., அங்க.....”, என்று மறுபடியும் சொன்னது.

குழந்தை, அம்மா என்ற அழைக்க அழைக்க, அவளுக்குள் தாய்மை பெருகியது. முகத்துக்கு நேராக குழந்தையைப் பிடித்து, அருகில் கொண்டுவந்து அதன் கன்னத்தில் முத்தமிட்டாள். ஆனால் குழந்தையோ, அவள் கன்னத்தைப் பிடித்துக் கொண்டு, அவள் மூக்கை சப்பப் பார்த்தாள்.

அர்ச்சனா கொஞ்சம் தள்ளிப் பிடிக்கவே, முடியைப் பிடித்து இழுத்து, அவள் முகமெங்கும், தன் எச்சில் இதழ்களால் முத்தமிட்டும், நாவினால் நக்கியும், பற்களால் கடித்தும் வைத்தாள். அர்ச்சனாவை விலகவிடவே இல்லை.

“அர்ச்சனா... இன்பெக்ஷன் ஆகும்.....”, ஆட்ச்சேபித்தான் பேட்ரிக்.

“அதெல்லாம் எனக்கு எதுவும் ஆகாது”, அர்ச்சனா சொல்ல,

“நான், பாப்பாக்கு இன்பெக்ஷன் ஆகும்னு சொன்னேன்”, அவன் சீரியஸாகச் சொல்ல,

“அப்போ, நான்போய் பேஸ்வாஷ் பண்ணிட்டு வந்துடவா.....?”, ஆர்வமாகக் கேட்டாள்.

ஐந்து நிமிடங்களுக்கு முன்னர், குழந்தையைப் பிடிக்காது, தூக்கத் தெரியாது, என்று சொன்னவளா இவள்..? அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. ஆனால் அவளிடம் சொல்லி, அவளைக் குழப்ப விரும்பவில்லை அவன்.

“அச்சு, சாரி....., உங்களை டிஸ்டர்ப் பண்ண வந்துட்டாளா? நான் கவனிக்கலை சாரி”, மன்னிப்பை வேண்டினாள் தீபா.

“தீபா, அதெல்லாம் எதுவும் இல்லை. எங்களுக்கு உதவிதான் செய்யிறா? சரி, என்ன ஒரே மாநாடா இருக்கு, மணி ரெண்டாச்சு. பாப்பாவைத் தூங்க வைக்காமல், என்ன பண்ணிட்டு இருக்க?”, குழந்தையைக் கொஞ்சியவாறே கேட்டாள்.

“மணி ரெண்டாச்சா....., பேச்சு சுவாரசியத்தில் எதுவுமே தெரியலை. எல்லோரும் பாப்பாவைப் பாக்கணும்னு சொன்னாங்க, அதான், ஸ்பெஷல் பெர்மிஷன் வாங்கி, இன்னைக்கு நைட் மட்டும் இங்கே வச்சுக்கறேன். காலையில் வீட்டுக்குக் கிளம்பணும். மூணு நாள் லீவ் இருக்கே, நீ வீட்டுக்குப் போகலையா?

ஓ....., அதான் மேம் வீடு பக்கத்தில் தானே, நீ ஏன் அவங்க வீட்டுக்குப் போகலை.....”, கேட்டவள் நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

“சாரி அர்ச்சனா, நான், உனக்குக் கல்யாணமே முடிஞ்சுடுச்சுன்னு நினைச்சேன்”, சங்கடமாகச் சொன்னாள்.

“முடிஞ்சுருந்துருக்கலாம்.....”, அர்ச்சனா, பேட்ரிக்கை ஓர விழியில் பார்த்து, சொன்ன விதத்தில் தீபா சிரித்துவிட்டாள்.

“சரி அர்ச்சனா, நான் தூங்கப் போறேன்.பாய் குட் நைட்”, இருவரிடமும் விடை பெற்றுச் சென்றுவிட்டாள்.

“சனா..... நானும் கிளம்பறேன், எதைப்பற்றியும் யோசிக்காமல் நல்லா தூங்கு. காலையில் பத்து மணிக்கு வந்து, உன்னை வீட்டுக்கு அழைச்சுட்டுப் போறேன்”, விடை பெற்றான்.

அவன் கையைப் பிடித்துத் தடுத்தாள். ‘என்ன’, என்பதுபோல் பார்க்க, “நான் ஏன் அப்பா அம்மாவோட தங்கலன்னு நீ கேக்கவே இல்லையே”, தயக்கமாகக் கேட்டாள்.

“சனா....., உனக்கு எப்படி விருப்பமோ அப்படி இரு. அதை விட்டு, என்ன இது, போ.....”, அவளை அனுப்பிவிட்டு, அவன் கிளம்ப எத்தனிக்க , அவன் கைகளை மறுபடியும் பிடித்துத் தடுத்துவிட்டு, அவன் கண்களையே ஆழ்ந்து பார்த்தாள்.

‘ஹையோ..... என்னை நல்லவனாவே இருக்க விடமாட்டா போல இருக்கே. இப்படிப் பார்த்தால், நான் என்னதான் செய்யட்டும். இன்னும் ஏழு மாசம், இவளைப் பக்கத்தில் வச்சுகிட்டே, நான் எப்படி இருக்கப் போறேன்னு தெரியலையே’, நினைத்தவாறே, உள்ளுக்குள் எச்சில் விழுங்கினான்.

அவன் உள்ளுக்குள் உருகும் விதம் புரியாமல் சொன்னாள், “ஐ லவ் யூ பேட்ரிக்”, “மீ டூ டா.....”, அவளைத் தோளோடு அணைத்து விடுவித்துவிட்டுச் சென்றான். ‘சரியான தத்தி.....’, அவனை மனதுக்குள்ளே திட்டினாள்.

‘இப்போ எதுக்குடி அவனை தத்தின்ன..?’, மனசாட்சி குரல் கொடுக்க,

“பின்ன... ஒரு முத்தம் இல்லை, ஒரு ஹக் இல்லை, இப்படி மரக்கட்டை மாதிரி போனா.....?”, மனசாட்சியை சாடினாள்.

‘அவன் நல்லவனா இருந்தால் கூட, நீ விடமாட்டியாடி.....?”, மனசாட்சி சாடியது.

“அவர், என்கிட்டே நல்லவரா நடந்துக்க வேண்டாம்....., என் புருசனா நடந்துகிட்டா போதும்”, சிலுத்துக் கொண்டாள்.

‘ஹையோ நான் இல்லை’, மனசாட்சி பம்மியது.

“சீ போ.....”, சொல்லிவிட்டு, அறைக்குச் சென்று, ஆடையைக் கூட மாற்றத் தோன்றாமல், வைஷுவின் அருகில் சென்று படுத்துக் கொண்டாள். இதழ்கள்,

தானாகவே கையில் இருந்த மோதிரத்தில் பதிந்து மீண்டது. இனிய மனநிலையில் கண்களை மூடிக் கொண்டாள்.

அவளிடமிருந்து தன்னை மீட்டுக்கொண்டு சென்ற பேட்ரிக், ‘இனிமேல் அவ கிட்டே, கொஞ்சம் ஜாக்ரதையாவே இருக்கணும்’, நினைத்தவாறே சென்றான்.

காலையில் கண்விழித்த வைஷு கொஞ்சம் திகைத்தாள். ‘இவ, அவங்க அம்மா அப்பாவோட போகலையா?’, எண்ணம் எழுந்தாலும் அதை மறைத்தவாறே எழுந்து. காலைக் கடன்களை முடித்தாள்.

வைஷுவின் நடமாட்டத்தை உணர்ந்து, “பொண்டாட்டி... இன்னைக்கு நான் பத்துமணிக்கு எழுந்தால் போதும், என்னை ஆறு மணிக்கே எழுப்பாதே, சரியா”, பாதித் தூக்கமும் விழிப்புமாக அவளிடம் சொன்னாள்.

“சரி, நான் வீட்டுக்குக் கிளம்புறேன், நீ நல்லா தூங்கு. சண்டே ஈவினிங் பாக்கலாம்”, உறங்கும் தோழியிடம் சொல்ல,

“ஓகே பாய், குட் நைட்”, சொல்லிவிட்டு உறக்கத்தைத் தொடர்ந்தாள். அவளை ஒரு நிமிடம் பார்த்துக்கொண்டு நின்றாள், பிறகு கிளம்பிவிட்டாள்.

பிக்பிக்..... பிக்பிக்..... பிக்பிக்....., காதின் அருகில் அலாரம் அடிக்க, “வைஷு, அதை ஆப் பண்ணுடி”, சொல்லிவிட்டுத் திரும்பிப் படுத்தாள்.

‘அவதான் வீட்டுக்குப் போறதா சொன்னாளே, பிறகு யார் அலாரம் வச்சது’, பிரிய மறுத்த இமைகளை, வலுக்கட்டாயமாகப் பிரித்து மணியைப்பார்க்க, அது காலை ஒன்பது முப்பதைக் காட்டியது.

‘பொண்டாட்டி....., நீ.... சான்சே இல்லை....., நீ இல்லாட்டியும், உன் கடமையைச் சரியா செய்யிறடி’, நினைத்தவாறே, எழுந்து குளிக்கச் சென்றாள்.

கிளம்பி, ஒரு ஆகாயவர்ணச் சுடிதாரை எடுத்துப் போட்டுக்கொண்டு, கீழே இறங்கி வரும்பொழுது, நேரம் காலை பத்து பத்து. 'பேட்ரிக் ஏன் இன்னும் வரலை...?', எண்ணியவாறே வர, அவள் எண்ணத்தின் நாயகனே எதிரில் நின்றான்.

"எப்போ வந்தீங்க.....?", அவனை நெருங்கிக் கேட்க, "இப்போதான்....", சொன்னவாறு, அவளை அழைத்துக்கொண்டு வீட்டுக்குச் சென்றான்.

இவளது வரவுக்காகவே அனைவரும் காத்திருக்க, அவர்களுடன் சேர்ந்து, காலை உணவை உண்டாள். பேச்சு, அவர்களின் திருமண விஷயம் பற்றித் திரும்பியது. இரண்டு மாதத்தில் வரும், முதல் நல்ல நாளில் திருமணம் வைக்கலாம், என்று முடிவு செய்யப் பட்டது.

பேச்சுவார்த்தையில் ஜானே அதிகம் பேசினான். கிறிஸ்டோபர், இவ்வளவு செய்வேன், என்பதோடு நிறுத்திக் கொண்டார். திருமணம் முடிக்க, திருமணப் பயிற்சிக்குச் செல்லவேண்டும்., அதை, இந்த மாதமே செய்யச் சொன்னார்கள்.

"அர்ச்சனாவுக்கு, அடுத்த மாதம், டீச்சிங் ப்ராக்டிஸ் இருக்கு", ஸ்டெல்லா நினைவூட்டினார்.

"அப்போ, இந்த மாசமே ப்ராக்டிஸ் போகட்டும்", மேரி எடுத்துக் கொடுத்தார்.

"அதுக்கு முன்னாடி, அவ லெசன் பிளான்(lesson plan) எல்லாம் தயார் செய்யணும். அந்த வேலையில்.....", லெசன் பிளான் தயாரிப்பதில் இருந்த கஷ்டத்தை உணர்ந்து, அவர் சொல்ல,

"அதெல்லாம் அவ பாத்துப்பா", மேரி வேகமாகச் சொன்னார். அங்கே தன் பேச்சு எடுபடாது என்பது, புரிந்துபோனது அவருக்கு.

வேறு வழியில்லாமல் ஸ்டெல்லாவும் ஒத்துக்கொண்டார். அவர் ஒத்துக்கொண்ட பிறகுதான் பேட்ரிக் முகத்தில் பொலிவே வந்தது. அர்ச்சனா, எனக்கென்ன என்பதுபோல் பேசாமல் இருந்தாள். ஒரு வழியாகப் பேச்சுவார்த்தை முடியவே, பேட்ரிக், அர்ச்சனாவின் கையை, யாருக்கும் தெரியாமல் அழுத்தினான்.

அர்ச்சனாவும் அவனைப் பார்த்து, மெல்லிதாகப் புன்னகைத்தாள். அன்று முழுவதும், இரண்டு குடும்பமும், சென்னையைச் சுற்றிப் பார்த்தார்கள். மாலை, ட்ரெயின்க்கு நேரமாகவே, அனைவரும் ஸ்டேஷன் சென்றார்கள்.

“அம்மா.... எப்படி, நேத்து இங்கே சரியான நேரத்துக்கு வந்தீங்க?”, அன்று முழுவதும் உடனிருந்தும், அப்பொழுதுதான் கேட்டாள்.

‘இப்போதான் கேக்கணும்னு தோணுச்சா.....’, மனதில் நினைத்ததை, கேட்க முடியாமல் தடுத்தது அவர் நிலை.

“ஸ்டெல்லாதான், இன்னைக்கு இங்கே ப்ரோக்ராம் இருக்கு, அதில் உன்னோட நிகழ்ச்சியும் இருக்குன்னு சொன்னா. நாங்க வர கொஞ்சம் லேட் ஆயிடுச்சு. ஆனா, நிச்சயம் செய்தது மட்டும் கடைசி நிமிஷம் முடிவு செய்ததுதான். முதல்ல, நேரடியா கல்யாணம் வச்சுக்கலாம்னு சொன்னா, பிறகு, திடீர்ன்னு இப்படி ஒரு முடிவு”, குழப்பமாகவே சொன்னார் மேரி.

ஆனாலும், அதில் இருந்த நிம்மதி அர்ச்சனாவிற்குப் புரிந்தது. ஸ்டெல்லாவின் கடைசிகட்ட முடிவு, எதனால் என்பது அர்ச்சனாவிற்கு சரியாகப் புரிந்தது. ட்ரெயின் வரவே, அவர்கள் அனைவரும் கிளம்பினார்கள்.

அவர்கள் கிளம்பிச் செல்லவே, அது ஸ்டேஷன் என்றும் பார்க்காமல், ஸ்டெல்லாவைக் கட்டிக் கொண்டாள் அர்ச்சனா. “லவ் யூம்மா.....”, கண்கள் கலங்க, அவள் சொன்ன பொழுது, ஸ்டெல்லாவும் கண் கலங்கினார்.

பகுதி - 27

என்னைச் சுற்றி அழுத்தும்

சுமைகளுக்கு நடுவில்

தென்றலாய் உன் நினைவு

வருடிச்செல்லும் நிமிடங்களுக்காகவே

உயிர்த்திருக்கிறேன் நான்.....

அன்று விடுதிக்குத் திரும்பிய ஜூடித், விஷயங்கள் அனைத்தும் அறிந்து, கொதித்தே போனாள். அச்சு எதையும் சொல்ல மாட்டாள் என்று உணர்ந்து, வைஷுதான் பொறுக்க முடியாமல் அவளிடம் புலம்பித் தீர்த்துவிட்டாள்.

“வைஷக்கா, நீங்க இதைக் கேட்டுட்டு, பேசாமலா இருந்தீங்க? அப்படியே, அவ கன்னம் பழுக்குற மாதிரி, நாலு அறை விட்டுருக்க வேண்டாம். இந்த அச்சுக்காவுக்கு, பெரிய அன்னை தெரசான்னு நினைப்பு.

“அச்சு, நீங்க ஏன் அவ பேசுற வரைக்கும் கேட்டுட்டு இருந்தீங்க. அவ வாயைத் தொறந்த உடனேயே, அவ வாயைக் கிழிச்சுருக்க வேண்டாம். உங்களை எப்படி, அவ அனாதைன்னு சொல்லலாம். அது எவ்வளவு பெரிய வார்த்தைன்னு, அவளுக்குத் தெரியுமா?

ச்சே, அப்போ பார்த்து நான் இல்லாமல் போயிட்டேனே. இன்னைக்கு, அவ ரூமுக்கு வரட்டும், அவ வாயை நான் கிழிக்காமல் விட மாட்டேன்”, அவளால், கொஞ்சம் கூட ஜீரணிக்கவே முடியவில்லை.

அச்சு, அவள் கோபத்தை, மெல்லியப் புன்னகையுடன் ரசித்துக் கொண்டிருந்தாள். “அச்சுக்கா... இப்போ எதுக்கு இப்படி ஒரு இளியல், இங்கே, நான் என்ன, உங்களுக்குப்

பாராட்டுப் பத்திரமா வாசிக்கிறேன்”, ஆத்திரமாகக் கேட்டாள்.

“இல்ல....., கெட்டதிலும் ஒரு நல்லது....., எனக்குக் கனவு மாதிரி, கல்யாணம் ஒரே நாளில் முடிவாகிடுச்சு, என்மேல் உண்மையான அக்கறையுள்ள உள்ளங்கள் நிறைய இருக்கீங்க என்று, நான் நேரடியாக உணர ஒரு அருமையான சந்தர்ப்பமா, இது அமைஞ்சு இருக்கு. அப்படி இருக்கும்போது, நான் எப்படி அவமேல கோபப்படுவேன்”, தலையைச் சரித்து, ஆழமாக அவளைப் பார்த்தாள்.

அவள் பார்வையிலும், பேச்சிலும், ஜூடித் தான் அலுத்துப் போனாள். “அச்சு, இதை இப்படியே வளர விடுவது நல்லதில்லை. இத்தோட, அவகிட்ட இருக்கும் எல்லா உறவையும், முறிச்சுடுங்க. இனிமேல் அவளைப் பார்ப்பதை நான் பார்த்தேன்.....”, கையை நீட்டி எச்சரித்தாள்.

சத்தமாகச் சிரித்தாள் அச்சு. அவள் சிரிப்பில், இன்னும் எரிச்சலானாள் ஜூடித். “நிஜம்மாவே உங்களுக்குக் கொஞ்சம் கூட ரோசமே இல்லையா”, ஆத்திரமாகக் கேட்டாள்.

“ஜூடி என்ன பேசுற.....? வார்த்தையை விடாதே”, வைஷு உச்சக் கோபத்தில் கத்தினாள்.

இருவரையும் இறுக அணைத்து, கண்ணீர் விட்டாள் அச்சு. “சாரி அச்சுக்கா.....”, ஜூடித் மன்னிப்பை வேண்டினாள்.

“டேய் ஜூடி....., நீ கேட்டதில், எனக்கு எந்த வருத்தமும் இல்லடா. நீ கேட்டியே, கொஞ்சம் கூட ரோசமே இல்லையான்னு....., இருக்கு, நிறையவே இருக்கு. எனக்கு, அவ அப்படி சொன்னப்போ, ரொம்பக் கோபம் வந்துது. அவளை அப்படியே அறையணும்னு ஆத்திரமும் வந்துது.

ஆனால் அதையும் தாண்டி....., சில வலிகளை, என்னால், மற்றவர்கள் அனுபவிக்கவே கூடாதுன்னு நான்

நினைக்கிறேன். அது என்னோட வார்த்தையாலோ, செயலாலோ, இல்லை பார்வையால கூட இருக்கக் கூடாதுன்னு நினைக்கிறேன்.

நான் வேண்ணா ஒண்ணு செய்யிறேன்....., அவளை விட்டு ஒதுங்கிக்கறேன். இப்போ அவ செய்ததையே, திரும்ப நான் அவளுக்குச் செய்தால், அவளுக்கும் எனக்கும், என்ன வித்தியாசம் இருக்க முடியும்?

நான் அர்ச்சனா, அச்சு, சனா....., எப்பவும் நான் நானாதான் இருப்பேன். என்னை யாராலும் மாற்ற முடியாது, மாற்ற அனுமதிக்க மாட்டேன், நான் மாறவும் மாட்டேன். இது, குழந்தையில் இருந்து, நானே என்னை செதுக்கிகிட்ட குணம். இதை, என் நட்புக்குத் தகுதியே இல்லாத ஒருத்திக்காக, நான் ஏன் மாத்திக்கணும்.

இந்த என் குணம் தான், எனக்கு நூறு நட்பையும், ரெண்டு சகோதரிகளையும் கொடுத்திருக்கு. நீ என்னோட செல்லத் தங்கை, புரியுதா. இவ என்னோட அக்கா....., எனக்கு நீங்க இருக்கும்போது, எந்தக் கவலையும் இல்லை. நான் உன்னிடம், ஒரே ஒரு விஷயம்தான் சொல்ல விரும்புறேன்.

எனக்காக, என்மேல் கொஞ்சமாவது பாசம் இருந்தால், இதை, இந்த நிமிஷத்தோட மறந்துடு. பெமி கிட்டே நீ எதையும் கேட்கக் கூடாது. எனக்கு ப்ராமிஸ் பண்ணு", கையை அவள்பக்கம் நீட்டினாள்.

"அச்சுக்கா....., என்னமோ போங்க, எனக்குப் புடிக்கலை", கோபமாகச் சொன்னாலும், ப்ராமிஸ் செய்ய மறுக்கவில்லை ஜூடி.

கல்லூரி நாட்கள் சூடுபிடிக்கத் துவங்கிவிட்டது. காலையில், ஐந்து முப்பது மணிக்குத் துவங்கும் அன்றைய நாள், ஆறு முப்பது மணிக்குத் திருப்பலி, ஏழு முப்பது மணிக்குக் காலை உணவு, அது முடித்து, எட்டு மணிக்குக் கல்லூரி வேலை, ஒன்பது முப்பது மணிக்கு, கல்லூரிக்குள் அடியெடுத்து வைத்தால்.....

அன்றைய வருகைப்பதிவுமுதல், கரும்பலைகை சரியாக இருக்கின்றதா? நோட்டீஸ் போர்டில், இந்த வாரம், எந்த குரூப் அவர்களது அசைன்மென்ட் செய்திருக்கிறார்கள், தொடர்ந்த மூன்றுமணிநேரம் பாடவேளை, அடுத்த அரை மணிநேரம் லஞ்ச், மீண்டும் இரண்டு பாடவேளை, மாலை மூன்று முப்பது மணிக்கு, கிரௌண்டில் விளையாட்டுக்குச் சென்றால்.....

அடுத்த ஒரு மணி நேரம், விளையாட்டு, விளையாட்டு, விளையாட்டு மட்டுமே. நான்கு முப்பது மணிக்குக் காபி, ஐந்து மணிக்குப் பாடத்திட்டம்(lesson plan) எழுத, டீச்சிங் மெட்டிரியல் தயாரிக்க, சார்ட் எழுத.....,

சரியாக ஏழு மணிக்கு, ஜெபமாலை சொல்ல பிரேயர் ஹால் செல்லவேண்டும். ஏழு முப்பது மணிக்கு, இரவு உணவுக்குச் செல்ல வேண்டும். எட்டு மணிக்கு, மறுபடியும் எழுத அமர்ந்தால்....., நேரம் நள்ளிரவைத் தாண்டினாலும், முடியாது.

இதில் ஹாஸ்ட்டல் லீடராக, பதினோரு மணிக்கு, அனைவரையும் உறங்கச் சொல்லவேண்டியது, அவளது கடமை வேறு. அனைவரையும் பிழிய வைத்தது வேலை. தூங்கும் நேரம், இரண்டு மணி நேரமாகக் குறைந்து போனது. காலையில், வகுப்பில் தூங்கி விழுந்தார்கள், அனைவரும்.

இப்பொழுது, அர்ச்சனா பெமியை அறவே ஒதுக்கி விட்டாள். ஒரே அறையில் இருந்தாலும், அர்ச்சனா அவளிடம் பேசுவதில்லை. ஜூடித் கூட பெமியை வெறுத்தாள்.

வைஷு, எப்பொழுதும் அவளாக யாரிடமும் பேச மாட்டாள். எனவே, அவள் பெமியிடம் பேசாதது, பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தவில்லை. பெமி, வைஷுவிடம் ஏதாவது கேட்டால், கடமைக்காக இரண்டு வார்த்தைப் பேசுவதோடு நிறுத்திக் கொண்டாள்.

இதில் கூட, அர்ச்சனா, ஜூடியின் விளையாட்டும் அரட்டையும், நாளுக்கு நாள் கூடியதே தவிர, குறையவில்லை. பிரேயர் நேரத்தில், ஜூடி ஜெபத்துக்கு வராமல், அறையை வெளியே பூட்டிட்டுப் போங்க, என்ற நிபந்தனையுடன் உள்ளே முடங்கி விடுவாள்.

“ஏய் ஒழுங்கா வந்துருடி, மரியா செக் பண்ண வரும்.....”, என்று வைஷு மிரட்டினாலும், அதை சட்டையே செய்ய மாட்டாள். அன்று, அர்ச்சனாவிற்கு மாதாந்திர உபாதை காரணமாக, ஜூடியுடன் அறையிலேயே தங்கிவிட்டாள்.

இதைப் பார்த்த பெமி, நேரடியாகச் சென்று மரியாவிடம் போட்டுக் கொடுத்துவிட்டாள். மரியாவும், அறைக்கு வந்து வெளியே பூட்டு போட்டுவிட்டுச் சென்றுவிட்டது. வைஷு இதை அறியவே இல்லை. பிரேயர் முடிந்து, சாப்பிட அழைக்கப் போகையில், வெளியே பூட்டு போட்டிருப்பதைப் பார்த்து, பதறினாள் வைஷு.

“அச்சு, வெளியே பூட்டி இருக்குடி.....”, அவள் குரலில் அவ்வளவு உதறல், தவிப்பு, பயம் அனைத்தும்.

“வைஷு, விடுங்க... நாங்க, ரெண்டு நாள் நல்லா தூங்கிட்டு வாறோம்”, ஜூடி அசால்ட்டாகச் சொல்ல, அவள் தலையில் குட்டினாள் அச்சு.

“லூசே, இப்போ வார்டன் சிஸ்டர் வருவாங்க, விஷயம் எவ்வளவு பெருசுன்னு தெரியாமல், ரெண்டு நாள் தூங்கப் போகுதாம் ஜென்மம், தூ...., எப்போதான் உனக்குப் பொறுப்பு வருமோ தெரியலை”, அர்ச்சனா பல்லைக் கடித்தாள்.

“அச்சு....., இப்போ நான் என்னடி செய்ய.....”, வைஷூ வெளியே நின்று தவித்தாள்.

“வைஷு....., நீ, எங்களுக்குச் சாப்பாடு எடுத்து வச்சுட்டு, நீயும் உக்காந்து சாப்பிடு, நீ சாப்பிட்டு முடிக்க முன்னாடி,

நாங்க அங்கே இருப்போம்.நீ போ.....”, அவளுக்குத் தைரியம் சொல்லி அனுப்பினாள்.

“அச்சுக்கா..... இப்போ கூட, நீங்க சாப்பாட்டை மறக்கல பாத்தீங்களா”, ஜூடி கேலி செய்ய, அவனக் கொன்னால்தான் என்ன என்பதுபோல், பார்த்தாள் அச்சு.

சரியாக, பத்து நிமிடத்தில் அறைக்கதவு வெளியே திறக்கப்பட்டது. “அர்ச்சனா வெளியே வா”, அதிகாரமாக ஒலித்தது மரியாவின் குரல்.

“ஆமா, இது ஏன் குரல் கொடுக்குது.....”, ஜூடி அர்ச்சனாவிடம் கேட்க, “நீ வெளியே வா, அதுட்டயே கேட்டுச் சொல்லுறேன். அடச்சீ, நீ கட்டிலுக்கு அடியில் ஒளிஞ்சுக்கோ, நான் மட்டும் வெளியே போறேன்”, அவளைப் பிடித்துத் தள்ளிவிட்டு, வெளியே சென்றாள்.

வெளியில் கொஞ்சம் கும்பலுடன், மரியா, வார்டன் சிஸ்டர், பெமி அனைவரும் நின்றிருந்தார்கள். “பாத்தீங்களா சிஸ்டர்....., பிரேயர்க்குப் போகாமல், ரூமில் படுத்துத் தூங்கிட்டு இருக்கா?”, மரியா சொல்ல,

‘இது எரியிற கொள்ளியில் எதை ஊத்துதுன்னு தெரியலையே, எண்ணெய்யா இருந்தால் பரவாயில்லை, பெட்ரோலா இருந்தால், என் நிலைமை ரொம்ப குஷ்டம் தான்’, மனதுக்குள்ளேயே, அதைக் கறுவினாள்.

“நீ சும்மாயிரு, நான் கேக்குறேன். அர்ச்சனா, எத்தனை நாளா இந்த வேலை நடக்குது?”, மரியாவை அடக்கிவிட்டு, அவளிடம் கேட்டார்.

‘ஹை.... மரியா தண்ணிதான் ஊத்துச்சா.....’, மனதுக்குள் வியந்தவாறே, அவள் யோசனையில் இருக்க, “சிஸ்டர், அச்சு டெய்லி வருவா, இன்னைக்குதான் வரலை, அவளுக்கு உடம்பு சரியில்லையோ என்னமோ...?”, கூட்டத்தில் ஒருத்தி, குரல் கொடுத்தாள்.

“அப்படியா.....? அர்ச்சனா உனக்கு உடம்பு சரியில்லையா.....?”, அக்கறையாகக் கேட்டார்.

“இல்ல சிஸ்டர்.....”, அவள் தயங்கவே, “பாத்தீங்களா, சும்மாவே மட்டம் போட்டிருக்கா”, மரியா வேகமாகச் சொன்னார்.

“நீ சும்மாயிருன்னு சொன்னேன் இல்ல, நீ சொல்லு அர்ச்சனா, ஏன் தயங்குற.....?, சொல்லு.....”, அவளைத் தூண்டினார்.

இதை எப்படிச் சொல்லவென்று கொஞ்சம் தயங்கியவள், “மந்த்லி ப்ராப்ளம்....., இன்னைக்குக் கொஞ்சம் அதிகமா ஸ்டொமக் பெயின், அதான் சிஸ்டர்.....”, தயக்கமாக இழுத்தாள்.

“என்ன ப்ராப்ளமா.....? அப்படி என்ன உனக்கு மட்டும் பொல்லாத பிரச்சனை.....?”, மரியா மீண்டும் எகிற,

“மரியா முதல்ல நீ போ....., எல்லோரும் போங்கம்மா....., நீ வா.....”, அனைவரையும் அனுப்பிவிட்டு, அர்ச்சனாவை அழைத்துக்கொண்டு சென்றார்.

‘ஆஹா, தனியா கூட்டிப்போய், குமுறப் போறாங்களா?. நல்ல வேளை, எல்லாருக்கு முன்னாடியும் அசிங்கப் படுத்தாமல் விட்டாங்களே’, எண்ணியவாறே, அவரைப் பின் தொடர்ந்தாள். செல்லும் முன்னர், கறுத்து சிறுத்த, பெமியின் முகத்தைப்பார்த்து, உணர்ச்சியே இல்லாத ஒரு பார்வை பார்த்துவிட்டுச் சென்றாள்.

“உள்ளேவா, கதவைச் சாத்து.....”, அவளை அமரச் சொல்லிவிட்டு, உள்ளறைக்குச் சென்று மறைந்தார்.

‘என்ன ஒரே மர்ம தேசமா இருக்கு’, சுற்றிலும் கண்களை சுழலவிட்டாள்.

“கையை நீட்டு, இந்தா இதை முழுங்கு”, அவள் கையில் வெந்தையத்தைக் கொட்டினார். மறு பேச்சு பேசாமல் அதை விழுங்கினாள்.

“சிஸ்டர், இப்போ நான் முழுங்குன விதையெல்லாம் முளைச்சு, செடி என் வாய் வழியா வளராதே?”, அர்ச்சனா குறும்பாகக் கேட்க, ஒரு நிமிடம் அவள் கேள்வியில் திகைத்தவர், “அதெல்லாம் முளைக்காது, ஏன்னா, அங்கேதான் சூரிய ஒளி படாதே”, அவரும் சொல்ல, இருவருமே இணைந்து சிரித்தார்கள். பிறகு விடைபெற்றுச் சென்று, சாப்பிட்டாள்.

அறைக்கு வந்தபிறகு, ஜூடியும், வைஷுவும், அதெப்படி இந்த விஷயம் மரியாவுக்குத் தெரியும்.....?, பெமி சொல்லியிருப்பாளோ.....? என்ற ரீதியில் பேச, அர்ச்சனாவோ, மரியா எப்பொழுதும் ரௌண்ட்ஸ் வரும், அப்படித்தான் இதைக் கண்டு பிடித்திருக்கும், என்ற ரீதியில் பேச்சை மாற்றி விட்டாள்.

அதேபோல் ஒரு நாள் பிரேயர் ஹாலில் ஜெபமாலை சொல்லிக் கொண்டிருக்க, அர்ச்சனா தூங்கி வழிந்துகொண்டிருந்தாள். வைஷு அவளைக் கிண்டி எழுப்பிவிட, “பொண்டாட்டி, என்ன, இங்கே இருக்க எல்லோரையும் கன்னியாஸ்த்திரி ஆக்கப் போறாங்களா?

அதைவிட, நீ இந்துன்னு சத்தியம் பண்ணி சொன்னால் கூட நான் நம்பமாட்டேன், அவ்வளவு ஈடுபாடு. காலையில மாஸ், சாயங்காலம் ஜெபமாலை, அதெல்லாம் முடியாது, நான் இப்போ பாதி பொண்டாட்டி, நீ முழு பொண்டாட்டி, பாவமில்ல நம்ம புருசனுங்க”, சீரியஸாகச் சொன்னாள்.

“அச்சுக்கா, நானும் நானும்.....”, ஜூடி அவர்களுடன் இணைந்தாள்.

“ஏய் நீ எங்கடி வாற, நீ சின்னப் புள்ளை போ.....”, அர்ச்சனா தள்ளிவிட்டாள்.

“அதில்ல, நானும் குடும்பஸ்த்திரி ஆகத்தான் விரும்புறேன்னு சொல்ல வந்தேன்.....”, முகத்தை, பாவமாக வைத்துக்கொண்டு சொன்னாள்.

“பத்தொம்பது வயசு சின்னப் புள்ளை, ஒரு ஜெபமாலை சொல்ல வருத்தப்பட்டு, கல்யாணம் கட்டிக்க ஆசைப் படுதுபாரு, கொல்லுடி அவளை”, அர்ச்சனா சொல்லவே, சுற்றி இருந்தவர்கள் சிரித்தார்கள்.

இரவில், வைஷு எப்பொழுதும் பால் வாங்கி ப்ளாஸ்க்கில் வைப்பாள். அன்றும் பால் வாங்கி வரவே, ஜூடி வைஷுவிடம் கேட்டாள். “வைஷக்கா, யார் பால் தந்தாங்க.....”, வைஷுவும் எதார்த்தமாக, “எல்லோருக்கும் மரியாதான் தரும்”, சொல்லிவிட்டு வேலையைத் தொடர்ந்தாள்.

“எல்லோருக்குமே மரியாவா.....? அதுக்கு கஷ்டமா இருக்காது.....? பால்.....”,ஒரு மாதிரிக் குரலில் கேட்கத் துவங்கவே, வைஷுவும், அர்ச்சனாவும், அவள்மேல் பாய்ந்து, அவளைக் குமுறினார்கள். “அடச்சீ வாயக் கழுவு, எப்போ பார் டபுள் மீனிங்ல பேசுறது”, வைஷு கோபமாக இன்னும் ரெண்டு அவள் முதுகில் போட்டாள்.

“இது நல்லா இருக்கே....., நான் ஒழுங்காதான் பேசுறேன். நீங்க சரியா புரிஞ்சுக்காதது என் தப்பா”, அப்பாவியாகக் கேட்டு, இன்னும் ரெண்டு அடி வாங்கினாள்.

இந்தக் குறும்பும், கேலியும் சிரிப்பும்தான் அவர்களை உயிர்ப்புடன் வைத்திருந்தது எனலாம். இதனிடையில், அந்த வார இறுதியை, திருமணப் பயிற்சிக்காக ஒதுக்கியிருந்தாள். அது இரண்டாம் சனிக்கிழமை, எனவே அது சுலபமாகவே இருந்தது.

இரண்டு நாள் திருமணப் பயிற்சி, பேட்ரிக், அவளை அழைத்துச் செல்ல வந்தான். அவனைப் பார்த்தவுடன், ஓடிவந்து கட்டிக் கொண்டாள். “ஏய், அம்மா இருக்காங்க.....”, அவன் சொல்லும் முன்பே, அவள்

அவனை அணைத்து விலகினாள். அதேபோல் ஸ்டெல்லாவையும் அணைத்துக் கொண்டாள்.

பேட்ரிக், சங்கடமாக தாயைப் பார்க்க, அர்ச்சனா தயக்கமே இல்லாமல் அவரைப் பார்த்தாள். “சரி கிளம்புங்க.....”, வாஞ்சையாக அர்ச்சனாவிடம் சொன்னார். இருவரும் அவன் பல்சரில் ஏறி அமர்ந்தார்கள்.

அர்ச்சனா, ஒரே பக்கமாக கால்போட்டு அமர்ந்துகொண்டாள். எப்பொழுதுமே அவள் அவ்வாறுதான் அமர்வாள். அவளுக்கு, இரண்டுபக்கம் கால் போட்டு அமர்ந்து பழக்கமில்லை. இதுவரை அவ்வாறு அமரும்பொழுது, இடைவெளி விட்டு அமர்பவள், இன்று, அவன் முதுகோடு ஒன்றிக் கொண்டு, கைகளால் அவன் இடையை வளைத்துக் கொண்டாள்.

பேட்ரிக்கின் கைகளில் அவன் பல்சர் பைக் சீற, அர்ச்சனாவின் மென்மையான தீண்டலில் அவன் பல்சும் சேர்ந்து எகிறியது. சென்று சேர ஆன முப்பது நிமிடமும், பேட்ரிக்கின் உணர்வுகள் தன் வசம் இல்லை, என்பதுதான் சரியாக இருக்கும்.

சாந்தோம் சர்ச் சென்று சேர்ந்தவர்கள், “சனா.... நீ போ, நான் பின்னாடியே வாறேன்”, அவள் அவனை ஒரு பார்வை பார்த்துவிட்டு, ஹாலுக்குச் சென்றாள்.

பேட்ரிக், தலையை, அழுந்தக் கைகளால் கோதிவிட்டு, உதட்டைக் குவித்து, “உப்ப்.....”, என்று காற்றை ஊதி, தன்னை நிலைக்குக் கொண்டுவந்தான். ‘என்ன கொடுமைடா இது, அவளை பேசாமல் ஆட்டோலையே வரச் சொல்லி இருக்கலாம். முன்னாடியெல்லாம் நான் ஒழுங்காதானே இருந்தேன்’, தன்னையே கேட்டுக் கொண்டான்.

நேரமாவதை உணர்ந்து, அவனும் ஹாலுக்குச் சென்றான். அங்கே கிளாஸ் எடுக்க வந்தவரோ, ஜோடியாக வந்திருப்பவர்கள், சேர்ந்தே அமருங்கள் என்று

சொல்லிவிட, தன் நிலையை நொந்தவாறே அர்ச்சனாவின் அருகில் அமர்ந்தான். ஆனால், அவன் பயந்த மாதிரி அன்றைய வகுப்பு அமையவில்லை, குடும்பம் பற்றியும், அதன் மகத்துவம், எப்படி வாழ்க்கையை எதிர் கொள்ள வேண்டும்,

மனைவி என்பவள் யார், கணவன் என்பவன் யார், இரண்டு குடும்ப உறவுகளையும் எப்படி அனுசரித்துப் போகவேண்டும்....., இப்படியாக அன்றைய க்ளாஸ் சென்றது. இடையிடையே, சிறிய குழு விவாதம், தனி நபர் கருத்துக்கள், இப்படிச் சென்றதால், போர் அடிக்கவில்லை.

வீட்டுக்குக் கிளம்பும் வேளையில், அர்ச்சனாவை இரண்டுபக்கம் கால் போட்டு அமரச் சொன்னான். தனக்குப் பழக்கமில்லை, என்று சொல்லி முரண்டினாள். அவன் கட்டாயப்படுத்திச் சொல்லவே, அவ்வாறே அமர்ந்துகொண்டாள்.

பல்சர் பைக், கொஞ்சம் பின்சீட் உயரமாக இருப்பதுபோல், சாய்வாக இருக்கும். அதில் அமர்ந்தவள், “இதென்ன என்னமோ குதிரை மேல இருக்க மாதிரி இருக்கு”, என்று சொன்னவாறு, அவன் பக்கம் சாய்ந்து அவன் முதுகோடு இணைந்து அமர்ந்துகொண்டாள்.

காலையை விட, இப்போதைய நிலை இன்னும் மோசமாக இருந்தது அவனுக்கு. இது, தங்கள் இருவருக்குமே நல்லதல்ல என்பதை உணர்ந்தவன், சிந்தையை தன் உணர்வுகளுக்குக் கடன் கொடுக்காமல், அவள் பேச்சில் ஒரு காதும், பார்வையை சாலையிலும் வைத்தவாறு, ஹாஸ்ட்டல் வந்து சேர்ந்தான்.

மறுநாள், இதைவிட சோதனையான நாள் என்பதை, பாவம் அவன் அறியவே இல்லை. மறுநாள் அர்ச்சனா அவனுடன் இணைந்து அமர்ந்தபொழுது, இரவு முழுவதும் எடுத்த உறுதியால், எந்த சலனமும் இல்லாமல் வந்து சேர்ந்தான்.

ஆனால் அன்றைய வகுப்போ, முழுமையான தாம்பத்தியம் பற்றிய வகுப்பாக இருந்தது. வகுப்பு துவங்கும் பொழுதே, இது வெட்கப்படவோ, அருவருக்கபடவோ வேண்டிய வகுப்பு அல்ல என்று துவங்கி, இரண்டுமணிநேரம் அதைப் பற்றியே பேசியதால், அனைவரும் கொஞ்சம் தைரியமாக, வரும் வகுப்புகளை எதிர் கொண்டார்கள்.

தனியாக வந்திருப்பவர்களின் நிலையே திண்டாட்டம் என்றால்....., ஜோடியாக வந்திருப்பவர்களின் நிலை, இன்னுமே மோசமாக இருந்தது. முதல்நாள் வகுப்பில், கமெண்ட் அடித்துக் கொண்டிருந்த அர்ச்சனா, இந்த வகுப்பில், அமைதியே உருவாக மாறிவிட்டாள்.

தாம்பத்தியம் பற்றி, படம் வரைந்து விளக்கும் வேளையில், அவஸ்த்தையில் நெளிந்தாள் அர்ச்சனா. பேட்ரிக் ஏற்கனவே வெட்னரி டாக்டர், அவனுக்கு இதைப்பற்றி எல்லாம் தெரியும். பாடம் கவனிப்பதுபோல் அதிலேயே மூழ்கிவிட்டான்.

"'என்னமோ, படம் பாக்குற மாதிரி பாக்குது பாரு, கருமம் கருமம்", மனதுக்குள் அவனைத் திட்ட,

'நிஜம்மாவே படம்தான் காட்டுறாங்கடி', மனசாட்சி, ஹஸ்க்கி வாய்ஸ்ஸில் சொல்ல, "நீ அடங்குறியா", அதை அடக்கினாள்.

"என்னங்க, நாம வீட்டுக்குப் போகலாமா.....?", ஒரு பேப்பரில் எழுதி அவனிடம் காண்பித்தாள்.

பேப்பரையும், அவள் சிவந்த முகத்தையும், அலைபாயும் கண்களையும், கீழுதட்டை பற்களால் கடித்துவிட்டு, அவள் தலை கவிழ்ந்திருந்த தோற்றமும், பேட்ரிக்கினுள் ஒரு இனிய உணர்வை ஊட்டியது. அவள் கையை அழுந்தப் பற்றினான்.

அவனை நிமிர்ந்து பார்க்க முடியாமல், சுற்றிலும் இருந்த சூழ்நிலை தடுக்க, அவன் கையை தானும் இறுகப் பற்றி,

“போகலாமா...”, என்று மறுபடியும் பேப்பரில் எழுதினாள்.

“இன்னும் கொஞ்ச நேரம்தான். இப்போ போய்ட்டா, மேரேஜ் செய்ய சர்டிபிகேட் தர மாட்டாங்களே”, என்று அவனும் எழுதிக் காண்பிக்கவே, வகுப்பை கவனிக்க முயன்றாள். இணைந்த கைகள் பிறகு பிரியவே இல்லை. மிகவும் உபயோகமான வகுப்பு. தாம்பத்தியம் பற்றிய தெளிவான படிகளை, முறைகளை, அதன் தேவையை, அவசியத்தை, புரிய வைத்தார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

முதலில் அவஸ்த்தையாக நெளிந்தவள், பிறகு, தெளிவான சிந்தைக்குச் செல்ல அது உதவியது. இன்றைய முப்பது நிமிட பயணம், ஒருமணி நேரமாக கடந்தபிறகு கூட, இருவருக்கும் இடையில் இருந்த மௌனம் உடையவே இல்லை. அதே மோன நிலையோடு பேட்ரிக் விடை பெற்றுச் சென்றான். அர்ச்சனா மெல்லிய புன்னகையுடன் அறைக்கு விரைந்தாள்.

“அர்ச்சனா ஸ்டாண்ட்அப்.....”, வகுப்பறைக்குள் வந்ததும் வராததுமாக, மீனா மேடம் அர்ச்சனாவை எழும்பச் சொன்னார்.

“எஸ் மேம்”, உற்சாகமாகச் சொன்னவாறு எழுந்து நின்றாள்.

“அர்ச்சனா நீ B.Sc யா இல்லை M.Sc யா.....”, அவர் குரலில் ஒரு அவசரம்.

“நான் M.Sc தான் மேம் ஆனால்....., M.Sc இல்லை”, விளையாட்டாகச் சொன்னாள்.

“அர்ச்சனா.... இந்த விளையாட்டுதான், உன்னை இங்கே கொண்டு வந்து நிறுத்தி இருக்கு”.

‘இல்லனா எங்கே கொண்டுபோய் நிறுத்தி இருக்குமாம்’.

“உன்னோட மார்க் லிஸ்ட் பார்த்தேன். தொண்ணுறு சதவீதம் மதிப்பெண் வாங்கி இருக்க. ஆனால் ஒரே ஒரு ப்ராக்டிகல் எக்ஸாம் போகாமல் ஆப்சென்ட் ஆகியிருக்க, உன்னை என்ன செய்தால் தகும்”.

‘என்னது ஆப்சென்டா.....’, அவளுக்கே இது புது செய்தி. அவள் முட்டை மார்க் வந்திருக்கும் என்று, அந்த மார்க் லிஸ்ட்டையே பார்க்கவில்லை.

“அன்னைக்கு மட்டும் நீ எக்ஸாம் அட்டென்ட் பண்ணியிருந்தால், கோல்ட் மெடலோட வெளியே வந்து இருப்ப. இப்படி, உன்னோட ரெண்டு வருஷ உழைப்பு, பாழானது தெரியாமல் விளையாட்டா இருக்கியே”, கோபமும் ஆற்றாமையும், அவர் குரலில் போட்டி போட்டது.

‘இப்போ தேர இழுத்து ஏன் தெருவில விடுதுன்னு தெரியலையே.....’, மண்டை காய்ந்தாள் அவள்.

“அர்ச்சனா, சொல்லு, M.Sc இப்போவே முடிச்சுடுவ தானே...?”, ஆர்வமாகக் கேட்க,

“மேம், நான் வேண்ணா புதுசா தொலைதூரக் கல்வி முறையில் முதுகலை ஒரே வருஷத்தில் முடிச்சுடவா?”, அதை முடிக்க மாட்டேன் என்ற செய்தி அதில் ஒளிந்து இருந்தது.

“அர்ச்சனா... ஒரே ஒரு ப்ராக்டிகல் தானே, உனக்கு அது சிம்பிள் விஷயம்”, அவளுக்குப் புரியவைக்க முயன்றார்.

‘அது சிம்பிள் தான்....., ஆனா, யாரு அந்த வாத்தி முன்னாடி போய் நிக்கிறது, என்னால் முடியாது’, தலையை சிலுப்பிக் கொண்டாள்.

அதை அவரிடம் நேரடியாகச் சொல்ல முடியாமல், “மேம், இப்போ நான் B.Ed முடிச்சுடுறேன், பிறகு அந்த ஒரு ப்ராக்டிக்கலை முடிக்கிறேனே”, அவரிடம் பேரம் பேசினாள்.

உன்னையெல்லாம் திருத்தவே முடியாது, என்பதுபோல் ஒரு பார்வை பார்த்துவிட்டு வெளியேறினார். வகுப்பில் இருந்த அனைவரும், அவளைத் திரும்பிப் பார்க்க, “எல்லோரும் என்னை ஏன் அப்பிடி பாக்குறீங்க....., யாருக்காவது எனக்கு அட்வைஸ் பண்ணனும்னு தோணினால், அந்த எண்ணத்தை இப்போவே எச்சி தொட்டு அழிச்சுடுங்க. ஏன்னா....., அதை கேக்க நான் இங்கே இருக்க மாட்டேனே.....”, வீராவேசமாகத் துவங்கி, கேலியில் முடித்துவிட்டு, ஓடியே போனாள்.

பகுதி - 28

நடைவண்டி பயிலும்

குழந்தையின் நிலையில் நான்

விழுந்தாலும் எழும் பிள்ளையின் மனம்

நானும் கற்றுக் கொள்கிறேன்.....

டூ ச்சிங் ப்ராக்டிஸ்க்கு, ஆவிச்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் அர்ச்சனாவும், நிர்மலா பள்ளியில் ஜுடியும், தெரசா பள்ளியில் வைஷுவும், ஆவிச்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பெமியும் சென்றார்கள்.

பெமியும், அர்ச்சனாவும் ஒரே கோட்டைக்கு உள்ளே உள்ள பள்ளியில் தான் சென்றார்கள். ஆனால் இருவருமே பேசிக் கொள்வதில்லை. “தன்னைக் காயப்படுத்தியவரை விட்டு, மௌனமாக விலகிச் செல்பவர்கள்தான், உண்மையான பக்குவ நிலையை அடைந்தவர்கள்”, எங்கேயோ படித்தது.

இந்த வார்த்தை உண்மையென்றால், அர்ச்சனா அந்த பக்குவத்தை அடைந்துவிட்டாள் என்பதுதான் உண்மையாக இருக்கும். பள்ளிகளுக்குச் செல்பவர்கள், அவர்களது சொந்த செலவில்தான் செல்ல வேண்டும்.

மாலை ஆறுமணிக்கு முன்னர் ஹாஸ்டலுக்குள் இருக்க வேண்டும். இதுதான் அங்கே இருந்த கட்டுப்பாடு. தினமும் காலையில், தன் மருத்துவமனைக்குச் செல்லும் வழியில், பேட்ரிக், அர்ச்சனாவைப் பள்ளிக்கு அழைத்துச் செல்வான். மாலையில், அவளைத் திரும்ப அழைத்து வந்துவிடுவான்.

அந்த நேரம் சரியான மழை காலம். என்னதான் குடை பிடித்தாலும் கல்லூரியில் இருந்து, பள்ளி செல்லும் இடைவெளியில் தொப்பலாக நனைந்துவிடுவர், சில நேரம். இன்னும் இருபது நாட்களில் திருமணம்

இருவருக்கும். அந்த உரிமையும் சேரவே, பேட்ரிக்கின் பார்வைகள், ஒருவித உரிமையுடன் அவளைத் தழுவும்.

அவன் பார்வைகள் தழுவும் விதம், ஒருவித படபடப்பை அவளுக்குள் விதைத்தாலும், அதை அவனுக்குக் காட்டாமல் சாமர்த்தியமாக மறைத்து விடுவாள். அன்று, பள்ளிக்கு வந்த சிறிது நேரத்தில், வானம் பொத்துக்கொண்டு ஊற்ற, ஆவிச்சி பள்ளிக்கு விடுமுறை அளித்தார்கள்.

அவளுடன் வரும் மாணவிகள் அனைவரும், ஷேர் ஆட்டோவைப் பிடித்து ஹாஸ்ட்டல் சென்றுவிட, அவள் மட்டும் தனித்திருந்தாள்.

என்ன செய்யவென்று கையைப் பிசைந்துகொண்டிருக்கும் வேளையில், “மிஸ் என்ன இங்கேயே நின்னுட்டீங்க, போகலையா?”, அவள் வகுப்பு மாணவன் அக்கறையாகக் கேட்டான்.

“இல்ல, என்னை அழைச்சுட்டுப் போக, சாயங்காலம்தான் வருவாங்க, அதான், என்ன செய்யன்னு தெரியாமல் முழிச்சுட்டு நிக்கிறேன். உன்கிட்டே போன் இருக்கா?”, அவள் கேட்கவே, அவன் சென்று, அவனது நண்பனிடமிருந்து வாங்கி வந்தான்.

அவள் பேட்ரிக்கிற்கு அழைக்க, அவன் அடுத்த பத்தாவது நிமிடம் அவள் முன் நின்றான். நன்றி சொல்லிவிட்டு அவனுடன் செல்ல, அவனோ அவளை வீட்டுக்கு அழைத்து வந்தான்.

“என்னங்க……., என்னை ஹாஸ்டல்லையே கொண்டுபோய் விடுங்க”, இதயம் வேகமாகத் துடிப்பதை மறைத்து, இயல்பாகவே சொன்னாள்.

“சனா….. ஏற்கனவே ரொம்ப மழை கொட்டுது. கொஞ்சம் மழை விட்ட உடனே போகலாம். உள்ளே வந்து தலையைத் துவட்டிக்கோ…..”, சொல்லிவிட்டு, அவளுக்கு அறையைக் காட்டிவிட்டு, அவன் அறைக்குச் சென்றான்.

தயக்கமாக, அவன் காட்டிய அறைக்குள் சென்றவள், கண்ணாடியின் முன்னால் நின்று தன்னைப் பார்த்தாள். உடலுடன் ஒட்டிய ஆடையும், நீர் திவலைகள் நிறைந்த முகமும், தண்ணீர் சொட்டும் முடியும்....., அவளை அப்படிப் பார்க்க, அவளுக்கே படபடப்பாக இருந்தது. இமைக்க மறந்து பார்த்துக் கொண்டிருக்க, கண்ணாடியில் அவளை ஒட்டி, நெருங்கி நின்றான் பேட்ரிக்.

அவனைத் திரும்பியும் பார்க்காமல் அவள் நிற்க, அவனது சூடான மூச்சுக்காற்று அவள் தோளைச் சுட்டது. உடல் முழுவதும் சிலிர்த்து அடங்க, இமைகளை மூடிக் கொண்டாள். அவன் கைகள் அவள் வெற்றிடையில் பதிய, உள்ளுக்குள் மின்சாரம் பாய்ந்தது.

செய்வது தவறென்று புத்திக்கு உறைத்தாலும், உணர்வுகள் அவர்களின் கட்டுப்பாட்டில் இல்லை. அவள் முதுகில் பசைபோல் ஒட்டிக் கொண்டான். மழை நீரில் சில்லிட்டு போயிருந்த தேகம், இப்பொழுது வெப்பத்தில் தஹித்தது. அடி வயிற்றில், பட்டாம்பூச்சி பறக்கும் உணர்வு.

அவன் இதழ்கள் அவள் கழுத்து வளைவில் சூடாகப் பதிந்தது. அவள் இடையில் பதிந்திருந்த அவன் கைகள், அவளை தன் பக்கமாகத் திருப்ப, தன் நெஞ்சோடு அவளை இறுகக் கட்டிக் கொண்டான். அவன் இதழ்கள், அவள் முகத்தில் இருந்த நீர்த்துளிகளை காயவைக்கும் வேலையில் ஈடுபட்டன.

தன் கைகளை அவன் முதுகில் படரவிட்டு, அவனுடன் இன்னும் நெருங்கி இழைந்தாள். அவன் இதழ்களின் தேடல் தொடர்ந்தது. அவன் கைகள் அவள் மேனியில் முன்னேற, அவன் இதழ்கள் அவள் இதழ்களைச் சுவைத்தது. அவனது உரிமை மீறலை உணர்ந்தும், தடுக்கும் வழி தெரியாமல், அவன் முதுகில் தன் நகக்கண் பதியும் அளவு அழுத்தினாள்.

அவளைத் தூக்கிக்கொண்டு கட்டிலில் சரிந்தான்..... .
“சனா....., சனானானா.....”, அவளை உலுக்கினான். உடல் முழுவதும் குளிரினாலோ, இல்லை இவ்வளவுநேரம் தான் கண்ட கனவினாலோ, வெளிப்படையாகவே நடுங்கியது.

“டவல் எடுத்துத் துவட்டிக்காமல், என்ன பகல் கனவு கண்டுட்டு இருக்க..... இந்தா, தலையையும் உடம்பையும் துடைச்சுக்கோ, கொஞ்சம் டிரெஸ்ஸைப் பிழிஞ்சு விட்டுக்கோ, வெளியே மழை நின்னுடுச்சு, உன்னை நான் ஹாஸ்டல கொண்டுபோய் விடுறேன். காபியை இங்கே வைக்கிறேன், குடிச்சுட்டு வெளியே வா”, டவலை எடுத்து அவளிடம் கொடுத்துவிட்டு, வெளியேறினான்.

‘அடச்சே....., இவ்வளவு நேரம் கண்டது கனவா? கனவுக்கே இவ்வளவு சக்தியா? வர வர, நான் நானாக இருக்க மாட்டிக்கேன். தலையை உலரவைக்கும் எண்ணம் இல்லாமல், கட்டிலில் அமர்ந்துகொண்டாள்.

வேகமாக வெளியேறிய பேட்ரிக், தன்னை மீட்டுக் கொள்ளப் போராடினான். அவள் நின்று பார்வையால் வெளிப்படுத்திய அவள் உணர்வுகள், அவனையும் தாக்கியதுதான். ஆனால், இன்னும் அங்கேயே நின்றால், தவறு நடந்துவிடுமோ என்ற கவலையால்தான், அவளை உடனடியாக ஹாஸ்டலில் விட முடிவு செய்தான்.

‘ஆண்டவா....., என்ன உணர்வுடா சாமி இது. ஒரு நிமிஷத்தில் ஆட்டி வச்சுடுச்சே. முதல்ல அவளைக் கொண்டுபோய் ஹாஸ்டல்ல விடணும். ச்சே... அவளே பயந்துபோய் நின்னதாலே, நான் என்னை மீட்டுகிட்டேன், இல்லன்னா என்ன நடந்துருக்கும்”, தலையை வேகமாக உதறிக் கொண்டான்.

தலையை உதறினாலும், அர்ச்சனா நின்ற தோற்றம் கண்முன் விரிந்து, அவன் ஆண்மையை சோதிக்கவே

செய்தது. இது இருவருக்குமே நல்லதல்ல என்பதை உணர்ந்து அறைக்கு விரைந்தான்.

ஆடையை மாற்றிவிட்டு, மழை கோட்டை அணிந்துகொண்டு வெளியே வந்தான். அர்ச்சனா, அவன் பார்த்த மாதிரியே வெளியே வந்து நின்றுகொண்டிருந்தாள். 'ஏன் இப்படி.....', என கேட்கப் போனவன், எதுவும் சொல்லாமல் அவளை அழைத்துக்கொண்டு வெளியேறினான்.

அறைக்கு வந்த அர்ச்சனா உடையைக்கூட மாற்றாமல் அப்படியே கட்டிலில் அமர்ந்தாள். அவள் அமர்ந்த சிறிது நேரத்திலே வைஷுவும் வந்து சேர்ந்தாள். "அச்சு ஏன் இப்படி இருக்க?, எழுந்து குளி, காய்ச்சல் வரப் போகுது", அவளது பேச்சுக்கு, எந்த எதிர் வினையும் அவளிடம் இல்லை.

"அச்சு.....", அவள் தோளைத் தொட்டு உலுக்கவே, நடப்புக்கு வந்தாள்.

"பொண்டாட்டி....., நீ எப்படிடி அண்ணாவை விட்டுட்டு இங்கே இருக்க....., என்னால், இந்த ஒரு நாளையே தாங்க முடியலையே", அவள் இருந்த கோலமும், அவள் பேச்சும் வைஷுவிற்குள் பீதியை கிளப்பியது. அது மட்டும் இல்லாமல், இதென்ன இப்பொழுது தேவையற்ற கேள்வி, என்பதுபோல் அவளைப் பார்த்தவள், அவள் சொன்னதில் இருந்த பொருள் புரிய,

வேகமாகச் சென்று கதவைத் தாழிட்டுவிட்டு வந்தாள். "அச்சு....., என்ன சொலுற.....? எனக்கென்னமோ பயம்மா இருக்குடி. ஏதாவது தப்பு பண்ணிட்டியா?", அவள் முகத்தை தன் பக்கம் திருப்பிக் கேட்டாள்.

"வைஷு....., இன்னும் கொஞ்சநேரம் அங்கே இருந்திருந்தேன்....., கண்டிப்பா தப்பு நடந்திருக்கும். என்னால தாங்கவே முடியலை அந்த உணர்வை.....,

என்னமோ.....”, அவள் வாயை வேகமாக மூடினாள் வைஷு.

“என்ன பேச்சு இது அச்சு, முதல்ல இந்த பேச்சை விடு. எனக்கு உன்மேல் நம்பிக்கை இருக்கு. அப்படியெல்லாம் எதுவும் ஆகாது, தேவையில்லாமல் மனசைப் போட்டு குழப்பிக்காதே. இன்னும் இருபது நாளில் கல்யாணம். அதுவரை, கொஞ்சம் கவனமா இரு அவ்வளவே”, அவள் முடித்தாள்.

“பொண்டாட்டி.... இல்லடி, எனக்கு பயம்மா இருக்கு. இப்போ பேட்ரிக் மட்டும் திடமா இல்லாமல் இருந்திருந்தா.....? ஹையோ, என்னால் நினைக்கவே முடியலடி....., இந்நேரம் நான்.....”, தன் தலையிலேயே அடித்துக் கொண்டாள்.

“பொண்டாட்டி, உனக்குக் கோவில் கட்டி கும்பிடணும் போல இருக்குடி. இன்னும் இருபது நாள் மட்டும் இல்லை. முழுசா ஏழரை மாதம் இருக்கு....., அது மட்டும் இல்லை.....”, மேலே சொல்லப் போனவள், சுய உணர்வை அடைந்து, வாயை கப்பென மூடிக் கொண்டாள்.

‘என்னமோ சொல்ல வந்தியே.....’, பார்வையால் கேட்டவள், அவளைத் துருவும் வழக்கம் இல்லாததால், “எல்லாம் ஆற அமர பேசிக்கலாம், முதல்ல வா”, அவளையும் இழுத்துக்கொண்டு குளிக்கச் சென்றாள்.

நாளை, அவளது டீச்சிங்கைப் பார்வையிட, மீனா மேடம் வருகிறார்கள். அன்றைய டீச்சிங்கை வைத்துதான் மதிப்பெண்கள் வழங்குவார்கள். தூக்கம் கண்களை நெருங்குவேனா என்று சண்டித்தனம் செய்தது. அவள் உறங்காமல் இருப்பதைப் பார்த்த வைஷு அவளை இழுத்துக்கொண்டு வெளியேறினாள்.

“இப்போ என்னதான் உன் பிரச்சனை அச்சு.....?”, கோபமாகக் கேட்டாள்.

“வைஷு, எனக்கு இன்னுமே அந்த உணர்வு அடங்கவே இல்லை. என்னமோ உடம்பெல்லாம்....., என்ன செய்யன்னு தெரியலை. இந்தக் கல்யாணம், இப்போ வேண்டாம்னு சொல்லிடட்டுமா. படிப்பு முடிந்த பிறகு பண்ணிக்கறேன்”, அவள் கைகள் கூட நடுங்கியது.

“அச்சு....., என்ன சின்னப் பிள்ளை மாதிரி. எவ்வளவோ தைரியமான வேலையெல்லாம் செய்யும் நீ, ஏன் இப்படி பயப்படுற?. கோபம், சந்தோசம், துக்கம் மாதிரி அதுவும் ஒரு உணர்வு, அதுக்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கணும், எல்லா உணர்வை மாதிரியே அதையும் ஏத்துக்கப் பழகிக்கோ, அவ்வளவுதான்.

அதை விட்டுட்டு, இப்படித் தேவையில்லாமல் மனசைப் போட்டுக் குழப்பிக்காதே. இப்போ, சமத்துப் பொண்ணா வந்து தூங்குவியாம். நாளைக்கு மேம் வரும்போது பக்காவா க்ளாஸ் எடுக்கணும்ல வா”, அவள் மனதை, தனக்குத் தெரிந்த விதத்தில், தெளிய வைக்க முயன்றாள்.

எவ்வளவு தைரியமாக இருந்தாலும் ஏதாவது ஒரு கட்டத்தில், மற்றவரின் ஆலோசனைகள் தேவைப்படும். அதேபோல், தன் வாழ்க்கையில் அனைத்து முடிவுகளையும் சரியாக எடுத்த அர்ச்சனா, இப்பொழுது என்ன முடிவு எடுக்க என்று தெரியாமல் தடுமாறினாள்.

அவளுக்கு, உற்ற தோழியாக வழி காட்டினாள் வைஷு. அர்ச்சனாவும் புரிந்துகொண்டாள்.

‘வைஷு சொல்லுவதும் சரிதானே, ஏன் இதுக்குபோய் பயப்படணும். பாத்துக்கலாம், நம்ம பேட்ரிக் தானே’, மனதுக்குள் எண்ணியவளது கவனம் முழுவதும், பிறகு நாளைக் காலையில் நடத்தப்போகும் பாடத்தைப் பற்றியே சுற்றி வந்தது.

இந்த உறுதி எல்லாம், காலையில் பேட்ரிக்கை சர்ச்சில் காணும் வரை மட்டுமே, மீண்டும் அவள் மனம் தடுமாறி,

பயம் கொண்டது. அந்த உணர்வைக் கண்டு, அவள் பயம் கொண்டாள், என்பதுதான் சரியாக இருக்கும்.

வைஷுவின் கையை இறுக்கப் பற்றிக் கொண்டு, பேட்ரிக் இருக்கும் திக்கை பயமாகப் பார்த்தாள். வைஷுவும் அவள் பயத்தைப் புரிந்துகொண்டாள். 'இதற்கு என்னதான் வழி?', யோசித்தாள்.

அர்ச்சனாவின் பார்வையின் வித்தியாசம் அவனுக்கும் புரிந்தது. பார்வையாலே அவளை என்னவென்று கேட்க, பின்னர் அவன் பக்கமே பார்க்கவில்லை. அன்று, திவ்விய நற்கருணையும் வாங்கச் செல்லவில்லை.

மாஸ் முடிந்தவுடன், யாருக்கும் காத்திராமல் ஹாஸ்டலுக்கு விரைந்தாள். பேட்ரிக், புருவ மத்தியில் முடிச்சுடன் யோசனையாக, அவள் சென்ற திக்கைப் பார்த்தான். பின்னர் வைஷுவைத் தேடினான். அவள் வெளியே செல்வதைப் பார்த்தவன், அவளை நெருங்கினான்.

"ஒரு நிமிஷம்.....", திடுக்கிட்டவள், பேட்ரிக்கைப் பார்த்து சினேகமாக சிரித்தாள்.

"சனாக்கு என்ன ஆச்சு?, ஏன் இப்படி ஓடுறா? ஏதாவது பிரச்சனையா?", தெரிந்தால் சொல்லேன் என்ற தவிப்பு அதில் இருந்தது.

எப்படிச் சொல்லவென்று ஒரு நிமிடம் தயங்கியவள், ஒரு முடிவுடன், தன் தயக்கத்தை, தோழிக்காக ஒதுக்கிவிட்டு, "நடந்துட்டே பேசலாம்.....", சொல்லிவிட்டு, மனதுக்குள் ஒத்திகைப் பார்த்தாள்.

"என்னன்னு சொல்லுங்க", அவள் மௌனம் சகிக்க முடியாமல் கேட்டான்.

"எப்படிச் சொல்லன்னு தெரியலை.....?", இடைவெளி விட்டாள்.

“எதுவா இருந்தாலும் சொல்லுங்க”, தவிப்பின் அளவு கூடியது.

“ஷி இஸ் அப்ரெய்ட்(affraid) ஒப் யூ அண்ட்..... செக்ஸ்”, மிகுந்த தயக்கத்துக்கு மத்தியில், அவன் செவியைத் தீண்டும் அளவுக்கு கூட குரல் வெளியே வராமல் மெதுவாக, மிக மெதுவாகச் சொன்னாள்.

அதிர்ந்துவிட்டான்....., “நீ.....நீங்க சொல்ல வாறது புரியலை”, நெற்றியைத் தடவியவாறே சொன்னான்.

“இதுக்குமேல எப்படிச் சொல்லன்னு தெரியலை. அவகிட்டே, கொஞ்சம் இயல்பான நெருக்கத்தில் பழக முயற்சி செய்யிங்க”, சொல்லிவிட்டுச் சென்றுவிட்டாள்.

‘இவங்க என்ன.... இப்படிக் குழப்பிட்டுப் போறாங்க. என்கிட்டே பயம், செக்ஸ் கூட பயம், இதில் நான் எப்படி அவகிட்டே இயல்பான நெருக்கத்தில்....., அப்படின்னா.....? ஹையோ.... இந்தக் கல்யாணம் முடியதுக்குள்ளே நான் ஒரு வழி ஆயிடுவேன் போல.

இந்த லட்சணத்தில் அவ ஓடி வேற ஒளியிறா. இதில் நான் எங்கே....., எனக்கே, அவளை நெருங்கினால் பத்திக்குமோன்னு பயம்மா இருக்கு. எப்படிடா இந்த இருபது நாளை ஓட்டன்னு நினைச்சுட்டு இருக்கேன். இதில் இப்படி வேற ஒரு குழப்பமா’, எங்கேயாவது முட்டிக் கொள்ளலாம் போல் இருந்தது அவனுக்கு.

வழக்கம்போல், அவளைப் பள்ளிக்கு அழைத்துசெல்ல வந்தான். “பேட்ரிக்... நான் ஆட்டோவில் போய்க்கவா?”, அவன் கண்களைப் பார்க்காமல் கேட்டாள்.

“முதல்ல வண்டியில் ஏறு.....”, அவன் குரலில் இருந்த கடினத்தில், எதுவும் சொல்லாமல் ஏறினாள். பள்ளியில் இறக்கி விட்டவன், “ஆல் தி பெஸ்ட், நல்லா பண்ணு சரியா?”, சிரித்தவாறே வாழ்த்திவிட்டுச் சென்றான்.

பள்ளிக்குள் சென்ற பிறகு, வேறு எந்த சிந்தையுமே எழவில்லை. மீனா மேடம் வந்தவுடன், அவர்களுடன் சேர்ந்து தன் வகுப்பிற்குள் நுழைந்தாள். “குட் மார்னிங்.....”, அவர்களும் திரும்ப வாழ்த்த வகுப்புத் துவங்கியது.

அன்றைய வகுப்பு, ஒன்பதாம் வகுப்பு பி பிரிவில். அனைவருமே இவளைவிடவும் பெரிய மாணவர்களாகவே இருந்தார்கள். ‘இவளுக்கு எப்படி அடங்குவார்கள்?’, என்ற யோசனையில் மீனா இருக்க, அவள் வகுப்போ ஒரு சிறு தடங்கல் கூட இல்லாமல் சென்றது.

“ஆற்றல் மூலங்கள்”, பற்றி வகுப்பை நடத்தினாள். தன்னிடம் கொடுத்த பாடத் திட்டத்தில் இருந்த அனைத்து கருத்துக்களையும் மிக நேர்த்தியாக, சார்ட் மூலமாக, இயற்கையாகக் கிடைக்கும் மண், செடி போன்றவற்றைக் கொண்டு கூட அழகாக, நேர்த்தியாக வகுப்பை நடத்தினாள்.

அவள் இடை இடையே கேட்ட கேள்விகளுக்கு, கும்பலாக பதில் சொல்லாமல், ஒருவர் ஒருவராக எழுந்து பதில் சொன்னவிதம் அதைவிட அருமையாக இருந்தது. பாட வேளை முடிந்து, ஸ்டாப் ரூமில் சென்று, அர்ச்சனாவை வாயாரப் புகழ்ந்தார்.

அங்கிருந்த பெமிக்கு, காதில் புகை வராத குறைதான். ஏனென்றால் முந்தின நாள்தான், அவளது வகுப்பு அடங்காமல் இருக்கிறதென்றும், க்ளாஸ்சை ஹேன்டில் செய்யத் தெரியவில்லை என்றும் சொல்லியிருந்தார். பொதுவாகவே எந்த பள்ளியிலும், எந்த மாணவரும், பயிற்சிக்குச் செல்லும் ஆசிரியர்களுக்கு, அடங்க மாட்டார்கள்.

அர்ச்சனாவின் வகுப்பிலும் அப்படித்தான். ஆனால் அதற்கென்று அவள் ஒரு மந்திர வித்தை வைத்திருந்தாள். போனவுடன் ஐந்து நிமிடம் கதைதான் பேசுவாள். மீதி முப்பது நிமிடம் பாடம், அடுத்த கடைசி ஐந்து நிமிடம் கதை.

அவர்கள் அமைதியாக இல்லையென்றால், கடைசி ஐந்து நிமிடமும் பாடம் எடுப்பேன் என்று மிரட்டுவாள். இந்த மந்திரம் சரியாக வேலை செய்தது எனலாம். ஆனால் தன் மேடம் வரும் நாள் மட்டும், கொஞ்சம் அமைதியாக இருக்க, கேட்டுக் கொண்டாள்.

மாணவர்களும், மகுடிக்குக் கட்டுப்பட்ட பாம்பாக அன்று அமர்ந்திருந்தார்கள். மேடம், வேறு மாணவிகளின் வகுப்புகளை கவனிக்கச் செல்லவே, அனைவரும் இவளை மொய்த்தார்கள். இவளும், தான் செய்யும் மந்திர வித்தையை, அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தாள்.

“ஏண்டி....., எங்களைத்தான் ஜோக் சொல்லி கவுக்குறன்னா பசங்களையுமா.....?”, ஒருத்தி சொல்ல அனைவரும் சிரித்தார்கள்.

_____

மாலையில், மூன்று முப்பதுக்கு அவளை வந்து அழைத்துபோனான். ஆனால், அவளை ஹாஸ்டலில் விடாமல், பீச்சுக்கு அழைத்துச் சென்றான். அவள் கையைப் பிடித்து இழுக்காத குறையாக, இழுத்துச் சென்று மணலில் அமர்ந்தான். அவளையும் அருகில் அமர வைத்தான்.

“உனக்குக் கடல் அலையில் கால் வைக்கப் பிடிக்குமா? கொஞ்சநேரம் அங்கே நிற்கலாம்”, எதுவும் பேசாமலே எழுந்து சென்று கடல் அலையில் நின்றார்கள். லேசான தூறலும், கடல் கொந்தளிப்பின் காரணமாகவும், பீச் கொஞ்சம் வெறிச்சோடியே இருந்தது.

அவனது நெருக்கம், கொஞ்சம் பயத்தைக் கொடுத்தாலும், அவன் பிடியில் இருந்த, தன் கையை விடுவிக்க முயலாமல் அவனுடனே இணைந்து நின்றாள். எவ்வளவு நேரம் நின்றார்களோ, மழையின் தூறல் வலுவாகத் துவங்கவே, “என்னங்க போகலாம்.....”, மென்மையாகச் சொன்னாள்.

“கொஞ்ச நேரம் இரேன் போகலாம்.....”, அவளிடம் சொல்லிவிட்டு அலையில் இன்னும் அசையாமல் நின்றான். அவன் செய்கை வித்தியாசமாக இருந்தது அவளுக்கு.

“டேய், இந்தத் தண்ணியில் விளையாடணும்னா, நீ தனியா வந்து நிக்கவேண்டியதுதானேடா, ஏன் என்னையும் இப்படி இழுத்து வந்து வேடிக்கை பாக்குற?. ஏற்கனவே குளிர் எடுக்குது, இதில் நீ வேற படுத்துற”, அவன் செய்கை பிடிக்காமல், அவன் கை பிடித்து இழுத்துக் கேட்டாள்.

“இப்போ கேட்டியே..... இது, இதுதான் என்னோட சனா.....,நேத்துல இருந்து, எனக்கு வேற யாரோடவோ, அதாவது ஆள் மாத்திக் கூட்டிட்டு சுத்துற மாதிரி ஒரு பீல். எதா இருந்தாலும் இப்படிப் பேசு, அதை விட்டுட்டு, ஓடி ஒளிஞ்சா ஆச்சா. என்னைப் பாத்தா அவ்வளவு காவாலிப் பய மாதிரியா இருக்கு?

என்னமோ, நானும் கொஞ்சூண்டு நல்லவன்தான்”, அவன் சொன்ன விதத்தில் அவள் இதழ்கள் புன்னகையில் விரிந்தது.

“சனா....., எந்த நேரத்திலும், உனக்குப் பிடிக்காத எதையுமே செய்ய மாட்டேன். நல்லா உன் மனசில் பதிய வச்சுக்கோ....., எந்த நேரத்திலுமே.....”, அவள் கண்களைப் பார்த்து உறுதியாகச் சொன்னான்.

அவன் சொல்ல வருவது, அவளுக்குச் சரியாகப் புரிந்தது. ஆனாலும் குறும்புக்கார அர்ச்சனா தலை தூக்க, “அப்போ, இந்த டியூசன் எடுக்கத்தான், என்னை இங்கே தள்ளிட்டு வந்தீங்களா?”, இடுப்பில் கையைக் கொடுத்து முறைத்தாள்.

“அது மட்டும் இல்லை....., இந்த குளிருக்கு இதம்மா....., பதம்மா....., ஏதாவது வாங்கலாம்னு.....”, முதலில் திகைத்தவள், அவன் குரலில் தெரிந்த கேலியில் இயல்பானாள்.

“அதுக்கென்ன.... தந்துட்டா போச்சு.....”, சொன்னவாறு, தன் கைகள் இரண்டையும் பரபரவென்று தேய்த்தாள்.

“ஏய்.... நான் என்ன கேட்டால்....., நீ என்ன செய்யப் பாக்குற.....”, சொன்னவாறு ஓட்டம் பிடித்தான். இதே மனநிலையில் ஹாஸ்ட்டல் வந்தார்கள். அவளை இறக்கி விட்டுவிட்டு, அவள் செல்லப் போகையில், “சனா....., பயம் போயிடுச்சா....?”, அவன் கேள்வியில், திரும்பி அவனைப் பார்த்தாள்.

வசீகரமாக அவளைப் பார்த்து சிரித்தான். “போடா லூசு.....”, தலையை வெடுக்கென ஆட்டிச் சொன்னவாறு ஓடிப் போனாள். சிரித்தவாறே அவனும் சென்றான். இருவருக்கும் நடுவில் இந்தப் புரிதல் தொடருமா?

பகுதி - 29

திருமணம் ஆயிரம் காலத்து பயிராம்

நானும் நட்டுவிட்டேன்

அது நாற்றாகி கதிராகுமா?

இல்லை பதராகுமா?

நீண்ட இருபது நாட்கள்....., அந்த இருபது நாட்களில், முதல் பத்து நாட்கள் பள்ளி செல்வதிலேயே கழிந்தது. அதில் பேட்ரிக்குடனான அர்ச்சனாவின் புரிதல், அதிகமானது என்றே சொல்லலாம். அவனும் அவளிடம் இயல்பான நெருக்கத்தில், அவள் மனதை பாதிக்காத விதத்திலேயே நடந்துகொண்டான்.

அவனது நெருக்கத்தை, பார்வையை, பேச்சை சரியான விதத்திலே அர்ச்சனாவும் புரிந்துகொண்டாள். தன் மனச் சஞ்சலங்கள் தேவையில்லை, அது திருமணம் முடியப்போகும் பெண்களுக்கே உரிய சிறு பதட்டம் என்பது அவளுக்கும் புரிந்துபோனது.

அதைவிட, இருவரும் டீனேஜ் வயதில் இருக்கும் சிறு பிள்ளைகள் அல்ல. அவளும் இருபத்துமூன்று வயது முடிந்த பருவ மங்கை, அவனோ இருபத்தேழு வயது முடிந்த ஆண்மகன். முரட்டு மிருகங்களுக்கு வைத்தியம் பார்க்கும் மருத்துவன்.

இருவருக்குமே வாழ்க்கையைப் பற்றிய தெளிவு இருந்தது. அதைவிட, பேட்ரிக் அர்ச்சனாவை, அவள் மனதை, நன்கு புரிந்து வைத்திருந்தான். அவள் உள்மன ஏக்கங்கள், அவனுக்குத் தெரியும். அவளுக்குத் தான் கணவனாக இருப்பதைவிட, நல்ல நண்பனாக, அம்மாவாக, அப்பாவாக, சகோதரனாக முதலில் மாறவேண்டிய அவசியம் அவனுக்கும் புரிந்தே இருந்தது.

அர்ச்சனாவும், பேட்ரிக்கின் பாசத்தில், தாயன்பைக் கண்டாள். கண்டிக்கும் வேளையில் தகப்பனைக் கண்டாள், தன் செயல்களில் உறுதுணையாக இருக்கும் வேளையில், நல்ல சகோதரனை அவனுள் உணர்ந்தாள்.

தூரத்தில் பார்க்கும்பொழுது, மெல்லிய சிரிப்பு, அருகில் நெருங்கினால், கைகளை அழுத்தி, “நான் இருக்கிறேன்” என்று அவன் சொல்லாமல் சொல்லும் உடல் மொழிகள் கூட அவளுக்குத் தெரியும். திருமணம் என்று சொல்வதற்கு முன்பு கூட, அவன் தன்னை அணைக்கவும், முத்தமிடவும் கொண்டிருந்த மோகம், இப்பொழுது, அவனிடம் இல்லாமல் போனதையும் உணர்ந்திருந்தாள்.

திருமணப் பத்திரிக்கையை கொடுக்கவந்த பொழுது, விசிட்டர் அறையில் இருந்த தனிமையில் கூட, தன்னை மெல்லிதாக அணைத்து, நெற்றியில் முத்தமிட்டு விலகியது....., என்னமோ குறைவதைப் போல உணர்ந்தாள்.

ஆனால், இதை என்னவென்று கேட்கத்தான் அவளுக்கு முடியவில்லை. கல்லூரியில் அனைவருக்குமே அர்ச்சனாவின் திருமணம் பற்றிய அறிவிப்பு சொல்லப் பட்டது. ஆனால் திருமணம் அவளது ஊரில் என்பதால், யார் யார் செல்வார்கள் என்பதுதான் சொல்ல முடியாததாக இருந்தது.

இவர்களது திருமணம் முடிந்த பதினைந்தாவது நாள் அவர்களுக்கு முதல் செமெஸ்டர் எக்ஸாம் ஆரம்பமாக இருந்தது. அதற்கு ஒரு வாரம் முன்பு, மாடல் எக்ஸாம். மாடல் எக்ஸாம் முடிந்த ஒரு வாரம், செமெஸ்டர் எக்ஸாம்க்கு படிக்க விடுமுறை.

ஆகமொத்தம், அர்ச்சனா மாடல் எக்ஸாம் எழுதவேண்டுமென்றால், அவள் திருமணமான மறுநாள் காலையில் சென்னையில் இருக்கவேண்டும்.

அப்படியென்றால், திருமணமான அன்றே அவள் சென்னைக்குக் கிளம்பவேண்டிய கட்டாயம்.

ஒருநாள் தாண்டி எக்ஸாம் துவங்க முடியாதா? என்று பேட்ரிக் தாயிடம் கேட்க, அவனை எரித்துவிடுபவர்போல் பார்த்தார் ஸ்டெல்லா.

“காலேஜ் என்னோடதில்லை, நான் அங்கே வேலைதான் பாக்குறேன்”, காட்டமாகச் சொல்லிவிட்டு, எழுந்து சென்றுவிட்டார்.

“என்னப்பா இது.....?”, கவலையாகக் கேட்ட மகனை, தோளைத் தட்டிவிட்டு, சென்றுவிட்டார் பிரான்சிஸ். யாரின் மனநிலைக்காகவும், திருமணத்தைத் தவிர்க்க, அவன் தயாராக இல்லை.

ஊரில், திருமண வேலைகள் ஜரூராக நடந்துகொண்டிருந்தது. திங்கட்கிழமை திருமணத்திற்கு, வெள்ளிக்கிழமை மாலைதான் ட்ரெயின் டிக்கெட் போட்டிருந்தது அர்ச்சனாவிற்கு. பேட்ரிக்கின் சொந்த ஊரும் நாகர்கோயில் அருகே தக்கலை என்பதால், அவர்களது வீட்டுக்கு, திருமண வேலைகளைப் பார்க்க, ஒரு வாரம் முன்பே அவன் ஊருக்குச் செல்லவேண்டிய கட்டாயம்.

அவனுக்கு, அர்ச்சனாவை விட்டுச் செல்வதில், விருப்பம் இல்லை. ஆனால் வேறு வழியும் இருக்கவில்லை. ஏற்கனவே, முகத்தை தூக்கிவைத்துக்கொண்டு ஸ்டெல்லா அலைகிறார். இதில் அர்ச்சனாவுடன் வருகிறேன் என்று சொன்னால்....., தன் நிலை என்னவாகும் என்பது அவனுக்குத் தெரிந்ததால் அடக்கிக் கொண்டான்.

பத்துநாள் டீச்சிங் ப்ராக்டிஸ் முடித்து, வகுப்புக்கு வந்த அர்ச்சனாவை, அனைவரும் சூழ்ந்துகொண்டு கேலி செய்தார்கள். அவளும் அவர்களுக்கு பதில் கொடுத்தாள். ஒரு மாதம் கழித்துப் பார்த்த வகுப்புத் தோழிகளுடன், நட்பு பாராட்டினாள்.

“கல்யாணப் பொண்ணே..... என்ன, ஊருக்குப் போகலையா.... இங்கே இருக்க?”, ஒருத்தி கேட்க,

“கல்யாணத்துக்குப் பிறகுதான் வேலை இருக்கும்....., இப்போ போய் என்ன செய்ய?”, இவள் கண்ணடித்துக் கேட்ட விதத்தில் அவள்தான் கலவரமானாள்.

“அச்சு....., எங்களுக்கும் டேஷ்(----------) பத்தி சொல்லித்தருவியா?”, ஒரு குறும்புக் காரி கேட்க,

“அட.... உனக்கு சிடியே கொண்டுவந்து தாறேன்”, இவள் சொன்ன பதிலில் தெறித்து ஓடினாள் அவள்.

இன்னும் நிறைய கேலி கிண்டல்களுக்கு மத்தியில், வைஷு, ஜூடியின் அருகில் வந்து அமர்ந்தாள்.

“பொண்டாட்டி....., இப்படி க்ளாஸ்ல சும்மா உக்காந்து இருக்குறது எவ்வளவு சுகம் இல்ல.....”, கேட்டவாறு அந்தச் சேரில் பொருத்தியிருந்த பேடில் படுத்துக் கொண்டாள்.

இவள் உற்சாகமாகச் சொல்ல, அவர்களின் முகங்களில் அந்த சந்தோசம் கொஞ்சம் கூட இல்லை. “ஏய் பொண்டாட்டி, எனக்குக் கல்யாணம் முடியப் போறது, உனக்கு அவ்வளவு கஷ்டமா இருக்கா? என்னமோ மாமியார் வீட்டுக்கு மகளை அனுப்பி வைக்கும் அம்மா மாதிரியே மூஞ்சிய வச்சுட்டு இருக்கியே”, அவள் தாடையைப் பிடித்து ஆட்டினாள்.

“உங்க மூஞ்சி.....”, ஜூடி எகிறினாள்.

“ஏய், ஏண்டி சிலுத்துக்குற? நான் அவளைத்தான் சொன்னேன் உன்னை இல்லை. நீ சொல்லுடா வைஷு”, ஜூடியின் கன்னத்தில் ஒரு குத்து விட்டுவிட்டு வைஷுவிடம் கேட்டாள்.

“அச்சு.... இன்னும் சரியா பன்னிரண்டாவது நாள் நமக்கு மாடல் எக்ஸாம்.....”, கவலையாகச் சொன்னாள் வைஷு.

“அட, காலேஜுன்னு ஒண்ணு இருந்தால், எக்ஸாம் என்று ஒன்று இருப்பது ஆச்சரியமா?”, விளையாட்டாகக் கேட்டாள்.

வைஷு அவள் விளையாட்டில் கலந்துகொள்ளாமல் முகத்தை திருப்ப, “அச்சு....., உங்களுக்கு நிஜமாவே புரியலையா? இன்னும் நமக்கு பத்து நாள்தான் டைம் இருக்கு. அதுக்குள்ளே நாம நோட்ஸ் எடுக்கவே டைம் ஆகிடும். இதில் எங்கே இருந்து படிக்க. எனக்கு பயம்மா இருக்கு. இதுவரை ஒரு சாப்டர் கூட நாம தொட்டுப் பாக்கலை”, அவள் குரலில் அப்படி ஒரு நடுக்கம்.

“இப்போ உங்களுக்கு நோட்ஸ் தானே வேணும். ஒரு நிமிஷம்.....”, வேகமாக எழுந்து மைக் முன்னால் சென்று நின்றாள்.

“இந்த அச்சுக்கு, இதே வேலையா போச்சு, இப்போ எல்லோரையும் என்ன சொல்லி, கிளப்பப் போகுதோ”, ஜுடி புலம்பினாள்.

“ஹாய் ப்ரண்ட்ஸ், எல்லோரும் உங்க டீச்சிங் ப்ராக்டிஸ நல்லபடியா முடிச்சுட்டீங்கன்னு நினைக்கிறேன். இப்போ இன்னும் பத்து நாளில் நமக்கு எக்ஸாம். அதுக்கு நாம ப்ரிபேர் ஆகணும். அதுக்கு நமக்கு நோட்ஸ் வேணும்.

என்கிட்டே, உளவியலில் இருக்கும் ஐந்து சேப்டர் நோட்ஸ்ம் இருக்கு. அது உங்களுக்கு வேணும்னா....., மத்த பேப்பர்களோட நோட்ஸ் எனக்குத் தந்துட்டு, இதை நீங்க வாங்கிக்கலாம், பிறகு செராக்ஸ் போட்டுட்டு, திரும்பத் தந்துடலாம்.

இப்போ அப்படி யார்ட்டயுமே நோட்ஸ் இல்லனாலும் பரவாயில்லை. கூடிப் பேசி ஒரு முடிவு பண்ணி, நோட்ஸ் ரெண்டே நாளில் எல்லோருக்கும் கிடைக்கிற மாதிரி செஞ்சுடலாம், எப்படி.....?”, அவள் கேட்கவே, அங்கிருந்த அனைவரும் அதற்கு முன்வந்தார்கள்.

அவர்கள் கூடிப் பேசும் வேளையில், மேடையிலிருந்து இறங்கி ஓடி வந்தவள், “ஏய் பொண்டாட்டி, பஞ்சுமிட்டாய் வாங்கடி....., வீணா....., சக்தி....., ஷீபா.....”, ஓடிவாங்க. அனைவரையும் இழுத்துக் கொண்டு அவள் சென்ற இடம் லைப்ரரி.

“எதுக்குடி இங்கே இழுத்துட்டு வாற?” “என்ன விசயம்?” “எதுக்கு இவ்வளவு அவசரம்?”, யார் கேள்விக்கும் பதில் சொல்லவில்லை. வேகமாக ஒரு பேப்பரில் ஐந்து புக் பெயர், ஆத்தர் பெயர், அனைத்தும் தனித் தனியாக எழுதி, அவர்கள் கையில் கொடுத்தாள்.

“ஏய், எல்லோரும் நல்லா கேளுங்க, உள்ளே போய் இதில் இருக்கும் எந்த புக் கிடைச்சாலும், உடனே எடுத்துட்டு வாங்க. குறிப்பா, ஐந்து பேரும் ஒருத்தருக்கு ஒருத்தர் பேசாதீங்க, தனித் தனியா போங்க. தயவுசெய்து என் பேரை, தப்பித் தவறி கூட சொல்லிடாதீங்க. சரியா பத்து நிமிஷம்தான் உங்க டைம்.

உளவியல் புக் எல்லாம் வலதுபக்கம் இருக்கும் ராக்ல இருக்கு. சீக்கிரம் போங்க. நான் இங்கே பக்கத்து ரூமில் இருக்கேன்”, அவர்களைப் பேச அனுமதிக்காமல், உள்ளே அனுப்பினாள்.

சரியாக ஐந்து நிமிடத்தில் அனைவருமே ஆளுக்கொரு புத்தகத்துடன் வர, வேகமாக, ஐந்து சாப்டர்களைச் சொல்லி, அதை தேடவைத்து, ஒரு ஓரத்தில் இருந்த செராக்ஸ் ரூமில் ஆறு காப்பி எடுத்தாள்.

அனைவரும், விழி விரித்து அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். அடுத்த அரைமணி நேரத்தில் உளவியல் சம்பந்தமான நோட்ஸ் அவர்கள் கைகளில்.

“அடிப்பாவி.... நோட்ஸ் இல்லாமலே நோட்ஸ் இருக்குன்னு புருடா விட்டியா?”, “கில்லாடிடி நீ”, “உனக்கு உடம்பெல்லாம் மூளையாடி”, ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு விதத்தில் வியக்க,

“உடம்பு புல்லா இருந்தால் அதுக்கு பேரு கொழுப்பு, எவடி மூளைன்னு சொன்னவ? பிச்சுபுடுவேன்”, அவர்கள் பேச்சை எல்லாம் விடுத்து கேலியில் இறங்கினாள்.

அவள் குணம் தெரிந்ததால் அவர்களும் அப்படியே விட்டுவிட்டார்கள். “இப்போ வீணா, சக்தி நீங்க ரெண்டுபேரும் போய் உங்க டீம் மெம்பர்ஸ்க்கு இந்த நோட்ஸ் கொடுங்க. ஜுடி நீ உன் டீமுக்கு கொடு. வைஷு நீ நம்ம டீம்க்கு....., நான் ஏதாவது மீன் சிக்குதான்னு பாக்குறேன்”, அவர்களை அனுப்பிவிட்டு, வேறு நோட்ஸ் கிடைக்க வலை வீசினாள்.

அடுத்த இரண்டு நாட்களில் அனைவரின் கையிலும் ஆறு பேப்பர்களின் நோட்ஸ்சும் இருந்தது. அவர்களது வகுப்பிலேயே எப்பொழுதும் இன்னோவேசன் மேம் தான் ரொம்பவே காட்டமாக நடந்துகொள்வார்.

அவரே சேலன்ஜஸ் இன் எஜுகேஷன் பேப்பரும் எடுத்ததால், அவர் வகுப்பில் அனேகம்பேர், நோட்ஸ் எழுதவும், தூங்கவுமே செய்வார்கள். ஆனால் அர்ச்சனாவை சுற்றியிருக்கும் கூட்டம் மட்டும் எப்பொழுதும் கலகலப்பாகவே இருக்கும். ஏனென்றால் அவ்வளவு கமெண்ட்ஸ் அடிப்பாள்.

அன்றும் அப்படித்தான், இன்னோவேசன்(Innovation) பற்றியும், இன்வென்சன்(invention) பற்றியும், ஆங்கிலத்திலேயே வகுப்பெடுத்துக்கொண்டு இருந்தார்கள். அவர்கள் வகுப்பை ஒருமணிநேரம் கவனிப்பதே பெரும் பாடு, இதில் இரண்டு மணிநேரம்....., நொந்து நூடுல்ஸ் ஆனார்கள் அனைவரும்.

தினமும் கேலிசெய்யும் அர்ச்சனாவுக்கே அன்று வெறுப்பில் தூக்கமே வந்துவிட்டது. “அச்சு ஏதாவது சொல்லுடி....., தூக்கமா வருது”, பின்னால் இருந்து ஒருத்தி, காலை சுரண்டினாள்.

“என்னடி சொல்லச் சொல்லுற, இன்னோவேசன்க்கும், இன்வென்சன்க்கும் இன்னைக்கு வித்தியாசம் சொல்லித்தராமல் விட மாட்டேன்னு கங்கணம் கட்டிக்கிட்டு நிக்குதுடி அது, நான் என்ன செய்யட்டும். எனக்கே, மண்டையைப் பிச்சுகிட்டு ஓடணும் போல இருக்கு....., ஆஆ.....”, சொல்லிவிட்டு, தலையைப் பிடித்துக்கொண்டாள்.

“ஏய், எவளாவது இவளைப் பிடிச்சு அடக்குங்கடி, விட்டால் நிஜமாவே ஓடிடுவா”, அவள் சொல்லவே மெல்லிய சிரிப்பலை எழுந்தது.

“விடுங்கடி....., அப்படியாவது அது அறுவையை நிறுத்திட்டு ஓடுதான்னு பாக்கலாம்.....”, அவள் கவலை அவளுக்கு.

“ஏய், என்ன கிண்டலா? நானே சிம்பிளா சொல்லவேண்டிய விஷயத்தை இந்த மேம், ஊதி ஊதி பெருசாக்குதேன்னு கடுப்புல இருக்கேன், நீ வேற ஏண்டி”, ஓங்கி அவள் காலில் மிதித்தாள்.

“ஸ்ஸ்ஸ்.....ஆஆ....., என்னடி சொல்லுற, அந்த மேம் இந்த விளக்கு விளக்கியே ஒரு மண்ணும் மண்டையில் ஏறலை, இதில் நீ சிம்பிளா சொல்லுவியா? எங்கே சொல்லு?”, அவள் பின்விளைவை யோசிக்காமல் சொன்னாள்.

வைஷுவைப் பார்த்து கண்ணடித்தாள் அர்ச்சனா, அவள் அப்படிச் செய்யவுமே, ஏடாகூடமாக எதையோ சொல்லப் போகிறாள் என்பது வைஷுக்குத் தெரிந்தது.

“ஏய், நல்லா யோசிச்சுக்கடி.....”, வைஷு, வாய்மேல் கையை வைத்து மறைத்தவாறு சொல்ல,

“ஈஸியா சொல்லித்தாறேன்னு அவ சொல்லுறா, நீ ஏண்டி விட மாட்டிக்க, அச்சு நீ சொல்லு”.

“அதாவது....., எங்க அப்பா, எங்க அம்மாவைக் கண்டுபிடிச்சார்..... இது இன்வென்சன், அதேயிது....., எங்க அப்பாவும், அம்மாவும் சேர்ந்து என்னைக் கண்டுபிடிச்சாங்க....., இது இன்னோவேசன். இந்த விஷயத்தை, இவ்வளவு சிம்பிளா சொல்லித் தாறதை விட்டுட்டு, என்ன விளக்கு விளக்குது பாரேன்”, அர்ச்சனா சீரியஸாக எதையோ சொல்லப் போகிறாள் என்று காத்திருந்தவர்கள்,

அவள் இப்படி ஒரு விளக்கத்தைச் சொல்லவே, அந்த இடத்தில் சிரிக்கவும் முடியாமல், அதை அடக்கும் வழியும் தெரியாமல், அவளிடம் விளக்கம் கேட்டவளை, ஒருவர் மாற்றி ஒருவர் குமுறினார்கள்.

‘வைஷு அவளை, ‘உனக்குத் தேவையாடி’, என்பதுபோல் பார்க்க, “நீ சொன்னப்பவே நான் சுதாரிச்சு இருந்துருக்கணும், கேட்டேனா....., எவடி அவ என்னை ரெண்டு தடவை கிள்ளியது”, அலறினாள் அங்கே இருந்து.

“இப்போ யாராவது ஒரு ஆள் சிம்பிளா விளக்குங்க”, மேம் சொல்ல, “நான் சொல்லவா.....?”, அர்ச்சனா கேட்க, தாயே வேண்டாம்....., மொத்தமாக அலறினார்கள் அவர்கள். இப்படியாக, கேலியும் கிண்டலுமாக, அந்த வாரம் சென்றது.

வெள்ளிக்கிழமையும் வந்தது. அனைவருமே படிப்பில் மூழ்கி விட்டார்கள். மாடல் எக்ஸாம் செவ்வாய் துவங்குவதால், ஹாஸ்டல் மொத்தமும், நோட்சும் கையுமாகவே அலைந்தார்கள். அன்று சாயங்காலம் அர்ச்சனாவிற்கு ட்ரெயின். அவளுடன் வைஷுவும் செல்வதாக முடிவாகி இருந்தது.

ஜூடி, வர முடியாது, படிக்கவேண்டும் என்று சொல்லிவிட்டாள். வைஷுவும் வரவில்லை என்றுதான் சொல்ல நினைத்தாள். ஆனால் அர்ச்சனா வருத்தப்படுவாளே என்பதால், கணவனிடம் அனுமதி வாங்கி, அவளுடன் செல்லக் கிளம்பினாள்.

கிளம்பிச் செல்லும் முன்னர், லஷ்மியைப் பார்த்து, அவளுக்கு ஒரு சுடிதாரைக் கொடுத்தாள். அவளைத் தன்னுடன் அனுப்ப முடியாது என்று வார்டன் சொன்னதாலே, அழைத்துச் செல்லவில்லை, என்று கவலையுடன் கூறினாள்.

வார்டன் சிஸ்டர், பிரின்சிபால் சிஸ்டர் அனைவரிடமும் சொல்லிவிட்டு, பேட்ரிக், ஊரில் இருந்தவாறே, இங்கே ஏற்பாடு செய்திருந்த கால்டாக்ஸியில் ஏறி அமர்ந்தாள். எழும்பூர் ரயில் நிலையத்தில் இருந்து, சரியாக ஐந்து இருபத்தைந்து மணிக்கு கன்னியாகுமரி விரைவு வண்டி பயணப்பட்டது.

இரண்டாம் வகுப்பு AC பெட்டியில், சைடு சீட்டில், வைஷுவும், அர்ச்சனாவும் எதிரும் புதிருமாக அமர்ந்து பயணப்பட்டார்கள். எண்ணமெல்லாம், பேட்ரிக்கையே சுற்றி வந்தது. அவள் எண்ணவோட்டம் புரிந்தவள்போல், கையில் இருந்த நோட்ஸில் கவனமானாள் வைஷு.

இல்லையென்றாலும், அவள் பேசி எதுவும் சாதித்துவிடப் போவதில்லைதான். “வைஷு....., உன்னோட படிப்பை நான் கெடுக்குறேனா?”, மெல்லிதாகக் குற்றவுணர்ச்சி எட்டிப் பார்த்தது.

“இவ்வளவுநேரம் கனவில்தானே இருந்த, அதையே கண்டினியூ பண்ணு”, சொல்லிவிட்டு, நோட்ஸில் தலையை நுழைத்துக் கொண்டாள்.

பின்னர், எட்டு முப்பது மணியளவில் சாப்பிட்டுவிட்டு, படுக்கத் தயாராகினர். ஆனால், வைஷு அவளை பத்துமணிவரை பிடித்துவைத்து பேசிக் கொண்டிருந்தாள். அர்ச்சனா, அவளது காதல் கதையைக் கேட்க, வெட்கப்பட்டவாறே சொல்லிக் கொண்டுவந்தாள்.

இடையில் நினைவு வந்தவளாக, “அச்சு, அன்னைக்கு லைப்ரரியில் நீ ஏன் உள்ளே வரவே இல்லை?. எங்களையும், உன்னைப் பற்றி பேசக் கூடாதுன்னும், தனித் தனியாகவும்,

ஏன் போகசொன்ன?”, உண்மையான அக்கறை அவள் குரலில்.

“அது ஒண்ணும் பெரிய விஷயம் இல்லை. நான் உள்ளே வந்தால் பேசாமல் இருக்க மாட்டேன், அதைவிட, அந்த சிஸ்டர்க்கு என்னைக் கண்டால் ஆகாது. ஏற்கனவே, நான் ஒரு புக் எடுக்கப் போனப்போ, அது ரொம்ப ரேர் புக், இங்கே இருந்தே நோட்ஸ் எடு, வெளியே எல்லாம் எடுத்துப் போக முடியாது, அப்படி இப்படின்னு பேசுச்சு, அதான்”, பூசி மெழுகினாள். வைஷு மேலே எதுவும் துருவவில்லை.

இருவருக்கும், உறக்கம் கண்ணைக் கட்டவே, அர்ச்சனா மேலே ஏறி படுத்துக் கொண்டாள். காலையில், ஆறு முப்பதுக்கு நாகர்கோயில் ரயில் நிலையத்தில் இருவரும் இறங்க, ஜான் இவர்களுக்காகக் காத்திருந்தான்.

“டேய் தடியா, இதென்ன புதுசா.....?”, அவளை அழைக்க வந்திருப்பதைத்தான் அவள் கேட்டாள்.

அவளுக்கு பதில் சொல்லாமல், “வாம்மா.....”, என்று ஒற்றை அழைப்புடன், இருவரின் பையைத் தூக்கிக்கொண்டு, முன்னால் சென்றான்.

“வைஷு... எங்க வீட்டில், அவ்வளவா யாரும் பேச மாட்டாங்க, கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கோ”, சங்கடமாகச் சொன்னாள்.

வைஷு அவள் சொல்வதைக் கேட்டு சிரித்தாள். “என்ன.....? நாமளே பேசமாட்டோம், நமக்கேவான்னுதானே நினைச்சு சிரிச்ச?”, அவள் கேள்வியாகக் கேட்க, வைஷுவின் புன்னகை பெரிதாகி, ஆமாம் என்று சொல்லாமல் சொன்னது.

அர்ச்சனாவின் வீடு ஒரு பெரிய பங்களா. கீழே சமையற்கட்டு, ஸ்டோர் ரூம் சேர்த்து மொத்தம் ஏழு அறைகள். மாடியில் மொத்தம் ஐந்து அறைகள். அதில் ஒன்று அர்ச்சனாவினுடையது.

“அச்சு, உன் தோழியை, கீழே இருக்கும் ரூம்ல தங்க வைக்கவா.....?”, ஜான் கேட்க, “இல்லண்ணா, அவ என்னோடவே தங்கட்டும்”, சொல்லிவிட்டு, தோழியை அழைத்துக்கொண்டு, அறைக்குச் சென்றாள்.

அந்த பங்களாவையே அடைத்துப் பந்தல் போட்டிருந்தது. பக்கத்தில் இருந்த இடத்திலும் பந்தல், அனைத்தையும், ஆச்சரியமாகப் பார்த்தாள் வைஷு. “அச்சு, எதுக்கு இவ்வளவு பெரிய பந்தல்?”, தன் வியப்பைக் கேட்டாள்.

“ஓ அதுவா.....? இங்கே வீட்டிலேதான் பந்தி பரிமாறுவாங்க, அதுக்குதான் இவ்வளவு பெரிய பந்தல். அதைவிட, வீட்டில் முதல் கல்யாணம்....., சோ, அப்பாவோட வீரப் பிரதாபங்களைக் காட்டணுமே.....,”, ஒருவித முகச் சுளிப்புடன் சொன்னாள்.

“சரிவா, குளிச்சுட்டு சாப்பிடப் போகலாம்”, வைஷுவை அழைத்துக்கொண்டு, சாப்பாட்டு அறைக்குச் சென்றாள்.

“வா மக்ளே(மகளே) எப்போ வந்த, நான் விளைக்குப்(தோட்டத்துக்கு) போயிருந்தேன். தேங்கா பறிச்சாங்க. வாம்மா....., இருங்க நானே தோச சுட்டுத் தாறேன்”, மேரி வேகமாக கை கழுவச் சென்றார்.

அர்ச்சனாவின் கண்களில் கண்ணீர், அதை பார்த்து துணுக்குற்றாள் வைஷு. “அச்சு, எதுக்கு இப்போ கண் கலங்குற?”, ஆதரவாக அவள் தோளைத் தொட்டாள்.

“என் அம்மா என்னை மக்ளே(மகளே)ன்னு கூப்பிடணும்னு சின்னதில் எவ்வளவு ஆசைப்பட்டிருக்கேன் தெரியுமா? ஆனா இப்போ, நான் இன்னும் ரெண்டு நாளில், இந்த வீட்டை விட்டு போகப் போறேன்னு தெரியும்போது சொல்லுறாங்க, அதான்.....”, சிரிக்க முயன்று தோற்றாள்.

கண்களில் இருந்த கண்ணீர், கன்னத்தில் வழிந்தது. வைஷு, அர்ச்சனாவை அணைத்துக் கொண்டாள். என்ன சொல்லுவதென்று அவளுக்குத் தெரியவில்லை. இதைக்

கேட்ட மேரியும் திகைத்து நின்றுவிட்டார். மகளின் ஒரு சின்ன விருப்பத்தைக் கூட நிறைவேற்றாத பாவியாகிப் போனோமே, என்ற எண்ணத்தில் கரைந்தார்.

இனிமேல் என்ன செய்தாலும், கடந்த காலங்கள் மீண்டு வரப் போவதில்லை. இனிவரும் காலங்களிலாவது, ஒரு அம்மாவாக மாற முயற்சிப்போம். எப்பொழுதும் போல் இப்பொழுதும், செய்த தவறின் அளவு பெரிதாகிக் கொண்டே போவது புரிந்தது.

தன்னை சம்மாளித்துக்கொண்டு, இருவருக்கும் தோசை ஊற்றிக் கொடுத்தார். ஜானும் அந்த நேரம் அங்கே வந்தான். அர்ச்சனாவின் அருகே அமர்ந்து கொண்டான். மேரி, அவனுக்கும் தோசை ஊற்றித் தரவே, அமர்ந்து சாப்பிடத் துவங்கியவன்,

கொஞ்சம் தயங்கி, தோசையைப் பிட்டு, அர்ச்சனாவின் வாயின் அருகே கொண்டு சென்றான். விழி விரித்து அதிசயமாக அவனை பார்க்க, “வாங்குடி குந்தாணி.....”, கேலியாகச் சொல்ல முயன்றாலும் குரல் கரகரத்தது.

“ஏண்ணா....., நான் வீட்டை விட்டுப் போறேன்னு சொன்ன உடனேதான், உங்க எல்லோருக்கும் என் மேல் பாசம் வருதா.....?”, அவன் ஊட்டிய தோசை, தொண்டைக் குழியில் விக்க, கேட்டாள்.

மேரியும் கண்ணீர் நிரம்பிய விழிகளுடனே, அடுப்படி வாசலில் நின்று கொண்டிருந்தார். “இல்லம்மா....., இந்த ஐந்து மாசத்தில், ஒரே ஒருநாள் போன்ல பேசிட்டு, அதிலும், ஒரு நாள் கூட இந்த அண்ணாவிடம் பேசாமல் உன்னால் தனியாக இருக்க முடியுதே என்று நினைக்கும்போது தோணிச்சு.

நான்ல்லாம் இருந்தும் உனக்கு என்னம்மா பிரயோஜனம். இந்த அம்மா, அப்பா, அண்ணா உறவெல்லாம் உனக்கு இருந்தும் இல்லாமல் போனது தானே. அப்போ முடிவு செஞ்சேன்....., இனிமேல், உனக்கு இந்த

அண்ணனாவது இருக்கான்னு உனக்குத் தெரியணும்னு. ஆனா....., இந்த அண்ணனுக்கும் பேசத் தெரியாதுமா.....", ஒரு ஆண்மகன் என்பதையும் மறந்து, குலுங்கி அழுதான்.

"அண்ணா.....", அவனைத் தாவி அணைத்துக் கொண்டாள். மேரியும் வந்து, தன் இரு வளர்ந்த குழந்தைகளையும், தன் மார்போடு, தழுவிக் கொண்டார். கண்ணீரிலே அவர்களின் முகமூடிகள் கழட்டி வீசப்பட்டன. வைஷு அங்கிருந்து நழுவி அர்ச்சனாவின் அறைக்குச் சென்றுவிட்டாள்.

அவள் செல்லும் வழியில், அர்ச்சனாவின் அப்பா கிறிஸ்டோபர் நிற்பதைப் பார்த்தாள். அவர் முகத்தில் ஒரு இறுக்கம். இவளைப் பார்த்தும், எதுவும் சொல்லாமல் வெளியேறிவிட்டார் அவர்.

அர்ச்சனாவிற்கு வாங்கிய நகைகள், புடவைகள், அனைத்தையும் அசுவாரசியமாகவே பார்த்தாள். எதுவும் அவளுக்குப் பிடித்தமாகவும் இருக்கவில்லை, விருப்பமின்றியும் இருக்கவில்லை. அன்றைய நாள், ஒரு பாசப் போராட்டத்தில் போக, மறுநாள், கொஞ்சம் பரபரப்பாகவே சென்றது.

அவர்கள் ஊர் வழக்கப்படி, பெண்ணின் திருமணப் புடவையை, மாப்பிளையின் அக்கா அல்லது தங்கை, முந்தினநாள் இரவிலேயே கொண்டுவந்து கொடுப்பார்கள். அவர்களுடன், இன்னும் மணப்பெண்ணுக்குத் தேவையான அனைத்தும் வந்து சேரும்.

சடங்குகள் அனைத்தும் தடபுடலாகவே நடந்தது. வைஷு அர்ச்சனாவுடனே இருந்தாள். இரவு சீக்கிரமாகவே படுக்கச் சென்றுவிட்டனர். ஆனால் உறக்கம்தான் வருவேனா என்று விளையாட்டுக் காட்டியது அர்ச்சனாவிடம். பிறகு, ஒரு வழியாக உறங்கிப் போனாள்.

மறுநாள் காலையில், ஏழு மணிக்குத்தான் எழுந்தாள். ஒன்பதரை மணிமுதல், பத்தரை மணிவரைதான் முகூர்த்தம். எனவே நிதானமாகவே கிளம்பினாள். அழகு நிலையத்தில் இருந்து ஆள் வரவே, சந்தனக்கலர் பட்டுப் புடவையில், தலையில் ரீத், நெட், அருமையான சிகை அலங்காரம், மிதமான ஒப்பனை, என அழகு தேவதையாக மிளிர்ந்தாள், அர்ச்சனா.

வைஷுவுக்கும் சிகை அலங்காரம் செய்ய வைத்து, புடவையும் கட்டிவிட வைத்தாள். நேரம் பத்துமணியை நெருங்கும் வேளையில் பேட்ரிக், அடர் நீலவண்ண கோட் சூட்டுடன் வந்து இறங்கினான். அவனுக்கு, எதிர்மாலையும் சந்தனமும், பன்னீரும் அணிவித்து அழைத்து வந்தான் ஜான்.

தந்தை, மலர் மாலையை அவள் கழுத்தில் அணிவிக்க, தாய், செண்டை எடுத்துக் கையில் கொடுக்க, இருவர் காலிலும் விழுந்து ஆசி வாங்கினாள். மேரி, மகளை அணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டார். அந்த நேரத்தில் கூட, தாயின் முதல் முத்தம்....., என்று நினைத்து கண்கள் கலங்கியது.

ஜான் காலிலும் விழப்போனாள். ஆனால், அவன் தடுத்து, நெற்றியில் சிலுவை வரைந்து விட்டான். பின்னர், அனைவரும் சேர்ந்து சர்ச்சுக்குக் கிளம்பினார்கள். திருப்பலி துவங்கியது, உறுதிமொழிகள் ஏற்கப்பட்டு, “சம்மதத்தைத் தெரிவிக்க, மணமக்கள் கைகளை சேர்த்துப் பிடிக்கவும்”, என்று சொன்ன வேளையில், இருவரும் தங்கள் வலக் கரங்களைக் கோர்த்தார்கள்.

“இன்பத்திலும் துன்பத்திலும், உடல்நலத்திலும் நோயிலும், நான் உனக்கு, பிரம்மாணிக்கமாய் இருப்பேன்”, பேட்ரிக் சொல்ல, இருவரின் பார்வையுமே, அன்றைய நினைவில் நேர்கோட்டில் சந்தித்து மீண்டன.

அர்ச்சனாவும் உறுதிமொழி அளிக்க, தாலிகட்டும் சடங்கு நடந்தேறியது. பேட்ரிக், “அர்ச்சனா, என் அன்புக்கும் பிரமாணிக்கத்துக்கும் அடையாளமாக, இந்த திருமாங்கல்யத்தை ஏற்றுக்கொள்”, என்று சொல்ல , அதற்கு அர்ச்சனா, “ஏற்றுக் கொள்கிறேன்” என்று சொல்ல, திருமாங்கல்ய கொக்கியை மாட்டினான் பேட்ரிக். வைஷு, அர்ச்சனாவின் நெட்டை(net) ஒதுக்கிக் கொடுத்தாள்.

தேகமெங்கும் சிலிர்த்து அடங்கியது அர்ச்சனாவிற்கு, அவள் பேட்ரிக்கை நிமிர்ந்து பார்க்க, அவனுக்கும் அப்படித்தான் என்பது, அவன் முகத்தில் தெரிந்தது. அதன்பிறகு அனைத்தும் துரிதகதியில் நடந்தேறியது. “கடவுள் இணைத்ததை, மனிதன் பிரிக்காதிருக்கட்டும்”, பாதர் ஆசீர்வதித்துவிட்டுச் சென்றார்.

திருப்பலி முடிந்து, கையேட்டில் பதிவுசெய்துவிட்டு, பங்குத்தந்தை அளித்த திரு விவிலியத்தை. பரிசாகப் பெற்றுக்கொண்டு, புகைப்படங்கள் எடுத்தார்கள். ஸ்டெல்லா, அர்ச்சனாவை அணைத்து முத்தமிட்டார். பிரான்சிஸ், நெற்றியில் சிலுவை வரைந்து ஆசீர்வாதம் செய்தார்.

வீட்டுக்கு வந்து, வாழ்த்துப் பாடல், சிறுவர்களின் நடனம் என்று, சிறிய கலை நிகழ்ச்சி நடந்தது. பின்னர் பால் பழம் வழங்கினார்கள். முதலில் அவன் உண்டுவிட்டு, அவளுக்குக் கொடுக்க, மீதியை அவள் சாப்பிட்டாள்.

நேரம் இரண்டை நெருங்கும் வேளையில் சாப்பிட அழைக்கப்பட்டார்கள். பந்தி கவனிப்பவர், மேற்பார்வை இட்டுக் கொண்டிருந்தார். வாழை இலையில், ஐந்து வகைக் கூட்டு, மூன்றுவித பொரியல், ஊறுகாய், பச்சடி, அவியல், சாம்பார், ரசம், புளுசெரி, மோர்., பருப்பு, சேமியா என இரண்டுவகைப் பாயாசம், அப்பளம், வாழைப்பழம் என பந்தியே களை கட்டியது.

“வைஷு....., எல்லாத்தையும் சாப்பிட முயற்சி செய்யாதே, உனக்கு முடிஞ்சதை மட்டும் சாப்பிடு”, அவள் அவஸ்த்தையைப் பார்த்து, அவள் காதில் சொன்னாள் அர்ச்சனா.

“உன்னை யாருடி இங்கே பாக்க சொன்னது. நீ அண்ணாவைக் கவனி”, அவளைக் கடிந்துகொண்டு, சாப்பாட்டில் கவனமானாள்.

போட்டோ கிராபர் செய்த அலப்பறையில், கடுப்பானாள் அர்ச்சனா. “டேய்..... இப்போ அவனைப் போகச் சொல்லலை....., சாப்பாட்டை அள்ளி, அவன் மூஞ்சியிலேயே வீசிடுவேன். சாப்பிடுற இடத்தில் வந்து படுத்துறான்”, பேட்ரிக்கிடம் பாய்ந்தாள்.

‘அவன சாக்குவச்சு உரசுறது உனக்குப் பொறுக்கலையா’, மனதுக்குள் பெருமூச்சை விட்டுவிட்டு, அவனைப் போகச் சொன்னான்.

நேரம் மூன்றை நெருங்கிவிட்டது. இன்னும் ஒருமணி நேரத்தில், ரயில்வே ஸ்டேஷனுக்கு கிளம்பவேண்டும். வைஷு, நாசூக்காகக் கழண்டுகொண்டாள். அர்ச்சனாவின் அறைக்குள், இருவருக்கும் சற்றுநேரம் தனிமைக் கொடுத்தார்கள்.

“என்னங்க..... இந்த நகை எல்லாம் கழற்ற கொஞ்சம் ஹெல்ப் பண்ணுங்க”, அவன் மோகமாக அவளை நெருங்க, அதை அறியாமல், கிளம்புவதற்கான ஆயத்தத்தில் இறங்கினாள் அவள். அனைத்து நகைகளையும் கழற்ற உதவினான்.

அத்தோடு நிறுத்தாமல், அவள் தோள் வளைவில் முகம் புதைத்து அவள் வாசனையை ஆழ்ந்து அனுபவித்தான். அவளை இன்னும் இறுகக் கட்டிக் கொண்டான். அவளுமே, அந்த நிலையைக் கலைக்க விரும்பாமல், அவனுடன் இழைந்தாள்.

அந்தநேரம், கதவு வேகமாகத் தட்டப்பட்டது. “யாரது இந்தநேரம்.....”, மெல்லிதாக முணுமுணுத்தான்.

களுக்கென சிரித்தாள் அர்ச்சனா. “என் நிலைமை, உனக்கு சிரிப்பா இருக்கா.....”, அவளை நெருங்கப் போனவன், இன்னும் வேகமாகக் கதவு தட்டப்படவே, வேகமாகச் சென்று, கதவைத் திறந்தான்.

“அர்ச்சனா..... என்ன அதுக்குள்ளே நகை எல்லாம் கழட்டிட்ட, நம்ம வீட்டுக்குப் போகவேண்டாமா? என்னடா.... உனக்குக் கூட அந்த நினைப்பே இல்லையா?”, அவனையே உறுத்து விழித்தார் ஸ்டெல்லா.

“இல்லம்மா நாலுமணிக்கு....., இல்ல, அஞ்சரைக்கு ட்ரெயின் அதான்.....”, மென்று முழுங்கினான்.

“ஓ....., அப்போ இங்கேயே இருந்துடலாம்னு முடிவோட இருக்கீங்களா?”, ஒரு மாதிரிக் குரலில் கேட்டார்.

“ஆன்ட்டி, நான் ரெடி போகலாம்.....”, கழட்டி வைத்திருந்த நகைகளை, நொடியில் போட்டுவிட்டுத் தயாரானாள் அர்ச்சனா. அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு முன்னால் நடந்தார் அவர். அவருடனே பேட்ரிக்கும் வெளியேறினான்.

அர்ச்சனாவின் மனதில் புரியாத பயம்....., என் வாழ்வில், எதுவுமே எனக்கு நிலையாக அமையாதா? அவள் பயம் மெய்யாகுமா? இல்லை அதிசயப்படுமாறு மாறுமா??

பகுதி - 30

தவறுகளே செய்யாமல் இருக்க

நான் ஒன்றும் தெய்வப் பிறவியில்லை

குறைகளைச் சொன்னால்

களைய முயற்சிக்கிறேன் – ஆனால்

என்னை உன் சிறகின் நிழலில்

இருந்து அகற்றிவிடாதே.....

அரைமணிநேர பயணத்தில், பேட்ரிக்கின் வீட்டில் இருந்தார்கள். அர்ச்சனாவின் கையில், ப்ரேஸ்லெட் போட்டு வீட்டுக்குள் வரவேற்றார். பிரேயர் ரூம் சென்று, மெழுகுவர்த்தி ஏற்றினாள்.

அங்கும் பாலும் பழமும் கொடுத்து, சடங்கு நிறைவேற்றப்பட்டது. வைஷுவும் அவளுடனே சுற்றவேண்டிய நிலை. இப்பொழுது நேரம் நான்கைக் கடந்திருந்தது. வீட்டில் இருந்து ரயில்நிலையம் செல்ல, அரை மணி நேரமாகலாம், அர்ச்சனா, ஸ்டெல்லா கை காட்டிய அறைக்குள் சென்றாள்.

“அர்ச்சனா, டிரஸ் சேஞ் பண்ணிக்கோ, ஸ்டேஷன் போக நேரமாகுது”, அவர் சொல்லவே, சரி என்பதுபோல் தலையை ஆட்டினாள்.

“ஆன்ட்டி, வைஷு.....”, “அனுப்புறேன்.....”, சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார்.

“அச்சு, என்னை எதுக்கு கூப்ட்ட?”, கேள்வியுடன் வந்தாள் அவள்.

“டிரஸ் சேஞ் பண்ணணும், கொஞ்சம் ஹெல்ப் பண்ணு”, அவள் குரலில் இருந்த வருத்தத்தில், மறுத்து எதுவும்

சொல்லாமல் அவளுக்கு உதவி செய்தாள்.

வைஷுவும், அங்கேயே சுடிதார் மாற்றிக் கொண்டாள். இருவரும் கிளம்பிவர, “சனா.... கொஞ்சம் பேசணும்.....”, பேட்ரிக் சொல்ல, வைஷு வெளியேறினாள்.

“பேட்ரிக்.... இந்த நகை எல்லாம், ஆன்ட்டிட்ட கொடுக்கணும், நீங்களே கொடுத்துடுறீங்களா?”, அவள் குரலில் ஏதோ விரக்தி.

“சனா.... நீயே அம்மாகிட்டே கொடுத்துடு....., சனா, அம்மா, உன் படிப்பை நான் கெடுத்துடுவேன்னு நினைக்கிறாங்க, அதான் அந்த ஆதங்கத்தில் அப்படிப் பேசுறாங்க. அவங்க உன்னை எதுவுமே சொல்ல மாட்டாங்க. அவங்க மேல கோபப்படாதே.....”, அவன் இன்னும் என்ன சொல்லப்போனானோ, அவனை கை நீட்டி தடுத்தாள்.

“என்னங்க.... நீங்க என்னைப்பற்றி கவலைப் படாதீங்க. எப்பவுமே, நான் யார் மேலையும், எதிர்பார்ப்பை வச்சுக்க மாட்டேன், இப்பவும் அப்படியே..... . அவங்க என்னை மகளா நினைச்சுக்கணும், பாசத்தை பொழியணும், அப்படி ஒரு எண்ணமே எனக்கு இல்லை.

ஏன்னா சொந்த அம்மாகிட்டயே எனக்கு அதெல்லாம் கிடைச்சதில்லை. ஆனா....., ஆனா....., நீங்க.... நீங்க மட்டும்....., என்னால தாங்க முடியாதுடா. இந்த உலகமே ஒரு பக்கம் நிக்கட்டும், ஆனா நீங்க மட்டும்....., என் பக்கம் எனக்குன்னு..... அப்படி மட்டும் இல்லன்னா, நான் ஒண்ணுமே இல்லாமல் போய்டுவேங்க”, உடைந்து அழுதாள்.

திருமணமான ஒவ்வொரு பெண்ணும் தன் கணவனிடம் வேண்டுவது இதைத்தான். தன் கணவன் மட்டும், தனக்குத் துணையிருந்தால், வாழ்வில் வரும் எந்த துன்பங்களையும் அவளால் எதிர்கொள்ள முடியும். ஆனால், கணவன் என்ற

உறவு பொய்த்துப் போனால், அவள் வாழ்வே போராட்டம்தான்.

தன் மேல் விழுந்து கதறும் அவளை, என்ன சொல்லித் தேற்றுவது என்று தெரியாமல், தன்னோடு இறுகக் கட்டிக் கொண்டான். “சனா, உனக்கு எப்பவும் நான் துணை இருப்பேன்டா, ப்ராமிஸ். என் வாழ்க்கைக்குள்ளே, உன்னைக் கொண்டு வந்தது, உன்னை சந்தோசமாக வைக்கத்தானே தவிர, இப்படி அழதுக்கு இல்லை.

இங்கே பார், என் கண்ணைப் பாரு....., அவளது முகத்தை, தன் நெஞ்சிலிருந்து நிமிர்த்தினான். என் மேல் நம்பிக்கை இருந்தால் இனிமேல் அழாதே, நீ அழுதால் என்னால் தாங்க முடியாது. உன் தனிமையைப் போக்கவேண்டும் என்று முடிவு செய்து, இப்படி உன்னை அழவிடவா, உன்னைக் கல்யாணம் செய்துகிட்டேன்.

எனக்கு, நான் முதல்நாள் பார்த்த சனாவைத்தான் பிடிச்சுருக்கு. இந்த சனா, எப்பவும் ஒரே அழு மூஞ்சியா இருக்கா. எனக்குப் பிடிக்கவே இல்லை”, அவளை இயல்பாக்க முயன்றான்.

“ஆனா, நான் என் புருஷன்கிட்டே மட்டுமாவது, நான், நானா இருக்கணும்னு விரும்புறேண்டா. என் மனசை, உனக்கு மட்டும் திறந்து காட்டணும்னு விரும்புறேன், அது உங்களுக்குக் கஷ்டமா இருக்கா? அப்போ, மத்தவங்களுக்காக நான் போடுற அதே முகமூடியை, உங்ககிட்டேயும் போடவா. இந்த உண்மையான சனாவை உனக்குப் பிடிக்கலையாடா.....?”, அவன் சட்டையைப் பிடித்து உலுக்கினாள்.

தான் ஒன்று நினைத்து செய்ய, அது வேறு விதமாக செயல்படுவதில் சோர்ந்தான் அவன். ஆனால், அவளுக்கு இப்பொழுது நம்பிக்கை அளிப்பதே பிரதானமாக இருக்க, “எனக்கு, என் சனா எப்படி இருந்தாலும் பிடிக்கும். அதிலும், இந்த உலகத்திலேயே, எனக்கு மட்டும், அவளோட மனசைத்

திறந்து காட்டும் இந்த சனாவை ரொம்ம்ம்மம்ம்ம்பப் பிடிச்சுருக்கு.

என் சனா, என்கிட்டே எப்பவும் இப்படித்தான் நடந்துக்கணும்னு நான் விரும்புறேன். ஆனாலும், இப்போ வெளியே இதே அழு மூஞ்சியோடப் போனால்....., இங்கே வச்சு, நான் உன்னை என்னமோ பண்ணிட்டேன்னு, வெளியே இருக்குறவங்க நினைச்சுக்க மாட்டாங்க,

சோ....., பாத்ரூம் போயிட்டு, பேஸ்வாஷ் பண்ணிட்டு வருவியாம் நாம போகலாம், ரயிலுக்கு நேரமாகுது", அவள் தலையில் முட்டி, மூக்கை மூக்கால் உரசியவாறு சொன்னான்.

"ஹையோ, ஆமா இல்ல, நீங்க இங்கேயே இருங்க, நான் ரெண்டே நிமிஷத்தில் வாறேன்", அவனிடமிருந்து விலகும் வேளையில், அவள் கையைப் பிடித்துத் தடுத்தான்.

அவன் பார்வை, அவளிடம் எதையோ யாசித்தது. "என்ன.....?", அவள் கிளம்பும் அவசரத்தில் கேட்க, "நான் வெளியே வெயிட் பண்ணுறேன்", சட்டென தன் முகபாவத்தை மாற்றிவிட்டுச் சொன்னான்.

'இதைச் சொல்ல, எதுக்கு அப்படிப் பாத்தான்', யோசனையாக, பாத்ரூமுக்குச் சென்று மறைந்தாள். 'காதல் கல்யாணம் ஆகி, அடுத்த ரெண்டு மணி நேரத்தில், பொண்டாட்டியைப் பிரியிற கொடுமை, யாருக்குமே வரக் கூடாதுடா ஆண்டவா. இதில், இவளோட ஒரே வீட்டில் எப்படி இன்னும் ஏழு மாசம், கையைக் கட்டிக்கிட்டு இருக்கப் போறேன்', எழுந்த பெருமூச்சை தாராளமாக வெளியேற்றிவிட்டு, பாத்ரூம் கதவை, ஏக்கமாக ஒரு பார்வை பார்த்துவிட்டுச் சென்றான்.

எப்பொழுதும் அவளுக்கு ஆதரவக, துணையாக, அரவணைப்பாக இருக்க வேண்டும் என்று அவன் விரும்ப, அவனை அறியாமலேயே கணவனின் உரிமையையும் அவளிடம் எதிர்பார்க்கிறோம், என்பதை அவன்

உணராமலே போனான். அவன் உணராத இந்த விஷயமே அர்ச்சனாவைக் காயப்படுத்தும் என்றும் அறியாமல் போனது விதியின் சதியா?

அர்ச்சனா வெளியே வரும்பொழுது, அவளைக் காண, அவள் குடும்பத்தில் இருந்த அனைவருமே வந்திருந்தார்கள். அவளுக்கே ஆச்சரியம் தான், எப்படி, அங்கே விருந்து நடப்பதை விட்டுவிட்டு, இங்கே வந்தார்கள் என்று.

சொந்தம் பந்தங்களிடம் ஏற்கனவே, அன்றே மணமக்கள் கிளம்புவதாகச் சொல்லிவிட்டதால், ஸ்டெல்லாவும் அவர்களுடனே கிளம்பிவிட்டார். மேரியும் ஜானும் கண்ணீருடன் விடை கொடுக்க, கிறிஸ்டோபர் எதற்கும் அசையாமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவர் அருகில் வந்து காலில் விழுந்து, “நான் போயிட்டு வாறேன்ப்பா”, அவளது விடைபெறுதலுக்கு, மெல்லிய தலை அசைப்பு மட்டுமே அவர் பதிலாய். பிறகு என்ன நினைத்தாரோ, தன் பர்ஸில் இருந்து, கத்தையாகப் பணத்தை எடுத்து, எண்ணிக் கூட பார்க்காமல், அவள் கையில் திணித்தார்.

ஆச்சரியமாக அவரைப் பார்த்தவள், மறுத்து எதுவும் சொல்லாமல் வாங்கிக் கொண்டாள். “கொஞ்சம் அவளைப் பாத்துக்கோம்மா”, வைஷுவிடம் வேண்டினார் மேரி. அதே நேரம் தன் தோழியிடமும் புலம்பித் தள்ளினார்.

அவர்கள் வந்த அதே கன்னியாகுமரி விரைவுவண்டி., இப்பொழுதும் அதே இரண்டாம் வகுப்பு AC பெட்டி. இரண்டு நடு படுக்கையும், கீழ் படுக்கையும் அவர்களது. வைஷுக்கு, ஸ்டெல்லா மேமை பார்த்தாலே கொஞ்சம் உதறல் எடுக்கும். எனவே அவளை, தன் அருகில் அமர வைத்துக் கொண்டாள் அர்ச்சனா.

பேட்ரிக்கின் பார்வை, அவள்மேல் ஏக்கமாக படிந்து மீண்டது. முதல் வகுப்புப் பயணச்சீட்டு வாங்காத தன்

மடத்தனத்தை தானே வெறுத்தான். வைஷுவிற்கு, பேட்ரிக்கின் மனநிலை புரிந்தது. அர்ச்சனாவுமே உணர்ந்தாள், ஆனால் அந்த நிலையில் என்னதான் செய்ய முடியும்....., அவனைப் பார்க்காமல், பார்வையை வெளியே கடந்துசெல்லும் மரங்களில் பதித்தாள்.

பேட்ரிக், அங்கிருக்க முடியாமல் எழுந்து சென்றான். அவன்பின்னால் செல்லத் துடித்த கால்களை அடக்கிய அவளால், அவன் பின்னால் செல்லும் மனதை, அடக்க முடியவில்லை. தன் கையைக் கோர்த்திருந்த அர்ச்சனாவின் கையைச் சுரண்டி, தன்னைப் பார்க்க வைத்தாள் வைஷூ.

வைஷு கண்களாலே பேட்ரிக் சென்ற திசையைக் காட்ட, இரண்டு கண்களையும் சிமிட்டி, சிரித்தாள் அர்ச்சனா. ஹையோ என்று இருந்தது வைஷுவிற்கு. ஸ்டெல்லாவின் எதிரில், அவளுக்குப் பேசினால், காத்து கூட வராது. இதில் அர்ச்சனாவிடம் அவள் எங்கே பேச.

“அச்சு, மாடல் எக்ஸாம்க்கு, எல்லாம் ப்ரிப்பேர் பண்ணிட்டியா? இப்போதைக்கு உன் கவனமெல்லாம் படிப்பில்தான் இருக்கணும். இனிமேல், உனக்கு என்ன தேவை என்றாலும், செய்ய நாங்க இருக்கோம், சரியா”, அங்கிருந்த சங்கடமான மௌனத்தைக் கலைத்தார் ஸ்டெல்லா.

‘புள்ளைக்குக் கல்யாணம் பண்ணிவச்சுட்டு, பேரன் பேத்தி பத்தி பேசவேண்டிய நேரத்தில், எக்ஸாம் பத்தி பேசுது பாரு. இந்த உலகத்தில் எல்லா மாமியாரும் இப்படித்தானோ?, அப்படியே, இந்த மேமை ஓடுற ரயிலில் இருந்து தள்ளி விட்டால்தான் என்ன?’, உலகமகா அதிசயமாக, இதை நினைத்தது வைஷு.

“சரி ஆன்ட்டி....., எக்ஸாம்க்கு கொஞ்சம் ப்ரிப்பேர் பண்ணி இருக்கேன்”, பவ்யமாக பதில் சொன்னாள்.

“இப்போவேண்ணா கொஞ்சம் படிங்க, ஏன்னா நாளைக்கு காலையில், உங்களுக்கு எக்ஸாம். அப்போ, திருப்பி பாக்க கூட டைம் இருக்காது. நான் பேட்ரிக்கிட்டே போயிட்டு வாறேன்”, சொல்லிவிட்டு எழுந்து சென்றார்.

“என்ன ஜென்மம்டி இது? எப்போ பாத்தாலும், டீச்சராவே நடந்துக்குது. உனக்கு வேற மாப்பிள்ளையே கிடைக்கலையா? போயும் போயும், இந்த அம்மாவோட புள்ளைதான் கிடைச்சாரா? என் மாமியாரை விட மோசம்டி. என் மாமியாராவது முதல் பத்துநாள் எந்த தொந்தரவும் செய்யலை”, ஆற்றாமையாகப் புலம்பினாள் வைஷு.

“அடியேய்.... ஒட்டி உரசவேண்டிய நானே பேசாமல் உக்காந்து இருக்கேன், நீ ஏண்டி எண்ணெய்யில் விழுந்த அப்பளமா துள்ளுற? அதைவிட, உனக்கு இப்படியெல்லாம் வேற பேசத் தெரியுமா?”, ஆச்சரியமாக வாயைப் பிளந்தாள் அர்ச்சனா.

“விளையாடதே அச்சு, நானே கோபமா இருக்கேன். இப்போ இந்த எக்ஸாம் அப்படி என்ன முக்கியம், இன்னும் ரெண்டு வாரம் கழிச்சு, ஒரேடியா செமெஸ்டர் எக்ஸாம் எழுத வரவேண்டியதுதானே நீ. உங்க வீட்டிலேயும் இதைப்பற்றி பேசலையா?”, அவளுக்கு ஆறவே இல்லை.

அர்ச்சனா எப்படி சொல்லுவாள், ஏற்கனவே ஸ்டெல்லா தன்னிடம் திருமணத்தைப் பற்றி, தெளிவாகப் பேசித்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறார் என்று. அதைவிட, அர்ச்சனா திருமணத்துக்குச் சம்மதம் சொன்ன ஒரே காரணத்துக்காகத்தான், இந்த திருமணமே முடிந்திருக்கின்றது என்ற ரகசியம் பேட்ரிக்குக்குக் கூட தெரியாதே.

அன்று ஒருநாள், பேட்ரிக் தன்னிடம் திருமணம் பற்றிப் பேசிச் சென்றதும், பிறகு ஸ்டெல்லா தன்னிடம் அதைப்பற்றிப் பேசியதும், இப்பொழுது படிப்பில் மட்டுமே

கவனம் செலுத்தவேண்டும்..... இன்னும்.....', அவள் யோசனையைக் கலைத்தாள் வைஷு.

"அச்சு, என்னடி அப்படி யோசனை.....? நான் கூப்பிடுறது கூட காதில் விழாமல்", அவளை உலுக்கினாள்.

"பொண்டாட்டி.... என்னடி, இப்படி சரியான நேரத்தில் கனவைக் கலச்சுட்டியே", பொய்யாக முறைத்தாள்.

"போற போக்கைப் பார்த்தால், நீ கனவிலேதான் குடித்தனம் நடத்தணும் போல, ஹம்....., சரி, இப்போ படிக்க வாறியா இல்லை, கனவைத் தொடரப் போறியா?", வைஷு நோட்ஸ் எடுத்தவாறு கேட்டாள்.

"இப்போ நான் கனவில் குடித்தனம் பண்ணி, குழந்தை பெத்துகிட்டால் யார் வளக்குறது, சோ உன்கூடவே படிக்கிறேன், அதைவிட....., அந்த டிரில் மாஸ்ட்டர் கிட்டே யார் அடிவாங்குறது. இப்போ படிக்காமல் உக்காந்திருக்குறதைப் பாத்தால், கொம்பெடுத்துட்டு வந்து, அடி பின்னினாலும் பின்னிடும்", அர்ச்சனா விளையாட்டாகச் சொல்ல, அது உண்மை என நம்பி, அந்த நோட்ஸ்க்குள் தலையை நுழைத்துக்கொண்டாள் வைஷு.

"பொண்டாட்டி.... என்னடி, போன என் புருசனையும் காணோம், பின்னாடியே போன மாமியாரையும் காணோம்", ஒருமணிநேரம் போனதும், அச்சு கேட்க,

"ஏய், எல்லாம் அந்த நோட்ஸ்க்குள்ளதான் இருக்கும், நல்லா தேடிப் பாரு", வைஷு, படிப்பின் மும்முரத்தில் பதில் சொன்னாள்.

அவள் தலையில் நறுக்கென குட்டினாள். அதன் பிறகுதான் அர்ச்சனாவின் கேள்வியை க்ரகித்தாள். "போய் பாத்துட்டு வந்துடுவோமா?", அச்சு கேட்க, "மாமியார் கையால் அடிவாங்க அவ்வளவு ஆர்வமா? வா போகலாம்", தோழியைத் தடை செய்யாமல், உடன் எழுந்தாள்.

“எங்கம்மா போறீங்க.....?”, ஒரு கூபே தாண்டியதும் ஸ்டெல்லாவின் குரல் கேட்டது. வைஷு வெடவெடக்க, “டாய்லெட் போக வந்தோம் ஆன்ட்டி”, அர்ச்சனா தவறிக்கூட, அருகில் இருந்த பேட்ரிக்கின் முகம் பார்க்கவில்லை.

“சரி சீக்கிரம் போயிட்டு வாங்க, சாப்பிடலாம்”, அவர் சொல்லவே, இருவரும் போய்விட்டுத் திரும்பினர். இது வாரநாள் ஆகையால் சில கூபே காலியாக இருந்தது.

சாப்பாடு வைத்து சாப்பிட இருக்கும் ஸ்டாண்டில், ஸ்டெல்லா கட்டிக் கொண்டு வந்திருந்த, கல்யாணச் சாப்பாட்டை ஒரு இலை போட்டு, பேட்ரிக், அர்ச்சனா இருவருக்கும் பொதுவாகக் கொடுத்தார். வைஷுவிற்கும், தனக்கும் தனித் தனியாக எடுத்துக் கொண்டார்.

அவர் எடுத்த கோணிப்பையை, ஸ்டாண்ட் அருகில் ஒதுக்கி வைத்தார். அது பேட்ரிக்கிற்கு வசதியாகப் போய் விட்டது. பையின் மறைவில் இருந்த அர்ச்சனாவின் இடக்காலை, தன் வலக்காலால் தீண்டினான். முதலில், தெரியாமல் பட்டிருக்கும் என நினைத்தவள், இன்னும் அழுத்தமாகத் தீண்டவே, அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

அவனோ, எதுவும் அறியாதவன்போல், சாப்பிட்டுக் கொண்டிருந்தான். காலை அவள் மெதுவாகப் பின்னால் நகர்த்த, விடாமல் பின்தொடர்ந்தான் அந்த கள்வன். காலைத் தூக்கி மேலே வைக்கலாம் என்றால்....., எங்கே அவர்களின் கவனம், இங்கே வந்துவிடுமோ என்று தயங்கினாள்.

பின்னர், காலை நன்றாக இழுத்து சீட்டுக்கு அடியில் வைத்துவிடவே, அவள் காலைக் காணாமல், சாப்பிடுவதை நிறுத்திவிட்டு, அவள் முகத்தையே ஏக்கமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் ஏக்கம் தாங்க முடியாமல், கொஞ்சம் தயங்கியவாறு, காலை, அவன் கால்மேல் வைத்தாள்.

தன் விரல்களால், அவள் கால் விரல்களைப் பின்னிக்கொண்டு நெரித்தான். அவன் செய்யும் சில்மிஷத்தில், உணர்வுகளை மறைக்கவும், முகம் சிவப்பதைத் தடுக்கவுமே போராடிக் கொண்டிருக்க, அவளால் சாப்பிட முடியவில்லை.

“அச்சு....., என்ன சாப்பிடவே இல்லை.....”, ஸ்டெல்லா கேட்கவே, “பசிக்கல ஆன்ட்டி”, தயங்கியவாறே உரைத்தாள்.

“கொஞ்சமாவது சாப்பிடும்மா.....”, வாஞ்சையாகச் சொல்ல, அவள் நிலையைப் புரிந்தவன், நெரித்திருந்த அவள் விரல்களை விடுத்து, ‘சாப்பிடு’ என்பதுபோல் தலையை ஆட்டினான். அவன் காலை விலக்கிக் கொள்ளவே, அவளுக்குள் தவிப்பு அதிகமாகியது, அது அவள் கண்களில் தெரியவே,

அவள் காலை தன் காலுக்குமேல் தாங்கியவாறு வைத்துக் கொண்டு, இப்போ சாப்பிடு என்பதுபோல் பார்க்க, அவளும் உண்ணத் துவங்கினாள். நெஞ்சுக்குள் ஏதோ இதம் பரவினாலும், கண்கள் கலங்குவதைத் தவிர்க்க முடியவில்லை. அது ஏனென்றும் புரியவில்லை. அவனை இறுகக் கட்டிக் கொண்டு, கதறி அழவேண்டுமென்று தோன்றியது.

ஒரு வழியாக சாப்பிட்டு முடித்து, கை கழுவச் சென்றார்கள். வைஷு முதலிலேயே சென்றுவிட, அவர்களையும் செல்லுமாறு பணித்தார் ஸ்டெல்லா. வைஷு கை கழுவிவிட்டு, செல்லப் போனவள், கொஞ்சம் தயங்கி அங்கேயே நின்றாள்.

இங்கே அர்ச்சனா கை கழுவ, அவள் பின்னால், அவளை உரசியவாறு வந்து நின்று, அவள் தோளில் தன் தாடையைப் பதித்து, காதில், “சாரி....”, என்று மெதுவாகச் சொன்னான். இதழ்கள், அவள் செவிகளை விட்டுப் பிரியமாட்டேன், என்பதுபோல் அங்கேயே நிலைத்தது.

அவளும் பின்பக்கமாகச் சாய்ந்து, அவன் நெஞ்சில் சாய்ந்துகொண்டாள்.

“டேய்.... எதுக்குடா சாரி சொல்லுற? நான் உன் பொண்டாட்டி....., என்னமோ அடுத்தவன் பொண்டாட்டியை உரசுன மாதிரி சாரி கேக்குற. அப்படிப் பார்த்தால், உங்களைத் தவிக்க விடுறதுக்கு நான்தான் சாரி கேக்கணும். சா.....”, அவள் வாயை மூடினான்.

“ரெண்டு பேருமே.....”, “மேம், நான் எடுத்துட்டு வாறேன்”, வைஷுவின் குரலில், சட்டென இருவரும் பிரிந்து நின்றார்கள். இருவருமே, திறந்திருந்த வாசலின் அருகில் சென்று நின்று கொண்டார்கள்.

ஸ்டெல்லா பாத்திரங்களைக் கழுவ உதவினார்கள் வைஷுவும், அர்ச்சனாவும். கழுவி முடிந்தவுடன், “மூணுபேருக்கும் இந்தநேரம் இங்கே என்ன பேச்சு, போய் தூங்குங்க”, அவர் சொல்லவே, அர்ச்சனா வைஷுவைப் பார்க்க, அவள் வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவர்களது கூபேயில், இவர்கள் மட்டுமே இருந்தார்கள். கீழே படுக்கையை ஸ்டெல்லாவும் வைஷுவும் எடுத்துக் கொள்ள, அர்ச்சனாவிற்கு மிடில் படுக்கையை தயார் செய்தான். அவளை ஏறி அதில் படுக்கச் சொன்னான். வைஷு ஏற்கனவே சுவர் பக்கமாக திரும்பிப் படுத்துவிட்டாள்.

ஸ்டெல்லா, தான் டாய்லெட் போய்வருவதாகச் சென்றிருந்தார். அவள் படுக்கையை தயார் செய்தவன், அவளை ஏறி படுக்கச் சொன்னான். பக்க கம்பியின் வழியே ஏறப் போனவளைத் தடுத்து, அவள் உணரும் முன்பே, அவள் இடுப்பில் கையைக் கொடுத்து, தூக்கி அமர வைத்தான்.

அவன் செயலில் கத்தப் போனவள், அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு அடக்கினாள். “என்னங்க இப்படி.....?”,

அவள் மெதுவாக முணுமுணுக்க, சரிந்திருந்த அவள் கழுத்து வளைவில் தன் இதழ்களைப் புதைத்தான்.

பின்னர் சட்டென விலகி, “படுத்துக்கோ.....”, அவளைப் படுக்கச் சொல்லிவிட்டு, அங்கேயே தயங்கி நின்றான். அவன் விழிகள் வைஷுவை திரும்பிப் பார்த்துவிட்டு, ஸ்டெல்லா வருகிறாரா என்றும் எட்டிப் பார்த்தான். அவன் செயல்களை, சின்னச் சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள் அர்ச்சனா.

அவளை ஆவலாக நெருங்கினான். அவன் பார்வை அவள் இதழ்களிலேயே நிலைத்தது. ஒற்றைப் புருவம் உயர்த்தி என்னவென்று கேட்க, அவள் இதழ் நோக்கிக் குனிந்தான்.

“ம்க்கும்.....”, ஸ்டெல்லாவின் தொண்டைச் செருமலில் அவளிடமிருந்து விலகினான். வேகமாகத் திரும்பிப் பார்க்க, அவர் அப்பொழுதுதான் வந்துகொண்டிருந்தார். அவன் விழிகளில், ஏமாற்றம் அப்பட்டமாக தெரிந்தது.

அர்ச்சனாவும், அவனைத் தயக்கமாகவும், சங்கடமாகவும் பார்த்தாள். “அச்சு, நீ மேல் பெர்த்ல படுத்துக்க வேண்டியதுதானே. ஏன்னா, நடுவில் எழுந்தால் படுக்கை தலையில் தட்டும் அதான். உனக்கு ஓகேன்னா படுத்துக்கோ”.

“சரி ஆன்ட்டி நான் மேலேயே போய் படுத்துக்கறேன்”, படுக்கை மாறியது. பேட்ரிக்கும் அவளுக்கு எதிர் படுக்கையில் ஏறிப் படுத்துக் கொண்டான். ஆவலாக அர்ச்சனாவின் பக்கம் பார்க்க, அவனுக்கு முதுகுகாட்டிப் படுத்திருந்தாள் அவள்.

அவளை அழைக்க முயன்று தோற்றான். அர்ச்சனாவோ கலங்கும் தன் கண்களை அவனுக்குக் காட்டாமல், அசையாமல் படுத்துக் கொண்டாள். இன்று துவங்கிய இவர்களின் போராட்டம், முடிவுக்கு வருமா? இல்லை தொடருமா?

பகுதி - 31

உனக்கு அன்னையாய் தந்தையாய்

அனுசரணையாய் இருக்கவே ஆசை

ஆனால் கணவனென்ற உரிமையின்

முன்னே இவையனைத்தும்

பின்செல்கின்றதே.....

காலையில் சரியாக ஆறு மணிக்கு, கன்னியாகுமரி விரைவுவண்டி எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனில் வந்து நின்றது. அதற்கு முன்பே அனைவரும் எழுந்து, தயாராகி விட்டார்கள். கால் டாக்ஸி வரவே, அதில் ஏறிப் பயணப்பட்டார்கள்.

பின்னிருக்கையில் பெண்கள் மூவரும் அமர்ந்துகொள்ள, டிரைவர் அருகில் பேட்ரிக் அமர்ந்துகொண்டான். “அம்மா, நேரா ஹாஸ்டல் தானே போகணும்”, பேட்ரிக், வைஷுவை இறக்கிவிடும் எண்ணத்தில் கேட்க,

“என்னங்க.... நானும் வைஷுவோட இறங்கிக்கறேன்”, அர்ச்சனா வேகமாகச் சொல்லவே, திரும்பி அவளைக் கூர்மையாகப் பார்த்தான். அவன் பார்க்கவே, கண்களைச் சிமிட்டி சிரித்தாள். வைஷு அவள் கைகளை அழுத்தினாள். அவளைக் கண்டுகொள்ளாமல், பேசாமல் இருந்தாள்.

“பேட்ரிக், அர்ச்சனாவையும் ஹாஸ்டல்லையே விட்டுடலாம்”, ஸ்டெல்லா சாதாரணமாகச் சொன்னார்.

ஹாஸ்டல் வரவே, அனைவரும் கீழே இறங்கினார்கள். அர்ச்சனாவும், வைஷுவும் அவ்வளவாக எந்த பொருட்களும் எடுத்து வராததால், அவர்கள் இருவரின் ஒற்றை பேகை எடுத்து அர்ச்சனாவிடம் கொடுத்துவிட்டு, காரில் ஏறி அமர்ந்துகொண்டான்.

கணவனாகிய தன்னிடம் கேட்காமல், கலந்தாலோசிக்காமல், தன்னிச்சையாக அவள் முடிவெடுப்பது, அவனுக்குப் பிடிக்கவில்லை. எந்த விஷயத்தையும், தன்னிடம் கேட்டபிறகு அவள் செய்யவேண்டுமென்று விரும்பினான். திருமணம் முடிந்த பிறகு, தன்னுடன், தன் வீட்டில் இல்லாமல் ஹாஸ்டலில் இருக்க அவள் முடிவெடுப்பாள் என்று அவன் கனவிலும் எண்ணியிருக்கவில்லை.

அவள் தனிமையைப் போக்கவேண்டும் என்பதற்காகத்தான், இந்தத் திருமணமே இவ்வளவு அவசரமாக நடந்தது. அப்படியிருக்க....., நினைக்க நினைக்க உள்ளம் கொதித்தது. முகமும் தாடையும் இறுக, அவளை நிமிர்ந்துகூட பார்க்காமல் அமர்ந்திருந்தான்.

அவனுக்குத் தெரியவில்லை, இதுவரை, தன் வாழ்வின் முடிவுகள் அனைத்தையும் அவள் தனியாக எடுத்துதான் பழக்கம் என்பதை.

அவன் பாராமுகம் மனதை அழுத்த, காரின் வெளியே இருந்த அவன் கைகளைப் பிடித்தாள். “நான் வீட்டுக்குப் போயிட்டு வாறேன். நீ எக்ஸாம்க்கு தயாராகு”, அவள் வாடிய முகத்தைப் பார்த்துத் தாங்க முடியாமல் சொன்னான்.

அவர்கள், விடை பெற்றுச் சென்றார்கள். வீட்டினுள் நுழைந்தவுடன், “பேட்ரிக், நீ மனசில் என்னதான் நினைச்சுட்டு இருக்க, இன்னைக்கு, அவ எக்ஸாம் நல்லா பண்ணனுமா இல்லையா? அவகிட்டே, இப்படி மூஞ்சியைத் திருப்பிட்டு வாற?

இப்படியெல்லாம் நடக்கும்னு தெரிஞ்சுதான், ரெண்டு பேர்ட்டையுமே, படிப்பு முடிஞ்சதும் கல்யாணம் வச்சுக்கலாம்னு சொன்னேன். ரெண்டுபேருமே கேக்கலை, இப்போ இப்படி ரெண்டு பக்கமும் முறுக்கிகிட்டா என்ன அர்த்தம்?

அவகூட கொஞ்சம் தெளிவா இருக்கா....., ஆனா நீ....., அவளுக்குக் கொஞ்சம் நஞ்சம் இருந்த நிம்மதியையும் நீ குழித்தோண்டி புதைக்கத்தான் போறடா. எப்பவும், எவ்வளவு உற்சாகமா இருக்குற பிள்ளை அவ, இப்போ முகம் வாடிப் போறா. எல்லாம்....., ச்சே..... இன்னும் இங்கே இருந்தால், உன்னை ஏதாவது சொன்னாலும் சொல்லிடுவேன். நான் சமைக்கப் போறேன்.....”, கோபமாகத் துவங்கி, ஆற்றாமையில் முடித்துவிட்டுச் சென்றார்.

பேட்ரிக், அந்த இடத்திலேயே கல்லாகச் சமைந்தான். தாய் சொன்னவற்றில் இருந்த நியாயம், அவனை சுட்டது. அவளுக்கு ஆதரவாக இருக்க வேண்டித்தான் இந்த திருமணத்தையே இவ்வளவு பிடிவாதமாக நடத்தி முடித்தான். இப்போழுது அதன் அடிப்படையே ஆட்டம் காண்பது புரிந்தது.

இன்னும் கொஞ்ச நாள், அதாவது அவள் படிப்பு முடியும் வரையாவது, தான் அவளது கணவன் என்ற உண்மையை மறந்தே ஆகவேண்டும். அவளைத் துன்பப்படுத்தியத்தை நினைக்கும்பொழுது, தனக்கே தன்னைப் பிடிக்கவில்லை.

ஒரே நாளில் தான் அடியோடு மாறிப் போனது....., ஒரு தாலிக்கு இவ்வளவு வலிமையா? அவள் கழுத்தில் தாலி கட்டியவுடன், நான் கணவனாக மட்டுமே நடக்க முயல்கிறேனா? இதற்காகத்தான் அம்மா, திருமணம் வேண்டாம் என்று அடம் பிடித்தார்களா?

இப்பொழுதே அர்ச்சனாவைக் கண்டு மன்னிப்பு கேட்கவேண்டும் என்று தோன்றியது. இல்லை.... இல்லை, அவளுக்கு இப்பொழுது தேவை என் மன்னிப்பு அல்ல, என் ஆதரவே. இந்த முடிவை எடுத்தப் பிறகுதான், மனதை இவ்வளவு நேரம் அழுத்திய இனம் புரியாத கோபமும், வெறுப்பும் இடம் தெரியாமல் ஓடி ஒளிந்தது.

அறைக்குச் சென்று, வேகமாகக் குளித்துக் கிளம்பி வந்தவன், சாப்பாட்டு அறையில் அமர்ந்தான். ஸ்டெல்லா, அவசரத்துக்கு உப்புமாதான் கிளறியிருந்தார். வேகமாகச் சாப்பிட்டுவிட்டு, ஒரு சிறிய டிப்பன் பாக்ஸில் கொஞ்சம் போட்டு எடுத்துக் கொண்டான்.

ஸ்டெல்லா அனைத்தையும் கவனித்தாலும் எதுவும் சொல்லவில்லை. “அம்மா....., சாரி அண்ட் தேங்க்ஸ்”, சொல்லிவிட்டு வெளியேறினான். செல்லும் அவனையே, புருவ மத்தியில் முடிச்சுடன், பார்த்துக் கொண்டிருந்தார்.

ஹாஸ்டலில், அர்ச்சனாவின் நிலையும் மோசமாகத்தான் இருந்தது. யாருக்கும் சந்தேகம் தோன்றிவிடக் கூடாதே என்ற காரணத்துக்காக, காலைக் கடன்களை முடித்துவிட்டு, படிப்பதுபோல் நோட்சை எடுத்து வைத்துக்கொண்டு அமர்ந்துவிட்டாள்.

அனைவருமே படிப்பில் கவனமாக இருந்ததால், அர்ச்சனாவின் அமைதியை கவனிக்கும் நிலையில் அங்கு யாரும் இல்லை. ஆனால் ஜுடி, அர்ச்சனாவைத் தூண்டி துருவிக் கொண்டிருந்தாள். அவளுக்குச் சரியாக, வாயடிக்க முயன்று கொண்டிருந்தாள் அர்ச்சனா.

“அட, கல்யாணம் ஆனால் மாற்றம் வரும் தெரியும். ஆனால் ஒரே நாளில் இப்படி மாறுவாங்களா என்ன?”, ஆச்சரியமாக, வாயில் விரல் வைத்தாள்.

“ஜுடி.... அவளே சரியா படிக்காமல், இப்போ உக்காந்து படிச்சுட்டு இருக்கா. நீ ஏன் அவளைத் தொல்லை பண்ணுற?”, வைஷு அர்ச்சனாவுக்காகப் பரிந்து வந்தாள்.

“ஆன்ண்டீஸ் எல்லாம் ஒண்ணு கூடிட்டாங்க. நான் எஸ்.....”, சொல்லிவிட்டுச் சென்றுவிட்டாள்.

அசையாமல் அமர்ந்திருந்த அர்ச்சனாவின் தோளை வைஷு தொட, தோழியின் மார்போடு கட்டிக்கொண்டு

கண்ணீர் உகுத்தாள். தோழியை அணைத்தவாறே பேசாமல் நின்றாள் வைஷு.

சிறிதுநேரம் அழ விட்டவள், “அச்சு, அழுதது போதும், முதல்ல சாப்பிடப் போகலாம் வா”, அவளை அழைத்துச் செல்லத்தான் அவளால் முடிந்தது, சாப்பிட வைக்க முடியவில்லை. தோழியின் மனநிலை புரிந்ததால், அவளைக் கட்டாயப்படுத்தாமல் விட்டுவிட்டாள்.

லஷ்மியிடம் தனியாகக் கேட்டு, ஒரு டம்ளர் பால் வாங்கி அர்ச்சனாவைக் குடிக்க வைத்தாள், அவ்வளவுதான் அவளால் முடிந்தது. நேரம் ஒன்பதை நெருங்கவே, வைஷு, ஜூடி, அர்ச்சனா மூவரும் ஹாஸ்டலை விட்டுக் கிளம்பினார்கள்.

“அச்சு, ஏண்டா இப்படி செஞ்ச...? அவர் இப்போ உன்னோட கணவர். அவர்கிட்டே ஒரு வார்த்தை கேட்கணும், சொல்லணும்னு உனக்குத் தோணலையா? அவருக்கு உன்மேல் கோபம் வருவது இயற்கைதான். இப்போ நீ தனி மனிஷி இல்லடா, கொஞ்சம் புரிஞ்சுக்கோ”, வைஷு எதார்த்தத்தை அவளுக்குப் புரிய வைக்க முயன்றாள்.

வைஷு சொன்ன பிறகுதான், செய்த அபத்தம் புரிந்தது. “வைஷு, நான் இதுவரை இருந்த மாதிரியே நினைச்சுட்டேன். நீ சொன்ன பிறகு புரியுது”, வராண்டாவில் நின்று, அவள் கையைப் பிடித்து சொன்னாள். வைஷு சிரித்துவிட்டு, நடையைத் தொடர்ந்தார்கள்.

காலேஜ் அருகில், பேட்ரிக் பைக்கில் நிற்பது தெரிந்தது. தோழிகளோடு அவனை நெருங்கினாள். “ஹாய் சனா.... ஆல் தி பெஸ்ட், என்ன..... எக்ஸாம்க்குப் படிச்சுட்டியா?”, எதுவுமே நடக்காததுபோல் அவன் பேச்சைத் துவங்கினான்.

மனதிலிருந்து ஏதோ பெரிய பாறாங்கல்லை எடுத்ததுபோல் பெரிய நிம்மதி அர்ச்சனாவுக்கு. “ம்ம்....., தேங்க்ஸ், இவதான் எங்களோட சின்னத் தங்கை ஜூடி,

படிக்கிறதுக்கு வேண்டி நம்ம கல்யாணத்துக்கு வரலை", ஜுடியை அறிமுகப் படுத்தினாள்.

அவர்களுக்கு ஹலோ சொல்லி இரண்டு வார்த்தை பேசினான். வைஷு, ஜுடித்தை இழுத்துக் கொண்டு சென்றாள். "சாப்ட்டியா...?", அக்கறையும், குற்ற உணர்வும் கலந்து வெளி வந்தது அவன் குரல்.

அவள் அமைதியாக இருந்ததிலேயே, அவள் சாப்பிடவில்லை என்பது புரிந்தது. "எக்ஸாம்க்கு இன்னும் ஒருமணிநேரம் இருக்கே", கேட்டுவிட்டு, அவளை அழைத்துக்கொண்டு, அந்த வராண்டாவின் ஓரம் அமர்ந்தான்.

டிபன் பாக்ஸைத் திறந்து, உப்புமாவை அவளுக்கு ஊட்டினான். கையோடு கொண்டுவந்திருந்த தண்ணீரையும் அவளுக்குக் கொடுத்தான். "என்ன பயந்துட்டியா.....? கல்யாணம் ஆன பிறகு, ஒரு நாளாவது, மாப்பிள்ளை முறுக்கை காமிக்கலாம்னு பார்த்தால், என் வீரப் பொண்டாட்டி இப்படி மிரண்டுட்டா?", அவள் தலையில் கைவைத்து ஆட்டியவாறே கேட்டான்.

"என்னது..... ? மாப்பிள்ளை முறுக்கா? டேய்.... நான் எவ்வளவு பயந்துட்டேன் தெரியுமா? எங்கே என் ராசிதான், உன்னையும் என்கிட்டே ஒட்டாமல் செய்யுதோன்னு. இப்போ நிதானமா வந்து இப்படிச் சொல்லுற?", அவனை, அவன் நெஞ்சு, முதுகு, கை என சரமாரியாக அடித்தாள்.

"ஏய் ராட்சசி, அதான் இப்போ சொல்லிட்டனே, பிறகு ஏண்டி அடிக்கிற? சரி, சரி இனிமேல் இப்படி நடந்துக்கலை, ஹையோ நிஜமாவே வலிக்கிடா", அவள் கைகளைத் தடுத்தவாறே சொன்னான்.

"போடா, லூசு, மண்டையா.....", கோபமாக, அவனுக்கு முதுகு காட்டி அமர்ந்துகொண்டாள்.

“ஹம்....., ஒரே நாளில், என்னை இப்படிக் கெ(கொ)ஞ்ச வைக்கிறியே. சரி சொல்லு, எக்ஸாம்க்குப் படிச்சுட்டியா? அவள் தோளைப் பிடித்துத் தன்மேல் சாய்த்தவாறு கேட்டான்”.

“நீதான் என் மூளைக்குள் உக்காந்துட்டு கபடி ஆடுனியே, எப்படிப் படிக்க?”, வாகாக அவன் தோளில் சாய்ந்து அமர்ந்தவாறே சொன்னாள்.

தன் தலையிலேயே அடித்துக்கொள்ளலாம் போல் இருந்தது அவனுக்கு. “இப்போ என்ன..... ஒரு முறை நோட்ஸ் எல்லாம் ஒரு பார்வை பாரு, என்ன இருக்குன்னு ஒரு ஐடியா கிடைக்கும். எப்படியும், இதில் இருப்பதே உனக்குக் கேள்வியா வராது.

எல்லாமே, நீ தனியா யோசித்து எழுதுற மாதிரிதான் இருக்கும். நான் உன் கிட்டேயே உக்காந்துக்கறேன், நீ படி”, ஆதரவாகச் சொன்னான்.

அவன் சொல்லவும், அமைதியாகத் தலை குனிந்து அமர்ந்தாள். “என்னடா.... ஏன் இப்படி அமைதியா இருக்க? என்மேல் கோபமா?”, ஆதரவாகக் கேட்டான்.

“எனக்கு என்மேல் தான் கோபம். உங்ககிட்டே கேக்காமல் நானா முடிவு எடுத்தது தப்புதான். இதுவரை, எல்லா முடிவும் நானே எடுத்திருக்கிறேன். இந்தக் கல்யாண முடிவும் கூட.....”, மேலே பேசப் போனவளைத் தடுத்தான்.

“சனா....., நான்தான் உன்னைப் புரிஞ்சுக்காமல் நடந்துட்டேண்டா. உன்னைப்பற்றி தெரிந்த நானே உன்னைப் புரிஞ்சுக்காமல் கோபப்பட்டுட்டேனேடா, இனிமேல் இப்படி நடக்காது. உன் விருப்பப்படிதான் எல்லாம் நடக்கும், சரியா. நீ இப்போ எதைப் பற்றியும் யோசிக்காமல் படி”, அவளைத் தோளோடு அணைத்தான்.

வேகமாகத் திரும்பி, அவனை ஒரு பார்வை பார்த்தாள். அவன் கண்களில் இருந்த உண்மை, அவளை மறுத்து

எதுவும் சொல்ல விடவில்லை. மனமோ, ‘நேத்து ஒருநாள் நீங்க பட்ட அவஸ்தையை, தினமும் கிட்ட இருந்து பார்க்கும் தைரியம் எனக்கு இல்லடா. கோல்ட் மெடல் வாங்குறேன்னு, உங்க அம்மாவுக்கு சத்தியம் செய்து கொடுத்திருக்கிறேன்.

அப்படி இருக்கும்போது, உங்க தவிப்பைப் பார்த்துட்டு, என்னால் கையைக் கட்டிட்டு வேடிக்கைப் பார்க்க முடியாது. அதைவிட, என்னை நீ தொட்டால், வேண்டாம் என்று மறுக்க என்னால் முடியவே முடியாது. அதனால், இந்தத் துன்பம் நமக்கு வேண்டாம் என்பதால்தான், நான் ஹாஸ்டலிலேயே இருந்துக்கறேன்னு சொன்னேன்’, மனதுக்குள் புலம்பினாள்.

பின்னர் அதை ஒதுக்கிவிட்டு வேகமாகப் பக்கங்களைப் புரட்டினாள். அனைத்தையும் ஒரு பார்வை பார்த்து முடித்தாள்.

அவள் முடிக்கும்வரை, அவளைத் தொல்லை செய்யாமல், அருகில் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். பெல் அடிக்கவே, அவளுக்கு வாழ்த்துச் சொல்லி, அனுப்பி வைத்தான். இருவரும், தங்கள் தவறை உடனே உணர்ந்து, அதைத் திருத்த முயன்றார்கள். அதன் பிறகு வந்த ஐந்து நாட்களும் பரீட்சையிலேயே கழிந்தது.

அவர்கள் வைத்திருக்கும் நோட்ஸ்க்கும், வந்த கேள்விகளுக்கும் சம்பந்தமே இருக்கவில்லை. அனைத்துமே, அவர்களது திறன்களை சோதிக்கும் கேள்விகளாகவே இருந்தது. இந்த மாடல் எக்ஸாம்மில், அனைவரும், அவர்கள் இஷ்டப்பட்ட இடத்தில் அமர்ந்து கொள்ளலாம்.

எனவே, அர்ச்சனா அவளது பேப்பரை காப்பி பண்ண, ஜூடிக்குக் கொடுக்க, ஜூடி வைஷுவிற்குக் கொடுத்தாள். ஜூடி அசால்ட்டாகக் காப்பி செய்ய, வைஷு கொஞ்சம் நடுங்கியவாறே காப்பி செய்தாள். இதை, வன்மத்துடன் பார்த்தவாறே இருந்தாள் பெமி.

மாடல் எக்ஸாம் தானே என்ற எண்ணத்தில் பேசாமல் இருந்தாள் பெமி. ஆனாலும் படித்த எதுவுமே வரவில்லை ஆகையால், அவளுக்குமே கொஞ்சம் கடுப்புதான்.

ஒரு வழியாக மாடல் எக்ஸாம் முடிந்தது. அடுத்த ஒரு வாரம் பரீட்ச்சைக்காகப் படிக்க, விடுமுறை விட்டார்கள். வீட்டிற்குச் செல்பவர்கள் செல்லலாம் என்று சொல்லிவிட்டார்கள். ஆனால், அவ்வளவாக யாரும் ஹாஸ்டலை விட்டுச் செல்லவில்லை. அர்ச்சனாவிற்கு, பேட்ரிக் வீட்டுக்குச் செல்ல ஆசைதான், ஆனால் அவனோ, ஸ்டெல்லாவோ, அவளை வீட்டுக்கு அழைக்கவில்லை.

தினமும் பேட்ரிக் வந்து அவளைப் பார்த்துச் செல்வான். அன்று வரும்பொழுதே, ஒரு பெரிய கவருடன் வந்தான். கிரௌண்டில் அமர்ந்து அவர்கள் படித்துக் கொண்டிருந்தார்கள். அவன் கொண்டுவந்த கவரை அவளிடம் கொடுத்தான்.

என்ன என்பதுபோல் பிரித்துப் பார்க்க, கவர் நிறைய, நொறுக்குத் தீனிகள், விதம் விதமாக இருந்தது. அதைப் பார்த்ததும், விழி விரிய பேட்ரிக்கைப் பார்த்தாள், பின்னர் அவள் பார்வை, சந்தேகத்துடன் வைஷுவைப் பார்த்தது.

வைஷுவிற்கு உள்ளுக்குள் குளிரெடுத்தது. “சனா.... உன்னோட ப்ரண்ட்ஸ்க்கும் கொடுத்து நீயும் சாப்பிடு. அதான் நிறைய வாங்கிட்டு வந்தேன்”, அவன் சாதாரணமாகச் சொன்னான்.

‘இவன் தெரிஞ்சே செய்யிறானா? இல்ல தெரியாமல் செய்யிறானா? வைஷுவுக்கு வேர்க்குறதைப் பார்த்தால், அவ ஏதோ செஞ்சுருக்கான்னு தெரியுது. ஆனா, இதை எப்படிக் கண்டுபிடிக்க?’, மண்டையை உடைத்தாள்.

“அச்சுக்கா, நான் இப்போவே சொல்லிட்டேன் எனக்கு வேண்டாம்”, ஜூடி, பேட்ரிக் முன்பே சொன்னாள்.

“ஏன் அப்படிச் சொல்லுற ஜூடி?”, அப்பாவியாகக் கேட்டான்.

“அண்ணா.... இவங்க, நாங்க என்ன கொடுத்தாலும் வாங்கிச் சாப்பிடவே மாட்டாங்க. எவ்வளவோ வற்புறுத்தியும், நொறுக்குத்தீனியே அவங்களுக்குப் பிடிக்காதுன்னு சாதிச்சுட்டாங்க. இப்போ, நீங்க இவ்வளவு வாங்கிட்டு வந்துருக்கீங்க, அதை, எங்களைத்தான் சாப்பிடச் சொல்லுவாங்க, அதான் முன்னெச்சரிக்கையா சொல்லிட்டேன்”, ஜூடி நீட்டி முழக்கினாள்.

‘இவ பெரிய முன்னெச்சரிக்கை முத்தம்மா......, பஞ்சுமிட்டாய்....., என்னய்யா மாட்டி விடுற, உள்ளே வாடி உன்னை குமுறுறேன்’, மனதுக்குள் கறுவினாள்.

பின்னர், பேட்ரிக் சென்ற பிறகு, அவர்களைத் தாஜா செய்து, நொறுக்குத் தீனியை அனைவரும் பங்கிட்டுக் கொள்ளச் செய்தாள். அதைவிட, ஹாஸ்ட்டலில் இருந்த அனைவருமே சாப்பிட்டார்கள் என்பதுதான் சரியாக இருக்கும்.

எப்படியோ, அந்த செமெஸ்டர் எக்ஸாம் முடிந்தது. அப்பாடா என்று மூச்சு விட்டு நிமிரும் முன்னர், அடுத்த செமஸ்டரின் துவக்கத்திலேயே, அனைவரும், அவர்களது மேஜர் பேப்பரில் இரண்டு வொர்கிங் மாடலும், ஒரு நான் – வொர்கிங் (non-working) மாடலும் சப்மிட் செய்யச்சொல்லி உத்தரவு பிறப்பித்தார்கள்.

இடையில், கிறிஸ்த்துமஸ் வேறு வந்ததால், கிறிஸ்மஸ் ப்ரண்ட் தேர்ந்தெடுத்தார்கள். இதில் மாணவிகள், டீச்சர்ஸ், பிரின்சிபால் சிஸ்டர், அலுவலக உதவியாளர்கள் அனைவரின் பெயரும் இடம் பெற்றது.

அர்ச்சனாவிற்கு, பெமியின் பெயர் கிடைத்தது. அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. ஆனால், தங்களுக்குக் கிடைக்கும் கிறிஸ்தமஸ் தோழிக்காக, ஜெபம் செய்யவேண்டும், அவர்களுக்கு, அவர்கள் அறியாமல் உதவி செய்யவேண்டும், இதுதான் விதிமுறை.

பின்னர், கிறிஸ்தமஸ் விடுமுறைக்கு முன்னர் ஒவ்வொருவராக, அவர்களது தோழியின் பெயர் சொல்லி, அவர்களுக்கு கிப்ட் கொடுக்க வேண்டும். யாரும் யாருக்கும், தங்கள் தோழியின் பெயரைத் தெரிவிக்கக் கூடாது.

ஆனால் அர்ச்சனா அப்பொழுதே வைஷுவிடம் காட்டிவிட்டாள். “ஏய் பொண்டாட்டி, பேசாமல் உன் ப்ரண்டை எனக்குக் கடன் தாடி”, அவளை இடிக்க, முடியாது என்பதுபோல் தலையை ஆட்டிவிட்டு, அந்தத் துண்டு காகிதத்தை வாயில் போட்டு மென்றுவிட்டாள்.

எனவே, அர்ச்சனாவால் எதுவும் செய்ய முடியவில்லை, ஜூடியிடம் காட்டியதற்கு, அவள் விழுந்து விழுந்து சிரித்தாள். அந்தக் கடுப்பிலே பேசாமல் விட்டுவிட்டாள். ஜூடியின் கேலி அவளைத் தொடரவே செய்தது.

அர்ச்சனா செய்த முதல் வேலை, பெமியின் தாய்க்கு போன் செய்து, சமீபத்தில், பெமி அவரிடம் ஏதாவது வேண்டுமென்று கேட்டாளா என வினவினாள். அதற்கு அவர், செல்போன் வேண்டுமென்று கேட்டாள், எனக் கூறவே, அதை எப்படி வாங்கி கொடுக்கவென்று யோசித்தாள்.

அவர்கள் ஹாஸ்டலில், செல்போன் உபயோகிக்க அனுமதி இல்லை. அதுதான் அவள் யோசனையின் காரணம். பெமியின் தாய் எதற்கென்று கேட்டதற்கு, இவள் காரணத்தைச் சொல்லி முடித்த ஒரு மணி நேரத்தில், ஸ்டீபன், சோனி எக்ஸ்பீரியா மொபைலுடன் ஹாச்ட்டலுக்கு முன் ஆஜரானான்.

அர்ச்சனா விதம் விதமாக மறுத்தும், தான் அவளுக்கென்று வாங்கிவந்த போன் என்றும், எப்படியாவது அவள் கைக்குப் போனால் போதுமென்றும், கெஞ்சிக் கேட்கவே, வேறு வழியில்லாமல், வாங்கிக் கொண்டாள். இதைக் குரோதத்துடன் பார்த்தன இரண்டு விழிகள்.

அனைத்தையும் பேட்ரிக்கிடமும் சொல்லிவிட்டாள். அன்று அர்ச்சனாவைக் காண, பேட்ரிக் நிற்கும் வேளையில், பெமி அவனைக் காண வந்தாள். அவனிடம் அர்ச்சனாவைப் பற்றித் தேவையில்லாமல், ஸ்டீபனை இணைத்து, கொச்சையாக விமர்சித்தாள்.

தன் கோபத்தை அடக்க, கைகளை இறுக்கி, தன்னைக் கட்டுப் படுத்தினான். “நான் அவளைப் பாத்துக்கறேன், நீங்க போங்க”, அவள் செல்லவும், அர்ச்சனா வரவும், சரியாக இருந்தது. அவன் கோப முகத்தைப் பார்த்து, பெமி சந்தோசப்பட்டாள் என்றால், அர்ச்சனா துணுக்குற்றாள்.

“என்னங்க..... ஏன் கோபமா இருக்குற மாதிரி இருக்கு?”, அவனை நெருங்கிக் கேட்க,

அவளைத் தரதரவென்று இழுத்துக்கொண்டு, விசிட்டர் அறைக்குள் நுழைந்தான். நுழைந்த வேகத்தில், அவள் கையில் ஓங்கி அடிக்க, “ஏண்டா, இப்போ என்னை அடிச்ச.....?”, அவள் குரல் வெளியே கேட்கவே, பெமி அங்கிருந்து அகன்றாள்.

“அப்படித்தாண்டி அடிப்பேன்.....”, அவன் குரல் கோபமாக ஒலித்தாலும், கதவின் பின்னால், அவளைச் சுவரோடு சாய்த்து, தானும் அவள்மேல் சாய்ந்து, கழுத்து வளைவில் முகம் புதைத்தான்.

“ஐயோ....., என்ன விளையாட்டு இது? அதுவும் விசிட்டர் ரூமுக்குள்ளே. யாராவது வரப்போறாங்க, விலகுங்க”, அவள் வாய் சொன்னாலும், அவனைத் தள்ள எந்த முயற்சியும் எடுக்கவில்லை அவள்., அவள் கைகளோ அவன் பிடரி முடியில் அலைந்தது.

“யார் வருவா? வந்தாலும் பரவாயில்லை.....”, அவள் மார்புக்கு மத்தியில் முகத்தை வைத்துத் தேய்த்தான்.

உடல்முழுவதும் கிளர்ந்துஎழும் உணர்வை, அவளால் அடக்க முடியவில்லை. “ப்ளீஸ் இப்படி...யெல்லாம்

செய்....யாதீங்க, அதுவும்... இது பப்ளிக் பிளேஸ்", அவன் தலையை, தன் மேனியிலிருந்து விலக்க முயன்று தோற்றாள்.

"ஏய்... இது எனக்கு மட்டுமே சொந்தமான பிளேஸ்டி....., நீ என்ன பப்ளிக் பிளேஸ்ன்னு சொல்லுற", இன்னும் அவளுக்குள் புதைந்தவாறே கேட்டான்.

அவன் இவ்வாறு சொல்லவே, அவன் தலையில் நறுக்கென குட்டி அவனைப் பிடித்து, ஒரே தள்ளாக தள்ளிவிட்டாள். அவன் அங்கிருந்த ஸோபாவில் விழவே, "கருமம், கருமம். நான் எதைச் சொன்னால், நீங்க எதை சொல்லுறீங்க. கொஞ்சமாவது விவஸ்த்தை வேண்டாம்", அவனை இன்னும் அடித்தாள்.

"சனா, அதையெல்லாம் விடு, இப்போ நீ வரும்போது உன் எதிர்ல போனாளே பெமி, அவளுக்கும் உனக்கும் என்ன பிரச்சனை?", விஷயத்துக்கு வந்தான்.

"எந்தப் பிரச்சனையும் கிடையாது. ஆனால், அவளுக்குக் கொஞ்சம் பொறாமை. அதனால் சிலநேரம் என்மேல் கோபமா நடந்துப்பா, வேற எதுவும் இல்லை", பூசி மொழுகினாள்.

"அவ சொல்லுவதைப் பார்த்தால் அப்படித் தெரியலை. அவ, உன்மேல் ரொம்பவே கொலை வெறியா இருக்குற மாதிரி இருக்கு. எதுக்கும் நீ கொஞ்சம் கவனமா இரு. உன்னைப் பத்தி என்கிட்டேயே வந்து குறை சொல்லுறா.

வந்த கோபத்தில், அவளை ஓங்கி அறைஞ்சிருப்பேன், ஆனால் வேணாமேன்னு விட்டுட்டேன்", கோபம் அவன் குரலில் தெறித்தது.

"பேட்ரிக், என் காலேஜ் விஷயத்தை நானே பாத்துப்பேன். நீங்க இதில் கொஞ்சம் விலகியே இருங்க சரியா", அவன் மூக்கைப் பிடித்து ஆட்டினாள்.

அவனைச் சமாதானம் செய்தாலும், அவளது செய்கைகள், எங்கேபோய் நிற்கும் என்ற கவலை அவளுக்குமே பிறந்தது. முதல்நாள் பார்த்தபொழுது, அவளுடன் நட்பாகப் பழகிய நாட்கள் கண்முன் விரிந்து, கண்களைப் பனிக்க வைத்தது. இன்னும் பெமியால் அவளுக்குத் தொல்லைகள் நிகழுமா? அதை அர்ச்சனா சமாளிப்பாளா?

பகுதி - 32

கொண்டாட்டம் கோலாகலம்

எதுவாக இருந்தாலும்

நீ அருகில் இல்லையெனில்

வெறுமை மட்டுமே துணையாய்.....

இன்று கிறிஸ்மஸ் கொண்டாட்டம் கல்லூரியில். காலையில் பதினோரு மணிக்கு, அலுமினி ஹாலில், அனைவரையும் குழுமச் சொன்னார்கள். இரண்டு நடனம், முதல்வரின் பேச்சு, என சிம்பிளான கூட்டமே.

அர்ச்சனா நடனமாடவில்லை என்று ஒதுங்கிக் கொண்டாள். எனவே வேறு மாணவிகள் நடனமாடினார்கள். முதல்வர் உரை முடிந்த பிறகு, முதல்வரையே தனது கிறிஸ்த்மஸ் தோழியின் பெயரை அறிவிக்கச் சொன்னார்கள்.

சிரித்தவாறே “அர்ச்சனா.....”, என அழைத்தார். வேகமாக, மைக்கை அவரிடம் கொடுத்துவிட்டு செல்லப் போனாள்.

அவளை மறுபடியும் அழைத்தார். “சொல்லுங்க சிஸ்டர், ஏதாவது வேணுமா?”, அவள் கேட்கவே, சிரித்துவிட்டு அவளை அருகே அழைத்து, இரண்டு கன்னங்களிலும் முத்தமிட்டு, ஒரு பெரிய பாக்ஸை அவள் கையில் கொடுத்தார்.

ஒரு நிமிடம் புரியாமல் விழித்தவள், தான்தான் அவரது கிறிஸ்மஸ் தோழி என்று அறிந்து, சந்தோசத்தில் என்ன செய்வது என்றே தெரியாமல், அவரையே கட்டிக் கொண்டாள். கூடியிருந்த அனைவருக்குமே ஆச்சரியம். பெமியோ, பொறாமையில் வெந்து தணிந்தாள் என்றே சொல்லவேண்டும்.

‘ச்சே....., இந்த அதிஷ்டம் கூட, இவ பக்கமே இருக்கே’, மனதுக்குள் பொருமினாள். பொறாமை என்ற குணம், நம்மிடம் இருக்கும் கொஞ்ச நல்ல குணங்களையும் பொசுக்கிவிடும், என்பதற்கு உதாரணமாக ஆகிக் கொண்டிருந்தாள் அவள்.

முதல்வர் எதிரில். பேசவே அனைவரும் பயப்படும்போழுது, அவரையே அவள் கட்டிக் கொண்டது....., ஆனால் அவர் உணர்ச்சிவசப்படவில்லை. அவளை அணைத்து விடுவித்தார். “இப்போ, நீ உன்னோட தோழி பெயரைச் சொல்லு”, அவர் சொல்லவே உணர்வுக்கு வந்தாள்.

“பெமி.....”, மைக்கில் அறிவிக்க, பெமியின் முகம், கோபத்தில் தக்காளிப் பழமாக சிவந்தது. தன் பெயர் அறிவிக்கப்பட்ட பிறகு, எழுந்து செல்லாமல் இருக்க முடியாதே, என்ற நினைப்பில் மேடையேறினாள். “ஹேப்பி கிறிஸ்மஸ் பெமி”, சொன்னவாறு பரிசை அவளிடம் கொடுத்தாள்.

பெயருக்குக் கூட புன்னகைக்காமல், கையிலிருந்து பரிசை பிடுங்கிக் கொண்டு சென்றாள். அதற்கு முன்பு, அவளது தோழியின் பெயரைச் சொல்லிவிட்டு, அவளது பரிசையும் கொடுத்தாள்.

வேண்டாவெறுப்பாக, பரிசை சேரில் விட்டெறிந்தாள் பெமி. அதை ஒருத்தி எடுத்துப் பிரிக்க, அதனுள் அலைபேசியுடன், ஒரு அழகிய கைக் கடிகாரமும் இருந்தது. எப்படியும், இரண்டின் மதிப்பும் சேர்த்து, இருபதாயிரத்தைத் தொடும்.

“ஹேய் பெமி, அச்சு உனக்கு ரொம்ப காஸ்ட்லி கிப்ட் கொடுத்து இருக்காடி”, அவள் வியக்க, பெமி முகத்தை இயல்பாக்க முயன்று தோற்றாள்.

எரிச்சலோடு எழுந்து சென்றுவிட்டாள். நிகழ்ச்சிகள் முடியவே, பேட்ரிக், அவளை வீட்டுக்கு அழைத்துசெல்ல வந்தான். அவனைப் பார்த்தவுடன், முகம் பிரகாசமாக,

அவன் அருகில் ஓடினாள். திருமணத்துக்குப் பிறகு, முதல் முறையாக அவன் வீட்டுக்குச் செல்லப் போகிறாள்.

அவளை ஹாஸ்டலுக்குக் கூட செல்ல அனுமதிக்காமல், நேரடியாக வீட்டுக்கு அழைத்துச் சென்றான். மாற்றுவதற்கு, துணி கூட எடுக்க அவளை அனுமதிக்கவில்லை. வீட்டுக்குச் சென்ற அவளை, ஆரத்தி கரைத்து வீட்டுக்குள் வரவேற்றார்கள்.

உள்ளே சென்றவளுக்கு ஆச்சரியம், அவளது அம்மாவும் அண்ணாவும் அங்கே இருந்தார்கள். திருமணத்துக்குப் பிறகு தாய், அண்ணனை பார்க்கிறாள். தானாடாவிட்டாலும், தன் தசை ஆடுமே, கொஞ்சம் ஆர்வமாகச் சென்று, இருவரையும் அணைத்துக் கொண்டாள்.

“எப்படிம்மா இருக்கீங்க? அண்ணா நீ?”, அவள் நெகிழ்ந்திருப்பது, அவளது அண்ணா என்ற அழைப்பிலேயே தெரிந்தது. சிறிதுநேரம் அனைவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு, அவளுக்காக, தாங்கள் வாங்கி வந்திருந்த பொருட்களை, அவளிடம் கொடுத்தார் மேரி.

அன்று, கிறிஸ்மஸ் திருப்பலி இரவு பன்னிரண்டு மணிக்கு. எனவே, கொஞ்சம் சீக்கிரமாகப் படுத்து எழுந்துவிடலாம் என்று, அனைவரும் அவர்கள் அறைக்குச் சென்றார்கள்.

“அர்ச்சனா....., நீ பேட்ரிக் அறையில் படுத்துக்கோ”, ஸ்டெல்லா சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார்.

பேட்ரிக் அர்ச்சனாவைப் பார்க்க, “என்னடா புருஷா.... அப்படிப் பாக்குற?”, கண்களில் குறும்பு வழியக் கேட்டாள்.

“என்ன டா வா.....? வர வர, உனக்கு மரியாதையே தெரியலை. உன்னை என்ன செய்யிறேன் பாரு?”, அவளை அடிக்கத் துரத்தவே, அவன் அறைக்குள் சென்று புகுந்துகொண்டாள்.

அவள் பின்னாடியே ஓடிச் சென்று, அவள் கதவை மூடும் முன்னர், அவனும் அறைக்குள் நுழைந்து, அவளைத் தள்ளிவிட்டு, இவன் கதவைப் பூட்டினான்.

“பேட்ரிக் வேண்டாம்....., சர்ச்க்குப் போகணும்....., கொஞ்ச நேரம் தூங்கலாம்.....”, கட்டிலின் மறு பக்கத்துக்கு நகர்ந்தவாறே சொன்னாள். அவன் அவள் அருகில் நெருங்கி வந்தான்.

“இன்னைக்கு நமக்கு பஸ்ட்நைட், அது ஞாபகம் இருக்கா?”, கண்களில் போதையுடன் அவளை நெருங்கினான்.

இதயம் பந்தயக் குதிரையானது அவளுக்கு. அவன் இன்னும் நெருங்கவே, அசையாமல் அங்கேயே அமர்ந்தாள். அவன் கண்கள் அவளை மொய்த்தது. அவள் உணர்ந்தாலும் விலகவில்லை. அவள் இதழ்களை நோக்கிக் குனிந்தான்.

அவள் இதழ்களை விலக்கிக் கொள்ளவில்லை. மூச்சுக்காற்று, இருவரின் முகத்திலும் சூடாகப் படிந்து மீண்டு கொண்டிருந்தது. எதையோ எதிர்பார்த்து, இமைகளை மூடி, அசையாமல் இருந்தாள். அவன் இன்னும் என்ன செய்கிறான், என்று இமை பிரித்துப் பார்க்க, அவ்வளவு நெருக்கத்தில், மெல்லிய புன்னகையுடன், அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

“என்ன வேணும்.....?”, ஒற்றைப் புருவம் உயர்த்தி, அவன் கேட்க, “ச்சீ.....”, என்று சிணுங்கியவாறு, அவன் தோளில் முகம் புதைத்துக் கொண்டாள்.

இன்னும் அவளை இறுக்கிக்கொண்டு, படுக்கையில் சரிந்தான். அவன் நெஞ்சில் நாடியைத் தாங்கியவாறு, அவன் முகத்தையே பார்க்க, அவனும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். “தூங்கலையா சனா.....?”, அவளிடம் கேட்க, “தூக்கம் வரலடா....., ஏதாவது பேசிட்டு இருக்கலாம்”, அவள் சொல்லவே, “ஓ... பேசலாமே”, என்று சொன்னவாறு

எழுந்து சென்று, தங்கள் திருமண ஆல்பத்தை எடுத்து வந்தான்.

ஓரத்தில் இருந்த டேபிளை இழுத்துவந்து, கட்டில் அருகில் போட்டு, ஆல்பத்தை விரித்து வைத்துவிட்டு, அர்ச்சனாவை, தன் மடியில் அமர வைத்துக் கொண்டான்.

எவ்வளவுநேரம் ஆல்பம் பார்த்தாலும், நேரம் மட்டும் போகவே மாட்டேன் என்று அடம் பிடித்தது. “ஒரு ஒருமணி நேரமாவது தூங்கு சனா”, அவளைக் கட்டாயப்படுத்திப் படுக்க வைத்தான்.

அவளுக்குத்தான் மனமே வரவில்லை.....,
“என்.....னங்க....., என்...”, தயங்கியவாறே அழைத்தாள்.

“சொல்லு சனா.....”, அவளைத் தன்மேல் படுக்கவைத்தவாறே கேட்டான்.

“இல்....ல....., எது.....வும், ஒண்.....ணும்....., வேண்டாமா?”, இதைக் கேட்கும் முன்பே திணறிவிட்டாள்.

“எல்லாம் வேணும்....., ஆனா கொஞ்ச நாள் கழிச்சு. இப்போ, உன்னோட இதழை மட்டும் தீண்டிவிட்டு விலகும் மனநிலையில் நான் இல்லை. அப்படி நான் துவங்கினால், அது எங்கே போய் நிற்குமென்று எனக்குத் தெரியலை. ஆனால், பாதியில் நிறுத்த முடியாதுன்னு மட்டும் தெரியுது”, சொல்லிவிட்டு, அவள் நெருக்கத்தை, சாதாரணமாக எடுத்துக்கொள்ள, ஆழ்ந்து மூச்சுவிட்டு தன்னை நிதானப் படுத்தினான்.

அவன் நிலை புரிந்து, எதுவும் சொல்லாமல், அவன் நெஞ்சில் தன் இதழைப் பத்தித்துவிட்டு, தலை சாய்த்து, அவனைக் கட்டிக்கொண்டு, எதுவும் சொல்லத் தோன்றாமல், அமைதியாக இருந்தாள்.

தன்னை நிலைப்படுத்திய பேட்ரிக், “முதல்ல உன் படிப்பு முடியட்டும், சரியா. அதுவரை நீ எதைப்பத்தியும்

யோசிக்காமல் தூங்கு", அவள் நெற்றியில் இதமாக இதழ் பதிக்க, அந்த சுகத்தில் இமைகளை மூடிக் கொண்டாள்.

அவர்களுக்குள் கூடல் மட்டும் நிகழவில்லை. ஆனால் மனதளவில் இருவருமே ஒருவரை ஒருவர் மிகவும் நெருங்கினார்கள். திருப்பலி நேரத்தில், அவள் கைகளைப் பற்றியவாறு அமைதியாக இருந்தான்.

ஆலயத்தில் கொடுத்த கேக்கை அவளுக்கு ஊட்டி விட்டு, அவளை ஒட்டியே நின்று கொண்டான். அந்த நாளை, அவளுக்கு ஸ்பெசலாக உணர வைத்தான். உன்னால், இந்த கிறிஸ்துமஸ் நன்றாக இருக்கின்றது, நீ என் தேவதை, நீயே எனக்கு முக்கியம், என் வாழ்வின் அங்கம், என்று அவன் உடல் மொழிகளால், அவளுக்கு உணர்த்தினான்.

தனக்கு நினைவு தெரிந்த பிறகு, சந்தோசமாக, குடும்பமாக கொண்டாடும் முதல் கிறிஸ்துமஸ். தனக்கென்று ஒருவன், தன்னை உயிராய் நினைக்கும் ஒருவன், அவன் வாழ்க்கை நான் என்று, அவளுக்கு உணர வைக்கும் ஒருவன், வானில் பறந்தாள் அர்ச்சனா. தன் மகிழ்ச்சியை, அவனிடம் எப்படித் தெரிவிக்கவென்று தெரியாமல், தடுமாறினாள் அவள்.

அங்கேயே அவனைக் கட்டிக்கொள்ளவேண்டும் என்று எழுந்த உணர்வை, சிரமப்பட்டு அடக்கினாள். தங்கள் அறைக்கு வந்த அடுத்த நொடி, அவனைப் பாய்ந்து கட்டிக் கொண்டாள்.

அவன் முகம் முழுக்க முத்திரைகளால் நிறைத்தாள். தன் இதழ் தீண்ட மறுக்கும் அவன் இதழ்களைக் கவ்விக் கொண்டாள். அவன் காதலுக்கு, நேசத்துக்கு, தன்னைக் கொடுப்பதைத் தவிர, அவனுக்கு வேறு என்ன சிறந்த பரிசை கொடுக்க முடியும் என்ற எண்ணம் தோன்ற, அவனோடு இன்னும் இழைந்தாள்.

அவள் அடைக்கலம் புரிந்தாலும், அவளை ஆள முயலவில்லை அவன். தானும் அவளை கட்டிக் கொண்டு, அவள் செய்கையைத் தடுக்காமல், அமைதியாக

இருந்தான். தன் வேகம் தணிந்து, அமைதியாக அவனைப் பார்த்தாள்.

“உன்னோட கிறிஸ்மஸ் பரிசு இதா? எனக்கு ரொம்பப் புடிச்சுது”, கிறக்கமாக அவள் காதில் சொன்னான்.

அவன் ஏன் தயங்குகிறான், என்ற காரணம் புரியாமல், அவனிடமிருந்து விலகினாள். “ஜடம் ஜடம்....., பேச்சைப் பாரு, இவனை எல்லாம்.....”, வாய்க்குள் முணுமுணுத்தாள் அவள்.

அதை அவன் அறிந்தாலும், மெல்லிய சிரிப்புடன் அங்கிருந்து அகன்றான். மறுநாளே மேரியும், ஜானும் ஊருக்குக் கிளம்பி விட்டார்கள். ஆனால், அர்ச்சனா அவர்கள் வீட்டிலேயே இருந்தாள்.

முதலில், இவர்கள் திருமணத்துக்குத் தயங்கிய ஸ்டெல்லா கூட, இருவரின் புரிதலைக் கண்டு, திருமணம் சரிதான் என்ற முடிவுக்கு வந்தார். அன்று, தன் எக்ஸிபிசனுக்குத் தேவையான, வொர்கிங் மாடல் செய்யத் தேவையான, அனைத்து பொருட்களையும் வாங்க, வெளியே சென்றார்கள்.

பின்னர், அனைத்தையும் வாங்கிவந்து, அவனையும் வைத்துக் கொண்டு, வொர்கிங் மாடல் செய்யத் துவங்கினாள். வீட்டில், நைட்டி போடத் தயக்கமாக இருக்கிறது, என்று அவள் சொல்லவே, அவளுக்காக பேண்ட், ஷர்ட் மாடல் இரவு உடை வாங்கி வந்து கொடுத்திருந்தான் பேட்ரிக்.

கீழே அமர்ந்து அவள், சோல்டரிங், பின் செய்வது, சரியாக சர்க்கியூட் வந்திருக்கிறதா என சார்ட்டைப் பார்ப்பது, என அவள் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்க, அவளது சட்டை, அவள் வேலை செய்யும் விதத்தில் வயிற்றுக்கு மேலே சுருண்டதுகூடத் தெரியாமல், வேலை பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஆனால் பேட்ரிக்கின் பார்வை, அவளது வெற்று இடையிலேயே பாய்ந்து மீண்டுகொண்டிருந்தது. அந்த நினைப்பிலேயே சொன்னான், “சனா....., ரொம்ப சின்சியரா வேலை செய்யிற போல? ஆனா ரொம்ப அழகா இருக்க”, அவன் குரலின் மாறுபாடு, அவளுக்குப் புரிய,

அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவன் பார்வை சென்ற இடத்தைப் பார்த்தவள், வேகமாக உடையைச் சரிசெய்தாள். “பொறுக்கி, பொறுக்கி, பாத்தது மட்டும் போதாதுன்னு, உக்காந்து கமெண்ட்ஸ் வேறையா, உங்கள?”, அருகில் இருந்த சோல்டரிங் மெசினை, அவன் கண்முன்பு நீட்டி, “கண்ணைப் பொசுக்கிடுவேன்”, என மிரட்டினாள்.

அவள் அருகில் வந்து மிரட்டவே, அவள் சட்டைக்கு அடியில் இருந்த அவள் வெற்றிடையில் கையை வைத்து அழுத்தி ஒரு கிள்ளு கிள்ளிவிட்டு, “பாத்ததுக்கு கண்ணை பொசுக்கினால், இப்போ என்ன செய்வ?”, சொல்லிவிட்டு எழுந்து ஓடினான்.

அவனை விரட்டும் வேகத்தில், கீழே விரித்து வைத்திருந்த மார்க்கரைப் பார்க்காமல், அதன்மேலே காலை வைக்க, அது உருண்டு, கீழே விழப்போனாள். அவள் கீழே விழாமல், ஓடிவந்து தாங்கிக் கொண்டான். அவளும் பயத்தில், அவன் சட்டையை இறுகப் பற்றிக்கொண்டு அவன் நெஞ்சோடு ஒடுங்கினாள்.

“சனா....., என்னை இப்படியெல்லாம் சோதிக்கக் கூடாது. நானும் எவ்வளவு நாள்தான் நல்லவனா இருக்குறது?”, அவள் காதில் ஹஸ்க்கி வாய்சில் முணுமுணுத்தான்.

‘உன்னை யாருடா நல்லவனா இருக்கச் சொன்னது?’, மனதுக்குள் அவனுக்கு பதில் கொடுக்க முடிந்த அவளால், வெளியே சொல்ல முடியவில்லை.

“ஹால்ல என்ன விளையாட்டு, சின்னப் பிள்ளைங்க மாதிரி, அச்சு....., மாடல் செஞ்சு முடிச்சுட்டியா?”, ஸ்டெல்லாவின் குரலில், இருவரும் வேகமாக விலகினர்.

“இதோ, இப்போ முடிஞ்சுடும் ஆன்ட்டி”, அவர் முகத்தைப் பார்க்க மறுத்து, தலை குனிந்தே பதில் சொன்னாள். “பரவாயில்லை மெதுவா செய், இன்னும் நாள் இருக்கே”, அவள் தலையைத் தடவியவாறு சொல்லிவிட்டு சென்றுவிட்டார்.

“டேய்..... மழை ஏதாவது வருதாடா.....?”, உறைந்து நின்றிருந்த பேட்ரிக்கின் விலாவில் இடித்தாள்.

“ஏன்.....?”.

“இல்ல.... ஆன்ட்டி என்கிட்டே சிரிச்சுட்டாங்களே அதான் கேட்டேன்”.

“அம்மாவை கிண்டல் பண்ணாதேன்னு, எத்தனை நாள் சொல்லி இருக்கேன்”, அவள் காதை, பொய்யாக முறுக்கினான்.

அர்ச்சனா, தொடர் இணைப்பு, பக்க- இணைப்பு, மின்சாரத்தைக் கடத்தும் பொருள், கடத்தாப்பொருள் கண்டுபிடிக்கும் இயந்திரம், என மூன்று வொர்கிங் மாடல்களும், சூரியக் குடும்பம் ஒன்றை சார்ட்டிலும் தயாரித்து வைத்திருந்தாள்.

காலேஜ் துவங்கியதும், அன்று கண்காட்சி நாள். முந்தினநாளே அனைத்தையும், அவரஅவர்கள் வகுப்பில், செட் செய்துவிட்டார்கள். இரண்டு வொர்கிங் மாடல் போதுமாகையால், தொடர் இணைப்பையும், மின்சாரம் கடத்தும், கடத்தா அந்த மாடலையும் மட்டும் வைத்திருந்தாள்.

மறுநாள், வகுப்பிற்குச் செல்ல அவளுக்கு நேரமாகிவிட்டது. அவர்களது மாடல்களைப் பார்த்து, மதிப்பெண் போடவும் ஆசிரியர்கள் வந்துவிட்டார்கள். அவள் வகுப்பில், அர்ச்சனாவின் பெயர்தான் முதலில் வரும். அவளை அழைக்கவே, உள்ளே சென்றவளுக்கு, அங்கே பேரிடி காத்திருந்தது.

இரண்டு மாடல்களுமே வேலை செய்யவில்லை. அதை, தான்தான் உருவாக்கியவள் என்பதால், அதை சரி செய்ய முயன்றாள். ஆனால் முடியவில்லை. சோல்டரிங் செய்திருந்த வயர்களை, எலி கடித்து வைத்திருந்ததைப் போல இருந்தது. அர்ச்சனா, மறுபடியும் அதை சரிசெய்ய முயன்றாள்.

தைரியத்தை மட்டும் இழக்கவில்லை. அவளை, வெளியே போகச் சொல்லிவிட்டார்கள். அனைவரும் அவளை சூழ்ந்துகொண்டு கேட்க, பதில் சொல்லாமல், ஸ்டாப் ரூம் விரைந்தாள்.

“அம்மா....., அம்மா.....”, அவள் வேகமாக வரவே, ஸ்டெல்லா பதட்டமாக எழுந்து வந்தார்.

“அம்மா, என்னோட ரெண்டு மாடலும் வொர்க் ஆகலை, எனக்கு இப்போ, நான் மூணாவதா செஞ்சுவச்ச அந்த மாடல் வேணும், ஒரு பலூன், ஒரு சார்ட், நைலான் கயிறு, இவ்வளவும் வேணும், புது மாடல் செய்ய”, அந்த இக்கட்டிலும், செயல்படத் துடிக்கும் அவளது தன்னம்பிக்கையை, வியந்தார்கள் ஆசிரியர்கள்.

ஸ்டெல்லா, பேட்ரிக்கிற்கு போன் செய்து, அனைத்தையும் அடுத்த பத்து நிமிடங்களில் கொண்டுவரச் சொன்னார். அவன் வரவே, அவனைப் பார்த்து மெல்லிதாகப் புன்னகைத்தாள்.

அவளைத் தோளோடு அணைத்து விடுவித்தான். யாரும் அவளிடம் என்னவென்று கேட்கவில்லை. அடுத்த இரண்டுமணி நேரத்தில், அனைவரின் மாடல்களையும், பார்த்து முடித்துவிட்டார்கள். பிறகு, அர்ச்சனா வேறு இரண்டு மாடல்கள் காட்டுவதாகச் சொல்லவே, அவளை அனுமதித்தார்கள்.

முதல் மாடலைக் காட்டி, அதைப்பற்றி விளக்கினாள். அடுத்த மாடலுக்கு, பலூனை ஊதி, நைலான் கயிற்றால் கட்டினாள். சார்ட்டை கோன் ஷேப்பில் சுருட்டி, அதன்

உள்ளே பலூனை வைத்துக் கட்டினாள், பின்னர், அந்த நைலான் கயிற்றில், நெருப்பைப் பற்றவைக்க, அது உருகி, பலூனில் இருந்த காற்று வேகமாக விடுபடவே, ராக்கெட் மேலே பறந்தது.

அந்த நேரத்தில், அவசரமாக, ஒரு ராக்கட்டையே செய்த அவள் புத்திசாலித்தனத்தை, வியந்தார்கள். பெமி, இதையும் ஒரு உச்சபட்ச்ச வெறுப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள். அங்கிருந்து வெளியேறினாள்.

அர்ச்சனாவுக்கே, அன்றைய நாளின், சிறந்த மாடலுக்கான பரிசு வழங்கப்பட்டது. மதிப்பெண்களும் முழுதாக அவளுக்குக் கொடுக்கப்பட்டது. அதன் பிறகே, எப்படி அர்ச்சனாவின் மாடல் மட்டும் வேலை செய்யாமல் போனது என்ற கேள்வி வந்தது.

அதை கண்டுகொள்ளாமல் விடும்படி கேட்டுக் கொண்டாள் அர்ச்சனா., கல்லூரியில், அது பெரிய விஷயமாகவே மாறியது. முதல்வரின் கவனத்துக்கும், கொண்டுசெல்லப் பட்டது. அர்ச்சனா, யாரிடமும் எதுவும் சொல்லவில்லை.

ஆனால், ஸ்டெல்லாவிடமும், பேட்ரிக்கிடமும் அவளால் உண்மையை மறைக்க முடியவில்லை. இருவருக்குமே கோபம்தான், ஆனால், அதைப் பெரிதுபடுத்தவேண்டாமென்று அர்ச்சனா சொல்லவே, கொஞ்சம் அடங்கினார்கள்.

பகுதி - 33

-நட்பின் பெருமையும்

நட்பின் துரோகமும்

ஒரே கூடாரத்தின் கீழ்

நட்பை நட்பாய் ஏற்கவே

விரும்புகிறேன்.....

ஹாஸ்டலுக்கு வந்த ஜூடி, அர்ச்சனாவைப் பிலு பிலுவென்று பிடித்துக் கொண்டாள். இப்போ அவள் சொல்லவில்லை என்றால், தானே சென்று அனைவரிடமும் சொல்லிவிடுவேன், என்று மிரட்டினாள்.

அவளது புலம்பல் தாங்க முடியாமல், “ஏய் பஞ்சுமிட்டாய், பூனக்கண்ணி, என்னன்னுடி போய் சொல்லுவ? உன்கிட்டே என்ன ஆதாரம் இருக்குன்னு கேப்பாங்க. அதைவிட, அவளை மட்டும் குத்தம் சொல்ல, என்னக் காரணம்னு கேப்பாங்க, எனக்கு இல்லாத அக்கறை, உனக்கு என்னன்னு கேப்பாங்க, என்ன சொல்லுவ?”, அவள் கோபத்தை ரசித்தவாறே கேட்டாள்.

“இதெல்லாம் ஒரு மேட்டரா? ஏற்கனவே, உங்களோட ரெகார்ட் நோட்டைத் தொலைத்தது, உங்களோட ஸ்கூல் சார்ட் எல்லாத்தையும் நாசம் செய்தது, அன்னைக்கு பங்க்சன்ல காசெட் மாத்தியது, ப்ரோக்ராம்க்கு பேரே கொடுக்காமல் மேடையேறியது, எல்லாம் எனக்கும் தெரியும். நீ வேண்ணா மதர் தெரசாவா இரு, எனக்கொண்ணும் அப்படித் தேவையில்லை”, சகட்டு மேனிக்குச் சாடினாள்.

“ஏய்... நான் உன்னைவிடப் பெரியவடி, என்ன நீ.... வா போன்னு பேசுற?”, அவளை திசை திருப்பக் கேட்டாள்.

“அச்சு, விளையாடாதீங்க, நான் உன்னை அடியேய்ன்னு கூப்ட்டாலும், நீங்க ஒண்ணும் சொல்லமாட்டிங்க, இப்போ, என் பேச்சைத் தடுக்கணும், அதுக்குதானே இந்த விளையாட்டு. போதும், நீங்களாச்சு அவளாச்சு, ஆனா, இது, இத்தோட முடியும்னு எனக்குத் தோணலை.

இதைவிட பெருசா ஏதாவது நடந்தால்தான் உங்களுக்குத் தெரியும். உங்க மூஞ்சியைப் பாத்தா, என் BP தான் எகுறும், நான் போறேன். அப்படி என்னத்தான் அவ மேல கருசனையா”, புலம்பிவிட்டுச் சென்றுவிட்டாள்.

“பொண்டாட்டி, அவ இப்படி குதிக்கிறா, நீ அவளை அடக்காமல், என்னடி அவ வாயை வேடிக்கைப் பாத்துட்டு இருக்க?”, வைஷுவிடம் கேட்டாள்.

“அச்சு, என்னையும் பேச வைக்காதே”, அவள் அதைவிடக் கடுப்பாகச் சொன்னாள். “எப்படிடி அவளால முடிஞ்சுது, அதுவும், இதில் நீ சரியா பெர்போர்ம் பண்ணலன்னா, உன்னோட நாற்பது மார்க் அப்படியே போயிருக்கும். நான் அந்த இடத்தில் இருந்திருந்தால் செத்தே போயிருப்பேன்.

சொல்லு அர்ச்சனா..... அப்படி அவகிட்டே என்ன கிரேஸ்”, அவளுக்கு, அர்ச்சனாவின் செயலுக்குக் காரணம் தெரிந்தே ஆக வேண்டும்.

“எனக்கு, அவமேல எந்த கிரேஸும் கிடையாது, எல்லாம் அவ அம்மாவோட முகத்துக்காகவும், அவங்க சொன்ன வார்த்தைக்காகவும்தான்”, மெதுவாகச் சொன்னாள்.

“எல்லாத்துக்கும் ஒரு அளவிருக்கு அச்சு. இது உன் எதிர்காலம் சம்பந்தப்பட்டது. என்னதான் அவங்க அம்மாவுக்காகன்னாலும்.....”, அவளுக்கு ஒத்துக்கொள்ளவே முடியவில்லை.

“என்னை முதலிலேயே, சரியா கணித்தது அவங்கதான். என்னையே, அவங்க இவ்வளவு எடை போடும்போது,

அவங்க பொண்ணை எடைபோட மாட்டாங்களா?. பெமி எப்பவுமே, கொஞ்சம் பொறாமை குணம் உள்ளவதானாம்.

அதிலும், அவ கூட இருக்குறவங்க, அவளுக்கு ஜால்ரா போடணும், தன்னைவிட அதிக மார்க் வாங்க கூடாது, எதிலும் தன்னைவிட சிறப்பா இருக்கக் கூடாதுன்னு நினைப்பாளாம். அவளோட இந்த குணமே, அவளுக்கு நட்பு வட்டத்தைக் கொடுக்காமலே இருந்து இருக்கு.

இங்கே என்னன்னா, வந்த முதல் நாளே அவகிட்டே நான் ஒட்டிட்டேன். அதிலும், கொஞ்சம் லூசு மாதிரி நடந்தது, அவளுக்கு என்மேல், முதலில் கொஞ்சம் பிடிப்பைக் கொடுத்து இருக்கு. ஆனா விதி....., நான் அப்படி இல்லைன்னு நினைக்கிறேன்", குறும்பாகச் சொல்லி வைஷுவைப் பார்க்க, அவள் இவளது தலையில் குட்டினாள்.

பேச்சைத் தொடர்ந்தாள்....., "அதுவே அவளுக்குப் பொறாமையை விசிறி விடப் போதுமானதா இருந்துருக்கு, இவதான், தினமும் வீட்டுக்கு போன் செய்வாளே, எல்லாத்தையும் அவங்க அம்மாகிட்டே புலம்பி இருக்கா,

அவங்க, அவளைப் பாக்க வந்தப்போ, நான் இந்த லைப்ரரேரி சிஸ்டர் பத்தி கேக்கும்போது, எல்லாத்தையும் சொன்னாங்க. அதுமட்டும் இல்லாமல், கண்டிப்பா, அவ ஏதாவது, தன்னை மீறி உனக்குத் தொல்லை தந்தாலும், எப்படியாவது இந்த படிப்பு முடிய அவளுக்கு ஹெல்ப் பண்ணும்மான்னு, என்கிட்டேயே சொன்னாங்க.

அதைவிட, அவங்களை நான் அம்மான்னு கூப்பிடணும்னு சொன்னாங்க. அவங்களை நான் அம்மாவா நினைத்தால், அவ என்னோட கூடப் பிறந்தவ ஆவா. என்னதான் அவளை நான் கூடப் பிறந்தவளா நினைத்தாலும், அவ என்னைக் காயப்படுத்தியதை, தாங்க முடியாமல்தான், அவகிட்டே இருந்து விலகி இருக்கேன்.

அவ கூடப் பேசி, அவளோட கோபத்தை அதிகமாக்க வேண்டாம்னுதான், பேசுவதையும் விட்டுட்டேன். அவமேல எனக்கும் கோபம் இருக்கு. என் கோபத்தை நான் இப்போ காட்டினால், அவ உடனே இங்கே இருந்து போகவேண்டி வரும்.

சொல்லப் போனா, அவ இந்தமாதிரி ஏதாவது செய்வான்னுதான், நான் மூணு வொர்கிங் மாடல் செஞ்சேன். அவ ஒன்றைத்தான் நாசம் செய்வான்னு நினைச்சேன், ஆனா, அவ ரெண்டையுமே நாசம் செய்தது, நானே எதிர் பார்க்காதது....., அங்கே வந்துது கதையில ட்விஸ்ட்..... .

இப்போ இன்னும் நாலே மாசம். அது முடிஞ்சதும், அவ யாரோ நான் யாரோ. அதுவரைக்கும்....., நான் கொஞ்சம் கவனமா இருந்துக்கறேன் விடு", கேலியாகச் சொல்லி முடித்தாள்.

"சரி சொல்லு, பொங்கலுக்கு ஊருக்குப் போறியா?", பேச்சை மாற்றினாள்.

"ஊருக்குப் போறேன்....., ஆனா, என் வீட்டுக்குத்தான் போறேன்", கவலையாகச் சொன்னாள்.

"ஏன்.....? அண்ணா இங்கேயே தேடி வந்துடப் போறாரு. ஏற்கனவே ஒரு முறை இப்படித்தான் ஆச்சு", அவளுக்கு நினைவூட்டினாள்.

"நீ வேற, இந்தக் காலேஜ் ரூல்சை மீறுற நிலைக்குப் போய்டும்போல, என்னால் அவரை சமாளிக்க முடியலை. அதான் அவர்ட்ட சொல்லிட்டு, என் அம்மா வீட்டுக்குத் தப்பிச்சுப் போறேன்", கவலையில் தோய்ந்து வந்தது அவள் குரல்.

"வைஷு, இப்படித் தள்ளித் தள்ளிப் போகுறதுதான், பிரச்சனைக்கு முதல் காரணமே, சரி, உனக்குத் தெரியாதது இல்லை. இன்னும் நாலு மாசம்தானே", அவளும் தோழியை

சமாதானம் செய்தாள். அவர்களுக்குத் தெரியவில்லை, விதி வலியது என்று.

இன்னும், படிப்பு முடிய நான்கு மாதங்களே இருந்தது. அதற்குள், இன்டர் காலேஜ் காம்பட்டிசன், காலேஜ் கேம்ப், ஸ்போர்ட்ஸ் டே, காலேஜ் டே, அசைன்மென்ட்ஸ், ரெகார்ட் வேலைகள்....., இதில் இறுதியாக காலேஜ் டூர் ஒரு வாரம். இப்படி, எக்கச்சக்க வேலைகள் இருந்தன.

இடையில், ஐந்து நாள் மட்டுமே அவர்களுக்கு விடுமுறை, இந்த நாட்கள் ஓடி முடிந்தால், இவர்களுக்கு அமரக் கூட நேரம் இருக்காது. எனவே, ஹாஸ்டலில் இருந்த அனைவரையுமே, அர்ச்சனா வீட்டுக்குப் போகச் சொன்னாள். அர்ச்சனா, பேட்ரிக் வீட்டுக்குச் சென்றாள்.

வீட்டுக்குச் சென்ற வைஷுவை வரவேற்றது மூடிய கதவே. பக்கத்து வீட்டில் கேட்க, அவளது வீட்டில் அனைவரும், அவளது குலதெய்வக், கோவிலுக்கு, பொங்கல் வைக்கச் சென்றிருப்பதாகவும், நாளைக் காலையில் வந்துவிடுவார்கள் என்றும் சொன்னார்கள். அவளைக் கணவன் வீட்டுக்குப் போகச் சொல்லிவிட்டும் சென்றிருந்தார்கள்.

அப்படி அவள் செல்லவில்லை என்றால், வீட்டில் இருக்கச்சொல்லி, சாவியைக் கொடுத்துவிட்டுச் சென்றதாகச் சொல்லி, சாவியைக் கொடுத்தார்கள். வைஷு, கணவன் வீட்டுக்குச் செல்ல மனமில்லாமல், தன் வீட்டுக்கே சென்றாள். இந்த ஐந்து நாட்களை தள்ளிவிட்டால், இன்னும் நான்கு மாதங்கள், எப்படியும் வீட்டுக்குச் செல்லவேண்டி இருக்காது என்று எண்ணினாள்.

வீட்டுக்குச் சென்று குளித்துவிட்டு, சமையல் செய்யும் வேளையில் அழைப்புமணி ஒலிக்கக் கேட்டது. ‘யார்

இந்நேரம்', என்ற யோசனையுடன் கதவைத் திறக்க, வெளியே நின்றான் மைகேல்.

முழுதாக அதிர்ந்தாள்., அவனோ விரிந்த புன்னகையுடன், "மாமா போன் செஞ்சாங்க, நீ இன்னைக்கு இங்கே வரப்போறதா. உன்னை வந்து கூட்டிட்டுப் போகச் சொன்னாங்க. உங்க காலேஜ்க்கு, போன் செய்து சொல்ல முடியாதே, அதான் எனக்குச் சொன்னாங்க. அதுவும் நல்லதா போச்சு.

சரி, இப்போ நான் உள்ளே வரவா, இல்லை இப்படியே வீட்டுக்குப் போயிடவா?", அவள் தன்னை அழைக்காததை, சுட்டிக் காட்டினான்.

"வா.....வாங்க.....", அப்பொழுதே, அவள் மூச்சுக்காற்று, தப்பத் துவங்கியது.

மைகேல், சாதாரணமாக இருப்பதாகத் தோன்றினாலும், அவன் அவ்வாறு இல்லை என்பதை, சற்று நேரத்திலேயே நிரூபித்தான். அவள் காபி கொண்டுவந்து கொடுக்க, "காபி ரொம்ப சூடா இருக்கு.....", அவன் சொன்ன தோரணையே, அவளுக்கு, அவன் எதைச் சொல்கிறான் என்று புரிந்தது.

தன் பதட்டத்தை மறைக்க, கிச்சனுக்குள் சென்று புகுந்து கொண்டாள். சப்பாத்தி செய்யலாம் என்ற எண்ணத்தில் அவள் மாவைப் பிசைய, அவள் கையோடு கை வைத்து, மாவைப் பிசைந்தன இன்னும் இரண்டு கரங்கள்.

"மைக், நீங்க ஹால்ல உக்காருங்க, நா...ன்.... சமைச்சுட்டு உங்களைக் கூப்பிடுறேன்", தயங்கியவாறே சொன்னாள்.

"நீ எதுக்கு தனியா கஷ்டப்படணும், நான் உனக்கு ஹெல்ப் பண்ணுறேன்". இதழ்கள் அவள் முதுகில் ஊர்ந்தன, கைகள் இடையில் அழுந்தின. வைஷுவின் உடலில் மெல்லிய நடுக்கம்.

“நீங்க எந்த ஹெல்பும் செய்ய வேண்டாம்.....”, சாதாரணமாகச் சொல்ல முயன்றும், குரல் ஒத்துழைக்கவில்லை.

அவள் இடையைப் பற்றியிருந்த கைகள், அவள் மேனியில் முன்னேறின. அவன் கைகளைத் தடுக்க முயன்றாள். கணவனின் தேக்குமரக் கரங்களின் பிடியின் முன்னர், அவள் வாழைத்தண்டுக் கைகளின் பலம் நிற்க முடியுமா?

“என்னங்க..... இன்னும் நாலே மாசம்தாங்க, முடிச்சுட்டு, சீக்கிரம் வந்துடுவேன். ஹாஸ்ட்டல்ல, லீவ் கூட இனிமேல் கிடையாது?”, அவள் எதையோ நினைத்துச் சொல்ல, அவன் அதையே பிடித்துக் கொண்டான்.

“வைஷு....., இன்னும் நாலு மாசம், உன்னைப் பாக்க கூட வரலடி, இன்னைக்கு மட்டும்.....”, அவளைத் தன் நெஞ்சோடு இறுக்கிக் கொண்டான்.

அவன் இதழ்கள், அவள் இதழ்களைச் சிறை செய்தன, பேச்சிழந்தாள் வைஷு. அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவளைத் தரையில் சரித்தான். அவளைச் சிந்திக்கக் கூட விடாமல், அவள்மேல் பரவிப் படர்ந்தான்.

“என்னங்க..... ரூம்க்கு போகலாம்.....”, அவள் பேச்சைக் கேட்கும் நிலையில், அவன் இல்லை.

அவனை விலக்க முயன்ற அவளது முயற்சிகள் எதுவும் பலிக்கவில்லை. அ வளை எடுத்துக்கொள்ளும் வரை அவன் ஓயவில்லை. அன்று முழுவதுமே, அவளை அவன் விடவே இல்லை. முதல்முறை மறுத்தவள் பிறகு அவன் கைகளுக்குள் கரையவே செய்தாள். குழந்தைப் பிறப்பைத் தடுக்கப் பின்பற்றப்படும் முறைகளை , மைக்கேல் என்றுமே விரும்பாததால் , ஒரு புது உயிரின் ஜனனம் விதைக்கப்பட்டது அன்று.

இன்று இன்டர் காலேஜ் காம்படிஷன்., டிஸ்கோ நடனம், பரதநாட்டியம், வீதி நாடகம், தனிநபர் பாடல், குழுப் பாடல்

என அனைத்திலும் வென்றது, அர்ச்சனாவின் கல்லூரி. மெகந்தி போட்டி, முடியலங்காரப் போட்டியில் பத்தே நிமிடங்களில்,அலங்காரங்களைச் செய்து, பரிசை வென்றாள் வைஷு.

ஜூடியை, நகைச்சுவைத் துணுக்கு, கடிஜோக் அனைத்தையும் நாடகபாணி, நேர்முகத்தேர்வு முறையில் செய்ய வைத்து, அவளையும் வெல்ல வைத்தாள். பெமியை, கல்லூரியிலேயே ஸ்டெல்லா தடுத்துவிட்டார், அவள் அங்கு சென்றும் ஏதாவது குழப்பம் செய்யக் கூடாதே என்பது அவரது கவலை.

சுழல் கோப்பையை வென்றது இவர்களது கல்லூரி. அடுத்தது, கல்லூரி ஆண்டுவிழாவை முதலில் வைத்தார்கள். எப்பொழுதுமே ஸ்போர்ட்ஸ் டே தான் முதலில் வைப்பது வழக்கம். ஆனால் இந்த வருடம் அதைத் தள்ளி வைத்தார்கள்.

மறுபடியும் பயிற்சி, ஒழுங்குப் படுத்துதல், கண்காணித்தல், இடையில் கல்லூரி வேலைகள், அசைன்மென்ட்கள், பாடத்துக்கு நோட்ஸ் எடுப்பது, நிற்கக் கூட நேரமில்லை அவளுக்கு. இரண்டாம் சனிக்கிழமை, வைஷு, அர்ச்சனாவைக் கட்டாயப்படுத்தி, பேட்ரிக் வீட்டுக்கு அனுப்பி வைத்தாள்.

வீட்டுக்கு வந்தவளைப் பார்த்து, முகம் மலர்ந்தான் பேட்ரிக். ஆனால் அவள் உடலின் மெலிவும், கண்கள் தூக்கத்துக்குத் தயாராக இருந்ததும், அவள் களைப்பும், அவன் பார்வையிலிருந்து படத் தவறவில்லை.

“அச்சு வா.....”, ஸ்டெல்லா வரவேற்க, “அம்மா..... தூங்கணும்”, அவரிடமே சொல்ல, உருகியே விட்டார்.

“இரும்மா....., டிப்பன் சாப்ட்டுட்டுப் படுக்கலாம்”, அக்கறையாகச் சொன்னார்.

“இல்லம்மா சாப்ட்டேன்....., நான் படுத்துக்கவா?”, ஏக்கமாகக் கேட்டாள்.

“பேட்ரிக், அவளை அழைச்சுட்டுப் போ.....”, அவர்களை அனுப்பிவிட்டு, ஹார்லிக்ஸ் கலந்து, கொண்டு செல்வதற்கு முன்பே அவள் தூங்கி விட்டிருந்தாள்.

“வைஷு....., அரைமணிநேரத்தில் எழுப்பிவிடு, நான் ரெகார்ட் எழுதணும்....., முடியலடி.....”, தூக்கத்தில் புலம்பியவாறு, புரண்டு படுத்தாள்.

“அம்மா.....”, பேட்ரிக் கேள்வியாகக் கேட்க, “இன்னும் இருக்க மூணு மாசமும், அவங்களுக்குத் தூங்கக் கூட நேரம் கிடைக்காது. அது மட்டும் இல்லை, இவ லீடர் வேற, எல்லா பொறுப்பையும் முன்னே நின்னு பாக்கணும்.

அப்போ, இவளுக்குன்னு இருக்குற நேரம், நைட் மட்டும்தான். அவளோட வேலை எல்லாம், அவ நைட் தான் செய்யணும். அதான் தூங்கியே இருக்கமாட்டா....., முடிஞ்சா இந்த ஹார்லிக்ஸ அவளுக்குக் கொடுத்துடு”, அவன் கையில் திணித்துவிட்டுச் சென்றார்.

அவளைத் தூக்கி, தன் நெஞ்சில் சாய்த்துக் கொண்டான். “வைஷு இன்னும் பத்து நிமிஷண்டி.....”, புரண்டு படுக்கப்போனாள்.

“சனா..... இந்த பாலைக் குடிச்சுடு”, குழந்தைக்குப் புகட்டுவதுபோல் கொடுத்தான். “என்னங்க....., நீங்களா? நீங்க எப்போ வந்தீங்க.....? தன் முகத்தை, அவன் நெஞ்சில் வைத்துத் தேய்த்துக்கொண்டு உறக்கத்தைத் தொடர்ந்தாள்.

அவளை இன்னும் இறுக அணைத்துக்கொள்ள, அவனோடு இன்னும் ஒண்டிக்கொண்டு உறங்கினாள். நேரம் மூன்றை நெருங்கியும் அர்ச்சனா எழவே இல்லை. பேட்ரிக் கவலை கொண்டான். அவள் எழும்பும் எண்ணமே இல்லாமல் உறங்கவே, வேறு வழியில்லாமல் பேட்ரிக் மூன்று முப்பதுக்கு எழுப்பினான்.

“சனா எழுந்துக்கோ, மணி மூணரை ஆச்சு.....”, அவன் குரலில், மெதுவாகக் கண்விழித்தாள். அவள் விழிகள் கொவ்வைப் பழமாகச் சிவந்திருந்தது. தூக்கம் இன்னும் மிச்சமிருந்தது, அவள் விழிகளில்.

“நீங்க எப்படி ரூம்க்கு வந்தீங்க? யாராவது பார்த்தால், என்ன நினைப்பாங்க? முதல்ல போங்க”, அவள் ஹாஸ்டல் அறையில் இருப்பதாக நினைத்துப் பேசினாள்.

“சனா....., நீ நம்ம வீட்டுல, நம்ம பெட்ல இருக்க. என்னடா.... வந்ததுகூட தெரியலையா? அப்போ எப்படி நம்ம வீட்டுக்குச் சரியா வந்த? ரொம்ப வேலையா?”, கவலையும் அக்கறையும் போட்டி போட்டது அவன் குரலில்.

“அதெல்லாம் எதுவும் இல்லை. நான் நல்லாதான் இருக்கேன். டைம் என்ன? நான் நாலுமணிக்கு அங்கே இருக்கணும்”, கண்களைச் சுழலவிட்டவாறு கேட்டாள்.

“முதல்ல சாப்பிடு, வேற எல்லாம் பிறகு பாத்துக்கலாம்”, கொஞ்சம் கோபம் எட்டிப்பார்த்தது அவன் குரலில்.

அவனை வித்தியாசமாகப் பார்த்தாள், அவனுடன் எழுந்து வந்து சாப்பிட அமர்ந்தாள். பேட்ரிக்கும், அவளுடன் சாப்பிட அமரவே, “நீங்க இன்னும் சாப்பிடலையா? அப்போ என்னை சீக்கிரமா எழுப்பியிருக்க வேண்டியதுதானே?”, நெகிழ்வாகக் கேட்டாள்.

சாதத்தைப் பிசைந்து, அவளுக்கு முதலில் ஊட்டினான். இருக்கையிலிருந்து எழுந்து சென்று அவனைக் கட்டிக் கொண்டாள். ஸ்டெல்லாவைப் பார்த்தும் அவள் விலகவில்லை. பேட்ரிக் தான் கொஞ்சம் சங்கடப்பட்டான்.

“அச்சு, நான் இங்கே இருக்கேன், ஞாபகம் இருக்கா?”, கேலியாகக் கேட்டு, கொண்டு வந்திருந்த தண்ணீரை வைத்துவிட்டுச் சென்றார்.

“நான் என் புருசனைத்தானே கட்டிப்புடிச்சேன். உங்களுக்குப் பொறாமையா இருந்தால், அங்கிள் அங்கேதான் இருக்காங்க, போய் புடிச்சுக்கோங்க”, குழந்தைத்தனமாகச் சொன்னாள்.

“நான் எதுவும் பாக்கலை……., சரியா?”, சிரிப்பாகச் சொல்லிவிட்டு சென்றுவிட்டார்.

பேட்ரிக்கை முழுதாக ஊட்டிவிடவைத்துச் சாப்பிட்டுவிட்டு, “லவ் யூ டா புருசா. எங்க அம்மா கூட எனக்கு ஊட்டி விட்டதே இல்லை”, அவனை அணைத்து, கன்னத்தில் முத்தமிட்டுச் சொன்னாள். அவள் சாதாரணமாகச் சொல்ல, உருகியது என்னமோ அவன் உள்ளம். இனிமேல் எதற்காகவும் அவளை ஏங்கவே விடக்கூடாது என்ற வைராக்கியமே பிறந்தது அவன் மனதில்.

அனைத்தையும் ஒதுக்கி வைத்துவிட்டு, ஹாலுக்குச் சென்றார்கள். “அம்மா, நான் ஹாஸ்ட்டல் கிளம்பணும், பேட்… இவங்க வேண்டாம்னு சொல்லுறாங்க. இன்னைக்கு ப்ராக்டிஸ் வேற இருக்கு”, தயக்கமாகச் சொன்னாள்.

பேட்ரிக் எதுவும் சொல்லவில்லை. அவனுக்குத் தெரியும், எப்படியும் அவன் தாய் அவளை ஹாஸ்டல் தான் போகச் சொல்லுவார் என்று. “இல்ல அச்சு, இன்னைக்கு இருந்துட்டு நாளைக்குக் காலையில் வேண்ணா போ”, அவர் சொல்லவே, மூவருமே ஆச்சரியமாகப் பார்த்தார்கள்.

பின்னர் கொஞ்சநேரம் அவர்களோடு அமர்ந்து, பேசிக் கொண்டிருந்தாள். ஆன்ட்டி, அங்கிள் போய், அம்மா அப்பா என்றே அவர்களை அழைக்கத் துவங்கி இருந்தாள். அவர்கள் கவனித்தாலும், அதைப்பற்றி அவளிடம் எதுவும் கேட்கவில்லை.

தன் தாய், அர்ச்சனாவை வீட்டில் தங்கச் சம்மதித்த சந்தோசத்தில், தாயின் மடியில் தலை வைத்துப் படுத்துக் கொண்டான் பேட்ரிக். அதைக் கொஞ்சம் ஏக்கமாகவே பார்த்தாள் அர்ச்சனா. அவள் முக மாறுதலை உணர்ந்து,

“என்ன அச்சு, என் பையன் என் மடியில் படுத்தவுடனே, முகமே மாறிடுச்சு”, அவளைச் சீண்டவென்றே கேட்டார் ஸ்டெல்லா. அவள் விளையாட்டாக ஏதாவது சொல்வாள், இல்லையென்றால், இப்பொழுது பேட்ரிக்கிற்கு அடிவிழும், என்று எதிர்பார்த்து அனைவரும் காத்திருக்க,

“நானும் உங்க மடியில படுத்துக்கவாம்மா.....?”, ஒரு வேகத்தில் கேட்டுவிட்டவள், சட்டென எழுந்து தங்கள் அறைக்குச் சென்றுவிட்டாள்.

ஒரு நிமிடம் அங்கே கனத்த அமைதி. “அம்மா ப்ளீஸ்ம்மா.....”, பேட்ரிக், தாயைக் கெஞ்சலாகப் பார்க்க, அவனது அறைக்குச் சென்றார்.

கட்டிலில், குப்புற விழுந்து அழுதுகொண்டிருந்தாள் அர்ச்சனா. அவள் அருகில் சென்று அமர்ந்து, அவள் தலையைக் கோதினார். “சாரிம்மா....., என்னை அறியாமல்.....”, “அப்போ..... என்னை அம்மான்னு சொல்லுறது, சும்மா வாய் வார்த்தையா தானா? அப்படி இல்லன்னா, இந்நேரம் பேட்ரிக்கைத் தள்ளி விட்டுட்டு, நீ படுத்துருக்க வேண்டியதுதானே.

நீ என்னை எப்படி நினைக்கிறயோ? நான் உன்னை என் மகளாகத்தான் பார்க்கிறேன், பார்ப்பேன். இது சும்மா வாய் வார்த்தைக்காகச் சொல்லலை, உண்மையாகவேதான் சொல்லுகிறேன். என்னைக்கு உன்னை மேரியோடு பார்த்தேனோ, அன்றைக்கே செய்த முடிவு இது.”, தான் அவளுக்குத் தாய்தான் என்பதை நிரூபித்தார்.

அவர் இடையைக் கட்டிக்கொண்டு, மடியில் முகம் புதைத்து படுத்துக் கொண்டாள். பேட்ரிக் சண்டைக்கு வரவே, அவனுடன் சரிக்குச் சரி சண்டைபோட்டு, அவன் முடியைப் பிடித்துத் தூக்கி, அவன்மேல் விழுந்து பிராபுண்டி அவனைத் தள்ளிவிட்டாள்.

ஸ்டெல்லா, அவர்களின் சிறுபிள்ளைத்தனமான விளையாட்டை, ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

பிரான்சிஸ் கூட அவர்களின் விளையாட்டை ரசித்தார்.

அனைவரும் உறங்கச் சென்ற பிறகு, பிரான்சிஸ் கேட்டார், “என்ன ஸ்டெல்லா, முதல்ல, கல்யாணத்துக்கே ஒத்துக்கலை, பிறகு ரொம்பக் கோபமா இருந்த, இப்போ என்னன்னா....., ரெண்டு பேரையும், வீட்டில் ஒண்ணா தங்கவைக்கக் கூட, தயங்கவே இல்லை”, தன் மனதை அரித்ததைக் கேட்டுவிட்டார்.

“கல்யாணம் முடிஞ்சுட்டா, அவளோட படிப்பு தடைபடும், மனசு சஞ்சலப்படும், பேட்ரிக்கும் எந்த அளவு புரிஞ்சு நடந்துப்பான்....., அவளை தொல்லை செய்வானோ, அவளைக் கஷ்டப் படுத்துவானோன்னு ரொம்ப பயந்தேன். ஆனா, என்னோட பயத்தை, ரெண்டு பேருமே இல்லாமல் செஞ்சுட்டாங்க.

அவங்களே இவ்வளவு தெளிவா இருக்கும்போது, நான் ஏன் நடுவில் குழப்பணும்?. அவங்க வாழ்க்கை எப்படி இருக்கணும்னு அவங்க முடிவு செய்யட்டும். அதைவிட, அச்சுட்ட முதல்நாள் கல்யாணத்தைப் பத்தி பேசி, இப்போ அவசியமா? கல்யாணத்துக்குப் பிறகு நீங்க எப்படி இருப்பீங்க, கட்டுப்பாடோட இருக்க முடியாது, அப்படின்னு நான் சொல்லுறேன்.

அதுக்கு அவ என்ன சொன்னா தெரியுமா? எங்க பெட்ரூம எட்டிப் பாக்கணும்னு நினைக்காதீங்கன்னு சொன்னா. அப்போ நினைச்சேன்....., இவளுக்குக் கல்யாணம் முடிஞ்சாதான், அதில் இருக்க கஷ்டம் தெரியும்னு.

அச்சு கிட்டே, நீ கோல்ட் மெடல் எடுக்குறேன்னு எனக்கு வாக்குக் கொடுன்னு சொன்னேன். கொஞ்சம் கூட யோசிக்காமல் வாக்குக் கொடுத்தாள். அந்த வாக்கு கூட, அப்படியாவது, அவள் கல்யாணத்தைத் தள்ளிப் போடுவாள், என்ற ஆசையில் தான் கேட்டேன். ஆனா, அன்னைக்கு, மேடையில் ஒரு பாட்டு பாடினா பாருங்க....., என்னால் கொஞ்சம் கூட ஜீரணிக்கவே முடியலை.

நாம அவளுக்கு இருக்கும்போது அவ எப்படி, இப்படி வருத்தப் படலாம் என்ற எண்ணத்தில்தான், அந்த நேரம், உங்களை மோதிரம் வாங்கிவரச் செய்து, உடனே நிச்சயமும் செய்தேன். ஆனாலும், மனதுக்குள் கொஞ்சம் பயம் இருக்கத்தான் செய்தது.

ஆனால், என்னோட எந்த பயமும் அவசியமே இல்லன்னு அவங்க நிரூபிக்கிறாங்க. அவங்க வாழ்க்கையை, எப்போ துவங்கணும்னு, அவங்களே சரியான முடிவெடுப்பாங்கன்ற நம்பிக்கை எனக்கு இருக்குங்க", இவர்களின் பேச்சை, தண்ணீர் குடிக்கவந்த அர்ச்சனாவும், பேட்ரிக்க்கும் கேட்டார்கள்.

அன்றைய இரவு, அனைவருக்குமே ஒரு இனிய இரவாகவே அமைந்தது. கணவனின் கையணைப்பில் பிள்ளையென உறங்கினாள் அச்சு. காலையில், தனக்கு ஏற்படப்போகும் அதிர்ச்சியை உணர்ந்திருந்தால், இந்த உறக்கம் அவளுக்குக் கிடைத்திருக்காதோ?

பகுதி - 34

தோள்கொடு தோழி, என் துன்பங்களை

உன்தோளில் இறக்கி வைக்கிறேன்.....

என் துன்பங்களைச் சுமக்கும் நீயும்

எனது சுமைதாங்கியே.....

காலையில் எழுந்து, சண்டே மாஸ் சென்றார்கள்.

அர்ச்சனா வைஷுவைத் தேட, அவள் வரவில்லை. ஜூடியைப் பார்த்து, அவள் எங்கே என்று கேட்க, காலையில் தன்னுடன் எழுந்தாள் என்றும், ஆனால் திடீரென்று, தான் வரவில்லை என்று சொல்லி விட்டதாகவும் சொன்னாள்.

அர்ச்சனாவுக்கு, எதுவோ சரியில்லை என்று தோன்றியது. "ஏண்டி.... கூடவே இருக்க..... என்னன்னு கேக்காமல், என்னடி பண்ணிட்டு இருந்த?", அவளிடம் சாடினாள்.

"அச்சு, அப்படியே நான் கேட்ட உடனே அவங்க சொல்லிட்டுதான் மறு வேலை பாப்பாங்க. உங்களுக்கே, அவங்களைப் பத்தி தெரியும், தெரிஞ்சு வச்சுட்டே, என்கிட்டே கேட்டால் நான் என்ன செய்யட்டும்", சலித்துக் கொண்டாள்.

"ஹம்....., அதுவும் சரிதான். எதுக்கும் நீ வெயிட் பண்ணு, நான் உன்னோடவே வந்துடுறேன்", அவளை நிற்கச் சொல்லிவிட்டு, பேட்ரிக்கிடம், தான் இப்படியே கிளம்புவதாகச் சொன்னாள்.

"வீட்டுக்கு வந்து சாப்ட்டுட்டு போ சனா.....", கெஞ்சலாகச் சொன்னான்.

"பேட்ரிக், வைஷு சர்ச்சுக்கு வரக் காணோம், கண்டிப்பா ஏதோ பிரச்சனைன்னு நினைக்கிறேன். எனக்கு ரொம்பக் கவலையா இருக்கு. அவளைப் பாக்காமல், என்னால்

இப்போ சாப்பிட முடியாது. ப்ளீஸ், ப்ளீஸ்....., நான் கிளம்பட்டுமா?", போயே ஆகவேண்டும் என்ற தவிப்பு அதில் இருந்தது.

"சரி, நான் சொன்னாலும் கேக்கமாட்ட, அம்மா அப்பாவிடம் ஒரு வார்த்தை சொல்லிட்டுப் போய்டு", இருவரும் சென்று, அவர்களிடம் சொல்லிவிட்டுக் கிளம்பினார்கள்.

"சரி வா, நானே உன்னை விட்டுடுறேன்", அவளை அழைத்தான்.

"ஜூடியை நான் வெயிட் பண்ணச் சொன்னேன்....., நான் அவளோடவே போறேனே", கொஞ்சினாள்.

"நானே உன்னை விடலாம்னு நினைச்சேன்.....", பொய்யாகப் பெருமூச்சு விட்டான்.

"டேய்.... ஒரு நாள் புல்லா உன்னோட இருந்தேன், அப்போ எல்லாம் வேடிக்கை பாத்துட்டு, இப்போ இங்க இருந்து, அங்கே போற ரெண்டு நிமிஷ உரசலுக்கு, இப்படி உருகுற. தத்தி, தத்தி", கடுப்பாகச் சொன்னாள்.

"நான் தத்தியா.....? எப்படியும் வீட்டுக்கு வராமலா போய்டுவ, அப்போ வச்சுக்கறேண்டி உன்ன, இப்போ கிளம்பு", அவள் சொன்னதை, சாதாரணமாக எடுத்துக்கொண்டு சொன்னான். அவனை, கூர்மையாக ஒரு பார்வை பார்த்துவிட்டுச் சென்றாள்.

ஹாஸ்டலுக்குள் சென்றதும், வேறு எதுவும் நினைவில்லை அவளுக்கு. வேகமாக அறைக்குச் செல்ல, ஜூடித், தான் சாப்பிடச் செல்வதாகச் சொல்லிவிட்டுச் சென்றாள். அவளுக்குத் தெரியும், எப்படியும், தான் இருக்கும்பொழுது, இருவரும் எதையும் பேசிக்கொள்ளப் போவதில்லை என்று.

"தேங்க்ஸ் ஜூடி.....", அவளிடம் சொல்லிவிட்டு, "வைஷு, உடம்பு சரியில்லையா? ஏன் மாஸ்க்கு வரல", அவள் நெற்றியில், கைவைத்துப் பார்த்தவாறு கேட்டாள்.

‘அதெல்லாம் எதுவுமில்லை’, என்பதுபோல் அவள் கையை விலக்கிவிட்டாள். வாயைத் திறந்து பேச முயன்றாள், ஆனால் அதற்கு முன்பே, அவள் கண்கள் கலங்கி, உதடு துடித்தது. அவள் ஏற்கனவே கொஞ்சம் பயந்த சுபாவம் உடையவள்தான். ஆனால் அவ்வளவு சீக்கிரம் அழுபவள் இல்லை.

தோழியை அணைத்துக் கொண்டாள். “வைஷு, இப்போ நீ அழுற அளவுக்கு என்ன நடந்துது. எதுவாக இருந்தாலும் சொல்லு, நாம சரி செய்யலாம்”, அவள் பேச்சைக் கவனிக்காமலே, அழுகையைத் தொடர்ந்தாள்.

அர்ச்சனா எவ்வளவோ கேட்டும், ஒரு வார்த்தைகூட அவள் வாயிலிருந்து வரவில்லை. “வைஷு……., இப்போ நீ அழுகையை நிறுத்துறியா? இல்லை, நான் எழுந்து போகவா?”, அச்சுவின் மிரட்டல்தான் அவளை அடக்கியது.

“அச்சு, நான் வீட்டுக்குக் கிளம்புறேன். இன்னும் நான் இங்கே இருந்தால்……”, அவளால் முழுதாகச் சொல்ல முடியவில்லை.

“சரி அப்போ கிளம்பு…….”, அவளை விலக்கிவிட்டு எழுந்தாள். அர்ச்சனாவின் பதிலில் திகைத்தாள் வைஷு. ‘நீயும் என்னைப் புரிஞ்சுக்க மாட்டியா?’, கண்களில் கேள்வியுடன் அவளைப் பார்த்தாள்.

“வைஷு……., விஷயம் என்னன்னு சொல்லாமல், ஒரே அழுகை. சரி அதுதான் போகட்டும்னா……., இப்போ வீட்டுக்குக் கிளம்புறேன்னு சொல்லுற. இதில் நான் என்ன செய்யட்டும். எதுவாக இருந்தாலும், சொன்னால்தான் வைஷு, மேற்கொண்டு என்ன செய்யலாம்னு யோசிக்க முடியும்.

உன் மனசுக்குள் புகுந்து பார்க்கும் சக்தி, எனக்கு இல்லை. உனக்கு என்மேல் நம்பிக்கை இருந்தால், என்னன்னு சொல்லு இல்லன்னா வேண்டாம்”, அமைதியாகச் சொல்லி அவளைத் துருவினாள்.

“நா..... நா....., என்.....னால.....”, கைகளில் அப்படி ஒரு நடுக்கம்.

“சரி எழுதி காட்டு.....”, அவள் நிலையை உணர்ந்து சொல்ல, அவள் கைகளைப் பிடித்து அமர வைத்தாள். அர்ச்சனாவின் கையை எடுத்து தன் வயிற்றில் வைத்துவிட்டு முகத்தை திருப்பிக் கொண்டாள். ஒரு நிமிடம் புரியாமல் திகைத்தவள், அவள் சொல்ல வந்த விஷயம், பொட்டில் அறைந்ததுபோல் விளங்க, கைகளை வேகமாக விலக்கிக் கொண்டாள்.

வைஷுவின் முகத்தைப் பிடித்துத் திருப்பி அவள் கண்களைப் பார்க்க, ‘ஆம்’ என்பதுபோல் தலையை ஆட்டினாள். எதற்குமே அவ்வளவு சீக்கிரம் கலங்காத அர்ச்சனாவையே இந்த விஷயம் கலங்கடித்தது. போன மாதம்தான் ஒரு மாணவியை, இதே விஷயத்துக்காக, அவர்கள் கல்லூரி விலக்கி விட்டிருந்தார்கள்.

அவர்கள் கல்லூரியின் விதிமுறைகளில் ஒன்று, திருமணமானவர்கள் படிப்பு முடியும்வரை தாய்மை அடையக் கூடாது என்பதே. அர்ச்சனாவின் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது.

“வைஷு....., நிஜம்மாதான் சொல்லுறியா? உனக்கு எப்படித் தெரியும்”, அப்படி இல்லாமல் போய்விடாதா? இது அவளது கற்பனையாக இருந்துவிடாதா? என்ற ஆவல்தான் காரணம்.

“நா.....ள் தள்ளி போயிடுச்சு, அது மட்டும் இல்லை....., இ..... இன்னைக்குக் காலையில் பி.....பிரஷ் பண்ணும்போது, வாமிட்....., த....த....தலை வேற சுத்துச்சு.....”, அவள் சந்தேகங்களைப் பட்டியலிட்டாள்.

“இப்போ, எனக்குத் தலை சுத்துது....., ஏண்டி.... ஏண்டி இப்படி....., அதான் சேரும்போதே, படிச்சு படிச்சு சொல்லுறாங்களே. போனவாரம்தானே, ஒருத்தியை வீட்டுக்கு அனுப்புனாங்க....., இப்போ உன்னையும்.....”,

தன்னை மீறி அவளிடம் கோபப்பட்டவள், வைஷுவின் அதிர்ந்த முகத்தைப் பார்த்து, தன்னைக் கட்டுக்குள் கொண்டுவந்தாள்.

தலையில் கை வைத்து அமர்ந்துகொண்டாள். சிறிது நேரம் கழித்துக் கேட்டாள், “சரி இப்போ என்ன முடிவு செஞ்சு இருக்க?”, அவள் கோபத்தில் அதிர்ந்து இருந்தவள், என்ன சொல்லவென்று தெரியாமல் விழித்தாள்.

முதல்ல, அண்ணாக்கு போன் பண்ணு, வா. அவளை இழுத்துக்கொண்டு போன் அறைக்குச் சென்றாள். அங்கே கூட்டம் அலைமோதியது. ‘எல்லாரும் அப்படி என்னதான் பேசுவாங்களோ?’, அவளுக்கு இருக்கும் மனநிலையில் எரிச்சல் வந்தது.

“பிரெண்ட்ஸ், கொஞ்சம் பெர்சனலா பேசணும், ஒரு ரெண்டு நிமிஷம் போன் தர முடியுமா?”, அங்கிருந்தவர்களிடம் கேட்டாள்.

“நீயே உலக அதிசயமா வருவ, உனக்கு இல்லாமலா, வா வா.....”, ஒருத்தி சொல்ல, வைஷுவை இழுத்துக் கொண்டு போன் முன்னால் சென்றாள்.

வைஷு, நடுங்கும் விரல்களால் எண்களை அழுத்திவிட்டுக் காத்திருக்க, அர்ச்சனாவுக்கு BP எகிறியது. வைஷு பேசத் துவங்கவே, அங்கிருந்த ஸோபாவில் அமர்ந்துகொண்டாள். ‘என்ன செய்ய? இனிமேல் என்ன ஆகும்? மறைக்க முடியுமா? என்ன முடிவு எடுப்பாங்க? காலேஜ் விட்டுப் போய்டுவாளா?’, யோசனை, மூளையை மழுங்கடித்தது..

வைஷு பேசி முடித்து வரவும், அறைக்குச் சென்றார்கள். “சொல்லு, என்ன முடிவு எடுத்துருக்கீங்க? அண்ணா என்ன சொன்னாங்க?”, கொஞ்சம் கூட இளக்கமில்லை அவள் குரலில்.

“இன்னைக்குக் கிளம்பி வாறாங்களாம்.....”, “சரி வந்து.....”, “ரெண்டுநாள் என்னை லீவ் போடச்

சொன்னாங்க.....”, “போட்டு.....”, “ஹாச்பிட்டல் போய்.....”, “போய்.....”, “யாருக்கும் தெரியாமல்....”, “தெரியாமல்.....”, அர்ச்சனாவின் குரல் உள்ளடக்கிய கோபத்துடன் வெளிவந்துகொண்டிருந்தது.

“சொல்லுடி ஏன் நிறுத்திட்ட.....? போய் வயித்தைக் கழுவிட்டு வந்துடலாம்னு முடிவோட இருக்கீங்க, அப்படித்தானே. நீங்க எல்லாம் மனுஷ ஜென்மங்க தானா? இந்தக் குழந்தைக்காக, படிப்பை விட்டுட்டுப் போறேன்னு சொல்லியிருந்தால் கூட நான் சந்தோசப் பட்டிருப்பேன்.

ஆனா....., உன்னால எப்படி இதுக்கு சரின்னு சொல்ல முடிஞ்சுது. வயித்துல இருக்குறது ஒரு உயிர், அதைவிட அது உன்னோட குழந்தை, அதுவும் முதல் குழந்தை.....”, என்னமோ, தன் குழந்தையைப் பிரியப்போகும் வலி, அவள் குரலில்.

“என் வயித்துல வளர்றது என்னோட உயிர் அச்சு....., எனக்குமட்டும்.....”, உயிர் வலியில் தோய்ந்து வந்து விழுந்தன அவள் வார்த்தைகள். மேலே பேச முடியாமல் கட்டிலில் விழுந்தாள், அழுது தீர்த்தாள் வைஷு.

என்னமோ மூளை என்ற வஸ்த்துவே இல்லாததுபோல், யோசனைகள் அனைத்தும் முடங்க, அப்படியே அமர்ந்திருந்தாள் அர்ச்சனா. ‘அச்சு, அவ உன்னோட தோழி, அதுக்காக நீ வருத்தப் படுற, அப்படிங்கறதை விட்டு, வெளியே வந்து யோசி’, அவள் மனம் கட்டளையிட, அதற்கு அடிபணிந்தாள்.

வைஷுவின் விஷயம், கல்லூரியில் யாராவது ஒருவருக்குத் தெரிந்தாலும், அது எதிர் விளைவைத்தான் ஏற்படுத்தும் என்பது அவளுக்குத் தெளிவாகத் தெரிந்தது. “வைஷு, நீ ஏன் அண்ணாகிட்டே பேசி, குழந்தையைத் தொடர, கேக்க கூடாது”, அவள் முதுகை, ஆதரவாகத் தடவிக் கேட்டாள்.

“அப்போ, நான் காலேஜை விட்டுப் போகணும். அதுக்கு, அவர் சம்மதித்தாலும், அவங்க வீட்டில் உள்ளவங்க சம்மதிக்க மாட்டாங்க. ஏற்கனவே என் அத்தை, இதுக்குதான் பயந்துட்டு, எங்களை சேர்ந்தே இருக்க விட்டதில்லை. இப்போ எந்த மூஞ்சியை வச்சுட்டு அவங்ககிட்டே பேசுறது?”,குரலில் ஆதங்கம்.

“இப்போ இவ்வளவு பேசுற, அன்னைக்கு இந்த அறிவு எங்கே போச்சு.....”, இன்னும் என்ன சொல்லியிருப்பாளோ, தான் பேசுவது அதிகமோ என்று தோன்ற அமைதியானாள்.

“சரி, அண்ணா எப்போ வாறாங்க?”.

“இன்னைக்குச் சாயங்காலம்.....”.

அவங்க வந்ததும், நாம ஒரு முடிவுக்கு வரலாம். ஆனால், இந்தக் குழந்தையை இல்லாமல் ஆக்க, நான் சம்மதிக்கவே மாட்டேன். இப்போ வா, போய் சாப்பிடலாம்”, இருவரும் சென்று, அங்கே வழங்கப்பட்ட ரொட்டியை வாங்கிச் சாப்பிட்டார்கள்.

அறைக்கு வந்தவர்கள், ஜூடியிடம் கூட எதையும் சொல்லவில்லை. இவர்களது முகத்தைப் பார்த்தே, பிரச்சனை பெரிதென்று எண்ணிக் கொண்டாள் அவள். அந்த நேரம், அங்கே வந்தாள் பெமி. அவள் கையில் இருந்த பெட்டியைத் தூக்கி வீச, அதில் இருந்த, அலைபேசியும், கை கடிகாரமும், மூலைக்கு ஒன்றாகச் சிதறி விழுந்தது.

யாரும் எதுவும் சொல்லாமல், அமைதியாக அவளைப் பார்க்க, “அச்சு.... என்னடி, நீ பெரிய இவளா? பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டுற வேலையைப் பாக்குற. இங்கே என்கிட்டே, நல்லப்பிள்ளை மாதிரி இருந்துட்டு, காலேஜில் கம்ப்ளைன்ட் பண்ணி வச்சு இருக்க.

நான்தான் உன்னோட மாடலை ரிப்பேர் செஞ்சேனா? அதை நீ பாத்தியா? அரலூசு மாதிரி இருந்துட்டு, உனக்கு அவ்வளவு திமிராடி. நாளைக்கு மட்டும் என்னை வீட்டுக்குப் போகச் சொல்லட்டும், உன்னை என்ன செய்வேன்னு தெரியாது", அவள் ஆங்காரமாகப் பேசிக்கொண்டே சென்றாள்.

"வாழ்க அந்த ஜீவன்.....", ஜூடி சொல்ல, "ஏய்..... இவ கூட இருக்குற திமிரா உங்களுக்கெல்லாம். சும்மா விட மாட்டேண்டி", ஜூடியிடம் கறுவினாள்.

"ஹல்லோ, அச்சுவா இருக்கபோய், நீ இன்னும் இந்த காலேஜில இருக்க. இதே என்கிட்டே இந்த வேலையைப் பாத்துருந்த....., நடந்துருக்கக் கதையே வேற. இனிமேலாவது, ஒழுங்கா இருக்க வேலையைப் பாரு. இன்னொரு விஷயம்....., இந்த அச்சு எந்த கம்ப்ளைன்ட்டும் செய்யலை. நாளைக்கு என்ன சொல்லி சம்மாளிக்கிறதுன்னு முதல்ல யோசி, அதை விட்டுட்டு, இங்கே வந்து கத்திட்டு இருக்க", ஜூடிதான் பதில் கொடுத்தாள்.

"இந்தப் பொய்யை, வேற யார்கிட்டயாவது வச்சுக்கோங்க, நான் ஒண்ணும் காதுல பூ வச்சுட்டு இருக்கலை", பெமி.

"உன்கிட்டே எல்லாம் மனுஷி பேசுவாளா? இங்கே இருந்து கத்தாமல் வெளியே போ. உன்னால் என்ன கிழிக்க முடியும்னு நாளைக்குக் காட்டு, போ போ.....", ஜூடி அவளை விரட்டினாள்.

அனைவரையும் முறைத்துப் பார்த்துவிட்டு வெளியேறினாள் பெமி. "இந்த லூசு என்னமோ சொல்லுதே, என்ன அச்சு.....?".

"அதேதான் நானும் யோசிச்சுட்டு இருக்கேன். நான் யார்ட்டையும் எதுவும் சொல்லலையே. இருக்குற தலைவலியில் இன்னொண்னு...., ச்சே.....", அலுத்துக் கொண்டாள்.

மூன்றுமணிக்கே வந்துவிட்டான் மைக்கேல். வைஷு, அவனைக் கட்டிக்கொண்டு அழுதாள். சரியாகப் பத்துநிமிடம் கழித்து, அர்ச்சனா அங்கே வந்தாள். “அண்ணா, முதல்ல வைஷுவை அழைச்சுட்டு, இந்த அட்ரஸில் இருக்கும் லேடி டாக்டரைப் போய் பார்த்து செக் பண்ணிட்டு, இவளைக் கொண்டுவந்து ஹாஸ்டல்ல விட்டுட்டு, நீங்க போங்க, நான் இவளைப் பாத்துக்கறேன்”, அவள் குரலில் அப்படி ஒரு உறுதி.

பேச வார்த்தையில்லாமல், இருவரும் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். “அதெப்படிம்மா.....?”, முதலில் தன்னிலைக்கு வந்தான் மைகேல்.

“சரி இந்த ஐடியா வேண்டாம், நீங்க என்ன நினைச்சு வந்தீங்க சொல்லுங்க”, அவனையே கூர்மையாகப் பார்த்துக் கேட்டாள். எப்படிச் சொல்லுவான், என் குழந்தையை அழிக்க, அவளைக் கூட்டிப் போக வந்தேன் என்று, அமைதியாக இருந்தான்.

“அண்ணா, வேற வழியே இல்லை. இன்னும் மூணே மாசம்தான். அதிலும், லாஸ்ட் ஒன் மந்த் புல்லா எக்ஸாம் தான். அப்போ, நடுவில் ரெண்டே மாசம், இன்னும் ஸ்போர்ட்ஸ் டே மட்டும்தான், கொஞ்சம் கஷ்டம். எப்படியாவது நான் வைஷுவைப் பாத்துக்கறேன்.

நீங்க, வீட்டில் இப்போவே சொல்லுறதா இருந்தாலும் சரி, இல்லை படிப்பு முடிஞ்சதும் சொல்லுறதா இருந்தாலும் சரி. அது உங்க சாய்ஸ், ஆனா வைஷுவை, நீங்க நினைக்கிறதுக்கு உடன்பட, நான் விட மாட்டேன். நீங்க என்மேல் கோபப்பட்டாலும் பரவாயில்லை.

நீங்க மட்டும், மாசம் மாசம் வந்து அவளை செக்அப்க்கு கூட்டிப் போங்க, இவளோட அம்மாகிட்டே கேட்டு, ஏதாவது சமைச்சு எடுத்துட்டு வந்து கொடுங்க. இதில் என்ன பிரச்சனை வந்தாலும்...., நான் பாத்துக்கறேன். ஆனா,

வைஷுவைக் கண்டிப்பா நான் பாத்துக்கறேன்”, கிட்டத்தட்டக் கெஞ்சினாள்.

பிறகு, வேறு வழியே இல்லாமல், அவள் சொல்படி கேட்க முடிவெடுத்தனர். அவர்கள் செல்லவும், ஸ்டீபனும், பெமியின் தாயும் அங்கே வந்தார்கள். ‘ஒரே நாள்ல எத்தனை சோதனைடா சாமி’, மனதுக்குள் புலம்பியவாறே, “வாங்கம்மா, நல்லா இருக்கீங்களா?”, கேட்டுவிட்டு, ஸ்டீபனைப் பார்த்து, வாங்க என்று, தலையை அசைத்தாள்.

“இங்கே என்னம்மா பிரச்சனை? பெமி என்ன செய்தா? இப்போ, நீ சொல்லவில்லை என்றாலும், நாளைக்குக் காலையில், எங்களுக்கு எல்லாம் தெரிஞ்சுடும். அதுக்கு, நீயே சொல்லிட்டா, எனக்குக் கொஞ்சம் நிம்மதியா இருக்கும். என்னன்னு சொல்லு?”, அவர் நேரடியாக விஷயத்துக்கு வந்தார்.

இதற்குமேல், தான் எதையும் மறைத்துப் பயனில்லை என்று தோன்றவே, பெமி துவக்கம் முதல் செய்தவை அனைத்தையும் சொன்னாள். சற்று முன்பு, தான் கொடுத்த பரிசை, அறையில் விசிறியடித்ததுவரை அனைத்தையும் சொல்லி முடித்தாள்.

“என்னம்மா....., வீட்டில் இருந்து காலேஜ் போனவரை, அவளால் மற்ற பிள்ளைகளுக்கு எந்தப் பிரச்சனையும் வந்ததில்லை. இப்போ, உன் கூடவே இருந்து இவ்வளவு தொல்லை செய்யிறாளா? இதை நீயே என்கிட்டே சொல்லியிருக்கலாமே, நான் அவளைக் கண்டித்திருப்பேனே.

இதை கம்ப்ளைன்ட் செஞ்சு.....”, என்னதான் இருந்தாலும் பெற்ற மகளின் படிப்பும், நற்பெயரும், எதிர்காலமும் தானே, பெற்ற தாய்க்குப் பெரிதாக இருக்கும்.

“அம்மா.... நீங்க என்னை சரியா புரிஞ்சுக்கலை, நான், எந்த கம்ப்ளைன்ட்டும் செய்யவே இல்லை. எனக்கே, காலையில் பெமி வந்து சண்டை போடும் போதுதான் தெரியும்.

நாளைக்குக் கூட, நான் பெமி பற்றி எந்த விஷயமும் சொல்லப் போவதில்லை என்னை நீங்க நம்பலாம்", சொல்லிவிட்டுச் சென்றுவிட்டாள்.

"ஆன்ட்டி... நீங்க அர்ச்சனாகிட்டே இப்படிப் பேசியிருக்க கூடாது", ஸ்டீபன் சொன்னான்.

பெமி வந்தவுடன், அவளை அடித்தார் கமலா. அதிர்ந்து போனாள் பெமி. இதுவரை, தாய் அவளை அடித்ததே இல்லை. ஆனால் இன்று....., கன்னத்தைப் பிடித்தவாறு, வெறித்துப் பார்த்துக்கொண்டு நின்றாள்.

ஸ்டீபனால், பெமி அடி வாங்குவதைப் பார்க்க முடியவில்லை. அதற்காக, அவள் செய்தது சரியென்று வாதாட, அவன் தயாராகவும் இல்லை. அவனுக்கு, பெமியின் செய்கையில் உடன்பாடு இல்லை, ஆனாலும், காதல் கொண்ட மனது, அவளை மறக்கத் தயாராக இல்லை.

"பெமி, இதுவரை நீ என்ன செய்தாலும் நான் ரசிச்சு இருக்கேன், உன் கோபத்தைக் கூட. நீ என்னை வெறுத்து ஒதுக்கிய போது கூட, உன் பின்னாடியே வந்ததுக்குக் காரணம், உன்மேல் நான் வைத்த காதல் தான்.

ஆனால், இப்போ நீ செய்ததை, என்னால் ஏத்துக்கவே முடியவில்லை. எனக்கு லீவ் முடியுது, நான் அமெரிக்கா கிளம்புறேன். போக முன்னாடி, ஒண்ணே ஒண்ணு சொல்லுறேன், நான் உன்னை இன்னும் விரும்புறேன். எப்போவாவது நீ மனம் மாறினால், நம்ம கல்யாணம் நடக்கும், இப்போ வாறேன்", காதல் கொண்ட மனது, தன்னை மீறி பேச வைத்தது அவனை.

அடுத்தநாள் காலை, மிகுந்த மன அழுத்ததுடனே விடிந்தது அர்ச்சனாவுக்கு. ஒன்பது மணிக்கே, அவளை முதல்வரின் அறைக்கு வரச் சொல்லி ஆள் அனுப்பிவிட்டார்கள். அவள் செல்லும்பொழுது, அங்கே, பெமி, அவள் தாய், ஸ்டெல்லா, பேட்ரிக் அனைவரும் நின்று கொண்டிருந்தார்கள்.

முதல்வர் அறைக்குள்ளிருந்து பெல் சத்தம் வரவே, ஸ்டெல்லா அறைக்கு விரைந்தார். பேசிவிட்டு வெளியே வந்து இவர்களையும் உள்ளே அழைத்துச் சென்றார். அங்கே, இன்னும் சில ஆசிரியர்கள் இருந்தார்கள்.

“குட் மார்னிங் சிஸ்டர், குட் மார்னிங் மேம்ஸ்.....”, அர்ச்சனா சொல்ல, அனைவரும் திரும்ப வாழ்த்தினார்கள்.

“உங்களை எதுக்கு இங்கே கூப்பிட்டிருக்காங்க தெரியுமா?”, பெமியின் தாயிடம் கேட்டார் ஒரு ஆசிரியர்.

“பெமியைப் பத்தி உங்ககிட்டே பேசணும்....., அதுக்கு முன்னாடி, அச்சு....., பெமி மேல, உனக்கு ஏதாவது கம்ப்ளைண்ட் இருக்கா?”, அர்ச்சனாவிடம் கேட்டார்.

அவள் பார்வை, பேட்ரிக்கையும், ஸ்டெல்லாவையும் ஒருமுறை பார்த்தது. “இல்ல.... எனக்கு எந்த கம்ப்ளைண்ட்டும் இல்லை”, உறுதியாகச் சொன்னாள். அப்பொழுதும், அவர்கள் முகங்களில் எந்த மாறுதலும் இல்லை.

“சரி, அது உன்னோட முடிவு., இப்போ, இங்கே ஒரு வீடியோ ஓடும், அதைப் பாத்துட்டு சொல்லு”, அனைவரின் பார்வையும், திரைக்குச் செல்ல, முதலில் ஓடியது, ஹாஸ்டல் டே அன்று, அர்ச்சனாவின் காசெட்டை, பெமி மாற்றிய காட்சியும், பிறகு அதே காசெட்டை அர்ச்சனா மாற்றும் காட்சியும்.

அடுத்தது, பெமி, அவர்களது கிளாஸ் ரூமில், அர்ச்சனாவின் மாடல்களில், ரெசிஸ்டன்ஸ், கெப்பாசிட்டர்களை, மாற்றி வைக்கும் காட்சியும், வயர்களை, பல்லால் கடித்துப் பிய்க்கும் காட்சியும் ஓடியது. ஆசிரியர்கள் சலனமில்லாமல் பார்க்க, மற்றவர்களுக்கு, இதயம் தொண்டைக் குழியில் வந்து துடித்தது.

“இப்போ சொல்லு அச்சு....., உனக்கு ஏதாவது கம்ப்ளைண்ட் இருக்கா?”, மறுபடியும் கேட்க, இல்லை

என்பதுபோல் தலையை ஆட்டினாள்.

“உனக்கு கம்ப்ளைண்ட் இல்லாமல் இருக்கலாம்....., ஆனால், இந்தக் காலேஜுக்குன்னு ஒரு கட்டுப்பாடு இருக்கு. அது இல்லாமல் போனால், அதைக் கண்டிக்க வேண்டியது, எங்க கடமை. முதல் முறையே, நாங்க போகட்டும் என்று விட்டுவிட்டோம், அதுவும், இந்த அர்ச்சனா எந்த கம்ப்ளைண்ட்டும் செய்யாததால்தான்.

இப்போ ரெண்டாவது முறையும் இப்படி செய்தது....., நீங்க, உங்க பொண்ணை கூட்டிட்டுப் போய்டுங்க”, அந்த ஆசிரியர் சொன்னார்.

பெமியின் தாய்க்கு, என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அதுவும், ஆதாரத்தோடு அவர்கள் நிரூபிக்கும்போது, எப்படி மறுக்க முடியும்.

முதல்வர் எதுவுமே பேசவில்லை. “மேம், நான் பேசவா?”, அர்ச்சனா தயங்கியவாறு கேட்டாள்.

“என்ன சொல்லப் போற?”, ஆசிரியர்களுக்கே கோபம்.

“இப்போ, பெமியை வெளிய அனுப்பினால், என் ப்ரண்ட்ஸ்க்கு என்னக் காரணம் சொல்லுவீங்க? அப்படிக் காரணத்தைச் சொன்னால், நீங்க எல்லா இடத்திலும் கேமரா வச்சு இருக்குறதையும் சொல்லணும். அப்படிச் சொன்னீங்கன்னா.....,

அவங்களோட சுதந்திரம் தொலைந்து போய்டும். அதை நான் விரும்பலை, இப்போ பெமியை நீங்க அனுப்பியே ஆகணும்னா....., ஹாஸ்டலை விட்டு அனுப்பிடுங்க. இன்னும் மூணே மாசம்தான் படிப்பு, இப்போ அவளை வெளியே அனுப்புவது....., சாரி நான் அதிகமா பேசியிருந்தா”, முடிவை அவள் எடுக்க முடியாதே, எனவே அமைதியானாள்.

அனைவரும் முதல்வரைப் பார்க்க, “பெமி, முதல்ல நீ செஞ்சது தப்புன்னு உனக்குத் தோணுதா?”, அவளிடம் கனிவாகக் கேட்டாலும், அதில் கண்டிப்பு இருந்தது.

அவள் ஆமென்று தலையை அசைக்க, “அப்போ அர்ச்சனாகிட்டே மன்னிப்புக் கேளு”, என்றார்.

கொஞ்சம் தயங்கிவிட்டு, பிறகு அர்ச்சனாவிடம் மன்னிப்புக் கேட்டாள். “இட்ஸ் ஓகே....., எனக்குக் கோபமெல்லாம் ஒண்ணும் இல்லை பெமி. நான்தான் உன்கிட்டே சாரி கேக்கணும், உன்னை இப்படியெல்லாம் செய்யத் தூண்டியது நான் தானே. சாரி.....”, அவள் பேச்சில், அனைவருமே விழி விரித்துப் பார்த்தார்கள்.

பெமியின் தாய், பெமியிடம் எதுவோ சொல்லப் போகவே, அச்சு அவரைப் பார்த்து, ‘வேண்டாம்’ என்று தலை அசைக்கவே, அமைதியானார் அவர்.

“பெமி, முதல் செமெஸ்டர் எக்ஸாம்ல, நீதான் ரெண்டாவது மார்க், முதல் மார்க் அர்ச்சனா. அர்ச்சனாவோட சராசரி 90, ஆனால் அவ கிட்டே கூட அடுத்தவங்க மார்க் இல்லை. நீயுமே, எழுபத்தஞ்சு சதவீதம் தான். இவ்வளவு வித்தியாசத்தை, நாங்களே எதிர் பார்க்கவில்லை. அர்ச்சனாவை விட்டுட்டுப் பார்த்தால், நீதான் முதல் மதிப்பெண்.

ஆனால், உன்னோட குணம்தான், உன் திறமையை வெளியே காண்பிக்க விடாமல் செய்யுது. ஒழுங்கு நடவடிக்கை என்றால், உன்னைக் கல்லூரியில் இருந்து அனுப்புவதுதான், சரியாக இருக்கும். உன் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு, நீ கல்லூரியில் தொடரலாம், ஆனால் ஹாஸ்டலை விட்டு வெளியேறிடணும். கிளம்புங்க.....”, அவர்களைப் போகச் சொல்லிவிட்டார்.

‘ஹப்பா.... இத்தோட போச்சே, நல்லவேளை, அவளைக் காப்பாத்திட்டோம்’, ஆசுவாசமாக மூச்சுவிட்டாள் அர்ச்சனா.

பெமியின் தாய் அவளுக்கு நன்றி தெரிவிக்க, பெமி, முறைத்துவிட்டே சென்றாள்.

‘நாய் வாலை நிமிர்த்த முடியுமா? அப்படித்தான் இவளும். நாம, வேற வேலையைப் பாக்கப் போகலாம் வாடா”, மனசாட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு, வகுப்புக்குச் சென்றாள். மனதின் ஓரத்தில், வைஷுவின் நிலையை நினைத்து, கலக்கமாகவே இருந்தது.

அர்ச்சனா வைஷுவைக் காப்பாற்றிவிடுவாளா?

பகுதி - 35

கல்லூரி காலத்தில் நட்பின் சுவடு

வடுக்களாக மாறாமல்.....

வண்ணங்களாக மனதில் பதிந்தால்

அதுதான் உண்மையான நட்பு.....

ஒரு வழியாக, கல்லூரி விழாவைக் கொண்டாடி முடித்துவிட்டார்கள். அது முடிந்த கையோடு, உளவியல் பேப்பரின் ரெகார்ட் வேலைகளுக்காக, அவர்களது கல்லூரியில் இருந்த அனைவரையும், தெரசா காதுகேளாதோர் மற்றும் விழியிழந்தோர் பள்ளிக்கு அழைத்துச் சென்றார்கள்.

முதலில், காதுகேளாதோர் வகுப்பறைக்கு, அழைத்துச் சென்றார்கள். அங்கிருந்த மாணவர்களை, அவர்களது காதுகேட்கும் திறன் அடிப்படையில், எவ்வாறு பிரித்து, அவர்களுக்குப் பேச்சுத் திறனை, கொஞ்சமாவது வர வைக்க முயல்வதைச் சொன்னார்கள்.

அவர்களது கேட்கும் திறனை அளவிடும் முறையை, எப்படி ஆராய்வார்கள் என்றும் சொன்னார்கள். அங்கே, ஜூடியின் கேலி அதிகமாகவே இருந்தது. மதியம் பன்னிரண்டு மணி வரை காதுகேளாதோர் பள்ளியை, சுற்றி வந்தார்கள்.

பின்னர், விழியிழந்தோர் வகுப்பறைக்கு, அழைத்துச் சென்றார்கள். அவர்களது பிரைலி எழுத்து முறையைப் பற்றி விளக்கினார்கள். அவர்களது பாடத்திட்டம், சாதாரண மாணவர்கள் படிக்கும் பாடத் திட்டமாகவே இருந்தது.

ஆனால், செவித்திறன் குறைவுடைய மாணவர்களுக்கு, தமிழ், அல்லது ஆங்கிலம் மட்டுமே, பயிற்று மொழியாக இருந்தது. நேரம் இரண்டை நெருங்கும் வேளையில்,

அவர்களது மியூசிக் குரூப்பை பார்வையிட அழைத்துச் சென்றார்கள்.

அவர்களது துல்லியமான இசையும், அருமையான குரல் வளமும், கேட்ட அனைவரையுமே மயங்க வைத்தது. இவர்களில் ஒருவரை, பாட வருமாறு அழைக்க, அர்ச்சனா உடனடியாக மேடையேறி,

ஒன்றா ரெண்டா ஆசைகள்

எல்லாம் சொல்லவே ஓர் நாள் போதுமா

அன்பே இரவைக் கேட்கலாம்

விடியல் தாண்டியும் இரவே நீளுமா

என் கனவில் நான் கண்ட

நாள் இதுதான் கலாபக் காதலா

பார்வைகளால் பல கதைகள்

பேசிடலாம் கலாபக் காதலா

(ஒன்றா ரெண்டா..)

பாடலைத் தொடர, அவள் பார்வை வைஷுவிடம் நிலைத்தது. அவள் என்னவோ அவஸ்த்தையில் இருப்பதாக அவள் முகம் காட்ட, பாடலைப் பாதியில் முடித்துவிட்டு, மற்றவரின் கவனம் கலையாத வகையில், அவள் அருகில் சென்றாள்.

“வைஷு, என்ன செய்யுது.....?”, பதட்டமாகவே கேட்டாள். காலையிலேயே, அவள் சாப்பிட முடியவில்லை என்று சொல்லி, அப்படியே வைத்துவிட்டாள். இவ்வளவு நேரம் அலைந்ததில், அவளுக்கு மயக்கமாக வருவது, அவளுக்குப் புரிந்தது.

அனைவரையும் சாப்பிடப் போக சொல்லவே, அனைவரும் மரத்தடியில் சென்று அமர்ந்தார்கள். மதியத்துக்கு, தக்காளி சாதம், கல்லூரியில் கட்டித் தந்து விட்டிருந்தார்கள். அது, அவளுக்குப் பிடிக்கவில்லை என்று சொல்லிவிட்டாள். எப்படியும், அவளை சாப்பிட வைத்தே ஆகவேண்டும்.

சட்டென யோசனை வர, ஸ்டெல்லாவைத் தேடிச் சென்றாள். “அம்மா.... உங்க சாப்பாடு எனக்கு வேணும், இன்னைக்கு என்ன கொண்டு வந்தீங்க?”, என்று கேட்டவாறு, அவர் பேகில் இருந்து, டிப்பன் பாக்ஸை எடுத்துக் கொண்டு, அவளது பாக்ஸைக் கொடுத்துவிட்டு, சென்றுவிட்டாள்.

அவளை ஆச்சரியமாகப் பார்த்தார்....., தினமும், சாப்பாடு கொண்டு வருகிறேன் என்று சொன்னாலும், வேண்டாம் என்று சொல்பவள்...., இன்று மட்டும் என்ன?”, புருவ மத்தியில் முடிச்சுவிழ யோசித்தவர், பின்னர் அதை விடுத்து, அந்த தக்காளி சாதத்தை, சாப்பிடத் துவங்கினார்.

அந்த சாதத்தில் இருந்த ஊறுகாய், வைஷுவிற்குப் பிடிக்கவே, தன்னிடமிருந்த ஊறுகாயை அவளிடம் கொடுத்துவிட்டு, அவளை, ஸ்டெல்லாவின் சாப்பாட்டை, சாப்பிட வைத்தாள்.

தன்னால் முடிந்த அளவு, வைஷுவை, கொஞ்சம் கவனமாகப் பார்த்துக் கொண்டாள். பேட்ரிக்கிடம் சொல்லி, ஊறுகாய் பாட்டில்கள் வாங்கி, வைஷுவிற்குக் கொடுத்தாள். ஸ்டெல்லாவிடம் பிடிவாதம் பிடித்து, ஏதாவது புளிப்பாக, காரமாக, குழம்பு, வேண்டும், என்று கேட்டு வாங்கிக் கொடுத்தாள்.

பேட்ரிக்கிற்கு மட்டும், வைஷுவின் நிலை தெரியும். மருத்துவரின் முகவரி முதல், அனைத்தையும், அவளுக்குத் தந்து உதவுபவன் அவனே.

காலையில், திருப்பலிக்கு அவளை எழுப்புவதில்லை, அர்ச்சனாவே அலாரம் வைத்து எழுந்து கொண்டாள்.....,

அவளுக்குத் தேவையான வேலைகளை, முடிந்த அளவு, இவளே செய்து கொடுத்தாள்.

ஆனால், இவர்களை சோதிக்கவென்றே வந்தது, ஸ்போர்ட்ஸ் டே. ஏதாவது ஒரு விளையாட்டில், கண்டிப்பாகக் கலந்து கொள்ள வேண்டும் என்பது அங்கிருந்த விதி. அதேபோல், மார்ச் பாஸ்ட் அனைவரும் செய்யவேண்டும்.

விளையாட்டுப் போட்டிகளோ, ரன்னிங் ரேஸ், வாலிபால், பாஸ்கட் பால், கபடி, கயிறு இழுத்தல், வட்டெறிதல், ஈட்டி எறிதல், கோ கோ, இப்படி. அர்ச்சனாவின் அணியினர் அனைவருமே அனைத்திலும் சேரவேண்டுமென்று அவள் சொல்லிவிட்டாள்.

பரிசு பெறாவிட்டாலும், சும்மாவாவது நிற்கவேண்டும் என்று அவள் சொல்லிவிடவே, வைஷுவும், போட்டியில் கலந்தே ஆகவேண்டிய கட்டாயம். இறுதியில், அவளை வட்டெறியும் போட்டியிலும், வாலிபால் போட்டியிலும், சப்ஸ்ட்டியூட்டாகப் போட்டுவிட்டாள்.

இதில், அனைத்து போட்டிகளின் சராசரியில், அர்ச்சனாவின் டீம், வின்னர் ஆனார்கள், வீணாவின் டீம் ரன்னர். ஆனால் மார்ச் பாஸ்ட்டில், பயிற்சியில் அவளை நிற்க வைக்காமல், முடிந்தவரை சமாளிக்கப் பார்த்தாள்.

அதையும், ஒரு அளவுக்குமேல் செய்ய முடியாதே, மற்றவரின் கவனத்தைக் கவர்வது, அவ்வளவு நல்லதல்ல என்பது, அவளுக்கும் தெரியும். இறுதியில், காலில் அடிபட்டுவிட்டது என்று சொல்லி, காலில் கட்டுபோட்டு சம்மாளித்தார்கள்.

ஆனால் அவள் டீமில், இறுதிநாள், ட்ரில் நடனத்திலும், மார்ச் பாஸ்ட்டிலும் கலந்தே ஆகவேண்டுமென்று, ஸ்டெல்லா, முடிவாகச் சொல்லிவிட்டார். அப்படி அவள் சேரவில்லை என்றால், அவர்கள் டீம், கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது என்றும் சொல்லிவிடவே,

அந்த நாளை, மிகுந்த கலவரத்தோடு, எதிர் கொண்டாள் அர்ச்சனா.

வைஷுவிற்கும் பயம்தான். ஏனென்றால், இப்பொழுதுதான் இரண்டு மாதங்கள் நிறைவடைந்திருந்தது அவளுக்கு. இவர்களது நல்ல நேரமோ என்னவோ, அவளுக்கு வாந்தி எதுவும் இல்லை. ஆனால், சாப்பாட்டின்மேல் கொஞ்சம் வெறுப்பு மட்டுமே இருந்தது.

இதயம் படார் படார் என்று துடிக்கும் ஓசை கேட்டது அர்ச்சனாவிற்கு. அவள்தான் காலேஜ் லீடர் என்பதால், கல்லூரிக் கொடியை ஏந்தி முன்னால் செல்ல, அவளது டீமை வழிநடத்தும் மாணவி, பின்னால் சென்றாள்.

அது ஐந்து நிமிட வேலைதான், அது முடியும் முன்னர், அர்ச்சனாதான் மிகுந்த பதட்டப் பட்டாள். பிறகு, ட்ரில் நடனம். அனைவரும் அதற்குத் தயாராகிக் கொண்டிருந்தனர். “வைஷு, ஒண்ணும் பிரச்சனை இல்லையே?”, அவள் அருகில், உடை மாற்றும் சாக்கில், மெதுவாகப் பேச்சுக் கொடுத்தாள்.

வைஷு அழகாகச் சிரித்தாள். “ஏண்டி லூசே சிரிக்கிற?”, எரிந்து விழுந்தாள்.

“உன் பயத்தை நினைச்சுதான், இன்னும் டான்ஸ் இருக்கு, நான் ப்ராக்டிஸ் வேற செய்யவே இல்லை. எங்கே நான் சொதப்பிடுவனோன்னு எனக்கு பயம்மா இருக்கு”, அவள் கவலை அவளுக்கு.

அர்ச்சனாவுக்குமே கொஞ்சம் பயம்தான், அன்று அவர்களது பயம் சரியே என்பதுபோல், நடனத்தில் கொஞ்சம் குழப்பம் ஏற்பட்டு விட்டது. ஆனால், அது வைஷுவால் இல்லை. மார்ச் பாஸ்ட் சரியாகச் செய்திருந்தாலும், இதில் குழப்பியதால், அந்தப் பரிசு, வீணாவின் குழுவுக்கு, அதாவது ஜூடியின் டீமுக்கு, அந்தப் பரிசு சென்றது.

ஜூடியை, கையில் பிடிக்கவே முடியவில்லை. அவள் டீம்தான் பெமியும்., அவள் முகத்திலும் ஒரு கர்வப் புன்னகை. ஸ்டெல்லா, அர்ச்சனாவை அழைத்து, ஊக்கப்படுத்தவே செய்தார். அது, அர்ச்சனாவுக்கு இன்னும் தன்னம்பிக்கையை அளித்தது.

அர்ச்சனா வீணாவை வாழ்த்தினாள், அவளுமே இவளுக்கு நன்றி சொன்னாள். எப்பொழுதுமே, இருவருக்குள்ளும் இருக்கும் நட்பு, எந்த விதத்திலும் சிதையாமல், அவர்கள் பார்த்துக் கொண்டனர். ஒரு வழியாக, அனைத்தும் முடிந்து, கல்லூரி வழக்கம்போல் இயங்கத் துவங்கியது.

அடுத்த வாரத்தில், கேம்ப் வைத்தார்கள். அதில்தான், ஒவ்வொரு குழுவின் தனித் திறமைகள் வெளிப்பட்டன. ஐந்து நாள் கேம்ப். முதல்நாள்,மணமகள் அலங்காரம், அடுத்து, திருவிழா, அடுத்தநாள் ஹோட்டல், அடுத்து சர்க்கஸ், இறுதியில் கலை நிகழ்ச்சி, கேம்ப்பயருடன் நிகழ்ச்சி நிறைவுபெறும்.

இதில், அவர்களிடம் இருக்கும் பொருட்களை வைத்துதான் அலங்காரம் செய்ய வேண்டும். அர்ச்சனாவின் டீம், அனைத்து நாள் தலைப்புகளுக்கு ஏற்றவாறு மிகவும் சிறப்பாகச் செய்து, ஆசிரியர்களின் மதிப்பெண்களை, மொத்தமாக அள்ளினார்கள்.

அதைவிட, அவர்களின் குழுவில், எதை யார் செய்தார்கள் என்ற குறிப்பும் இடம்பெறவே, அது இன்னும் மதிப்பெண்களைக் குவித்தது. இதுதான், கல்லூரியின் கடைசி நிகழ்ச்சி., இனிமேல், டூர் மட்டுமே பாக்கி.

இன்று, கேம்ப்பயரில் சுழல் கோப்பை வழங்குவார்கள். அது யாருக்குக் கிடைக்குமென்று, அனைவருக்குமே தெரிந்த விஷயம்தான். ஆனாலும், தங்கள் டீமுக்கு இருக்காதா? என்ற ஏக்கம், அனைவருக்கும் இருக்கவே செய்தது. இறுதியில், அந்த நேரமும் வந்தது.

ஸ்டெல்லா அறிவித்தார், “இந்த வருடம் முழுவதும், விளையாட்டு, கலை நிகழ்ச்சி, அறிவிப்புப் பலகை, கேம்ப், அனைத்தையும் வெற்றிகரமாக முடித்த ப்ளூ டீம் தான், சுழல் கோப்பையைத் தட்டிச் செல்கிறது, என்று.

கல்லூரியில் இருந்த அனைவருமே, கரகோஷம் எழுப்பி, அவர்கள் டீமை உற்சாகப் படுத்தினார்கள். அர்ச்சனா, தங்கள் டீம் மெம்பர் அனைவரையும் அழைத்து, கோப்பையை வாங்கினாள். மற்ற டீம் மெம்பர்கள், தலைவிகள் கூட, அர்ச்சனாவிற்கு வாழ்த்துச் சொன்னார்கள்.

ஒரு வழியாக, அனைத்துப் பரபரப்புக்களும் ஓய்ந்தது. இன்னும் சரியாக, நாற்பத்தைந்து நாள்தான் கல்லூரி. அதில் அடுத்த வாரம் டூர். டூர் முடிந்து வந்தவுடன் கமிஷன். கமிஷன் முடிந்தால், மாடல் எக்ஸாம், அதன் பிறகு ஒரு வாரம் விடுமுறை, பிறகு எக்ஸாம்.

டூர்க்கு, ஹைதராபாத் கூட்டிச் சென்றார்கள். சார்மினார், கோல்கொண்டா போர்ட், சலார் ஜங் மியூசியம், பிர்லா மந்திர், இப்படி அனைத்து இடங்களையும், சுற்றிப் பார்த்தார்கள்.

இதில், ராமோஜிராவ் பிலிம் சிட்டியை சுற்றிப் பார்க்க, முழுதாக ஒரு நாள் ஒதுக்கியிருந்தார்கள். வைஷு, ஜுடி, அர்ச்சனா மூவரும் சேர்ந்தே சுற்றிக் கொண்டிருந்தார்கள். அனைவரையுமே இஷ்டம்போல் சுற்றச் சொல்லி விட்டார்கள். சரியாக, மாலை ஆறுமணிக்கு, க்ளோசிங் செரிமனி பார்க்க, நுழை வாயிலில், கூடச் சொன்னார்கள், அவ்வளவே.

வைஷு, தன்னால் சுற்ற முடியாது என்று சொல்லிவிடவே, அங்கே இருந்த, சுற்றிப்பார்க்கும் பஸ்ஸில், அவளை ஏற்றி அனுப்பினாள் அச்சு. அவளுடன் ஜுடியும் சென்றுவிட்டாள். அர்ச்சனா, தனியாக, அங்கிருந்த பூக்கள் கார்டனுக்குள்

நுழையும் வேளையில், அவள் எதிரில் வந்து நின்றான் பேட்ரிக்.

“பேட்ரிக், நீங்க.....”, அவனைத் தாவி அணைத்துக் கொண்டாள். அவனும் அவளை அணைத்தான்.

“நீங்க வாறதா சொல்லவே இல்லையே. அம்மாக்குத் தெரியுமா?”.

“நான், முதல்ல வாறதா நினைக்கவே இல்லை. பிறகு, அங்கே இருக்க மனசே வரலையா, அதான் உன்னைத் தேடி வந்துட்டேன். நீ உன் ப்ரண்ட்ஸ் கூட சுத்திட்டு இருந்தியா, அதான் நான் இவ்வளவு நேரம் வரவே இல்லை”, அம்மாவுக்குத் தெரியுமா என்ற கேள்விக்கு, அவன் பதில் சொல்லவில்லை.

அவள் கைகளைக் கோர்த்துக் கொண்டு, அந்த இடத்தையே சுற்றி வந்தான். “சனா....., மைக்கேலும் என்னோட வந்தார்”, அவன் சொல்லவே, ப்ரேக் போட்டவாறு நின்றுவிட்டாள்.

“இது யாரோட ஐடியா, எங்களோட, நாங்க வந்த ட்ரெயின்ல வந்தால் கண்டு பிடிச்சுடுவாங்கன்னு, அடுத்த நாள் வந்தீங்களா? சரி, அண்ணா வைஷுவைக் கண்டு பிடிச்சாரா?”, அவன் பதில் சொல்லாமல் சிரிக்கவே, “அடப்பாவி, அப்போ அண்ணா, பஸ்ஸில் தான் இருக்காங்களா?”, அதற்கும் அவன் பதில் சிரிப்பே.

“சரியான திருட்டுப் பூனைங்க.....”, அவன் வயிற்றில் குத்தி சிரித்தாள். அவள் கையைப் பிடித்துத் தடுத்து, அவள் கண்களையே, காதலாய் பார்த்தான். அவன் பார்வை, அவளுக்குள் பட்டாம்பூச்சியை பறக்க வைத்தது.

வெளிநாட்டு மலர்கள், உள்நாட்டு மலர்கள், ஊட்டி போன்ற இடம், வெளிநாட்டு செட் போட்ட இடங்கள், அனைத்தையும், அவன் கை கோர்த்து, ஆர்வமாகச் சுற்றி வந்தாள்.

நெருக்கமாக, புகைப்படங்கள் கூட எடுத்துக் கொண்டார்கள்.

பின்னர், அங்கிருந்த உள்ளரங்க நிகழ்ச்சிகளான, “சர்க்கஸ், பாடல் பாடும் இடம், மேஜிக் ஷோ, அனைத்து இடங்களிலும் அவன் அணைப்புக்குள் ஒடுங்கியிருந்தாள் அர்ச்சனா. மேஜிக் ஷோ நடந்த இடத்தில், மேடையில் மட்டுமே வெளிச்சமிருக்க, இவர்கள் இருந்த இடம், கும்மிருட்டில் நிறைந்திருந்தது.

அர்ச்சனா ஆர்வமாக ஷோ பார்க்க, அவன் கைகள் அவள் இடையில் தவழ்ந்தது. “நல்லாருக்குல்ல.....”, அவள் ஆர்வமாகச் சொல்ல, அவனிடமிருந்து பதில் இல்லாமல் போகவே, அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

அவள் பார்க்கவே, அவளை இடையோடு சேர்த்து அணைத்தான். பார்வைகள் நான்கும் கவ்விக் கொள்ள, பின்னால் சாய்ந்து, அவன் தோளில் தலை சாய்த்தாள். அவன் இதழ்கள், அவள் நெற்றியில் பதிய, அந்த சுகத்தில் கண்கள் மூடினாள். அவள் இதழ் நோக்கிக் குனியும் வேளையில், அரங்கில் விளக்குகள் ஒளிபெற, வேகமாக விலகினர் இருவரும்.

உடல் முழுவதும், ஒரு ஆனந்தப் பரபரப்பும், வெட்கமும், எதிர்பார்ப்பும் போட்டிபோட, மனமே இல்லாமல், அவனை விட்டு விலகி வெளியே நடந்தாள். இருவருக்குள்ளும் அமைதி. கூட்டம் மொத்தமும், பக்கத்தில் இருந்த இன்னொரு அரங்குக்குள் நுழைய, அது என்ன அரங்கம் என்று தெரியாமலேயே, அங்கே இருவரும் நுழைந்தார்கள்.

உள்ளே நுழைந்த சிறிது நேரம், அங்கிருந்த இருட்டு கண்களுக்குப் பழக கொஞ்ச நேரமானது. அது ஒரு டார்க் ரூம். திடீரென யாராவது தோன்றி, பயமுறுத்துவார்கள், இது அறியாத அவர்கள், தொடர்ந்து முன்னேறினர்.

நுழைவாயிலிலேயே, பயம் உள்ளவர்கள் செல்லவேண்டாம், என்று தடுத்துத் திரும்ப அனுப்பப்

பட்டார்கள். இதை அறியாமல், இவர்கள் தொடர, இவர்களுக்குள் இருந்த அமைதியும், அங்கிருந்த இருட்டும், திடீரென ஒரு ஓரத்தில், திடும் என்ற இசையுடன், ஒரு எலும்புக்கூடு தெரியவே, பயத்தில் பேட்ரிக்கைக் கட்டிக் கொண்டாள்.

அவனும் பயந்தாலும், அதைக் காட்டிக்கொள்ளவில்லை. “சனா... பயந்துட்டியா?”, அவர்களுக்குள் அமைதியைக் கலைத்தான்.

அவன் நெஞ்சோடு இன்னும் ஒண்டிக் கொண்டாள். அவள் இதயம் துடிக்கும் விதம், அவன் உணரும் அளவு நெருக்கம். பாதையிலிருந்து விலகி, ஒரு ஓரமாகச் சென்று நின்றான். அவளது அமைதி, அவனுக்கு எதையோ உணர்த்த, அவள் முகத்தை நிமிர்த்தி, அவள் இதழ்நோக்கிக் குனிந்தான்.

இதற்குமேல் காத்திருக்க முடியாது என்பதுபோல், அவள் இதழ்களைச் சுவைத்தான். அவன் கைகள், அவள் மேனியின் மென்மைகளை உணர்ந்தது. அவன் செய்கையில் திகைத்தாலும், தானும் அவனுடன் இழைந்தாள். அவன் பிடரி முடியில், தன் கைகளைக் கோர்த்து, அவன் செய்கைக்கு இசைந்தாள்.

எவ்வளவு நேரம், தங்களை மறந்து இருந்தார்களோ, மறுபடியும் அதே இசையும், எலும்புக் கூடும் தெரியவே, அவளிடமிருந்து மெதுவாக விலகினான். இதழ்கள், பிரிய மனமில்லாமல் விலகின.

“வெளியே போகலாமா, இல்லை உள்ளேயே.....?”, அவன் குறும்பாகக் கேட்க, அவள், அவனுடைய டிஷர்ட் காலரைப் பிடித்து இழுத்துக்கொண்டு, உள்ளே சென்றாள். பின்னர், வாய்ப்புக் கிடைக்கும் பொழுதெல்லாம், இருவரின் இதழ்களும் நலம் விசாரிப்பது தொடர்ந்தது.

இருவருமே, மற்றவரின் அருகாமையை, அணைப்பை, இதழ் தீண்டலை, இன்னும் அதிகமாக வேண்டும் என்றே விரும்பினர். மதியம், சாப்பாடு, சாப்பிடும் பொழுது, பேட்ரிக்

அவன் அலைபேசியில் தொடர்புகொண்டு, மைகேலிடம் பேசினான்.

பின்னர் வைஷுவும், அர்ச்சனாவும் பேசிவிட்டு, அலைபேசியை வைத்தார்கள். அச்சு, ஜுடி பற்றி கேட்கவே, அவள் ஷீபாவுடன் சேர்ந்து சுற்றப் போய் விட்டதாகச் சொன்னாள் வைஷு. ஜுடியைப் பற்றிய கவலையை விட்டாள் அச்சு.

ஷீபா, அச்சுவின் வகுப்பில், அவளுடன் இருப்பவள். மீண்டும் சுற்றத் துவங்கினார்கள் அச்சுவும், பேட்ரிக்கும், ஐஸ்கிரீம் வாங்கிச் சுவைத்தார்கள், இதழ்களால் ஐஸ்கிரீம் பரிமாறிக் கொண்டார்கள், விளையாடினார்கள், என்னமோ, ஹனிமூன் வந்த தம்பதிகளின் நிலையில்தான், அவர்கள் இருந்தார்கள்.

இருவரின் மனங்களுமே நெகிழ்ந்திருந்தது. ஒருவர் மற்றவரின் நெருக்கத்தை, அருகாமையை, தொடுதலை, இதழ் தீண்டலை, அணைப்பை, இன்னும் அடுத்த கட்டத்தையும் அடையத் துடித்தார்கள், என்பதுதான் சரியாக இருக்கும். ஆனால் யார் துவங்கவென்ற தயக்கம் இருவருக்குள்ளும்.

மாலை ஆறுமணியை நெருங்கவே, அவளை என்ட்ரன்ஸ் அருகில் கூட்டி வந்தான். “சனா, நானும், நீங்க தங்கியிருக்கும் அதே ஹோட்டலில், ரூம் நம்பர் முன்னூற்றி அறுபதில் இருக்கேன். உன் ரூம், இருநூற்றுத் தொண்ணுறு தானே.

நைட், நீ என் ரூமுக்கு வந்துடு, உங்க ரூமுக்கு மைகேல் வருவான். ரெண்டுபேருக்கு ஒரு ரூம் தானே கொடுத்து இருக்காங்க. பதினோரு மணிக்கு, அவன் அங்கே வந்தவுடனே, நீ இங்கே வந்துடு. ஸ்டெப்ஸ் வழியா வா, சரியா?”, வேகமாகச் சொல்லிவிட்டு, மறைந்துவிட்டான்.

அவளுக்கு மறுத்துப் பேசவும் வாய்ப்புத் தரவில்லை. மெதுவாக, அங்கிருந்து வைஷுவைத் தேடியவாறு,

கூட்டத்தில் நுழைந்தாள். எடை பார்க்கும் இயந்திரம் அருகில் அவள் அமர்ந்திருந்தாள்., அவள் அருகில் சென்று அமர்ந்து கொண்டாள்.

இரவு, பப்பே முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சாப்பாட்டை உண்டார்கள். இரவு ஒன்பது முப்பது மணிக்கே, ஹோட்டல் அறைக்கு வந்துவிட்டார்கள். வைஷுவும், அர்ச்சனாவும் பேசிக் கொண்டாலும், இருவருமே, தங்கள் கணவன்மார் சொன்னதைப் பற்றி பேசிக் கொள்ளவில்லை.

பத்துமணிக்குக் கதவு தட்டப்படும் ஓசையில், இருவருமே திடுக்கிட்டார்கள். மணி பத்துதானே ஆகுது, யோசனையோடு சென்று கதவைத் திறக்க, வெளியே நின்றார் ஸ்டெல்லா. எல்லாம் “வசதியா இருக்கா? குளிச்சியா? சரி தூங்குங்க”, கரிசனையைக் காட்டிவிட்டுச் சென்றார்.

படுக்கையில் விழுந்தாள்....., அலைச்சலில் உடல் முழுவதும் வலித்தாலும், இமைகள் மூட மறுத்தன. பதினோரு மணிக்கு, அழைப்புமணி ஒலிக்கவே, தூங்கிவிட்ட வைஷுவை எழுப்பாமல், கதவைத் திறந்து, மைகேலிடம் சொல்லிவிட்டு, படியேறினாள்.

தான் செய்வது சரியா? தவறா? மனதுக்குள் போராட்டம். ‘அவன் உன் கணவன்தான்’, மன்சாட்சி கூட சப்பைக் கட்டு கட்டியது.

தயக்கமாக, அவன் அறைக்கு முன்பு நிற்கும் பொழுதே, கதவு திறந்து, அவளை உள்ளுக்கு இழுத்தன அவன் கரங்கள். கதவைக் காலால் தள்ளிப் பூட்டிவிட்டு, அவளைத் தூக்கிக் கொண்டு படுக்கையில் கிடத்தினான்.

கிடத்திய வேகத்தில் அவள்மேல் படர்ந்து, அவள் இதழ்களைக் கவ்விக் கொண்டான். அவள் கழுத்து வளைவில் முகம் புதைத்து, அவள் மார்பின் மத்தியில் இளைப்பாறினான். முகத்தை, அவள் மார்புக்கு மத்தியில்

தேய்த்தான். அவனது இந்தச் செய்கை, அவளுக்குள் இருந்த பெண்மையை கிளர்ந்தெழச் செய்தது.

உணர்வுகள் மொத்தமும், அவன் கைகளின் செய்கையில், அவள் கட்டுப்பாட்டை தகர்த்தெறிந்தன.

“என்.....ன.....ங்க....., வேண்டாம்.....”, அவள் சொன்னது, அவள் செவிகளையே எட்டாதபொழுது, அவனைத் தீண்டுமா, அவள் வார்த்தைகள். அவன் கைகளும், இதழ்களும், அவள் மேனி முழுவதும் ஊர்வலம் போனது. மீண்டும் அவன் இதழ்கள், அவள் இதழ்களை அழுத்தமாகத் தீண்டிவிட்டு, அவள் காதில் குசலம் விசாரித்தன.

மேலே எதுவும் செய்யாமல், அவளை இறுக அணைத்தவாறு, படுத்துக் கொண்டான்.
“என்.....ன.....ங்க.....”, அவள், அவன் முடி கோதி, மெதுவாக அழைக்க,

“ம்ம்.....”, என்ற ஓசையுடன், அவன் வேலையைத் தொடர்ந்தான்.

தன் பெண்மை, அவன் தீண்டலில் முழுதாகக் கரைவதும், நெகிழ்வதும், அவளுக்குப் புரிந்தது. ஆனால், தங்கள் முதல் கூடல், தங்கள் வீட்டில் நிகழ வேண்டுமென்றே, அவள் விரும்பினாள். எனவே, தன்னை முயன்று மீட்டாள்.

அவளின் விறைத்த உடல்மொழியிலேயே, அவளது விருப்பமின்மையை உணர்ந்த பேட்ரிக், தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டான். “ஒண்ணும் இல்லை, தூங்குடா. அலைஞ்சது கஷ்டமா இருக்கும் இல்ல. ரொம்ப நேரமாச்சு”, அவன் சொல்லவே, அவனை அணைத்துக் கண்ணீர் விட்டாள்.

“இப்போ எதுக்கு இந்த அழுகை”, அவள் தலையை, ஆதரவாகக் கோதினான்.

“உங்களுக்குக் கோபமே வரலையா? ஏண்டீ விலகுறன்னு கேக்க வேண்டியதுதானே”, அவன் நெஞ்சில் சாய்ந்தவாறு கேட்டாள்.

“என் சனாவைப் பற்றி எனக்குத் தெரியும். அவ விலகுறான்னா, கண்டிப்பா ஏதாவது காரணம் இருக்கும். நான் நெருங்கி, ஒரு நாள் கூட என்னை நீ தடுத்தது கிடையாதேடா”, அவளை உணர்ந்தவனாய், அவனும் பதில் சொன்னான்.

“என்னங்க, அப்படி என்கிட்டே என்னதான் இருக்கு. அப்படி, பார்த்த உடனே மயங்க. அது சரி, என்னை நேர்ல பார்க்க முன்னாடியே, வேற எங்க வச்சாவது, என்னைப் பார்த்து இருக்கீங்களா? அப்படின்னா எங்கே?”, ஆர்வமாகக் கேட்டாள்.

“உனக்கு ஏன் அப்படி ஒரு சந்தேகம்”, கண்கள் மின்னக் கேட்டான்.

“இல்ல....., நீங்க என்னை, முதல் நாள் பார்த்த போதே, புதுசா பார்க்குற மாதிரி பார்க்கலை, அதான்.....”, அவன் சட்டை பட்டனை, திருகியவாறு சொன்னாள்.

“வேற எப்படி பார்த்தேனாம்?”, குறும்பாகக் கேட்டான்.

“ம்ம்...., என்னமோ கட்டிகிட்ட பொண்டாட்டியைப் பாக்குற மாதிரி பாத்தீங்க. உங்க பார்வையில், அப்படி ஒரு ஆர்வம்....., நான் முதல் முறையா தடுமாறியதே, அந்தப் பார்வையில் தான்”, அவனோடு இன்னும் இழைந்தாள்.

“சனா....., நிஜம்மாவா.... அப்போவேயா?”, அவன் குரலில், அப்படி ஒரு குதூகலம்.

“ம்ச்....., நீங்க, நான் கேட்டதுக்கு முதல்ல பதில் சொல்லுங்க”, சிணுங்கினாள்.

தன் போனை எடுத்து, அவளிடம் காண்பித்தான். வேகமாக, அதை வாங்கிப் பார்த்து, அதில் இருந்த தன் புகைப்படங்களைப் பார்த்தாள். அதில் ஒன்றில் கூட, அவள் ஒழுங்காக இல்லை. அனைத்து புகைப்படங்களிலும், குறும்பு செய்தவாறுதான் இருந்தாள்.

“இந்த போட்டோ எல்லாம் பாத்துமா உங்களுக்கு என்னைப் பிடிச்சுது”, ஆச்சரியமாகக் கேட்டாள்.

“எனக்குப் பிடிச்சதே அந்தக் குறும்புதாண்டா.....”, அன்று, தாயின் அலைபேசியில் இருந்து, புகைப்படங்களை எடுத்த விதத்தைச் சொன்னான். இருவரும் சிரித்தார்கள்.

“ஆனால், எல்லா போட்டோவிலும் என்னைக் கவர்ந்தது உன்னோட கண்ணுதான். எவ்வளவு குறும்புத்தனத்தை வெளிப்படுத்தியதோ, அதே அளவு வலியையும், அது ஒளிச்சு வச்சிருந்ததை நான் உணர்ந்தேன். முதல் நாள் உன்னைப் பார்த்தப்போவே, உன்னைக் கட்டிப் புடிச்சு, உனக்கு நான் இருக்கேன்னு சொல்லத்தான் நினைச்சேன்”, அன்றைய நினைவில், அவளை இப்பொழுது இறுக்கிக் கொண்டான்.

“இப்போ நீ சொல்லு, நீ எப்போ என்னை விரும்பின?”.

“எனக்கும், முதல் நாளே கொஞ்சம் சலனம் தான். ஆனால் உங்களை உணர்ந்தது, அந்த ஒரு வாரப் பிரிவில்தான்....., அதெப்படிடா.... என்னை நீ பார்க்க வராமல் இருக்கலாம்”, கேட்டவாறு, அவனை அடித்தாள்.

“அப்போ, என்னை நீ தேடுனியா? என்கிட்டே சொல்லவே இல்லையே”, அவள் மனதை வென்ற பெருமிதம் அவன் குரலில்.

“ஆமா, அப்படி இருந்தும்கூட, ஐயா, பார்டரைத் தாண்டி வரப் பாப்பீங்க. அதை மட்டும் நான் சொல்லி இருந்தேன், அவ்வளவுதான். ஆனாலும், நீங்க காதலை சொன்ன அந்த நிமிஷம் இருக்கே.....,

“ஐ லவ் யூடா....., ஐ லவ் யூ சோ மச்.....”, அவன் நெஞ்சில் தலை சாய்த்தாள்.

“நானும் தாண்டா.....”.

இருவரும், தங்கள் மனதைத் திறந்த மகிழ்வில், கட்டுண்டு இருந்தார்கள்.

பகுதி - 36

என்னவளை உணர்ந்துகொண்டேன்

அவள் குழந்தைத்தனம்

அவளது புத்திசாலித்தனம்

இவற்றைக் கட்டிக் காக்கவே

விரும்புகின்றேன்.....

மின்மினியாய் என்னவள்.....

கடைசிகட்ட பரபரப்பான நிமிடங்களில் திமிலோகப் பட்டது கல்லூரி. இன்று கமிஷன்....., அதற்காக, இந்த வருடம் முழுவதும் அவர்கள் உழைத்த உழைப்பின் பலன் கிடைக்கும் நாள். இந்த ஒருநாள் கடந்துவிட்டால்....., இனிவரும் ஒரு மாதமும், படிப்பில் மட்டும் கவனம் செலுத்தினால், போதும்.

ஹாஸ்டலில் இருக்கும் மாணவிகள், சுலபமாக, தங்கள் ரெகார்ட், சார்ட், பைல், மாடல்கள் என அனைத்தையும், தங்களுக்கு ஒதுக்கிய மேசையில் பரப்பி விட்டார்கள். ஆனால், வீட்டிலிருந்து வந்துபோகும் மாணவிகள்தான், திணறிவிட்டார்கள்.

காலையில், வழக்கம்போல் ஒன்பதுமணிக்கு வருகைப்பதிவு ரெஜிஸ்டர் எடுக்க, அலுவலக அறைக்குச் சென்றவள், ரோசியிடம் கொஞ்சநேரம் விளையாடினாள். ரோசியும் அவளுடன் வாயடித்தாள். “அச்சு, எங்களுக்கெல்லாம் கல்யாணச் சாப்பாடு போடாமலே ஏமாத்திட்டியே?”, அவளைக் கேலி செய்தாள்.

“உனக்குச் சாப்பாடு வேணும்னா கேளு, அதை விட்டுட்டு, பக்கத்து இலைக்குப் பாயாசம் கேக்குற?”, அவளை இவள் கலாய்த்தாள். பேட்ரிக் – அர்ச்சனா இருவரின் திருமண

வரவேற்பு, அர்ச்சனாவின் ஸ்டடி ஹாலிடே துவங்கிய மறுநாள் வைப்பதாக முடிவு செய்யப் பட்டிருந்தது.

பின்னர், ஹாலுக்கு வரும்பொழுது, அங்கே ஒரு ஓரத்தில், பெமி அழுது கொண்டிருப்பதைப் பார்த்தாள். “இவ எதுக்கு, இங்கே நின்னு அழுதுட்டு இருக்கா”, வாய்விட்டுக் கேட்டுவிட்டு, அவளிடம் செல்லத் துடித்த காலை, அடக்கிவிட்டு, அவள் வேலையைத் தொடர்ந்தாள்.

நேரம் ஒன்பது முப்பதை நெருங்கும் வேளையில், அவள் அழுகை இன்னும் அதிகரித்தது. அவளைச் சுற்றி சிறிய கூட்டம், அனைவரின் முகங்களிலும் அனுதாபம். “ஏய் பொண்டாட்டி, என்னன்னு கேட்டுட்டு வாடி”, வைஷுவை, இருக்க விடாமல் தொல்லை செய்து கொண்டிருந்தாள்.

“அச்சு, உங்களுக்கு ஒரு ஹேப்பி நியூஸ், பஸ்ஸில் வரும்போது பெமியோட பிக்ஷாப்பர் தொலஞ்சுடுச்சாம், அதோட, அவளோட பத்து பையில், பத்து ரெகார்டும், ஹோகையா,அதை மிஸ் பண்ணிட்டுதான் அம்மணி நின்னு ஒரே அழுகை.

உங்க அசைன்மென்ட் நோட், சார்ட் எல்லாம் நாசம் செஞ்சா இல்ல, அவளுக்கு நல்லா வேணும். கடவுள் இருக்கார்.....”, ஜுடி, விஷயத்தைப் புட்டுப் புட்டு வைத்தாள்.

“அடச்சீ, இது சந்தோசப்படுற விஷயமா? உனக்கு ஏன் இந்த நல்லெண்ணம்?”, அர்ச்சனா அவளைக் கடிந்துகொண்டாள்.

“ஓ....., நீங்கதான் மதர் தெரசாவாச்சே, மறந்துட்டேன். சரி விடுங்க, நான் என் டேபிள்க்கு போறேன்”, தலைக்குமேல் கும்பிட்டுவிட்டுச் சென்றாள்.

“பொண்டாட்டி, ஏதாவது செய்டி”, வைஷுவைத் தூண்டினாள்.

“நீ என்ன லூசா.....?, இப்போ நாம போனால், அதுக்கும் ஏதாவது குத்தி பேசுவா, நீ பேசாமல் வா”, அவளை

இழுத்துச் சென்றாள்.

அர்ச்சனாவுக்கு மனம் கேட்கவே இல்லை. அவளை நெருங்கினாள், “பெமி....., இப்போ எதுக்கு அழற, நான் உனக்கு ஹெல்ப் பண்ணவா?”, இவள். இதில் என்ன ஹெல்ப் செய்ய முடியும், என்பதுபோல் பார்த்தாள்.

அவளது அமைதியே, அர்ச்சனாவுக்கு தைரியமூட்ட, “ஹல்லோ ப்ரண்ட்ஸ்.....”, அர்ச்சனா துவங்க, “ஆரம்பிச்சுட்டாங்க....., இவங்களுக்கு இது தேவையா?”, தலையிலடித்துக்கொண்டு பேசாமல் நின்றாள் ஜுடி.

“நான் சொல்லுவதை ஒரு நிமிஷம் கேளுங்க, பெமியோட எல்லா பைல், ரெகார்ட்,எல்லாம் மிஸ் ஆகிடுச்சு. இப்போ, நாம நினைத்தால் அவளுக்கு உதவ முடியும். இன்னைக்குக் கமிஷனுக்கு வாறவங்க, நம்மளோட எல்லா நோட், ரெகார்ட்,எல்லாத்தையும் பாக்கப் போவதில்லை.

சோ, ஒவ்வொருத்தரும் உங்களோட ஏதாவது ஒரு பைல், ரெகார்ட் தந்தீங்கன்னா, அதை வைத்து சம்மாளிச்சுடலாம். நான் என்னோட சுற்றுச்சூழல் பைல் கொடுக்குறேன், இன்னும் யாராவது முன்வந்தால் செய்யலாம்.....”, சொல்லிவிட்டு, அவள் பார்வை வைஷு, ஜுடி, வீணா, ஷீபா, சக்தி, அருணா, லைலா....., என தனக்குக் கொஞ்சம் நெருக்கமானவர்களைப் பார்த்தது.

வைஷு உடனடியாக, அவளது ரெகார்ட் நோட் ஒன்றைக் கொடுக்க, மற்றவர்களும், கொஞ்சம் தயங்கியவாறே, கொடுத்தார்கள். ஜுடி மட்டும் திட்டிக் கொண்டே, “இது உங்களுக்காக....., வேற யாருக்காகவும் இல்லை”, பெமியை முறைத்தவாறே சொல்லிவிட்டு, பைலைக் கொடுத்துச் சென்றாள்.

மற்றவர்களின் பைல், ரெகார்ட்களை அடியில் வைத்துவிட்டு, அதன்மேல் அவளது சார்ட் எல்லாம் பரப்பிவிட்டு, அதற்குமேல் பதினைந்து நோட்டு, மாடல்கள்,

செய்த கலை பொருட்கள் என அனைத்தையும், வேகமாக மாற்றியமைத்தாள்.

“வர்றவங்க ரெகார்ட், பைல் கேட்டால்....., ரொம்பக் கஷ்டப்பட்டு எடுக்குறமாதிரி ஆக்ட் பண்ணு, முடிஞ்சால் மேலே இருக்க திங்க்ஸ எல்லாம் தள்ளி விட்டு அவங்களை டைவர்ட் பண்ணு. பதட்டமாகி, காட்டிக் கொடுத்துடாதே”, பத்து நிமிடம் அவளுக்கு அறிவுரை வழங்கிவிட்டு,

இவர்களை வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்த தோழிகளைப் பார்த்து, “அடிங்க....., இங்கே என்ன டிஸ்கோவா ஆடுறோம், எல்லாம் இங்கேயே பாத்துட்டு இருக்கீங்க, அவங்க அவங்க டேபிளைப் பாருங்க. விட்டா, நீங்களே காட்டி கொடுப்பீங்க”, அவர்களையும் அலெர்ட் செய்துவிட்டே, சென்றாள்.

தோழிகள் அனைவரும், அவளது செயலையும், பெமியைப் பற்றி அங்கே உலவும் வதந்தியையும், பற்றி, தங்களுக்குள் பேசினாலும், அர்ச்சனாவின் கவலையெல்லாம், அங்கே இருக்கும் காமெராவைப் பார்த்துதான், இருந்தாலும் ஏதாவது சொல்லி சமாளிக்கலாம் என்று நினைத்து, தைரியமாகவே இருந்தாள்.

ஒரு வழியாக, கமிஷனுக்கு வந்தவர்கள் இரண்டு சார்கள். இருவருமே, அனைவரிடமும் ஒவ்வொரு கேள்வி, ஒவ்வொரு நோட் எனப் பார்த்துவிட்டு, கடந்துவிட்டார்கள். ஆனால், கேள்வி கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது. ஒரு வழியாக, அந்த நாள் நல்லபடியாகவே முடிந்தது.

பெமி, மிகுந்த தயக்கமாகவே அர்ச்சனாவிடம் வந்தாள். “தேங்க்ஸ்.....”, என்று ஒற்றை வார்த்தையில் சொல்லிவிட்டுச் சென்றுவிட்டாள்.

“இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண

நன் நயம் செய்து விடல்”.

இந்த குறளுக்கு ஏற்ப அர்ச்சனா திகழ, அவளை நேருக்குநேர் காணக்கூட வெட்கிச் சென்றாள் பெமி.

“இப்போ இந்த தேங்க்ஸ்சை யாராவது இவங்க கிட்டே கேட்டாங்களா?”, ஜூடி, அவள் நிலை மாறாமல் பொரிந்தாள்.

“பஞ்சுமிட்டாய், நீ அடங்கவே மாட்டியா? உன்னை, எவன் கட்டிட்டு, படாத பாடு படப்போறானோ?”, அதன் பிறகு, கலாட்டாவாகச் சென்றது அவர்களது நாட்கள்.

மாடல் எக்ஸாம் முடிந்துவிட்டது. இன்னும் ஒரு வாரம், படிப்பதற்கு விடுமுறை விட்டிருந்தார்கள். இரண்டாம் விடுமுறை நாளன்று, அர்ச்சனா – பேட்ரிக் இருவரின் வரவேற்பும், சிறப்பாக நடந்து முடிந்தது.

ஊரிலிருந்து, அனைவரும் இங்கே வந்திருந்தார்கள். மேரி, மகள் மேல் பாசத்தைப் பொழிய, ஜான், தங்கைக்கு விலையுயர்ந்த காரைப் பரிசளிக்க, பேட்ரிக், அர்ச்சனாவிற்கு விலையுயர்ந்த அலைபேசி பரிசளித்தான்.

“நான் உங்களுக்கு எதுவுமே வாங்கலையே”, அறையில் தனிமையில் அவனிடம் புலம்ப, அவன் விழிகள் தாபத்துடனும், மோகத்துடனும், தன்னை மொய்ப்பதை உணர்ந்தவள், அவனை நெருங்கிச் சென்று, அவன் பார்வையின் வேகம் தாங்காமல், அவன் தோளில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

அவள் அடைக்கலம் உணர்ந்தாலும், மீதமிருக்கும் பத்தே நாட்களை கருத்தில் கொண்டும், அவள் படிப்பில் மட்டுமே, இப்பொழுது கவனம் செலுத்தவேண்டும், என்ற அக்கறையிலும், தன்னை கட்டுப்படுத்திக்கொண்டு, அவளை விட்டு விலகினான்.

அடுத்து வந்த அந்த ஒரு வாரமும், படித்தார்களோ இல்லையோ, விளையாட்டு, அரட்டை, கிண்டல், கேலி என சென்றது. அதற்குக் காரணம்....., எப்படியும், நோட்ஸில்

இருப்பது வரப்போவதில்லை பிறகு என்ன? என்ற அசட்டைதான்.

பரீட்சை துவங்க இரண்டுநாள் இருந்த நேரத்தில், வைஷுவின் வீட்டிலிருந்தும், மாமியார் வீட்டிலிருந்தும், அனைவரும் அவளைப் பார்க்க வந்தார்கள். மைகேல், அனைவரிடமும் உண்மையைச் சொல்லிவிட்டதே, அதற்குக் காரணம்.

அர்ச்சனாவையும் பார்க்கவேண்டும், என்று அவர்கள் கூறவே, "நான் வரவே மாட்டேன், என்று ஒளிந்து இருந்தவளை, வலுக்கட்டாயமாக தூக்கிக் கொண்டு சென்றார்கள் வைஷுவும், ஜூடியும். பெரியவர்களின் கண்கலங்கல்கள், நெகிழ்ச்சி, நன்றி என அனைத்திலும் சங்கடமாக நெளிந்தாள்.

"ஏய் பொண்டாட்டி, நான் ரூம்க்குப் போறேண்டி....., விட்டா, இப்போவே எனக்குக் கிடா வெட்டி, பொங்கல் வைப்பாங்க போல இருக்கு. இப்போ எனக்கே, பின்னாடி ரெண்டு றெக்கை முளைக்கிற மாதிரி ஒரு பீல்.

நீயே நினைச்சுப்பாரு, ஏற்கனவே எனக்கு வால் இருக்குன்னு வேற வதந்தி. இதில் றெக்கையும் இருந்தால் எவ்வளவு கண்றாவியா இருக்கும். நீயே நினைச்சுப் பார், என்னை விட்டுடேன்.....", அழும் குரலில் சொல்ல, "அவங்க திருப்திக்காக கொஞ்ச நேரம் இரேன்", வைஷு சொல்லவே, பதுமை போல், எதையும் காதில் வாங்காமலும், சிலவற்றுக்கு மனதுக்குள் கவுண்டர் கொடுத்தவாறும் நேரத்தைக் கடத்திக் கொண்டிருந்தாள்.

பரீட்சைத் துவங்கிய அன்றே, அர்ச்சனா, பேட்ரிக் வீட்டுக்கு வந்துவிட்டாள். ஹாஸ்டலையும் காலி செய்துவிட்டாள். பரீட்சை முடிந்தவுடன், பத்து நாட்கள், அம்மா வீட்டுக்குப் போகிறாள் அவள். காரணம், அவள் அண்ணா ஜானுக்குத் திருமணம்.

பெண் கூட, அர்ச்சனா சொன்ன பெண்தான்.
திருமணத்துக்குச் சம்மதிக்கவே மாட்டேன் என்று
சொல்லுகிறான், என்று அவள் அம்மா குறைபட, இந்தப்
பொண்ணை அவனுக்குப் பாருங்க, உடனே சரின்னு
சொல்லுவான், என்று இவள் சொல்லவே,

நம்பிக்கையில்லாமல்தான், மேரி அந்தப் பெண்ணை
அவனுக்குப் பார்த்திருப்பதாகச் சொன்னார். ஜான் முகம்
பிரகாசித்த விதத்திலேயே, அவனுக்கு விருப்பம் என்பதை
உணர்ந்துகொண்டு, திருமண ஏற்பாட்டையும் உடனே
செய்துவிட்டார்.

பரீட்சை நடந்த அந்த ஐந்து நாட்களும், இரவு பகல்
பார்க்காமல் கண்விழித்துப் படித்தாள் அர்ச்சனா.
அவளுடனே தொடர்ந்திருந்த இந்த ஒரு வாரமும்,
பேட்ரிக்தான் கொஞ்சம் தடுமாறிப் போனான்.

பரீட்சை நேரத்தில் அவளைத் தொல்லை
செய்யவேண்டாமென்று அவன் நினைக்க, அவளோ,
அவனை சோதிக்கவென்றே, அனைத்தையும் செய்தாள்.
இரவு படிக்கும் வேளைகளில், அவனை உறங்கவிடாமல்,
தன்னுடன் இருக்க வைத்தாள்.

அவன் எங்கே இருந்தாலும், அவன் மடியில்தான்
அமர்வேன், என்று அடம் பிடித்தாள்,
சாப்பிடவேண்டுமென்றால் அவன் ஊட்டிவிட வேண்டும்,
அவன் எதிர் பாராத வேளைகளில், இறுக அணைத்து
அவள் தரும் இதழ் முத்தம், என, இப்படி அனைத்திலும்
பிடிவாதம்தான்.

இவை அனைத்தையும்விட, பேட்ரிக்கின் ஆண்மையைச்
சோதிக்கவென்றே, அவள் செய்யும் செயலின் உச்சம்.....,
குளித்துவிட்டு, தலையில் ஒரு டவல், மார்பின் குறுக்காக
ஒரு டவ்வலோடு நின்றுகொண்டு, அவள் சுடிதாரைத் தேடி
அணிந்து கொள்ளும் அந்த பதினைந்து
நிமிடங்களுக்குள்....., அவன் ஒரு வழி ஆகிவிடுவான்.

அறையிலிருந்து வெளியே போகலாம் என்று நினைத்தால்....., நாம சேர்ந்தே போகலாம், என்று அதற்கும் தடை போட்டாள். இன்னும் ஒரு பரீட்சை மிச்சமிருக்கும் வேளையில், அன்று ஐந்தாம் நாள் காலையில், ஏழு மணிக்கே குளித்துவிட்டு, இங்கும் அங்கும் உலாத்திக் கொண்டிருந்தாள் அர்ச்சனா.

பேட்ரிக் இன்னும் உறங்கி முழிக்கவில்லை. திடீரென அவன் முகத்தில் தண்ணீர் திவலை விழவே, சட்டெனக் கண் விழித்தான். அங்கே அவன் கண்ட காட்சியில், இமைக்கக் கூட மறந்து அவளையே பார்த்தவாறு இருந்தான்.

முதுகைத் துளைக்கும் உணர்வில், அர்ச்சனா திரும்பிப் பார்க்க, அவனோ, விழிகளை இறுக்க மூடிக் கொண்டான். அவளது குறும்பு குணம் தலை தூக்க, அணிய எடுத்த சுடிதாரை, கட்டிலில் போட்டுவிட்டு, அவன் அருகில் பூனைபோல் நெருங்கினாள்.

அவள் நெருங்கி வரவே, இன்னும் இறுகக் கண்களை மூடிக் கொண்டான். அவளோ அவளது ஈர கூந்தலை, அவன் முகத்தில் படுமாறு, குறுகுறுப்பு ஊட்டினாள். அவள் ஈர கூந்தலில் இருந்து வந்த வாசமும், அவள் கோலமும், நெருக்கமும் அவன் கட்டுப்பாட்டைத் தகர்த்தது.

சட்டென, அவள் கையைப் பிடித்து இழுத்து, படுக்கையில் தள்ளி, அவள் ஈரக் கூந்தலில், முகம் புதைத்தான். இப்பொழுதுதான் தன் செய்கையின் விபரீதம் அவளுக்குப் புரிய, அவனிடமிருந்து விலக முயன்றாள்.

குளிர்ந்திருந்த தன் தேகத்தில் படர்ந்த அவன் மூச்சுக்காற்றின் வெப்பத்தில், தன்னைத் தொலைத்தாள் அவள். அவள் கூந்தலில் வாசம் பிடித்தவன், இன்னும் தன் தேடலை அவள் நெற்றியில் தொடர்ந்தான்.

அவள் நெற்றி, கன்னம், என ஊர்வலம்போன அவன் இதழ்கள், அவள் இதழ்களை ஆவேசமாகச் சுவைத்தன.

விழிகளை மூடி, அவன் செய்கையில் கிறங்கினாள்.

“ஏய்..... என்னை நல்லவனாவே இருக்க விட மாட்டியா? நானும் ஐந்து நாளா பாக்குறேன், பேஷன் ஷோ காட்டுற எனக்கு”, அவள் இதழ்களை ஆவேசமாகச் சுவைத்தவாறே சொன்னான்.

அவன் இதழ் தீண்டலால், அவளால் பதில் பேச முடியவில்லை. “நானும் எத்தனை நாள்தான், என்னைக் கண்ட்ரோல் பண்ணுறது. அதுவும், இப்படி ஒரு கோலத்தில் உன்னைப் பார்த்தால்.....”, அவன் பார்வை, அவள் மேனி முழுவதும் தாகத்தோடு பதிந்தது.

அவன் பார்வையை உணர்ந்து, கண்களை இறுக மூடிக் கொண்டாள். அவள் கழுத்து வளைவில் முகம் புதைத்து, இதழ்களால் தீண்டினான். “சனா....., என்னால இதுக்கும் மேல முடியாது. இப்போவே நீ எனக்கு வேணும். என்னால முடியலடி.....”, அவன் கைகள் ஆவேசமாக அவள் மேனி முழுவதும் பதிந்தது.

“உன்னை என்னைக்காவது, என்னைத் தொடாதேன்னு சொல்லியிருக்கேனாடா....., ஒட்டிகிட்டு இழையைத்தான் முடியும். வேற எல்லாம் உன் சாமர்த்தியம்....., உனக்குத் தைரியம் இல்லன்னு சொல்லு”, அவன் நிலை புரியாமல், அவனைச் சீண்டினாள்.

“என்னடி சொன்ன.....?”, அவன் வேங்கையாக மாறினான்.

“ம்ம்ம்ம்....., கிட்டே வச்சுட்டே வேடிக்கை பாப்பன்னு சொன்னேன். என்னடா..... அதானே உண்மை”, அவன் வேகம் தெரிந்தும், வாய் துடுக்குக் குறையவில்லை.

“கொஞ்சம் நல்லவனா, உன்கிட்டே நடந்தது தப்பா போச்சுடி”, அவள் இதழ்களை, மேலும் அழுத்தமாகக் கவ்விக் கொண்டான்.

அவன் தலை முடியைப் பிடித்து இழுத்து, அவன் முகம் பார்த்து சொன்னாள், “உன்னை யாருடா என்கிட்டே நல்லவனா இருக்கச் சொன்னது. இப்போதான், கொஞ்சம் நல்லவனா நடந்துக்கற, அதிலும் அரைகுறை..... பேச்சைப் பாரு”, எப்பொழுதும் மனதுக்குள் முணுமுணுப்பவள், இன்று சத்தமாகச் சொல்லிவிட, ஆவேசமானான் அவன்.

அவன் வேகத்தில் மிரண்டாள். தான் சொன்ன வார்த்தைகளின் பொருள் புரிய, அவனை என்ன சொல்லிக் கட்டுப்படுத்தவென்று தெரியாமல் விழித்தாள். அவள் பேச்சில், அவன் ஆண்மை விழித்துக்கொள்ள, அவள்மேல் தன் ஆதிக்கத்தை அதிகரித்தான்.

“ரிக்....., டேய்.....”, அவள் கெஞ்சல்கள் எதுவும், அவனைக் கட்டுப் படுத்தவில்லை. அவள் கைகள், அவன் வெற்று முதுகில், பிடிப்பில்லாமல் அலைந்தது.

தன் மார்புக்கு மத்தியில், புதைந்த அவனை, தானும் இறுகக் கட்டிக் கொண்டாள். அவள் செய்கையில், அவன் இன்னும் தைரியம் பெற, அவன் தேவைகள் நீண்டன. தன் மேனி முழுவதும் ஊர்வலம் போகும் அவன் கைகளின் தேடலிலும், இதழ்களின் வெம்மையிலும் தன்னைத் தொலைத்தாள் அவள்.

அவன் கைகளுக்குள் கரைந்து, தன்னையே அவனுக்குக் கொடுத்தாள். அவள் மென்மையிலும், காதலிலும், தன்னைத் தொலைத்தான் அவன். அவனது முரட்டுத் தனத்திலும், அணைப்பிலும், அவன் காதலை உணர்ந்தாள் அவள். ஒரு இனிய இல்லறம், அருமையாக மலர்ந்தது.

அந்தக் கூடலில், இருவருக்கும் மகிழ்ச்சியே. தன் சந்தோசத்தின் வெளிப்பாடாக, அவள் நெற்றியில் முத்தமிட்டு, அவளைக் கட்டிக் கொண்டான் அவன். அவன் நெஞ்சோடு ஒண்டி, அவனுள் இன்னும் புதைந்தாள் அவள்.

“சனா....., உனக்குக் கோபமில்லையே”, தயக்கமாகக் கேட்டான்.

“எதுக்கு.....”, புரியாமல் கேட்டாள் அவள்.

“அதான், உனக்கு எக்ஸாம் முடிய முன்னாடியே.....”, அவன் சொன்ன பிறகுதான், பரீட்சையின் நினைவே வந்தது அவளுக்கு.

“ஆமா..... நான் பன்னிரண்டாம் வகுப்புப் பரீட்சை எழுதப் போறேன், மார்க்கில் கோட்டை விட, அதெல்லாம் எதுவும் இல்லை. எனக்கு சந்தோஷம்தான்”, எல்லையில்லாத ஆனந்தம், அவள் குரலில்.

“மணி ஒன்பதாச்சு, இன்னும் ரெண்டுபேரும், காபி கூட குடிக்க வரலையே”, ஸ்டெல்லாவின் குரலில், இருவருமே நடப்புக்குத் திரும்பினார்கள்.

“இப்போதான் குளிச்சுட்டு வந்தேன்....., என்னை இப்படியாடா செய்வ? இப்போ இன்னும், ரெண்டுபேரும் குளிச்சுட்டுப் போகணும்”, அவனைச் செல்லமாக அடித்துவிட்டு, அவனிடமிருந்து விலகி, தன் ஆடைகளை அள்ளிக்கொண்டு பாத்ரூமுக்குச் செல்ல, அவள் பின்னாலே தானும் சென்று புகுந்துகொண்டான்.

“சும்மா படுத்திருந்த என்னை, நீதானே வந்து சீண்டின, அப்போ, அதுக்கு தண்டனை அனுபவிச்சுத்தான் ஆகணும்”, அவளைக் கட்டிக் கொண்டான்.

“ஐயோ.... என்ன இது..... வெளியே போங்க”, அவள் வெட்கக் குரலில், இன்னுமே அவளோடு இணைந்துகொண்டு, “இப்போ தனித்தனியா குளிக்க நேரமாகும்..... அதனால.....”, அவன் காதல் விளையாட்டுக்களை விடாமல், சொன்னான்.

“கள்ளா.....”, வாய் சொன்னாலும், இதழ்கள் சந்தோஷச் சிரிப்பை உதிர்த்தன. ஒன்பது நாற்பத்தைந்து மணிக்கு, வெளியே வந்த அவர்களை, ஸ்டெல்லா கண்டிப்பும், ஆர்வமும், குறும்பும் கலந்த பார்வை பார்க்க,

“அம்மா நான் இல்லை....., உங்க புள்ளைதான்.....”, சொல்லிவிட்டு, நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

பேட்ரிக் சங்கடத்தில் நெளிந்தான். அவன் முதுகில் ஒளிந்துகொண்டாள் அர்ச்சனா. அவளை, கை பிடித்து அழைத்து, நெற்றியில் மென்மையாக இதழ் பதித்து, “காட் ப்ளேஸ் யூ அச்சு....., சரி எக்ஸாம்க்கு நேரமாச்சு, சீக்கிரம் கிளம்புங்க”, வேகமாக, இருவருக்கும் இட்லி எடுத்துக் கொடுத்துவிட்டு, “நான் முன்னாடி போறேன், நீங்க வாங்க”, குரல் கொடுத்துவிட்டு வெளியேறினார்.

அவர் செல்லவும், பேட்ரிக் சிரிக்க, “ஏண்டா சிரிக்கிற? என்னை இப்படி மாட்டி விட்டுட்டு, என் மானமே போச்சு”, அவன் ஊட்டிவிட்ட இட்லிகளை முழுங்கியவாறே, குறை சொன்னாள்.

“சனா....., இன்னைக்கு எக்ஸாம் நல்லா எழுதிடுவ தானே”, அவன் கண்களில் குறும்புடன் கேட்க, “கருமம் கருமம்....., இப்போ நீ வாயை மூடல, கொன்னுடுவேன். சரி, நானே காலேஜ் போறேன், நீ ஒண்ணும் வரவேண்டாம்.....”, அவன் பேச்சில் கோபம் கொண்டு வெளியேறப் போனாள்.

அவள் செல்லவே, அவன் சாப்பிடாமல், பைக் கீயை எடுத்துக்கொண்டு, அவள் பின்னால் ஓடினான். வழியில் சென்று அவளை ஏறச் சொல்லவே, அவளும் ஏறிக் கொண்டாள். கல்லூரிக்குள் சென்று அவளை இறக்கிவிட்டு, அவள் செல்லப் போகையில், அவள் கை பிடித்துத் தடுத்தான்.

“ஆல் தி பெஸ்ட் சனா....., நல்லா எழுது”. “ம்ம்ம்ம்.....”, என்றுவிட்டு சென்றுவிட்டாள். கொஞ்சம் அவசரப்பட்டு விட்டோமோ என்று அவன் கவலைப்பட்டான். அர்ச்சனாவுக்கு, அந்தக் கவலை எதுவும் இல்லை. அன்று இரவு, அவளைத் தொல்லை செய்யக் கூடாது என்று

எடுத்திருந்த உறுதி அனைத்தும், அவள் அருகே வந்ததும் சில்லு சில்லாய் நொறுங்கிப் போனது.

அவன் தவிப்பை உணர்ந்து, தானாக முன்வந்து அவனுக்குத் தன்னைக் கொடுத்தாள். அடுத்த நாள் பரீட்சையும் நல்லபடியாக முடித்துவிட்டு, தோழிகள் அனைவரிடமும், விடை பெற்றுவிட்டு, ஜூடி, வைஷுவிடம், கண்ணீரில் விடை பெற்றாள்.

ஜூடி, குழந்தையென அடம் பிடித்து அழுதாள். வைஷு, அர்ச்சனாவைக் கட்டிக் கொண்டு, எப்படி நன்றிசொல்லவென்று தெரியாமல், அழுகையில் கரைந்தாள். ஒரு வழியாக, தான் இங்கேதான் இருப்பேன் என்று சொல்லி, தனக்குக் கணவன் முதன் முதலில் பரிசளித்த அலைபேசியின் எண்ணையும், அவர்களுக்குக் கொடுத்தாள்.

பட்டமளிப்பு விழாவிற்குக் கண்டிப்பாக வரவேண்டும், என்று அன்புக் கட்டளையிட்டாள். வைஷு போகும் முன்னர், அவளிடம், “வைஷு, ஸ்டெல்லா மேமை பாத்து, ஒரு தேங்க்ஸ் சொல்லிட்டு போய்டு”, அவள் கண்களில் சிரிப்புடன் சொல்லவே, வைஷு அதிர்ந்து அவளைப் பார்த்தாள்.

“பொண்டாட்டி, என்ன அப்படிப் பாக்குற? பின்ன, என்னமோ நான் புள்ளைத்தாச்சி மாதிரி, புளிக் குழம்பும், ஊறுகாயும், அவங்க சாப்பாட்டையும் புடிங்கிட்டு வந்து கொடுத்தால்....., அவங்க, முதல்நாள் அவங்ககிட்டே சாப்பாட்டைப் புடிங்கிட்டு வரும்போதே கண்டுபுடிச்சுட்டாங்களாம், நான், என்னமோ கோல் மால் பண்ணுறேன்னு.

எனக்குதான் பப்பி ஷேமா போச்சு. போன வாரமே என்கிட்டே கேட்டு, நானும் உண்மையைச் சொல்லிட்டேன். உன்கிட்டே சொன்னால், நீ பீதியாவன்னுதான் சொல்லலை, அது மட்டும் இல்லை, பெமிக்கு ஹெல்ப்

செஞ்சது கூட, அவங்களுக்குத் தெரியும். எப்படின்னா, அதான் எல்லா இடத்திலும் கேமரா வச்சு இருக்காங்களே", அனைத்தையும், விளையாட்டுத்தனமாகவே சொல்லி முடித்தாள்.

"அச்சு, எனக்கு மயக்கமே வருதுடி....., என்னவெல்லாம் சம்மாளிச்சு இருக்க. இதில் கேமரா வேறையா.....? ஆண்டவா, நீ இதையெல்லாம் என்கிட்டே முதல்லையே சொல்லலை, அப்படிமட்டும் சொல்லியிருந்த....., நான் பாதி பயத்துலயே செத்திருப்பேன். ஓகே, இப்போ மேம்மைப் பாக்க நீயும் கூட வா", அவளையும் இழுத்துக் கொண்டே சென்றாள்.

தயங்கியவாறே அவள் நிற்க, "அம்மா..... இங்கே வாங்க", வெளியே இருந்து சத்தமாக அழைத்தாள்.

"என்ன.....?", "இவ உங்களுக்கு தேங்க்ஸ் சொல்லணுமாம்", "முதல்ல இந்த காம்பஸ்சை விட்டு அவளைக் கிளம்பச் சொல்லு, உன்கூட சேர்ந்து, நானும் உன்ன மாதிரி ஆயிட்டேன். இப்போ யாருக்காவது தெரிஞ்சுது, அவ்வளவுதான். முதல்ல கிளம்புங்க. உடம்பைப் பாத்துக்கோம்மா", அவர் குரலில், கொஞ்சம் கூட கோபம் இல்லை. சந்தோசமாகவே அவர்களை அனுப்பினார்.

வீட்டுக்குச் சென்ற அவளை, பேட்ரிக் காத்திருந்து அணைத்துக் கொண்டான். அவன் கைகளுக்குள் தானும் இணங்கிக் கொண்டாள். இருவரும் ஜோடியாக, அவள் அண்ணனின் திருமணத்திலும் பங்கு கொண்டார்கள்.

தன் தோழியாகிய அண்ணியை, கேலி செய்தே காலியாக்கினாள் அர்ச்சனா. அவள் அண்ணி, இவளது பள்ளித் தோழியே, அவளது பெயர் பெனிற்றா. பள்ளிப் படிப்பு, கல்லூரிப் படிப்பு முடியும்வரை, இருவரும் ஒரே வகுப்பில் படித்தவர்கள்தான்.

தினமும், அர்ச்சனாவின் வீட்டுக்கு அருகில் நின்று, அவளுடன் சேர்ந்தேதான் அவள் கல்லூரிக்குச் செல்வாள். அப்பொழுதே, ஜான் மேல், அவளுக்கு ஒரு ஈடுபாடு இருப்பதை, உணர்ந்திருந்தாள் அர்ச்சனா.

பெனிற்றா, B.Sc, முடித்து MBA படிக்கப் போய்விட, அர்ச்சனா M.Sc படித்தாள். அந்த நேரம்தான், அவர்கள் பிரிந்தார்கள். கல்லூரி நாட்களில், தங்கள் வீட்டைக் கடக்கும் பொழுதும், ஜானைப் பார்க்கும்பொழுதும், அவள் முகம் எப்படியெல்லாம் மாறுபடும் என்பதைச் சொல்லிக்காட்டி, சிரித்து வெறுப்பேற்றினாள்.

பெனிற்றா எவ்வளவோ தடுக்க முயன்றும், அவள் விடவில்லை. முடிவில் ஜான் தான், “அவளை அப்படியே விட்டுடு, உன்னைத் தொல்லை செய்யமாட்டா. இல்லையா....., நான் என் புருசனைத்தான் பாத்தேன்னு தைரியமா சொல்லு”, என்று காதில் ஓத, அதையும் பார்த்து கலாட்டா செய்தாள்.

மேரிக்கு இந்த விஷயமும் புதிது. தன் மகன் மனதில், இப்படி ஒரு எண்ணம் இருப்பதையே, அர்ச்சனா சொல்லித்தான் அறிந்து கொண்டார். ஆனால், அதை ஒதுக்கிவிட்டு, இனிமேலாவது வீட்டுத் தலைவியாகப் பொறுப்பாக நடக்கவேண்டும் என்று முடிவு செய்தார்.

நாட்கள் அழகாகக் கடந்தன.

அடுத்த ஐந்தாம் மாதம், அவர்களது பட்டமளிப்பு விழாவுக்கு, ஆர்வமாகக் கிளம்பிச் செல்லும் தன் மனைவியை, காதலாகப் பார்த்தவாறு இருந்தான் பேட்ரிக். அவள் இப்பொழுது, M.Ed அவர்களது கல்லூரியிலேயே படிக்கிறாள்.

மேரிதான் அவளை, பேரன் பேத்தி பெற்றுத்தரச்சொல்லிக் கட்டாயப் படுத்துகிறார். அர்ச்சனா, அதையெல்லாம் கண்டுகொள்வதே இல்லை. அர்ச்சனா, இப்பொழுதே

குழந்தை பெற்றுக்கொள்ளத் தயார்தான், ஆனால், பேட்ரிக் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை.

அன்றைய பட்டமளிப்புவிழாவிற்கு, வைஷு வரவில்லை. அவளுக்கு அது நிறைமாதமாகையால், அவளால் வர முடியவில்லை. அவர்களின் நட்பு, தொடர்ந்து கொண்டுதான் உள்ளது. தினமும், அச்சுவிடம் பேசாமல், வைஷுவால் இருக்க முடியாது. ஜூடி இப்பொழுது M.Sc, படிக்கிறாள், வந்தவள் அர்ச்சனாவைக் கட்டிக்கொண்டு, விடவே இல்லை.

“அச்சு, நான் உங்களை ரொம்ப மிஸ் பண்ணுறேன். நீங்க என்னை நினைச்சுப்பீங்களா? இல்லை, அண்ணாவோடு ஒரே மஜா தானா?”, இப்படி, ஒரு குழந்தையின் குதூகலத்துடன், அவளுடனே வலம் வந்தாள்.

தோழிகள் அனைவருமே, அர்ச்சனாவிடம் உரையாடினார்கள். பெமி- ஸ்டீபன், நிச்சயம் முடிந்துவிட்டதாக, அவள் தாய், அர்ச்சனாவிடம் சொன்னார். பெமியிடம் பேச இவளுக்கு விருப்பம்தான்....., ஆனால், அவள் ஏதாவது சொல்லிவிடுவாளோ என்ற தயக்கத்தில் பேசாமல் விட்டுவிட்டாள். பெமியும், அர்ச்சனாவிடம் பேச விரும்பினாள் ஆனால்....., தான் செய்த செயல்கள் அவளைத் தடுத்தது.

ஒரு நல்ல நட்பை தான் இழந்ததை, இந்த நான்கு மாதங்களில் அவள் உணர்ந்துகொண்டாள். கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்க்காரம் செய்து என்ன பயன்?

அர்ச்சனா, தங்கப்பதக்கம் வென்றதோடு, அவுட் ஸ்டாண்டிங் ஸ்டுடென்ட், என்ற நற்பெயரையும் வாங்கினாள். தங்கள் கல்லூரி, தன்னாட்சி அங்கீகாரம் வாங்கிய முதல் வருடமே, தங்கப்பதக்கம் வாங்கிய அர்ச்சனாவை, கல்லூரி முதல்வர் வாயாரப் புகழ்ந்தார்.

மேடையில் அவளைப் பேசச் சொன்னபொழுது, “என்னோட இந்த வெற்றிக்குக் காரணம், என்னோட கணவர்ன் தான்,

அவங்க, எனக்கு இவ்வளவு சப்போர்ட்டா இருப்பதால் தான், என்னால், இவ்வளவு தூரம் வெற்றியடைய முடிந்தது. அத்தோடு, என்னோட அத்தை, அவங்க, எனக்கு அத்தை இல்லை, அம்மா. அவங்களும் என்னோட வெற்றிக்கு உறுதுணையா இருந்தாங்க.

இப்படி ஒரு அருமையான குடும்ப வாழ்க்கையை, எனக்குத் தந்த அந்த கடவுளுக்கு, நான் நன்றி சொல்லுறேன்", அவள் பேசும் பொழுது, பார்வை முழுவதும், பேட்ரிக்கிடமே இருந்தது.

காதலாக அவளைப் பார்த்தவாறே அமர்ந்திருந்தான் அவன். வீட்டிற்கு வந்து அவனை கட்டிக் கொண்டு தன் மகிழ்ச்சியை விதம் விதமாக அவனுக்குத் தெரிவித்தாள். அவனும் அதற்குக் கட்டுப் பட்டான். M.Ed படிப்பிலும், அவளது குறும்புத்தனமும், செயல்பாடுகளும், தனித் திறமைகளும் சிறந்து விளங்கவே செய்தது.

தன் ஆறுமாத மகன் ஜோசப் ஜான்க்கு பாலூட்டி முடித்துவிட்டு, மேரியிடம் கொடுத்துவிட்டு, அரக்கபரக்க கிளம்பிக் கொண்டிருந்தாள் அர்ச்சனா. இன்றும் அதே கல்லூரிக்குத்தான் செல்கிறாள், ஆனால் ஆசிரியையாக. அங்கிருக்கும் மாணவிகள் அனைவருக்கும், அச்சு மேமை ரொம்பவே பிடிக்கும்.

அதிலும், பொருளறிவியல் மாணவிகள், அவங்க எங்க மேம் என்று பெருமைப்படும் அளவுக்கு, மாணவிகளோடு ஒன்றித்து இருந்தாள் அர்ச்சனா. கல்லூரியில், ஸ்டெல்லா எப்பொழுதுமே, இவளை மேற்கோள் காட்டி மாணவிகளை ஊக்கபடுத்தும் அளவுக்கு நடந்தாள்.

ஆனாலும், மாணவிகளோடு சேர்ந்து, ஸ்டெல்லாவைக் கலாய்ப்பதை, செவ்வனே செய்தாள். அது, வரம்பு மீறிச் செல்லாத அளவு, பார்த்துக் கொண்டாள்.

வீட்டிலும், மேரி, நல்ல அம்மாவாக இல்லாமல் போன நிலையை, நல்ல பாட்டியாக இருந்து துடைத்துக்

கொண்டிருந்தார். குடும்பத்தில், கொஞ்சம்கூட ஒட்டுதலே இல்லாமல் இருந்த கிறிஸ்டோபர் கூட, தன் பேரனை, மாதம் ஒருமுறை வந்து பார்த்துவிட்டுச் செல்லும் அளவு மாறியிருந்தார்.

அன்று, தாமதமாகப் படுக்கைக்கு வந்த அர்ச்சனாவை, இறுக அணைத்து, அவள் கன்னங்களைக் கடித்து, “ஏண்டி இவ்வளவு நேரம்?”, என சாட, அவன் வார்த்தையில் இருந்த கடினம், அவன் செய்கையில் இல்லை.

“உங்க மகன்தான் என்னை விடவே இல்லை. நான் என்ன செய்யட்டும்”, பழியை மகன்மேல் போட்டாள்.

“அவன்கிட்டே சொல்லிவை, அப்பாவுக்குப் பிறகுதான், அவனுக்கு நீ அம்மான்னு”.

“ஓ....., சொல்லிடலாமே....., ஆனால், அவன் திரும்ப என்கிட்டே, அம்மா அம்மா....., எனக்குதான் பசியாத்த நீ வேணும்..... அப்பாதான் வளந்துட்டாரே..... பிறகு என்னன்னு கேட்டால்..... நான் என்ன சொல்லட்டும்?”, குரல் நெகிழ்ந்து, குழைந்து, அவன் செவியில் கேட்டாள்.

“அது அப்பாவுக்கும்.....”, அவன் மேலே என்ன சொல்லியிருப்பானோ, அவன் பேச்சைத் தடுத்தது, அர்ச்சனாவின் இதழ்கள். இனிமேல், அங்கே பேச்சுக்கு இடமில்லை.

“அச்சு, நீ மின்மினி பூச்சி மாதிரி, உனக்குள் இருக்கும், அந்தச் சின்ன ஒளி, நம்ம வாழ்க்கையவே வெளிச்சமாக்குது”, அவன் சொல்ல, “எனக்கு சக்தி கொடுக்கும் ஆதாரமே நீங்கதாங்க. நீங்க மட்டும் இல்லன்னா, இந்த அர்ச்சனாவின் வாழ்க்கை, என்னைக்கோ முடிஞ்சிருக்கும்”, ஆத்மார்த்தமாகச் சொல்லி, அவன் தோள் சாய்ந்தாள்.

அவளது குறும்புத்தனத்துடன், அவளைத் தன் கையணைப்புக்குள் வைத்துப் பாதுகாத்துவந்தான்

பேட்ரிக். அவன் கரம் கோர்த்து இந்த அர்ச்சனா, அவர்கள் வாழ்க்கையில், காதல் என்னும் ஒளி மங்காமல் பார்த்துக் கொள்வாள்.

நன்றி

உங்கள் தோழி,

Infaa @ Infanta.